ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்

மார்கழி 2014 | கலை இலக்கிய மாத சஞ்சிகை | 500/=

ஓ... என் வண்டிக்காரா!

ஓ! என் அருமை வண்டிக்காரா
ஓட்டு வண்டியை ஓட்டு!
போவோம் புதிய நகரம் நோக்கிப்
பொழுது போமுன் ஓட்டு!

காவில், பூவில், கழனிகளெங்கும்
காதல் தோயும் பாட்டு!
நாமும் நமது பயணந் தொலையைக்
கலந்து கொள்வோம் கூட்டு! ஓட்டு

ஓ...! என் அருமை வண்டிக்காரா...

பனியின் விழிநீர் துயரத்திரையில்
பாதை மறையும் முன்னே
பிணியும் தேயும் பிறையின் நிழல் நம்
பின்னால் தொடரும் முன்னே – ஓட்டு

ஓ...! என் அருமை வண்டிக்காரா
ஓட்டு வண்டியை ஓட்டு!
போவோம் புதிய நகரம் நோக்கிப்
பொழுது போமுன் ஓட்டு!

- நீலாவணன் -

நாய் குரைக்கும் இரவு
திடுக்கிடும் தென்னங்குருத்துக்கள்
விடியலில் தோரணமா?

- கி.சு.முரளிதரன் -

குலோத்துங்கன் வாகையொடு மீண்டான்
குவலயமே நடுங்க அரசாண்டான்
'உலாத்தங்கள் பேரில் இதோ!'
ஓர் புலவர் குரலெடுத்து
'நிலாத்திங்கள்' எனத் தொடங்க மாண்டான்

- மஹாகவி -

கவிதைச் சிறப்பிதழ் – ஈழம்

75

மைதிலி நகைமாடம்

Maithily Nagai Madam

தங்கம் என்றால் தங்கம் தான். தங்க ஆபரணங்களுக்கு என்றும்
ஈடு இணையற்ற ஸ்தாபனம்
நம்பிக்கை நாணயத்துடன் நன் மங்கையர்
நாடும் இடம் 22 கரட்டில் தங்க நகைகள்
புதிய புதிய டிசைன்களில் செய்யும் ஸ்தாபனம்

89V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2227902



Yarl Maithily Jewellers

79Z, Sea Street, Colombo - 11
Tel: 011 2396239

காலங்கள் மாறும் கோலங்கள் மாறும்
காலத்தின் ரசனை அறிந்து கோலங்கள்
படைத்திடும் அழகியலின் அரசி பிரியங்கா!
கனிவானவர்களின் இனிவான தேர்வு

பிரியங்கா

டிஜிற்றல் கலர் லாப்

Point pedro, Nelliady. T.P : 021 226 2737
e-mail:- priyankadigitalcolourlab@gmail.com

Digital Photo Printing (6x4 - 12x36)
New Album Making & Designing.
New Chrystal Making.
New Photo Frame Making.
Cool, Hot, Uv, 3D Lemination.
Indoor & Outdoor Photography.

வடக்கு கிழக்கில் முதன்முறையாக
NORITSU QSS-3701HD (HIGH DEFINITION)
640 DPI எனும்
இயந்திரத்தை அறிமுகப்படுத்தியவர்கள்

ஜீவநதி

கவிதைச் சிறப்பிதழ்

ஈழம்

கட்டுரைகள்

கவிதை திரவமொழி
ந.மயூரரூபன் - 05

யாழ்ப்பாண அரங்கக் கவியூற்று
த.ஜெயசீலன் - 14

தமிழில் "கஸல்" கவிதை வடிவம்
கே.எம்.செல்வதாஸ் - 22

ஆங்கில ரொமாண்டிக் கவிஞர்களும் கீட்ஸும்
ஏ.எச்.எம்.நவாஸ் -27

கவிதை நயம்
கிருஷ்ணபிள்ளை நடராசா - 36

ஈழத்து தமிழ் இலக்கியச் செல்நெறியும் பிரதேச இலக்கியங்களும் - ஈழத்து தமிழ் இலக்கியச் செல்நெறியாக கவிதை கிழக்கு பிரதேச வெளிப்பாடுகள்
வி.மைக்கல் கொலின் - 40

தமிழ் மரபுக்கவிதை
த.ஜெயசீலன் - 48

கவிதையில் சமூகம் என்ற கருத்தாக்கம் சில குறிப்புகள்
அநாதரட்சகன் - 62

மலையகக் கவிதைத்துறையின் சில பக்கங்கள்
மொழிவரதன் - 74

அலைந்து திரிந்த ஆளுமை : பிரமீள்
இ.சு.முரளிதரன் - 84

எஸ்.வி.வேலுப்பிள்ளையின் கவிதை முகம்
மல்லியப்பு சந்தி திலகர் - 92

மொழிபெயர்ப்பும் கவிதையும்
அ.யேசுராசா - 100

பெண்ணியக் கவிதைகள் நோக்க வேறுபாடுகளுடன் கூடிய தடயங்கள்
இ.இராஜேஸ்கண்ணன் - 122

கவிதை என்றால் என்ன?
தாமரைத் தீவான் - 134

கவிதையெனும் நுண்கலையும் மனுஷ்ய புத்திரனின் கவிதை மொழியும்
ந.சத்தியபாலன் - 140

கவிதை எனின் எலியட் கூறுவது எது?
கே.எஸ்.சிவகுமாரன் - 143

இடப்பெயர்வுக்கவிதை வடபுலத்து முஸ்லிம்களை முன் வைத்து...
மேமன்கவி - 150

நவீன கவிதை குறித்த திறனாய்வுகள் அறிமுகக் குறிப்புகள்
அஸ்வத்தாமன் -156

"நிர்க்கதியான மக்களின் காவலரண்" என தன்னைப் பிரகடனப்படுத்திய சிலி தேசம் தந்த உன்னத கவி "பப்லோ நெரூடா"
கெகிறாவ ஸ்லைஹா - 163

மொழி பெயர்ப்பின் மாயை
சமயவேல் - 170

நடந்து வந்த சுவடுகளை மீட்டி நினைக்க வைக்கிறது கவிஞர் த.ஜெயசீலனின் "புயல் மழைக்குப் பின்னான பொழுது"
சமரபாகு சீனா.உதயகுமார் - 174

அடக்குமுறைகளை எதிர்த்த "கவிஞர்க்குக் கவிஞர்" இ.முருகையன்
அ.பௌநந்தி - 180

ஈழத்தில் "குறும்பா"வின் தோற்றமும் வளர்ச்சியும்
பேராசிரியர் செ.யோகராசா - 184

எளிமையும் சந்தமும் சங்கமிக்கும் இணையற்ற கவிஞன் மஹாகவி
அ.பௌநந்தி - 190

புதுவையின் கவிதைகள் பற்றிய பார்வை
சிறீபுவிதா - 194

சிங்களக்கவிதைகளின் தோற்றமும் வளர்ச்சியும்
இப்னு அஸ்மத் - 198

ஈழத்து நவீன கவிஞர்களின் போக்கும் நோக்கும் - அண்மைக்கால அவதானிப்புகளின் நாட்குறிப்புச் சுருக்கம்
பெரியஜங்கரன் - 202

வில்வண்ணை ஒரு விழுது
யாத்ரிகன் - 208

சமவுடமை தமுவிய கவிஞன் சாருமதி
அ.பௌநந்தி - 212

ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பம்
சோ.பத்மநாதன் - 218

சுபத்திரன் கவிதைகளின் சமூக விடுதலைக் கருத்தத் தளம்
அ.பௌநந்தி - 222

நீலாவணன் கவிதைகளில் சமூக யதார்த்தம்
அ.பௌநந்தி - 227

ஜப்பானிய ஹைக்கூ கவிதை மரபை விளங்கிக் கொள்ளல்
த.கலாமணி - 230

சண்முகம் சிவலிங்கம் தந்தையானவன் கதை
உமா வரதராஜன் - 235

இலங்கையில் குழந்தைப்பாடல்களின் தோற்றமும் வளர்ச்சியும்
அ.பௌநந்தி - 240

ஈழத்துத் தமிழ்க்கவிதைகளுக்கு புதுவளம் சேர்க்கும் புலம்பெயர் தமிழ்க்கவிதைகள் ஓர் பார்வை
புலோலியூர் வேல்நந்தன் - 246

நேர்காணல் – ரியாஸ் குரானா - 110

அஞ்சலி – சோ.பத்மநாதன் - 252

கவிதைகள்

உமாவரதராஜன் - 08/த.ஜெயசீலன் - 09/ஈழக்கவி 10/ஜெம்சித் ஸமான் - 10/பொத்துவில் அஸ்மின் - 11/
பிரமிளா பிரதீபன் - 11/ஆனந்தி - 12/B.N.நளீரா 12/மன்னார் அமுதன் - 12/மு.அ.மு.முர்சித் - 13/
தியத்தலாவை எச்.டிவ்.ரிஸ்னா 13/வலீம் அக்ரம் - 13/சோ.பத்மநாதன் - 19/ஜின்னாஹ் சூஹிப்புத்தீன் - 20/
அனார் - 21/தீபச்செல்வன் - 24/மேமன்கவி - 24/கோ.நாதன் - 25/கோ.கிசோக்குமார் - 25/
கிண்ணியா சபருள்ளா - 26/ சித்தாந்தன் - 34/மூதூர் மொகமட் ராபி 35/பி.அமல்ராஜ் - 38/
ஜே.பிரோஸ்கான் - 39/மைதிலி தயாபரன் - 39/கருணாகரன் - 47/சமரபாகு சீனா உதயகுமார் - 48/
எம்.எல்.எம்.அன்ஸார் - 49/கொற்றை பி. கிருஷ்ணானந்தன் - 50/வேலணையூர் தாஸ் - 50/மதுஸா மாதங்கி - 51/
வி.யோகேஷ் - 51/சோலைக்கிளி - 52/எம்.ரிஷான் ஷெரீப் - 53/உடப்பூர் வீர சொக்கன் - 59/ஆரையூர் தாமரை 60/
எம்.கே.முருகானந்தன் - 60/திருமலை பிரம்மியா 61/ஆதி பார்த்தீபன் - 61/இ.இராஜேஸ்கண்ணன் - 65/பிரியாந்தி 65/
ஏ.சீ.எம்.இப்றாஹீம் - 66/செ.ஜெ.பபியான் - 66/கு.றஜீபன் - 67/கேணிப்பித்தன் - 68/கவிதா ஜெயசீலன் - 69/
ஏ.இக்பால் -70/வன்னியூர் செந்தூரன் - 70/நிந்தாவூர் ஷிப்லி 71/வெலிகம ரிம்ஸா முஹம்மத் - 71/ஷெல்லிதாசன் - 72/
நவாஸ் சௌபி 73/ கேஷாயினி எட்மண்ட் - 78/மட்டுவில் ஞானக்குமாரன் - 79/ யாழ்.ஸைனப் - 79/மீரா சிவகாமி 80/
கேயெல்.நப்லா 81/நாகலிங்கம் சிவயோகன் - 82/மன்னூரன் ஷிஹார் - 82/த.ரூபன் - 83/மு.யாழவன் - 83/
மல்லியப்புசந்தி திலகர் - 87/ ஸ்ரீபிரசாந்தன் - 88/சண்முகம் சிவகுமார் - 88/கா.தவபாலன் - 89/கே.எஸ்.சிவகுமாரன் - 89/
கே.எம்.செல்வதாஸ் - 90/தாட்சாயணி 90/யோ.புரட்சி 91/மிஹிந்தலை ஏ.பாரிஸ் - 91/நீர்வை தி.மயூரகிரி 96/
நெற்கொழுதாசன் - 97/வதிரி சி.ரவீந்திரன் - 98/எஸ்பி.பாலமுருகன் - 99/முல்லைதிவ்யன் - 97/இ.சு.முரளிதரன் - 106/
பயணி 106/ஜோ.ஜெஸ்ரின் - 107/கே.சின்னராஜன் - 107/கணா.மகேஸ்வரன் - 107/க.தர்மதேவன் - 108/
விஜிதா ரகுநாதன் - 109/வெற்றி துஷ்யந்தன் - 109/இ.ஜீவகாருண்யன் - 118/முல்லை வீரக்குட்டி - 119/
அலெக்ஸ் பரந்தாமன் - 120/வெலிப்பன்னை அத்தாஸ் - 120/கல்வயல் வே.குமாரசாமி - 120/பூனாகலை நித்ய ஜோதி 121/
ந.குகபரன் - 121/நா.ஜெயபாலன் - 121/க.சட்டநாதன் - 130/மாலா மதிவதனன் - 131/வே.முல்லைதீபன் - 132/
எஸ்.முத்துமீரான் - 132/புத்தூர் வே.இளையகுட்டி - 133/பா.ரிசாந்தன் - 133/செல்வமனோகரி 137/வே.ஜ.வரதராஜன் - 138/
செ.ஞானராசா 138/குருதத் - 139/வல்வை மு.ஆ.சுமன் - 139/அ.கௌரிதாசன் -142/ஏ.எம்.எம்.அலி 144/உ.நிசார் - 144/
சாகித்யன் - 145/ பதியத்தளாவ பாறூக் - 145/மல்லிகை சி.குமார் - 146/த.அஜந்தகுமார் - 147/எம்.எம்.அலி.அக்பர் - 148/
சீ.என்.துரைராஜா 148/யோகேஸ்வரி சிவப்பிரகாசம் - 149/ஏ.சி.எம். இப்றாகீம் - 149/பாலமுனை பாறூக் - 154/
அல்வாயூர் சிவ.சிவநேசன் - 154/நிலாதமிழின் தாசன் - 155/எம்.எம்.மன்ஸூர் - 155/செல்லக்குட்டி கணேசன் - 160/
வி.மைக்கல்கொலின் - 161/முல்லைக் கோணேஸ் -162/பேருவளை ஸம்ஷா மிர்ஸிக் - 168/நல்லை அமிழ்தன் - 169/பிரசன்னா
169/தாமரைத்தீவான் - 169/இ.ஜெயபாலன் -172/புதுவை ஆனந்தன் - 172/ச.முருகானந்தன் - 173/வி.லோகேஸ்வரி 173/
கெகிறாவ ஸஹானா 178/தென்பொலிகை குமாரதீபன் - 179/தானா.விஷ்ணு 183/
பொலிகையூர் பொன்.சுகந்தன் - 189/ ம.பா.மகாலிங்கசிவம் - 189/த.தர்ஷன் - 193/மூதூர் கலைமேகம் - 196/
புலோலியூர் வேல்.நந்தன் - 196/முல்லை முஸ்ரிபா 197/கெகிறாவ ஸ்லைஹா 201/எஸ்.திலகவதி 206/
லலிதகோபன் - 206/அருள்திரு இராசேந்திரம் ஸ்ரலின் - 206/ச.லலீசன் - 207/வேற்கேணியன் - 207/
திருமலை சுந்தா 207/இப்றாஹீம் அன்சார் - 210/பொலிகையூர் சு.க.சிந்துதாசன் - 211/வனஜா நடராஜா 211/ஏ.எலியாசன் - 216/
தர்காநகர் ஸபா 217/செ.மோகன்ராஜ் - 220/கமலசுதர்சன் - 221/மு.கீர்த்திகன் -226/
ந.மயூரரூபன் - 234/ யாத்ரிகன் - 234/ மு.இந்திராணி - 239/ நாச்சியாதீவு பர்வீன் - 245/

அட்டைப்படம் – நன்றி இணையம்

உள் ஓவியங்கள் – கருணாகரன், இணையம்

ஜீவநதி

2014 மார்கழி இதழ் – 75

பிரதம ஆசிரியர்
க.பரணீதரன்

துணை ஆசிரியர்கள்
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

பதிப்பாசிரியர்
கலாநிதி த.கலாமணி

தொடர்புகளுக்கு :
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

ஆலோசகர் குழு:
திரு.தெணியான்
திரு.கி.நடராஜா

தொலைபேசி : 0775991949
0212262225

E-mail : jeevanathy@yahoo.com

வங்கித் தொடர்புகள்
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY

இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.
- ஆசிரியர் -

ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி – 100/= ஆண்டுச்சந்தா – 1500/=
வெளிநாடு – $ 60U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
K .Bharaneetharan,
Kalaiaham ,
Alvai North west, Alvai.
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY

ஜீவநதி

(கலை இலக்கிய மாத சஞ்சிகை)

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
– பாரதிதாசன்–

உங்களோடு மனந்திறந்து...

ஜீவநதியின் எழுபத்தைந்தாவது இதழும் பன்னிரண்டாவது சிறப்பிதழு மான "கவிதைச்சிறப்பிதழ் - ஈழம்" என்பதனூடாக வாசகர்களை சந்திப்பதில் மகிழ்வுறுகின்றேன். ஜீவநதியின் 16 ஆவது இதழ் கவிதைச் சிறப்பிதழாக வெளிவந்தமையை ஜீவநதி வாசகர்கள் அறிவர். ஆயினும், 75 ஆவது இதழாக மலரும் சிறப்பிதழ் முன்னையதை விட வடிவமைப்பிலும் உள்ளடக்கங்களிலும் முற்றிலும் வேறுபட்டதாக மலர்ந்திருப்பதைக் காணலாம்.

இச்சிறப்பிதழில் மொத்தமாக 156 கவிஞர்களின் கவிதைகளும் 36 கட்டுரைகளும் குரானாவின் நேர்காணலும் சோ.ப.வினால் எழுதப்பெற்ற அஞ்சலிக்குறிப்பும் இடம்பெற்றுள்ளன. வெவ்வேறு வகைப்பரப்பில் அடங்கும் கவிதைகளை மட்டுமல்லாமல், கவிதை இலக்கியம் சார்ந்த பல்வேறு கட்டுரை களையும் இச்சிறப்பிதழ் உள்ளடக்கியுள்ளது. அவற்றுள் ஈழத்தின் தலை சிறந்த கவிஞர்கள் பற்றிய கட்டுரைகளும் அடங்கும். இதனால் கவிதை இலக்கியம் பற்றி, அறிய விரும்பும் உயர்கல்வி மாணவர்களும் கவிதைப் படைப்பாளிகளாக வரவிரும்புபவர்களுக்கும் கவிதைப் போக்கு களை திறனாய்வு நோக்கில் அறிந்து கொள்ள விரும்பும் படைப்பாளிகளும் இச்சிறப்பிதழ் ஒரு கையேடாக, கவிதை பற்றிய செய்முறைக்குறிப்பு நூலாக விளங்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இவ்வகையில் ஈழத்தைப் பொறுத்தவரை, கவிதை இலக்கியத்தின் பல்பரிமாணங் களையும் உள்ளடக்கி யதாக வெளிவந்துள்ள முதலாவது சிற்றிதழ்ச் சிறப்பிதழ் என்ற பெருமையை ஜீவநதியின் இச்சிறப்பிதழ் பெற்றுக்கொள்கிறது என்பதை எவ்வித கர்மமு மின்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜீவநதி 74 ஆம் இதழூடாகவும், முகப்புத்தகம், கடிதம், தொலை பேசி அழைப்பு என்பவற்றினூடாகவும் இந்த இதழுக்கான ஆக்கங்கள் கோரப்பட்ட போது, உரிய நேரத்தில் தமது படைப்புக்களை அனுப்பி வைத் திருந்த படைப்பாளிகளுக்கு என் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"ஆனை வருகிறது, ஆனை வருகிறது" எனச் சொல்லி சொல்லியே இலக்கிய உலகை ஏமாற்றி காலத்தை வீணடிப்பதில் எனக்கு உடன் பாடில்லை. திட்டமிட்டு எதனையும் விரைவாக ஒப்பேற்றிவிட வேண்டும் என்ற மனஓர்மத் துடன் செயற்படுவதே என் இயல்பு. அந்த வகையில் 30 நாட்கள் மேற்கொண்ட நித்திரை விழிப்புடன் கூடிய உழைப்பின் பயனாக இவ்விதழ் உங்கள் கைகளில் தவழ்கிறது.

இச்சிறப்பிதழ் வாசகர்களாகிய உங்களுக்கு உவப்பானதாக இருக்கும் என்ற நம்பிக்கையோடு, இதுவரை சிற்றிதழ் ஒன்றின் 75 இதழ்களை கர்வமோ தன்னலமோ இன்றி வெளியிட்டவன் என்ற வகையில், இன்றைய இலக்கியச் சூழலின் யதார்த்தம் குறித்த என் பார்வையை இங்கு முன்வைக்க விரும்பு கின்றேன். எவரையும் புண்படுத்தும் நோக்கில் எனது கருத்துக்களைக் கூற இங்கு நான் முயற்சிக்கவில்லை. ஆனால் எமது இலக்கிய உலகம் ஆரோக்கிய மாக வளர்கின்றது என்ற மாயையைத் தோற்றுவித்து வாழ்ந்து கொண்டி ருக்கும் எம் அனைவரையும் சிந்திக்கத்தூண்டவேண்டும் என்பதற்காகவே இவை இங்கு பகிரப்படுகின்றன.

முன்பு 500 தொடக்கம் 1000 பிரதிகள் வரை அச்சிடப்பட்ட புத்தகங் களும் சஞ்சிகைகளும் இன்று 200 தொடக்கம் 300 பிரதிகள் வரையிலேயே அச்சிடப்படுகின்றன. அதிலும் வெளியீட்டு விழா வைத்தாலொழிய 150 பிரதிகள் வரை படைப்பாளியிடம் எஞ்சியிருக்கும். இதனால், பாவம்! அச்சுக்கூலியைக்கூட பெறமுடியாத துர்பாக்கியம் அவருக்கு ஏற்பட்டு விடுகிறது. இதற்கு யார் காரணம், என்று சிந்திக் வேண்டும்.

வாசிப்புத் தளம் பரந்துவிட்டது; இணையத் தளத்தில், முகப்புத்தகத்தில் வாசிக்கின்றோம் என்று கூறப்படு கின்றது. ஆனால் இவ்வதிகள் வரையறையுள்ள எண்ணிக்கையானோரிடமே உள்ளன. அவர்களுட் பலரும் வாசிப்புநாட்டம்

கொண்டவர்களும் அல்லர்.

இந்தச்சிறப்பிதழை அலங்கரிக்கும் 180 படைப் பாளர்களுள் 80 இற்கும் அதிகமானோர் முதன் முதலாக ஜீவநதியில் எழுதுகிறார்கள். இவர்களுள் எத்தனை பேர், ஏற்கனவே வெளிவந்த ஜீவநதியில் 74 இதழ்களுள் ஒன்றையேனும் பெற்றிருப்பார்கள் என்ற சந்தேகம் எழுகிறது.

இவ்வாறான சிறப்பிதழ்களை வெளியிடும் போது கட்டுரைகளைப் பெறுவதிலுள்ள சிரமங்கள் சொல்லி மாளா. குறித்த காலத் தவணை வழங்கி, சிரமம் பாராது உரிய நேரத்தில் கட்டுரைகளை அனுப்பி உதவுமாறு கேட்டிருந்த போதும், சில கட்டுரைகள் தாமதமாகவே கிடைத்தன. குறிப்பிட்ட தலைப்புக்களில் எழுதுவதாக ஒப்புக்கொண்ட சிலர் கட்டுரைகளை அனுப்பவே இல்லை. நாளை அனுப்புகிறேன், நாளை மறுநாள் அனுப்புகின்றேன், ஒரு கிழமையில் அனுப்புகிறேன் என்று இவர்கள் கூறிய தவணைகளை எல்லாம் எதிர்ப்பார்த்த திருந்து அவையும் கழிந்த நிலையில், அத்தலைப்புக்களில் குறுகிய அவகாசத்துள் எழுதித் தருமாறு ஜீவநதிக்குடும்ப உறுப்பினர். திரு. பௌநந்தி அவர்களிடம் கேட்டிருந்த போது. சிரமங்களுக்கு மத்தியில் அக்கட்டுரைகளை அவர் எழுதித்தந்துள்ளார். இதனால் அவர் எழுதிய கட்டுரைகள் இச்சிறப்பிதழில் இடம் பெறுகின்றன. அவருக்கு என் நன்றிகள். சங்கக்கவிதைகள், குறியீட்டுக் கவிதைகள், போர்க்காலக் கவிதைகள் பற்றிய கட்டுரையை இறுதிவரை எதிர்ப்பார்த்திருந்து ஏமாந்து போனேன். இன்னொரு வரிடம் சொல்லி அதனை எழுதிப் பெற்றுக்கொள்ளவதற்கு காலஅவசாகம் கிடைக்கவில்லை.

சொந்தப் புகழ் பாடுவதற்கு இடமளித்தால் சிறந்த சஞ்சிகை என்று தலையில் தூக்கி வைத்தாடும் மூத்த எழுத்தாளர்களும் இங்கு வாழத்தான் செய்கின்றனர்.

மூத்த எழுத்தாளர்களும் சரி இளம் எழுத் தாளர்களும் சரி, சிலர் தம்மைக் இலக்கிய உலகின் பிரம்மாக்களாக கருதிக்கொண்டு, தமக்கு இலவசமாக ஒவ்வோர் இதழையும் அனுப்பிவைத்தாலென்ன என்று கேட்கும் மனப் பாங்குடையோராக உள்ளனர்.

குறிப்பான பிரதேசங்களை மைப்படுத்தி, அங்கு வாழும் அப்பிரதேசத்து எழுத்தாளர்களைக் கௌரவித்து சிறப்பிதழ்களை வெளியிட்டு வருகின்ற போதும், அச்சிறப்பிதழைத் தவிர ஏனைய சஞ்சிகைகளைக் காசு கொடுத்து வாங்கமாட்டார்கள்; அச்சிறப்பிதழிற்கு பிறகான இதழ்களையும் இலவசமாகப் பெற்றுக்கொள்ள முனைவார்கள்.

இருப்பே தெரியாத எழுத்துக் கற்றுக்குட்டிகள் சிலர், சில பத்திரிகைகளில் செல்வாக்குச் செலுத்தி தமது கட்டுரைகளை இடம்பெறச்செய்கின்றனர். அதுமட்டு மல்லாமல், ஈழத்தில் வெளிவரும் சஞ்சிகைகளைத் தரப்படுத்தி பட்டியலிடவும் செய்கின்றனர். இத்தரப் படுத்தல்கள் மூலம் தன்னை பெரியதொரு படைப்பாளி யென காட்ட முயல்கிறார்கள்.

எழுத்தாளர்களிற் சிலர் தாம் எழுதியவற்றை உடனடியாகவே அச்சில் காணவிரும்புகிறார்கள். சஞ்சிகையாளர் களுக்கு வேறு பணிகளும் இருக்கும் என்பதைக்கூட கருத்திற்கொள்கிறார்களில்லை. சிலர் தமது படைப்புக்கள், தரமுள்ளவையோ அல்லது தரமில்லா தவையோ என்பதைநோக்காது, தாம் எழுதியவை எல்லாமே பிரசுரமாக வேண்டும் என்று தவிக்கிறார்கள்.

சிலரிடம் சமூக நோக்கம் குறைந்து, விருதுகளைப் பெற்றுவிட வேண்டும் என்ற நோக்கில் நூல்களை வெளி யிட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

விருதுகளை வழங்குபவர்கள், மதீப்பீட்டாளர் களாகக் கொள்பவர்களின் இலக்கியப் பரிச்சயம், தேர்ச்சி பற்றிக் கவலை கொள்வதே இல்லை. தமக்குப்பிடித்தமான சில பிரபல்யங்களிடம் பரிசுத்தேர்வுக்கான நூல்களைக் கொடுத்து தெரிவுகளை மேற்கொள்கிறார்கள். மதீப் பீட்டாளர்களும் "புகழ்பூத்த" எழுத்தாளர்களின் நூல்களை மட்டுமே படித்து, தெரிவுகளையும் மேற்கொள்கிறார்கள்.

தமக்குப்பிடித்த எழுத்தாளர்களின் படைப்புக்கள் சஞ்சிகைகளில் இடம்பெற்று விட்டால் படைப்பின் தரம் நோக்காது சில எழுத்தாளர்களும் வாசகர்களும் அந்த எழுத்தாளர்களின் புகழ்பாடும் வாசகர் கடிதங்களை எழுதுகிறார்கள்.

சிலர் தமது படைப்புக்கள் மட்டும் தான் உன்னதமானவை என்று நினைக்கிறார்கள்.

சிலர் சஞ்சிகையாளர்களைச் சுதந்திரமாக இயங்கவிடாமல், கொள்கை ரீதியான முரண்பாடுகளைத் திணிக்க எத்தனிக்கிறார்கள்.

சில எழுத்தாளர்கள் தமது எழுத்தாக்கங்களிலுள்ள எழுத்துப்பிழைகள், இலக்கணப்பிழைகள், கருத்துப் பிழைகள் போன்றவற்றை அறியாதவர்களாகவே அவற்றை அனுப்பி வைக்கின்றனர்.

படைப்பாளிகளிடம் பரந்த வாசிப்பு இல்லை. தமது படைப்புக்கள் இடம்பெற்றிருக்கின்றதா என்பதை நிச்சயம் கொண்டே சஞ்சிகைகளை விலைகொடுத்து வாங்குகிறார்கள்

சில சஞ்சிகையாளர்கள் தனிப்பட்ட தாக்குதல்களை மேற்கொள்ளும் கடிதங்களை, கட்டுரைகளை, குறுங்கதைகளை தமது சஞ்சிகைகளில் இடம்பெறச்செய்து "வியாபாரம்" செய்கிறார்கள்.

வாரப்பத்திரிகைகள் சிலவற்றில் வெளிவரும் படைப்புக்கள் பல மட்ட்மான வாசிப்பு இரசணை உடையவர்களுக்கே தீனி போடுகின்றன. வாசகர்களின் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற நோக்கு அப்பத்திரிகை களுக்கு இல்லை.

தரவுப்பிழைகளுடன் கூடிய படைப்புக்களும் கட்டுரைகளும் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் இடம்பெறுகின்றன. ஆனாலும் இவற்றை சுட்டிக்காட்ட முனையாத நிலைமையே நிலவுகிறது.

விமர்சனம் என்ற பெயரில் குறிப்பான சில ஆளுமைகளின் படைப்புக்களை மாத்திரமே உதாரணமாகக் கொண்டு, பரந்த வாசிப்பின்றி, குண்டுச்சட்டிக்குள் குதிரையோடும் விமர்சகர்களும் இன்று காணப்படுகிறார்கள்.

இவ்வாறான இலக்கியச்சூழலில் தான் ஜீவநதி சஞ்சிகையை தொடர்ந்து காலம் பிசகாது வெளிக்கொணர வேண்டியுள்ளது என்பதை ஜீவநதி வாசகர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும் என்ற ஆதங்கத்துடனேயே இவற்றை இங்கு சொல்ல நேர்ந்தது. ஜீவநதி வெளியிடுவதன் மூலம் நான் பணம் சம்பாதிக்கவோ வயிறு வளர்க்கவோ இல்லை. இலக்கியத்தின் மீதான வெறித்தனமான ஈடுபாடே இந்த இதழைக் கூட எனது சொந்தப்பணத்தில் சிறு பகுதியை செலவழித்து வெளியிடக்காரணம். உண்மையான இலக்கிய நேசிப்புடன் சமூக நோக்குடன் ஜீவநதியின் பணி தொடரும். இப்பயணத்தில் உடன்வருபவர்கள் பலர் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கை என்னை இப்பணியில் உந்தித்தள்ளுகிறது, இச்சிறப்பிதழ் குறித்த உங்கள் கருத்துக்களை ஆவலோடு எதிர்ப்பார்த்திருக்கின்றேன்.

அன்புடன்

க.பரணீதரன்

மொழி தனக்கான சுய அமைப்பைக் கொண்டது. நெகிழ்வுத்தன்மை என்பது அதன் விசேட குணம். இந்த நெகிழ்வுத் தன்மை என்பது; ஒரு மனிதன் பயன்படுத்துகின்ற கால, தள, சமூக குறியீடுகளாய்ப் பொருந்திப்போவது.



ந.மயூரரூபன்

கவிதை: திரவமொழி

மொழி என்பது மனிதனின் உள்ளுயிரில் கலந்த ஒன்று

மனிதனின் வாழ்வியலின் செழுமையை அதன் நேர் மறை முக இயல்புகளுடன்/ காவித்திரியும் / காற்று அவனின் மொழி.

நாம் தற்காலத்தில் மொழி பற்றி அதிகம் சிந்திக்கிறோம். பல ஆய்வுகளும் வந்துள்ளன. மொழியியல் கற்கைகள் மற்றும் காலவெளிப்பாட்டு விமரிசனக் கற்கைகள் அதிகம் முனைப்புப் பெற்ற காலத்தில்; படைப்பின் மொழி பற்றிய கவனமும் அதிகம் பேசப்படுகிறது.

மொழியியல் கோட்பாடுகள் மானுடவியல் துறையில் அதிகம் பேசப்படத் தொடங்கிய பின்னர் மொழியின் நுண்கூறுகள் தொடர்பான கருத்துநிலைகள் உருவாகத் தொடங்கின. அதன் நுண்கூறுகள் தங்களுக்கான சுய அமைப்பைக் கொண்டவை.

இங்கு நுண்கூறுகள் எனப்படுபவை குறிப்பான் - குறிப்பீடு, மொழிக்கிடங்கு - பேச்சு, தளப்பார்வை - காலப்பார்வை போன்றன.

மொழி தனக்கான சுய அமைப்பைக் கொண்டது. நெகிழ்வுத்தன்மை என்பது அதன் விசேட குணம். இந்த நெகிழ்வுத் தன்மை என்பது; ஒரு மனிதன் பயன்படுத்துகின்ற கால, தள, சமூக குறியீடுகளாய்ப் பொருந்திப்போவது. அதாவது ஒரு செங்கல் தனக்கான ஒரு சுய அமைப்பைக் கொண்டிருக்கிறது. அது ஒரு கட்டடமாய் உருவாகின்ற போது கட்டடத்திற்கான சுய அமைப்பைப் பெறுகிறது. மொழியின் நுண்கூறுகளின் அடுக்கிணைவின் இயல்பும் இதுதான். இந்தத்

எந்த எழுத்துமே கண்ணாடியைப் போன்று துல்லியமாக தெரியக்கூய தன்மை கொண்டவை அல்ல. எழுதுப வனின் மொழி இரண்டு வகைகளால் அவனிடம் சேர்க் கிறது. ஒன்று அவன் சமூகத்திலிருந்து, வாசிப்பிலிருந்து சுவீகரித்துக் கொள்கிறான். மற்றையது அவனது சுபாவம் கலந்தது.

தளத்தின் அடிப்படையில் நின்றுதான் கவிதை மொழி தொடர்பான ஒரு பார்வையை இக்கட்டுரை தர முனையும்.

மொழியென்பது பொதுவாக கருத்துப்பரி மாற்றத்திற்கான ஊடகம் என்கிற புரிதல் எம்மிடமுண்டு. மொழியின் அடிப்படை இயல்பும் அதுதான். மொழி; தன் முதற்பருவ இயல்புகளைக் கடந்து அதன் உடல் - உள ஆய்வுப் பருவங்களை கண்டுகொண்டிருக்கின்றது.

படைப்பு மொழி /கவிதை மொழி வெறுமனே கருத்துப்பரிமாற்றம் செய்வதாக அமையாது.

> "ஒரு எழுத்தாளனின் எழுதுகின்ற வேலை என்பது வெறும் தகவல் தெரிவிக்கும் காரியமல்ல, சொல்ல வருவதைத் தெளி வாகத் துல்லியமாகத் தெரிவிப்பதற்கு மாறாக அவன் கையாளும் மொழியை மீறிய நிர்ப்பந்தம் அவன் மேல் சுமையாகக் கனக் கிறது. அதையே நாம் அவனது பிரதியி லிருந்து எடுத்துக் கொள்ளும் வரலாறாகவும் நமது நிலைப்பாடாகவும் கொள்கிறோம்" என "பார்த்" தனது எழுத்தில் குறிப்பிடுகின்றார்.

மொழி அனைத்துமே குறிகளால் (Signs) ஆனவையே. அனைத்து மொழிகளும் ஒரு எல்லை வரை உருவகத்தன்மையை கொண்டிருக்கின்றன.

"நிலவை மழித்தான்
தேவ நாவிதன்
சிகையாய் முகில்கள்
வானில் விரிந்தன
மனிதன் வியந்து
கவியானான்
வெயிலை வழியவிட்டான்
வெளிக்கடவுள்"

(தருமு சிவராமு)

கலையை அரசியல் சமூக பண்பாட்டு இயக்கமாக முன்னெடுக்கும்போது கருத்தியல் பரவுகை மற்றும் செய்தித் தெளிவின் முக்கியத்துவம் தேவைப் படுகின்றது. கலை என்பது மனதினுடைய வெளிப் பாடாகவே அமைகிற போது ஒரு தனிமனிதனுடைய மொழிச்சேர்க்கை, சமூக அரசியல் பண்பாட்டு இருப்பு மற்றும் புரிதல், அவன் கொண்டிருக்கிற வரலாறு, கல்வி, பால்நிலை, சித்தாந்தம் என்பன அவனது படைப்பு மொழியைத் தீர்மானிக்கின்றன.

இவ்வாறு தனிமனிதனின் படைப்பாக அமைகிற ஒரு கவிதை வாசகனிடத்தில் வருகின்ற போது; அவன் அக்கவிதையை தன்னிடமுள்ள மொழிச்சேர்க்கை, தனது சமூக அரசியல் பண்பாட்டு இருப்பு மற்றும் புரிதல், தான் கொண்டிருக்கும் வரலாறு, கல்வி, பால்நிலை, சித்தாந்தம் என்பவற்றின் துணை கொண்ட புரிதலோடு வாசிக்கிறான்.

இங்கு இரண்டு மன ஓட்டங்களின் அசைவு களும் வெவ்வேறு அடுக்கில் இயங்குகின்றன.

கவிதை மொழியின் புரிதலிலுள்ள சிக்கல் இங்குதான் ஆரம்பிக்கிறது.

அனைத்து எழுத்துகளுமே குறிகளால் ஆனவையே. இலக்கியம் எப்போதும் குறிகளின் இலக்கியமாகவே அமைய முடியும். அந்தவகையில் கவிதை குறிகளாலானது. "பார்த்" குறிப்பிடுவது போன்று எந்த எழுத்துமே கண்ணாடியைப் போன்று துல்லியமாக தெரியக்கூடிய தன்மை கொண்டவை அல்ல. எழுதுப வனின் மொழி இரண்டு வகைகளால் அவனிடம் சேர்க் கிறது. ஒன்று அவன் சமூகத்திலிருந்து, வாசிப்பிலிருந்து சுவீகரித்துக் கொள்கிறான். மற்றையது அவனது சுபாவம் கலந்தது. இது, அவனது மொழிக்கிடங்கு. அவனது குடும்பம், சமூகம் (சாதி, சமயம்) பால்நிலை என்பவற்றால் உருவானது.

"என் பிறப்புறுப்பு
புறங்களில் வீசி
அடித்தவண்ணம் இருக்கிறது
வாழ்வின் மணிச்சுவரில்
தொட்டு ஒலி ஓடுகிறது

பயிர் போலன்றி
வரப்புக்கு வெளியேயும்
வாழும் கொக்குகள்
தோன்றின"

-தேவதச்சன்

ஒரு தனியனின் மனமொழி என்பது அவனது மனப்பிளவுகளையும் முரண்களையும் தீவிரத்தையும் கொண்ட சுயத்தால் கட்டமைந்தது.

ஒரு கவிஞனின் கருவி மொழி. இந்தமொழி அவனுக்கு வெளியிலிருந்து உருவாகும் அடக்குமுறை யிலிருந்தும் உள்ளிருந்து உருவாகும் சிதைவி லிருந்துமே வடிவம் கொள்கிறது.

ஒரு கவிதை எப்போதும் வாசகனுக்கானதே. கவிஞனுக்கோ விமர்சகனுக்கோ உரியதல்ல. கவிதையை எழுதியதும் அது அவனது கட்டிலிருந்தும் உள்நோக்கத்திலிருந்தும் விடுபட்டு தன்னிச்சை கொண்ட மொழிப்பொருளாகிறது. இங்கு வாசகனுக் கான அர்த்த சாத்தியம் என்பது மொழியாலேயாகிறது எனின் முன்னர் குறிப்பிட்டது போன்று அர்த்த சாத்தியங்கள் மாறிக்கொண்டேயிருக்கும்.

இங்கு கவிதை திரவமாகிறது; வாசகன் பாத்திரமாகிறான் அவனுக்கான உரு அவனிடமே உண்டு. கவிதை திரவமாகிற போது மொழியும் திரவ மாகிறது. இது 19ம் நூற்றாண்டு காலப்பகுதியில் கூறப் பட்ட மொழியின் திரவ இயக்கத்திற்கு நேர்மாறானது. அங்கு சொல்லப்பட்டது மொழியின் இலகுவான, தங்குதடையற்ற கருத்துப்பரிமாற்றத்தின் இயல்பு.

கவிதை எப்போதுமே மொழியியல் பேசு பொருளாகவே (semantic subject) அமையும். முன்பிருந்த பா வடிவங்கள், மரபு இலக்கணங்கள் மாற்றங்கண்டு நாம் இப்போது பேசிக்கொண்டிருக்கும் நவீன கவிதை வடிவத்துள் உள்வாங்கப்பட்டிருக்கின்றோம். எங்களுக் கான இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள் மொழியின் கொள்ளளவை குறைத்துக் கொண்டுள்ளன. எமது மொழிக்கிடங்கு வறண்டு போயுள்ளது.

இத்தகைய ஒரு பலவீனம்; ஒரு கவிஞனை தனக்கான சொல்லை தெரிவு செய்ய நிர்ப்பந்திக்கிறது. இது கவிதையின் அர்த்த பரிமாணத்தை தனித்துவ மாக்குகின்றது.

ஆயினும் மொழிக்கிடங்கின் பலவீனம் வாச கனிடத்திலுமுண்டு அது வாசகனை சிரமத்திற் குள்ளாக்குகிறது. தொலைக்காட்சி, வானொலி, ஜனரஞ்சக சஞ்சிகைகள் போன்றன "கவிதை" என்பதை தாம் புரிந்து கொண்ட வகையிலேயே மீளுற்பத்தி செய்ய வைக்கின்றன.

ஒத்த மாதிரியான புரிதல்களை நேயர்களுக்குத் தரவல்ல கவிதைகள் நுகர் பண்டமாகிற அபாயம் இங்கு நிகழ்கிறது. இங்கு பிரதி நுகர்வோன் தனது வாசிப்புக் கான எந்த முயற்சிகளையும் செய்ய வேண்டிய தில்லை.

"டு மினிட்ஸ் நூடில்ஸ்" போன்று உண்பதற்குத் தயாராக கவிதை இருக்கிறது. இவற்றினை "பார்த்" lisible text என்கிறார். இவ்வகையான படைப்புகள் ஓய்வுநேரப் பண்பாட்டுக்கான வாசிப்புப் பிரதிகளால் அமைந்து விடுகின்றன.

வாசகனை மிக எளிதில் திருப்திப்படுத்தக்கூடிய இவ்வகையான எழுத்துக்களை பக்தின் monologic text

ஒரு கவிதை எப்போதும் வாசகனுக்கானதே. கவிஞனுக்கோ விமர்சகனுக்கோ உரியதல்ல. கவிதையை எழுதியதும் அது அவனது கட்டிலிருந்தும் உள்நோக்கத்திலிருந்தும் விடுபட்டு தன்னிச்சை கொண்ட மொழிப்பொருளாகிறது.

என்கிறார்

மையம் உடைக்கப்பட்ட வாசகனின் உழைப்பை வேண்டுகின்ற இவ்வகையான எழுத்துகளை பக்தின் Dialogic text என்கிறார். தன்னிச்சையான இயக்கம் கொண்ட இவ்வகையான படைப்புகள் வாசகனின் சொல்லுக்கு உகந்ததல்ல வாசகனால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சம்பிரதாயங்களை, நம்பிக்கைகளை தேடல்களை கேள்விக்குட்படுத்துபவை. எல்லோருக்குமே பொதுவான உண்மை இங்கு இல்லை.

உண்மையில் ஒரு வாசகன் ஒரு கவிதையை/ இலக்கியப் பிரதியை புரிந்து கொள்வதற்கு மேலதிகமாக தொடர்ந்த வாசிப்பு, இலக்கியப் பரிச்சயம் அவசியம். இதனை ஜொனாதன் கல்லர் "இலக்கியத்திறன்" என்கிறார். கவிதையின் மொழி வாசகனுக்கான கவிதை அனுபவத்தை; கவிதை விளங்கிக்கொள்ளப்படுகின்ற விதம், மொழி, வாசகனுக்குள் கவிதை இயங்கும் விதம், அதன் அர்த்த சாத்தியப்பாடுகள் என்பவற்றால் தருகிறது.

எல்லாக்கலைகளுமே இசையின் நிலையை அடைய எத்தனம் செய்கின்றன என்கிறார் வோட்டர் பேட்டர்.

கவிதை - இசை - அனுபவம்

தொலைந்த சாவி

சிதிலமடைந்த
அந்தக் கற்கோட்டைக்குக்
கடைசியாக
வந்து சேர்ந்திருந்தோம்.

அதல பாதாளத்தில்
நீல மெழுகாய் கடல்.

நாம் கடந்த கடல்களும், கண்டங்களும்,
மண்ணில் வீழ்ந்த அரளிப் பூக்களென
இழந்த பருவமும்
இருக்கையின் நடுவில் இருந்தன.

நாம் பேசத் தொடங்கிய கணத்தில்
நீராலான ஆயிரம் நூல்கள் இறங்கின .
பழுத்த மழையும், குளிர்காற்றும்
முயங்கிய வாசனை.

உன்மத்தம் கொண்ட யானைகள்
அருகிலிருக்கும் காட்டில்
மரங்களை முறிக்கும் ஓசையை
செவி மடுக்கச் சொல்லிய படி
என் தோளில் சாய்ந்தாய்.

திருவிழா நெரிசலில்
நீ மறைந்து போன கதையை,
என் உயிரின் திறப்பை
சட்டைப் பையெங்கும் தேடிய படி,
ஆயிரத்தோராவது தடவையாக
மீண்டும் சொல்லத் தொடங்கிய போது
"நிறுத்து" எனக் கத்தினேன்.

ஊழிக் காற்று
பேயின் ஓலமாய்
ஒலிக்கத் தொடங்கிய இந்தத் தடவை
ஒரேயடியாக கடலில் குதித்து நீ மறைந்தாய் .

நினைவின் நாளேடு

மணியோசை ஓய்ந்து
வெகுநேரம்.

ஆளரவமற்ற அந்த வகுப்பறையில்
அவள் அசையாதிருந்தாள்

கரும்பலகையையும்
வாங்குகளையும், கதிரைகளையும்
அயலில் படர்ந்திருந்த
கல்யாணிப் பற்றைகளின் செந்நிறப் பூக்களையும்
முறுக்கேறிய ஆலமரங்களின் விழுதுகளையும் ,
நீர் சுரித்தோடும் கிறவல் மண் பாதையையும்,
அவன் முத்தமிட்ட கிணற்றடியையும்
பார்த்த வாறிருந்தாள்.

வில்சன் சேரின் விருதியிலிருந்த
பியானோவின் மெல்லிசை
குட்டைத் தலைமுடி கொண்ட ஜீவாவின்
விரல்களுக்குள் சிக்காமல்
முகில் கூட்டமாய் அலைகின்றது.

நாசி வழியே
முற்றத்து மகிழம்பூக்களின் வாசனை.

மங்காத மை கொண்டெழுதிய நினைவேடு
கை நழுவிச் செல்லாமல்
இறுகப் பற்றியவாறு
அப்படியே இருகின்றாள் காலத்தை மறந்து.

அன்புள்ள புனிதரே

அன்புள்ள புனிதரே ,
என்னை மன்னியுங்கள் .

நீங்கள் பேணிப் பாதுகாத்த பீடத்தில்
ஒரு கரப்பான் பூச்சியாய் ஊர்ந்து விட்டேன்.
பரத்தையர் வீடு செல்லும் வழியில் தவறி
உங்கள் கதவைத் தட்டி விட்டேன்.

அருத்த ஆறாம் தலைமுறைக்கான
திருவாசகத்தை எழுதிக் கொண்டிருக்கும்
உங்கள் கவனத்தை திசை திருப்பியமைக்காக
என்னை மன்னியுங்கள்.
கரப்பான் அறியுமோ காகித வாசனை?

புகழ் வெல்லமும், புகைப்படங்களும்
உங்களுக்கு அறவே பிடிக்காதவை என அறிவேன்.
எனவே தேநீர் வேளைகளில் மட்டும்
உள்ளங் கையில் வைத்து நீங்கள் நக்கிக் குடிக்கும்
சீனியில் சிறிதளவையும்,
முறுக்கு மீசையுடன் நீங்கள் வரைந்தெடுத்து
நடுக் கூடத்தில் வைத்திருக்கும்
உங்கள் பிரமாண்ட ஓவியத்தையும்
என் கூடவே எடுத்துச் செல்ல அனுமதியுங்கள்.

அன்புள்ள புனிதரே ,
அழையாமல் நுழைந்த
இந்தக் கரப்பான் பூச்சியை மன்னித்தருளும்.

புதிரவிழ்க்கும் கனவுகள்

இருக்க நிற்க முடியாமல்
இயங்கிடுது என்மூளை!
பரவிக் கிடக்கிறது...
பலவிதத்தில் கோவைகள்!
ஒன்றன் பின் ஒன்றாய் ஒருநூறு பிரச்சினைகள்
வந்துவந்து மனதில்
அழுத்தத்தைக் கூட்டுகையில்
தானாய்ப் பதட்டம் தோன்றி
நெருக்கடியில்
மூளையும் கூடேறி மூச்சும் கொதித்திடையில்
ஒவ்வொன்றும் ஒவ்வொன்றாய்
ஒரு நூறு பிரச்சினைகள்
ஒவ்வொன்றின் தீர்வு – முடிவு வேறுவேறென்ற
குழப்ப அலைகளில்
நிதானம் தடுமாறத்
தருணம் பார்த்திருக்கிறது!
சற்றே அமைதியாகி
என்னையென் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவந்து
"பிரச்சனைதீர்வு... முடிவென்ற"
தீராத
நினைவுக் குதிரைகள் நிற்கா திழுத்தோட
நனவில் நடந்து நலிந்து
இரவுறக்கம்
தானாய்த் தழுவ அசந்துறங்கி
காத்திருந்த
பிரச்சினை தீர்வுக்கு முடிவு
எதுவென்ற
புதிர்களின் பதில்கள்...அனேகம்
கனவுகளில்
அவிழ்கிறது;
காலைகள் அற்புதமாய் விடிகிறது!

எது காற்று?

காற்று என்பது ஒன்றா? வேறுவேறா?
காற்றடிக்கும் போது
ஒவ்வோரிடத்திற்கும்
வருவது ஒரே காற்றா?
இல்லை பல காற்று–
உருக்களின் படையா?
இல்லை ஒரு காற்றின்
கரங்களா?
எண்ணிக்கை இல்லா விரல்களொடா?
என்முன் இருக்கும் மரமிப்போ
இரைந்தபடி
தன்னையாட்டும் காற்றை
தானசைந்து வரவேற்று
சிலிர்க்கிறதே!
மரத்தின் கிளையும் இலைகளுந்தான்
அறிந்திடுமா
தனை ஆட்டிப் படைத்த காற்று எது என்று?
காற்றை "ஒன்றாக" கருதுதல் சாத்தியமா?
கடற்கரையில் ஒருவாறும்
கடலின் மேல் ஒரு வாறும்
காட்டினிலே ஒருவாறும்
களனிகள் மேல் ஒருவாறும்
தோட்டத்தில் ஒருவாறும்
வெளிகளிலே ஒருவாறும்
என்று கடவுளைப்போல் ஒரே நேரம்
வெவ்வேறு
குணங்குறியும் வேகமும்
கொண்டலையும் காற்றை
ஒரே காற்று என்று
உரைத்திடுதல் நீதி தானா?

உலகிலொரு தூசு!

பிரமாண்டமாய் விரியும் பெருவெளியும்,
எல்லையெதும்,
தெரியாமல் அலையடிக்கும்
திசைகளற்ற மாகடலும்,
நடக்க நடக்கக் கடக்க முடியாமல்
கிடக்கும் நிலமும்,
கிளைந்து வளர்ந்தெண்ண
முடியா மரவகையும்,
சாவினும் புத்துயிர்க்கும்
உயிர்களும், அவற்றின் "முதலாய்"
நிதம் கிடைக்கும்
ஒளியும், முடிவற்ற காற்றும், முகில்களதும்,
இன்னுமின்னும் எத்தனையோ எத்தனையோ
இவைகளெல்லாம்
ஒப்பீட்டளவில் ஒரு சிறிய உலகத்தின்
வியப்பாய் விரிய
இவற்றினிடை... பூதக்
கண்ணாடியால் மட்டும் காணவல்ல
அற்பமான
நானுமொரு தூசாய்த் துளியாய்
இவற்றோடு
வாழ்கின்றேன்; சாவை என் காலில் மிதித்தபடி...!
இவற்றிடையில்
ஏதோ துணிவில் நடந்தபடி...!

ஈழக்கவி

நிலவுக்குள் உறங்கிய நான்

நாய்கள் குலைத்தன

மலைகள் உடைந்து
சுக்குநூறாகி சிதற குலைத்தன

காட்டு மரங்களெல்லாம்
வேரோடு கருகி
நாசமாக குலைத்தன

கடல் நீரெல்லாம்
மணலாகிப் போக குலைத்தன

வானம்
ஊதிப்பெருத்த பாலூன்கள் போல
வெடித்துச் சிதறியது
நட்சத்திரங்களும் நிலவும்
நாய்களின் வாய்களுக்குள்

நாய்கழியின் துர்நாற்றத்தால்
மனிதர்கள் அனைவரும்
செத்து மடிந்தனர்

அரச சிம்மாசனத்தில்
நாய்கள் கலவி செய்து
கூத்தாடின

குலைக்கின்ற நாய்கள்
இப்படித்தான்
கனவு கண்டன

நிஜங்கள்
கனவுகளாகிப் போக
நாய்களுக்கு
பைத்தியம் மெத்திப்போச்சு

வானத்தைப் பார்த்து
பாய்ந்து பாய்ந்து கத்தின
நிலவை கடித்துத்தின்ன
எச்சில் வடிய துடித்தன

நான் நிம்மதியாக
ஒரு முயல்குட்டியாய்
அவளின் உணர்வுகளோடு
நிலவுக்குள் உறங்கினேன்.

ஜெம்சித் ஸமான்

கிழக்கடிவானச் செவ்வெள்ளி

மகிமை மிகு இரவு
உன் உடலிலிருந்து
என்னுடல் களைகின்றேன்
உறுப்பின் முனையில் பிசு பிசுக்கும்
முதல் இரத்தச் சொட்டென
கண்ணாடி ஜன்னலுக்கு வெளியே
பள பளக்கின்றது
கிழக்கடிவானச் செவ்வெள்ளி
உன் மீது திருப்தியுற்றிருக்கின்றேன்
உன்னுடைய தூய்மையின் மீது படிந்திருக்கும்
என்னுடைய அழுக்கை சிகரட் முனைத்தணலில்
கொளுத்துகின்றேன்
புகை வளையம் வளையமாய் பெருகி வழிகின்றது
உன் மீதான கருணை
சாம்பல் தட்டியில் சந்தேகச் சாம்பல்கள்
துணுக்குத் துணுக்காய் நிரம்புகின்றன
குளியலறைக்குள் நுழைந்து
திரும்புகின்றேன்
வெண் நிறக் கீழ் விரிப்பில்
இன்னும் இன்னும் பிரகாசிக்கின்றது
கிழக்கடிவானச் செவ்வெள்ளி
இறுக மூடப்படாத
நீர்க்குழாயின் முனையிலிருந்து ஊறிக் கசிகின்றது காமம்
நீ தீரா உடல்சோர்வில்
படுத்துறங்குகின்றாய்
நீர்த் திருகியை நான்
மூடித் திரும்புகின்றேன்.

பொத்துவில் அஸ்மின்

யாரும் இல்லையென்ற கவலை வேண்டாம்

யாருமில்லையென்ற
கவலை வேண்டாம்.
உனக்காய்
அழுவதற்கு
உன் கண்கள் இருக்கிறது
துடைப்பதற்கு
உன் கைகள் இருக்கிறது.
இனி யாருமில்லையென்ற
கவலை வேண்டாம்.
உன் தலையினை நீயே வருடிக்கொடு
உன் தோள்களை நீயே தட்டு
உன் திறமைகளை நீயே பாராட்டு..
உன் தவறுகளை நீயே குழிதோண்டிப் புதை...
தோல்விகளை
கண்டு அஞ்சாதே
வெற்றிகளில்
மயங்கிக்கிடக்காதே
முதலில் உன்னை வென்று
பின் உலகை வெல்ல வா....
உடலில் உயிரும்
உணர்வில் துணிவும்
இருக்குவரை போராடு...
உன் எதிரிகளின் மூக்குகளை
உன் நம்பிக்கைகளால் உடை
நட அடுத்தவன்
கைகளைப்பிடித்து அல்ல
உன் கால்களைக்கொண்டு....!



பிரமிளா பிரதீபன்

என்ன செய்வேன்...?

விளையாட்டாய் நீ சொன்ன பொய்களும்
அவ்வப்போது நமக்குள் ஊர்ந்து நெளிந்த
ஊடல்களும் பொய்யென்று தானே நினைத்தேன்...!

நீ ஆதாமும் நான் ஏவாளுமாய்
யாருக்கும் தெரியாத
ஒற்றையாட்சியில் வாழ்ந்திருந்த
அதிசய தருணங்கள்....

உன்னை அன்பில் ஆக்கிரமித்த
தனியொரு ஜீவனாய்
உலகென உன்னையே
வலம் வந்த – என் விடியல்கள்....

என் நம்பிக்கையின் உச்சத்தில் நீயும்
உன் வாழ்வின் அத்திவாரமாய் நானும்
நகர்ந்து நீண்ட நம் நாட்கள்...
திடீரென எல்லாமே ஸ்தம்பித்து போனதும் தான் ஏன்...?
என் ஸ்ரீராமனை கோவலனாக்கியதில்
மூண்டெழுந்த சினமெல்லாம் மாதவி மீதா...
அன்றேல் கோவலனையொத்த பிறப்புக்களின் மீதா...?
உனது பிம்பமாகவே
பிற ஆண்களையும் கண்ட என்
மாயக்கண்கள் இப்போது என்ன செய்யக்கூடும்...?

நம்பிக்கையை சிதைத்து உடலெங்கும்
ஊசிகொண்டு துளைப்பதையொத்த ரணத்தை தந்து...
மீண்டும் மீண்டும் முட்டாளாக்கும்
உனையொத்த ஒட்டுமொத்த ஜென்மங்களையும்
ஒரு சிறைக்குள் தள்ளி எரித்து
பஸ்மமாக்கிவிட மாட்டேனா...?
அல்லது
பெண்மையின் தன்மையால்
பத்தோடு ஒன்று பதினொன்றாய் திரியும்
சராசரி மனுஷியாய் நானும் மாறிடுவேனா...?
என்ன செய்வேன்...?
மயான மௌனத்திற்குள் மூழ்கி
நானே என்னை தண்டிக்கப்போகிறேனா...?
என்ன செய்வேன்...?

எனக்குத் தெரியும்
என் நனவிலி மனதிற்குள்
வலிந்து சேமிக்கப்படும்
ஒவ்வொரு துளியும்
என்றோ ஒருநாள்
அனிச்சையாய் வெகுண்டெழுந்து
கொட்டப்படத்தான் போகிறது.

மனம் வெல்ல ஓர் உயிர்ப் பாடல்

இதயம் நின்ற போதும்
எனக்கு மூச்சு வந்தது
தமிழ் வேதம்
என் சாசுவத உயிர் மூச்சு
தமிழ் என்னோடு இருக்கும் வரை
நான் சாக மாட்டேன்
காலச் சுவடுகளில்
தீக்குளித்துக் கண்ணீர் புடம் போட்டு
ஒளிரும் ஒளி விளக்கு நான்
பாலைவனமென
வாழ்க்கை பற்றியெரிய
அன்புப் பதாகை தூக்கி வென்றவள் நான்
காலை வாரி விடக் கருவறுக்கும்
வாழ்க்கை நிழல்
அது நிழல் என்று புரிந்த பின்
நெஞ்சில் தான் சுமை ஏது
தமிழ் படித்த
நெஞ்சம் தளும்பாது
ஒரு போதும்
தளும்பல் நிலை கண்டால்
சரிந்துவீழும் வாழ்க்கை உயிர்
அழகான உயிர் வாழ்க்கை
அன்பு நெறி தமிழ் வேதம்
நிழலாக உடல் எரிக்கும்
நினைவுகளைப் புறம் தள்ளி மனம்
வெல்வோம்.

– ஆனந்தி –

மேகமாய் நீ!

இரவின்
மௌனம் கலைத்த
பறவைகளின்
முதல் பாடலோடு
வாசலுக்கு வந்தேன்.
வைகறை ரோஜாவின்
சிவப்பொளியாய்
என் முற்றத்தில் நீ!
உன் மௌனமொழியின்
அதிசயத்தை
இலைகளின்
சலசலப்பில் அறிந்தேன்.
சலனமற்ற மரங்கள்
"என்னை" காணா
உன் சோகத்தை
உணர்த்தின!
மயில்களின் அகவல்
குயில்களின் கூவல்
அனைத்திலும்
உன் பெயரே!
மலரிதழ்
பனியில்
உன் மனதின்
ஈரம் தரிசித்தேன்
வானம் பார்த்தேன்
என் மேகமாய் நீ!

- B.N. நளீரா -

அழுக்குக் குறிப்புகள்

கிழிசல் உடைகள்
வெட்டாத நகங்கள்
மூக்கு முடிகளென
எங்கும் அழுக்கு

பெருவிருட்சத்தின்
விழுதுகளாய்
தொங்கிக் கிடக்கிறது
சடையும் தாடியும்

வெட்டப்பட்ட விரல்கள்
சீழ் வடியும் புண்களென
நெளிந்து கிடக்கிறது
அவன் அன்றாடம்

குடலைக் குமட்டும்
அழுக்குகளின்
திரட்சியாய் அவன்..

விலகிக்
கடந்து செல்கையில்
அழுக்காகி விருகிறது மனசு

காவிப்பல் தெரிய
நட்பாய் சிரிக்கையில்
அழகாகிவிடுகிறான் அவன்...

– மன்னார் அமுதன் –

மூடர்களைப்போல..

மலர்ந்து நிமிர்ந்துகிடக்கிறது
பந்தியில்
காக்கை குந்திய
வாழையிலை!..

இரத்தமணம் மாறி
கறியாய் கோப்பையில்
கொதித்து வெந்து இருக்கிறது
பழியுண்ட கடா!..

அருப்பில் வாட்டிவதக்கி
கூட்டாக பரிமார
தயாராகிறது
கூத்தை குத்தாப் பச்சை
மரக்கறிகள்!..

கரைத்து கணக்காய்
சேர்க்கப்பட்டிருக்கிறது
இவையனைத்திலும்
உப்புடன் க(த)ண்ணீர்!..

ஊரல் அரிசிகள் மட்டும்
ஏன் இன்னும்
அடம்பிடிக்கிறதோ தெரியவில்லை
வேகுவதற்கு?
மூடர்களைப்போல முட்டரிசிகளாக
அவை எதற்கு?..

– மு.அ.மு முர்சித் –

நானும் எனது கவிதைகளும்

என் இதயமெனும் சிறு கடலில்
உன் நினைவெனும் பெருங்கப்பல்
நங்கூரமிட்டபடி!

புராதனங்களில் இருந்து
கண்டெடுத்த கல்வெட்டாய்
என் காதல் இப்போது!

மிகவும் காரிருள் படிந்த
பொழுதொன்றில் தோன்றிய
சிறு நிலவுக் கீற்றைப் போல்
இன்று உன்
தொலைபேசி அழைப்புக்களின் நாதம்!

தூறலும் இருட்டுமாய் இருக்கும்
அந்தி நேர உருவமாய்
நீயும் நானும்
கடைசியாய்
சந்தித்துக்கொண்ட
நிமிடங்களின் நினைவுகள்!

புல்வெளிகள் ஏந்திக்கொண்ட
சிறிய பனித்துளிகள் போல்
உன் ஓரப் பார்வையை
நெஞ்சில் சுமந்தபடி
நானும்
எனது கவிதைகளும்!

– தியத்தலாவ எச்.எப். ரிஸ்னா –

இறந்துவிட்டதென் சுயம்

பயணங்கள் வலிதான திசைகளிலே
தொடங்கின.
பாதையும் பூச் செண்டுகளாலே
பூட்டப்பட்டுக்கிடந்தது

தோப்புகளும்
சோலைகளும்
இரு மருங்குகளிலும்
கண்ணுக்குள்
கரைந்தன

கடற்கரை முத்தமிட்டது
கனிகள் சுவைகளாயின
தென்றல் புணர்ந்தது

இழிதான
உண்மைகளுள்
குலைந்தேன்

பின்னர்
சிவப்புக் கோடுகளால்
பாதை வெட்டப்பட்டது
இரத்தக் கறை
நேர்கோட்டில் தடுக்கியது
பயணம் தொடர்ந்ததும்
இறந்துவிட்டது
எனது சுயம்

- வஸீம் அக்ரம் -



ஒளிப்படம் - யாத்திகன்

த.ஜெயசீலன்

யாழ்ப்பாண அரங்கக் கவியூற்று

ஈழத்தில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணச் சூழலில் அரங்கேறிக் கவிதைகளைப் பொழிகின்ற கவியரங்கத்தின் தோற்றம், 1960களின் ஆரம்ப காலம் எனலாம். பல்வேறு இலக்கிய, பொது, சமூக, சமய விழாக்களில் கவியரங்குகள் ஒழுங்குசெய்யப்பட்டன. இவை மக்களை நேரடியாக கவிதையானது சென்று சேரத் தக்கவகையில் இயங்கி, மக்களுடன் நேருக்குநேர் உரையாடி, அவர்களின் மனதில் தொற்றி, அவர்களைக் கதையின்பால் ஈர்த்துக் கொண்டன. இவை அக்காலத்தில் உரையரங்கு, பேச்சரங்குக்கு அடுத்தபடியாக முக்கிய இடத்தையும் பிடித்துக்கொண்டன. எனினும் ஆரம்ப காலக் கவியரங்குகளில் சில இயல்புகள் காணப்பட்டன.

1.கவிதைகள் செய்யுட்களாக எழுதப் பட்டு அனேகமாக அவை கவிஞர்களால் இசை கூட்டிப் பாடப்பட்டன. அதாவது செய்யுட் பொழிவுகளாக இடம்பெற்றன.

2.அரங்கில் அமர்ந்து இருந்தவாறு சுடச்சுட அக்கணத்தில் ஒப்பேற்றி எழுதியவை (சபையோரை வியப்பில் ஆழ்த்தி தம்மை "வரகவிகள்" என நிரூபிக்கவோ?) வெறும் சொற்கூட்டங்களாக அளிக்கை செய்யப் பட்டன.

3.கவியரங்கத் தலைப்புக்கள் பொத்தம் பொதுவாக மக்களின் அன்றாட வாழ்க்கை பற்றிக் கணக்கில் எடுக்காதவையாகவும், கடல், காற்று, நிலா, இயற்கை, தமிழ், என்று புளித்துப் போன அதர பழசான விடயங்களையே எந்தவிதமான கற்பனையோ புதுமையோவின்றி பாடுவனவாகவும், நம் மண்ணில் கால்பதித்து நிற்காதவையாகவும், யதார்த்தத்திற்கு அப்பாற்பட்டவையாகவும் காணப்பட்டன.



4.சமூகப் பிரச்சினைகள் பற்றி கவன மெடுக்காமல் நகைச் சுவைத் துணுக்குகளையும் வேடிக்கை வினோதச் சொற்சிலம்பங் களையும் அனேகம் கொண்டவையாகவும் விளங்கின.

இவ் இயல்புகள் அக்கால கட்டத்தின் நிர்ப்பந்தமாகவும் அல்லது வழமையாகவும், கவியரங்கின் ஆழமான சமூக பயன் பற்றிய சிந்தனையற்றவையாகவும் தோற்றம் பெற்றிருந்ததையும் காணலாம். இந்த நிலையிலும் இவ் இயல்புகளில் ஒன்றையோ பல வற்றையோ கொண்டிருந்த போதும் அக்காலத்திலேயே யாழ்ப் பாணத்தில் வெற்றிகரமாகக் கவியரங்கங்களில் புகழ் பெற்றவர்

களாக கவிஞர் முருகையன், மாஹாகவி, நீலாவணன், அரியாலையூர் ஐயாத்துரை, சில்லையூர் செல்வராசன், சொக்கன், கவிஞர் வி.கந்தவனம், காரை செ.சுந்தரம் பிள்ளை, பாவலர் சத்தியசீலன், ச.வே.பஞ்சாட்சரம், ஈ.நாகராஜன், குப்பிழான் ஐ.சண்முகன் என்போர் காணப்பட்டனர். இவர்கள் கவியரங்குகள் பலவற்றில் தொடர்ச்சியாகப் பங்குபற்றியும் வந்தனர். இவர்களுள் மஹாகவி, முருகையன், நீலாவாணன் சில்லையூர் செல்வராசன், சொக்கன், காரை.செ.சுந்தரம்பிள்ளை, பாவலர். சத்தியசீலன் என்போர் யாப்பமைதி மிகுந்த கவிதைகளை கவியரங்குகளில் பாடிய அதேவேளை நாசுக்காக அன்றாடப் பிரச்சினைகளையும் சமூக அவலங்களையும் அன்றைய விஞ்ஞானப் புதினங் களையும் புதுமையான கருத்துக்களையும் தங்கள் கவிதைகளில் புகுத்தத் தவறவில்லை. இதில் சொக்கன் அவர்கள் பல கவியரங்குகளைத் தலைமை தாங்கியும் இருக்கிறார். அரியலையூர் வே.ஐயாத்துரை அவர்கள் "வரகவியாகத்" (எதுவித முன்னேற்பாடுகளுமின்றி எடுத்த எடுப்பில் இயல்பாக கவிதைகளை அனாயாச மாக பாடும் திறன்.) திகழ்ந்து கவியரங்க மேடைகளில்



காரை.செ.சுந்தரம்பிள்ளை

அரியாலையூர் வே.ஐயாத்துரை

கவிதைகளைப்பொழிந்து பாடி அளிக்கை செய்ய சில்லையூர் செல்வராசன், பாவலர்.சத்தியசீலன் ஆகியோர் கவிதைகளைச் சிறந்த வெளிப்பாட்டு முறை யுடனும் (presentation) ஏற்ற இறக்கத்துடனும் நாடக பாணியில் அங்கதச் சுவையுடனும் எள்ளற் தொனி யுடனும் சமூக அவலங்களை முன்வைத்தனர். 65-75 காலப்பகுதியில் சுன்னாகத்தில் "இளைஞர் மன்றம்" பல கவியரங்குகளை ஒழுங்குசெய்தது. யாழ் இலக்கிய நண்பர் கழகமும் பல கவியரங்குகளை ஏற்பாடு செய்தது. 70களின் கடைக்கூற்றில் இருந்த கவிஞர் களில் பலர் கவியரங்குகளில் தொடர்ந்தும் மிளிர 80 களின் ஆரம்பத்தில் சோ.பத்மநாதன்(சோ.ப.) ச.வே. பஞ்சாட்சரம், எம்.ஏ.நுஃமான், புதுவைஇரத்தினதுரை என்போரும் தனித்தன்மையாக கவிஅரங்கங்களைக் கையாண்டனர். இதில் சோ.பா, அவர்கள் காவடிச் சிந்துகளையும், திருப்புகழ்ச் சந்த விருத்தங்களையும், ஆற்றோட்டமான கலிப்பா வகைகளையும் அனாயாச மாகக் கையாண்டார். ச.வே.பஞ்சாட்சரம் சிந்துகளை யும், கண்ணிகளையும் கையாண்டு அன்றாட அவலங் களையும், சமூகச் சீர்கேடுகளையும் பிரச்சினைகளை யும் எள்ளி நகையாடினார். புதுவைஇரத்தினதுரை வீச்சான புரட்சிகர, பொதுவுடமைக் கருத்துக்களை தன் கவிதைகளில் முன்வைத்தார். இவரின் "வானம் சிவக்கிறது" என்ற முதலாவது கவிதைத் தொகுதியில் இதற்குச் சான்றான சில அரங்கக் கவிதைகளும் இடம் பெற்றிருக்கின்றன. அக்கால கட்டத்தில் பல்கலைக் கழக மட்டத்தில் எம்.ஏ.நுஃமான், சிவசேகரம், சேரன், வ.ஐ.ச.ஜெயபாலன் போன்றோரும், சில கவியரங்கு களில் பங்குகொண்டனர். பொதுவாக யாழ்ப்பாணக் கவியரங்கங்களில் கவிதைபாடிய கவிஞர்களுக்கென்று ஒரு இரசிகர் கூட்டம் பெரிய அளவில் இருந்தது. அக்காலத்தில் பல்வேறு பொது விழாக்கள், கம்பன், வள்ளுவர், பாரதி விழாக்கள், ஆண்டு விழாக்கள், ஆலயத் திருவிழாக்கள், பேச்சரங்குகள், கர்நாடக மெல்லிசை அரங்குகள், அரசியல் சார்ந்த கூட்டங்கள் என்பவற்றுக்கு இடையில் கவியரங்குகளும் பெரு வரவேற்புடன் அரங்கேற்றப்பட்டன. அக் கவியரங்கு களில் பங்குபற்றுவதற்காக இரவிரவாய் வாடகைக் கார் வண்டிகளில் கவிஞர்கள் பல்வேறு விடயங்களை நகைச்சுவையாக அளவளாவிச் சென்று வந்த அருமை

சில்லையூர் செல்வராசன்



வி.கந்தவனம்

யான அநுபவத் தருணங்களை இன்றிருக்கும் அன்றைய கவிஞர்கள் நினைவு கூருவதைக் கேட்கலாம். எனினும் மீண்டும் மீண்டும் ஒரே பாணியில் இவ் அரங்குகள் நிகழ்த்தப்பட்டமையால் 70களின் பிற்பகுதிகளிலும் 80களின் ஆரம்பப் பகுதியிலும் கவியரங்குகளின் செல்வாக்கு ஓரளவு தளரத் தொடங்கியது.

இக்கால கட்டத்தில் கவியரங்குகளின் பல வீனங்களை இனங்கண்டு கொண்ட பல்கலைக் கழகத்தைச் சார்ந்தவர்களால் "கவிதா நிகழ்வு" அறிமுகப்படுத்தப்பட்டது. 81, 82 ஆம் ஆண்டுகளில் எம்.ஏ.நுஃமான், மஹாகவியின் மகனான சேரன் போன்றோர் யாழ் பல்கலைக்கழகத்தில் இக் கவிதா நிகழ்வுகளைச் செய்து காட்டினர். இந்த இந்தத் தலைப்புகளிற் தான், இப்படி இப்படித்தான் கவிபாடுவது என்ற வரையறையின்றி தம்மால் ஏற்கனவே எழுதப்பட்ட கவிதைகளை இசைகூட்டி நாடகப்பாணியில் அரங்கங் களில் கவிஞர்கள் வெளிப்படுத்தினர். இது ஒரு கூட்டு முயற்சியாகவும் விளங்கியது. கவிதா நிகழ்வுகள் பல்கலைக்கழக மட்டங்களில் ஓரளவு புகழடைந்தாலும் பொதுமக்களிடமும், சமூக மட்டங்களிலும் பெரிதாக செல்வாக்குப் பெறமுடியவில்லை.

80களின் ஆரம்பத்திலிருந்து தொண்ணூறுகள் வரை கவியரங்குகள் மீண்டும் உத்வேகம் பெறத் தொடங்கின. பொதுவான வெவ்வேறு இலக்கிய குழு வினராலும், அரசியற் தரப்பினராலும், பொதுவுடமை வாதிகளாலும், சமூக மாற்றத்தை விரும்பியோர் களாலும் கவியரங்கத்திற்கு முக்கிய இடம் கொடுக்கப்

மகாகவி



நீலாவணன்

பட்டது. இக்கால கட்டத்தில் பாவலர்.சத்தியசீலன், சோ.பா., புதுவை இரத்தின துரை, கல்வயல் குமாரசாமி, போன்ற பலரும் கவியரங்குகளை ஆற்றுவதில் பங்கு எடுத்தனர். சில்லையூர் செல்வராசன் இலங்கை வானொலி நிகழ்ச்சிகள் மூலம் பல கவியரங்கு களையும், கவிதை தொடர்பான நிகழ்ச்சிகளையும் மிகவும் அழகான தனித்துவமான நடையில் முன் வைத்தார்.

80களில் யாழ்ப்பாணத்தில் சமூக சமய அரசியல் அமைப்புக்களையும் தாண்டி யாழில் இயங்கத் தொடங்கிய அகில இலங்கைக் கம்பன் கழகம் கவியரங்கிற்கு மிகவும் முக்கியத்துவத்தை கொடுக்கத் தொடங்கியது. அது தனதும் தன் கிளைக் கழகங்களின் விழாக்களிலும் நன்கு திட்டமிட்ட சமூக சமகால நிகழ்வு களைப் பிரதிபலிக்கின்ற, மக்களை அணுகக்கூடிய, கவர்ச்சிகரமான தலைப்புக்களிலான கவியரங்குகளை அமைத்துக் காட்டிப் பெரும் பாராட்டுக்களையும் வரவேற்பினையும் பெற்றுக் கொண்டது. 80 களின் நடு, பின் னைய காலத்தில் இக் கவியரங் குகளில் முருகையன், காரை சுந்தரம்பிள்ளை, புதுவை இரத்தின துரை, கல்வயல் குமாரசாமி, ஜெ.கி.ஜெயசீலன், நாக சிவ சிதம்பரம் போன்ற பல பிரபலம் மிக்க கவிஞர்கள் கலந்து கொண்டனர். கம்பன் விழாக்கவியரங்குகளுக்கு என்று பெரும் இரசிகர் கூட்டம் காணப்பட்டது. கவியரங்குகளில் பாடப்பட்ட கவிதைகள் சாதாரண பொதுமக்களாலும் ரசிக்கப்பட்டு, இயல்பாகவே மனன மாகி, அவர்களின் வாயில் அனாயாசமாகப் புழங்கும் நிலை தோன்றியது. இதில் புதுவை இரத்தினதுரையின் அரங்கக் கவிதைகள் இளைஞர் பலருக்கு மனப்பாடம் ஆகின. அக்கால நல்லூர் திருவிழாவைப் பின்னணி யாகக் கொண்டு

"பொன்னணிந்தனர் பட்டுகள் சூடினர்
போய்க் கடைகளில் ஐஸ்ப்பழம் சூப்பினர்
விண்ணிடிந்து விழுந்திடும் போதிலும்
வீடியோவில் படங்களைப் பார்த்தனர்..."

"மான்சுட்டால் அன்றி மரைசுட்டால் மயில்சுட்டால்
ஏன்சுட்டாய் எனக்கேட்க
இந்நாட்டில் சட்டமுண்டு"

போன்ற கவிதைகள் வீரசிங்கம் மண்டபத்தில் நிகழ்ந்த அரங்க நிகழ்வொன்றில் பாடப்பட்டு, பின் இவை ஒலிப்பதிவு செய்யப்பட்டு அனேகமாக பரவலான இரசிப்புக்குட்பட்டது.

1985ம் ஆண்டு நல்லை ஆதீனத்தில் நடந்த அகில இலங்கைக் கம்பன் விழாக் கவியரங்கில் ஏகோபித்த வரவேற்புடன் கவிதை பாடியதைத் தொடர்ந்து புதுவை இரத்தினதுரை அந்தச் செல் வாக்குடன் போர்க்களத்தில் குதித்தது தனிவரலாறு.

சிறிது காலத்தின் பின்னான இந்திய இராணுவ பிரசன்ன வேளையில் புதுவை பாடி ஒலிநாடாக்களாக வும் வெளிவந்த

"குரலெடுத்ததோர் குயில்படுத்தது
குமுறிநின்ற எரி மலை படுத்தது
தரமறுத்திடும் உரிமை பெற்றிடத்
தன் வயிற்றிலே போர்தொடுத்தது!"

போன்ற கவிதைகள் பெரும் செல்வாக்கைப் பெற்றன.

தொண்ணூறுகளில் யாழ்ப்பாணக் குடா நாட்டின் அடைக்கப்பட்ட யுத்தசூழலில், மின்சாரம் செத்த இரவுகளில், பல்வேறு விழாக்கள், பொது நிகழ்வு களில் கவியரங்குகள் அக்கால நிலைமைகளை உள் வாங்கி உருவானதால் முக்கிய இடத்தை பெற்றன. முத்தமிழ் விழாக் கவியரங்குகள், ஆலய உற்சவகாலங் களில் நடாத்தப்பட்ட கவியரங்குகளை இதற்கு உதாரணங்களாகக் கொள்ளலாம். இக்காலத்தில் உள்ளூர் வானொலியும் ஒவ்வொரு வாரமும் வெவ் வேறு கவிஞர்களைக் கொண்டு ஒலிப்பதிவு செய்யப்பட கவியரங்குகளை ஒலிபரப்பி கவியரங்கக் கவிதைகளைப் பரவலாகப் பிரபலப்படுத்தியது. தீபாவளி, பொங்கல்



எம். ஏ.நுஃமான்



சேரன்

போன்ற பண்டிகைக் காலங்களிலும், விசேட நினைவு தினங்களிலும் கூட கவியரங்கங்கள் வானொலியிலும், அரங்குகளிலும் வலம்வந்தன.

இக்காலத்தில் கவிஞர் நாவண்ணன் பிரபல மானார். முத்தமிழ் விழா கவியரங்குகள், கம்பன் விழா கவியரங்குகள், வானொலிக் கவியரங்குகளில் கவிஞர் நாவண்ணனின் கவிதைகளும் அக்கவிதைகள் அவரால்

சொல்லும் முறையால் சிலாகிக்கப்பட்டன.

இக்காலத்தில் கவிஞர் கல்வயல் குமாரசாமி கிராமிய மண்மணம் கமழும் சொற்பிரயோகங்களாலான குறியீட்டுக் கவிதைகளை பாடினார். உடன் புரிதலுக்கு சிரமமான போதும் அரங்குகளில் குறியீட்டுக் கவிதைகளின் சில சிக்கல் முடிச்சுகளை அவர் அவிழ்த்துக் காட்டிய போது ரசிகர்கள் அவர்கூற முனைந்த பொருளைப் புரிந்து நூல்பிடித்துத் தொடர்ந்து கவிதையை ரசித்தும் பாராட்டினர்.

இக்காலத்தில், கம்பன் விழா கவியரங்குகளிலும், யாழ் இந்துக் கல்லூரியில் நடந்த கவியரங்குகளிலும் அக்காலத்தில் யாழ் இந்துக் கல்லூரியில் தமிழ் ஆசிரியராக கடமை புரிந்த ச.வே.பஞ்சாட்சரம் பாடிய சிந்துகள் பலத்த வரவேற்புப் பெற்றன.

"வடமராட்சித் தாலிக்கொடியை நம்பிஅங்கே
பொடிமெனிக்கே காத்திருந்தாள் வெம்பி"

என்ற சிந்து இதற்கு நல்ல உதாரணம். அக்கால அரசியல் சூழலை அதிக பட்ச நையாண்டியுடன் ச.வே.ப ஒவ்வொரு சிந்துகளிலும் பாட ஒவ்வொரு முறையும் அரங்குகள் அதிர்ந்தமை இன்றும் கண்முன் நிற்கிறது. ஒரு முறை தன்னை அறிமுகப் படுத்தும் போது சிலேடை யாக "சா.வே...பா" எனப்பாடிப் பாராட்டுப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இதைத் தவிர ஜெ.கி.ஜெயசீலன், நாக.சிதம்பரம் போன்ற புதிய தலைமுறை கவிஞர்கள் காத்திரமான கவிதைகளை பாடினர். இக்கால கட்டத்தில் நடந்த பெரும் புகழ் பெற்ற பல கவியரங்குகள் கவிஞர் முருகையனின் தலைமையில் நடந்தன. முருகையன் அவர்கள் தலைமைக் கவிதையில் கூட நுட்பமான பல புதிய உத்திகளைக் கையாண்டார். இசையோடு கவிதை வாசித்தல் அல்லது பாடுதல், நாடகப் பாங்கில் உணர்ச்சி மேலிடக் கவிதையைச் சமர்ப்பித்தல், வெவ்வேறு யாப்பு சந்தவகைகளைக் கையாள்வதன் மூலம் சபையோரைக் கவர்தல், கவிஞர்களை அறிமுகம் செய்யும் போது புது உத்திகளை கடைப்

கல்வயல் வே.குமாரசாமி



புதுவை இரத்தினதுரை

பிடித்தல், கவிஞர் கவிதை பாடி முடிய பாடிய கவிதையின் சிறப்பான பகுதிகளை மீளப் பாடி தனது இரசனையை வெளிப்படுத்தி அதனைச் சபையோரும் ருசிக்கவைத்தல் என்பன இவற்றில் சிலவாகும். பண்டிதர் பரந்தாமன் போன்ற ஆழ்ந்த தமிழ் அறிஞர்களும் ஒரு சில அரங்கில் பங்கெடுத்தமை இங்கு நோக்கத்தக்கது.

கவிஞர்.காரை சுந்தரம்பிள்ளை கிண்டலும் கேலியும் நகைச்சுவையுடனும் கூடிய தனது நடையில் சமூக அவலங்களையும் நாட்டுசூழலையும் சிறப்புறப் பாடினார்.

90களின் நடுப்பகுதியில் அகில இலங்கை



முருகையன்

சோ.பத்மநாதன்

கம்பன் விழா கவியரங்குகளில் புதிய இளந்தலைமுறை யொன்று பங்குபற்றத் தொடங்கியது. த.சிவசங்கர், த.ஜெயசீலன், ச.முகுந்தன் ஆகியோரின் கவிதைகள் 93, 94, 95 ஆண்டுகளில் நடந்த அகில இலங்கை கம்பன் கழக கவியரங்குகளிலும் வடமராட்சி, ஊரெழு, காரைநகர் கம்பன் விழாக்களிலும் ஏனைய மூத்த கவிஞர்களின் கவிதைகளுடன் சரிசமானமாய் அரங்கேறி நல்ல வரவேற்பை பெற்றுக் கொண்டன. இவர்கள் தவிர காரை எம்.பி. அருளானந்தன், மகாலிங்கசிவம் போன்றோரும் வேறு இடங்களில் நடந்த சில கவியரங்குகளில் பங்கு பற்றினர்.

கம்பன் விழா கவியரங்குகள் அன்று மக்களிடம் பெரும் செல்வாக்கு பெற்றன. அதற்கு பல காரணங்களை கூறலாம்.

1. பழைய செய்யுள் பாடும் முறையிலிருந்து வேறுபட்டு கவிதைக்குரிய நடையில், பேச்சோசையில் அநேகர் கவிதையை முன்வைத்தமை.

2. கவியரங்குகள் நன்கு திட்டமிடப்பட்டு, வடிவமைக்கப்பட்டு, ரசிகர்கள் சலிப்படையா வண்ணம் உரிய நேரக்கட்டுப் பாடுகளுடன் நடத்தப்பட்டமை.

3. கவியரங்கு ஒரு தனி நிகழ்வாக விழாவில் முக்கியத்துவப்படுத்தப் பட்டமை

4. சமகால பிரச்சனைகளை, யதார்த்தத்தை, நாட்டு நடப்புகளை, அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளை ஏனையோருடன் பகிரும் நிகழ்வுகளாக அவை மாற்றப் பட்டமை. அதாவது வெறும் மனோரதிய கற்பனாவாத பாடிச் சலித்த விடயங்களைக் கொண்டவையாக அமைக்கப் படாதிருந்தமை.

5. எவரும் சிந்திக்காத, வழமை போன்றில்லாத கற்பனைச் செறிவுள்ள புதுப்புதுத் தலைப்புகளில் வெவ்வேறு கோணங்களில் கவிதைப் பாடுபொருள்—

அணுகப்பட்டமை.

உ-ம்-:

93 ல் நல்லூர் கம்பன்விழாவில்

"வெம்பி விரக்தியுறல் விட்டோடி மிகவிரைவாய்
கம்பனுக்குச் சொல் கவிதைத் தூது"

என்ற தலைப்பில் அரங்கத் தலைவர் வீரமணிஐயர் அவர்களைக் கம்பனாகப் பாவித்து அக்காலத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்த மண்ணெண்ணெய் குப்பி, பதுங்கு குழி, வெற்று மின்கம்பம், சைக்கிள் போன்ற சடப்பொருட்கள் கம்பனிடம் தூது சென்று நாட்டு நிலையை கூறுவது போல கவியரங்கு அமைக்கப் பட்டது.

94ல் "கம்பன் அரங்கில் கவிபாடும் ஓர்உரிமை எங்களுக்குந் தாரும் இனி" என்ற தலைப்பில் நேர்காணல் கவியரங்கு அமைக்கப்பட்டது. இதில் இளந் தலைமுறைக் கவிஞர்கள் மூத்த கவிஞர்களிடம் கவிபாடும் உரிமையைக் கேட்க முருகையன், காரை சுந்தரம்பிள்ளை, ச.வே. பஞ்சாட்சரம் ஆகிய மூத்த நேர் காணற் சபைக் கவிஞர்கள் இளையவர்களை நேர் காண்பது போல கவியரங்கு வெற்றிகரமாக அமைந்தது.

வடமராட்சியில் ஒவ்வொரு கவிஞர்களும் தமிழின் மூத்த கவிஞர்களான அப்பர், அருணகிரியார், பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன், புதுவை இரத்தின துரை போன்றோர் ஆகத் தம்மை வரித்து அக்கால அவலங்களைப் பேசினர்.

95 ல் "எண்ணங்கள் விரிந்தெம் இதயங்கள் பேச வண்ணங்கள் தலைப்பா கட்டும்" என்ற தலைப்பில் ஒவ்வொரு கவிஞருக்கும் ஒவ்வொரு நிறங்கள் ஒதுக்கப் பட அந்நிறங்களின் ஊடாக அன்றைய பிரச்சினைகள் பேசப்பட்டன. இக்கவியரங்கில் பாவலர். சத்தியசீலன், பொன் கணேசமூர்த்தி போன்ற மூத்தோரும் பங்கெடுத்தனர். இதில் கவிஞர் கல்வயல் குமாரசாமி "வண்ணங்கள் தலைப்பா கட்டும்" என்று சிலேடையாகப்பாடியது இரசிக்கப்பட்டது.

95 வலிகாம இடம்பெயர்வின் பின்னரும் வலிகாம மீள் குடியேற்றத்தின் பின்னரும் அனேகமாகக் கலைவிழாக்கள் மறைந்து போயின. எனினும் அந்த இருண்ட காலத்தில் முதல் சிறு ஒளிக்கீற்றாக 98ல் மீண்டும் அகில இலங்கை கம்பன் கழகத்தின் "நிலாக்கால நிகழ்வு"களில் கவியரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டன. இக்கவியரங்குகளில் சோ.பா, கல்வயல் குமாரசாமி, த.ஜெயசீலன், இ.சு.முரளீதரன், தி.திருக் குமரன், எஸ்.ஜெயரூபன், ச.முகுந்தன், வாயுபுத்ரன் (கி.குருபரன்) போன்றோர் பங்கு கொண்டனர்.

90 களில் யாழ்ப்பாணத்தில் பல்வேறு நிகழ்வு களில் கவியரங்குகள் நடத்தப்பட்டன. பல்வேறு கழக, அமைப்புகள் மட்டங்களின் நடந்த விழாக்களில் இவை அரங்கேறின. திருமறைக்கலாமன்ற ஆண்டு விழா, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி நடாத்திய பாரதிவிழா, பாடசாலைகளில் நடாத்தப்பட்ட மாணவர் கள் பங்கேற்ற கவியரங்குகள், தனியார் கல்வி நிலைய பரிசளிப்பு, வாணிவிழா என்பவற்றில் அரங்கேறிய கவியரங்குகள், பல்கலைக்கழக மட்டத் தமிழ் விழாக்கள் என்பவை முக்கியமானவை.

97இல் இருந்து அகில இலங்கை கம்பன் கழகத்தினர் கொழும்பில் கொழும்பு கம்பன் கழகத்தினை நிறுவி ஒவ்வொரு ஆண்டும் கொழும்பில் எடுத்த கம்பன் விழாக்கள் தனிசிறப்புமிக்க நிகழ்வுகளாக அரங்கேறின. இக்கவியரங்குகளுக்கு ஆரம்பத்தில். தமிழ் நாட்டில் இருந்து வந்த பிரபலமான நட்சத்திர கவிஞர்களான அப்துல்ரகுமான், வாலி, மு.மேத்தா, அப்துல்காதர், நெல்லை ஜெயந்தா போன்றோர் தலைமை வகித்திருந்தனர். அண்மைக் கால கொழும்பு கம்பன் கழக, யாழ்கம்பன் கழக கவியரங்குகளுக்கு இலங்கை வானொலியில் தனித்துவமாக கவிதையை வாசித்து வரவேற்புப் பெற்ற சிதம்பரப்பிள்ளை சிவகுமார் தலைமை தாங்குகின்றார். இவ் அரங்குகளிலும் மிகவும் புதுமையான தலைப்புகளில், புதுமையான அரங்க வடிவமைப்பில், ஆழ்ந்த விடயங்களூடாக சமகாலத்தைப் பிரதிபலிக்கக் கூடிய கவிதைகள் பாடப்படுகின்றன. சு.வில்வரத்தினம், இளையதம்பி தயானந்தா, சிதம்பரப் பிள்ளை சிவகுமார், வ.ஐ.ச.ஜெயபாலன், சோ.ப, கல்வயல் குமாரசாமி, ஜின்னா ஷெரிபுதீன், மேமன்கவி, த.சிவசங்கர், த.ஜெயசீலன், ச.முகுந்தன், ஸ்ரீ பிரஷாந்தன், ச.மணிமாறன் போன்றோர் இக்கவியரங்கு களில் பங்குபற்றியுள்ளனர். இக்கவியரங்குகளிலும் புதுமையான பல தலைப்புகளில் அருமையான கவிதைகள் அரங்கேறின. "அடிகள் தந்த அடிகள்", "பூதங்கள் தொறும் உறைந்து", "கம்பன் காட்டும் எண்ணினால் கவிதை பாட எண்ணினால்" போன்ற வேறுபட்ட தலைப்புகளில் கவிஞர்கள் சமகால அரசியலை குறியீடுகளாக அனேகமான இக்கம்பன் விழாக் கவியரங்குகளில் பாடியதால் அவை சுலபமாக சபையோரை ஈர்த்துக்கொண்டன.

கம்பன் கழகத்தைத் தவிர வடமராட்சியை மையமாகக் கொண்டு இயங்கும் இளங்கோ கழகத்தினரும் இடைக்கிடை தரமான கவியரங்குகளை நிகழ்த்திக் காட்டியிருக்கின்றனர்.

கடந்த ஆண்டு தனிநாயகம் அடிகளாரின் நினைவுக் கொண்டாட்டத்தின் போது திருமறைக் கலாமன்றத்தில் "புதுப்புனல் பாய்ந்திடுக" என்ற கவியரங்கும், இவ்வாண்டு பொங்கல் விழாவின் போது வட மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் தமிழகக் கவிஞர் யுகபாரதி தலைமையில் "உழவே எமக்கு உயிர்" என்ற கவியரங்கும் நிகழ்ந்தது குறிப்பிடத் தக்கது.

இக்கட்டுரை யாழ்ப்பாணத்தை அடிப்படை யாகக் கொண்டே வரையப்பட்டுள்ளது. இது முழுமை யான ஒரு கட்டுரை என கூறிக் கொள்ள முடியாது. கிழக் கிலங்கையிலும், மலையகத்திலும், யுத்தம் தன்னைப் பரவச் செய்த பின்தங்கிய வன்னி யிலும் தொடர்ச்சியாக பாடப் பட்ட தமிழ்க் கவியரங்கக் கவிதைகளைப் பற்றி ஆய்வு செய்யப்பட வேண்டும். அதற்கான முன்னோட்டமாக அல்லது முதற்படியாக இக்கட்டுரை அமையுமெனில் அது சிறப்பானது.

கடவுச் சீட்டு

இந்தக் கடவுச் சீட்டில் உள்ள என் நிறத்தை
நிழல்கள் உறிஞ்சி எடுக்கின்றன
அவர்கள் என்னை அடையாளம் காணவில்லை
என் காயம்
அவர்களுக்கு
நிழற்படங்கள் சேகரிக்கும்
சுற்றுலாப் பயணிக்குரிய காட்சிப் பொருள்:
அவர்கள் என்னை அடையாளம் காணவில்லை
ஆ... மரங்கள் என்னை அடையாளம் காண்பதால்
வெய்யிலில் என் உள்ளங்கையை விட்டு விடாதீர்கள்
மழையின் எல்லாப் பாடல்களும் என்னை அடையாளம் காண்கின்றன
வெளிறிய நிலாப் போல என்னை விட்டுவிடாதீர்கள்!

தொலைவிலுள்ள விமான நிலையத்தின் கதவு வரை
என் உள்ளங்கையைப் பற்றித் தொடர்ந்த
எல்லாப் பறவைகளும்
எல்லாக் கோதுமை வயல்களும்
எல்லாச் சிறைச்சாலைகளும்
எல்லா வெள்ளைக் கல்லறைகளும்
எல்லா முட்கம்பி வேலிகளும்
எல்லா அசையும் கைக்குட்டைகளும்
எல்லாக் கண்களும் என்னோடிருந்தன
ஆனால் அவை என் கடவுச் சீட்டிலிருந்து உதிர்ந்து விட்டன!

என் கையால் வளமூட்டப்பட்ட இந்த மண்ணில்
என் பெயரும் அடையாளமும் பறிக்கப்படுவதா?
இன்று யோபுவின் ஓலம்
விண்ணை முட்டியது!
ஓ கனவான்களே, தீர்க்கதரிசிகளே என்னை மீண்டும்
உதாரணமாக்காதீர்!
உங்கள் பெயரென்னவென்று மரங்களைக் கேட்காதீர்!
உங்கள் தாய் யாரென்று பள்ளத்தாக்குகளைக் கேட்காதீர்!
என் நெற்றியிலிருந்து வெடித்துக் கிளம்புகிறது
ஒளியாகிய வாள்
என் கையிலிருந்து ஊற்றெடுக்கிறது
ஆற்றுநீர்
எல்லா மனிதர்களின் இதயங்களும் என் அடையாளம்
ஆகவே என் கடவுச் சீட்டை எடுத்துக் கொள்ளுங்கள்!

அம்மா

அம்மா உன் நொட்டிக்கு
உன் கோப்பிக்கு
உன் தொடுகைக்கு
ஏங்குகிறேன்
ஒவ்வொரு நாளும்
பிள்ளைப் பருவ நினைவுகள்
என்னுள் எழுகின்றன
நான் சாகும் வேளையில்
பெறுமதியுள்ள
தாய் இருக்க வேண்டும்
என்வாழ்வு!
நான்சாகும் வேளையில்
பெறுமதி உள்ளதாய் இருக்க வேண்டும்
என் தாயின் கண்ணீர்

என்றோ ஒரு நாள்
நான் திரும்பி வந்தால்
என்னை
உன் புருவங்களை மூடும்
முகத்திரையாக ஏற்றுக்கொள்
உன் பாதங்களால் ஆசீர்வதிக்கப்பட்ட
புல்லால் என் என்புகளை மூடிவிடு
உன் கூந்தலால்
உன் மேலங்கியிலிருந்து தொங்கி
நிலத்தில் இழுபடும் நூலால்
என்னை உன்னோடு சேர்த்துக் கட்டிவிடு
உன் இதயத்தின் ஆழத்தைத் தொடமுடிந்தால்
நான் அமரன் ஆவேன்
கடவுள் ஆவேன்

மூலம் : மஹ்மூத் தர்விஷ்
தமிழில் : சோ.பத்மநாதன்

ஒருநாள்
நான் திரும்பி வந்தால்
உன் அடுப்புக்கு
என்னை விறகாகப் பயன்படுத்து
உன்கூரைக்கு மேல்
துணிகாயவிடும் கொடியாகக் கட்டு
உன் ஆசியின்றி
என்னால் எழுந்து நிற்க இயலாது
எனக்கு வயதாகிவிட்டது
தூக்கணாங்குருவிகளோடு சேர்ந்து
உன் கூட்டுக்கு வழிதேடிவர
என் பிள்ளைப் பருவத்து
பிரபஞ்ச ரகசியங்களை எனக்குத் திருப்பித்தா!



சிந்திப்போம் செயற்படுவோம் வெற்றிகாண்போம்



எல்லாமே இழந்திட்டோம். இழந்திட்டோமா?
இல்லையெனில் எதனைத்தான் இருப்பில் கொண்டோம்
பொல்லாத காலமெமக் கென்றிருந்தால்
போனதெல்லாம் போனதுதான் மீட்பேயில்லை
நல்லதினி நடப்பதுதான் நன்றேயென்று
நெஞ்சுறுதி கொண்டிட்டால் நிமிர்தல் கூடும்
வெல்லவொண்ணா தொன்றில்லை வைரம் நெஞ்சில்
வேரூன்றின் விட்தொடு வேறும் ஒன்றும்

அங்கமங்க மாய்ப்பிரிந்தோம் அவயவங்கள்
அகன்றுவிட்ட முண்டத்தின் ஆன தோற்றம்
பங்கமுற்றோம் பழிசுமந்தோம் பழியார் மேல்தான்
போடுவது என்றாயும் படியுமானோம்
சங்கைமிகு குலமென்னும் தொன்மை குன்றிச்
சீர்கெட்டுப் போனோமே சிந்திப்போமா?
எங்களுக்குள் புரிந்துணர்வும் ஏற்புங் கொண்டால்
எவராலும் அசைக்கவெண்ணாச் சக்தி நாமே

அறவழியும் ஆயுதமும் அடைந்த தோல்வி
அன்னியரால் வந்ததல்ல அறிவோம் நெஞ்ச
உறுதியொடு நாமொன்றா ஊனத்தாலே
ஒன்றியதே ஓர்ந்தீரேல் உண்மை ஒன்றும்
குறிதவறக் காரணம் நாம். கண்டோரல்ல
கற்றவரும் கருத்தழிந்தே குருடரானார்
இறைவரமும் எம்பக்கம் இலாது போன
இழிநிலைக்குக் காரணம்நாம் இலையென்போமா?

பிறந்ததிந்த மண்ணிலுயிர் பிரிந்திட்டாலும்
புகுவதிந்த மண்ணுள்தான் புழுதியாகிப்
பறந்தாலும் கரைந்தாலும் புனலுங் காற்றும்
பேசுமெங்கள் பூர்வீகம் பழைமை சாற்றும்
குறைமதியோர் வரலாற்றைக் குடைசாய்க்கின்ற
காரியத்தில் வெறிகொண்டார் காலாகால
உறைவிடத்தைப் பறிப்பதிலும் ஊக்க முற்றார்
ஒழித்தழிக்குங் கொள்கைக்கும் ஊன்று கோலாம்

மொழி தன்னைக் குழி புதைத்தால் மதம் பண்பாடு
மண்ணுண்ணல் சாத்தியமே மாற்றான் வேண்டா
இழிதொழிலை நாமேதான் இயற்றுகின்றோம்
எதிர்காலச் சந்ததியை இழப்பச் செய்தோம்
வழிதவறிப் போகுதெங்கள் வழிச்சமூகம்
விழித்திடவும் வேண்டாவோ வரிந்து கட்டி

எழுந்திருங்கள் உறவுகளே எம்மிருந்தே
எழட்டுமொரு உத்வேகம் உரிமை காப்போம்

ஒன்றுபடல் மொழிப்பற்று ஓர்மை வேகம்
ஒவ்வாத தலைமைப்பசி உவப்பில்லாமை
சென்றவற்றை எண்ணிமனத் தளர்வு நீங்கல்
தூயதிட்டம் செயற்பாட்டுத் திறமை என்மால்
தன்மைகளில் வேரூன்றிச் செயற்பட்டாலோ
திண்ணம் நாம் வாகைகொளல் சந்ததிக்கும்
பின்னாளில் தொல்லையில்லை போன நாட்கள்
பட்டதுன்பப் பரிகாரம் போலுமாமே.

ஒன்று மழை,
மற்றொன்று காட்டு மின்னலின் ஒளி*

துளசி விதைகளும்
நன்னாரி வேரும் கலந்து
இளம் பாசிநிற சர்பத்துக்கள்
நமக்கு முன் வைக்கப்பட்டன

சில்வியாப் பிளாத்தின் வரிகளை
நீ இரண்டாம் முறையாகக் கூறும் பொழுதில்
உணவக மரத்திலிருந்த புறாவின் இறகு
என் முக்காட்டின்மேல் வந்து விழுந்தது
நீ கண் இமைகளைச் சுருக்கிச் சிரித்தாய்
அருவியின் கற்கள்
காலம்பல கிடந்து
மென்மையுறத் தேய்ந்து வழுவழுப்பாகிய
பவித்திரமும் காதலும் கொண்டொரு ஒளிரும் சிரிப்பு

உரையாடல் நெடுக
காதுகளைவிடப் பெரிய
உனது தொங்கு மின்னிகளும்
ஆமாம்... ஆமாம்... என்றன
இல்லை... இல்லை... என்றன
முந்திரி வறுவல் மணக்கும்
அக்காரடிசிலை மென்று விழுங்கினேன்
நீண்டநாள் கசப்பை சரிசெய்ய விரும்புகிறேன்

தோழி பரிசளித்த
சந்தனமும் கராம்பும் சேர்த்துருவாக்கிய
சவர்க்காரங்களை
முகர்ந்து பார்க்கிறோம்
அவள் நெற்றிவியர்வை
ஊறிய குங்குமத்தில்
சூரியன் உச்சி முகர்ந்திருந்தது
நீண்டநேரம்
முடிச்சுக்களை
புதிர்க்கணக்குகளை
காற்றில் அவிழ்கின்றபடியாக
தளர்த்துகின்றோம்

கைப்பைக்குள்
சாவியை பேனாவை
புத்தகத்தை எடுத்து வைத்துக்கொள்கிறாய்

கண்ணீரும் முத்தங்களும்
கன்னங்களிலேயே இருக்கின்றன
அங்கே வெற்று நாற்காலியில்
நம்மை உற்றுக்கேட்டபடி
நான்காவது பெண்ணாக
சில்வியா அமர்ந்திருந்தாள்.

* (நாங்கள் வானத்தில் இரண்டு மேகங்களைப்போல இருந்தோம்.
ஒன்று மழை, மற்றொன்று காட்டுமின்னலின் ஒளி – சதாத்ஹஸன்
மாண்டோ)

கே.எம்.செல்வதாஸ்

தமிழில் "கஸல்" கவிதை வடிவம்

பிரிவாற்றாமை பற்றியும், காதலினால் ஏற்படும் விரகவேதனையைப்பற்றி எடுத்துரைக்கும் ஒருவகைப் பாவினமாகவும் கஸல் நோக்கப்படுகின்றது.

"கஸல்" அரபியில் அரும்பிப் பாரசீகத்தில் போதாகி உருதுவில் மலர்ந்து மணம் வீசும் அழகான இலக்கிய வடிவம். கிவதை வடிவத்திற்கு உருது அளித்திருக்கும் கொடையாக இது அமையப்பெற்றுள்ளது. கி.மு பத்தாம் நூற்றாண்டில் அரேபியாவில் புகழ்பெற்ற வடிவமான கஸீதாவிலிருந்து வார்த்தெடுக்கப்பட்டதே கஸல் ஆகும். "கஸீதா" என்றால் "ஒரு குறிக்கோளை நோக்குதல்" என்று பொருள்படும். இச்சொல் "கஸத" எனும் மூலத்திலிருந்து பிறந்ததாகும். இது ஒரு நீளமான கவிதையைக் குறிக்க அரேபியர்களால் பயன்படுத்தப்பட்டது. முதன்முதலாக அரேபியில் கஸீதா எழுதியவர் பாஸீ சண்டையில் கலந்து கொண்ட தக்லீப் குழுவைச்சார்ந்த முஹல்ஹில் என்பவராவார். கஸீதாவின் தொடக்கத்திலிருக்கும் பகுதிக்கு "தஸ்பீப்" என்று பெயர். அந்த தஸ்பீப் பகுதியில் தான் கஸீலக்கான உணர்வுகள், தன்மைகள், நயங்கள் காணப்படுகின்றன. கஸல் என்ற அரபுச்சொல்லின் நேரடிப்பொருள் "மான்கண்" என்பதாகும். தமிழில் இது "காதலியுடன் பேசுதல்" என்று அர்த்தமாகின்றது. பிரிட்டினிகா பேரகராதி கஸல் என்பது காதலின் பரிமாணங்களைச் சுருக்கமாக வெளிப்படுத்தும் பாடல் வடிவமாகும் என்கிறது.

பிரிவாற்றாமை பற்றியும், காதலினால் ஏற்படும் விரகவேதனையைப்பற்றி எடுத்துரைக்கும் ஒருவகைப் பாவினமாகவும் கஸல் நோக்கப்படுகின்றது. கஸலில் மிக முக்கியமானவை முதல் இரண்டு அடிகள் இவை தான் கஸலின் தன்மையையும் சூழலையும் ரசிகனுக்குச் சொல்லி ரசிகனின் மனநிலையை கஸலை அனுபவிப்பதற்கான சூழலுக்கு அழைத்துச்செல்கிறது. முதல் இரண்டு அடிகள் எத்தனை சீர்களை வேண்டுமானாலும் கொண்டிருக்கலாம். முதல் இரண்டு அடிகள் மத்லா (உதிப்பு) எனப்படும். இறுதிரண்டு அடிகள் மக்தா (முடிவு) எனப்படும். மக்தாவில் கவிஞர்கள் தமது பெயரையும் அமைத்து எழுதுவதுண்டு. உருதுக்கவிஞர் மீர்ஸா



காலிப், மொகாலய மன்னரான பகதூர் ஷா ஜஃபர், அக்பர் ஹீசைன் அக்பர், அக்தர் - அன்சாலி, ஜாஸ்பி, ஹஸ்ரத் மோஹானி போன்றோர் கஸல் கவிதைகளால் புகழ் பெற்றவர்களாவர். இவர்களில் ஹஸ்ரத் மோஹானி கஸல்களில் காதல்முத்திரையைப் பதித்து கவிஞனுக்கும் ரசிகனுக்கும் உள்ள இடைவெளியைக்குறைத்தவர்களில் முன்னோடியாவார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்த கஸல் வடிவமானது காதலையும், இறைமையும் மட்டும் பாடாமல் வாழ்வின் யதார்த்தங்களையும் தெளிவாக படம்பிடித்துக்காட்ட முனைப்புக் கொண்டதுடன் அதில் பல கஸல்கவிஞர்கள் வெற்றியும் கண்டனர்.

இவ்வாறான கஸல்கவிதையின் வடிவமுயற்சி தமிழில் மிக அரிதாகவே நிகழ்ந்துள்ளது. உருது, பாரசீக மொழிகளில் தேர்ச்சி பெற்றவர்களே கஸல் கவிதையின் வடிவத்தை உள்வாங்கி அதைப்பிறமொழிகளில் படைக்க இயலும். தமிழ்ச்சூழலைப் பொறுத்தவரையில் உருது, பாரசீக மொழிகளில் தேர்ச்சி மிக்கவர்களாக இஸ்லாமியர்களே திகழ்கின்றனர். இதனால் தமிழில் கஸல் கவிதையின் அறிமுக முயற்சி இவர்களின் புலமையைச்சார்ந்தே உருப்பெற்றுள்ளது. அவ்வகையில் தமிழில் கஸல் வடிவக்கவிதையை அறிமுகம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டவராக கவிக்கோ அப்துல் ரகுமான் விளங்குகின்றார்.இவர் உருது மொழியினைத் தாய்மொழியாகக் கொண்டவராகையினால் இம் முயற்சி கைவரப்பெற்றது. இவரது "மின்மினிகளால் ஒருகடிதம்" எனும் தொகுப்பே தமிழில் முதல் "கஸல்" கவிதைத் தொகுப்பாகும், அடுத்து இவரது "ரகசியப்பூ" எனும் தொகுப்பும் ம.ரமேஷ் என்பவரது "எச்சில் பூக்கள்" எனும் தொகுப்பும் கஸல் கவிதைகளைத் தாங்கியவையே இணையத்தளங்களில் கஸல் கவிதைகள் நாளுக்கு நாள் குவிந்த வண்ணமே இருக்கின்றன. இவர்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கே.இனியவன் என்பவர் குறிப்பிடத்தக்க ஒருவராக காணப்படுகின்றார். இவர் ஐந்நூறுக்கும் மேற்பட்ட கஸல் கவிதைகளை எழுதியுள்ளார்.

"கஸல்" காதல் தோல்வியை மையப்படுத்திய தால் தமிழில் அதிகம் பேசப்படவில்லை. ஆயினும் "கஸல்" இசை மரபு தமிழில் செல்வாக்குப் பெற்று வெற்றியும் கண்டுள்ளது. "பாலைவனச்சோலை" எனும் திரைப்படத்தில் இடம்பெறும் "மேகமே மேகமே பால்நிலா தேயுதே" என்னும் வைரமுத்துவின் பாடல் "கஸல்" வடிவத்திலே இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

சுதந்திரம் - மென்மை நளினம் - நவீனத்துவம் என்ற ரீதியில் கஸலின் கட்டமைப்பு அமையப் பெற்றுள்ளது. குறிப்பாக ஒரு கண்ணிக்கும் அடுத்த கண்ணிக்கும் கருத்துத்தொடர்பு இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை. கண்ணிகளை இணைக்க இயைபுத்தொடை, யாப்புச்சந்தம் பயன்படுத்தப்படும் இம்முறை தமிழ் கஸலில் பின்பற்றப்படுவதில்லை. ஹைக்கூ, சென்ரியு, லிமரைக்கூ போன்ற மேற்கத்திய வடிவங்கள் தமிழ் மொழிக்கேற்ப எவ்வாறு மாற்றம் பெற்றனவோ அவ்வாறே கஸலும் மாற்றம் பெற்றது. பேச்சுச்சுதந்திரத்திற்காகவும், கருத்துச் சுதந்திரத் திற்காகவும் அம்முறைதமிழில் தவிர்க்கப்பட்டுள்ளது.

காதல் நடந்து போகக்
காலடிச்சுவடுகளாய் நாம்
காலத்தின் கடற்கரையில்

மௌனப்பூவில் அமரும்
பட்டாம்பூச்சிகளைப் பிடிக்கச்
சொல் வலையோடு
அலைகின்றோம்
வானத்தையும் பூமியையும்
இணைக்கிறது
வானவில்
நாம் அந்தப்பாலத்தில்
எதிர்ப்படுகின்றோம்.

(அப்துல் ரகுமான்)

உன்காதலை
நான் பெறுவதற்கு
விளக்காக இருக்கவா?
வெளிச்சமாக இருக்கவா?

விளக்காக இருந்தால்
ஊதி நூர்க்கிறாய்
வெளிச்சமாக இருந்தால்
ஓடி ஒளிகின்றாய்...!

காதல் மனத்தால்
கட்டும் கோயில்
சாமி யார்...?
பூசாரி யார்...?
நீ தான் முடிவு சொல்...!

(கே.இனியவன்)

கடவுளை ஏன்
அடிக்கடி நொந்து கொள்கிறாய்
நம் காதலை
பிரித்து வைப்பது தான்
அவருக்கு வேலையாஹீ

திருமணம்
சொர்க்கத்தில்
நிச்சயிக்கப்பட்டது என்றால்
காதல்
நரகத்தில்
நிச்சயிக்கப்பட்டிருக்குமோஹீ

என் காயங்களுக்கு
உன்நினைவுகள் மருந்திடும்
இருப்பினும்
குணமாகவில்லை என்று
பிறிதொரு நாளில் வரும்
கண்ணீரில் தெரியும்.

(ம.ரமேஷ்)

இவ்வாறாக காதலின் துயரத்தால் ஏங்கித் துடிக்கும் காதலன், காதலியை விளித்துக்கூறுகின் முறையிலும், காதலியின் சௌந்தர்யம், காயம்பட்ட இதயத்தின் வேதனை என்ற தொனிப்பொருளில் தமிழ் கஸல் கவிதைகள் அமையப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

கிளிகளற்ற நகரம்

மயானம் ஒன்றைப்போலிருக்கும்
இந்த நகரில்
அன்று தனிமையிருக்கவில்லை

வர்ணமிகு இரவு விளக்குகள் பூட்டப்படவில்லை
வீதி அகலமாக்கப்படவில்லை

எண்ணற்ற விளக்குகள் எரியவிடப்பட்டபோதும்
நகரத்தை மூடியிருக்கும்
இந்த கொடு இருள் அன்றிருக்கவில்லை

அந்நிய மொழியில் எழுதுவும் எழுதப்படவில்லை
ஆக்கிரமிப்பாளர்கள் யாரும் குடியேறவுமில்லை

மரண வீடு ஒன்றைப்போல
கடதாசிப்பூமரங்கள் நாட்டப்பட்டிருக்கவில்லை
எந்த பேயும் உரைநிகழ்த்தவில்லை
கொலையாளிகளின் படங்களெதும் தொங்கவில்லை

இப்படித் தனியே அலையுமொருவனைப்
பார்த்திருக்க முடியாது
எங்கு சென்றனர் என் சனங்கள்?

இப்படித் தனித்திருந்து
ஒரு கவிதையை எழுத நேரிடுமென
நினைத்திருக்கவுமில்லை

ஏதோ இருந்தது
நாமிருக்கவும்
சிரித்திருக்கவும்

அன்று நாமிருந்தோம்
நான் மகிழ்ந்திருந்தேன்
இங்கு உன்னத வீரர்கள் எம்மை சூழ்ந்திருந்தனர்
எங்கள் நகரம் எங்களுக்காயிருந்தது
இன்று, காணவில்லை ஒரு கிளியையும்

– தீபச்செல்வன்

வீழ்வது யாராயினும்...

“வீழ்வது யாராயினும்
வாழ்வது நாடாகட்டும்”

என்போரே!

யாரையும் வீழ்த்தி
வாழும் நாட்டில்
யார் வாழ?

புல்லா? பூண்டா?
மரங்களா?
மட்டைகளா?
கொன்கிறீட் கட்டைகளா?

அரச யாப்பு கொண்ட
மனிதர்கள் வாழா
பிரமாண்டமான
மயானம் ஒன்று மட்டுமே
ஒரு நாடாகுமா?

தேசியம் என்றும்
இறையாண்மை என்றும்
வசியம் செய்யும்
முறைமையை
பேசி– பேசியே
வீழ்வது மனிதர்கள் என்றால்
வாழ்வது எது?

தனக்கென ஒரு
கொடி கொண்ட
ஒரு சுடுகாடா?

வீழ்வது எதுவாயினும்
வாழ்வது
அரச யாப்பு
கொடி
எல்லைக் கோடு
இவை இல்லா
மனிதர்களாகட்டும்!

– மேமன்கவி

தழும்பின் இரத்த ஓவியம்

யுத்த காலமொன்றில் காணாமல் போன
அப்பாவின் பழைய கறைபடிந்திருக்கும் நிழல் படத்தை
நான் உருக்களில் வரைந்தெடுத்த இரத்த ஓவியம்
இன்னும் மீள குடியமர்த்தப்பட்ட
கிடுகு குடிசையின் களிமண் சுவரில்
ஓர் ஏக்கத்தை வெளிப்படுத்தியே தொங்குகின்றன.

எனது அப்பாவின் நூற்றாண்டுக் கனவுகளை வென்றிருக்க
அவரது இளமை புன்னகையை
வரைய முற்பட்டே தோல்வியுற்றேன்.
தினம் ஓவியத்துள் விழும் அம்மாவுடைய கண்ணீர்த் துளி
மிகுதி ஓவியத்தையும் கரைத்துக் கொண்டிருந்தன.

ஓவியத்தின் இரத்த தூரிகை மெல்லுதிர்ந்து
வண்ணங்களை சிறு புள்ளியாய் ஒடுக்குகின்றன
ஓவியத்தின் அச்சம் உணர்த்தும் இரகசியங்களும்
கும்மி இருளில் எழுந்து அடங்கும் குப்பி விளக்கு
வெளிச்சத்துள் விழுந்தே மாயும் விட்டில் பூச்சிகளாய்..
நிர்வாணத்தையே ஓவியம் தின்று கக்குகின்றன.

முகத்தின் சுருகாயத் தழும்புக்கோடுகள்
ஓவியத்தின் முழு வடிவங்களை பிய்த்தெடுக்கப்பட்ட
சதைகளால் ஆத்மாவை வெளிப்படுத்துகின்றன
நிலத்துள் பேரவலம் விழுந்தழிந்திருக்கும் சவக்குழியே
சவத்தின் மீது இரத்தக் கட்டிகளை வெளிப்படுத்தும் ஓவியம்.
பீதியை எல்லோரிடமும் முகத்திற்கு முகம் வரைகின்றன.

சிகிரியா மலை முகடுகளில் தமிழ் மன்னன் காசியப்பனின்
ஓவிய வலியின் ஏக்கங்களிலிருந்து வர்ணங்களை
பிரதி பண்ணும் எனது இனத்தின் பரம்பல்
சிதைக்கப்பட்ட ஆண்குறிகளையும், பெண்குறிகளையும்
மலக்கழிவுகளால் துயரொழுக துயரொழுக
ஓவியம் மூர்க்கமாய் பிறப்பெடுகின்றன.

கடவுள் கருணை கொள்ளாத நிலத்தில் எழும்
மனித கொலைகளின் ஓவியம்
மண்ணுள் துகள் துகளாய் ஓவியமெனும் வரைபடம்
ஓவியத்தின் வலியா? ஓவியனின் வலியா..?

– கோ.நாதன்



மறுபொழுது...

கிழிந்த
கூடைப்பெட்டியின்
ஓரங்களையும்..
அதன் உராய்வினால்
ஓட்டை விழுந்த
கொங்காணியையும்..
தைத்துக்கொண்டிருப்பதிலும்

அடி கழன்ற
கொழுந்துக் கூடையினை
சட்டங்களாளும்
சடம்புத்துண்டுகளாளும்
அடி போட்டுக்கொண்டிருப்பதிலும்

கட்டைக் கிழித்த
படங்கு சாக்குகளுக்கு
பழைய இறப்பர் சீட்டுகளால்
ஒட்டுப் போட்டுக்கொண்டிருப்பதிலும்

முழங்கால்
முழங்கைகளை
நீவிக்கொண்டிருப்பதிலும்

கொழுந்துப் பையினுள்
சிதறிக்கிடக்கும்
துகள்களை சுத்தம் செய்துக்கொண்டிருப்பதிலும்
மட்டத்துக் கத்தியினை
எங்காவது தீட்டிக்கொண்டிருப்பதிலும்
தினமும் ஒரு வரிச்சிக்கம்பினை
தேடிக் கொண்டிருப்பதிலுமேயே

உனக்கென சொந்தமான
உன் மறுபொழுதுகள்
கழிந்து
போகின்றன...
இன்றும் கூட...

– கோ.கிசோகுமார்

கொலைப் பின்னலென நீளுகின்ற அலை வெளிகளில்

தந்திக்கம்பிகளினூடாக
நாடித்துடிப்பில்
தந்தியடித்துக் கொண்டிருக்கும்
தொலைபேசியின் அலை வரிசைகளில்
வெளவால்கள்
தொங்கிக் கொண்டிருக்கின்றன.

படக் படக்கென அடித்துக் கொண்டிருக்கும்
இதயத்துடிப்புகளோடு
ராஜாளிகளின் சிறகுகள்
ரகசியம் பேசுவதாகத் தெரிகின்றது.

அலை வரிசைகளின் கை வரிசை
ஓங்கி ஒலிக்கையில்
கனத்துப் போன மனசோடு
கன்னங்களை தடவிக் கொண்டிருக்கின்றது
ஏகாந்தம்.

பொய்களின் விழுக்காடுகளும்
நம்பிக்கைசெத்த
நிமிஷங்களுமாய்
போகின்ற போக்கில்
கலைக்கப்பட்ட நிர்வாணத்தோடு
கற்பழிந்து கிடக்கின்றது வலைப்பின்னல்கள்.

கொள்ளி வாய்கள்
கொடூரமாய் முத்தமிட்டு
அருத்த பக்கத்துக் காதுகளை
நாறடிக்கும் மேடை நாடகங்கள்
அலுத்துப் போய் விட்டன.

காற்றில் எதுவோ
கருகிய வாசனை
தீய்ந்து மணக்கின்றது
ஏடா கூடப் பேச்சுகளின்
எரிபற்று நிலையென்ன.

ஆதாம் தோட்டத்து
ஆப்பிள்களைக் கடிக்கும்
உரத்த சப்தத்தின் பின்னணியில்
ஒளிந்து கிடக்கும்
ஷைத்தானின் பார்வையிலிருந்து
சதாவும் தேடுகின்ற பாதுகாப்பென்பது
அலை பேசிகள் வழியே
அசாத்தியமாகப் போய் விட்டது.

அசந்தர்ப்பமாய் தெருக்களில்
தெரிபடுகின்ற விநோதங்களாய்
தனியே நின்று கொண்டு
ஒப்பாரி வைக்கின்றவனின்
வேடிக்கையில்
பொழுதானது லேசாக
போய் விடுகின்றது
தலை வலியை
இலவச இணைப்பாக தந்து விட்டு.

உம்மென்று
கிடையாய் கிடக்கும்
தொலைபேசியின் நுழைவாயிலில்
கடி நாய் கவனம் என்ற
சிவப்பு மையினை கணக்கில் கொள்ளாது
இப்போதும்
குரைத்துக் கொண்டிருக்கின்றன
குரல்கள்.

ஏ.எச்.எம்.நவாஷ்

ஆங்கில ரொமாண்டிக் கவிஞர்களும் கீட்ஸும்

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில், தொழில் புரட்சியின் விளைவாக அதிக மக்கள் நகரங்களை நோக்கிச் சென்றனர். தொழில்துறையின் வளர்ச்சியால் இயற்கை மாசடைதலும் நிகழத் துவங்கியிருந்தது. இந்த மாற்றங்களுக்கு எதிராக, கற்பனாவாதம் (Romanticism) உருப் பெற்று வந்தது. இம்மானுவேல் காண்டின் (Immanuel Kant: 1724-1804) மெய்யியல் சிந்தனைகளும் இவ்வியக்கம் தோன்ற காரணமாக அமைந்தன.

அறிவொளிக் காலம் (Age of Enlighten ment) இலட்சிய சமூகத்தை முன்மாதிரியாக வைத்தது. கற்பனாவாதம் இலட்சிய மனிதனை, கற்பனைமூலம் வளர்த்தெடுத்த கதை நாயகர்கள் வழி முன்மாதிரிகளாக வைத்தது. அறிவொளி இயக்கம் சமூகத்தின் முன்னேற்றத்தை முன்னிறுத்தியதென்றால், கற்பனாவாதம் தனி மனிதனின் உணர்ச்சிகளின் மீது கவனம் கொண்டது. பகுத்தறிவிற்கு பதில் உள்ளுணர்வும், கற்பனையும், தனி மனித உணர்ச்சிகளும் முன்மொழியப்பட்டன. நகர மயமாதலுக்கு பதிலாக எளிமையான கிராமப் புற வாழ்க்கையும் இயற்கையும் முன்வைக்கப்பட்டன.

கற்பனாவாதகால பிரதிகள் வாழ்வனுபவங்களையும் உணர்ச்சிகளையும் கற்பனைமூலம் வளர்த்து உச்சத்துக்கு கொண்டு செல்பவையாகவும், அக உணர்ச்சிகளை இயற்கையுடன் இணைத்து காண்பவையாகவும் இருந்தன. உணர்ச்சிகள் கொந்தளிப்பவையாகவும் மொழி உத்வேகம் மிக்கதாகவும் இருந்தது. அறிவொளி காலகட்டத்தில், படைப்பின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்தின் ஒழுங்கு மீதிருந்த எதிர்பார்ப்பு தளர்த்தப்பட்டு, கலை வெளிப்பாட்டுக்கான பல்வேறு மாதிரிகள் முன்வைக்கப்பட்டன. படைப்பின் உருவாக்கத்தில், கலைஞன் இயற்கையுடன் உரையாடுதலின் வழி, படைப்பு உருவாக்கப்படுகிறது, அதனால் இயற்கையும் படைப்பின் உருவாக்கத்தில் பங்குகொள்கிறது போன்ற கருத்துகள் முன்வைக்கப்பட்டன. அறிவின் வழி இயற்கையை ஆராயும் முறையை விடுத்து, கற்பனை மற்றும் உள்ளுணர்வின் துணைகொண்டு இயற்கையை அறிய முனைந்தனர்.

வில்லியம் வேர்ட்ஸ்வொர்த்

காதலும் ஏக்கமும், தனிமையும் கொண்டு இயற்கைமுன் நிற்கும் நாயகர்களை முன்னிறுத்திய காலகட்டம் இது. இக்காலகட்டத்தின் முன்னோடி படைப்பாளர்களாக வேர்ட்ஸ்வொர்த், ஷெல்லி, பைரன், கீட்ஸ் போன்றவர்கள் உயரத்தில் தெரிந்தனர். இவர்கள் தான் ஆங்கில இலக்கியத்தின் பொற்காலமாகக் கருதப்படும் "ரொமாண்டிக்" (Romantic: தன்னுணர்ச்சி) காலப்பகுதியின் கவனிப்புக்குரிய கவிஞர்களாக கொண்டாடப்பட்டனர். காதல், இயற்கை, பிரிவு எனத் தன்னுணர்வு சார்ந்த கவிதைகளை எழுதுகின்றவர்கள் ரொமாண்டிக் கவிஞர்கள் என கணிக்கப்பட்டனர்.

2

வில்லியம் வேர்ட்ஸ்வொர்த் (william wordsworth: 1770–1850) ஆங்கில இலக்கியத்தில் அகத்திணைக் காலத்தினைத் தொடங்க உதவிய கவிஞராவார். இவர் 1843 முதல் 1850இல் அவர் இறக்கும் வரை இங்கிலாந்தின் அரசவைக் கவிஞராக இருந்திருக்கிறார். தந்தை மூலமாக மில்டன், ஷேக்ஸ்பியர் மற்றும் ஸ்பென்சர் உட்பட பலரின் கவிதைகளைக் கற்றுத்தேர்ந்தார். வேர்ட்ஸ்வொர்த் தன்னுடைய கவிதையை 1787ஆம் ஆண்டில் "தி யூரோப்பியன்" சஞ்சிகையில் பதிப்பித்தபோது முதன் முறையாக கவிஞராக அறிமுகமானார்.

ஆங்கில ரொமாண்டிக் விமர்சனத்தின் "பிரகடனம்" என்று அழைக்கப்படும் தன்னுடைய வசனக்கவிதைக்கான முன்னுரையில், தன் கவிதைகளை "பரிசோதனை பூர்வமானது" என்றே அழைத்திருக்கின்றார். 1793ஆம் ஆண்டு "அன் ஈவ்னிங் வாக்" மற்றும் "டிஸ்கிரிப்டிவ் ஸ்கெட்சஸ்" ஆகிய கவிதைத்தொகுப்புகள் பதிப்பிக்கப்பட்டன. 1795 ஆம் ஆண்டில் அவர் ரெய்ஸ்லி கால்வெர்ட்டிடமிருந்து 900 பவுண் சொத்தைப்பெற்றார். இதனால் அவரால் தொடர்ந்து கவிதை எழுதமுடிந்தது. அந்த ஆண்டில் அவர் சாமர்ஸெட்டில் சாமுவேல் டெய்லர் கோல்ரிட்ஜை சந்தித்தார். இவர்கள் இருவரும் ஆப்த நண்பர்களாக இருந்தனர். இவ்விரு கவிஞர்களும் இணைந்து, ஆங்கில ரொமாண்டிக் இயக்கத்தின் முக்கியமான படைப்பாக கருதப்படும் வசன கவிதைகளை (1778) படைத்தனர். 1798–1799 ஆண்டுகளில் ஜெர்மனியில் இருந்தபோது, "தி பிரிலூட்" என்று தலைப்பிட்ட சுயசரிதை படைப்பை எழுதத் தொடங்கினார். அக்காலத்தில "தி லூஸி போயம்ஸ்" உள்ளிட்ட தன்னுடைய புகழ்பெற்ற பல கவிதைகளையும் எழுதினார்.

1814ஆம் ஆண்டில் அவர் "தி ரெக்லஸின்" மூன்று பாகங்களுள் இரண்டாவது பாகமான "தி எக்ஸ்கர்ஸ்னை" பதிப்பித்தார். அவர் முதல் மற்றும் மூன்றாவது பாகங்களை நிறைவு செய்யவே இல்லை. இந்த விவரக்குறிப்பு மனித மனம் மற்றும் இயற்கைக்கு இடையில் உள்ள உறவு குறித்த அவருடைய புகழ்பெற்ற வரிகள் சிலவற்றை உள்ளிட்டதாக இருந்தது:

என்னுடைய குரல் பறைசாற்றுகிறது
மனித மனம் எத்தனை நேர்த்தியானது
(அதிகரித்துவரும் சக்தியும் மொத்த
உயிரினத்திற்கும்
குறைந்துபட்டதாக இல்லாதிருக்கலாம்)
வெளிப்புற உலகத்திற்கு
இது பொருந்திப்போகிறது:-இது எவ்வளவு
நேர்த்தியானது,
இது கருவானாலும் மனிதர்களிடத்தில்
கொஞ்சம்தான் கேட்கக் கிடைக்கிறது,
வெளி உலகம் மனித மனத்தோடு
பொருந்திவிடுகிறது.

வேர்ட்ஸ்வொர்த்தின் மகள் "டோரா" 1847 ஆம் ஆண்டில் இறந்ததிலிருந்து அவர் கவிதை எழுதுவது முற்றிலும் நின்றுபோனது.

பெர்சி பைஷ் ஷெல்லி

3

ஆங்கிலக் கவிஞரான பெர்சி பைஷ் ஷெல்லி (Percy Bysshe ShellY: *1792-1823*) கற்பனையியல் இயக்கத்தின் (Romantic Movement) முக்கிய கவிஞர்களுள் ஒருவராகக் கருதப்படுகின்றார். கீட்ஸ், பைரன் ஆகியோரின் நண்பரான இவரும் ஒரு ரொமாண்டிக் கவிஞர். "ஆங்கிலேயரது கலாச்சாரச் செல்வாக்குப் பரவிய பல தேசங்களில் ஷெல்லி நவயுகத்தைக் கூவியழைத்த விடிவெள்ளிக் கவிஞனாக மிளிர்ந்தான். அடிமை, மிடிமை, மடமை, வறுமை முதலியன என்ன வடிவத்தில் எங்கிருந்தாலும் அவற்றை உடைத்துத் தகர்த்தெறியத் துடித்த அராஜகக் கவிஞன் ஷெல்லி; எவ்விதமான தளைகளுமின்றி மனிதன் சுத்த சுயம்பு வான சுதந்திரப் பிறவியாகத் துலங்க வேண்டுமென்பது ஷெல்லியின் கனவு" என்று பேராசிரியர் க.கைலாசபதி குறிப்பிடுகின்றார்.

ஷெல்லியின் அசாத்திய கொள்கைப்பிடிப்பும் தனித்துவ வாழ்க்கை முறையும் அவர் வாழ்ந்த காலத்தில் அவரைப் புகழ் அடையவிடாமல் தடுத்தன. அவருடைய படைப்புகள் பலமுறை உலகின் பார்வையிலிருந்து மறைக்கப்பட்டன. அவர் இறக்கும் வரை அவருடைய ரசிகர் கூட்டம் ஐம்பதைத் தாண்ட வில்லை. ஓசிமாண்டியாஸ், ஓட் டு எ வைஸ்ட் லிண்ட், டு எஸ்கைலார்க் முதலான தனிக்கவிதைகள் ஷெல்லி யின் தனித்துவமான படைப்புகளாகும். ஆங்கில கவிதை உலகில் அழியாப்புகழ் பெற்றிருக்கும் இவை, இன்றுவரை செவ்வியல் கவிதைத் தொகுப்புகளில் இடம் பெறுகின்றன. இவற்றைத் தவிர அடோனாய்ஸ், குயின் மாப் அலாஸ்டர் முதலான புகழ்பெற்ற நெடுங் கவிதைகளையும் எழுதியுள்ளார். நான்கு தலைமுறை களாக பல கவிஞர்கள் ஷெல்லியின் படைப்புகளால் உந்தப்பட்டு கவிதைகளை எழுதியுள்ளனர்.

ஷெல்லியின் புரட்சிகரமான கருத்துகளை ஒப்புக்கொள்ள மறுப்பவரும் ஒதுக்கித்தள்ளி விடுபவரு மான "எட்மண்ட்ஸ்" என்ற விமர்சகர் ஷெல்லியைப்பற்றி பின்வருமாறு கூறுகின்றார்.

"வேறு எந்த ஒரு பெருங் கவிஞனைக் காட்டிலும் ஷெல்லி தன் கவிதையாகவே வாழ்ந்தான். அது தங்கு தடையற்ற ஆர்வ உணர்ச்சிகளும், அற்புத மான கனவுகளும் நிறைந்ததாக இருந்தது. "அவன்

ஜார்ஜ் கோர்டன் பைரன்



ஜோன் கீட்ஸ்

எப்படி வாழ்கையில் தனித்து நின்றானோ, அதே போல் ஆங்கிலக் கவிஞர்கள் மத்தியிலும் தனித்தே நின்றான்."

4

ஜார்ஜ் கோர்டன் பைரன் (George Gordon Byron: *1788-1824*) ஷெல்லியின் நண்பர். ஆங்கில கற்பனை யியல் இயக்கத்தின் முக்கியமானவர்களில் ஒருவர். மிகப்பெரும் ஐரோப்பியக் கவிஞர்களில் ஒருவராகக் கருதப்படுவதுடன் ஆங்கிலம் பேசும் நாடுகளிலும் அதற்கு அப்பாலும், இன்றும் இவரது கவிதைகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. பைரனின் புகழ் அவரது ஆக்கங்களில் மட்டுமன்றி அவரது வாழ்க்கையிலும் தங்கியுள்ளது. இவரது வாழ்க்கை, ஆடம்பரம், ஏராள மான காதல்கள், கடன்கள், பிரிவுகள் என்பவற்றால் குவிந்திருந்தது. பைரனின் நன்கு அறியப்பட்ட ஆக்கங்களில் "அவள் அழகில் நடக்கிறாள்" (She walks in beauty) போன்ற சுருக்கமான கவிதைகளும் "சில்டே ஹராலிடின் யாத்திரை" (Childe Harold's Pilyrimage), டொன் ஜூலான் (Don Juan) போன்ற நீண்ட கவிதைகளும் அடங்கும். ஆங்கில இலக்கிய உலகில் ஷேக்ஸ்பியருக்கு அடுத்த இடம் பைரனுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

5

பைரன் இறக்கும் போது வயது 36. ஷெல்லி இறக்கும் போது வயது 26. 24 வயதே வாழ்ந்தவர் கீட்ஸ். இவர்கள் அற்ப ஆயுளில் கரைந்துப்போன அற்புதமான ஆங்கில தன்னுணர்ச்சிக் கவிஞர்கள். ஜோன் கீட்ஸ் (John Keats: *1795-1821*) இறந்தபோது உலகப் புகழ்பெற்ற

இரங்கல் கவிதைகளில் ஒன்றினை ஷெல்லி எழுதினார். Adonais என்ற அக்கவிதையில் கவிஞனுக்கு ஷெல்லி தரும் இடம் ஞானிக்கும் இல்லை.

"ஒரே நேரத்தில் இரண்டு உலகங்களிலும்
அமரத்தன்மை பெற்றுவிட்டாய்.
இந்நேரம் உன் ஆன்மா
அமர உலகில் அமரர்களுக்கு
கவி அமுதம் அளித்துக்கொண்டிருக்கும்.
அதே நேரத்தில் மண்மீது மனிதர்கள்
உன் அமுதக் கவிதைகளிலிருந்து நீ அளிக்கும்
உயிர்ச்சாற்றை அருந்திக் கொண்டிருப்பர்."

"கலைஞர்களை நீங்கள் உருவாக்கிவிடலாம். ஆனால் மேதைகள் கடவுளால் படைக்கப்படுகிறார்கள்" என்றார் ஜோன் கீட்ஸ். அத்தகை மேதை தான் கீட்ஸ். கவிதையே ஓர் உருவாகத் தோன்றியவர் கீட்ஸ் என்று கூறலாம். "மரங்களில் இலைகள் தோன்றுதல் போல செடிகளில் பூக்கள் மலர்தல் போல கீட்ஸிடம் கவிதை பிறந்து விட்டது" என ஆங்கில விமர்சகர்கள் குறிப்பிடுவர்.

ஆங்கிலக் கவிதை உலகின் ஒரு அடையாளச் சின்னம்; காதலின் குறியீடு; காதலை ஒரு மதமாக மாற்றிய கவிஞர்; முழுக்க முழுக்க காதலால் நெய்யப்பட்ட ஒரு கவி என்றெல்லாம் புகழப்படுபவர் கீட்ஸ். வசதியில்லாத வாழ்க்கை; வசீகரமான கற்பனை; அற்ப ஆயுள்; அற்புதமான சிந்தனை; இதுதான் கீட்ஸ். காதல் நோயும் காசநோயும் அவரை கொன்று விட்டன.

மறுமலர்ச்சிக்கால படைப்பாளர்களான ஷேக்ஸ்பியர், ஜான் மில்டன் ஆகியோரின் எழுத்துகளின் தாக்கம் இருந்ததாக திறனாய்வாளர்கள் கருதுகின்றனர். இவரது ஆக்கங்களில் To Autumn என்ற கவிதை புகழ்பெற்றுள்ளதுடன், இலங்கையில் ஆங்கில இலக்கிய மேற்படிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இவர் 16000 கவிதை வரிகளை எழுதியுள்ளதாக சொல்லப்படுகின்றது.

"கால்வாய் இல்லாத இடத்தில் பெய்யும் ஒளி மழையே கவிதை" என வரையறுத்துக் கொண்டவர். அழகுக்கும் உண்மைக்கும் தொடர்பு இருப்பதாக கீட்ஸ் கூறுகின்றார். அமரத்துவம் பெற்ற கவிதை வரிகளால் இந்த ஆழமான மெய்யியல் உண்மையை வெளிப் படுத்தியவர்.

"அழகே உண்மை, உண்மையே அழகு. இதை
மட்டும் நீ
மண்மீது அறிய முடியும்; அறிய வேண்டியதும்
இது மட்டுமே"
(Beauty is truth, truth beauty - that is all
Ye know on earth, and all ye need to know)

இக்கவி வரிகள் ரொமாண்டிக் கவிதையின் உச்சமென கொண்டாடப்பட்டன. கவிஞன் ஒருவனது மெய்யியலையே திரட்டித்தரும் இவ்வரிகள் பொருளாழம் மிக்கது. ஆங்கிலத் திறனாய்வாளர்களிடையே இது பற்றித் தோன்றிய வாதப்பிரதிவாதங்கள் பல. பாரதியாரும் இவ்வரிகளால் ஈர்க்கப்பட்டிருக்கிறார். இதன் காரணமாகத்தான் "ஞானரதம்" என்ற வசன காவியத்தில் இக்கோட்பாட்டை எடுத்துக் கூறி விளக்கியுள்ளார்.

"ஸௌந்தரியத்தைத் தாகத்துடன் தேடுவோர்களுக்கு ஸத்தியமும் அப்பட்டுவிடும். "உண்மையே வனப்பு, வனப்பே உண்மை; என்று ஓர் ஞானி சொல்லியிருக்கிறார்."

மேற்கூற்றிலே "ஓர் ஞானி" என்று பாரதியார் குறிப்பிடுவது கீட்ஸைதான்.

கீட்ஸ் பதினெட்டு வயதில் ஃபெனி பிரவுன் (Fanny Brawne) என்ற பெண்ணை காதலித்து, அவளுக்காக கவிதைகளும் கடிதங்களும் எழுதினார். அந்த காதல் நிறைவேற வில்லை. அவரது காதலி ஃபெனி பிரவுன் அவரை உதாசீனப்படுத்தினாலும், கீட்ஸ் அவளை எண்ணாத நொடிகளே இல்லை எனலாம். ஒருமுறை மரத்தடி ஒன்றுக்கு வந்த கீட்ஸ் காதலியை கவிதையாக எண்ணுகிறார். அருவி, மரம், நதி, அவன், அவள். எல்லாம் கவிதையாகின்றன.

"ஏ...மரமே!
இது டிசம்பர் இரவு!
வசந்த காலத்தில்
உன் மீதிருந்த
வனப்பு இப்போதில்லை!

பசுமை இல்லை
பூக்கள் இல்லை
குயில்கள் இல்லை
எனினும் மரமே நீ
மகிழ்ச்சியில்லாமல் இல்லை!

ஏ... நதியே!
இது டிசம்பர் இரவு!

வசந்த காலத்தில்
உன் மீதிருந்த
வாலிபம் இப்போதில்லை!

அழகு இல்லை
ஆரவாரம் இல்லை
எனினும் இப்போதும் நீ
இனிமையை முணுமுணுத்துக் கொண்டேதான்
ஓடுகிறாய்!

ஏ... மனமே!
மரமும் நதியும் போல்
யுவதியும், வாலிபரும்
மாறி விட்டால்...

கடந்த கால வசந்தங்களை
எண்ணிக்
கண்ணீர் வடிக்காது
காலம் கழிக்கலாமே..!"

காதல் துயரில் வீழ்ந்தவர்களுக்கு ஓவியம் ஒரு உறுதுணையாக அமைகின்றது கரைகின்ற கணங்கள்

தோறும் நினைவுகளை கீறிக்கொண்டிருக்கிறார்கள். வரலாற்றுப் புகழ்மிக்க ஓவியம் ஒன்றினை கீட்ஸ் காணுகின்றார். ஒரு கலசத்தின் மீது அந்த ஓவியம் தீட்டப்பட்டிருந்தது. குழலிசைத்து காதலியை மகிழ் விக்கும் பாணன், அவளை முத்தமிட நெருங்குகிறான். அந்தப்பெண் தப்பிச்செல்ல முயற்சிக்கிறாள். மரத்தடி யில் இந்தக் காதல் நாடகம் நடக்கிறது. இந்தக்காட்சி கீட்ஸின் மனசுக்குள் கவிதையாக ஊறி பிரவாகமெடுக் கின்றது. கிரீஸ் நாட்டில் எங்கோ ஒரு கிராமத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன் என்றோ ஒரு நாள் நடந்த நிகழ்வினை அந்த ஓவியன் பரவசம் நிறைந்ததாக தீட்டி யிருந்தான். அந்தக்கலசம் கீட்ஸுக்கு கிரேக்க நாட்டுச் சார்புடையதாக தோன்றுகின்றது. எனவே அந்த கலசத்திற்கு "Greecian Urn" எனப் பெயர் சூடுகிறார். அந்தக் கலசத்தினை வரலாற்று ஆசிரியனாகவும் (Sylvan Historian) நினைத்து அதனுடன் பேசுகிறார்.

"இந்த மரத்தினடியில் நீ எப்போதும்
நின்றுகொண்டிருக்கலாம்
நீ பாடுகின்ற பாட்டினைக் கேட்காமல்
அவள் எங்கேயும் தப்பித்துப்போக முடியாது.
இந்த மரங்களும் உன்னுடைய
பாட்டைக் கேட்டுப் பழக்கப்பட
வேண்டியதுதான்.
நீ அவளை முத்தமிடமுயற்சிக்கிறாய்,
ஆனால் முடியாது.
நீ உனது குறிக்கோளில் வெற்றிக்குப்பக்கத்தில்
நிற்கிறாய்,
அதற்காகப்பயப்படாதே !
அவளும் உன்னைவிட்டு மறைந்துவிட முடியாது.
எப்பொழுதும் உனது காதல் இருந்து
கொண்டே இருக்கும்
அவளும் அழகு மாறாமலே இருப்பாள்"

அமரத்துவம் வாய்ந்த ஓவியத்துக்கும் காதலர் களுக்கும் மூப்பு இல்லை என்பதைத் தான் கீட்ஸ் உணர்த்திக் காட்டுகின்றார்.

கீட்ஸின் இன்னொரு கவிதை புறநானூறு போல் தொடங்கி, அகநானூறில் போய் முடிகின்றது. கவிதைக்குள் வேறுவேறு எண்ணங்கள், வேறுவேறு உருவ உணர்ச்சிகள், எல்லாம் கிரகங்கள் மாதிரி தனித் தனியே தத்தமது பாதைக்கேற்ப சுற்றி வந்தாலும், அனைத்துமே காதல் எனும் சூரியனையே சுற்றி வருகின்றன.

"போர் வீரனே..
முகத்தை தழும்புகளால்
அலங்கரித்து கொண்டவனே!

துயரங்களின் மறுபதிவாய் – நீ
தயங்குவதன் காரணம் என்ன?

அறுவடை முடிந்து விட்டது.
அணிலின் நெற்களஞ்சியமும்
நிரம்பி வழிகிறது
நீ சோர்ந்திருக்க காரணமென்ன?"

எனத்துவங்கி பயணம் போகிறது கவிதை. வீரனே என்ன சோர்வோ என்று பெரியஆராய்ச்சி செய்ய வேண்டியதில்லை. காரணம் காதலாகத்தான் இருக்கும். சோகத்துக்கு காரணம் "காதல்" என்பதைக் கூறி கவிதையை முடிக்கின்றார் கீட்ஸ்.

"வானம்பாடிக்கு ஒரு கீதம்" என்ற கீட்ஸின் கவிதை மிகப்பிரசித்திப் பெற்றது. வானம் பாடியோடு கீட்ஸ் பேசுவது போல் அமைந்ததே இக்கவிதை. அழகியல் உணர்ச்சியை நரம்பெங்கும் ஓடவிட்டுக்கொண்டுதான் கீட்ஸ் இக்கவிதையை எழுதியிருக்கக் கூடும்.

விஷமருந்தியது போல இதயம் வலிக்கிறது
புலன்கள் மங்கலாக–
போதையில் உணர்வுகள் வழிந்தோட
வெறுமையான இதயத்தோடு
மூழ்கிக் கொண்டிருக்கிறேன்.
லித் நதி அளிக்கும்
மறதி நீரைத் தேடிப் போகிறேன்

ஒளிச்சிறகோடு நீ!
வன தேவதைகளோடு
இனிமையான கவிதைகளைக்
கூவிக்கொண்டு பசுமையின்
கணக்கற்ற பிம்பங்களோடு
வசந்தத்தின் கவிதைகளைக் கூவிக்கொண்டு

பொறாமையால் அல்ல
உன்னோடு உன் மகிழ்ச்சியைப்
பகிர்ந்து கொள்ள வேண்டி
நிலம் அளித்த திராட்சை ரசம்
மலர் அளித்த மதுவுடன்
நடனம், வசந்தத்தின் பாடல்
இதமான சூரியன், உடன் இளம்தென்றல்
ஆஹா! முழுவதும் உண்மையாக

இதழின் விளிம்பில்
விழி மூடித் திறக்கும் குமிழ்கள்
உலகின் கண்களில் படாமல்
அதை நானும் குடிக்கலாம்
உன்னோடு வனத்தில் கரைந்து போகலாம்

மறைந்து போ! கரைந்து போ! மறந்து போ!
சோர்வு, காய்ச்சல், வசவுகள், புலம்பல்கள்
முனகல்களைக் கேட்டுக் கொண்டு
வலிப்பு சிலரை உலுக்கிக் கொண்டு
துயரமான இறுதியில்
தலையில் சில கறுப்பு மயிர்கள்
எலும்பாக மெலிந்து
வெளுத்துப் போன இளமை,
மேலும் செத்துப் போய் உயிரோடு

மொத்தமும் துயரம் தான்
விரக்தியால் கனத்துத் தொங்கும் இமைகள்

அழகின் கண்கள் எங்கே?
நாளைக்கும் அப்பால்
ஒரு புதிய காதல்

போ! போ! பறந்து வருகிறேன் உன்னிடம்
மது அரசனின் தேர்களிலேறி அல்ல
இலக்கற்ற கவிதையின் சிறகிலேறி
வருகிறேன்.

மந்தமான மூளை திகைக்கிறது.
தயக்கமாக நான் ஏற்கெனவே உன்னுடன்
நிலவரசி தன் அரியணையில்
நட்சத்திரத் தோழிகளுடன் தேவதைகள் சூழ!
ஆனால், இங்கே அங்கே ஒளியேயில்லை
கரடு முரடான இருளில்
சுழன்று குழப்பும் பாதையில்
சொர்க்கத்தின் தென்றல் எங்கே செல்லும்.

ஆனால், சூழ்ந்த இருளுக்குள்
காலடியில் என்னென்ன பூக்கள்
பார்க்க முடியவில்லை
மலர்க்கொடியின் வாசனை என்ன
உணர முடியவில்லை
இனிமைகளை நினைக்க முடிகிறது
புற்கள், புதர்கள், பழமேந்திய மரங்கள்
வெண்மையான அல்லி
இனிமையான மது, பசுமையான வெளி
வசந்தத்தின் முதல் மகள் ரோஜா
ஈக்களின் இரைச்சல் இன்னும் எத்தனையோ

இருளே! கவனித்துக் கொண்டிருக்கிறேன்
எத்தனையோ முறை மரணத்தை
அரைகுறையாக விரும்பியுமிருக்கிறேன்
அருமையான செல்லப்பெயர்களால்
அழைத்துமிருக்கிறேன்
–எதுகைமோனையோடு

என் மூச்சை எடுத்துக் கொள்
சாவதற்கான என் தகுதி
முன்னை விட அதிகமாக
ஒ! இன்னும் பாடிக் கொண்டா இருக்கிறாய்
என் காதுகள் வீணாக உள்ளது.

நீ இறப்பதற்காகப் பிறக்கவில்லை
சாகாவரம் பெற்ற பறவையே
உன்னைத் தரையிலே வீழ்த்த
பசித்த தலைமுறைகளில்லை

கடந்து செல்லும் இரவின் குரல்
என் காதுகளில்– ஒரு வேளை
அந்தப்பாடல் தன்
பாதையைக் கண்டடைந்திருக்கும்
அன்னிய நிலத்தில் விழிநீர் வழிந்தோட
இரக்கத்தின் சோகமான இதயத்தின் வழியாக
இல்லம் தேடி நிற்கிறது
புறக்கணிக்கப்பட்ட வெளியில் இரக்கம்

காலத்திற்குரிமையான மந்திரப்
பெட்டிகளிலிருந்து
துன்பக்கடல் நுரைத்துப் பொங்கும்

மணியோசை போல ஒலிக்கும்
"புறக்கணிக்கப்பட்ட"என்ற வார்த்தை
உன்னிடமிருந்து என்னைப் புறக்கணிக்கும்
போய் வா! விரும்பினாலும்
கற்பனைகளாலும் ஏமாற்ற முடியாது
போய் வா! போய் வா!
அந்தப் புல்வெளியில், மலை உச்சியில்,
சலசலக்கும் நீரோடைகளின் மேலே
தேய்ந்து மறைகிறது கீதம்
கற்பனையா? பகல் கனவா?
நான் விழித்திருக்கிறேனா? இல்லையா?

(தமிழில்: கலாமணியன்)

கீட்ஸிடம் இருந்து இன்னொரு கவிஞன் கற்றுக் கொள்ள வேண்டியது இந்த உணர்ச்சியைத்தான். எந்த நிலையிலும், எந்த இடத்திலும், எந்த வாழ்வியல் சூழலிலும், எதைப் பார்க்கினும், எது வந்து தாக்கினும், தான் கவிஞன் என்ற நிலை மறக்கலாகாது. கீட்ஸ் இப்போது அடிக்கடி மருந்தாக எழுத்தையே அர்ப்பணிக் கிறார். கீட்ஸின் கனவுகளும் வானம்பாடியின் குரலைப் போன்றதே.

கீட்ஸின் கவிதைகள் உணர்ச்சி ததும்பக் கூடிய தாகவும், படங்களைப் பார்க்கும் பிரமையை ஏற்படுத்துவ தாகவும் அமைந்துள்ளன. இவரின் கவிதைகளில் இயற்கை காட்சிகளின் வர்ணனை கல்லில் வடித்த அழகான சிற்பம் போல் அற்புதமான சொற்களாலும், வர்ணனைகளாலும் படம்பிடித்துக் காட்டுவது போன்று அமைந்திருப்பதைக் காணலாம். "இலையுதிர் காலம்" என்ற கவிதையை இதற்கு உரத்த உதாரணமாக காட்டலாம்.

"இங்கிலாந்தின் இலையுதிர் காலம் எனின்
எங்கும் புகாரும் பழங்களின் முதிர்ச்சியும்
தங்கு தடையின்றி நடைபெறுங் காலம்
மங்கு கதிரவன் மயக்கத்தில் கிறுங்கி
இலையுதிர் கன்னி கனிகளைக் கனிக்கிறாள்
வேலியில் கூரையில் படரும் திராட்சையை
பாசி படர்ந்த அப்பிள் மரத்தின்
காசு கொட்டும் கனிகளைப் பழமாக்கி
சீரிய சுரையையும் சுவையான ஹேசிலையும்
சிறப்பான கனிகளாய் சத்தான உணவாக்கி
மேலும் மேலும் பூக்களை உருவாக்கி
மாழுந்தேன் போதையில் வண்டுகள் வீழ்ந்து
கோடை மேலும் நிலைக்குமென் நினைப்பில்
ஆடிப்பாட வைக்கும் அருமைக் காலம்.
களஞ்சிய அறையின் தரையின் மீது
களங்க மின்றி அமர்ந்தே இருக்கும்

புடைப்பவரின் பஞ்சு மயிர்கள் காற்றில்
தடையின்றி ஆடும் .வயலின் வெளியில்
பொப்பிப் பூக்களின் பொங்கும் புகையின்
மப்பில் மயங்கி வயலின் வரப்பிலே
தானியம் வெட்டும் தனியாள் தூங்க
தனியொரு மாது கொழுக்கி கொண்டு
எஞ்சிய கதிர்களை எடுத்துச் சேர்த்து
கஞ்சிக் கலசம் காவும் காட்சிபோல்
கடகம் நிறையக் கதிர்களைக் கொண்டு
கடந்து போகிறாள் சிற்றோடை யொன்றை
கடைசிச் சொட்டு விழுகின்ற வரையில்
காத்திருக்கிறான் அப்பிள் சைடர்
அழுத்திப் பிழிபவன் ஆவல் சேரவே

இளவேனிற் பாடல்கள் எங்கே எங்கே
இலையுதிர் கான மிருக்கையில் அவையேன்
தானியக் கட்டைகள் கொண்ட தரையை
வானில் தோன்றும் வரிச்சட்ட முகில்கள்
இறந்து போகும் இளவெயில் மாலையை
றோசா நிறத்தால் போர்த்தி மகிழ
காத்திருந்த கொசுக்கள் கூட்டங் கூடி
கானமிசைத்தன கலங்கிய ஓடை மேல்
மலை யருவியின் மருங்கில் நின்று
ஒலி யெழுப்பின ஆட்டுக் கூட்டம்
சில் வண்டுகள் சிலிர்த்தே எழுந்து
மெல்லிய குரலில் மெதுவாய்க் கத்தின
வீட்டுத் தோட்ட வெளியிலிருந்து
விசிலடித்தது செந்நெஞ்சப் பறவை
சிட்டுக் குருவிகள் செவ்வானஞ் சென்று
வட்டம் போட்டு ஆர்ப்பரித்தன."

"வாழ்க்கை மலராத ரோஜாவின் நம்பிக்கை போன்றது; என வாழ ஆரம்பித்த கீட்ஸை, காசநோய் மரணநோயாக தாக்கத் தொடங்குகிறது. அவர் "ஒரு கவிஞனின் மரண சலனம்" (The Terror of Death) எழுதுகின்றார். உள்ளத்தை உருக்கும் உயிர்ப்புமிக்க கவிதை இது.

"எனது பேனா எனது
கற்பனை ஊற்றை
வற்றச்செய்யுமுன்னே
கொழுத்த தானியத்தை தளும்ப கொண்ட
களஞ்சியம் போலே
செழித்த நூல்களையெல்லாம் அறிந்து
சுவைக்குமுன்னே
நான் மறைவேனோ என்று அஞ்சுகிறேன் !

நட்சத்திர பருக்களை கொண்ட இரவின்
முகத்தையும்,
அதீத கற்பனையாய் தெரியும் அடர்ந்த
முகில்களையும் காணும்போது,
ஒரு மந்திரக்கையால் அவற்றின் நிழல்களை
வருடிப்பார்க்கும்
வாய்ப்பு கிட்டுமுன் மாண்டுவிடுவேனோ என
அஞ்சுகிறேன்!

கையில் சிக்காமல் பறந்தோடும் காலமே
உன்மேல் வசப்பட்ட என் காதலுக்கு , உன்
கடைக்கண்
பார்வை என்றென்றும் இனிக் கிடைக்காது என்பது
எனக்கு புரியும்போது– பரந்து விரிந்த இவ்வுலகின்

கரையில் நான் தனியே நிற்கிறேன்
சிந்திக்கிறேன்
காதலும், புகழும் சூனியத்தில் மூழ்கும் வரை."

24 வயதில் மரணம் அவரை வெல்கின்றது. வார்த்தைகளில் பாசாங்கு கலக்காமல், சொற் சிலம்பம் ஆடாமல், தான் உணர்ந்ததை சுவைஞனும் உணர வேண்டும் என்ற உயரிய நோக்கில் கவிதைகளைப் படைத்த கீட்ஸ், பெப்ரவரி 23, 1821 இல் மரணமடை கின்றார். இறப்பதற்கு முன் தன் கல்லறையில் பொறிக்கச்சொன்ன வாக்கியம் இதுதான்:

"இங்கு உறங்குபவன் பெயர்
தண்ணீரில் எழுதப்பட்ட சாசனம்"

(இந்த ஆக்கத்துக்குரிய விடயங்கள் அனைத்தும் இணைய வழியே பெறப்பட்டன.)

•



மூத்த எழுத்தாளர் எஸ். போ அவர்களுக்கான கண்ணீர் அஞ்சலி

எஸ்.பொ. என்ற இரு எழுத்துக்களால் தமிழ் இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்ட, இலங்கையின் மூத்த எழுத்தாளரும் அவுஸ்திரேலியாவில் சிட்னியில் வசித்து வந்தவரும் சென்னையிலுள்ள "மித்ர" பதிப்பகத்தின் ஆரம்பகர்த்தாவுமான பல்துறை ஆளுமைமிக்க மூத்த எழுத்தாளர் எஸ்.பொன்னுத்துரை அவர்கள் காலமானார் என்ற செய்தி வருத்தத்தைத் தருகிறது. தமது படைப்பாற்றலால் வல்லபங்கள் பல புரிந்த எஸ்.பொ. அவர்கள் தமிழ் இலக்கியத் தேட்டத்தின் 2010 ஆம் ஆண்டிற்கான இயல் விருதினைப் பெற்றவர். தமது இறுதிக்காலம் வரை இலக்கிய உலகில் இயங்கிக் கொண்டிருந்தவர். அன்னாரின் மறைவினால் துயருறும் இலக்கிய உலகோடும் அவரின் உறவுகளோடும் இணைந்து "ஜீவநதி"யும் கண்ணீர் அஞ்சலிகளை அமரருக்குக் காணிக்கையாக்குகின்றது.

ஒரு பெருங்காடு
ஒரு நூறு பட்ஷிகள்
காற்று எடுத்துச் செல்லும் ஏதோவொன்று



நீ என்னை அழைத்துச் செல்கிறாய்
பெருந்தோல்வியின் மையத்துக்கு.
இங்கு காடுகளில்லை
பறவைகளில்லை
சுனைகளில்லை
ஆயினும்
உன் கரங்களில்
மாயமாய் மலர்ந்த தாமரைகளை
என் கரங்களில்
தந்து சொல்கிறாய்
"காலத்தின் சிறுவெளியிடை
துளிர்க்கும் ஒரு விஷத்துளியில்
எல்லாமும் இருக்கிறது"
நான் உன்னை மறுதலிக்கின்றேன்
விசித்திரமான நட்சத்திரத்தை ரசிக்கும்
தோரணையுடன்
என் மறுதலிப்பு வானத்தில் தொங்குகின்றது.
//
இல்லாத பட்ஷிகளுக்காய்
நான் காத்திருக்கையில்
என் நிழலிலிருந்து சிறகு கிளர்த்தின
ஒரு நூறு பட் ஷிகள்.
யந்திரத்தனத்துடன் உன் உதடுகளில் படர்ந்த
புன்னகையால் நீ என்னை மறுதலிக்கையில்
உன் நிழலில்
உதிர்கின்றது பெருங்காடு.
கூடுகளும் பாதைகளுமற்ற நீள் புதிரில்
என் பறவைகள் அந்தரிக்கின்றன.
//
இடையனின் புலம்பல்கள்
இசையடுக்குகளாய் நீண்டு பெருகுகிறது
இசை சூனியக்காரியின் கோலாக மிதக்கின்றது
யௌவன வெளியில்
மழை இசையின் சாயலுடன் பொழிகிறது.
காடுகள் பீறிடுகின்றன
சுனைகள் பெருகுகின்றன
என் நிழல்வழி பெருகிய பட்ஷிகள் கூடு திரும்புகையில்
எண்ணிறைந்த இரவுகளில்
நட்சத்திரங்கள் நடனமிடுவதான பிரமை ஒளிரக் காண்கிறேன்
//
வசந்தத்தின் தெருவில்
வரிசை குலைந்து செல்லும் மந்தைகளின் பின்னே
நீ துள்ளியோடுகின்றாய்
காட்டு மலர்களின் வாசனை கமழ்கிற காற்றில்
நீ மிதக்கிறாய்
இலாவகமான விரலசைவுகளில்
மலைகள் அந்தரத்தில் ஆடுகின்றன.
நீ இத்தருணம்
எதைக் குறித்தாடுகின்றாய்
யுகப்பிளவின்
கடைசிக்கணத்திலா நாங்கள் நிற்கின்றோம்
பேய்மாரி
காலவிளிம்பில் கொட்டுகின்றது
பிசுபிசித்துப் போயிற்று எல்லாம்
//
மிகச்சிறிய காடு
தூறலாய் மழை
சிறகவிழாப் பட்ஷிகள்
நீர் பெருகாக் குட்டைகள்
போதும்
காற்றுக்கென்று நியமங்களிலில்லை
அதை தன்பாட்டில் விட்டுவிடு
அது யுகமுடிவுவரை எடுத்துச் செல்லட்டும்
உனக்கும் எனக்குமிடையிலான ஏதோவொன்றை.



ஊருக்கு உபதேசம்

ஒருநாள் ஒன்றைச் சொல்வார்
மறுநாள் சொன்னவன் யாரென்பார்
நேற்றுச் சொன்னதை
நினைவில் வைத்து கேட்டுத் திரிபவன்
யாருமிருந்தால் "கௌரவமாய்" ஒளிந்துகொள்வார்!

தனியாகக் கண்டுவிட்டால்
சாதுரியமாய் விலகிச்செல்வார்
கூட்டத்திலே மாட்டிக்கொண்டால்
காரணங்கள் தேடிச்சொல்வார் கதைமிஞ்சிப் போனாலோ
விளக்கம் கொடுத்தே மயக்கம் தருவார்!

வாழ்க்கை ஒரு ஞானமென்பார்
வரலாற்றுப் பாடமென்பார்
"வால்காவில் தானிருந்து
கங்கைவரை" விளக்கம் சொல்வார்
இரத்தம் துள்ளும் இருபதிலே தர்க்கம்பேசி தானுதைத்த
நாற்றம்வீசும் குப்பைக்கழிவை – இன்று
நாசிபிடித்துக் குடைந்து நிற்பார்!

விஞ்ஞானம் பேசிடுவார்
விண்வெளியை அளந்திடுவார்
"பெருவெடிப்பு" நடந்ததென்பார்
"கருந்துளைகள்" உள்ளதென்பார்
ஆனால் – நிலாவிலே இறங்கியதையே
நிராகரித்து மறுதலிக்கும்
அறிவிலிகள் திருப்திக்காய் ஆராய்ச்சி நூல் புனைந்து
காகம் கத்திட ஆட்கள் வரும் "காரணமும்" கண்டு சொல்வார்!

"கன்னி நிலம்" படித்திடுவார்
கார்ல்மாக்ஸை பெரிதுவப்பார்
"மூலதனம்" அறியாதவன்
முழுமனிதன் இல்லையென்பார்
மொழிபெயர்ப்புக் கவிதை கூறி
மூச்சிரைக்க நயத்தல் புரிவார்
வீரம் விளையுதென்பார்
வெறும் வாயில் புரட்சி செய்வார்
ஆனால் – வீதியோரப் பட்டாசுக்கே
கட்டிலடியில் ஒட்டடை துடைப்பார்!

போராட்டமே வாழ்க்கையென்பார்
புதுப்புது அர்த்தம் சொல்வார்!

சித்திரத்தில் பெண்ணெழுதி
சீர்படுத்தி வைத்திருப்பார்
"பெண்விடுதலை" என்றுகூறி
பெரும்விளக்கம் தானுரைப்பார்
பாரதியின் புதுமைப் பெண்ணை
அருத்தவீட்டில் தேடித்தேடி
தன் வீட்டின் புனிதம் காப்பார்!

எழுத்தினிலே எல்லாம் செய்வார்
யதார்த்தத்தில் கோட்டை விடுவார்
"திருமண வாழ்வு" என்றால்
புரட்சிக்கு அது தடையென்பார்
ஆயினும் – தன் வயது ஏறியதும்
தனக்குமொரு பெண் கொள்வார்
தாம்பத்யமும் ஒரு புரட்சியென்பார்!

நிலையான கொள்கையில்லா
நிமிட முள்ளாய்ச் சுற்றிடுவார்
நெஞ்சறிய வஞ்சம்செய்து
குறுகுறுப்பை மறைத்து வைப்பார்
சறுக்கிக் கீழே விழுந்ததையும்
"சாணக்கிய நகர்வு" என்பார்
முகச்சவரம் செய்தால் கூட
மூன்றுபக்க அறிக்கை விடுவார்
உலகமே அழிந்தாலும்
ஊருக்குத்தான் உபதேசிப்பார்!

கவிதை நயம்

கிருஷ்ணபிள்ளை நடராசா

கவிதை என்றால் என்ன என கேட்பது எளிது. ஆனால் விடை கூறுவது கடினமானது. கவிதைக்குப்பலரும் பலவிதமான வரைவிலக்கணங் களைக் கூறியுள்ளபோதும் அவை திடமாக வரை யறுத்துக்கூறப்படவில்லை. ஆகவே கவிதைக்கு வரை விலக்கணம் காண்பதை விட ஒரு நல்ல கவிதையை எடுத்துக்காட்டி, இவை போன்ற சிறப்புக்களைக் கொண்டிருப்பது தான் கவிதை எனக்கூறுவது பொருத்தமானது என நினைக்கின்றேன். இதற்காக இளவயதிலிருந்து ரசித்த பாடல் ஒன்றினூடாக நல்ல கவிதைக்குரிய பண்புகளை உணர்ந்து கொள்வோம்.

கனியிடை ஏறிய சுளையும் – முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும் – காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்
நனி பசு பொழியும் பாலும் – தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும் – தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்.

அறிமுகம்:

இப்பாடல் பாரதிதாசனால் பாடப்பட்டது. மரபுவழியிலிருந்து மாறுபட்ட தடத்தில் புரட்சிகரமான கருத்துக்களைப்பாடியமையால் புரட்சிக்கவிஞர் எனப்போற்றப்பட்டார். மொழி, இனம், செந்தமிழ் நாடு இம்மூன்றும் இவர் உயிர்மூச்சு. "பாரதிதாசன் கவிராசன்; இந்தப்பாரினுக்கே தூயநேசன்" எனப்பாரதியாரால் புகழப்பட்டவர்

கூறவந்த விடயம்:

நமது உடம்பினை வளர்க்க பலவகையான உணவுப்பொருட்கள் உள்ளன. ஆனால் நம் உயிரையும் உணர்வையும் வளர்ப்பது தமிழேயாகும். உயிருக்கு நேர் தமிழ் என்பதே ஆசிரியர் கூற வந்த விடயமாகும்.

பொருள் நயம்:

கவிதை இன்ன பொருளையே பாடவேண்டும் எனக்கூறுவது தவறு. பாடுவோரின் அனுபவத்திற்கு ஏற்ப எதுவும் கவிதைக்குரிய பொருளாக அமையலாம். ஏனெனில் கவிதையின் உயிர் அனுபவமே. தனது அனுபவத்தை உணர்த்தி வைப்பதே கவிஞனுடைய தொழிலாகும். இப்பாடலில் நாவிற்கு இனிமை தரும் கனியின் சுளை, கரும்பின் சாறு, மலரின் தேன், வெல்லப்பாகின் சுவை, பசுவின் பால், தென்னை தரும் இளநீர் ஆகியவற்றை ஒவ்வொன்றாக அடுக்கிக் காட்டி, அவையாவும் இனிமையானவை எனினும் அவற்றிலும் தமிழ் இனிமையானது. அது மட்டுமன்றி தமிழ்

என்னுயிராகவும் விளங்குகின்றது எனக்காட்டுகின்றான் கவிஞன். தமிழன்றி தமிழனின் வாழ்வு இல்லை, என்ற உயரிய நோக்கை எமது உள்ளத்திலும் கவிஞன் பதிய வைத்து விடுவதனால் இப்பாடல் ஒரு நல்ல பாட்டாக அமைந்து விடுகின்றது.

சொல்நயம்:

சொற்கள் தமக்கென்றமைத்த ஒலித் தன்மையும் வல்லின மெல்லின எழுத்துக்களுக்கேற்ப உணர்ச்சியுடன் சேர்ந்து ஒலிக்கும் தன்மையும் கொண்டது. எனவே கவிதைகளில் சொற்கள் அமையும் பொழுது இடத்திற்கேற்றவாறும், சந்தர்ப்பத்திற் கேற்றவாறும், உணர்ச்சிக்கேற்றவாறும், சுவைக்கேற்ற வாறும் அமைந்து பொலிவுடையதாக்குகின்றன. இந்தப் பாடலில் வந்த சொற்கள் சிந்தைக்கு இனியனவாக கவிஞனது உணர்ச்சிக்கு ஏற்றனவாக செந்தமிழ் சொற்களாகவே அமைந்து விடுகின்றன. கனியில் சுளையும் கழையின் சாறும், மலரில் தேனும், பாகில் சுவையும் இயல்பாக அமைந்துள்ளதால் ஏறிய என்னும் சொல்லினால் குறிப்பிட்டார். சொற்களுக்கு கொடுக்கப் பட்ட அடைமொழி தான் இங்கு கவனிக்கத்தக்கது. முற்றாத கரும்பின் சாறு இனிக்காது. பக்குவமாக காய்ச்சாத பாகு சுவைக்காது. தமிழின் இனிமையை மிகைப்படுத்த இவ்வடைமொழி கொடுக்கப்பட்டது. தென்னை தாளுண்ட நீரை தலையாலே தருதலால் நல்கிய குளிர் இளநீர் என்றார்.

கற்பனை நயம்:

கவிதைகளை கனிவித்து கற்போரின் மனதை விரிந்த பார்வையில் செலுத்தவல்லதே கற்பனை கவிதைகளின் பிறபண்புகளுக்கும் அடிநிலமாக அமைவது இதுவே. மேலே குறித்த பாடலில் கவிஞன் தன் அனுபவத்தில் கண்ட பலபண்புகளை அனுபவங் களை ஒருவித கட்டுப்பாடுமின்றி தானாக தேர்ந் தெடுத்து கவிதையாக்கி வருகின்றான். சொல்லவந்த பொருளை சொற்களில் வடிக்கும்போது உணர்ச்சி யோடு கற்பனை இயைந்திருப்பது இப்பாடலின் சிறப்பம்சமாகும்.

தொடை நயம்:

தொடைவகை என்பது எழுத்துச்சொற் பொருள்களை எதிரெதிர் நிறுத்தி தொடுக்கப்படுவன வாகிய தொடைவிகற்பம். இவை பூமாலை போல செய்யுளுக்கு பொலிவு செய்வதால் தொடையெனப் பட்டது. தொடை நயங்களில் முக்கியமானவையாக எதுகை, மோனை, இயைபு, முரண் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

கவிதை இயற்றும் புலவன் கைக்கொள்ளும் கருவிகளில் முக்கியமானது ஒலி. கவிதையில் ஓர் ஒலி திரும்பத்திரும்ப வருவதலையே எதுகை, மோனை என்று கூறுவார். பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத்தொடுப்பது எதுகை எனப்படும். அது சீர் எதுகை, அடி எதுகை என இரண்டு வகைப்படும்.

இப்பாடலில் சீர்எதுகை-

இனியன எனினும்
என்னுயிர் -என்பேன்

அடி எதுகை -

கனி
பனி
நனி
இனி

ஒலி திரும்பத்திரும்ப வருதலுக்கும் உணர்ச்சிக்கும் பிரதான இடமுண்டு என்பதை நாம் மறந்து விடக்கூடாது. மோனை என்பது ஓரடியிலும் ஒவ்வொரு சீரிலும் முதலெழுத்து ஒன்றி வருவது மோனையாகும். சீர் மோனை இப்பாடலில் இடம்பெறவில்லை. அடிமோனை இடம்பெற்றிருக்கின்றது.

கனியிடை
கழையிடை
பனிமலர்
பாகிடை
நனிபசு
நல்கிய

"இனியன என்பேன் எனினும் - தமிழை என்னுயிர் என்பேன் கண்டீர்" என அடிமுழுவதும் மோனை பயின்று செவிக்கு இன்பத்தைத் தருகின்றது. இதனால் தான் "குயவனின் கைவண்ணம் பானையிலே; புலவனின் கைவண்ணம் மோனையிலே" என்ற புதுமொழி உருவாயிற்று.

கவிதையின் பத்திற்கு உயிர்கொடுப்பதில் இயைபும் முதன்மை பெறுகின்றது. பாடலின் சீரின் கடைசி எழுத்தோ, சொல்லோ ஒன்றி வருதல் இயைபு எனப்படும். இப்பாடலில் வரும் சாறும் சுவையும் நீரும் என்பன இயைபு தொடை நயங்களாகும். தொடை நயங்களுள் இன்னொன்று முரண் என்பதாகும். மாறுபட்ட ஒன்றுக்கொன்று எதிரான சொற்கள் வருவது முரண் எனப்படும். மேற்குறிப்பிட்ட பாடலில், காய்ச்சுப் பாகிடை குளிரிள நீர் என்பன முரண் சொற்களாகும்.

திரும்பத்திரும்ப வருதலாகிய ஒலிப்பண்பில் ஒரு வகையான மந்திர சக்தி உண்டு. புலவன் தன்னுடைய மாயவித்தைகளை இங்கேதான் காட்டுகின்றான் என பேராசிரியர் வி.செல்வநாயகம் விரிவுரையில் கூறிய கூற்று இன்றும் என் நெஞ்சில் நிழலாடிக் கொண்டிருக் கின்றது.

அணிநயம்:

கவிதைக்கு அழகு செய்வன அதில் அமையும் அணிகள். ஒரு கருத்தைச்சொல்லும்போது அது கேட்போருக்கு இனிமையாக அமையும். இச்சிறிய பாடலில் கவிஞன் விதம்விதமான அணிகளைக் கையாண்டிருக்கின்றான்.

உவமை:

கவிதையில் சில சொற்கள் அசாதாரண ஆற்றலைப்பெற்று விளங்குகிறதென்றால் அதற்கு

உவமையணி அடிப்படையாகின்றது. ஒரு பொருளை பிறிதொரு பொருளுக்கு ஒப்பிட்டுக்காட்டுவதன் மூலம் கூறவந்த சொல்லின் பொரு ளாற்றல் அதிகப்படுத்தப்படுகின்றது. உவமங்களிலே தான் கவிஞனது விரிந்த புலமையாற்றல் வெளிப்படும். தமிழின் இனிமையை கூறவந்த புலவன் இனிமைக்கு எடுத்துக்காட்டாக கனியின் சுவை, கழையின் சாறு, மலரின் தேன், பாகின் சுவை, பசுவின் பால், தென்னை இளநீர் போன்ற வற்றைக்கூறியுள்ளான். கவிஞன் உவமங்களாகக் கூறியவற்றை அனுபவித்தவர்களுக்கு தமிழ் எத்துணை இனிமையானது என்பது எளிதில் புரிந்துவிடும்.

வேற்றுமை அணி:

கனியின் சுவை முதலியன நாவுக்கு இன்பம் தருவன வாயினும் தமிழ் தமிழனுக்கு உயிராக விளங்கும் சிறப்பினை உடையது. ஆதலால் தமிழின் சுவை அவற்றினை விட மேம்பட்டது. முதலில் ஒற்றுமைப்படுத்தி பின்னர் வேறுபடுத்திக் காட்டுவதால் இதனை வேற்றுமை அணி என்று கூறலாம்.

சொற்பொருட்பின்வருநிலை அணி:

ஒரு பாட்டின் முன்வைத்த சொற்கள் பின்னரும் பல இடங்களில் வருதல் சொற்பொருள் பின்வருநிலை அணியாகும். இப்பாடலில் "ஏறிய" என்னும் சொல் "பொருந்திய" என்னும் பொருளில் பலமுறை பயின்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சந்தம்:

அளவொத்த சீர்கள் திரும்பத் திரும்ப வந்து பாடலைக்கேட்போரின் செவிக்கு இன்பம் பயப்பதை சந்தம் என்பர். சிலர் ஓசை நயம், ஒலி நயம் என்றெல்லாம் குறிப்பிடுவர். இது தொடர்பாக சில கருத்துக்கள் கட்டுரையில் தொடைநயம் என்ற பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பாடலில் மூன்றாம் ஏழாம் சீர்களின் கடைசி அசைகள் "உம்" என முடிதலால் படிப்போர்க்கும் படித்தலைக் கேட்போருக்கும் இனிமையான ஓசை தருவதை அவதானிக்கலாம். மேலும் இப்பாடல் "சிந்து" எனும் இசைப்பா வடிவத்தை சார்ந்தது.

சுவை:

கவிதையை கனிவித்துப்படிப்போருக்கு இன்பத்தை அளிப்பது அதில் பொதிந்துள்ள உணர்ச்சி. அவ்வுணர்ச்சியால் உள்ளம் பூரிக்கும் போது பொங்கி வரும் இன்பத்தையே சுவை என்போம். கவிதை ஒன்றைப்படித்த பின்னர் அசைவற்ற மனதில் ஏற்படும் தாக்கமே சுவை எனப்படும். இலக்கணநூலார் இதனை மெய்ப்பாடு என்று கூறுவர். இந்தப்பாடலில் "தமிழை என்னுயிர் என்பேன் கண்டீர்" எனும்போது பெருமிதச் சுவை எம் உள்ளத்தில் தோன்றுகின்றது.

ஒரு கவிதையை அனுபவிக்க வேண்டுமாயின் புலவன் தந்த உணர்ச்சியை முதலில் எம்முடைய தாக்கிக் கொள்ள வேண்டும். அதற்கு கவிதையை ஒருமுறையன்றி பலமுறை படித்தல் வேண்டும். மேற்குறிப்பிட்ட பாடலை பலமுறை படிப்பீர் களானால் தமிழ் என்பது இனிமைதான் என்பதை உணர்வீர்கள். அவ்வாறு உணர்ந்தால் தமிழ் எங்கள் உயிருக்கு நிகரானது என அறிவீர்கள். ஆதலால் தமிழை உலகெங்கும் பரப்ப வழிசெய்வீர். கவிதையை நுகருங்கள் உங்களால் நுகரமுடியவில்லையாயின் அது கவிதையின் தவறன்று. உங்கள் தவறே.

●

அவனது ஞாபக நாளில்...

வலி இல்லாதபொழுதில் காயத்திற்கு
ஏது அடையாளம்?

வா..
நீயும் நானும்
நாமும் குழந்தையும்
மகிழ்ந்த நாட்களால் மட்டும்
மனங்களை நிறைத்துக்கொள்வோம்.

மின்னல் வெட்டுகிறதே
அது
வானத்தை
பிளந்து விடுகிறதா என்ன?

நம்
பிள்ளையின் இழப்பு
உன்னை அழித்துவிடவேண்டாம்.

யாரோ ஏவிய குண்டில்
யாவரும் இருந்த குழியில்
இவன் மட்டும் சாவான் என
யார்தான் நினைத்தார்??

அவன் நினைவுநாளில்
பட்டாம்பூச்சிகள் பருந்துகளாகிறது.
பண்டா பொம்மைகள் டைனோசர்களாகிறது.
ஏன் அவன் ஆசைப்படும் பூவரசம் பூவில்கூட
நஞ்சு சொட்டுகிறது.
நீயும் நானும் இருட்டில்
அவனுக்காய் ஒற்றைத் தீபத்தோடு
கண்ணீர் மல்க..

காப்பதே கர்ப்பம்
அழிப்பதே யுத்தம்.
நீ காத்தாய்.
யாரோ அவனை அழித்தார்கள்!

கடவுளை கடிந்துகொள்ளாதே!
அவனே இவனை உன்
கர்ப்பத்தில் சேர்த்தவன்.

கருகிய சோற்றிற்காய் – யாரும்
அடுப்பை தூற்றியதில்லை.

அவனது காலம்
முள்ளிவாய்க்காலோடு முடிந்தது.
எழுந்து வா.
நீ – ஐந்து வருடமாய்
விலக்கிவைத்த இரவுணவு
இப்பொழுது
நஞ்சாகிக்கொண்டிருக்கிறது.

நாளை அது
உன்னையும் கொல்லலாம்!!

– பி.அமல்ராஜ்

ஆலை மரத்துப் பேயும் அம்மம்மாவும்

ஊர் வடக்கு எல்லைப்பக்கமாக
ஓங்கி வளர்ந்து நின்ற அந்த மரத்தில்
பேய்கள் காய்த்திருப்பதாக அம்மம்மா
சொல்லும் கதையில் பயமிருக்கும்.
ஆலை மரத்தைத் தாண்டிப் போய்தான்
தாவணிக் குமரிகள் குடி நீர்
இரைத்து வர வேண்டுமென்பதாகவும்,
எங்க இன்ஜினியர் மாமா கணிதப்பாடம்
கற்க கஷ்டப்பட்டு போனதெல்லாம்
அந்த ஆலை மரத்தை தாண்டித் தானாம்.
ராத்திரி வெளவால்களின்
சப்த மொழிகளை பேய்கள்
ரகசியமாய் அறிந்து கொண்டதாகவும்,
அம்மம்மா சொல்லும் கதை பயங்கரம்.
நிசி நாய்களின் ஊளையில்
வெளவால்களின் சப்தம் அடங்கிப்போனது பற்றி
அம்மம்மாவிடம் கேட்டால்?
பேய்களின் திருவிழா நடந்தேறுவதாக
அம்மம்மா மொழிவா.
இத்தனை கதையையும் அம்மம்மா
சொல்லக்காரணம்.
அந்த ஆலை மரத்துக்கிளை விழுதில்
ஒரு தடவையேனும் ஊஞ்சலாட வேண்டுமென்று,
பகல் உணவின் போது,
அம்மாவிடம் கேட்டதையும், குமரிப் பெண்ணாய்
நடக்க கத்துக்கோயென்று அம்மா கண்டித்ததையும்,
அம்மம்மா செவியுற்றுருப்பாளோ.

– ஜே.பிரோஸ்கான் –

இல்லையென்று யார் சொல்வார்?

காற்றிலே மிதந்து வரும்
கானம் அதனிலே
கலந்திருக்கும் இசையினையே
இல்லையென்று யார் சொல்வார்...!

பாலில் பரந்திருக்கும்
பார்த்திடவும் முடியாதாய்
படுத்திருக்கும் வெண்ணெயினை
இல்லையென்று யார் சொல்வார்...!

புத்தன் மறைந்தபின்பும்
போதனை தனை நிறைத்தே
பூரித்து வாழ்ந்தும் அவர்
இல்லையென்று யார் சொல்வார்...!

வனந்தனில் ஒளித்திருந்தே
வாழ்வைத் தொலைத்திட்டு
வல்லவர் மறைந்ததனால்
இல்லையென்று யார் சொல்வார்...!

இருந்திடும் என்றுமே
எண்ணத்தின் எதிர்வலைகள்
இயக்கம் தனைக் கொண்டே
உரப்புக் குறைந்ததுவாய்

வந்து பாய்ந்து எம்மிடத்து
வல்லமை சேர்த்துத் தரும்
வல்லவரின் திருவதுவும்
இல்லையென்று யார் சொல்வார்...!

– மைதிலி தயாபரன் –

வி.மைக்கல் கொலின்



ஈழத்து தமிழ் இலக்கியச் செல்நெறியும் பிரதேச இலக்கியங்களும்

ஈழத்து தமிழ் இலக்கியச் செல்நெறியாக கவிதை கிழக்கு பிரதேச வெளிப்பாடுகள்

எது கவிதை என்பது தொடர்பாக இன்னமும் ஒரு மயக்கநிலை இருந்து கொண்டுதான் இருக்கின்றது. கவிதை தொடர்பாக பல வியாக்கியானங்கள் பலரால் பல தளங்களில் முன் வைக்கப்பட்டாலும் கவிதை முருங்கை மர வேதாளம் போல அது தனது திசைகளை தானே தெரிவு செய்கிறது. என்னைப் பொறுத்தவரை கவிதை ஒரு வேதாளம். அதனை அடக்கத்தெரிந்த விக்கிரமாதித்தர்களே கவிஞர்களாக அடையாளம் காணப்படுகிறார்கள். எல்லோரும் கவிஞர்களாக வேதாளத்தை சுமக்கலாம், கவிதைகள் படைக்கலாம். ஆனால் தன்னை அடக்கத்தெரிந்த விக்கிரமாதித்தர்களை வேதாளமே அடையாளம் காட்டிவிடும். அதுவே அன்று தொட்டு இன்று வரை கவிதை உலகில் நடந்து வருகின்றது.

கிழக்கிலும் வேதாளத்தைச் சுமந்த, சுமந்து கொண்டிருக்கும் பல விக்கிரமாதித்தர்கள் உண்டு. அதில் வேதாளத்தை அடக்கிய விக்கிரமாதித்தர்களும் உண்டு.

கவிதையை நாம் எழுதுவதில்லை. வாழ்க்கை தான் கவிதையை நம் மீது எழுதுகிறது. எந்த ஒரு இலக்கிய வடிவமும் வாழ்க்கையின் பிரதிபலிப்புத்தான். கவிதை இதயம் சம்பந்தப்பட்ட விஷயம். அதனை மூளை கொண்டு அளப்பது அபத்தமானது. கவிஞன் சமுதாயத்தைப் படம் பிடிக்கின்றான். கறுப்பு வெள்ளையாக, வர்ணமாக அவன் படம் அமைகிறது. இப்படியாக பல கருத்துக்கள் - பல்வேறு சிந்தனைகள். ஆனாலும் ஒன்று நம் ஒவ்வொருவரிலும் ஒரு கவிஞன் இருக்கின்றான். பலர் கவிதையை வார்த்தைகளாக மொழி பெயர்க்கின்றனர். கவிதைக்கு மொழி தேவையில்லை. கவிதை பார்வையிலேயே இருக்கின்றது. தெரிவிப்பது

அதன் இரண்டாம் கட்டம். தெரிவிக்கப்படாமலும் கவிதை இருக்கலாம். உணர்ச்சிகளை தெரிவிக்க வார்த்தைகள் என்கிற ஊடகத்தை பயன்படுத்துகையில் யார் யார் வெற்றி பெறுகிறார்களோ அவர்கள் விக்கிரமாதித்தர்களாகின்றார்கள். அவர்களை கவிதை கொண்டாடும்.

இரண்டாயிரமாண்டு நீண்ட நெடிய மரபு கொண்ட நமது தமிழ்க்கவிதைப்பரப்பில் பல வகையான விஷயங்கள், பல்வேறு விதமான வடிவங்கள், ஆயிரக்கணக்கான உத்திகள், சொல்லும் விதங்கள் சோதனை முயற்சிகள், என்றெல்லாம் காணக்கிடக்கின்றன. சுருக்கமாகச் சொல்வதற்கும், சோதனை முயற்சிகளுக்கும் கவிதையில் தான் பிரகாசமான வாய்ப்புக்கள் உண்டு. அதுதான் கவிதை காலத்துக்கு காலம் பல புதிய பெயர்களில் தன்னை புதுப்புது வடிவில் வெளிப்படுத்துகிறது. காலத்தின் தேவைக்கேற்ப கவிதை தன் ஆடைகளை மாற்றிக் கொள்கிறது. ஆடைகளை மாற்றினாலும் கவிதை உடல் என்றும் கவிதையாக இருக்கின்றது.

மரபுக்கவிதை, புதுக்கவிதை, நவீனகவிதை என அது காலத்துக்கு காலம் ஆடைகளை மாற்றிக் கொண்டாலும் ஒன்று மட்டும் நிச்சயம் கவிதையை செய்யமுடியாது.அப்படி வலிந்து கட்டிக் கொண்டு செய்தால் அது செய்யுள் போலாகும்.வாக்கு மூலமாகப் போகும். வசனத்தை உடைத்துப் போட்டும் கவிதையை சாதித்து விடமுடியாது. வரிக்கு வரி பொருளம்சத்தின் தர்க்கம் நிகழ்ந்து கொண்டு போவது தான் கவிதை. அது நிதர்சனத்தின் வெளிப்பாடாக தன்னை அடையாளப் படுத்தும்.

அந்த வகையில் ஈழத்திலே சுதந்திரத்திற்குப் பின்னர் ஏற்பட்ட கவிதை வளர்ச்சி புதிய வடிவம், புதிய சிந்தனை என்பவற்றால் நவீன தமிழ்க் கவிதை கிழக்கிலே அதிகம் மையம் கொண்டிருக்கின்றது.

நவீன தமிழ்க் கவிதை இலக்கியத்தில் கிழக்கிலங்கை முக்கிய பங்களிப்பினை செய்துள்ளது, செய்துவருகின்றது. 20ம் நூற்றாண்டின் நவீன கவிதை முன் வளர்ச்சிக் காலமாக 1950 ஆம் ஆண்டுகளைத் தொடர்ந்து திருகோணமலையின் முன்னோடிக் கவிஞர்கள் என்ற முடியைச் சூடிக் கொண்டவர்கள் தருமுசிவராம், அண்ணல், ஈழவாணன், தா.சி.வில்வ ராஜன் (திருகோணமலைக் கவிராயர்) என தனது திருகோணமலை கலை இலக்கிய வரலாறு என்ற நூலில் குறிப்பிடுகின்றார் திருமலை நவம்.

அதற்கு சமாந்தரமாக மட்டக்களப்பு தமிழகத்தின் பெரியநீலாவணை பிரதேசத்தைச் சேர்ந்த நீலாவணன் முன்னோடிக் கவிஞராவார். நவீன கவிதையுலகிலே முஸ்லீம் கவிஞர்களது பிரவேசமும் இக்காலப்பகுதியிலேயே நிகழ்கிறது. புரட்சிக்கமால் இவ்வழி முன்னோடிக் கவிஞராகிறார்.

தனது பாடசாலைப்பருவத்திலேயே "யாழ்" என்ற கையெழுத்துச் சஞ்சிகையை வெளியிட்டு நவீன கவிதையுலகில் தனக்கென ஒரு அழியா முத்திரை பதித்த தருமு சிவராம் தமிழ்க்கவிதை உலகமே கொண்டாடும் ஒரு கவிஞராவார். 20ம் நூற்றாண்டின் இணையற்ற படிமவியல் கவிஞராக சி.சு.செல்லப்பாவின் "எழுத்து" சஞ்சிகை மூலம் தன்னை வெளிப் படுத்தியதில் இருந்து 1972ம் ஆண்டு திருகோண மலையில் இருந்து புலம்பெயர்ந்து தமிழகம் சென்று தனது இறுதிக்காலம் வரை (1997) நவீன தமிழ்க் கவிதையை ஆட்சி செய்த தருமு சிவராமின் $E= MC^2$ என்ற கணித பூர்வமான கவிதை இன்றும் பலரால் வியந்து பார்க்கப்படுகிறது.

ஒற்றைக்குருட்டு
வெண்விழிப்பருதி
திசையெங்கும் கதிர்க்கோல்கள்
நீட்டி
வரட்டு வெளியில் வழிதேடி
காலம்காலமாய்
எங்கே போகிறது
எங்கே?
என்றார்கள் மாணவர்கள்
ஒன்பது கோடியே
முப்பது லட்சம் மைல்
தூரத்தில்
எங்கோ
ஒரு உலகத்துளியின்
இமாலயப்பிதுக்கத்தில்
இருந்து குரல் கொடுத்து

என நீளும் இக்கவிதையில் படிம உத்தியும், வசனச்செறிவும் கவிதையின் நிகழ்வெளியை சாத்திய மான அனைத்து தளங்களுக்கும் இட்டுச் செல்வதைக் காணலாம். நவீன தமிழ்க்கவிதையின் உச்சமாகக் கொண்டாடப்படும் இவரது

சிறகிலிருந்து பிரிந்த
இறகொன்று காற்றின்
தீராதபக்கங்களில்
ஒரு பறவையின் வாழ்வை
எழுதிச் செல்கிறது.

என்ற கவிதையில் ஆன்மீகத்தின் புதிய தரிசனத்தை தரிசிக்க முடியும்.

ஐம்பதுகளின் இறுதியில் தமிழுணர்ச்சி ஈழத்துக்கவிதையில் முக்கியம் பெற்ற போது வீறுமிக்க கவிஞர் குழாமொன்று கிழக்கிலிருந்து வெளிப்பட்டது.

நீலாவணன் ராஜபாரதி, ஜீவா ஜீவரட்ணம், ஆரையூர் அமரன், புரட்சிக்கமால், திமிலைத்துமிலன், பாண்டியூரான் தாமரைத்தீவான், எருவில் மூர்த்தி, காசி ஆனந்தன், என நீள்கின்ற பட்டியலில், கவிஞர் காசி ஆனந்தனும், ராஜபாரதியும் தமிழ் உணர்ச்சிக் கவிஞர் களின் பிதாமகர்களாக திகழ்கின்றனர்.

பாடையிலே படுத்தூரைச் சுற்றும் போதும்
பைந்தமிழில் அழுமோசை கேட்க வேண்டும்
ஓடையிலே என் சாம்பர் கரையும் போதும்
ஒண் தமிழே சல சலத்து ஓய வேண்டும்.

என்ற கவிஞர்

ராஜபாரதியின் உணர்ச்சிமிக்க கவிதை அன்றைய அரசியல் மேடைகளில் முழங்கப்பட்ட கவிதையாகும் உணர்ச்சிக் கவிஞர் என அழைக்கப்படும் கவிஞர் காசியானந்தன் இன்றும் தமிழுணர்ச்சிக் கவிதை களை படைத்துக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

நையாண்டியில், சமூக அவலங்களையும் சீர்திருத்தங்களையும் சொல்லவல்ல ஒரு கவிஞர் கவிஞர் தாமரைத்தீவான். இரண்டு சொற்களில் மரபுக் கவிதை ஆக்கும் ஆற்றல்படைத்தவர் தமிழில் அத்தனை மரபு வகையிலும் கவி எழுதும் ஆற்றல் கொண்டவர். கவிஞர் தாமரைத்தீவானின் "சாதி" கவிதை இது

சாகப் பிறந்திட்ட சாதி தமிழ்ச்
சாதியைப் போலொரு சாதியுண்டாமோ
போகத் துணிந்திட்ட சாதி தினம்
போராடி வானகம் போகின்ற சாதி
பறித்திட விடுகின்ற சாதி எல்லாம்
பறிபோன பின்பே பதைக்கின்ற சாதி
மறித்திட நினையா சாதி– எதிர்
மாற்றானை உறவாக மதிக்கின்ற சாதி
பழமையில் மூழ்கிடும் சாதி – இந்தப்
பாரிலேயாவர்க்கும் முன் வந்த சாதி

பிழையான வழிபோன சாதி பழம்
பெருமையை மட்டும் பேசிடும் சாதி

1960களில் முற்போக்கு கவிஞர் குழாம் ஒன்று உருவாகியது. மாக்சிச சார்புடைய இக்கவிஞர்களிடத்தில் வித்தியாசமான போக்குகள் காணப்பட்டன. இதில் கவிஞன் சுபத்திரன் முக்கியமானவர். அந்த வரிசையில் மிக முக்கியமான ஆளுமையாக வெளிப்பட்டவர் கவிஞர் சண்முகம் சிவலிங்கம். நவீன தமிழ் கவிதா உலகில் சண்முகம் சிவலிங்கத்தின் கவிதைகளுக்கு தனி இடம் உண்டு. ஈழத்து நவீன தமிழ்க்கவிதையின் நிகழ்வெளி - 2000 என்ற தனது கட்டுரையில் சி.ரமேஷ் கவிஞர் சண்முகம் சிவலிங்கம் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

ஈழத்து தமிழ்க்கவிதை மரபில் தனித்துவமான நவீன கவிச்சொல்லியாக வெளிப்பட்ட கவிஞர் சண்முகம் சிவலிங்கம் உணர்வின் வெவ்வேறு பிரதிமைகளை கவிதையின் வெவ்வேறு பரிமாணங்களுக்கு ஊடாக வெளிப்படுத்தியவர் என்கின்றார். இக் காலத்தைய கவிஞர்களாக ஈழமேகம், மு. சடாட்சரம், பஸீல் காரியப்பர், புரட்சிப்பாலன், மலைமதி சந்திர சேகரம், வணங்காமுடி தம்பித்தில்லை முகிலன், கே.கே. மதிவதனன், க.கோணேஸ்வரன், செ.நவசோதிராசா, திருமலை அ.சந்திரன், எஸ்.ஜோசப், புரட்சிவண்ணன் ஆகியோர் இடம் பெறுகின்றனர்.

எண்பதுகளில் கிழக்கு கவிதையிலே பல புதிய போக்குகள் உருவாகின என்று கூறமுடியவில்லையாயினும் பல புதிய கவிஞர்கள் வெளிப்பட்டார்கள். இக்காலப்பகுதிக் கவிஞர்களில் கவிஞர் சாருமதி மிக முக்கிய ஆளுமையாக மாக்சிச போக்குடைய முற்போக்கு கவிஞராக தன்னை அடையாளப்படுத்துகின்றார். இவரைத் தொடர்ந்து அனல் அக்தர், நிலா தமிழின் தாசன், நல்லை அமிழ்தன், இராஜதர்மராஜா, புஸ்பா கோமஸ், திருமலை நவம், இரத்தின விக்கினேஸ்வரன், ராஜ்கபூர், க.பவானந்தன், தங்க சச்சிதானந்தம், நிலவின்தாசன், அசனார், சண்முகப்பிரியா, கேணிப்பித்தன், ஆலையூரான் ஆகியோர் வெளிப்பட்ட காலம்.

பெண் கவிஞர்கள் காலடி வைத்தது இக்கால கட்டமே. கமலினி முத்துலிங்கம், மண்டூர் அசோகா போன்றோர் முக்கிய இடம் பெறுகின்றனர்.

மாக்சிச போக்குடைய ஈழத்தின் இன்றைய முற்போக்கு கவிஞர்களுள் தனித்துவ இடம் பெற்றுள்ள சிவசேகரத்தின் கவிதையுலகப்பிரவேசம் 1980களில் நிகழ்கின்றது. முற்போக்கு இலக்கியம் சமுதாயத்தை புடம் போட்டுக்காட்டுவது மட்டுமன்றி சமுதாயத்தை மாற்றியமைக்கும் கருவியாகவும் அமைய வேண்டும் என்ற கருத்தில் நம்பிக்கை கொண்டவர்.

சற்றே வழி விலகி
நந்தி வலி விட்டாற்போல்
வெலிக்கடையின் சிறைக் கூட
இரும்புப் பெருங்கதவு
தானே திறக்கும்
அங்கு காவலர்கள் அறியாமல்
கற்றவர்கள் சூழ்ந்திருக்கும்
அறைக்குள் கொலை நடக்கும்.

என்ற கவிதை மாக்சிச நோக்குடைய முன்னைய கால கவிதைப்போக்கு இக்கால அரசியல் நெருக்கடிகளால் தளர்ச்சியுறத் தொடங்குவதற்கு நல்லதொரு உதாரணம். 1980களில் ஏற்பட்ட மோசமான இன அழிப்பு நடவடிக்கையின் பின்னர் தமிழ்க்கவிதை தமிழர்களின் அவலங்களைப்பாடுவதில், தமிழர் வாழ்வியலை எடுத்து கூறுவதில் மிக முக்கிய பங்கினை பெற்றுக்கொண்டது. இன ஒடுக்கு முறைக்கு எதிரான கவிதைப்போக்கில் சண்முகம் சிவலிங்கத்தின் பின்வரும் கவிதை முக்கியமானது.

இன்று இல்லெங்கிலும் நாளை
எங்கள் புருவங்கள் தாழ்ந்துள்ளன
எங்கள் இமைகள் கவிந்துள்ளன
எங்கள் உதடுகள் அண்டியுள்ளன
எங்கள் பற்களும் கண்டிப்போய் உள்ளன
நாங்கள் குனிந்தே நடந்து செல்கிறோம்
எங்களை நீங்கள் ஆண்டு நடத்துக
எங்களை நீங்கள் வண்டியில் பூட்டுக.
எங்கள் முதுகில் கசையால் அடிக்குக
எங்கள் முதுகுத் தோல் பிய்ந்துரிந்துபோகட்டும்.
தாழ்ந்த புருவங்கள் ஒருநாள் நிமிரும்
கவிழ்ந்த இமைகள் ஓர் நாள் உயரும்
இறுகிய உதடுகள் ஒரு நாள் துடிக்கும்
சுண்டிய பற்கள் ஒரு நாள் நற நறக்கும்
அதுவரை நீங்கள் எங்களை ஆழ்க
அது வரை உங்கள் வல்லபம் ஓங்குக.

இக்காலத்தில் எழுந்த எம்.ஏ.நுஃமானால் எழுதப்பட்ட யாழ்ப்பாண நூலகம் எரிப்பு தொடர்பான புத்தரின் தற்கொலை மிக முக்கியமான கவிதையாகும்.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் இன்னுமொரு களத்தில் கால் பதித்தவேளை இலங்கை இந்திய ஒப்பந்தம் மூலம் சமாதானத்தின் காவலர்களாக வந்த இந்திய அமைதி காக்கும் படையின் அநீதிகளை பதிவு செய்த இக்காலத்திய கவிஞரான மைக்கல் கொலின் "ஆட்டமா ரொட்டியும் ஆட்டிறைச்சிக் கறியும்" என்ற கவிதையில் வரும் "அப்பாவிகளாக வந்தவர்கள் அப்பாவிகளாக போகின்றார்கள்" என்ற வரியில் ஓர் இனத்தின் மீதான சோகமயமான சூறையாடலை மிக அழகாக காட்டி நிற்கிறது என திருமலை நவம் தனது திருகோணமலை கலை இலக்கிய வரலாறு என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.

இக் காலத்திய முக்கியமான கவிஞர்களின் ஒருவர் சக்கரவர்த்தி. இவர் புலம் பெயர்ந்து சென்றாலும் இவரது படைப்புக்கள் ஈழத்தில் இன ஒடுக்கு முறைகளுக்கும் போராட்ட நடைமுறைக்கும் எதிரான கவிதைகளாகவே இருந்தன.

நவீன தமிழ் கவிதையின் வெளிப்பாட்டு ரீதியில் இக் காலகட்டத்தில் மிக முக்கியமான பங்களிப்பினை செய்தவர் சோலைக்கிளி. இவரது பாடுபொருள் பல தளங்களை திறந்துவிட்டாலும் அஃறினை பொருட்களுக்கூடாக விரிந்து செல்லும் இவரது கவிதைப்

போக்கு இவருக்கு மட்டுமே உரித்தான தனித்துவமான கவிதைப் பண்பாகும். இவரது கவிதையின் வெளிப் பாட்டு உத்தியை பின்பற்றி பலர் எழுத முனைந்தாலும் இவரது தனித்துவம் இவருக்கு மட்டுமே உரித்தான ஒன்றாக தனது வெளிப்பாட்டு உத்தியினை கவிதைக் கான பாடுபொருளை தேர்ந்தெடுப்பதிலும் தனியார்வத் தனம் புரிவபராக உள்ளார். அவரின் "எனது இனத்து பேனையால் அழுதது" என்ற கவிதை

நிலவுக்கு வேலியிடு
சூரியனையும் பங்கு போட்டு பகிர்ந்து கொள்
வெள்ளிகளை ஒன்றாக்கு
இனவிகிதாசாரப்படி பிரி
நாகரீக யுகத்து மனிதர்கள் நாம்
கடலை அளந்து எடு
வானத்தை பிளந்து துண்டாடு
சமயம்வந்தால்
காற்றைக் கடத்து அல்லது
கூறாவளியை கொண்டு சகோதர இனத்தை அழி
அங்கே
செவ்வாய் கிரகத்தில் நம்மில் ஒருவன்
இறங்கப்படும்
எறும்புக்கும்
இனமுத்திரை இடு
மரத்திற்க்கு கூட
சாதிசமயத்தை புகட்டு
புறா முக்கட்டும்
இன்னொரு இனத்தை வதைத்து
பல்லியும் பூச்சியும் நத்தையும் தவளையும்
கத்தும் ஒலியிலெல்லாம் வேதங்கள்
தொனிக்கட்டும்
வா
வண்ணத்துப் பூச்சியே
இது உன்னுடைய இனத்து மலர்தான் நுகர்
பாவம் மனிதன் பிரிந்த விதம்
நான் கூட இந்த கவிதை எழுதுகையில்
ஒரு பேனை மறுத்தது
உனது இனத்து பொருளல்ல நானென்று
ஓ... அது வேறு இனத்துப் பேனை

இக்காலத்துக்குரிய மேலும் சில முக்கிய கவிஞர்கள் ஜபார், வாசுதேவன், ராஜாத்தி, க.ரமணி தரன், (சித்தார்த்த சேகுவரா) புஸ்பானந்தன்

எனது நெருப்பு எரியத் தொடங்கி
வெகுகாலமாயிற்று
அணைந்து எரிந்து அணைந்து
எரிந்து அணைந்து எரிந்து
எரிந்தபடி தான் இருக்கிறது
அணைந்தே போகாதபடி

எனச் சொல்லும் ஜபாரின் கவிதை ஆழ்மனத் தேடலோடு சொல்லும் தத்துவ விசாரம் கொண்டது.

நெருக்கடிமிகுந்த இன்றைய வாழ்வியலை சிக்கலற்ற இயல்பான படிமங்களுக்கூடாக வெளிப் படுத்தும் வாசுதேவனின் கவிதை சொல்லும் பாணி தனித்துவமானது.

பௌர்ணமி இரவில்
தங்கச் செதில் முளைத்து
தகதகக்கும் மட்டுநகர்
வாவிக்கரையோரம்
காற்றில் நடக்கும்
சுகத்தினை இழந்தேன்
எனது பாதை மூடப்பட்டுள்ளது
எனது மைதானமும்
குன்றும் குழியுமாய் சிதைக்கப்பட்டுள்ளது.
எனது நிலா முற்றமும்
நாய் குரைப்பின் அச்சத்தில் உறைந்திருக்கிறது.
எனது நிழல் வெளியும். கூட
பட்ட மரமும் வெயிலுமாய் உள்ளது

திருகோணமலையைச் சேர்ந்த க.ரமணிதரன் என்ற இயற்பெயர் கொண்ட கவிஞன் ரமணிதரன் தனது பெயரிலும் ரிக்ஷிமித்திரகுமார் ரிக்ஷிபிரபஞ்சன் என்ற பெயரில் கவிதைகளும் சிறு கதைகளும் எழுதும் இவர் பேராதனை பொறியியல் பட்டதாரி. தற்போது அமெரிக்காவில் பேராசிரியராக கடமை புரியும் இவரே சித்தாத்த சேகுவரா என்ற பெயரில் நவீன சிறுகதைகள் மொழி பெயர்ப்புக்களை எழுதுபவர். இவரது கவிதை ஒன்று

நீர் நிலை விம்பத்தில்
பின் தொங்கு குளி
தாக்கும் அருச்சுனர்
தர்மபுத்திரன் தம்பிகள்
இது வேண்டாச் சூது
அறியாப் போதில்
கை கௌவிய சபையில்
முது பீஷ்ம விதுரர்
முனகவும் விழையா
மௌனப் பொய்ப் பொம்மைகள்
ஒலி கொடுத்தும்
நா தடவு
உப்புத்துகள் கட்காய்
நடை பாதை கடக்கா
கர்ண விகர்ணர்கள் மட்டுமே
கவலைக்குரியோர்

அந்நாட் காலை உணர்ந்தேன்
என்
உலகத்தெங்கும்
நேசம் உலர்ந்ததை
விசம் மழைப்பட்டு
வெறுப்பு விளைந்தது.
தக்கனை பிழைக்கும்
தணிக்கை அம்பு எகிறட்டும் முன்னே
என்முகம் காத்ததற்கு

கொல்லப்படுதல்
வெளிப் பொய்மைக்கு முன்
மண்டியிட்டு தோற்றேன்
என்பதிலும் இனிதான நிலை

கர்ணன் மட்டுமே
என் காவிய புருஷன்
அசுவத்தாம இறப்பிற்காய்
அவன் தேர் இறங்காது

இக் காலத்திற்குரிய மற்றொரு புதிய போக்கிலான பெண்நிலைவாத போக்குடைய கவிதைகள் எழுதிய பெண் கவிஞர்கள் சுல்பிகா, மஹூறா ஏ.மஜிட், அஸ்ரபாநூர்தீன் போன்றோர் குறிப்பிடக்கூடியவர்கள்.

தொண்ணூறுகளில் கவிதையின் பாடுபொருள் பல தளங்களை நோக்கி விரியத்தொடங்கியது. முஸ்லிம் தேசிய உணர்ச்சி முனைப்புறப் பெற்றதும் இக்கால கட்டத்தில் தான். தமிழ் தேசியத்துக்கான விடுதலைப் போராட்டம் முனைப்புடன் முன்னெடுக்கப் பட்டுக் கொண்டிருந்த கால கட்டத்தில் போராட்டத்தின் விளைவுகள் பல புதிய கவிதைகளையும் உள் வாங்கியது. பல கவிஞர்களின் முகங்களையும் வெளிச்சம் காட்டிய கால கட்டம் இது. இக் காலத்திய கவிஞர்களில் றஷ்மி, ஓட்டமாவடி அறபாத், மஜித், புஸ்பானந்தன், மண்டூர் தேசிகன், வாழைச்சேனை அமர், நளீம், அஸ்ரப்சிகாப்தீன், ஆத்மா, ஆழியாள், மகிபா தேவன், சிகண்டி தாசன், சி. பற்குணம் ஆகியோர் முக்கியத்துவம் பெறுகின்றனர்.

இவர்களில் அவதானிப்புக்குரியவராக உள்ளவர் கவிஞர் றஷ்மி. இவரது மிக அண்மைய வரவான "ஈ தனது பெயரை மறந்து போனது" என்ற கவிதைத் தொகுப்பு நிலைமாறிப் போன ஈழவிடுதலைப் போராட்டத்தை ஊடகமாக வெளிப்படுத்தும் கவிதை உத்தியாகும்.

முன்னைய காலங்களில் எழுத ஆரம்பித்து இக்காலப் பகுதியில் முதிர்ச்சி பெற்றவர்களால் ஆத்மா முக்கியமானவர். கொந்தழிக்கும் பல்வேறு உணர்வுகளை இயன்றளவு கவிதை முழுவதும் வியாபிக்கச் செல்வதில் ஆத்மாவின் கவிதைகள் வெற்றி பெற்றுள்ளது. அவரது "ஆணலை" நீண்ட கவிதையில் கோவ வேசப்படும் மனம் கொந்தளிக்கும் கடலாய் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டாயிரம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட கவிதைகள் உயர் கல்வி நிலையங்களில் இருந்து தம்மை அடையாளப்படுத்துகின்றார்கள். உதாரணமாக கிழக்குப் பல்கலைக் கழகத்தில் இருந்து மலர்ச் செல்வன், மேரா, மோகனதாசன், கோபிரமணன், சேரலாதன், சுஜந்தன், கலைமகள், சுதாஜினி, குகநிதி. ஆகியோரும், தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் இருந்து துறையூர் அசாறுதீன், பேராதனையில் இருந்து குகன், மட்டக்களப்பு அரசினர் பயிற்சிகலாசாலையிலிருந்து சம்பூர் வதன ரூபன், இதனை விட திருகோண மலையில் இருந்து பவித்திரன், அப்பாதையில் கோபால் நாதன் என பலர் கவி படைக்க தொடங்கினர்.

இரண்டாயிரம் ஆண்டுக்கு பின்னரான நவீன தமிழ்க் கவிதை உலகில் இருவரின் வருகை மிக முக்கிய தளங்களை கவிதை வெளியில் திறந்துவிடுகிறது. அதில் ஒருவர் ரியாஸ்குரானா. மற்றவர் அனார்.

பெண்ணியக் கவிஞர்களான பெண்ணியா உருத்திரா, விஜயலெட்சுமி, சேகர் அனார் என்ற வரிசையில் அனாரின் கவிதை வெளிப்பாட்டு உத்தியில் அவர் பேச எடுத்துக் கொண்ட விடயப் பரப்பும், கவிதையின் காட்சிப்படுத்தல், சொல்லாட்சி என்பவற்றால் பல புதிய பரிமாணங்களை கொண்டு வருவது கவனிக்கத் தக்கது. அவரது பொம்மைப் பெளர்ணமி என்ற கவிதையின் சில வரிகள்

இரவு 8.30
அவள் சில மர்ம குகைகளின் மலைகளுக்
கரைக்கப்பால்
தூக்கிப் போடும் பெளர்ணமி பொம்மையை
அவர் பிடித்துக் கொள்வார்
காதல் ததும்பியும்... அழகை முட்டியதுமான
பொம்மையின் கண்களை மறக்க முடியாது.
கடலைத் தாண்டி அவர் திருப்பி எறிந்த
பொம்மையை
அவள் பிடித்திருப்பாளா?
காதல் புகையும் சிகரெட்டினால்
தழும்புகளை
சுட்டெரிக்க தொடங்குகிறாள்.
செல்மாவின் ஜிப்ரான்
ஈரப்பனி விழும் பூப்பந்தலின் கீழ்
பித்தேறிய கண்களால் பெளர்ணமிகளை
குடித்துக் கொண்டிருக்கிறாள்
பனிவாள் கீறலின் இசையென
ஒற்றை ஆண்குரல்
மீனவர் குடிசையில் இருந்து
தபேலாவின் தாளத்தை கிழித்து வருகிறது
பிற்பகல்
ஆற்றின் கருங்கல் குன்றுகளில் அமர்ந்து
தோணி விடுபவனை ரசிக்கையில்
நேதிலான ஒற்றையடிப் பாதையில்
ஒன்றுக் கொன்று மறைந்து கொள்ளும் காற்று
மரங்களின் பெயர்களை கேட்டுநடைக்கையில்
அவரது வெறும் கைகளை
ஒருமுறை பற்றிக் கொள்ள வேண்டும் என
நினைக்கிறேன்.

இக்காலத்தில்

பரிசோதனை முயற்சியாகவும் பின் நவீனத் துவ செல்வாக்குடனும் கவிதை எழுதுவதில் ரியாஸ் குரானா தன்னை ஒரு ஆளுமையாக நிலை நிறுத்தி வருகிறார். அச்சில் வராத அவரது மாற்றுப் பிரதி இணைய முகப்புத் தளத்தில் வரும் அவரது கவிதைகள் நவீன கவிதை என்ற சொல்லாடலையும் தாண்டி புதிய தளத்தில் பயணிக்கும் ஒரு வித்தியாசமான அனுபவத்தை தருவபவை.

நவீன கவிதையின் உச்ச பட்ச சாத்தியங்களை தனது கவிதையில் நிகழ்த்தும் குரானாவின் கவிதைப் போக்கு ஒற்றைக் கவி ஆளுமையாக சிந்தனை பெரு வெளிக்குள் பயணிக்கும் பரவசத்தை ஏற்படுத்துவபை. நவீன கவிதையின் அடுத்த கட்ட பாய்ச்சலை நிகழ்த்தும் வல்லமை கொண்ட குரானாவின் கவி வரிகள் சில.

கற்பனையின் மேலதிகப் பக்கங்கள்

எதுவித வரவேற்று பதாதைகளுமில்லை
எனினும் போகவேண்டியிருந்ததால்
இரவுக்குள் நுழைந்தேன்.
பின்பக்க கதவைத் திறந்து பார்க்கிறேன்.
பகல் வருவதற்கான அத்தாட்சிகள் எதுவும்
கிட்டத்தில் தென்படவில்லை
இரவுக்கே உரிய அமைதி
எனது காத்திருப்பிற்கு அருகில் விழுந்து
உடைந்து சலசலக்கத் தொடங்கியது
திரும்பவும் கதவைத் திறந்து பார்க்கிறேன்
காத்திருப்பு வீண் போகவில்லை.
பகல் வந்துவிட்டிருந்தது.
பரபரப்போடு பகலுக்குள் அவளும்
நிசப்தத்தின் இரைச்சலோடு இரவுக்குள்
நானும்...

என தொடரும் கவிதையின் கடைசி வரிகள் இப்படி முடிகிறது.

சிலவேளை
கற்பனையின் மேலதிகப் பக்கங்களில்
அவள் காத்திருக்கலாமோ...

நவீன தமிழ் கவிதையின் பரிசோதனை முயற்சிகள் பலவாறு பல்வேறு காலங்களில் நிகழ்த்தப் பட்டிருக்கின்றன. அந்த வகையில் இருபத்தியோராம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்த காலத்தில் எழுந்த அ.ச.பாஸ்வாவின் "ஆயிரம் தலைவாங்கி" என்ற கவிதை கவிதையா அல்லது புதியதொரு இலக்கிய வடிவத்திற்கான முன் முயற்சியா என்ற கேள்விகளை எழுப்புகின்றது.

ஆயிரம் தலைவாங்கி

முலத்தீவ் / ஓவர்
யெஸ் சேர் / முலத்தீவ் / ஓவர் *
இன்றைய ஸ்கோர் என்ன / ஓவர்
தொள்ளாயிரத்து தொண்ணூற்றொன்பது சேர் *
ஓவர்/.
போதாது / ஆயிரமாக்கு / ஓவர்
யெஸ் சேர் / இதோ / *
படீர் ...
தலைகளை என்ன செய்ய / ஓவர்

சித்த வைத்தி நிவாரணி
தயாரித்து தடவுங்கள் /
எதற்கும் கவனம்
உங்கள் தலைகள் /
ஸ்கோரை அதிகரிக்க முயலுங்கள் /
பூரண அதிகாரம் அளிக்கப்படுகிறது / ஓவர்
யெஸ் சேர் / *
தங்கள் சித்தம்
எங்கள் பாக்கியம் / ஓவர்
மெசேஜ் ஓவர் /

இறுதியாக, கவிதை அன்று தொட்டு இன்று வரை தனக்கான திசைகளை அது தானே தீர்மானித்துக் கொள்கிறது. பிரதேசங்களின் மண் வாசனையுடன் எழும் கவிதைகளாயினும் சரி, மொழியின் உச்சபட்ச சாத்தியங் களுடன் வெளிப்படும் கவிதைகளாயினும் சரி, உணர்வுத் தளங்களுள் உள் நுழைந்து ஆழ் மனத் தேடலில் வெளிக் கிளம்பும் கவிதைகளாயினும் சரி, புதிய பரிசோதனை முயற்சியாக எழும் கவிதைகளாயினும் சரி கிழக்கு மண்ணின் கவிதைகள் அத்தனை வெளிப்பாட்டு உத்திகளையும் உள்வாங்கி அது நவீன தமிழ்கவிதா உலகிற்கு பல விக்கிரமாதித்தர்களை தந்துள்ளது.

கவிதை வேதாளம் என்றால்
கவிஞர்கள் விக்கிரமாதித்தர்கள்.
வேதாளத்தை சுமக்கும்
பல விக்கிரமாதித்தர்களிடையே
வேதாளமே தன் தோளில்
சுமக்கும்
விக்கிரமாதித்தர்களும்
கிழக்கு மண்ணில் உண்டு
எனக் கூறினால் அது மிகையல்ல

<u>பிற்குறிப்புகள்</u>

* இக் கட்டுரை ஓர் அறிமுகக் குறிப்பே அன்றி ஆய்வுக் கட்டுரை அல்ல. கட்டுரையின் விரிவஞ்சி பல கவிஞர்களிடையே கவி வரிகள் இணைக்கப்பட வில்லை.

* 1976 ல் அம்பாறை மாவட்டம் தனி மாவட்ட மாக பிரிபடும் வரை அம்பாறை மாவட்டத்தை இணைத்த வகையில் மட்டக்களப்பு தமிழகம் பெரு நிலப்பரப்பாக இருந்தது. இதன் காரணமாக ஆண்டு அடிப்படையில், கவிஞர்களை மட்டக்களப்பு, அம்பாறை என்ற நிலையில் எந்த பிரதேசங் களுக்குள் பாகுபடுத்துவது என்ற சிக்கல் நிலை உள்ளது. எனவே ஒட்டு மொத்த கிழக்கு பிரதேச மாகவே இக் கட்டுரை வடிவம் கொள்கிறது.

இம் முன்னோடி அறிவிப்புக் குறிப்புகள் விரிவையும் ஆழத்தையும் வேண்டியுள்ளன.

இவ் வளர்ச்சிப் போக்கினை ஈழத்தின் பிரதேசக் கவிதை வளர்ச்சியுடன் ஒப்பிட்டு நோக்குவதும் அவசியமாயுள்ளது.

நவீன கவிதையுடன் தொடர்புபட்ட சிறுவர் பாடல்கள், மொழிபெயர்ப்பு முயற்சிகள், மெல்லிசைப் பாடல்கள், பல்லாக்கத் தொகுப்புகள் பற்றி விரிவஞ்சி இவ் ஆய்வு கவனத்திற் கொள்ளவில்லை.

பின்னிணைப்பு

கால அடிப்படையில் அமைந்துள்ள இப்பட்டியல் முழுமையானதன்று: கால அடிப்படையில் இடம் பெற்றுள்ள கவிஞர் சிலரது பெயர்கள் முன்னைய காலப்பகுதிகளுக்கு பொருத்தமானதாகவும் அமையக் கூடும்.

குறியீட்டு விளக்கம்:

"ம" – (மட்டக்களப்பு),
"அ" – (அம்பாறை),
"தி" – (திருகோணமலை)

ஐம்பதுகளில்

1. நீலாவணன் (அ)
2. புரட்சிக்கமால் (ம)
3. அண்ணல் (தி)
4. யுவன் (அ)
5. இராஜபாரதி (ம)
6. திமிலைத்துமிலன் (ம)
7. திமிலைக்கண்ணன் (ம)
8. எருவில் மூர்த்தி (ம)
9. ஆரையூர் அமரன் (ம)
10. ஜீவா ஜீவரத்தினம் (அ)
11. காசி ஆனந்தன் (ம)
12. துறையூர் க. செல்லத்துரை
13. பாண்டியூரான் (அ)
14. அப்துல் கஹ்ஹார்
15. தருமு சிவராம் (தி)

அறுபதுகளில்

1. சுபத்திரன் (ம)
2. நுஃமான் (அ)
3. சண்முகம் சிவலிங்கம் (அ)
4. வேதா நீதி (அ)
5. திமிலைமகாலிங்கம் (ம)
6. ஈழமேகம் (அ)
7. அன்பு முகைதீன் (அ)
8. பஸில் காரியப்பர் (அ)
9. தருமு சிவராம் (தி)
10. செ.குணரெத்தினம் (ம)
11. ஏ.இக்பால் (அ)
12. வாகரை வாணன் (ம)
13. சி.மௌனகுரு (ம)
14. மருதூர்க்கனி (அ)
15. மு.சடாட்சரன் (அ)
16. சோமலிங்கம் (அ)
17. திருகோணமலைக்கவிராயர் (தி)
18. ஜின்னா கூரிபுதீன் (அ)
19. முத்துமீரான் (அ)
20. ஈழவாணன் (தி)
21. வேலழகன் (தி)
22. சி.கனகசூரியம் (ம)
23. கல்முனைப்பூபால் (அ)

எழுபதுகளில்

01. சாருமதி (அ)
02. அனல் அக்தர் (ம)
03. கல்லூரான் (அ)
04. வெல்லவூர் கோபால் (ம)
05. மண்டூர் அசோகா (ம)
06. கமலினி முத்துலிங்கம் (ம)
07. அன்புடீன் (அ)
08. பதியத்தலாவை பாறூக் (அ)
09. கௌரிதாசன் (தி)
10. நிலா தமிழின்தாசன் (தி)
11. நிலவின் தாசன் (தி)
12. கேணிப்பித்தன் (தி)
13. ஆலையூரான் (தி)
14. சிவசேகரம் (தி)
15. ஒலுவில் அமுதன் (அ)
16. மண்டூர் தேசிகன் (ம)
17. முல்லை வீரக்குட்டி (அ)
18. மட்டுநகர் முத்தழகு (ம)
19. ஓட்டமாவடி இஸ்மாயில் (ம)

எண்பதுகளில்

01. சோலைக்கிளி (அ)
02. ஆத்மா (ம)
03. அக்ஷ்ரப் சிஹாப்தீன் (ம)
04. பொன் சிவானந்தன் (ம)
05. சாத்தானின் சகோதரன்
06. வி.மைக்கல் கொலின் (தி)
07. ஜப்பர்கான் (ம)
08. சக்கரவர்த்தி (ம)
09. சுல்பிகா (அ)
10. மதூறா ஏ. மஜித் (அ)
11. மணிப்புலவர் மஜித் (அ)
12. அரவிந்தன் (ம)
13. ஜபார் (அ)
14. மருத மைந்தன் (அ)
15. கலைமகள் ஹிதாயா (அ)
16. உமா வரதராஜன் (அ)
17. ஆனந்தன் (அ)
18. எம். பௌசர் (அ)
19. திக்கவயல் தர்மகுலசிங்கம் (ம)
20. ராஜாத்தி (அ)
21. தவராஜா (நீதிவாக்கியர்) (ம)
22. வாசுதேவன் (ம)
23. அஸ்ரப் எம். எச். எம் (அ)

தொண்ணூறுகளில்

1. றஸ்மி (அ)
2. ஓட்டமாவடி அரபாத் (ம)
3. மலர்ச்செல்வன் (ம)
4. பெண்ணியா (ம)
5. கிருஷாந்தி ரட்ணராஜா (தி)
6. ஆழியாள்(தி)
7. புஷ்பானந்தன்(ம)
8. அனார் (அ)
9. மாரிமுத்து யோகராசா (அ)
10. வாசுகிகுணரெத்தினம்(ம)
11. நளீம் (ம)
12. வாழைச்சேனைஅமீர்(ம)
13. திருமலை அஷ்ரப் (தி)
14. சிவ வரதராஜன் (அ)
15. சசிமகரிஷி (அ)
16. குமணன் (அ)
17. சுதாகரிசுப்பிரமணியம்(ம)
18. சுதாகினி (ம)
19. அறநிலா (ம)
20. மௌ.சித்தார்த்தன் (ம)
21. கனகசூரியம்யோகானந்தன்(தி)
22. நளீம் (ம)
23. சாபீர் (ம)
24. பாலைநகர் ஜிப்ரி
25. எம்.எஸ்.எம். அன்ஸார் (ம)
26. தில்லை (ம)
27. விஜயலட்சுமி சேகர் (ம)
28. றகுமான் ஏ. ஜமீல்
29. தமீம்
30. மருதூர் ஏ. ஹசன் (அ)
31. டீன்கபூர் (அ)

2000 ஆண்டுகளில்

1. சேரலாதன் (ம)
2. குரானா (அ)
3. சுஜந்தன் (ம)
4. துறையூர் அஸாறுதீன்
5. சம்பூர் வதனரூபன் (தி)
6. குகன் (ம)
7. மேரா (ம)
8. அஷ்சயன் (தி)
9. கலைமகள் (ம)
10. மோகனதாசன் (ம)
11. அலறி (அ)
12. நூ. எஸ் (அ)
13. தி.பவித்திரன்

புக் லப் - திருசெல்வேலி, பூபாலசிங்கம் புத்தகசாலை - வெள்ளவத்தை, பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம், பரணீ பத்தகக் கூடம் - நெல்லியடி
ஆகிய இடங்களில் ஜீவநதி சஞ்சிகைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஞாயிற்றுக்கிழமைச் சாலையில் நாய்கள் உல்லாசமாக நின்று புணர்கின்றன

மாடுகளோடு தூங்கிக் கொண்டிருக்கும் வீதியில்
அதிகாலை ரெயினில் வந்திறங்கிய ஆட்கள்
தூக்கக் கலக்கத்தோடு நடந்து
பனிப் புகாரில் கரைந்து போகிறார்கள்.
உறுமிச் செல்லும் முச்சக்கர வண்டிகளின் ஒலி தேய
உறக்கத்திலாழ்கிறது சாலை.

குளிர்ச்சட்டையோடு
சைக்கிளில் கிளினிக்குக்குச் செல்லும் முதியவனின்
சுருட்டுப்புகையும் மணமும் தேங்கி நிற்கும் அசையாக்
காற்றில்
மாட்டு மூத்திரவாடையும் சாணிமணமும் ஏறி நடனமாடின.

திறக்கப்படாத கதவுகளின் முன்னே
படுத்திருக்கும் ஆட்கள்
காவற்காரர்களா, வீடோ தரப்பிடமோ இல்லாதவர்களா?
இல்லை, வீடிருந்தும் அங்கே போகமுடியாதவர்களா?

இன்னும் திறக்கப்படாத தேநீர்க்கடையை
திறக்குமாறு வேண்டிப் பிரார்த்தித்தவனின் பிரார்த்தனை
அத்தனை சுலபமாக நிறைவேறவில்லை
"கடைக்காரனின் ஒன்று விட்ட சித்தப்பா ஊரில் இறந்து
விட்டார்" என்று கடைக்காரப் பையன் சொல்லிப்போனான்
விடுமுறைக் குதூகலத்தோடு.

தான் நிற்பது நகரத்திலா கிராமத்திலா என்று தெரியவில்லை
அவனுக்கு

தெருவில் நான்கு நாய்கள் சோம்பலுடன் நிற்கின்றன
இரண்டு நாய்கள் புணர்ந்து கொண்டிருக்கின்றன
ஞாயிற்றுக்கிழமைச்சாலையை
உயிர்ப்பூட்டிக்கொண்டிருந்தது
எந்த இடைஞ்சலுமில்லாத
இந்தப் புணர்ச்சியே.

முறிவு

அகன்ற தெருக்களை அமைப்பதற்காக
எங்கள் தெருக்கரையில் நின்ற புளியமரத்தைச்
சீனர்கள் வெட்டி வீழ்த்தியபோது
காலைச் சூரியன் ஒஸ்லோவில் ஊடுருவ முடியாமல் திணறியது.
அப்பொழுது அமெரிக்கத் தூதுவர்
இலங்கையில் ஆட்சி மாற்றத்தைப்பற்றி
யாழ்ப்பாண ஆயருடன் தொலைபேசிக் கொண்டிருந்தார்.
போதை வஸ்துக் குற்றச்சாட்டில் இலங்கையில்
மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளின் விருதலை
இந்தியா எங்கும் பட்டாசுகளில் பறந்தது.

தலைவர்களுக்கிடையில்
ரகசிய ஒப்பந்தங்கும் பரகசிய ஒப்பந்தங்களும்
நடந்து கொண்டிருந்தபோது
அரிசி விலையேறியது
பெற்றோல் விலை கூடியது.
கட்சி தாவும் ஆட்களுக்குப்
பாலங்களை அமைத்துக்கொடுத்துக் கொண்டிருக்கும்
திருப்பணியை இரவு பகலாகச் செய்து கொண்டிருந்த
பத்திரிகையாள நண்பர்கள் தேர்தலுக்கு இழுத்துச்
செல்லப்பட்டார்கள்.

அதே பத்திரிகையாள நண்பர்கள்
இரவு விருந்துக்கு அழைக்கிறார்கள்.
மூன்று போத்தல் பியரை உள்ளே இறக்கிய
ஊடகப்போராளி ஒருவன்
தேர்தலுக்கு முன்பே தலைவரைத் தெரிந்தெடுத்து விட்டிருந்தான்.
இன்னொருவன் தேர்தலுக்கு முன் தலைவரைக்
கைகவிட்டிருந்தான்

தவற விட்ட பந்தை நினைத்துக் கவலைப்பட்ட
கிரிக்கெற் வீரர்களுக்கு அருகில்
நின்றவனின் கவலையெல்லாம்
தானொரு கிரிக்கெற் வீரனாக வரவில்லை என்றேயிருந்தது
அப்படி வந்திருந்தால்
எந்தப் பந்தும் தவறாது விக்கெற்றை வீழ்த்தியிருக்கும்
அல்லது சிக்ஸராகியிருக்கும் என்று நினைத்தான்.

எல்லாம் ஒருகணத்தில் நிகழ்ந்த போது
மறுகணம் என்னவாக இருக்கும் என்று நினைத்தேன்.

அந்தக்குயில் இனி எப்போது கூவும்



இனிய குயில் ஒன்று
எங்கள் இனத்திற்கே ஒன்றான
தலைமைக்குயில் ஒன்று
எங்களோடு எப்போதும்
அழகாகவும் அன்பாகவும் ஆதரவாகவும்
பாடிக்கொண்டே இருந்தது!
குயில் இனத்தின் இருப்புக்களின்
தனித்துவத்தை உலகதேசமே
அறியவேண்டும் என்று நினைத்துத்தான்
விடாமுயற்சியோடு அது பாடிக்கொண்டிருந்தது
அதன் பாடும் திறன் யாருக்குமே பிடித்திருந்தது
ஏனென்றால்
அதன் பாடல் ஓசை
வித்தியாசமாகவும் புதுமையாகவும் புரட்சியாகவும்
என்றும் அதன் இசை மிகத்திறமையாகவே இருந்திருக்கின்றது!
அந்தக்குயில் வருடத்தில் ஒரு தடவை மட்டுமே கூவும்
அதன் கூவலின் அர்த்தமறிய
சிங்கம் கரடி யானை மான் மரை குரங்கு நரி அணில்
மைனா கிளி பருந்து சேவல் மயில் என்று
எல்லாரும் ஆவலோடும் அக்கறையோடும் காத்திருப்பர்
அந்தக் குயில் எப்பவும்
தன் இனத்தின் சுதந்திரம் வேண்டியே
கூவியிருக்கிறது
தன் சுயநலத்திற்காக எப்பவும் அது
கூவியிருக்கவில்லை
அதுமட்டுமில்லாமல் யாரோடும் ஒட்டி உறவாடி
சலுகைகளைப் பெறுதல் என்பது
கேவலம் என்று எப்பவும் நினைத்திருந்தது
அந்தக்குயிலின் கொள்கைக்கு தலைசாய்த்து
வயதுபோன குயில்களும்
இளவயதுக் குயில்களும் கைகோர்த்தனர்
அந்தக்குயிலின் தலைமையின் உன்னதம் கண்டு
காகக்கலப்புடைய குயிலொன்று
ஆத்திரப்பட்டுக்கொண்டே இருந்தது
அது எப்பவும் அப்படித்தான்
கண்டகண்ட இடங்களிலெல்லாம்
தும்சித்துக்கொண்டே அலைந்தது
ஆனாலும் காகக்கலப்புக் குயிலுக்கு
எங்கேயும் எப்போதும்
எப்பவும் மரியாதை இருந்திருக்கவில்லை
அந்தக்குயிலை காகக்கலப்புக்குயில் இம்சிப்பதில்
தனக்கொரு இன்பம் என்றிருந்தது
அந்தக்குயில் எதற்கும் அஞ்சவில்லை
தன்கொள்கைமாற்றி
யாரையும் காட்டிக்கொடுக்க நினைக்கவில்லை
வீறுகொண்ட
அதன் இலட்சிய வேட்கை அணைந்துவிடவுமில்லை
அந்தக்குயில் கேட்டதெல்லாம்
தன் இனத்திற்கான சுதந்திர இருப்பினை மட்டுமே
இப்படியிருக்கிற ஒருநாளில்
குளத்தங்கரையோரம்
ஒரு குயில் சிதைந்து
அதன் சிறகு அறுபட்டுக் கிடப்பதாக அறிந்தபோது
அதன் இனமே கலங்கித்தான் போயிருந்தனர்
ஆனாலும்,
கொள்கைப்பிடிப்பில்லாத
சில காகக்கலப்புக்குயில்கள் மட்டும்
உண்மையிலேயே
அந்தக்குயில் இறந்து விட்டதென்று சொல்லி
சந்தோசித்து விழாவெடுத்து மகிழ்ந்து குலாவினர்
தூரதேசம் போன குயில்களும்
அயல்தேசத்துக் குயில்களும்
கண்ணீர் சொரிந்து மனமுலைந்து அழுதனர்
வேறுபல குயில்கள்
ஏக்கமுடனே நாளும் பொழுதைச் சபித்தனர்
கடைசியில்
உண்மையொன்று ரகசியமாகப் புரண்டோடி
குயில்களின் நெஞ்சு நனைத்து சீர்செய்தது
குளத்தங்கரையோரம் இறந்து கிடந்த குயில்
அது குயில் இல்லையாம்
குயில் வேடம்போட்ட கருங்கண்ணிக்காகம் என்று
இன்றும் பல குயில்கள்
அந்தக்குயிலின் குரலை கேட்கவே
மீண்டும் மீண்டும் ஆவலாக இருக்கின்றனர்
காணாமல்போன குயில்
மீண்டும் புதுராகமாய் இசைக்கும் என்றும்
அதன் இனத்திற்குப்
புதிதாய்யொரு இசை பிறக்கும் என்றும்
ஆனந்தமாய் இருக்கின்றனர்
ஏனென்றால்
குயில்களின் கூடுகள் அழிக்கப்படுவதையும்
குயில்களின் இருப்பிடங்கள் அளக்கப்படுவதையும்
பார்த்து பார்த்து
எத்தனைமுறைதான் செத்துக்கொண்டிருக்க முடியும்?
அந்தக்குயில் இனி எப்போது கூவும்!

அழகுச் சந்தை



எல்லோரையும் பார்த்துக் கொண்டிருக்கச் சொல்.
புழக்கடை வேலிக்குள்ளால் புகுந்து வருகிறேன்.
ஓய்வெடுக்க விரும்பும் வேளைகளில் நிலவு
தங்கிவிட்டுச் செல்லத் தெரிவு செய்கின்ற
வசதி வாய்ப்புகளுள்ள வானமாக அதை
வரைந்து வைத்திருக்கிறாய்
*

சொரிமண் சாப்பாசலில்
குமராகி நிற்கின்ற மலர் மரங்கள்
நீ தின்னக் கொடுத்த சோறு கறிகளால்
கொழுத்திருப்பதைக் கண்டு மகிழ்கின்றேன்
*

கல்யாண வீட்டின் சோடனை ஆர்ப்பரிப்புகளை
கைவசம் வைத்துக் கொண்டு பெருமை காட்டும்
பூவரசத்தின் காலடிக்கு வந்தது
கொஞ்சம் நிழல் பருகிவிட்டுப் போகத்தான்
*

பனிக் காலையிலும் இம் மழை மாலையிலும்
மண்ணின் தலைமுடி வாரி
பேன் பார்த்துக் கூந்தல் கட்டி
நேர்த்தி செய்யும்
உன் சுறுசுறுப்பைப் படித்து பட்டதாரியாகுமாறு
என் மனைவிக்கு புத்தி கூறுகிறேன்
*

உனது குடிசைக்கு மட்டும்
தன்னந்தனியாக வந்து போகும் காற்றை
சந்தித்துப் பேச ஒரு
சந்தர்ப்பம் வாங்கித்தர மாட்டாயா
*

இந்த ஊரில் பேய் பிடித்து
அலைகின்ற வெயில்
உனது வாசலைக் கண்டால் மட்டும்
பயந்தோடிப் போய்விடுகிறது
*

அழகுக் கண்காட்சிச் சந்தையொன்று
இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது குசினிக்குள்.
ஒவ்வொரு நாளும் புத்தம் புதிய ஆடைகள் தைத்து
சட்டி பானை சுண்டுக் கோப்பைகளுக்கு
அணிவித்துவிடுகிறாய்
*

முட்டியோடு பருகத் தந்த
பச்சைத் தண்ணீரின்
சுகாதாரச் சுவையை செலவளித்துவிடாமல்
நாவில் சேமித்தே வைத்திருக்கிறேன்
*

முற்றத்து மூலைக்குள்
ஒதுங்கி நிற்கின்ற
கயிற்று வாளிக் கிணறு என்னை
கொழுகைக் கம்பால் கொழுவி இழுத்தது.
நீருக்குள் துள்ளிக் குதித்திருந்த
என் முகத்தில்
மீன் குஞ்சுகளாய்
நீந்திச் சென்றன பால்யம்
*

குப்பைப் பைக்குள்
உனது வயோதிபத்தை
கழுவிக் கொட்டிவைத்திருந்தாய்.
வருடா வருடம் உன் வயது
குறைந்துகொண்டே வருவதனால்தான்
எழுபத்தொன்பதைத் தாண்டிய
ஆண்டிலும்
வாலிபக் குணம் உனக்கு
*

சுத்தம் மினுமினுங்கும் உன்
வீடும் வாசலும்
என்னை முழுவதுமாக
உறிஞ்சிக் குடித்துவிட்டதாகவே
உணர்கிறேன் கிழவி..
பலகைக் கதவோரம் சக்கையாகிக்
கிடக்குமென்னையும்
விளக்குமாறால் கூட்டி
துப்பரவு செய்துவிடாதே!



விட்டு விடுதலையாகி...

என் காலைச் சுற்றிய சர்ப்பமா
அன்றி
என் கழுத்தில் விழுந்த மாலையா...

வாழ்க்கையை மொழிபெயர்ப்பதில் தோற்றுப்போனேன்
சில தருணங்களில் வென்றேன்.
ஒத்துக் கொண்டே ஆகவேண்டும்
சாத்தியங்களுக்குச் சக்தியானது இதுதான்.
புருஷலட்சணமல்லவா – இன்று
ஸ்திரி இலட்சணமும் இதுவேதான்.

உள்ளேபுக ஆசை – காலச் சுழற்சியில்
மெல்ல வெளியேற விருப்பம் காதலைப்போலவே
ஆரம்பம் இனிக்கும்
நாட்செல்ல – பாதியிலே
மனம் பாய்ந்துவிடப் பார்க்கும்.

சுமை... சுமை... சுமை..
நிறைமாதக் கர்ப்பிணியின் இன்ப அனுபவமாய்...

நெருக்கீடு, குறுக்கீடு; நேர்வழியில் பயணித்து
மிடுக்கோடு மீண்டுவருவது மேன்மை
அதில் அபார வெற்றிதான்.
சந்தோஷம்...

ஓய்வு பெற்றபின் மதிப்புக் குறையுமாமே?
நல்லது – தம்
தேவைக்காக மட்டுமே தேடி மதிப்போர்
தேவையில்லை.

– கொற்றை பி. கிருஷ்ணானந்தன்

பிரார்த்தனை

செங்கதிரே !
அறிவின் சுடரே!
கிழக்கின் வாசலில் ஒளிர்கிறது
உனது வரவு.

வருக இளம் கதிரே!

வர்ணங்களின் மூலப்பொருளே.

கனவுகளில் கருவூலம் நீ

காற்று மழை பனி கூடு குளிர்
எல்லாம் ஆகிறாய்
எம் உயிரின் இருப்பே வணக்கம்

பொன்னால் பூமியை பூசுகிறாய் எழிலியே

கண்களில் அறிவாய் சுடர்
பொய்மை இருள்அகற்றி
மெய்ஞ்ஞான ஒளியேற்று
அகந்தை ஆணவம் பொறாமை வஞ்சகம்
மனித மனங்களில் நிறைந்தது
ஆதித்தா தீய வினைகளை தீயாக்கு
நலிந்த மனங்களில்
நம்பிக்கை விதை
துயரம் சுமந்தோர் தோள்களில்
வலுவேற்று
அறிவின் சுடராய் அகம் நிறை

சாயையின் பிரிய
சாய்தாலும் எழுதல் தானே
நீ சொல்லும் தத்துவம்...

– வேலணையூர் தாஸ்



நேசமிகு மகளுக்கு

ப்ரிய மகளே
பிரமிப்பூட்டும் வானிடையே
பெரும், பெரும் சிறகு கொண்டு நீ எழுகிறாய்.
ஆச்சரியமாகிறாய் நீ

நடுச்சாமம் கடந்த ஓர் இரவில்
உன்னை பெற்றுக் கொண்டதன் பெறுமதி உணர்கிறேன்
உனக்கான எச்சரிக்கையின் மேல்
என் பாசத்தை பதிவு செய்ய விழைகிறேன்
முகமிழத்தல் காலத்தின் விளிம்பில் நீ,

ஓநாய்களை அடையாளம் காண
வலிமை சேர்த்துக் கொள்
உனை நோக்கி குரைக்கும் சித்திர நாய்களை
உன் பேனா கொண்டு குதிரைகளாக்கு.
பயணங்களில் வந்தமரும்
உன் பக்கத்திருக்கை
கழுகுளின் விரல் விஷத்தை கருத்தில் கொள்
நிறம் இழந்து தவிக்கும்
மனித முகமூடிகளுக்கு நிறம் தீட்டி விடு
நிழற் சொற்களின் சூட்சுமத்தை கண்டறிந்து வைத்திரு
சுவடுகளின் திருப்பத்தில் நீ கண்ணாடியாகு
அடையாள விம்பங்களில் நீ அன்னியமாகு
உறுதியாய்
உன் முகம் உடையாது நீ இரு

உன்னை பற்றுதல் என் பயன்
இருந்த போதும்
என் பற்றுதல் உன் பாதையை மறிக்காது

–மதுஸா மாதங்கி

ஊமையின் பிரார்த்தனை

தரையிற் சிந்திய
நெல்மணியிலிருந்து பரவுகிறது
காற்றின் திசைக்குத் தலைசாய்த்து சலசலக்கும்
பச்சை வயலும் அதன் வாசனையும்

அணில் உமிழ்ந்து துப்பிய
வேப்பம் பழக் கொட்டையில் விரிகிறது
குட்டி நட்சத்திர வேப்பம் பூக்களும்
குளிர் நிழல் ததும்ப
நீளுகின்ற கிளைகளும்

சட்டமிட்டு தொங்கும்
உன் புகைப்படத்தின்
பின்னாலிருக்கிறோம்
எல்லையற்று செழித்த
அன்பெனும் அடர் வனமும்
அதற்குள் திசையின்றிப்
பறக்கின்ற நானும்

நிலவின் ஒளியோடு
குழைந்து வழிகின்ற
குழலிசையில் அமிழ்ந்திருக்கிறது
ஊமையின் பிரார்த்தனை அல்லது
கைகளற்றவனின் தொழுகை

இப்போது நான் துடைக்கின்ற
இந்த கண்ணீருக்குள் இருக்கிறது
ஒரு மகா சமுத்திரமும்
அதனைக் கடக்கின்ற வலியும்

– வி.யோகேஷ்

சாரதி

வான்கடல் வாய்திறந்து கூவத்தொடங்கிற்று
மழை மழை மழைவேண்டும் மழைவேண்டும்
என
கூவிக்கொண்டிருந்த ஊரின் குரல்
ஒடுங்கிப்போயிற்று
ஒரு சிறிய பாடகனை ஒரு பெரியபாடகன்
வந்து
மறைத்ததைப்போல மழை மழை

மழையா மழையா கேட்டீர்கள்
நான் மழையல்ல மழைப்பழம் என்று
குண்டு எறிகிறது வானம்
அதாவது சிறுவர்கள் விளையாடும்
"மாபிள்" உருண்டைகள்போல

நிலத்தில் விழும்போது கணீர்கணீர் என்று கேட்கிறது நிலம் காய்ந்து
இருப்பதனாலும்
துளி குண்டாகி உருள்வதனாலும்

பிள்ளைகள் பொறுக்கி எடுத்து விளையாட
துளிகள் சேகரிக்கின்றனர்
ஓடித்திரிந்து உம்மென்று "கார்" விட்டு

நானும் வரவா
நான் நல்ல சாரதி

கிழவியின் கூனில் விழுந்து மழைத் துளிகள்
கூன் நிமிர்ந்ததால்
கையடிக்கும் வானம்போல் இடிமுழக்கம்
கிழவி இங்கு நிலமாகும்

இந்தக் கிழவியின்
போன இளமையைத் திருப்பித் தர
வந்திருக்கும்
ஆயுர்வேதப் பரியாரிபோல மழை
வாயில் குழல்வைத்துப் பேசுகிறது

வாங்கிக் குடித்துக் குடித்து வாலிபம் ஓங்கும்
நிலத்திற்கு

அரும்பும் மீசைமாதிரி வெள்ளம்
வழிந்தோடத் தொடங்கியிருக்கிறது

இந்த மீசையை வளர்ப்பதா அல்லது வழிப்பதா
நிலம்தான் முடிவெடுக்க வேண்டும்
வழிப்பதாயின்
பளிச்சிடும் கூரிய கத்தியாம் மின்னல்
கைவசம் இருக்கிறது

எங்கள் தலைகளில் தீட்டுகிறது வானம்
கத்தி இன்னும் இன்னும் கூராக

செம்மஞ்சள் பொழுதின் வானம்

பூர்வீக வீட்டிலிருந்து சற்றுத் தொலைவுதான் எனினும்
நடந்தே செல்லத் தலைப்பட்டோம்
அரூப ஆவிகள் உலவும் தொன்ம பூமியென
வழி காட்டியவர்கள் சொன்ன கதை கேட்டு அச்சமுற்றாயா

எத்தனையெத்தனையோ தலைமுறைகளுக்கு ஊணிட்ட
வேலிகளற்ற தரிசு வயலது
பரந்து விரிந்த எம் பண்டைய பூமி
வண்டி கட்டிச் சென்று மூத்தோர் விவசாயம் பார்த்த
சருகுக் கோரைப் புற்கள் விரவிக் கிடக்கும் பயிர்நிலம்

என் ஞாபகத்திலொரு பூநெல்லிச் செடியிருக்கிறது
நிலா இரவுகளில் முற்றத்தில் பாய்விரித்து
தலைகோதிக் கதை சொன்ன அம்மா நட்ட செடி
பிஞ்சு விரல்கள் வலிக்க வலிக்க
மூக்கு நீண்ட பேணியொன்றில் நீரேந்தியூற்றி
நானதை வளர்த்து வந்தேன்
அந்நிய நகரத்தில் நீயும் நானும்
அலங்காரத்துக்காக வைத்திருக்கும் போலிச் செடி போலன்றி
அது நன்கு தழைத்திருந்தது
தேசம் விட்டகன்ற நாளில்

அக் காலத்தில் நிழலுக்கென்று வளர்த்திருக்கக் கூடிய
கொன்றையும் வேம்பும் இன்ன பிற மரங்களும்
குளிர்ச்சியைத் தந்திருக்கும்
கூடவே களைப்பறியாதிருக்க வாய்ப்பாடலும்
கூட்டுக் கதைகளும் வெற்றிலையும்
சிறு காயங்களுக்குச் சேற்று மண்ணுமென
உழுத பின் வாடிக் களைத்த மூத்தவர்கள்
அங்கமர்ந்து ஓய்வெடுத்திருப்பர்

இன்று
சட்டை கழற்றிச் சென்றிருந்ததொரு சர்ப்பம்
தூர்ந்துபோய் வான் பார்த்திருக்கும் பெருங்கிணறும்
பல பிரேதங்களைச் சுமந்திருக்கக் கூடும்

எம் மூதாதையரின் இதிகாச ரேகைகள் பரவிய நிலத்தை
பாதி விழுங்கிச் செரித்திருக்கின்றது கருவேலங்காடு
அநேகப் பெருவிருட்சங்கள் மரித்துவிட்டன இப்போது
வலிய துயர்களைக் கண்டு தளர்ந்து கிடக்கிறது பூமி



அதன் உடலிலின்னும்
சுருக்கங்களைத் தீட்டிக் கொண்டேயிருக்கிறது
கோடை காலத் தூரிகை

அத்தி மரத்தில் சாய்ந்து நின்றபடி
அந்திப் பேய் வெயில்
மஞ்சளாய் ஊடாடிய தரிசு வெளி பார்த்துச் சட்டென
""வான்கோ"வின் ஓவியமும் குரூர ஆயுதங்களும்
ஒருங்கே கலந்த நிலம்" என்றாய்
தங்க பூமியின் ஆகாயத்தில்
செஞ்சாயம் கலந்தது வேறெப்படியாம்

தமிழ் மரபுக் கவிதை



மரபு என்றால் என்ன? எமது வழி வழிவந்த வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள், விழுமியங்கள், தொடர்ச்சி யான வரலாறு, கலாசாரம் இவை இணைந்ததே மரபு எனப் பொதுவாகக் கூறலாம்.

இந்த மரபு நாம் விரும்பியோ விரும்பாமலோ எம்மால் தலைமுறை தலைமுறையாய் கைக்கொள்ளப்பட்டு வந்தது, கைக்கொள்ளப்பட்டு வருகிறது. வரும்.

எமது மரபு கீழைத்தேய மரபாகும். கீழைத்தேய மரபின் வாழ்க்கைமுறை உணர்வை அடிப்படையாகக் கொண்டது. இது இன, சமய, மொழி, சமூக ரீதியாக கட்டமைக்கப்பட்டது. அதில் பல தேவை யான, தேவையற்ற விடயங்கள் உள்ளன என்பது வேறு. ஆனால், மேற்கத்தைய மரபு என்பது அறிவை அடிப்படையாகக் கொண்டது. எதையும் சிந்தித்து விவாதத் திற்குள்ளாக்கி அறிவுபூர்வமாக அணுகும் தன்மையுடையது.

மரபுகள் ஒருபொதுவான தளத்தில் ஒரு நீட்சியை, தொடர்ச்சியைக் கொண்டி ருந்தாலும் எப்போதும் ஒரே மாதிரியாக இருந்ததில்லை. கால ஓட்டத்தில் புதியன புகுந்தும் பழையன கழிந்தும் மரபு தன்னைப் புதுப்பித்துக் கொண்டே நகர்ந்தது; நகர்ந்து கொண்டிருக்கிறது, நகரும். எங்கள் மண்ணின் வரலாற்றுத் தொடர்ச்சி தலைமுறை தலைமுறையாக வழங்கி வந்து எங்கள் மண்ணிற்குரிய மரபாகி இன்றும் இருக்கிறது.



ஒளிப்படம் - யாதுநிகன்

த.ஜெயசீலன்

அவ்வாறான எங்கள் மரபின் ஒரு கூறாக எங்கள் கவிதை மரபும் திகழ்கிறது. இற்றைக்கு சுமார் 2000 ஆண்டுகளுக்கு மேலான மிகநீண்ட இலக்கிய அல்லது கவிதைமரபு தமிழர்களாகிய எங்களிடம் உண்டு. இது எங்கள் தலைமுறை உரிமையான பாரம்பரியச் சொத்து. எமக்குக் கிடைத்த விலைமதிப்பற்ற பொக்கிஷம். தமிழில் ஆரம்ப

காலத்தில் இருந்து இலக்கியத் துறையில் கவிதையே முக்கியமானதாக திகழ்ந்ததால் கவிதை மரபையே இலக்கிய மரபாகவும் காணலாம்.

இந்த கவிமரபு ஆரம்பத்தில் இருந்தே செய்யுளை தன் ஊடகமாகக் கைக்கொண்டது. செய்யுள் என்பது வெவ்வேறு யாப்புக்களால் ஆக்கப் பட்டிருப்பது. இப்படி இப்படித்தான் யாப்பின் வரையறை இருக்கவேண்டும் என்ற கறாரான நிபந்தனைகளுக் குட்பட்டது.

கவிதை மட்டுமல்ல. சோதிடம், தத்துவம், மருத்துவம் என்பன கூட செய்யுளை ஊடகமாகக் கொண்டே தோன்றியிருந்தன. அச்சு ஊடகம் இல்லாத தொன்மையான காலத்தில் செவிவழியில் செய்யுளை மனனம் செய்வதன் மூலம் அவ்வவ் விடயங்களை ஞாபகத்தில் வைத்திருந்து அடுத்தடுத்த சந்ததி களுக்குக் கடத்துதற்கு செய்யுள் ஊடகம் உதவிற்று. கவிதையும் அக்காலத்தில் செய்யுளைத் தனது பயண ஊடகமாகக் கொண்டிருந்தது. செய்யுள் என்பது கவிதையல்ல. என்றாலும் காலத்துக்கு காலம் தேவைக்கு ஏற்ப செய்யுள்களின் வகைகள், அதன் வடிவம் என்பன மாற்றத்துக்கு உள்ளாகி எமது கவிதையைத் தாங்கி வந்திருக்கிறன. சில செய்யுள் வடிவங்கள் சில காலத்தில் மேலோங்கியிருந்தன.

உ–ம்–:

சங்ககாலம் - **அகவற் பா**

சங்கமருவிய காலம் அல்லது கலித்தொகைக் காலம் - **கலிப்பா**

பல்லவர் காலம் அல்லது தேவார காலம் - **சந்த வகைகள், விருத்தப் பாக்கள்** என

கவிதையின் ஊடகமான செய்யுளுக்குரிய யாப்புகள் காலாகாலத்தில் மாற்றத்திற்குள்ளாகி வந்திருக்கின்றன. எப்படி யாப்புகளில் வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு யாப்பு வகைகள் பிரபலம் பெற்றிருந்தனவோ அதேபோல எதைஎதைக் கவிதையில் பாடவேண்டும் என்பதும் அதாவது பாடுபொருளும் காலாதி காலத்தில் வேறுபட்டுக் கொண்டே வந்துள்ளது.

கவிதை என்பது தனித்துவமான ஒரு கலை வடிவம். கலையின் அதிஉச்சமான சாத்தியப்பாடு களைக் காட்டுகிற, மிகமிகச் செம்மையான, மொழியின் அரசியான, ஒரு முக்கியமான கலைவடிவம். உலகி லுள்ள அனேகமான எல்லா மொழி இலக்கியங்களிலும் கவிதையே உச்சமான கலைவடிவமாக இருந்திருக் கிறது என்றால் அது மிகையில்லை.

ஒரு விடயத்தை, ஒரு காட்சியை, ஒரு சம்பவத்தை, ஒரு அனுபவத்தை, ஒரு நுண்உணர்வை, ஒரு சிந்தனைப் பொறியை (flash) அழகோடும், நேர்த்தியோடும், பேசுகிற அதே நேரம் அதனூடு ஒரு அறத்தை, உண்மையை, வாழ்வியலின் தாற்பரியங் களில் ஒன்றை அல்லது பலதைக் காட்டுவதாக அமைவது கவிதை எனலாம். மேலும், இவ்விடயங்களை ஒரு புதிய, முன்பில்லாத எவரும் நினைத்திராத கற்பனையின் மூலம், வெவ்வேறு உத்திமுறைகளைக் கையாள்வதன் மூலம், இரசிகர்களுக்கு வாசகர்களுக்கு புதிய புரிதலை, "இதை நாம் இப்படிப் பார்க்க வில்லையே" என்ற ஆச்சரியத்தை ஏற்படுத்தி அவர் களின் உணர்ச்சியைக் கிளறி, பின் அதை ஆற்றுப் படுத்தி, ஏதோ ஒரு பரவச நிலைக்கு, மனப்பாங்கு மாற்றத்துக்குக் கொண்டு செல்வதும் கவிதையின் இயல்பு ,பண்பு, சமூகப் பொறுப்பு எனலாம்.

கவிதை ஒரு கண்டுபிடிப்பு. கவிஞனும் ஒரு வகையில் விஞ்ஞானிதான். இயற்கை, உலகம், வாழ்க்கை, பிறப்பு இறப்பு, இவ்வாறான இன்னும் இன்னும் எத்தனையோ ஏற்கெனவே மறைத்து வைத்த எண்ணற்ற புதிர்களை தன் நுண் அவதானிப்பில் கண்டு, அவற்றைத் துலக்கி, அவற்றின் சூக்குமங்களை விடுவித்து, சாதாரணர்களும் புரிந்து தெளிவு கொள்ளக் கூடியதாக, அவர்களுக்குக் கலங்கரையாக கவிதை விளங்க வேண்டும்.

இதுவே கவிதைக்கான அடிப்படை. இதற்கு மேலாக உவமானம், உவமேயம், உருவகம், படிமம், போன்ற அணிகளின் பிரயோகம் கவிதையின் அழகை, சுவையைப் பெருக்கும். எதுகை மோனை போன்ற தொடை வகைகள் கவிதையின் ஓசை ஒத்திசைவை மேம்படுத்தும். யாப்பு என்பது ஓசையை அடிப்படையாக கொண்டது. எத்தனையோ யாப்புக்கள், சந்த வகைகள், இன்று வழக்கொழிந்துவிட்டன. **உ–ம்–:** நான்கு பாவகைகளில் ஒன்றான **வஞ்சிப் பா** இன்று அதிகம் பயன்படுத்தப்படாமலே மறைந்துவிட்டது. எத்தனையோ **சந்தவகைகள்** இன்று பயன்படுத்தப்படுவதே இல்லை. காலத்துக்கேற்ப, சொல்முறைக்கு இலகுவான, எளிமை யான யாப்பு வகைகளை, சந்த வகைகளை பயன்படுத்தக் கூடிய நிலையே என்றும் காணப்பட்டிருக்கிறது. இந்த யாப்பைத்தான் பயன்படுத்த வேண்டும் என்ற கட்டுப்பாடு களை எந்த இலக்கண நூலும் விதித்திருக்கவில்லை. ஆனால் சில யாப்புகளுக்கு தனித்தன்மையான ஓசைகள் உண்டு. பொருத்தமான இடங்களில் அவை பயன் படுத் தப் படும் போது கவிதையின் கனதி அதிகரிக்கும்.

கவிதையில் உள்ளூற இருக்கின்ற ஓசைநயம், ஓசைஒழுங்கு கவிதைக்கு அவசியமானது. இது இயல் பாகவே சொற்களுள் உள்ளுறையும் ஓசை நயத்தின் (அசைகள்) தொடர்ச்சியாக பிறப்பது. இது உரைநடை யில் காணப்படுகிற தட்டையான மிகமிக குறைவான ஓசை ஒழுங்கோ, அல்லது சங்கீதத்தில் இசையில் உள்ள மிகச் செறிவான ஓசை ஒழுங்கோ அல்ல. இவை இரண்டுக்கும் இடைப்பட்ட தனித்துவமான ஓசை. இதுவே கவிதையின் இயல்பான ஓசைநயம் ஆகும்.

மொழியின் சொற்கள் எழுத்துக்களால் ஆனவை. தமிழ் எழுத்துக்கள் உயிரெழுத்து, மெய் எழுத்து(ஒற்று), உயிர்மெய் எழுத்து ஆகிய எழுத்து வகைகளால் ஆனவை. சொற்கள் ஒவ்வொன்றும், அவற்றின் எழுத்துக்கள் இணைந்து தோன்றும் இரு வகையான **அசைகளால்**; ஆனவை என்பது மிகமிக வியப்பிற்குரியது. எந்த ஓர் சொல்லுக்குள்ளும் இந்த அசைகளால் ஆன இயல்பான ஒலி பொதிந்துள்ளமை

மிகப்பெரிய ஆச்சர்யம் தான்.

எழுத்து----அசைகள்----சொல் என சொற்கள் உருவாகின்றன.

இரு வகையான அசைகள் தான் உலகில் உண்டு. சகல மொழிச் சொற்களும் இவ் இரு அசைகளால் ஆனவையே. இது இசைக்கு ஏழு சுரம் போன்றது.

"நேர்" அசை---

1.தனிக்குறில் உ-ம் -: "த"

2.தனிநெடில் உ-ம் -: "தா"

3.குறில் உடன் ஒற்று உ-ம் -: "தன்"

4.நெடில் உடன் ஒற்று உ-ம் -: "தான்"

"நிரை" அசை---

1.குறில் உடன் குறில் உ-ம் -: "கல"

2.குறில் உடன் குறில் உடன் ஒற்று உ-ம் -: "கலம்"

3.குறில் உடன் நெடில் உடன் ஒற்று உ-ம்-: "கலாம்"

உ-ம் -: "வருகிறான்" எனும் சொல் - இது இரு அசைகளால் ஆனது. **"வரு"**, **"கிறான்"** என இச்சொல்லை ஓசை அடிப்படையில் பிரிக்கலாம்.

இவை அசைகளின் படி - **நிரை நிரை**

இவ்வாறு சகல சொற்களும் அசைகளால் ஆகியவையே. கவிதைகளில் வரும் சொற்களைச் **சீர்கள்** என்று அழைப்பர். சீர்கள் இருஅசைச் சீர்களாக அல்லது மூன்றசைச் சீர்களாக காணப்படலாம்.

ஈரசைச்சீர்--- "வந்தான்" ---"வந்" "தான்"

இது அசையாக..."நேர் நேர்"

மூவசைச்சீர் ---"வந்திருப்பான்"---"வந்" "திருப்" "பான்"...இது அசையாக - "நேர்" "நிரை" "நேர்"

இந்த ஓசை சீராக ஒழுங்குபடுத்தப்படும் போது கவிதைக்குரிய உயிர்ஓசைப் பண்பு உருவாகிறது. சீர்கள் இணைந்து கவிதையின் ஒரு mbயைத் தோற்று விக்கிறன.

எழுத்து---அசை---சீர்(சொற்கள்)---அடி

இதனை **தளைகள்**;(joints) மேலும் செம்மைப் படுத்தும். **தளைகள்** என்பவை அடுத்த அடுத்த சீர்களுக்கிடையில் ஏற்படும் ஓசை அதிகரிப்பு, அல்லது குறைவு என்பவற்றைக் குறைத்தோ கூட்டியோ செம்மைப் படுத்துபவை. சரியான தளை ஒழுங்கிலுள்ள அதாவது "தளை தட்டாத" கவிதை **அடியில்**, செப்பமான சீரான ஓசை ஒழுங்கை நம் காதாலேயே கேட்டுண ரலாம். தளை தட்டிய கவிதை அடி, சுருதி பிசகிய இசையை ஒத்தது. அவ்வாறான கவிதையைக் கேட்கும் போது பிசிறலைத் தெளிவாக நாம் கேட்டு உணர முடியும். கவிதையைக் கேட்கும்போதே தளைதட்டு கிறது என்ற கூறும் கவிஞர் பெருமக்கள் இன்றும் உள்ளனர்.

இது மிகமிக நுட்பமானது என்றால் மிகை யில்லை. **உ-ம்:- கட்டளை கலித்துறை** என்னும் யாப்பில் சரியாக (தளைதட்டாமல்) எழுதப்பட்ட ஒரு கவிதை அடியில் 16,17 உயிர்எழுத்துக்கள் வரும் என(மெய் எழுத்து கணக்கில் எடுக்கப்படுவதில்லை) இலக்கண நூல்கள் கூறுகின்றன. இது மிகப்பெரிய அறிவியல், கணித நுட்பம். எழுத்துக்களின் ஒலியளவைக் கணித்து அவை சேரும்போது தோன்றும் ஓசையைக் கொண்டு ஒரு கவிதை அடியில் எத்தனை எழுத்துக்கள் வரும் எனக் கூறிவிடுகின்றன.

பட்டினத்தார் ஒரு வணிகர். பெரும் படிப்பாளி அல்ல. யாப்பிலக்கணம் கற்றவர் அல்ல. திடீரென்று ஞான நிலை பெற்றபின அவர் பாடிய பாடல்கள் அல்லது கவிதைகள் மிக நேர்த்தியான கட்டளைக் கலித்துறை, வெண்பா, அறுசீர் விருத்தங்களாக காணப்படுகின்றன. இவர் சீர், தளை அறிந்து இவற்றைப் பாடவில்லை. ஓசைச் செம்மையுடன் பாடிய அவரின் பாட்டுகளின் யாப்புகளில் எந்தப் பிசிறும் இல்லாதுள்ளமை இரசனைக் குரியது.

அடுத்தடுத்த சீர்கள் தளைகளூடு செம்மையாக இணையும் போது காதுக்கினிய ஓசைப் பண்பு ஊற்றெடுக்கிறது. இந்த ஓசை மனத்தை வசியப்படுத்தும் அதே நேரம் மனதில் இலகுவாகப் பதிந்து மனனமாகி விடுகிறது. செம்மை குறையும்போது அல்லது இவை பற்றி அக்கறை எடுக்கப்படாமல் விடப்படும்போது இரைச்சல் அல்லது இயல்பு பாதிக்கப்பட்ட சத்தம் உருவாகிறது.

எழுத்து, அசை, சீர், அடி .... என ஒரு சீரான ஒழுங்கு தொடரும்போது கவிதையின் கவிதைக் கென்றான ஓசை உருவாகிறது. இதனையும், இதன் வகைவிரிவுகளையும் யாப்பு இலக்கணம் எடுத்துக் கூறுகிறது. தொல்காப்பியம், யாப்பருங்கலக் காரிகை போன்ற பழந் தமிழ் நூல்கள் தமிழ்க் கவிதை யாப்பைப் பற்றி மிக விரிவாக ஆழமாகப் பேசுகின்றன. விரிவஞ்சி சுருக்கிக் கொள்கிறேன்.

ஒரு கவிதையின் ஓசைச் சிறப்புக்கு மேற் சொன்ன அசை, சீர், தளை, தொடை என்பன அவசியம் என்கின்றன இலக்கண நூல்கள். தொடைகள் யாப்பின் கூறுகளாகும் இதில் எதுகையும் மோனையும் அடங்குகின்றன.

எதுகை என்பது அடுத்தடுத்த எழுத்துக்கள் ஒன்றாக உள்ள சொற்கள்(சீர்கள்)

உ-ம் - 1. என்றன், உன்றன். சென்றன்.

2. கல்லு, வில்லு, பொல்லு.

மோனை சீர்களின் முதல் எழுத்து வரிசை தொடர்ந்து வருவது.

உ- ம்- 1. பாட்டைப்போல் ஆச்சரியம் பாரின் மிசை இல்லையடா

இங்கு முதல், மூன்றாம் சீரில் உள்ள "பா" மோனை.

2. ஓசைதரும் இன்பம் உவமையில்லா இன்பமன்றோ

இங்கு முதல், மூன்றாம் சீரில் உள்ள "ஓ" "உ" மோனை.

தமிழ் யாப்பில் பல வகைகள் உள்ளன. அடிப்படையாக

பாவகை

1.**அகவல்பா** அல்லது **ஆசிரியப்பா** ஒருவர் பேசுவது போன்றது - அகவல் ஓசையுடையது. c-k; - கந்தசஸ்டி கவசம்

2.**வெண்பா** - இருவருக்கிடையேயான உரையாடல் போன்றது - செப்பல் ஓசையுடையது. உ-ம்-நளவெண்பா

3.**கலிப்பா** தாழ்ந்தும் உயர்ந்தும் செல்லும் ஓசையுடையது - துள்ளல் ஓசை. c-k;- பாரதியின் குயில்பாட்டு

4.**வஞ்சிப்பா** -தாழ்ந்த ஓசை தூங்கல் ஓசை

பாவினம்: மேற்சொன்ன பாவகைகள் ஒவ்வொன்றும் மூன்று இனங்களைக் கொண்டிருக்கின்றன.அவை

- **தாழிசை**
- **துறை**
- **விருத்தம்**

மேற்சொன்ன ஒவ்வொரு பாவகையும் அப் பாவினங்களால் வெவ்வேறு வகையான யாப்புகளாக பெருகும்.

அகவல்பா - நேரிசை ஆசிரியப்பா, நிலை மண்டில ஆசிரியப்பா

வெண்பா - இன்னிசை வெண்பா, சிந்தியல் வெண்பா, கலிவெண்பா

கலிப்பா - வெண் கலிப்பா, கட்டளைக் கலித்துறை, கட்டளைக் கலிப்பா

இவற்றை விட சற்று ஓசைப்பண்பு கூடிய **சிந்துகள், கண்ணிகளும்** தமிழில் வழக்கத்திலுள்ளன.

சிந்துக்கள் - நொண்டிச்சிந்து, சமநிலைச்சிந்து, காவடிச்சிந்து

கண்ணிகள் - கிளிக் கண்ணி

விருத்தப்பா - இது வடமொழியில் இருந்து தமிழுக்கு வந்தது என்பர். வில்லிபுத்தூரரின் பாடல்கள் விருத்தங்கள். கம்பன் தனது கம்ப இராமாயணத்தில் சுமார் 60 வகையான விருத்த வகைகளைக் கையாண்டிருக்கிறான் என்பர். தொல்காப்பியமானது யாப்புக்கள் எண்ணற்றுப் பல்கிப் பெருகக் கூடியன என்பதைக் காட்டியிருக்கிறது. உண்மையில் ஒவ்வொரு சீரின் அசைகளையும் மாற்றும் போது வேறு வேறு ஓசை லயப்பட்ட யாப்புக்கள் உருவாகும். இவ்வாறு எண்ணற்ற யாப்புகள் புழக்கத்திலுள்ளன. அருணகிரி நாதரின் திருப்புகழ் கவிதைகள் தாள வாத்தியங்களின் தாள லயத்தை நேரடியாக சந்தங்களாக்கி அமைக்கப் பட்டுள்ளன.

உ-ம்-

தாளவாத்திய ஓசை: டண் டடடண் டண்டடடண் டண்டடடண் டண்டா

சந்தம்: தானனனனத் தானனனனத் தானனனனத் தானா

பாடல்: ஏறுமயில் ஏறிவிளையாடுமுகம் ஒன்று.

கவிதையின் ஓசைச் சுவை இன்று அவசியமில்லை என்றும், அச்சு யுகம் வந்ததால் கவிதையின் ஓசையை இரசிக்கவோ, சுவைக்கவோ, அதை மனனம் செய்யவோ வேண்டியதில்லை என்றும் புதுக்கவிதையாளர்கள் கூறுகிறார்கள்.

கவிதையிலுள்ள இந்த இயல்பான ஓசைச் சுவையை ஏன் இன்று நாம் இரசிக்கக் கூடாது? ஏன் புறக்கணிக்க வேண்டும்? அது ஒன்றும் தீட்டானது அல்லவே. கவிஞர் முருகையன் சொன்னது போல **நாம் இன்று காதுகளை அல்லது செவிப்புலனை கழற்றி வைத்து விட்டோமா? இல்லையே!** நாளை எங்கள் தலைமுறையினர் செவிடர்களாகச் சபிக்கப் பட்டிருக்கிறார்களா? இல்லையே! சிந்தனையுகம் என்று விட்டு சங்கீத இசையை புறக்கணித்து விட்டோமோ? இல்லையே!

புதிய சிந்தனைகள், புதிய விடயங்கள், புதிய கோட்பாடுகள், எமது மொழிக்குள் கொண்டுவரப்பட வேண்டும். சமகால அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்களுக்கேற்ப கலை மாற்றங்களை நாமும் வரவேற்றேயாக வேண்டும். தற்கால உலகின் நவீன இலக்கிய செல்நெறியை, போக்குக்களை நாம் கட்டாயம் அறிந்திருக்கவே வேண்டும். அவற்றை இன்றைய நமது படைப்புக்களில் வெளிப்படுத்தவும் வேண்டும், எம்மிடம் உள்ள இக்காலத்துக்கு ஒவ்வாதவற்றை விலக்கி புதியவை தேடி நாம் முன்சென்றே ஆக வேண்டும். இதில் எந்த மாற்றுக் கருத்துகளும் யாரிடமும் இல்லை.

அதற்காக தமிழ்க் கவிதையின் தனித்துவமான பண்புகளை நாம் ஏன் முற்றாக புறக்கணிக்கவேண்டும். இவற்றைத் தவிர்ப்பதே மேதமையென்று புதுமை பேச வேண்டும்?

ஏனைய மொழிக் கவிதைகளிலும் ஏதோ ஒரு ஓசை, ஒத்திசைவு, சந்தம் உள்ளது.

உ-ம் -twinkle twinkle little star...

என்ற ஆங்கில கவிதையை நாம் அறிவோம்.

இது "தனனத் தனனத் தானானா" என்ற சந்தக் கட்டமைப்பைக் கொண்டது. இது தமிழில் உள்ள **ஆறு சீர் விருத்த வகையைச்** சேர்ந்தது. பொதுவாக ஆங்கிலத்திலுள்ள ஓசைவயப்பட்ட கவிதை அடியின் இறுதிச் சீரில் எதுகை அமைந்திருக்கும். இதே போல சிங்களத்திலுள்ள சிந்துகளிலும் ஒரே வகையான எதுகைகள் ஒவ்வொரு அடிகளின் இறுதியிலும் இடம்பெறுவதைக் காணலாம். ஹைக்கூக்களுக்கும் அவற்றின் மூன்று அடிகளும் ஒரு அளவிலேயே அமைந்திருக்கும். ஆக எல்லா மொழிகளிலும் கவிதையின் ஓசைப் பண்பு என்பது ஏதோ வகையில் இருந்தே இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

கவிதைக்கு இயல்பான ஓசை ஒழுங்கு உண்டு என்பதை வலிந்து மறுத்து, அது இதயத்துக்குரியது அல்லது உணர்ச்சிக்குரியது உயிப்பானது என்பதை மறுத்து, அது இயங்கும் அசையும் பிறரைப் பிணிக்கும் அல்லது தொற்றும் தன்மையுடையது என்பதை மறுத்து, அதை வெறும் தட்டையான சிக்கல் மிகுந்த, புரிந்து கொள்ள முடியாத, மூளைக்கு, அறிவுக்குரிய, வரட்சியான, உயிர்ப்பிலாத, இருண்மை மிகுந்த, இறுகிய

ஒரு பிரதியாக முன்னிறுத்தும் கைங்கர்யம் நடந்து வருகிறது. ஆரம்பகால புதுக்கவிதையாளர்கள் ஒரு சீரான கவிதை அடியில் வலிந்து ஓரிரு சொற்களைச் சேர்த்து, அல்லது தவிர்த்து வேண்டுமென்றே ஓசை ஒத்திசைவு வராமல் பார்த்துக்கொண்டதையும், கவிதை வரிகளை துண்டுதுண்டாக உடைத்து எழுதி ஒழுங்கு வராமையை எண்பிக்க முயன்றதையும் கூறலாம்.

தமிழ் கவிதை மரபின் இடைப்பட்ட ஒரு காலத்தில் கவிதை அர்த்ததமற்ற சோடனைகளை, வார்த்தை ஜாலங்களை, வெற்று ஓசை வெளிப்பாடு களைக் கொண்டு அரசவைகளிலும், அந்தப்புரங் களிலும், பண்டித பவனிகளிலும் முகமிழந்து கிடந்தது என்பது உண்மையே. அது அந்தக் காலத்தின் கோலம், அல்லது அக்காலக் கவிஞர்களின் ஆற்றலின்மையின் சோகம். அது கவிதையின், கவிதை மரபின் குறை பாடல்ல. ஏனென்றால் எமது கவிதை மரபில் மிகச் சிறந்த, உலக இலக்கியங்களில் காணக்கிடையாத, கவிதைகளுக்கான எண்ணற்ற உதாரணங்கள் காணக் கிடக்கின்றன.

சந்தங்கள், யாப்புக்களில் இன்றைய காலத் துக்கும், இன்றைய பாடுபொருளுக்கும் பொருத்த மானவை எவை என்ற புரிதலுடன், இயல்பான கவிதைக் குரிய ஓசையொழுங்குடன் கூடிய, சொற்சிலம்பங்கள், அவசியமற்ற சந்தவகைகளைத் தவிர்த்த, உலக ஓட்டத்துடன் புதிய விடயங்களை, மாற்றங்களை உள்வாங்கிய, எமது வாழ்க்கை முறைமை, எமது மண்ணின் தனித்துவமான வாசம் என்பவற்றை கைவிடாத, ஆரம்பத்தில் நான் சொன்ன கவிதைக்குரிய அடிப்படை இயல்புகளை உடைய கவிதைகள் எழுதப் பட்டால் அவை என்றென்றும் வாழும்.

கவிஞர் முருகையன் ஒருமுறை சொன்னார் **"கவிதை மரபுக்கவிதையாகவும் இருக்க வேண்டும் அதே நேரம் புதுக்கவிதையாகவும் இருக்கவேண்டும்"** என்று. இதன் கருத்து யாதெனில் கவிதை எங்கள் மரபுவழிவந்த கவிதை இயல்புகளை, வாழ்க்கையின் சாரங்களை, சொந்த முகங்களை கொண்டிருக்க வேண்டிய அதே நேரம் காலங்காலமாகப் பேசப்பட்ட புளித்துப்போன விடயங்களை உவமான உவமேயங்களைத் தவிர்த்து புதுமையான விடயங்களைத் தேடிப் பேசுவதாக, புதிய அணுகுமுறைகள், உத்திகளை, புதுமையான கற்பனை களை, புதுமைமிகு உவமான உவமேயங் களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்பதே.

இன்று மரபு மீறுவது என்பது **ஓசையைச் சந்தத்தைப் புறக்கணிப்பது மட்டுந்தான்** என்று பலர் கருதுகிறார்கள். உண்மையில் மரபை மீறுவது என்பது எங்கள் தலைமுறை உரிமையின் தனித்துவத்தைச் சிதைப்பது என்றே பொருள் கொள்ள வேண்டும். இன்றைய நவீன இலக்கியங்கள், நவீன கவிஞர்கள் ஏதேதோ வெளிநாட்டு இறக்குமதிச் சிந்தனைகளை, "இசங்களை" தாமும் படியெடுக்கிறார்கள். அந்த அந்த நாட்டுச் சூழலுக்கு, மரபுக்கு, நாகரிகத்துக்கு, கலாசார வாழ்க்கை முறைகளுக்குரிய விடயங்களைச் சம்பந்தமேயில்லாமல் இங்கே தங்கள் படைப்புகளில் புகுத்துகிறார்கள். எங்கள் மண்ணின் மரபு வாழ்க்கை முறைகளுக்கு தொடர்பே இல்லாத விடயங்களை எம் வாழ்க்கை விழுமியங்களையே கேள்விக்குள்ளாக்கும் விதத்தில் தம் படைப்புகளில் செருகுகிறார்கள். "இவ்வாறான படைப்புக்களே படைப்புக்கள் ஏனையவை படைப்புகளே இல்லை" யென்றும் அலட்சியப்படுத்தி ஒதுக்குகிறார்கள்.

இன்றைய உலகமயமாதற் பின்னணியில் தனித்துவங்களை, அடையாளங்களை அழித்து விழுங்கி ஏப்பமிட முனையும் பல்தேசிய நிறுவனங்களின் பரந்த சிலந்திவலை அரசியலை, மாயையை அறியாமல் எம் மரபுகளை நாமே கேலிசெய்து இழிவுக்குள்ளாகும் தந்திரங்களுக்கும் எந்தவித சமூகப் பொறுப்புணர்வு மின்றி எம்மவர்கள் எடுபட்டும் போகிறார்கள். இவர்கள் இதன் மூலம் பெற்றுக் கொள்வது சிறு அங்கீகாரத்தை யும் சில விருதுகளையுந்தான். வேறெதையுமில்லை. இதனால் விளையும் பாதிப்புக்கள் தனித்துவ அடை யாளங்களைக் காக்க, வாழவைக்க முயலுவோரைத் தான் சென்று சேரும்.

எமது மண்ணோடு ஒட்டாமல், எமது வாழ்வோடு ஒட்டாமல், அதிமேதாவித்தனமாக சிந்திப்பதாக கூறிக் கொண்டு இருண்மை மிக்க, இலகுவில் புரிந்து கொள்ள முடியாத, பாலியல் வக்கிரம் மிகுந்த, படைப்புகளை **தம் பரவச நிலையிலிருந்து** படைப்பதாக இவர்கள் பெருமிதம் கொள்கிறார்கள். எப்படி மரபுரீதியான இலக்கியங்களை படிக்க **உரையாசிரிர் தேவை** என்று ஒருகாலத்தில் மரபிலக்கியங்களை புறக்கணித்த இவர்களே, தமது படைப்புக்கள்; **தீவிர வாசிப்பால் மட்டும்தான் புரிந்து கொள்ளப்படும்** என்று அபத்தமாக பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள்.

வாழ்வியல் யதார்த்த உண்மைகளைத் தவிர்த்து விட்டு, தாம்பிறந்த மண்ணில் மிதிக்காமல், அந்தர அரியணைகளை உருவாக்கி, தம்மையொத்த ஒருசிலரை வட்டஞ் சேர்த்துக் கொண்டு தங்களுக்குள் தாங்கள் முதுகு சொறிந்து கொண்டு அல்லது முட்டி மோதிக்கொண்டு நெஞ்சுக்கு நேர்மையின்றி பொய்யாக போலியான விடயங்களை எவரையோ திருப்திப் படுத்தும் பொருட்டு எழுதிச் செல்கிறார்கள்.

எங்கள் மரபுகளை முதுசங்களைப் பற்றி எள்ளளவும் அறியாமல், அவை பற்றி அறியவும் முனையாமல் சொந்த விருப்பு இரசிப்புகளை வெளிக் காட்டாது தாமே நவீனர்கள் என்று சொல்லித்திரி கிறார்கள். எமது பழைய கட்டடங்களிலும், நாற்சார் வீடு களிலும், மரத் தளபாடங்களிலும், பித்தளைச் சாமான் களிலும், கோயிற் சிற்பங்களிலும், மர வாகனங்களிலும் உள்ள மரபுரிமை பாதுகாக்கப் படவேண்டும் என்று குரல்கொடுக்கும் பலர் எங்கள் கவிதையில் கலைகளில் மரபு பேணப்படுவதைத் தீட்டாகவே கருதுகிறார்கள்.

எமது கவிதை மரபு என்ற ஒன்றை நவீன கவிஞர்கள், விமர்சகர்கள் என்று சொல்லிக் கொள்வோர் ஏற்றுக் கொள்வதே இல்லை. "அதில் ஒன்றுமே இல்லை அனைத்தும் வெறும் குப்பை" என்பதே அவர்களின் வாதம். எத்தனை ஆயிரம் ஆண்டுகளாகக் காலத்தை

வென்று இன்றும் உலகுக்கு வழிகாட்டி நீதிசொல்லி உயிர்ப்போடு வாழும் அவை அனைத்தும் அற்பங்கள் என்பதே இவர்களின் அபிப்பிராயம். எங்கள் தொன்மையான விடயங்களை தொடர்ந்து இடையறாது கற்றுத் தேர்வதிலுள்ள பஞ்சி, பொறுமையின்மை என்பன இலகுவாக இவர்களை புதுக் கவிஞர்களாக, விமர்சகர்களாக மாற்றி விடுகிறதோ தெரியவில்லை.

எமது மரபுகளில், எமது கலை வடிவங்களில், யாப்புக் கவிதை வகைகளில் தேவையற்ற காலங்கடந்து போன, தள்ளிவைக்க வேண்டியவை உள்ளன என்பதில் எந்த ஐயங்களும் இல்லை. எமது மரபுக் கவிதை வரலாற்றின் இடைப்பட்ட ஒரு காலத்தில் கடுமையான சந்தங்களின் இரும்புப் பிடியில் சிக்கிக்கிடந்தது என்பதும், சமூக நலன் பாடாமல் அரசர்களின் அந்தப் புரங்களில் அழகுப் பொம்மைகளாக அவை கிடந்தன என்பதும், சாமானியனின் பாமரனின் வாடி வதங்கிய தோள்வலியைப் பாடாமல் சள்ளை வைத்த அரசர்களின் தோல்வி வலியைப் பாடின என்பதும், சமூக அவலங்களையும் அடக்கு முறைகளையும் பேசாமடந்தைகளாக பாராமுகத்தோடிருந்தன என்பதும் மறுக்க முடியாத உண்மை. ஆனால், இவற்றுக்கான தீர்வுகள் மாற்றங்கள் எங்களிடமிருந்து வரவே இல்லை என்றும் சொல்வதற்கில்லை. ஆனால் அந்நிய இறக்குமதிகளினால் தான் இவற்றை தீர்க்க முடியும் என்று செல்லும் இவர்களின் நிலையும் மாறுவது போல் தெரியவில்லை.

எந்தவித அவசியமுமின்றி வடிவங்களை உடைத்தல் அல்லது தகர்த்தல் என்ற ஒரேயொரு கொள்கையுடன கிளம்பிய பின்நவீனப் படைப்புகள், இறுதியில் ஓர் வடிவைச் சிதைத்து இன்னொரு வடிவத்தைப் பெற்றமையே யதாரத்தமாகியிருக்கிறது.

உ-ம் - சிறுகதையின் வடிவைச் சிதைக்கிறோம் என்று வந்தவர்கள் எவரோ எங்கோ செய்ததைப் பார்த்து எமது சமூகத்தோடு ஒட்டாத பாலியல் வக்கிரங்களை கொட்டிக் கொண்டதுடன், கணிதச் சமன் பாடுகள் போன்ற வடிவங்களுக்குள்ளும், facebook sms துண்டுப் பிரசுரம், கடிதம், போன்ற வடிவங்களுக்குள்ளும் தம் சிறு கதைகளை திணித்துக்கொண்டு இயலபாகவே தம் படைப்பு அவ்வடிவத்தை தெரிந்து எடுத்துக் கொண்டது என்று கதைவிடுவதையும் அதைப் பற்றிப் பெருமைப்பட்டுக்கொள்வதையும் பார்க்கிறோம். மேற்படி புதியவையும் ஏதோ வடிவங்களே என்பதை ஏன் இவர்கள் புரிகிறார்களில்லை.

சூரன், சேவல் மயிலானதுபோல் வடிவங்கள் மாறுமேயன்றி அவை சிதைக்கப்பட முடியாதவை என்பது புரியாதா இவர்களுக்கு? இவர்களுக்கு இப்படியான புதுப்புது வடிவங்களில் அவர்களது படைப்புகள் தம்மைக் கட்டமைத்துக் கொண்டன என்பதை ஏற்றால்.. எப்படி அக்காலக் கவிஞர்கள் தமக்குகந்த யாப்புகளில் எழுதியதை நாம் தவறு என்று கூறமுடியும்?

"என்று தணியும் இந்த அடிமையின் மோகம்"

என்று பாரதியைக் கேட்கத் தோன்றுகிறது. பொய்யாயும், போலியாகவும், யாரையோ திருப்திப் படுத்துவதற்காகவும், எவரோ சிலரின் அரசியல் ஆதாயத்திற்காகவும் எழுதுபவர்களை என்னென்று சொல்லுவது?

எப்படி தமிழ் மரபுக் கவிதைகளில் அபத்தங்கள் இருந்ததோ அதற்குச் சற்றும் குறையாத அளவு அபத்தங்கள் தமிழின் புதுக்கவிதைகளிலும் உள்ளன என்பதே மறுக்கமுடியாத யதார்த்தம். இதனாற்தான் இன்றும் ஒட்டுமொத்தமாக கவிதை ஒரு தேக்கநிலையில் உள்ளது என்றும், புத்தியைப் பிறாண்டாத உணர்வுக்கு இதம்தருகின்ற நல்ல கவிதைகளைக் கேட்டு எத்தனை நாட்களாகி விட்டன என்றும் பலர் மௌனம் கலைத்து முணுமுணுக்கத் தொடங்கியிருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

எனவே எமது மரபு வழிவந்த, அதேநேரம் நவீனத்தை அல்லது புதுமையை நோக்கி நகர்கின்ற, காலஓட்டத்திற்கு தாக்குப் பிடிக்கக் கூடிய இயற்கையின் வாழ்வின் யதார்த்தத்தின் தீராத பக்கங்களை, அவற்றின் உண்மைகளை பேசக் கூடிய கவிதைகளை இனங்காண வேண்டியது அவசியமாகிறது.

●

வசந்தங்கள் மலராமல் போய்விடுமோ

உடப்பூர் வீரிசாக்கன்

வங்கக் கடல் பரப்பில்
வான் அலை தாண்டி
பங்கமில்லா வலைபோட்டு
பரிதவித்த வாழ்க்கைக்காக
ஏங்கும் மனைவி பிள்ளை
வாழ்வை வளப்படுத்திட
தூங்கமில்லா துயர் போக்க
துச்சமாக போராடி
உங்கள் வாழ்வு போல எம்
வாழ்வு மலராமல் போய்விடுமா!

அலைகள் மலை போல எழ
மதிகெட்டு மயங்கி விழ
கவலைகள் எமைவாட்ட
கடலோடு போராடி மீனை
வலைபோட்டு அள்ளியெடுத்து
தடுமாறி நின்ற வேளை
சுழையாக வந்த மீனை
வித்து காசாக விற்று
ஏழை எங்கள் வாழ்வு
மலராமல் போய்விடுமா

கண்காணா தூரத்தில்
கவலைகள் வாட்டி நிற்க
எண்ணமெல்லாம் எம்வரவை
ஏக்கத்துடன் எதிர்கொள்
தன்னம்பிக்கை பூண்டு
நம்பிக்கையோடு நாடி
கண்டதும் கவலைகள்
எங்கோ பறந்தோட
ஏழையாம் எங்கள் வாழ்வில்
வசந்தங்கள் மலராமல் போகுமோ!

சிற்பிகள் கூடம்

இது ஒரு
சிறபிகள் கூடம்.
இவர்களது பூபாளம்
வசையுடனே பாடப்படும்

வாழைக்காயும்
கத்தரிக்காயும் – இங்கு
சிறகுகள் இல்லாமலே
பறந்து போகும்.

ஆத்திரங்கள் அத்தனையும்
பாத்திரங்களாய் உருளும்
கொண்டையோடு சேர்த்துக்
கோபத்தையும் அள்ளி முடியும்
விசுவாமித்ர சண்டைக்கோழிகள்.

"ரொம் அன்ட் ஜெர்ரி"
கார்ட்டூண் சித்திரம்
நேரடி ஒளிபரப்பு
நித்திரைக்குப் போகும்போதுதான்
முற்றுப் பெறும் இங்கு.

மாமியார் கொடுமை
தாங்க முடியாத மருமகள்
பணியாளராய்.

மருமகள் கொடுமை
தாங்க முடியாத மருமகள்
பராமரிப்பாளராய்.

ஒரு மாமியார்க்கு
பல மருமகள்கள்.
ஒரு மருமகளுக்கு
பல மாமியார்கள் – தொடரும்
பழி வாங்கும் படலங்கள்
ஆக மொத்தத்தில்,
அம்மாவுக்கும் மனைவிக்குமிடையில்
மாட்டிக் கொண்டு முழிக்கும்
மதில்மேற் பூனைகளுக்கு – இது
ஓர் வரப்பிரசாதம்!
இல்லறத்தின் இலக்கணம்
மறந்ததால் உருவானது இந்த முதியோர் இல்லம்.

சிற்பங்கள் நேசிக்கத் தவறியதால்
சிற்பிகள் அநாதையாய்
சித்ரவதையில் இங்கே!

இல்லத்தின் முகவரியோ
சொல்லும் விளம்பரவரிகள்;
"அமைதியான...
அழகான...
அன்பான... எங்கள்
சூழலில் உங்கள் முதியோர்!

– ஆரையூர் தாமரை

ஒல்லித் தேங்காயும் எரிசிதையும்

தேடுவாரற்று
வீழ்ந்து கிடந்தது
ஒறுப்பான காலத்தில்
நூறு ரூபாவிற்கு
இரண்டு கூடக் கிடைக்காதது
காலடியில் கிடந்ததையும்
கணக்கில் எடுக்கவில்லை
மாந்தர்

நீரில் மிதக்கவும்
நீந்திப் பழகவும்
சித்திரை பூக்கையில்
கோவில் வீதியில்
போர்த்தேங்காய் அடிக்கவும்
தேடிய காலங்கள்
கலைந்து போனது

அலைகளால் அணைக்கப்படும்
கடலுடன் கூடலுக்காக
ஏகாந்தமாய்
காத்திருக்கிறது
ஒல்லித் தேங்காய்

ஊதித் தள்ளிய
புகையில்
கோதாய்ப் போன
நெஞ்சாங் கூடு
எரி சிதையில்
கருகிச் சிதைந்து
சாம்பலாகி
காற்றுடன் சங்கமிக்கக்
காத்திருப்பது போல

– எம்.கே.முருகானந்தன்



அவள் கருவறை என் கல்லறை

கரு இருட்டில் கைமுடக்கியபடி
கனவுகளுடன் காத்திருந்தேன்
இடர்களைந்து இருள் கலைத்து
ஒளியான உலகில் என்னையும்
உலவவிடுவாய் ஒருநாள்–என்று
ஊமையாய் உன்னுள்ளே
ஒளிந்திருந்தேன்...

உருக்கொடுப்பாய் நீ
உணர்வளிப்பாய் நீ – உன்
உதிரத்தால் உணவளிப்பாய் நீ என்று
உறுதியோடிருந்துவிட்டேன்
உனக்கே தெரியாமல் நான்
உருவான உண்மை மறந்து...

எனக்கே தெரியாமல் நான்
உனக்குள் வந்தது என் தவறா ?
எனை ஒரு வார்த்தை கேளாமல் நீ
செய்தசதி இது தண்டனையா?

பன்னீர்க் குடம் உடைக்குமுன்
என் உடல் சிதைத்து
செந்நீர் குளத்தில் எனைக்கலந்து
இறந்த என் உடலைச் சுத்தம் செய்ய – அம்மா
நீ போடும் நாடகக்கண்ணீர்...ஐயோ

இருளோடு இருளாய் இடம்மாற்றி விட்டாய்...
நாளை உன்னைத் தாயெனச்செல்ல
நானில்லை ஆனால் நீ.....
என் சாவில் சாதித்த மகிழ்வுடன் மறுபடியும்...

எதற்காகப் பெண்ணே...
என்னைப் போல் எத்தனை பேரைக்
கருவாக்கிக் கலைக்க இந்தக்
கட்டில் காதல்...

– திருமலை பிரம்மியா

மழை பற்றிய பத்துக்கவிதைகள்

1.
நீரேறி எண்ணைப் பிசுக்கடைந்த
சிறகினை நீவும்
தனிப்பறவை நான்,
ஓ மழையே ஒரு குடையென விரியும்
கைகளோ வெறுமை – அதை நிறை

2.
சின்னத்திவலை உயிர்விழப் பொழியும்
சின்னத்திவலை உயிர் மழை
உடல் கரை ,ஆத்மா பேரலை
சிறு தனிமை
எல்லாமே சின்னத்திவலை உயிர் மழை

3.
நீர்க்கூடு உடலற்றது நேசம்
கடலுயிர் மணலெனத்திரளும்
உறவற்றது பாசம் யாரற்றவன் நான்..?

4.
உலர்த்திப் பரத்திய தோலில்
சில்லிட்டு விழும் முதல் துளி
உப்பின் கசப்பற்ற
கடவுளின் கண்ணீர் மழை

5.
வற்றும் கடல் வளையா நதி
ஒற்றைக் கோப்பையை உயர்த்த நிறையும்
வானின் புனித மூத்திரம்

6.
முத்தமிட கட்டியணைக்க
அள்ளிப்பருகவென ஆரம்பித்து அந்தரங்க
வெளிகளைந்து விழும் துளி
சொட்டும் கணத்தில் கரைவது யார்

7.
இன்னுயிரே மழையே என்சகி
சதைகளைந்து வெப்பச்சிறு கூட்டில்
நீ தகி
சுட்டெரிக்கும் சிறு துளி நீ

8.
என்னைக்கிறுக்கும் சிறு வெண்தாள்
முகில் உடைத்து மெல்ல
விழும் தூரிகை நீர்

9.
நீர் புனிதம்
அந்தரப் பசிய நரம்பில்
வேரூறும் மழைநீர் புனிதம்

10.
மழை மழை

– ஆதி பார்த்தீபன்

அநாதரட்சகன்



கவிதையில் சமூகம் என்ற கருத்தாக்கம் சில குறிப்புகள்

கலை இலக்கியங்களில் வடிவங்களும், அழகியல் நிர்ணயிப்புகளும், எழுத்து நடைகளும் சமுதாயச் சூழ்நிலைகளுக்கேற்ப மாற்றமுற நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. மனித சமுதாயம் தனது முன்னேற்றத் துக்காக எடுக்கும் முயற்சிகள் சிறந்த முறையில் பிரதி பலிக்கும்போது இலக்கியம் புத்துயிர் பெறுகிறது.

"உரிமைக்காகப் போராடும் எனது
வர்க்கதே இடியொத்த எனது
கவியாற்றல் யாவும் உமதே"
- மாயா கோவ்ஸ்கி



கலை இலக்கியம் என்பது புனிதமானது. "அந்தராத்மா"வின் வெளியீடு; தெய்வீகத்தன்மை யானது. வர்க்கங்களுக்கும் அரசியலுக்கும் அப்பாற் பட்டது எனவும், இதுவே எல்லாக்காலத்துக்கும் பொருந்தக் கூடிய நியதி என்று கலை இலக்கியம் பற்றி கருத்து நிலையை இன்று பலர் கொண்டிருக்கின்றனர். உண்மையில் வர்க்கங்களுக்கப்பாற்பட்ட கலை-இலக்கியமோ, எல்லாக் காலத்துக்கும் பொருந்தக்கூடிய தார் மீக நியதிகளோ இருந்ததில்லை. இது போலத்தான், மக்களிடமிருந்து பரிந்து எந்தவொரு மொழியும் வாழ்ந்து விட முடியாது என்பதும் நிதர்சனமானது.

கலை இலக்கியங்களில் வடிவங்களும், அழகியல் நிர்ணயிப்புகளும், எழுத்து நடைகளும் சமுதாயச் சூழ்நிலைகளுக்கேற்ப மாற்றமுற நிர்ப்பந்திக் கப்பட்டுள்ளன. மனித சமுதாயம் தனது முன்னேற்றத் துக்காக எடுக்கும் முயற்சிகள் சிறந்த முறையில் பிரதி பலிக்கும்போது இலக்கியம் புத்துயிர் பெறுகிறது. அவ்வாறிறல்லாதபோது அது தேக்கமடைகிறது. அத்துடன், சமுதாய முன்னேற்றத்தக்கான போர் வாளாகவும், மனிதவிடுதலை நோக்கிய பாதைக் கான திசையைச் சுட்டும் உள்ளடக்கம் கொண்டதாக வும் கலை இலக்கியம் அமைய வேண்டும்.

"கவிதை" என்பது கவிஞனின் உன்னதமான அனுபவத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் அடக்க முடியாத தூண்டல் என்பர். அந்த அனுபவம் மக்களின் வாழ்வோடும், இருப்போடும் கொண்ட நெருங்கிய பிணைப்பில் இருந்து பிறப்பது. கவிஞனின் அனுபவத்தின் தரம், தூண்டலின் ஆழம் என்பவைதான் கவிஞன் உருவாக்குகின்ற கவிதையின் வடிவத்தின் நேர்த்தியைத் தீர்மானிக்கின்றதெனலாம். அந்த வகை

யில் கவிதை நாம் வாழும் உலகின் யதார்த்தத்தை எம்முடன் பகிர்ந்து கொள்வதாகவும் இருத்தல் வேண்டும்.

கவிதையின் உச்சப்பயன்பாடு என்பது உள்ளடக்கத்தைப் பொறுத்தது. இத்தகைய உச்சப் பயன்பாடு கவிதையின் உள்ளிருக்கும் உணர்வுநிலை சார்ந்தது. இந்த உணர்வினை சமுதாய நலன் குறித்து வெளிப்படுத்துவதிலேயே கவிஞனின் ஆளுமை தெரிய வருகிறது. இன்னொரு வகையில் கூறின் கவிதை நிலைத்த பயனைத் தரவேண்டுமாயின் பொருட் சிறப்புடையதாக இருக்க வேண்டும். இப்பொருட் சிறப்பு என்பது வாழ்க்கைப் பயன் குறித்ததேயாகும்.

இதனை மாத்யூ ஆனல்ட் என்பவர்,

"கவிதையின் அடிப்படை வாழ்க்கை பற்றிய திறனாய்வே" என்றார்.

(poetry is at bottom a criticism of life)

"நல்ல கவிதை என்பது மனித சமுதாயத்தின் மகிழ்ச்சிப் பெருக்கத்திற்கு உதவுமானால், ஒடுக்கப் பட்டவர்களை விடுதலை செய்யுமானால், நம்மைப் பற்றியும், இவ்வுலகைப்பற்றியும் அறிந்து கொள்ள உதவுமானால், இவ்வுலகில நம் வாழ்வு பயன்பட உதவு மானால் அதுவே சிறந்த கவிதைக்கலை" என்பது வால்டத் பேட்டர் என்பவரின் கருத்தாகும்.

மாயாகோவ்ஸ்கி

உலகில் மானிட விடுதலை நோக்கிய பயணத்தில் கவிஞனின் பங்கு மகத்தானது. கவிஞன் தான் பிறந்து வளர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் சமுதாயத்தில் வழிவழியாக வரும் மனிதாபிமான மரபு களுக்கு பாத்தியதை உடைய வனாக இருக்கின்றான். அத்தகைய கவிஞனின் கவிதை சமூக அளவில் ஒருமித்த சில நம்பிக்கை களை வெளிப்படுத்துகின்றது. சமூகத்தின் சுயம் அழியாமல் வேரடி மண்ணில் நீர் உறிஞ்சி அவனிடம் இயல்பாகக் கவிதை பிறக்கிறது.

மா ஓ சேதுங்

இத்தகைய கவிதை அனுபவத்தைத் தந்தோர் வரிசையில் உலக இலக்கிய கவிதைப் போராளிகள் என்ற வரிசையில் உலக இலக்கிய கவிதைப் போராளிகள் என்ற வகையில் மாயாகோவ்ஸ்கி, லூசன், மா ஓ சேதுங், எஸ்ட்ராவ்ஸ்கி, பெட்டோஃபி, பிரெஸ்ட், லைடன் தாமஸ், பப்லோ நெருடா, மகாகவி பாரதி ஆகியோரை முன்னிலைப்படுத்தலாம்.

மக்களது மனதைத் தொடுகின்ற பிரச்சினை களைப் பேசுகின்ற கவிதைகள் இன்றும் மக்களால் ஈடுபாட்டுடன் சுவைக்கப்படுகின்றது.

சிலி நாட்டு கவிஞர் பப்லே நெருடாவின் சுய சரிதையில்,

"சிலி நாட்டின் மூலை முடுக் கெல்லாம் நான் போயிருக்கிறேன். அங்கெலாம் விதைகளைத் தூவுவது போல் மக்களிடையே எனது கவிதைகளை பரப்பியிருக் கிறேன். அவை பயனுள்ள பலன்களைத் தந்துள்ளது" என்றார்.

கவிஞன் மக்களுடன் ஐக்கியப்பட்டு நிற்கும் போதே கவிதைக்குரிய இயல்பான பண்பு சமுதாயத்தின் மனச்சாட்சியாகவும், குரலாகவும் அமையும் என்பதை இக்கூற்று எமக்கு எடுத்து விளம்புகிறது.

சமூகவிடுதலைக்காக குரல்கொடுத்த கவிஞர் தனது கவிதைகளில் தெளிவான சிந்தனையும், பார்வை யும், கூர்மையும் வெளிப் பட்டன. இவர்களது கவிதை களில் காணப்பட்ட பொதுமைக் கூறுகள் மனித இருப்பின் யதார்த்த நிலை சார்ந்ததாக



பப்லோ நெருடா

இருந்தது. நல்ல கவிஞன் தன்னைச் சூழவுள்ள மனிதத்தை மனதிற் கொண்டே கவிதை படைக்கின்றான். பின்னர் அது சமுதாயத்தளத்தில் மக்கள் இலக்கியமாக பரிணமிக் கின்றது. இத்தகைய கவிஞர்களுக்கு எதிர்காலம் பற்றிய தீர்க்கமான பார்வை உள்ளது. ஆயினும் அது நிகழ் காலத்திலிருந்து புரிந்த கற்பனாவாத எதிர்காலமல்ல. இதுவே மக்கள் நலன் சார்ந்த கவிதைகளின் சிறப்பு அம்சமாகும். இவை தனி மனித அனுபவங்களையும், உணர்வுகளையும் பேசினாலும், அவற்றையும் கடந்து சமூகத்துக்கான பொதுமைப் பண்புகளை உள்ளடக்க மாகக் கொண்டுள்ளன. இந்த உள்ளடக்கமென்பது மனித சமத்துவத்துக்கான விழுமியங்களை அவாவி நிற்பது எனலாம். லத்தின் அமெரிக்காவின் சிலி நாட்டுக் கவிஞரான பப்லோ நெருடாவின் கவிதைகளில் இத்தகைய பண்புகளைத் தரிசிக்க முடிகிறது. அவரது கவிதைகள் நுண்ணிய சொற் பிரயோகத்துடன் காட்சிப் படுத்தலுடன் மக்களைத் தட்டியெழுப்பும் வகையில் அமைந்தன. அத்துடன், அவரது கவிதைகள் அழகியலையும் வாழ்வியலையும் அற்புதமாகப் பேசின. அக்கவிதை களில் உள்ளார்ந்த கூறாக அரசியல் இருந்ததை மனதில் கொள்ள வேண்டும்.

மக்கள் கவிதைகளின் போராட்ட ஆற்றலுக்கு லத்தீன் அமெரிக்கக் கவிதைகள் முன்னுதாரணமாக இன்று பேசப்படுகின்றன. லத்தீன் அமெரிக்க மக்களது விடுதலைக்கான போராட்டக் களத்தில் கவிதைகள் பெரும் தாக்குவிசையாக இருந்துள்ளன. சமூகப் புரட்சி என்பது, ஆயுதங்களாலும், மூளைகளினாலும் மட்டும் வெல்லப்படுவனவல்ல. அதன் வெற்றி மக்களின் இதயங்களை ஈர்த்து அதன்பால் மக்களது ஈடுபாட்டை வென்றெடுப்பதிலும் தங்கியுள்ளது. இந்நாடுகளில் ஏற்பட்ட புரட்சிகளுக்கு அந்நாடுகளின் கவிஞர்களின் கவிதைகளும், பாடல்களும் ஆற்றியுள்ள பங்கு மகத்தானது. மக்கள் நலன்களைப்பாடிய கவிதைகள் மக்களை வசப்படுத்தி போராடத் தூண்டின. கவிதைகள் எப்படி சமூக மாற்றத்துக்கான புரட்சிகான கண்ணிகளாக அமைய லாம் என்பதற்கு லத்தீன் அமெரிக்கக் கவிதைகள் முன்னு தாரணமானவை. இலக்கியம் என்பது ஒரு மக்கள் இயக்க மாக குறிப்பாக, திக்கனாகுவா, குவாட்டமாலா, கியூபா, எல்சல் வடோர், கொஸ்றீகா அகிய நாடுகளில் விளங்குகிறது. இந்நாடுகளில் கவிதைகள் எளிமையானவையாகவும், புதிய வடிவங்களைக் கொண்டதாகவும், மக்களது பிரதான கருத்து வெளிப்பாட்டுக்கான சாதனமாகவும் வலுப்பெற்றுள்ளன. அத்துடன், பாலஸ்தீனக் கவிதை கள் போல, வெகுஜனத்தளத்தில் மக்களை ஒன்றிணைக் கும் வழிமுறையாகவும் இருந்து வருகின்றன.

கலைவடிவில் வெளிப்படுத்தப்படும் உணர்வு களும், கருத்துக்களும் தாம் கவிதைக்குத்தேவையாக இருக்கின்றது. கவிஞன் என்பவன் நீண்ட காலம் கனவுலகில் மிதந்து கொண்டிருக்க முடியாது. அவன் தன் காலத்திய யதார்த்த உலகிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறான். அவன் பொழுதுபோக்கு தரும் கருவியாகவே கவிதையைப் பயன்படுத்துவதை சமூகம் நீண்ட காலம் விரும்பாது. அவன் தனது காலத்திய ஆன்மிக வாழ்வையும், யதார்த்த வாழ்வையும் பிரதி நிதித்துவப் படுத்தும் கலைஞனாக அவன் இருப்பதையே சமூகம் விரும்பு கிறது. "மானிட சமூகத்தின் துன்பங் களையும், துயரங்களையும் முதலில் தன் வாழ்வில் கண்டுபிடித்து பின் பிறர் வாழ்வில் கண்டு பிடித்து அவற்றின் தீர்வு வகைகளை கவிதை வடிவத்தில் வெளிப்படுத்தும் சமூக மருத்துவனாக இருப்பதையே சமூகம் விரும்புகிறது" என வி.ஜி. பெலின்ஸ்கி என்பவர் கூறியுள்ளார்.

"சிருஷ்டி" என்ற செயல்முறையில் கவிஞனின் சமூகப் பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியாது. சமூக மாற்றத்தில் அவன் வகிக்கும் பங்கும் பொறுப்பும் அவனது அர்ப்பணிப்புடனான செயலூக்கமும் முக்கிய மானது.

கவிதை உலகில் சமூகம் பற்றிய பற்றுணர் வினாலும், அத்தூண்டலின் மூலமான தரிசனத்தையும் கொண்டு பலர் கவிதை படைத்துள்ளனர். சமூக யதார்த்தத்தினை பிரதிபலிக்கும் கவிதைகளை தீவிர உந்துதலுடன் படைக்கும் திறன் இன்று மதிப்பிழந்து விட்டதோ என எண்ணத் தோன்றுகிறது. தமிழ்க் கவிதை உலகில் பாரதி தொடக்கி வைத்த வழித் தடத்தில் எமது சூழலில் பயணித்தவர்கள் என்ற வரிசையில் மஹாகவி, முருகையன், எம்.ஏ.நுஃமான், சி.சிவவேகரம், சண்முகம் சிவலிங்கம், சோ.பத்மநாதன், அ.யேசுராசா, மு.பொன்னம்பலம், சாருமதி, புதுவை இரத்தினதுரை, சுபத்திரன், வ.ஐ.ச.ஜெயபாலன், சேரன், சு.வில்வரத்தினம் என்போருடன் இன்னும் சிலர் நினைவில் முன் நிற்கின்றனர். இவர்களது கவிதைகள் தனிமனித உணர்வுகளை பிறருடன் பகிர்ந்து கொள்வதுடன், மனிதனினமுள்ள எல்லையற்ற ஆற்றல்களை சமூகத் துடனும் பகிர்ந்து கொள்வனவாய் உள்ளன.

கலை இலக்கியங்கள் அரசியல் செயற்பாட்ட இயக்கங்கள் போல சமூகக் கட்டமைப்பில் அடிப்படை யான மாற்றங்களை உடன் கொண்டுவருவன அல்ல. ஆனால் இவை ஆற்றுவது நீண்டகாலப்பணியாகும். அந்த வகையில் கவிதைகள் மக்களின் மனங்களை மனிதாபிமானப்படுத்தக் கூடியன.

மக்களது வாழ் நிலை பற்றிய யதார்த்தங்களைப் புரிந்து கொள்ளவும் அது குறித்த விழிப்பினை ஏற்படுத்தி மாறுதல்களை ஏற்றுக் கொள்ளவும் மக்களை தயார்ப்படுத்துகின்றன. இன்று எமது தேவை சமூகத்தினை ஸ்தம்பித்த நிலையிலிருந்து விடுவித்து, செயலூக்கமுள்ள நிலைக்கு மாற்றக் கூய சமூக நோக்கிலான கவிதைகளே ஆகும்.

•

நீல ஒளியின் வியாபகம்?....

விகசித்துப் பரவியது
நீல ஒளி.
விசும்பிடைப் பரவி
வியாபித்து,
தெறித்துக் கவிந்தது
தேசமெங்கும்.

நெஞ்சுயர்த்தி
நெடிதுயிர்த்துப் பேசியது.

'நிலம் எனது!
நீர் சுமக்கும் எல்லையெலாம்
என்னதுவே!
நீளும் வெளிமுழுதும்
என்னாட்சி!
வானவெளி உலவும்
கிரகமெலாம் என் ஒளியே!..."

நீரில் கரைத்த நிறம்
வானின் அடித்த வர்ணம்
'கூரியன்' தன் முதுகில்
சுமக்கும் நிறம் அதுவே!

நிலத்தின் நிறம் எதுவோ?....

வானிடை இருந்து
வந்த நீல ஒளி
வடிந்தது தேசமெங்கும்.

பாதையாய் பரவியது
பதாகை ஆகியது!
வேலிச் செத்தைக்கும்
நீலம் போர்த்தியது!....

பெருமரத்து வேர்களிலே
நீலமழைத் துளி விழுந்து
பூத்துக்குலுங்கின!
நீல ஒளிப்பூக்கள்!

நீல நிறத்திலந்த
கூடார வீடுகள்
அவர்களின் விசும்பும்
அதே நிறத்ததுதான்!

நீலக் கூரையினுள்
நிதம்
'சிவப்பாய்' அவர் வாழ்வு!

விசும்பிடைத் தெறித்த ஒளி
வீழாத இடமும் உண்டோ?...

– இ.இராஜேஸ்கண்ணன்

இது உனக்கானது அல்ல

ஊற்றுக்குத் திரும்பமுடியாத நதி – நீ
உப்பு நாட்களின் இரகசியத் துயரம் – நான்

நின் நதியெங்கும் துக்கித்த என் கண்கள்
உன் கரையெங்கும் உருகிய என் மௌனம்

இருந்தும்

என் பயண வழிநெடுகச் சொல்வதற்கோ
கதைகளேதுமில்லை உன்னிடம்

அன்பே
வழிதவறியவை உனது நாவாய்கள்

நிறையிருட்டில் சுடர்வதோ
துரோகம் ஜ்வாலிக்கும் அந்த
ஒற்றை நட்சத்திரம்

ஆகச்சிறந்த பிரிவொன்றின் சாம்பரை
அள்ளியெறிகிறது காலம்

அன்பு
ஒரு தந்திரம்

வாழ்க்கை
ஒரு வனாந்திரம்

காலங்களிற்கு வெளியே ஆடும் ஊஞ்சலில்
அமர்ந்திருக்கின்றேன் நான்.

(துரோகம் புரிதலென்பது மகத்தான ஒரு கலை)
2014 கானல் நாள்

– பிரியாந்தி

வஞ்சகரின் வையகமே!

வாழ்ந்து முடிந்தாச்சி வஞ்சகரின் உலகமையா
ஆய்ந்த அறிவுரைகள் ஆயிரமாய் உள்ளதாங்கே
வீழ்ந்து கிடக்கையிலே வீண்பழிகள் பேசுமிந்த
தாழ்ந்த குணமுடையார் தரணியிலே தாராளம்!
**

உச்சிகுளிர உயிர்கொடுத்துப் பேசுமவர்
பச்சைக் குழந்தையெனப் பரிதாபம் கொள்ளாதே
நச்சு விஷம் ஏற்றி, நாவடக்கம் இல்லாது
எச்சிலை உமிழ்கின்ற இழிநிலையில் பலருண்டு.
**

கண்ணெதிரே கண்டவுடன் கைகூப்பிச் சிரிப்பவர்கள்
கயமைபிடித்தவரும் கனிமொழியில் பேசிடுவார்,
விண்ணதிர வேதாந்தம் வீதியிலே விளம்புகின்ற
விஷ ஜந்து போன்றவர்கள் வினைபலவும் செய்திடுவர்.
**

விழுந்து கிடந்த வீழ்ச்சியினைக் கண்டிடினும்
எழுந்து நடப்பதற்கு எவருமங்கே துணையாகார்
அழிந்து சிதைந்து ஆதாரம் இல்லாதாய்
ஒழிந்து போவதனை ஒங்கியே உரைத்திடுவார்.
**

வாலைப்பிடித்து வாழ்வுநிலை கொண்டுயர்ந்தோர்
கோலைபிடித்தவர்கள் கொள்கையினைத் தாமிழந்து
பாலை வனத்தில் பயணமது போவது போல்
காலைப்பிடித்தாங்கே காரியங்கள் சாதிப்பார்!
**

ஆற்றுநீர்போன்று அள்ளிக் கொடுத்தவர்கள்
தோற்றுத்தொலை தூரம் துவண்டுபோய் இருக்கையிலே
ஆற்றங்கரைகளிலே அறுந்தமிழ்ந்த செடிகொடிபோல்
சேற்றில் புதையுண்டு சீரழியச் செய்வார்கள்.
**

ஈருலகம் போற்றும் இறைதூதின் நபிமாரை
இகழுகின்ற ஈனர்களின் இல்லமடா இவ்வுலகம்
பகலிரவு பாராது பணிசெய்து வந்திடினும்
பரிகாசம் செய்யுமொரு பகட்டான கூட்டமுண்டு!
**

உழைப்பால் உயர்ந்தோர்கள் உத்தமர்கள் பலருண்டு
பிழைப்பைக் குறைகானும் பித்தர்களும் சிலருண்டு
உதட்டால் உதிர்க்கின்ற உண்மைகள் அத்தனையும்
இருட்டில் தொலைந்திட்ட ஈயாதார் பலருண்டு.
**

சாதிமத பேதமுடன் சமத்துவத்தை அழித்தவர்கள்
நீதிநெறி பேசி நிலைகுலைந்து நிற்பவர்கள்
பாதி அறிவுடையோர் பார்புகழ வேண்டுமென
மேதினியில் போதனைகள் மெய்சிலிர்க்கச் செய்திடுவார்.
**

வாய்விட்டுச் சொல்லிவிட வெட்கமாய் இருக்குதையா
வஞ்சகரின் வசைகேட்டும் வாஞ்சையுடன் வாழ்ந்ததுண்டு
பாய்போட்டுப் படுத்தவர்கள் பயங்கொள்ளார் பாரினிலே
பாசாங்கு வாழ்த்துரையில் பரிதாபம் காட்டிடுவார்!

– ஏ.சீ.எம்.இப்றாஹீம்

குதிரைகள்

தூரத்தே தெரியும்
பனிக்குவியலை
பார்த்தே
நரி ஊளையிட...

இன்னும் விடியாத
இரவின் திரை
சற்றே விலகிட
ஆலமரம் அசைந்து
படபடத்து ஓய்ந்தது.

காத்துக் கிடந்த
ஓநாய்
புதரினின்று
வெளிக்கிளம்பியது.

காவுக்கொள்ளப்பட்டதால்
உலகின் விழிகள்
விரிந்து பரந்தன.

பரிமாற்றங்கள்
முதலைகளால்
விழுங்கப்பட்டன.

குதிரைகள்
மீண்டும் லாடம் கட்டப்பட்டு
லயங்களில்
அடைக்கப்பட்டுவிட்டது.
வெற்றிகரமாக.

– செ.ஜெ.பபியான்

குட்டி முயல்களின் கதை

கதை 01

அம்மாக்களின் பிள்ளைகள்
இன்னமும்
குட்டிமுயல்களாகவே உள்ளனர்
அம்மாக்களோடு உலாவி
அம்மாக்களோடு படுத்துறங்குவது
அவர்களின் விருப்பாகவே உள்ளது
ஒவ்வொரு அம்மாக்களும்
தத்தமது குட்டிகளை
தாலாட்டியபடியே உள்ளனர்
இப்போது அம்மாக்களால்
குட்டிமுயல்களுக்கு
புற்கள் வழங்கப்படுகின்றன
முலைகள் ஒளிக்கப்பட்டன.

கதை 02

அம்மாக்களால்
விரும்பப்படுகின்றன முயல்கள்
முயல்களுக்காக கோரைப்புற்களை
அம்மாக்களே செதுக்குகிறார்கள்
தேன்புற்களும் தீனியாகிறது.
அம்மாக்களின் கூடுகளில்
முயல்கள்
அழகழகாய் விடப்படுகின்றன
குட்டிமுயல்களை
குறிவைக்கின்றன வேட்டைப்பற்கள்
தாம்
வேட்டாயாடப்படுவோம் என்ற உணர்வின்றி
முயல்கள்
முயல்களாகவே விளையாடுகின்றன.

கதை 03

உதிர்ந்த கனவொன்றை
இழுத்துச் செல்கிறது காலம்
புதருக்குள் ஒளிந்தபடி இருக்கும்
வேட்டை விலங்கை
குட்டிமுயல்கள் இன்னமும் அறியவில்லை
அம்மாக்கள்
முயல்களோடே பயணிக்கிறார்கள்
அம்மாக்களால்
ஆளப்படுகின்ற கோட்டைகளில்
முயல்கள்
புணர்ச்சிக்களிப்பில் இருக்கின்றன
அம்மாக்களின் முயல்கள்
அவர்களின் அரசவையில்
அமைச்சர்களாக இருக்கின்றன
குட்டிமுயல்களின் கனவுகள் எப்போதும்
அம்மாக்கள் பற்றியதாகவே உள்ளன.
அம்மாக்களின் உலகம்
குட்டிமுயல்களால் நிறைந்திருக்கிறது.

கதை 04

குட்டிமுயல்களால்
நிறைந்திருக்கின்றன கூடுகள்
அம்மாக்களின் செல்லப்பிள்ளைகளுக்காக
கூடுகள் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன.
அவைகள்
அலங்கரிக்கப்பட்ட நாளிலிருந்து
அம்மாக்களின் நித்திரைகள்
தொலைந்தன
குட்டிமுயல்களாலும்
விறாண்டப்படுகின்றன சுரங்கங்கள்
இப்போது
முயல்களின் கூண்டுக்குள்
பாம்புகள் நுழைகின்றன
ஒரு தற்காப்புக்காகவேனும்
அம்மாக்களால்
குச்சியைக்கூட தூக்க
அப்பாக்கள் அனுமதிக்கவில்லை
அப்பாக்களால்
திசையறிவிக்கப்பட்ட கணத்திலிருந்து
அம்மாக்களின் பயணம் தொடங்கியிருக்கிறது
கூரைகள் கிழிக்கப்பட்டு
கூண்டுகள் கிளறப்பட்டு
வேட்டையாடப்படுகின்றன குட்டிமுயல்கள்
அம்மாக்களின்றி
குட்டிமுயல்களை கிழித்தன வேட்டைப்பற்கள்
இப்போது
குட்டிமுயல்களின்
குருதிபடிந்த மண்ணில்
மீன்களுக்கான தொட்டிகள்
அப்பாக்களால் கட்டப்படுகின்றன.

— கு.றஜீபன்

புதிய கல்விக் கொள்கை



புதிய கல்விக் கொள்கையினை
புரிந்து வகுத்துப் பள்ளிகளில்
பதியும் வண்ணம் பயிற்றுவித்து
புதுயுகம் படைக்கப் புறப்படுவோம்

ஆங்கிலம் சிங்களம் தமிழ்மொழியும்
அனைத்துப் பள்ளியில் பயிற்றிடுவோம்
பாங்குடன் அறிவியல் செயன்முறையில்
பயில வாய்ப்பும் பெறச்செய்வோம்

அனைத்துப் பள்ளியும் அரசுடமை
ஆக்கிப் பயிற்சி அளித்திடுவோம்
அனைத்தும் அரசின் பள்ளியென
அனைவரும் ஏற்று மகிழ்ந்திருப்போம்

சமய பாடங்கள் பள்ளியிலே
பயிலும் வாய்ப்பை அகற்றிடுவோம்
அமையும் ஒழுக்கக் கல்வியினை
ஆய்ந்து பள்ளியில் சேர்த்திடுவோம்

சமயக் கல்வி பள்ளியிலே
சமத்துவம் இல்லா தொழித்துவிடும்
சமயம் என்பது போதையேற்றும்
சோம பானம் போன்றதப்பா

சமயம் மதத்தை சுரப்பிக்கும்
சன்னதம் கொண்டு ஆட்டுவிக்கும்
எமனுரு பெற்று உயிரழிக்கும்
எரிதழல் ஆக்கி உலகழிக்கும்

உழைத்துப் பிழைக்க உடலுண்டு
உறுதுணை செய்ய வளமுண்டு
உழைத்து வாழ விருப்பமில்லா
உலுத்தர் மதங்களால் பிழைக்கின்றார்

தன்னைக் காக்கத் தெரியாத
கடவுள் முன்னால் வரமாட்டார்
என்று தெரிந்த ஏய்ப்பவர்கள்
எடுத்து விட்ட பெரும்புளுகு.

தனது வலிமையைத் தானுணரும்
தகைசார் உணர்வை பெறும்வாய்ப்பை
உணர்த்தும் கல்வி நமக்குதவும்
உண்மை இதனை மனங்கொள்வோம்

நாட்டில் உள்ள வளமனைத்தும்
நாடித் தேடிக் கண்டறிவோம்
ஏட்டுக் கல்வியைத் தானுணர்ந்து
எழில்சார் புதுமைகள் தான்படைப்போம்

அண்ட வெளியின் கூட்சுமத்தை
அறிந்து விண்வெளி சென்றிடுவோம்
விண்கலம் செய்து வேற்றுலகம்
விரைந்து வெற்றி கண்டிடுவோம்.

கடலில் கலக்கும் நதிநீரை
குறுக்கே மடக்கிக் குளமமைப்போம்
கிடக்கும் நிலத்தில் பயிரிட்டு
கிளறும் பசியைத் தணித்திடுவோம்

பிரிவினை ஏனோ இத்தீவில்
பிரிவினால் அனர்த்தமே உருவாகும்
ஒருமுறை மட்டும்தான் பிறவியிதை
உணர்ந்து வாழ்ந்து மகிழ்வோமே.

எந்த மதத்தவர் ஆனாலும்
எந்தச் சாதியம் என்றாலும்
இந்தத் தீவு யாவருக்கும்
சொந்தம் என்றே உழைப்போமே

நதிகள் கலப்பது சமுத்திரத்தில்
நம் சமயங்கள் சொல்வது மதைத்தானே
மதிநல முடையோர் இங்கிருப்பின்
மதத்தால் இனத்தால் பிரிவோமா?

மதங்கள் எங்கே கலக்கின்றனவோ
மதியுளோர் இருப்பின் கூறுங்கள்
மதங்களை மனிதரே படைத்தார்கள்
மனிதர்க்கு விலங்கையும் கொடுத்தார்கள்.

விலங்கை உடைப்போர் யாருளரோ?
விடுதலை பெறுவோர் எவருமுண்டோ
விலங்கின் கடையினப் பிறவிகளே
வில்லங்கம் படைத்தவர் நீங்களன்றோ?

கடவுளைக் கண்டவர் எவருமில்லை
கடவுள் சமயத்தைப் படைக்க வில்லை
சுடருறு அறிவினைத் தேடுங்கள்
சுந்தரம் அதுதான் சொர்க்கமாகும்.

ஓர் ஏழை மாணவனின் விண்ணப்பம்

என் ஆடைகள்,
என் அடையாளங்களை
மட்டும் வைத்து
என்னை அளந்து விட வேண்டாம்.

நானோர் ஏழை,
என் ஏழ்மையை, என் இழப்புக்களை
மீண்டும் மீண்டும் மீட்டு
ரணமாக
நான் தயாராக இல்லை.

நான் ஏழை மாணவன்
ஆனால், கோழையல்ல
எனக்குள்ளே எத்தனை தலைவர்கள்!
நான் யாராக வேண்டும்?
நீங்கள் தான் தீர்மானிக்க வேண்டும்
ஏனெனில்
நீங்கள் என் ஆசான்கள்

வறுமையாலும்
சமூக வக்கிரங்களாலும்
நான் ஒதுக்கப்பட்டு இருக்கலாம்
ஆனால்
எனக்குள்ளே தீ எழுகிறது
அது உயர உயரவே எழுகிறது
அது சாதனைத்தீ

என் அப்பன் குடிகாரனாக இருக்கலாம்
என் அன்னை ஏமாளியாக இருக்கலாம்
என் வாழ்க்கை
வறுமைக்கோடுகளால் நிரப்பப்பட்டதாக
இருக்கலாம்

என் எண்ணங்கள்
நலிந்தவையாக இருக்க
என்ன அவசியம்?
என் எதிர்காலம்
இருளானதாக இருக்க
என்ன கட்டாயம்?

வகுப்பறையில் ஏனோ
நான் ஒதுங்கித்தான் போகிறேன்;
ஒதுக்கப்பட்டும் போகின்றேன்
அவர்கள் பெருமையுடையவர்களாக,
நானோ சிறுமையுடையவனாக
என்னைப் போன்றவர்களே
என்னை ஒதுக்குகிறார்கள்

என் அழுக்கான ஆடைகளும்
கிழிந்து போன சப்பாத்துக்களும்
நான் அருவருக்கத்தக்கவன் என்ற
எண்ணத்தை அவர்களுக்கு ஊட்டுகின்றன.
பசியால் கொந்தளிக்கும் என் வயிற்றை

சோகை பிடித்துத் தூங்கி வழியும்
என் கண்கள் மறைக்கின்றன.

தந்தையின் அதிகாரக்குரலும்
தாயின் கண்ணீர் முகமும்
கற்றலின் போதும் என்
உள்ளத்தை
உருக்குலைக்கின்றன.
ஆயினும்
என்னுள்ளே கனவு கனல்கிறது
சாதனை படைக்க
என் சிந்தை உழல்கிறது

ஆசான்களே,
என்னை இனங்காணுங்கள்
என்னைத் தட்டிக்கொடுங்கள்
என்னைத் தூக்கி நிறுத்துங்கள்
என் சந்தர்ப்பங்களை எனக்குக் கொடுங்கள்

நாளை நானும் தலைவனாவேன்
உலகம் போற்றும் உத்தமனாவேன்

ஓர் அப்துல் கலாமாக, ஓர் ஆப்ரகாம் லிங்கனாக,
மகாகவி பாரதியாக, மகாத்மா காந்தியாக
என் மகாத்மாவும் பரிமளிக்கும்

உங்கள் கவனம்
என்மீது விழுந்தாலே
இது சாத்தியம் உங்கள் அறிவொளி
என் அகத்தை நிறைத்தாலே
இது நிச்சயம்

எனக்குள் அறிவுப்பூகம்பம்
உங்கள் கருணை மழை
என்னை நனைத்தால்
அது வெடிக்கும்
என் வாழ்வை அது நிறைக்கும்

சந்நியாசம்

பிம்பிசாரரின் நாட்டின் எல்லையில்
பிச்சைப்பாத்திரம் ஏந்திய மனிதன்!
மிஞ்சிய எஞ்சிய உணவினைப்பெற்று
உண்ணுவதற்கோரிடத்தில் குந்தினான்!

நாட்டின் எல்லையில் உலவுமிம்மனிதன்
நாட்டைப்பிடிக்கும் சதிசெய்யுமொருவரா?
வேவு பார்த்திடக்காவலர் வந்தனர்!
விஷயமொன்றும் விளங்கவேயில்லை!
பிச்சைப்பாத்திர உணவை எடுத்து
பிசைந்து வாயுள் செலுத்தியவுடனே
அக்கணம் "ஓ!..." வென வாந்தியெடுத்து
கக்கினான் மீண்டும் மீண்டும்!

வாயுள் செலுத்தலும் இடையிடை அவரோ
மனமே! இனிமேல் இதுதான் உணவு
ஆயுள் முழுவதும் அருந்துதல் இதுதான்!
அடுத்து வாயுள் வைப்பதும் வாந்தியெடுப்பதும்...

கண்ட காவலர் இவரொரு துறவிதான்
கதையுமிதையே கூறி நிற்பதால்
மீண்டும் அரசிடம் சென்று கூறினர்
மெத்தக்கவனம் யாரொன அறிவீர்!
"யாரிவர் துறவி? துறந்தவை எவையோ?"

அரசகுமாரன் மாடமாளிகை
கோட கோபுரம் செல்வச்செழிப்பு
அரச அந்தஸ்து அத்தனை
உணர்ந்த வாழ்வு!

அரசகுமாரி அழகிலும் அழகி
ஆடம்பரத்தின் உயர்நிலையுடையாள்
அறிவுடையவளே அவரது மனைவி
செல்வச்சிறப்பாய்ச் சிறந்த பிள்ளைகள்

இத்தனை சுகபோகமுடைய
உத்தமன் சித்தார்த்தன்
அத்தனை போகமும்
விட்டுத்துறந்தான்!
உச்சவாழ்க்கையில்
உயர்ந்து நின்றான்!

– கவிஞர் ஏ.இக்பால்

கவியின் ஆசை

பாறையில் பாலூறட்டும்
பாலை பசுமைபெறட்டும்
பசுமுலை அமிர்தம் தரட்டும்
மழைத்துளி தேகம் துளைக்கட்டும்
புயல் பூவிற்கடங்கட்டும்
கனலி திசை மாறட்டும்
நிலவு வெப்பமாகட்டும்
ஆகாயம் துண்டாகட்டும்
பூமி சுற்றாதிருக்கட்டும்
காற்றே கதிர் வீச்சாகட்டும்
நீர் நஞ்சாக மாறட்டும்
கல்லாறு கரைந்து ஓடட்டும்
மரங்கள் பணம் காய்க்கட்டும்
பட்டைகள் பொன்னாகட்டும்
இலைகள் இரும்பாகட்டும்
முட்கள் ரோஜாவாகட்டும்
ரோஜாக்கள் உதடாகட்டும்
தலைமுடியில் பூ பூக்கட்டும்
மீசைக்குள் மிருகம் பதுங்கட்டும்
கூந்தல் ஊஞ்சல் ஆகட்டும்
சிரசுகள் ஈரைந்தாகட்டும்
எச்சில் தேனாகட்டும்
வியர்வை அக்தராகட்டும்
சிறுநீர் பெற்றோலாகட்டும்
இதயம் விலகி இடம்பெயரட்டும்
மரணம் மடியட்டும்
என்றெல்லாம்
எனக்கிங்கு ஆசையில்லை
என் கவியுயிர்
இருளுடற் குகையை
விட்டு விலகிபோகுமுன்
காணாமல் போன எம்
தமிழ் கண்மணிகளை
கண்காட்டு தமிழ்த்தாயே ஒருமுறை

– வன்னியூர் செந்தூரன்



கானல் நிழலில் இளைப்பாறும் சிங்கங்கள்

கனவுகள் பிடுங்கப்பட்ட இந்த நகரம் பற்றி
புதையுண்ட சடலங்கள் ஏராளமான கதைகளை
காற்று வெளியில்
பேசிக்கொண்டேயிருக்கிறது ஏகாந்தமாய் ஆழ்ந்த ஏகாந்தமாய்..

நெருப்பில் எரிந்துபோன ஒரு இனத்தின் வரலாறும்
நூற்றாண்டுகளாய்த்தொடர்ந்த ஒரு யுகத்தின் முடிவிடமும்
இந்த நகரின் மத்தியில் சாம்பலானது
சடலங்களோடு சடலங்களாய்..

இன்றும் என் செவிகளில் கர்ச்சிக்கிறது
மனிதத்தை மனிதம் தின்றும் கொன்றும் அடக்கியும் முடக்கியும்
கொக்கரித்து எக்காளமிட்டபோது தண்ணீர் தண்ணீர் என்று கதறி அழுத
எத்தனையோ ஆயிரம் குரல்களின் பரிதவிப்பும் பதைபதைப்பும்..

வனப்பு நிறைந்த நிலத்தின் மேற்பரப்பில்
பேரவலங்கள் நடந்து கொண்டிருந்தபோது சாட்சியாய்
இருந்தது அந்த ஆகாயம் ஒன்றுதான்..

தொலைந்து போன உறவுகளும்
மூர்ச்சையான உணர்வுகளும்
அடையாளமிழந்த மனித இருப்புக்களும்
அபிவிருத்தி என்ற இரும்புக்கால்களினால் நசுக்கப்படுவதை
பார்வையாளர்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்..

சுயமிழந்த உரிமைக்குரல்களின் குரல்வளைகள்
அறுக்கப்பட்ட அடையாளமாய்
சிதறிக்கொண்டிருக்கின்றன சில பல குருதித்துளிகள்..

வேட்டையாடி முடிந்த பின்னர்
சிங்கங்கள் இளைப்பாறத்தொடங்கியிருக்கின்றன
பணத்தினதும் புகழினதும் கானல் நிழலின் கீழ்..

கடைசியாய் ஒன்றைச்சொல்லத்தோன்றுகிறது
புத்தரும் போதிமரமும் மலிந்து போன நாட்டில்
இன்னும் ஏன் "அவர்களுக்கு" ஞானம் வரவில்லை ????

– நிந்தவூர் ஷிப்லி

உண்மை அறிந்தவள்!

வெயிலில் எரிகிறாளா
குளிரில் உறைகிறாளா
உணவு உண்டாளா
உறக்கம் தொலைத்தாளா
என்ன செய்து கொண்ருப்பாள்?

கைச்சேதப்பட்டு இப்படி ஆனாளா
அல்லது பிள்ளைகள்
கைவிட்டதனால் இப்படி ஆனாளா?

பாதையோரம் அவளுக்கு வீடு
உடைந்த குடை
அந்த வீட்டின் கூரை!

வேளாவேளைக்கு உணவு?
படைத்தவனுக்குத் தெரியாதா
படியளக்க?
ஏதோ சாப்பிடுகிறாள்!

ஒரு போத்தல் தண்ணீரை
மூடியில் ஊற்றியூற்றிக் குடிக்கிறாள்..
தண்ணீரின் பெறுமதி
எம் எல்லோரையும் விட
அவளுக்குத் தெரிந்திருக்கிறது!

சொந்தங்கள் இல்லை அதனால்
சோகங்களும் இல்லை
பொதியொன்றைத் தவிர
அவளிடம் வேறெதுவுமே இல்லை!

உலகம் நிரந்தரமில்லை என்பதை
உலகுக்கு அறிவிக்கும்
ஞானியா அவள்?

அதனால்தான்
பேராசை, பொறாமை,
டாம்பீகம், வீண்பெருமை
எல்லாம் மறந்து
அவளது உலகில்
இன்பமாயிருக்கிறாளா???

– வெலிகம ரிம்ஸா முஹம்மத்

வளர்த்துவிடல் என்ற வளைத்துப்போடல்கள்

மண்ணில் சுயமாக கால்பதித்து
சுதந்திர மகத்துவத்தை
தடையின்றி சுவாசித்து
சோவெனக் கொட்டும் மழையில்
மனசு குளிர குளித்தெழுந்து
ஆனந்தப்பட அவாவும் ஏக்கங்களை
திசைமாற்றி....

எமது வளர்ச்சி வீரியத்தை
விதையிலேயே காயடித்து
கத்தரித்துக் கத்தரித்து தமது
பார்வைக்கு காட்சிப் பொருளாக்கி
நினைத்த வேளை நீரூற்றி
மறந்த வேளை மண்டியிட்டு
கையேந்த வைத்து.....

ஒரு BONSAI விருட்சமாய்
வளர்ந்துவிட எண்ணுகிறார்கள்
எம்மையெல்லாம் அவர்கள்.

இவர்களின் "வளர்த்துவிடல்" என்ற
வளைத்துப்போடல்கள்....

சுட்டெரிக்கும் வெயில் பனிக்கூதல்
சூறாவளிகளையும் எதிர்கொண்டு
தயவு சலுகை எலும்புத்துண்டங்களை
நிராகரித்துப் பந்தாடி.....
நிமிந்தெழ எண்ணும் எமது
நெஞ்சக் கனவுகளை தமது
சிந்தனை வஞ்சனை செருக்குகளால்
மூளைச் சலவை செய்து.....
அதிகாரங்கள் பரவலாகின்றன
காலத்துக்கு காலம்
அவர்களின் கைகளுக்குள் மாறிமாறி.

மனதின் மறுவாசிப்பு

எங்கிருந்தோ வந்த
வண்ணத்துப்பூச்சி ஒன்று
மூடிக்கிடந்த கண்ணாடி ஜன்னலின் பின்னால்
தன்னைத்தானே சிறைப்படுத்திக் கொண்டது

ஜன்னலூடாக பிரகாசமாகத் தெரியும்
நீலவான் பரப்பில்
தானும் இறகடித்துப் பறக்க வேண்டுமென்ற
பெருமுனைப்பில் அது.

எழுந்தும் விழுந்தும் பறந்தும்
எங்கெல்லாமோ முட்டி மோதியும்
எதுவுமே சாத்தியப்படாத போதும்
விடாத ஓர்மத்தில்
மீண்டும் மீண்டும் சலிக்காது.....

அந்தச் சிறு பூச்சியின்
விடுதலை வேட்கையின்
ஆவேச சிறகடிப்புக்கள்
எனது இதயச் சோணையில்
இரக்க அமிலத்தை சுரக்கவைக்க.....

வேக வேகமாய் கைகள்
ஜன்னல் கதவுகளை கட்டுடைக்க
ஒரு எறிகணைப் பாய்ச்சலில்
இறகடித்த வண்ணத்தி
ஒளி வான்பரப்பில் ஓடிக்கரைய....

அதன் விடுதலை இலயிப்பில்
மூழ்கிய என்னுள்ளே
எனது சக்திக்கப்பால் வெளியே
சிறைபட்டுக்கிடக்கும்
"மனிதம்" பற்றியதான ஏக்கங்கள்
மாறாத நெருடல்களாய்...!

—வெல்லிதாசன்

மதம் பிடித்தவர்களின் ஆட்சி

இந்த நாடு உங்ளுடையது
எங்கள் பிறைச் சீலைகளை அவிழ்த்து
காவியைப் பறக்கவிடுங்கள்

பாதைகளும் உங்களுடையதுதான்
ஹஸனைக் கிழித்துவிட்டு
தர்மபாலாவை ஒட்டுங்கள்

நிலங்களும் நீங்கள் தந்ததுதான்
வீட்டுக்கொரு அரச மரம் தாருங்கள்
வாசலில் நடுகிறோம்.

நீங்கள் மதம் பிடித்தவர்கள்
பள்ளிகளை இடித்து
பன்னசாலைகளைக் கட்டுங்கள்
போதாது என்றால்
எங்கள் வீட்டுக் கூரைகளிலும்
ஏறிநின்று வணங்குங்கள்.

பசித்தால்
எங்கள் அடுப்புகளில் கொதிக்கும்
உலையை அள்ளிக் குடியுங்கள்
அதுவும் தீராவிடின்
குழந்தைகளுக்கு ஊற்றிய பாலிருக்கிறது
எடுத்துப் பருகுங்கள்.

களைப்பு வந்தால்
காலை நீட்டி
எங்கள் திண்ணைகளில் உறங்குங்கள்
விரல்களில் நெட்டியை முறித்துவிடுகிறோம்.
போகும் போதும்
வெறும் வாயோடு போக வேண்டாம்.
மூத்தம்மாவின் வெற்றிலைத் தட்டிருக்கிறது
நாக்குச் சிவக்கச் சுண்ணாம்பைத் தடவி
நடு வீட்டுக்குள் சப்பித் துப்புங்கள்.

எல்லாம் செய்யுங்கள்
எதுவும் கேட்க மாட்டோம்
ஆனாலும் கொஞ்சம் நில்லுங்கள்
என் மகன் ஒன்றை மட்டும் கேட்கின்றான்.
பௌத்தம் என்றால் என்ன? என்று
என்ன சொல்லப் போகிறீர்கள்.

மதங்கள் ம(மி)திக்கப்படும் நாட்டின் அரசன்

அந்த நிலத்தில் நொறுங்கிக் கிடப்பது
இடித்து விழுந்த பள்ளிச் சுவரின் கற்கள் அல்ல
கலிமாவை மொழிந்த எங்களது கல்புகள்.

தொழுத பள்ளியின் இடிபாடுகள்
சுஜூது செய்த எமது முதுகின் மீது
சரிந்து விழுகிறது
ஆட்சி புரியும் காவி அரசன்
எங்கள் தலைகளை மிதித்தபடி
அதன் மீது ஏறி நடக்கிறான்.

பள்ளியின் இடிபாடுகளுக்குள் சிக்கி
மூச்சுத் திணறி ஓலமிடும்
எமது சத்தம் கேட்காதபடி
அரசனின் காதுகள்
காவியால் இறுக கட்டப்பட்டிருக்கிறது.

கைகளில் கலிபா பட்டத்தை சுமந்து வந்த அரசன்
மண்ணில் சரிந்த பள்ளியின்
கோபுர உச்சியில் நின்று
இது மதங்களை ம(மி)திக்கும் நாடு என்று
பிரகடனம் செய்கிறான்.

அவனது காலடியில்
பள்ளியின் இடிபாடுகளுக்குள்
மையத்தாகி கிடக்கிறார்கள்
எங்கள் அரசியல்வாதிகள்.

மலையகக் கவிதைத்துறையின் சில பக்கங்கள்

மொழிவரதன்

ஈழத்து இலக்கிய வரலாற்றில் மலையகமும் கணிசமானதும், காத்திரமானதுமான பங்களிப்பை செய்து வருகின்றது எனில் தவறிருக்காது. இந்நோக்கில் கவிதைத்துறையில் மலையகத்தின் இடம் பற்றிப் பார்க்கலாம்.

மலையக வரலாறு பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளின் வருகையோடு ஆரம்பமாகிறது எனப் பொதுவாக கூறலாம். தென்னிந்திய மக்கள் இதற்கு முன்னரும் பல காலகட்டங்களில் பல வேறு நோக்கங்களுக்காக வந்ததற்கான ஆதாரங்கள் பல உள்ளன. எனினும் கூட பெருந்தொகையான இந்திய வம்சாவளி மக்கள் இலங்கைக்குள் வந்தது 1833 ஆம் ஆண்டளவிலான பிரித்தானியரின் சீர்திருத்த ஏற்பாடுகளுக்கு இயைபாகவே எனலாம்.

> பிரித்தானியரின் பாரிய முதலீடு, இலங்கையில் மலிவான நிலம், தென்னிந்திய வம்சாவளி மக்களின் மலிவான உழைப்பு என்ற பின்னணியில் பிரித்தானிய நில உடைமையாளர்கள் இலங்கைக்குள் படையெடுத்தனர்.

பிரித்தானியரின் பாரிய முதலீடு, இலங்கையில் மலிவான நிலம், தென்னிந்திய வம்சாவளி மக்களின் மலிவான உழைப்பு என்ற பின்னணியில் பிரித்தானிய நில உடைமையாளர்கள் இலங்கைக்குள் படையெடுத்தனர். மற்றொரு வகையில் பார்ப்போமானால் இக்காலக்கட்டத்தில் சர்வதேச ரீதியாகவே இவ்வாறான ஒரு செயற்பாடு நிகழ்ந்தவண்ணமிருந்தது. அதாவது மலேசியா, சிங்கப்பூர், பிஜித்தீவுகள், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளுக்கு இந்தியர்கள் தொழில் நிமிர்த்தம் சென்றனர் என்பதனை பேராசிரியர் சோ.சந்திரசேகரன் அவர்கள் தனது "இலங்கை இந்தியர் வரலாறு" எனும் நூலில் (பக். 9,10,11,12) கூறிச்செல்லுகின்றார்.



யோ.பெனடிக்பாலனின் "யார் சொந்தக் காரன்" எனும் மலையக நாவலுக்கு அணிந்துரை வழங்கிய பிரபல முற்போக்கு மார்க்ஸிய எழுத்தாளர் செ.கணேசலிங்கனும் இதே பொருள் படவே மலையகத்தின் ஆரம்ப கால வரலாறு பற்றி குறிப்பிடுகிறார். எனவே பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையான "பணப் பயிர்ச் செய்கையின் வருகையோடு பின்னிப் பிணைந்ததாகவே இம்மலையக மக்களின் வாழ்வியலும் கலந்துள்ளது எனில் தவறில்லை.

இந்தியப் பின்னணியில் கோப்பி, தேயிலைப் பயிர்ச் செய்கைகளோடு ஆரம்பமாகின்றன. தென்னிந்திய கிராமங்களில் காணப்பட்ட பஞ்சம், வறுமை, நிலவுடமை, மானியமுறை பின்னணி போன்றன இம்மக்களை அம்மண்ணிலிருந்து உந்தித் தள்ளவும், பிரித்தானியரின் கவர்ச்சிகரமான "விளம்பரங்களும், கங்காணிமார் எனும் ஏஜண்டுகளின் ஊக்குவிப்பும் இம்மக்கள்கூட்டம் இலங்கை வந்து மலைமுகடுகளில் குடியமர்த்தப்பட காரணமானது எனலாம். மலையகத்தின் கவிதை வரலாறு அவர்களின் துயரம் தோய்ந்த கண்ணீர்க்கதைகளிலிருந்தே ஆரம்பமாகிறது. அவை: வாய்மொழி இலக்கியங்களாகி பரிணமித்துள்ளன. அவர்கள்தம் நீண்ட தூரப் பயணக் கொடுமைகள், தமது இரத்த உறவுகளின் இழப்புகள், ஏஜண்டுகளான கங்காணிகளின் ஏமாற்றுக்கள். தோட்டத்தில் துரைமார்களின் அடக்குமுறைகள், சுரண்டல், வேலைக்கொடுமை, பாலியல் சுரண்டல், அடிமைத்தனம், சாதிமுறைமையின் தாக்கங்கள் போன்ற இன்னோரன்ன விடயங்கள் இவர்கள் தம் வாய் மொழிப் பாடல்களின் பாடுபொருளாக இருந்தன எனலாம்.

இவைகளுக்கிடையே இவ்வடக்குமுறைக்கு எதிரான எதிர்ப்புணர்வுப் பாடல்களும் எழாமல் இல்லை.

இந்திய மண்ணில், கிராமங்களில் அன்றைய வாழ்நிலையை பின்வரும் நாட்டார் பாடல் தெளிவாக கூறுகிறது.

"வானத்திலே மழையுமில்லே
மழை பொழியக் காலமில்லே
கூடிமாடிப் பேசுங்கடி நாம
கொழும்புச்சீமை போய் பிழைப்போம்!

கொழும்புச்சீமை என்பது இங்கே இலங்கையினைக் குறித்து நிற்கின்றது. இம்மக்கள் தென்னிந்திய கிராமங்களில் விவசாய நிலங்களில் வாழ்ந்தவர்கள். மழைபொய்ப்பின் அவர்கள் தம் வாழ்வே பொய்க்கும். இதனையே மேற்குறித்த பாடல் சுட்டி நிற்கின்றது.

அவர்களது கப்பல் பயணம் தொடர்பான பாடல்:

"வாடை அடிக்குதடி
வடகாத்து வீசுதடி
சென்னல் அடிக்குதடி நாம்
சேர்ந்து வந்த கப்பலிலேஹ்ஹ

என்று பாடப்பட்டுள்ளது.

இலங்கை வந்தவர்கள் பல்வேறு துன்பங்களை அனுபவித்தனர். இவ்வேளையில் தமது பிறந்த ஊர், கிராமம் பற்றி எண்ணாமல் இல்லை. அதனையே பின்வரும் பாடல் கூறுகிறது.

"ஊரான ஊரிழந்தேன்
ஒத்தப்பனை தோப்பிழந்தேன்
பேரான கண்டியிலே
பெத்தாளை நானிழந்தேன்ஹ்ஹ

இம்மலையக மக்களின் ஆரம்பகாலம் இவ்வாறான நாட்டார் பாடல்களை கொண்டதாகவே அமைந்திருந்தது என்பதனை பல ஆய்வாளர்கள் கூறி உள்ளனர்.

மலையக வாய்மொழிப்பாடல்களைப்பற்றி எழுதும் பொழுது "அவை அந்த மக்கள் கூட்டத்தினரின் வரலாற்றுச் சான்றுகளாக மட்டும் அமையவில்லை, அவர்களது கனவுகளின் இலட்சியக் குரலாகவும் விளங்குகின்றன."என மறைந்த பேராசிரியர் க.கைலாசபதி கருத்து வெளியிட்டுள்ளார் என அமரர் சாரல்நாடன் தனது "மலையக வாய் மொழி இலக்கியம்" எனும் நூலில் (பக்கம் 17) கூறிச் செல்லுகின்றார். தங்களது உள்ளக் குமுறல்களை, எதிர்ப்பு உணர்வலைகளை, வயிற் றெரிச்சல்களை, விரக்தி, வேதனை போன்றவைகளை யெல்லாமே தமது பாடல்களில் அவர்கள் வெளிப் படுத்தினர். இதுவே இக்காலகட்டத்தின் மலையக கவிதைத்துறையின் ஆரம்பமாக இருந்தது எனின் தவறில்லை. அப்பழுக்கில்லாத வெளிப்படையான இக்குமுறல்கள் தமது மேலாதிக்ககாரர்களின் செயற்பாடுகளுக்கான சாடல்களாக மலர்ந்தன.

கங்காணிகளான இம்மக்களின் ஏஜண்டுகளின் மேல் கொண்ட வெறுப்புணர்வால் பல பாடல்கள் பிறந்துள்ளன.

"காத்தடிக்குது
கலங்கடிக்குது
கங்காணி லயம்
தூக்கியடிக்குது"

கங்காணியின் லயம் காற்றில் அல்லாடுவதைக் கண்டு அவர்கள் ஏதோ ஒருவகையில் மகிழ்ச்சியடைகின்றார்கள். கங்காணிகளின் கொடுமைகளே இம்மகிழ்ச்சிக்கு காரணம் எனலாம். (மலையகத்தமிழர் நாட்டுப் புறப்பாடல்கள் - மு.சிவலிங்கம், பக்.24)

இதே போன்றதே மற்றொரு கதாபாத்திரம் கண்டக்டர் பாத்திரம் - கண்டாக்கையா என அன்போடு அழைக்கும் இம்மக்கள் அவரோடு ஏற்படும் முரண்பாடுகள் காரணமாக பாடலால் சாடி உள்ளனர். தோட்டத்துரையின் கட்டளைகளை நிறைவேற்றுபவராகவும் அம்மக்களிடம் வேலையை பிழிஞ்சு எடுப்பவராகவும் கண்டாக்கையா காணப்படுவார்.

"கண்டிக்கும் கம்பளைக்கும்
பதினாறு கட்ட நம்ம
கண்டாக்கய்யா பொம்பளக்கி
கள்ளுமுட்டி கொண்ட...."

என்றும்

மணிக்கவத்தை தோட்டத்திலே
மயிருவத்தி கண்டாக்கையா...
உருலோச அடகு வச்சு
உருட்டுறாரே ஜின்னு போத்தல...!

என்றும் கண்டாக்கையாவின் மனைவியையும் கண்டாக்கையாவின் தோற்றத்தையும் "அகோர"மாக சித்திரித்து தமது எதிர்ப்பலைகளை பாடல்களில் வெளிப் படுத்தினர். (மலையகத்தமிழர் நாட்டுப்புறப்பாடல்கள் - மு.சிவலிங்கம், பக்.19,20)

மிகவும் ஆரோக்கியமான இயல்பான நாட்டுப் புற பாடல்கள் இம்மலையக மண்ணை மேலும் செழிப்படையச் செய்துள்ளன எனின் தவறில்லை.

இதேபோல் காதல், புதிர் போடல் போன்ற பல்வேறு உணர்வுகளை வெளிப்படுத்தும் பாடல்களும் இம்மலையக மக்களால் பாடப்பட்டுள்ளன. உதாரணத்திற்கு வள்ளி, முருகன் ஆகிய இருவருக்கும் இடையிலான காதல் தொடர்பான பல பாடல்கள் உள்ளன. அவற்றுள் சில கண்டி, கொழும்புக்கு போனால் தனக்கு "மாவுளபழுத்தப்பழம்" வாங்கி வருமாறு கூறுகிறாள் வள்ளி, முருகனிடம்.

"கண்டி கொழும்புக்கு போனாலுமே மச்சான்
போனாலுமே மச்சான் போனாலுமே அட
மாவுள பழுத்தபழம் வாங்கி வாவே மச்சான்
வாங்கி வாவே..."

இதென்ன புதுமையான பழம்...? முருகன் மூளையைப் போட்டு குழப்பிக் கொள்கிறான். அவன் முருகன் கேட்கிறான்

"கண்டி கொழும்புக்குப்
போறேன் குட்டி– அடி
போறேன் குட்டி அடி
மாவுள பழுத்தபழம் என்னாப்பழம்
குட்டி சொல்லு குட்டி– குட்டி
சொல்லு குட்டி..."

இதற்கு வள்ளி பதிலளிக்கிறாள்.

"மாவுள பழுத்தபழம் பணியாரம் மச்சான்" என்று சுறுகிறாள்.

மேற்கண்டவாறான பாடல்களே மலையக மக்களின் வாழ்வியலில் ஆரம்ப காலங்களிலிருந்தன. இதற்கு பல்வேறு சமூக பின்னணிகள் காரணமாக இருந்தன. (சிந்தனைப் பூக்கள் - பி.வேதாந்த மூர்த்தி, பக்.21,22)

காலம் போகப் போக இம்மக்கள் எம்மண்ணிலிருந்து வந்தார்களோ, அந்த மண்ணின் பண்பாடு, நம்பிக்கைகள், சடங்குகள் கலாசார பாரம்பரியங்கள் வழிபாடுகள் போன்றவற்றையும் தம்மோடு கொண்டு வந்திருந்தார்கள்.

தேசிங்குராஜன் கதை, பெரிய எழுத்து, விக்கிரமாதித்தன் கதை, பவளக்கொடி, மனோன்மணி, அல்லி அரசாணி மாலை, காத்தவராயன் கதை, குறவஞ்சி, இராமாயணம், மகாபாரதம், காமன்கூத்து, பொன்னர் சங்கர், அருச்சுனன் தபசு போன்ற இசை நாடகங்கள் கூத்துக்களை மலையகத்திலும் பின்பற்றினர். (மலையகத் தமிழர் நாட்டுப் புறப்பாடல்கள் - முசிவலிங்கம், பக்.04)

இந்நிலையில் மலையக இலக்கிய வரலாற்றிலும் சமூக எழுச்சியிலும் கோ.நடேசய்யரின் வருகை குறிப்பிட வேண்டிய ஒன்றாகும். நடேசய்யர் சிறுசிறு துண்டு பிரசுரங்களை வெளியிடுவதிலும், தேசிய உணர்வுப் பாடல்களை மனைவி மீனாட்சி அம்மாளுடன் சேர்ந்து தோட்டம் தோட்டமாக சென்று பாடுவதிலும் அக்கறை காட்டினார்.

மகாகவி பாரதி பிஜித் தீவில் தமிழர் படும் துன்பத்தைப் பற்றி பாடியது போல் மலைநாட்டில் மக்கள் படும் துன்பம் பற்றி மீனாட்சி அம்மாள் பின்வருமாறு பாடினார்:

தேயிலைத் தோட்டத்திலே பாரத
சேய்கள் சென்று மாய்கின்றார் – ஐயோ
(தேயிலை)

ஓயாது நாள் முழுவதும் – சதா
ஊழியம் செய்து கூடம் பழுத்தே கெட்ட
நோயால் வருந்தும் மக்கள்
நொந்து நொந்து தினம் நைந்து மாய்கின்றனர்.
(தேயிலை)

என்ற இப்பாடல் தொடர்கிறது (மீனாட்சி அம்மாள் பாடல்கள் - வெளியீடு பெண்கள் ஆய்வு மையம்) கோ.மீனாட்சி அம்மாளின் "இந்தியர்களது இலங்கை வாழ்க்கை நிலைமை" என்ற பிரசாரம் மாத்திரமின்றி மேலும் பலரும் இதனைத்தொடர்ந்த காலத்தில் எளிய முறையில் பாடக்கூடிய பாடல்களை எழுதி சிறிய நூல் வடிவத்தில் வெளியிட்டனர்.

கவிஞர் எஸ்.ஆர்.எஸ்.பெரியாம்பிள்ளை (நாவலப்பிட்டி), எஸ்.கோவிந்தசாமி தேவர், பி.ஆர்.பெரியசாமி, கா.சி.ரெங்கநாதன் இனிபாசகம் தொண்டன் ஆசிரியர் எஸ்.எஸ்.நாதன் பதுளை ஜில், பதுளை வ.ஞானப்பண்டிதன், சிட்டுக்குருவியார் போன்றோர்களை குறிப்பிடலாம் (மலையகம் வளர்த்த கவிதை அந்தனி ஜீவா பக்.13)

பாவலர்கள் எஸ்.பி.வேல்சாமி, அருள்வாக்கி அப்துல் காதர் புலவர் மக்கள் மத்தியில் சென்று பாடல்கள் பாடியோர்களில் அடங்குவர். இதன் அடுத்த ஒரு காலகட்டமாக ஸி.வி வேலுப்பிள்ளையின் காலத்தைக்குறிப்பிடலாம். ஓர் ஒழுங்கமைப்பு ரீதியான மாற்றம் ஸி.வியின் பின்னர் ஏற்படுவதைக் காணலாம். விசாலமானதும் உயிரோட்டம் மிக்கதுமான ஸி.வியின் ஆங்கிலமொழி மூலமான "மலையக கவிதைகள்" உலக சாளரத்தினை எட்டிப்பார்த்தது எனின் தவறில்லை.

In ceylon Tea Garden என்ற ஆங்கில கவிதை நூல் மலையக கவிதைத்துறையில் மற்றுமொரு பரிமாணத்தை எட்டியது. கவிஞர் சக்தீ அ.பால ஐயாவின் மொழிபெயர்ப்பு அவரை தமிழ் உலகுக்கு வெளிச்சம் போட்டுக்காட்டியது.

In ceylon Tea Garden
என்ற ஆங்கில கவிதை நூல்
மலையக கவிதைத்துறையில்
மற்றுமொரு பரிமாணத்தை எட்டியது.
கவிஞர் சக்தீ அ.பால ஐயாவின்
மொழிபெயர்ப்பு அவரை தமிழ்
உலகுக்கு வெளிச்சம்
போட்டுக்காட்டியது.

In ceylon Tea Garden என்ற ஆங்கில கவிதை நூல் மலையக கவிதைத்துறையில் மற்றுமொரு பரிமாணத்தை எட்டியது. கவிஞர் சக்தீ அ.பால ஐயாவின் மொழி பெயர்ப்பு அவரை தமிழ் உலகுக்கு வெளிச்சம் போட்டுக்காட்டியது.

"புழுதிப்படுக்கையில்
புதைந்த என்மக்களை
போற்றும் இரங்கற்

புகழ்மொழி இல்லை
பழுதிலா அவர்க்கோர்
கல்லறை இல்லை
பிரிந்தவர் நினைவுநாள்
பகர்வாரில்லை"

என்ற அவரது கவிதை வரிகள் இன்றும் பொருந்துவதாக உள்ளது.

ஜோர்ஜ்கீட், ஜே.விஜயதுங்க் போன்ற பல கவிஞர்களோடு சமமாகி ஸி.வி.வேலுப்பிள்ளை பேசப் பட்டார். ஒப்ஷேவர், டைம்ஸ் போன்ற இலங்கைப் பத்திரிகைகளிலும் இலஸ்ட்ரேட்டெட்வீக்லி போன்ற இந்தியப் பத்திரிகைகளிலும் நிறையவே ஸி.வி வேலுப்பிள்ளை எழுதினார் எனலாம். தலாத்து ஓயா கே.கணேஷ் பற்றிக்கூறுவதாயின் மலையகம் தொடர் பாக இவர் ஆர்ஷிக்கப்படா விட்டாலும் பல மொழி பெயர்ப்புக்களைத் தந்துள்ளார் எனலாம்.

கம்பளை கவிக்கோமான் கி.மு.நல்லதம்பி பாவலர் பற்றியும் "இசைத்தேன்" என்ற அவரது கவிதைத் தொகுதி பற்றியும் குறிப்புக்கள் உள்ளன.

மேலும் கண்டி க.ப சிவமும் கவிஞர் ஈழக் குமாரும் இணைந்து பலரது கவிதைகளை திரட்டி தொகுத்து வெளியிட்ட "குறிஞ்சிப்பூ தொகுதி" க.ப.சிவத்தின் மலைமுரசு (பத்திரிகை) மலையக கவிதைத் துறையில் மற்றொரு பக்கத்தை சிறப்பாக காட்டி நிற்கின்றது எனில் தவறில்லை எனலாம். 2/5/1965 இல் கண்டியில் வெளியிடப்பட்ட குறிஞ்சிப்பூ தொகுப்பில் 40 க்கும் மேற்பட்ட கவிஞர்களின் கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

குறிஞ்சிப்பூ தொகுப்பு கவிதைகள் என்ற சிறப்பான அந்தஸ்தைப் பெறாவிட்டாலும் கூட இம்மலையக மக்களின் ஆசை அலைகளை ஆர்ப் பாட்டத்தைக் கேட்கலாம் என்று பொருள்பட இர.சிவலிங்கம் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். மலையக கவிதைத்துறையை பார்க்கும் வேளையில் முன்னர் பின்னரான சில கவிஞர்களின் பெயர்களை குறிப்பிட வேண்டிய தேவை உள்ளது. வழுத்தூர் ஒளி ஏந்தி, த.ரஃபேல், டி.எம்.பீர் முஹம்மது, க.இராம நாதன், சிதம்பர நாத பாவலர் நாதன் இப்படிப்பலரை குறிப்பிடலாம்.

மலையக கவிதைத்துறையில் 1956 ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட அரசியல், சமூக மாற்றம் தாக்கத்தை ஏற்படுத்தியதா என்பது தொடர்பாகவும் பார்க்கலாம். இதேவேளை மலையகத்தில் ஏற்பட்ட திராவிட முன்னேற்றக்கழகத்தின் அரசியல் சித்தாந்தம் இலக்கியத்தாக்கங்கள் ஆங்காங்கே கவிஞர்களின் கவிதைகளில் பிரதிபலித்தன எனலாம்.

கலாநேசன், லிங்கம் அருணன், தமிழோவியன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள் மேலும் இடது சாரித்துவ மாக்ஸ்சிய சிந்தனைகளின் தாக்கத்தால் சில கவிஞர்கள் சமூக மாற்றம் வேண்டி எழுதினர். பன்னீர் செல்வம், அரு.சிவானந்தன் மரியதாஸ் போன்றோரை குறிப்பிடலாம். மேலும் சிலர் சமூக மேம்பாட்டுக்காக பாடல் எழுதினர். கு.இராமச்சந்திரன், ஈழக்குமார்,

ஜோர்ஜ்கீட், ஜே.விஜயதுங்க் போன்ற பல கவிஞர்களோடு சமமாகி ஸி.வி.வேலுப்பிள்ளை பேசப் பட்டார். ஒப்ஷேவர், டைம்ஸ் போன்ற இலங்கைப் பத்திரிகைகளிலும் இலஸ்ட்ரேட்டெட்வீக்லி போன்ற இந்தியப் பத்திரிகைகளிலும் நிறையவே ஸி.வி.வேலுப்பிள்ளை எழுதினார் எனலாம்.

பொ.பூபாலன் (நீலாபாலன்) மல்லிகைக் காதலன், பிரேம சம்பு, தும்பிகுமாரன், விஸ்வநாதன், ஸி.எஸ்.காந்தி, சாரல்நாடன், வெளிமடை குமரன் ஏ.வி.பி கோமஸ், மலைத்தம்பி, குமரன், அமரன் குறிஞ்சித்தென்னவன், மலைப்பொன்னி (மல்லிகை சி.குமார்), குறிஞ்சி நாடன், எல்.அஸோமட், (ஈழவாணன், சாருமதி, நா.செல்லத் துரை, வி.கந்நவனம், புரட்சி கமல் - மலையகத்தில் வதியும் வேளை கவிதை படைத்தனர்)

கண்டி முத்து சம்பந்தர் பதுளை புலவர் அப்துல் காதர் "பானா"தங்கம், சி.எம்.சங்கர், மகேஸ்வரி கிருஷ்ணன், பரிபூரணன், முத்துவேலவன், க.பூரணி சண்முகவேல், ஜி.தில்லைநாதன், மு.சிவலிங்கம், பண்ணா மத்துக்கவிராயர், ஏ.காதர்சாரணாகையூம், எம்.ஸி.எம் சுவையர் எலியாசன் காங்கிரஸ்சாமி, பொ.கிருஷ்ணசாமி, மொழிவரதன் போன்ற பலருடன் க.ப.லிங்கதாசன், சதர்லேண்ட துரைசாமி, தமிழ்ச்செல்வன் மாசிலாமணி, புஸல்லாவை இசுமாலிகா, க.வேலாயுதம் (அப்புத்தளை) போன்றோரைக் குறிப்பிடலாம். 1967 இல் வெளிமடை மா.சின்னத்தம்பியின் (வெளிமடைக்குமரன்) தூவானம் தொகுதி வெளிவந்தது

1993 இல் குன்றத்துக் குமுறலில் இ.தம்பையா, சிவ.இராஜேந்திரன், இறாகலை பன்னீர், சிவசேகரம், ஆகியோரின் கவிதைகள் அடங்கின தொகுப்பு வெளிவந்தது.

1964 ஆம் ஆண்டு ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தம் இம்மலையக மக்களை கூறுபோட்டது. இந்தச்சமூக அவலங்கள் கவிதைகளில் எதிரொலித்தன. அரு.சிவானந் தத்தின் "சென்று வருகிறேன் ஜென்ம பூமியே" கவிதை குறிப்பிடத்தக்க ஒன்று. "வண்ணச்சிறகு" கவிதைத் தொகுதி மலையக மண்ணின் தொடர்பைக் குறித்து வெளிவந்த ஒரு கவிதைத்தொகுதியாகும்

தொடர்ந்து பலர் எழுதி வருகின்றனர் பல புதிய கவிஞர்கள் குறிப்பாக புதுக்கவிதையாளர்கள் தோன்றி உள்ளனர் அவர்கள் தொடர்பாக பார்க்கலாம். நாக பூஷணி கருப்பை (நெற்றிக்கண்), கந்தையா கணேச மூர்த்தி (கமலாடி வீதி ஆசிரியர்), அருண்வெங்கடேஸ்(நெருப்புச்சோலை) கோ.கிசோகுமார் (மூங்கில்கூடை) நித்திய ஜோதி (மகுட வைரங்கள்) சு.தவச்செல்வன் (சிவப்பு டைனோசர்கள்) க.உதயகுமார் (வேதனையும்—

சோதனையும்) அட்டன் மகேந்திரன் (விடை தெரியாத வினாக்கள்) கபிலன் (அந்திவானம்) எம்.கருணாகரன் (அவமானப்பட்டவனின் இரவு) புஸல்லாவை கணபதி (அச்சுக்குவராத கவிதைகள்) பசுமலை வீ.கே. பெரிய சாமி (முடிந்தால் என்னை மன்னித்துவிடு) மை.பன்னீர்ச் செல்வம் (ஆறு ஐந்தாய் மாறும்) க.சரத்பாபு (நெஞ்சம் வலிக்குதம்மா) சி.கிருஷ்ணபிரியன் (வேரின் பிரசவங்கள்) கோகுலன் (சுவடுகள்) பெ.திரிலோகசுந்தரி (வேரலின் வேதனை) ஷீலாமாணிக்கம் (மனிதம்) கோபல் பிரேம்குமார் (ஜெயகுமரன்) (கவிதையால் கண்ணீர் துடைப்போம்) வட்டவளை ஆ.புனிதகலா போன்றோரைக் குறிப்பிடலாம்.

லுணுகலை றஷீனா புகார், அட்டம்ஸ் ஜேம்ஸ் விக்ரர், எச்.எவ்.ரஷ்னா, சண்முகம் சிவக்குமார், மாரி முத்து சிவக்குமார், சே.ஜே.பபியன், காசல்ரி எலிசபெத், தலாவாக்கலை த.எலிசபெத், போர்டமோர், ச.சத்தி மலர், விக்னேஸ் வரன், காவத்தை மகேந்திரன், சந்திர லேக்கா, கிங்ஸ்னி கோமஸ், மஸ்கெலியா மோக்னா, தலாவாக்கலை பெரியசாமி, மடவளை ஏன்ஸார் எம்.ஷியாம், லுணுகலை ஸ்ரீ, வே.தினகரன், திலகர்.தி தம்பிமுத்து (கொட்டக்கலை) கல்மதுரையூரான், டயாமகல்கி, ஆர்.காளிதாசன் (ருத்ரதாகம) மு.கீர்த்தியன் பாமஸ்டன் மோகன், வெலிங்டன், சா.யாமினி, மேற்குறித்த புதிய இளம் கவிஞர்கள் தொடர்பான விடயங்களும் முழுமையானதாக இல்லை மேலும் நீண்ட கால கவிஞர்களினதும் இன்னும் பலரது மான கவிதை தொகுப்பு தொடர்பாக வும், கவிஞர்களின் பெயர்கள் தொடர்பாகவும் "பிறிதொரு" கட்டுரை தயாராகி வருகின்றதை இவ்வேளையில் நினைவூட்ட விரும்புகிறேன். ஆகவே அக்கட்டுரையில் மலையக கவிஞர்களின் முழு விபரங்களும் கொண்டு வரப்படவுள்ளன என்பதை கவனத்திற் கொள்ளுமாறு வாசகர்களை வேண்டுகிறேன். "மலையகக் கவிதைத் துறையின் சில பக்கங்கள்" எனும் இக்கட்டுரை வெளிவர தூண்டியாக இருந்த ஜீவநதி பரணிக்கு நன்றி கூறுவதுடன் ஈழத்து இலக்கியவரலாற்றில் மலையக இலக்கியம் வகிக்கும் வகிபாகம் தொடர்பாகவும், சிறப்பு, தனித்துவம் தொடர்பாகவும் ஆய்வுசெய்ய இவ்விபரங்கள் துணைபுரியின் மகிழ்வேன்.

•

இல்லாதிருக்கிறாய்...(இல்லை + இருக்கிறாய்)

நீ இருக்கின்றாய் என்பதற்கும்
அருகில் இல்லை என்பதற்கும்
தூரம் காற்றிடையே.....

அருகில் இருக்கும் போது
உன் வாசனை நுகர்கின்றேன்
இல்லாத போது
காற்றில் உணர்கின்றேன்

காணும் போது
கண்களுள் நிறைக்கின்றேன்
காத்திருக்கையில்
கனவுகளில் சுவைக்கின்றேன்

பக்கத்தில் இருக்கும் போது
ஸ்பரிசிக்கின்றேன்
தொலைதூரமாகும் போது
உன் நினைவுகளை
சுவாசிக்கின்றேன்

நேரில் நீ தருகின்ற
பூக்களை இரசிக்கின்றேன்
இல்லாத போது
உன் புகைப்பட
சிரிப்புக்களுள் சங்கமமாகின்றேன்

இருக்கும் போது
கார் சத்தம் கேட்டு
விடுதி கதவருகில்....
இல்லாத போது
வரும் நாளுக்காய்
கலண்டரருகில்.....

அருகிலிருக்கும் போது
காதோரம் கிசுகிசுக்கும்
காதல் மொழிகள்...
இல்லாத போது
காது வரை மூடிய
கம்பளிக்குள் கற்பனைகளின் தொல்லை...

நீ உள்ள போது
உன் துணி துவைக்கின்றேன்
இல்லாத போது
உடைகளில் – உன்
வாசம் பிடிக்கின்றேன்

இரவில்...
உனக்குள் தொலைகின்றேன் – நீ
இல்லா ராத்திரிகளில்
தலையணைகளை
இறுக்கிக் கொள்கின்றேன்

நீ உடன் இருப்பதும் சுகம்
அருகில் இல்லாதிருப்பதும்
ஒரு சுகம்...
உள்ள போது சேமித்தவை
இல்லாத போது
கனவுகளாக... ஆக
நீ இருக்கின்றாய் என்பதற்கும்
அருகில் இல்லை என்பதற்கும்
தூரம் காற்றிடையே...



கேஷாயினி எட்மண்ட் (மீரா)

யாரு கண்டார் பராபரமே!

பச்சைக்கிளிகளின் பறப்பை
அதன் சிறகுகள் அளந்தெழுதிய
வானத்தின் நீளத்தை

தவில் மேதை
பழனியின் விரல்கள் போடும்
தாளத்தை
மோட்சம் தந்த மேளநாதத்தை

சருகுகளின் மெத்தை மேலே
தலை சாய்த்து
வானத்திரை விலத்தி
மேகங்கள் நடத்தும் ஓரங்க நாடகத்தை

மூங்கில் காட்டுக்குள்
பறவைகள் மீட்டும் இராகத்தில்
பிரமிள் எழுதிய கவிதையை

நல்ல உடையின்றி நாணப்பட்டு
துளித்துளியாய்
கரைந்து போகும்
பசியின் வலியறியாது

இயல்பு வாழ்க்கைக்கு அப்பால்
சமூக வாழ்கையிலிருந்து ஒதுங்கி
யதார்த்த சூழலிலிருந்து
விலகி யாரால் தான் எழுத முடியும்

சுகமோ சோகமோ
அவமானமோ வெகுமானமோ
எதுவுமற்ற ஞான சூனியமாக இருந்து
கொண்டு யாரால் தான் எழுத முடியும்

அனுபவத்தின் கர்ப்பத்தில்
கடினமானதாக இருப்பதை
எழுதுவதற்கு இலகுவானதாக
இருக்கலாம்.

இவற்றை உள்ளதை உள்ளவாறு
அக்குவேறாய் ஆணிவேறாய்
அனுபவப்பாத்திரத்தில் உள்ளதை
அள்ளி வார்த்து எழுதியவனை நோக்கி

மூடிய அறைக்குள்ளிருந்து
வார்க்கும் இலக்கிய விமர்சனம்
பிரபஞ்சம் சிருஷ்டிக்க வந்த
எத்தனை எழுத்தாளனை
இல்லாதொழிக்குமோ
அல்லது எத்தனை எழுத்து ஞானிகளை
ஞானம் பிழிந்து எழுதவைக்குமோ
யாருகண்டார் பராபரமே.

மட்டுவில் ஞானக்குமாரன்

அறுபதின் ஆறுதல்

என் உயிரும் உனக்காக
என் உழைப்பும் உனக்காக
துன்பம் உனக்கென்ன – நீ
துவள்வதும் எதற்காக?

நரை திரை வந்திடினும்
நாடி நரம்பு தளர்ந்திடினும்
நொடியிலும் அழியாதே
உன்மேல் கொண்ட காதல்

வஞ்சியுன் இளமை
கெஞ்சி நான் பெற்றதில்லை
கொஞ்சியே பெற்றதுண்டு
அஞ்சி அழுவதேனோ...?
ஆரமுதே என்றும் நானுனக்கே.

மல்லிகை மணம் வீசி
அள்ளி அணைத்திடவே
மயக்கம் தலைக்கேறி
போதை வெளியினிலே
எனை மூழ்க வைத்தாயே!

"நீ என் விளைநிலம்"
நான் சொன்ன மறுகணம்
விரும்பியபடி விதைத்து மகிழ்ந்திடவே
விழித்திருந்தே என்னை
தொடவைத்தாய் விண்ணை!

உழைத்து களைத்து வந்த
உன் கணவன் என்னை நீ
அழைத்து இரு கை நீட்டி
நெஞ்சிடையே இறுக்கி நீயும்
கொஞ்சி முத்தம் பல தந்து
தலைதடவி தாயாய் நின்றாய்
தாரமே நான் மறவேன் உன்னை!

உள்ளம் கலந்திங்கே
இருவர் ஒருவராகி
காலக் கடலில் மூழ்கி
முத்துக்கள் மூன்று பெற்று
முழுவாழ்வு பேறு பெற்ற
முப்பது வருடக் காதல்
முடிந்திடுமோ கண்மணியே

அறுபதில் நானிருந்தாலும்
இருபதின் துள்ளளோடு
நம்மை நாம் அணைத்து
அடைந்திட்ட இன்பம் யாவும்
இன்றுபோல் இனித்திடுதே
இனியவளே
இனிக் கவலை என்ன?

யாழ். ஸஸனப்

நான் காத்திருக்கிறேன்

நான்
இதுவரை பேசப்படாத வார்த்தை
அகிம்சை கொண்ட ஒரு சோடி உதடுகளுக்காக காத்திருக்கிறேன்

நான்
மூல உயிர் அணு
ஆண்டவனால் இரட்சிக்கப்பட்ட ஒரு கருவறைக்காய் காத்திருக்கிறேன்

நான்
மீட்கப்படாத கவிதா உணர்வு
விலை போகாத ஒரு யதார்த்த கவி ஒன்றிற்காய் காத்திருக்கிறேன்

நான்
குருசேத்திரத்தின் கீதை
ஒரு பராமானந்தனின் வருகைக்காக காத்திருக்கிறேன்

நான்
ஒரு புல்லாங்குழல்
என்னை இசையாக மாற்றும் விரல்களுக்காய் காத்திருக்கிறேன்

நான்
கனவு
நிம்மதியான அந்த உறக்கத்திற்காய் காத்திருக்கிறேன்

நான்
நினைவு
பாரதியின் கவி உள்ளத்திற்காய் காத்திருக்கிறேன்

நான்
சூரியன்
நல்லலொரு விடியலுக்காய் காத்திருக்கிறேன்

நான்
ஒரு தேடல்
மனிதரின் உன்னத முயற்சிக்காய் காத்திருக்கிறேன்

நான்
ஒரு எழுத்துச் சட்டகம்
அர்த்தமுள்ள அகராதிக்காய் காத்திருக்கிறேன்

இறுதியாய்
நான்
ஒரு மானிடம்
உலகில் அங்கொன்றும் இங்கொன்றுமான ஜீவிக்கும் அந்த மனித
நேயர்களுக்காய் காத்திருக்கிறேன்



காற்றும் வியர்த்தது

முடிவல்ல தொடக்கம்
பாடம் தொடர்ந்தது
அவனால், அவர்களுக்கு
பாடத்திற்கே பாடம் சொல்ல
அவன் அவளைத் தேடினான்
பிரமாஸ்திரம் போல
எங்கும் வியாபித்த பார்வை
தாமதங்களின் தவிப்போடு
அவள் இதோ
அவன் இதயம் சிறகானது
அவனின் குழப்பமான
விளக்கங்கள் தொடர்ந்தன
அவள் எழுந்து நின்றாள் – தெளிவான வினாக்களுடன்
அங்கே
காற்றுக்கும் வியர்த்தது



சொல்ல முடியாத துயரங்கள்

நான் உடைந்து போவதற்கு
ஒரு நிமிடம் முன்னால்
நம் பிணைப்பு இருந்தது...

சொல்ல முடியாத துயரங்களை எல்லாம்
செப்பனிட்டு செப்பனிட்டு
என்னை இழந்தேன்...
வலிந்து பெறப்பட்ட புன்னகையொன்றை
மிகப் பிரயத்தனப்பட்டு தூக்கியபடி
ஒவ்வொரு பொழுதாய் கழித்தேன்.

உன்னோடு பேசி
மகிழ்ந்து கிடக்க நினைக்கும் போதெல்லாம்
தடுக்கப்படும் வக்கிரமாய்
ஆக்கப்பட்டு ஆளப்பட்டு
திணிக்கப்படும் பண்டங்களையெல்லாம்
துணிவுடன் ஏற்றேன்.....
பாதம் வீங்கும் கர்ப்பிணி போல
எல்லாவற்றையும் உன்னிடம் மட்டும்
சுகப்பிரசவத்துக்காய் அழைத்து வரும் போது
கதறக்கதற கத்தியால் கிழித்து
நினைவை வடுவாக்கினேன்.....

சற்று நேரத்துக்கு முன்னர்
அடக்கம் செய்யப்பட்ட என் நினைவுகளுக்கு
முன்னால் அமர்ந்து
ஒப்பாரி வைக்கவாவது உன்னையழைக்கலாம்
என்று நெருங்கினேன்
புதைக்கப்பட்ட உன் நினைவுகளின்
நினைவு கூட இன்றி
சிரிப்பதில் மும்முரமாய் இருந்தாய் நீ...!

ஈரம்

கடைசி ஆயுதமாய்
ஒரு போதும் அழுகையை பிரயோகிக்கவில்லை...
உன் மின்சாரம் கலந்த மூச்சுக்காற்றில் தான்
என் இதயத்தின் கடைசிச்சொட்டு ஈரமும் காய்ந்து உருகியது...

கன்னம் நிரம்பிய முத்தங்களுடன்
உன்னை சந்திக்க ஆசை...
தொப்பலாய் நனைந்த முகில் கூட்டமாய்
உன் ஒட்டுமொத்த தாக்குதலுக்கும்
இலக்காகும் இலைகள் நிரம்பிய மரம் நான்...

ஈரம் காயாத நாளொன்றில்
அசைத்துப் பார்க்க ஆசைப்படாதே...
குலுங்கிக் குலுங்கி அழுதுவிடும் அபாயம்
உயிர்வரை தெரிகிறது...

வெளியே முளைத்துவிடக் கூடிய
இதயம் ஒன்று(ம்) இருக்கிறது...
இளஞ்சிவப்பு நிறத்தில் உன் ஞாபகங்களை
சொட்டிக்கொண்டு...
நீ அள்ளித்தரும் ஏக்கங்களை பருகிக்கொண்டு
எப்போது கோடை வரும் என்று
வார்த்தைகளால் வஞ்சிக்கிறது...

இருந்த போதும்
ஒரு கணமேனும்
கடைசி ஆயுதமாய்
அழுகையைப் பிரயோகிக்கப் போவதில்லை.....
ஓர் இனிய வசந்த காலத்தில்
உனை சந்திக்க நேர்ந்தால் மட்டும்
ஒட்டு மொத்த ஸ்பரிசங்களையும்
பரிசளித்து மகிழ்வேன்.

நிலம் என்ன கொடுத்தது

தண்ணீரும் சோறும்தந்த மண்ணைத் தந்தநிலம்
கண்ணீரும் கதறல்களும் கூடவே தந்தநிலம்
விண்ணோடும் முகில்நீரை மிதமாகத் தந்தநிலம்
தண்ணென ஒளிவிழுந்து தவிப்பையும் தந்தநிலம்

திண்ணென உடல்வலிமை திரட்டியே தந்தநிலம்
மண்ணினுள் மறையும்படி மிரட்சியும் தந்தநிலம்
அண்டி வருவோரை அணைக்கும்மனம் தந்தநிலம்
அண்டிவைத்து இனம் அழிப்போரையும் தந்தநிலம்

எண்ணிய கருமங்கள் நிறைவேற்றவழி தந்தநிலம்
உண்மை மறைத்துஊரை ஏய்ப்போரையும் தந்தநிலம்
பண்பான பழக்கமுடன் பண்பாட்டையும் தந்தநிலம்
எண்ணையும் எழுத்தையும் எறிந்தோரையும் தந்தநிலம்

உண்டி சுருங்கச்சுருங்க உழைப்போரைத் தந்தநிலம்
வண்டி பெருகவைத்து வதைப்போரையும் தந்தநிலம்
தெண்டித்தும் உதவுவோரை தெருவினிலே தந்தநிலம்
கண்டும்காணாதது போல் களர்வோரையும் தந்தநிலம்

வண்ணவண்ணச் சோலைகள் வாவிகள் தந்தநிலம்
பண்ணப்பண்ண வளர்ந்திடும் பயிர்களும் தந்தநிலம்
உண்ணஉண்ண உணவுகள் உறைவிடம் தந்தநிலம்
எண்ணஎண்ண இனித்திடும் ஏற்றங்கள் தந்தநிலம்

கண்ணியமாய் வாழ்ந்திடவே கல்வியும் தந்தநிலம்
புண்ணியம் பாவமென மதங்களும் தந்தநிலம்
எண்ணிலே அடங்காத நிறைகுறைகள் தந்தநிலம்
வண்ணமாய் என்றும்வாழ வாழும்வழி தந்தநிலம்

நுண்ணிய கருத்துக்கள் நூல்களிலே தந்தநிலம்
கண்ணாகக் காத்திட காவியங்கள் தந்தநிலம்
பண்ணாக இசைத்திட பாடல்கள் தந்தநிலம்
ஒண்றாக வாழ்ந்திட ஒழுக்கங்கள் தந்தநிலம்

எண்எழுத்து அறிவித்தவன் இறைவன் என்பதனை
கண்ணெனக் கூறிடவே கடல்மீண்டு வந்ததெங்கள்
திண்ணிய தமிழ்மொழியைத் திமிருடன் வளர்த்தநிலம்
என்றுமே போற்றிநாம் ஏற்றமுடன் வாழ்ந்திடுவோம்

– நாகலிங்கம் சிவயோகன்



கேளுங்கள் தடுக்கப்படும்

தாகத்தில் தவித்துழன்று
தண்ணீரைத் தேடுகிறோம்
மேகத்தைப் பிழிந்தெடுத்து
மெல்லக்குடி என்கின்றாய்

வயிற்றுப்பசி தீர்ப்பதற்கு
வழிசொல்லு என்கின்றோம்
லயித்துக் கவியெழுதென்று
லாவகமாய்ச் சொல்கின்றாய்

கூரையில்லாக் குடிசைக்குள் – நாம்
குடியிருக்கும் நிலையறிந்தும்
ஈரமில்லா இதயத்துடன் – மீண்டும்
இருப்பவர்க்கே உதவுகின்றாய்

நாதியற்ற ஏழையராய் – நாம்
நடுத்தெருவில் நிற்கையிலும்
போதிமரப் புத்தனுக்கு – நீ
பொன்னாடை போர்த்துகிறாய்

பூர்வீகம் தனை இழந்து
பொய்யாக வாழுகிறோம்
தார்மீகக் கதைகள்பேசி – நீயோ
தழலள்ளி வீசுகின்றாய்

தரித்திரத்தில் சிக்குண்டு – நாம்
தடுமாறி ஓடுகையில்
சரித்திரத்தில் இடம்பிடிக்க – நீ
சங்கதிகள் தேடுகின்றாய்

மூச்சுவிடும் காற்றைக்கூட
முழுவதுமாய்ப் பறித்துவிட்டு
"ஆச்சரியம்" ஆக்கவென்று
அடிக்குரலில் கூவுகின்றாய்!

– மன்னூரான் ஷிஹார்

மீண்டும் கருவறை தேடுகிறேன்

அண்டத்தில் நீ சுமந்தாய்–
தரணியில் நான் பிறக்க.
பத்து மாசம் –சுமை தாங்கி
பட்டினியும் நீ கிடந்தாய்.
பட்டபாடு யார் அறிவார்...
கொசுக்கடியும் குளிர்காற்றும்
சில்லென்று வீசினால்.
தாங்கமாட்டேன் என்ற காரணத்தால்
பூட்டிய அறைக்குள்ளே. என்னை
பத்து மாசம் சிறைவைத்தாயே...
தண்ணீர்த் தாகம் பெருக்கெடுத்தால்
வற்றாத உன் உதிரக் கடலில் தினம் தினம் நான் குளித்து
நீ உண்ணும் உணவில் என் –காலம் கடந்த தம்மா.
எட்டி எட்டி எத்தனை உதை உதைத்திருப்பேன்
பூமியில் தவழ்ந்து பார்ப்பதற்கு
உன் வயிற்றின் அண்டமே வலியாய் வலித்திருக்கும்–தாயே.
தாயின் வயிற்றில் சில காலம் கவலை அற்ற மனிதனாய் தூங்கினேன்
யார் கண்ணும் படக் கூடாது என்பதற்காய்
அவள் சுற்றி கட்டுவாள் சேலையாலே
என் தாயின் அன்பை நான் அறிந்தேன்
சேய் அறியாத தாய் மனம்
காட்டிய அன்பு. என்றென்றும் அழிக்க முடியாது.
என்னை நீ பெற்றெடுக்க முதுகு வலி பொறுத்தாயே
பூமியில் நான் வந்தபோது நீ அடைந்தாய்– பரவசமே
நீ எனக்கு கருவில் உயிர் தந்து உறவுகளை அறிய வைத்தாய்
நீ என்னை கருவில் –சுமந்த போது
அடைந்த துன்பத்தை விட–நீ
எனக்காக அடையும் துன்பம் –இப்போ அதிகம்மா.
உனக்காக நான் ஒரு விண்ணப்பம் எழுதுகிறேன்
பூமியில் நடக்கும் சமூக சீர்கேடுகளை
என் கண்ணால் பார்க்க –முடியாது தாயே.
மீண்டும் உன் கருவறையை தேடுகிறேன்
சில காலம் வாழ்வதற்காய்
மீண்டும் உன் மடியினில் சுமப்பாயே தாயே

– த.ரூபன்

பேய்களற்ற ஊரும் – ஒரு பயந்தாங்கொள்ளி பூசாரியும்

நான் ஆத்மாக்கள் என்றேன்
நீ பேய்கள் என்றாய்
முதலில் கிழக்குப் பக்கமிருந்த
புளியமரத்தை தறித்தாய்!
ஒரு போலிப் பூசாரி உடுக்கடித்து, கலையாடி
தன் போலி முகத்தை மறைக்க
பேய்கள் பற்றிய கதைகளை அவிழ்த்துவிட்டார்
என் ஆத்மாக்கள்
வடக்கு பக்கமிருந்த வீட்டில் குடியேறின.
வேள்வித் தீ வளர்த்து, பலியிட்டு
வடக்கு வாசலை முடக்கி
பேய்களை கலைத்து விட்டதாய்
தலைமைப் பூசாரி சன்னதமாட,
எடுபிடிகளும் எழுந்து நின்று கூத்தாடினர்.
என் ஆத்மாக்களான
உன் பேய்கள் இப்போது
ஊரில் இல்லை!
விளக்கேற்றி,
நைவேத்தியம் படைத்து,
பாலாபிஷேகம் செய்து பேய்களை விரட்டிய
தலைமைப் பூசாரி கடவுளாக்கப்பட்டார்.
நீடூழி வாழ்க...
பேய்கள் வாழ்ந்த காலத்தில்
குன்றும், குழியுமாயிருந்தன வீதிகள்
கடவுள் வீதியை திருத்தியமைத்தார்
பேய்கள் இரும்புகளை தின்று தீர்த்திருந்தன
அப்போது தண்டவாளங்களும் களவு போயிருந்தன
கடவுள் தண்டவாளங்களும் அமைத்து தந்தார்
இருட்டினாலானது
பேய்களின் இருப்பிடம் என்பதால்
மின்சாரத்தை பேய்கள் துண்டித்திருந்தன
கும்மிருட்டானது ஊர் மனைகள்
கடவுள் மின்னொளி தந்து
ஒளிக்கடவுளானார் நீடூழி வாழ்க!
யாரங்கே!
பேய்க்கதை கதைப்பது?
மீண்டும்
உடுக்கை தேடத் தொடங்கினார் கடவுள்.

– மு.யாழவன்

அலைந்து திரிந்த ஆளுமை : பிரமீள்

இ.சு.முரளிதரன்



தமிழ்க்கவிதையின் மீநுண் தேர்ச்சி சுவறிய மேதமையாக பிரமீள் இனங்காணப்படுகின்றார். தருமராசன் அன்னலட்சுமி தம்பதினருக்கு ஒரே மகனாக திருகோணமலையில் பிறந்தாலும் (20.04.1939) எழுபதுகளின் கால்கோள் நிலைக்காலத்தில் சென்னையில் வாழ்வினைத்தொடர்ந்தார். வேலூரை அடுத்துள்ள கரழக்குடி என்ற சிறு கிராமத்தில் இயற்கை எய்தும் வரை (06.01.1997) தமிழக வாசியாகத் திகழ்ந்தார். சொற்ப வசதி பொருந்திய அறை ஒன்றினிலே தனிமை விரும்பியாக வாழ்நாளைப்போக்கிய "பிரமீள்" ஓவியக் கலையிலும், சிற்பக்கலையிலும் ஆற்றல் மிகுந்தவர். போக்குவரத்திற்கான பொருளாதாரப் பற்றாக்குறை யால் தெருக்களில் அலைந்து திரிந்த ஆளுமையாக விளங்கினார்.

கட்டற்ற கவிதையுலகின் கலகக்காரர்களில் பிரமீளுக்கும் சிறப்பிடம் உண்டு. பாரதி, புதுமைப்பித்தன் என்னும் ஆளுமைகளுக்குப் பின்னராகத் தோன்றிய பேரிடைவெளியை நிரப்பும் அபார ஆற்றல் மிகு படைப்பாளி என்ற அடையாளக்கட்டுமானத்தில் சிறு தொய்வு காணப்படுவதை எவராலும் நிராகரிக்க முடியாது. தனிநபர் விரோதங் கடந்த அந்தர வெளியில் பிரமீள் மையங்கொண்டிருப்பின், அத்தகைய தொய்வுக்கான சாத்தியக்கூறுகளைக் காலம் நொருக்கி யிருக்கும். அர்த்தம் செறிந்த அடர்த்தியான நட்பினைக் கூட அற்பகாரணங்களுக்காக தூக்கியெறியும் இயல்புடையவராகவே பிரமீளை இலக்கிய உலகம் இனங்காண்கிறது. சுந்தரராமசாமி, வெங்கட்சாமி நாதன், ஞானக்கூத்தன், நகுலன் எனப்பலர் மீது வன்மமான வசனங்களைக் கையாண்டு விரோதத்தின் உச்சத்தினை மொழியில் வடித்துள்ளார். பிறர் பலவீனங்களை படைப்பிலே வெளிப்படுத்தி, அவர்கள் அடையும் துன்பங்களை நயக்கும் கொண்டாட்ட உணர்வு பிரமீளிடம் இருந்துள்ளது. வெங்கட்சாமிநாதனை "ஆபாசமான மலையாளப் படங்களைப்பார்க்கும் மனவக்கிரங்கொண்டவர்" என எழுதியதெல்லாம் தனிநபர் தாக்குதலின் நீட்சியேயாகும். "எங்கிட்டுப் பார்க்கிறே வெங்கிட்டு விமர்சகா" போன்ற கவிதை வரிகளிலும் தன்னிலையில் தாழ்ந்து விடுகின்றார். எனினும் தூண்டுதல் மௌனத்தை (Evocative Silence) கவிதையில் புதைத்து முடிவற்ற விவாதங்களுக்கான திறவுகோலாக்கி, பல்வகைமை வாசிப்பின் சாத்தியங்களை உருவாக்கியதால் புறந்தள்ள முடியாத புதிராக தமிழிலக்கியப்பரப்பினை வசீகரித்தவாறு நிமிர்ந்து நிற்கிறார்.

தீவிர வாசிப்பும் பன்முகச்செல்நெறிப் புலமையும் பொருந்திய பிரமீளின் படைப்புக்கள் தனிமனித அகமியில் மாறுபட்ட தரிசனத்தைப் பாய்ச்சும் வல்லமை மிகுந்தவை. தூலமான படிமங்களின் வாயிலாக சூக்குமமான தேடல்மிகுந்து கட்டிறுக்கமான சொல்லொழுங்கில் பிரமீளின் கவிதைகள் அமைந் திருந்தன. மௌனத்தின் விஸ்வரூபத்தை இவரைப்போல அலாதியாகப்பதிவு செய்தவர் யாருமேயில்லை!

ஈழப்போராளிகள் கேட்டுக்கொண்டதற்கமைய தமிழீழத்திற்கான தேசிய கீதத்தை எழுதினார். எனினும் போராளிகளால் எந்தத்தருணத்திலும் பயன்படுத்தப்படவில்லை.



ஒளிப்படம் - யாத்திகன்

நடைமுறைக்கு ஒவ்வாத கற்பனைக்கருதுகோள் என ஒதுக்கிவைக்கப்பட்ட ஐயன்ரீனின் சார்புக் கோட்பாட்டின் வீரியத்தை ஹிரோசிமா - நாகசாகி அபத்த நிகழ்வில் உலகமே அதிர்ந்து அறிந்த போது, ஐயன்ரீனின் ஆற்றாமையை $E = mc^2$ என்ற கவிதையில் அகலித்த அனுபவத்தொற்றலாக வெளிப்படுத்தினார்.

"அணுக்கள் குவிந்த
ஜடப்பொருள் யாவும்
சக்தியின் சலனம்
ஒளியின் கதியை
ஒளியின் கதியால்
பெருக்கிய வேகம்
ஜடத்தைப் புணர்ந்தால்
ஜடமே சக்தி!"

பொருண்மையின் ஒரு சிறிய நுண்பகுதி ஓரளவு உருமாற்றம் பெற்றாற்கூட அளவற்ற சக்தியை வெளிப்படுத்திவிடும் என்பதே $E = mc^2$ என்ற கோட்பாட்டின் உட்சரடாகும். (E என்பது சக்தியையும், m என்பதுபொருண்மையினையும், c என்பது ஒளியின் வேகத்தினையும் குறிக்கும்) போலி மேற்பூச்சு வேலைகளின்றி உலகப்பொது மனநிலையில் நேர்த்தியான முறையில் ஐயன்ரீனை புரிதலுக்குட்படுத்த விளைகின்றார்.

இசைவெளியின் சிறகுமடிந்து
கருவி ஜடமாகிறது
பியானோவின் ஸ்ருதிமண்டலம்
வெறிச்சோடிக்கிடக்கிறது
உலகின் முரட்டு இருளில்
எங்கோ ஒரு குழந்தை அழுகிறது
ஜன்ஸ்டீனின் கண்ணீர்த்துளியில்
தெறிக்கிறது பரிதி
ஒருகணப்பார்வை

எனப்புலமையின் துன்பியலை, பதிலீடற்ற கண்ணீரின் மொழிபெயர்ப்பை கலாபூர்வமான ஆளுமையோடு பதிவுசெய்கின்றார்.

முகிழ்நிலைக்காலத்தில் "படிமக்கவிஞர்" என்றே அடையாளப்படுத்தப்பட்டார். அகவற்பா நடையில் அமைந்த "விடிவு" என்ற கவிதையில் படிமத்தைக் கையாளும் கலாபூர்வமான ஆளுமையைக்காணலாம்.

"பூமித்தோலில்
அழகுத்தேமல்
பரிதி புணர்ந்தது
படரும் விந்து
கதிர்கள் கமழ்ந்து
விரியும் பூ
இருளின் சிறகைத்
தின்னும் கிருமி
வெளிச்சச்சிறகில்
மிதக்கும் குருவி"

"படிமக்கவிஞர்" என்ற சுயஅடையாளத்தைத் தகர்த்து, ஆன்மீக மையநீரோட்டத்தின் அகலித்த தரிசனத்தை அதிகபட்ச சாத்தியங்களோடு பதிவு செய்து மாற்று முக மொன்றைக் கட்டமைத்ததால் ஒற்றைப் பரிமாணத்துள் சிந்திக்காதவராய் அமைந்தார். தீராத வினாக்களின் வழியே மனஇருப்பின் தனிமையான வாசகன் மிரட்சி கொள்ளும் வகையிலேயே வெளிப் படுத்தியுள்ளார்.

"யாரோ நான் - ஓ!ஓ
யாரோ நான் என்றதற்கு
குரல்மண்டிப்போனதென்ன?
தேறாத சிந்தனையும்
மீளாது விட்டதென்ன?
மறந்த பதில் தேடியின்னும்
இருள் முனகும் பாதையிலே
பிறந்திறந்து ஓடுவதோ
நான்?"

என்னும் மனித குலத்தின் முடிவிலி விசாரணையை மௌனமும், வெளிப்பாட்டின் உடனடித்தன்மையையும் ஒருங்குவிந்த வகையில் கவிதையாக்கி வெற்றி பெற்றுள்ளார்.

சிறகிலிருந்து பிரிந்த
இறகு ஒன்று
காற்றின்
தீராத பக்கங்களில்
ஒரு பறவையின் வாழ்வை
எழுதிச்செல்கிறது

"காவியம்" என்ற தலைப்பிட்ட இக்கவிதையில் மொழி உந்தித்தள்ளி வாசகனுள் நிகழ்த்தும் அனுபவத் தொற்றல் அற்புதமானது. படைப்பொன்றின் தேறிய

பெறு மானத்தின் எளிய குறிகாட்டியான உன்னத அனுபவத்தை இக்கவிதையிலே பெறமுடிகின்றது.

பிரதியொன்றின் பன்முக வாசிப்பினை அவாவுகின்ற பிரமீளின் கவிதைகளில் "தவளைக் கவிதை" தனித்துவமானது.

தனக்குப்புத்தி
நூறு என்றது மீன்
பிடித்துக்கோர்த்தேன் ஈர்க்கில்
தனக்குப்புத்தி
ஆயிரம் என்றது ஆமை
மல்லாத்தி ஏற்றினேன்
கல்லை
எனக்குப்புத்தி
ஒன்றே
என்றது தவளை
எட்டிப்பிடித்தேன்
பிடிக்குத்தப்பித்
தத்தித் தப்பிப்
போகுது தவளைக்
கவிதை.

நூறு புத்தியுள்ள மீனுக்கும் - ஆயிரம் புத்தியுள்ள ஆமைக்கும் - ஒரேஒரு புத்தியுள்ள தவளைக்கும் இடையேயான புரிதல் சார்ந்த வாசிப்பினால் இக்கவிதை வேறோர் தளத்திற்கு நகர்ந்து விடும் அதிக பட்ச சாத்தியத்தினை தன்னகத்தே கொண்டுள்ளது. மீனைச்சிறுகதைக்கும், ஆமையை நாவலுக்கும், தவளையை கவிதைக்கும் எளிமையாக ஒப்பிடும் ஒருவருக்கு கிடைக்கும் வாசிப்பின்பத்தை விட மாற்றுத்தளத்துக்கு நகர்த்திப்புரிந்து கொள்ளுதல் அலாதி இன்பத்தினை நல்கும்.

குமிழிகள்

இன்னும் உடையாத ஒரு
நீர்க்குமிழி
நதியில் ஜீவிக்க
நழுவுகிறது.

கைப்பிடியளவு
கடலாய் இதழ்விரிய
உடைகிறது
மலர் மொக்கு.

இந்தக்கவிதையை வாசிக்கும் போது "ரோலர் கோச்" வேகத்தில் எழுநூறு மில்லியன் சுவாசச் சிற்றறை களிலும் கலந்துவிடும் சொற்கள் மனதின் மர்மப் பிரதேசங்களில் மோதி வேதியியல் நிகழ்த்துகின்றன. இத்தகைய மேதையின் இலக்கிய நெடுஞ்சாலையில் தனிநபர் வன்மம் வேகத்தடையாக அமைந்தமை வேதனையளிக்கிறது.

எண்சோதிடத்தில் வலுவான நம்பிக்கை கொண்டதனால் தர்மு சிவராம், அரூப் சிவராம், பானு, பிரமீள் என எண்ணறு நாமங்களைக் காலத்திற்குக் காலம் சூட்டிக்கொண்டார். சி.சு.செல்லப்பாவின் "எழுத்து" இதழில் அறிமுகமாகி, மிக இளவயதிலே மௌனியின் சிறுகதைத்தொகுப்பிற்கு முன்னுரை எழுதியவர் என்ற இறும்பூதும் பிரமீளுக்கு உண்டு. இவரது நெடுங்கவிதைகள் சிலாகித்துப்பேசற்குரிய வகையிலே அமைந்துள்ளன. ஜான் ஆப்ரகாம் இயக்கிய "அக்ர ஹாரத்தில் கழுதை" திரைப்படத்தின் முதற்கட்டப் பணிகளில் பங்கெடுத்த போதும், ஜான் ஆப்ரகானின் இடையீடற்ற மதுப்பாவனையால் வெறுப்புற்று விலகி விட்டார். ஆர்தர் சி.கிளார்க் எழுதிய நாவலின் நகரும் படிமவடிவமான 'A Space Odyssey' திரைப்படம் பிரமீளுக்கு பிடித்த படங்களுள் ஒன்றாகும். "நடிகர் கமல்ஹாசன் பிரமீளைச் சந்திக்க தீராத வேட்கை கொண்டிருந்த போதும், உடன்படாது வேண்டுமென்றே தவிர்த்து விட்டார்." என எஸ்.ராமகிருஸ்ணன் குறிப்பிடுகின்றார். ஈழப்போராளிகள் கேட்டுக்கொண்டதற்கமைய தமிழீழத் திற்கான தேசிய கீதத்தை எழுதினார். எனினும் போராளி களால் எந்தத்தருணத்திலும் பயன்படுத்தப்பட வில்லை.

கடலலை அதிர்வினில்
விடுதலை உறும
தமிழீழத்தாய் எழுக
அன்னை
உருவோடு உயிரும்
அருளோடு வீரம்
செல்வமுமாக வெல்க

வன்னியாழ்கோணை புத்
தளம்மட்டு நகரொடு
மன்னார் அம்பாறையும் நிமிர
அதிரும்
முத்திசைக்கடல் நடு
நெற்றியாய் ஒளிர்வது
கற்றவர் நிறையுமிந்நாடு

வர்க்க வர்ணங்களை
சிந்தை செய்திறனால்
வென்றது நம் தமிழீழம்
கண்கள்
எத்திசை நோக்கினும்
எம்மவர் மானுடம்
முற்றிலும் ஓர் குலமாகும்.

எளிமையின் வசீகரத்தோடு சென்னையின் சந்து பொந்தெங்கும் பாதங்கள் தேயத்தேய அலைந்து திரிந்து ஆளுமையான பிரமீளின் கவிதைகளை முழுமையாக உலகம் புரிந்து கொள்ளும் போது தமிழ்க்கவிதையின் தரம் நன்கு தெளிவாகும் என்பதில் யாதொரு ஐயமுமில்லை.



அழுத மலை!

அங்கோர் கூட்டம் தன்னில்
அன்றொருநாள் பேசுகையில்
"ஹல்துமுல்லை" என்றாலும்
"அழுத மலை" இதுவென்றேன்..
"கூனியடிச்ச மலை
கோப்பிக் கன்னு போட்ட மலை
அண்ணனை தோத்த மலை
அந்தா தெரியுது பார்..."
என்று அழுதமலை இதுவென்றேன்.
இன்று அழுதழுதே எழுதுகின்றேன்....

இன்னல் செய்ய பலருண்டு
இன்செய்ய யாருமில்லை
வன் செயல்கள் பல கண்டு
நாம் வாடிய நாள் பலவுண்டு

செயற்கைதானே எங்களை
சீண்டி வந்தது
இயற்கையே நீயுமா இன்று
எம்மீது விழுந்தது..

வன்முறைகளால் தானே
பன்முறைகள் காவுகொண்டோம்
இம்முறை இயற்கையும்கூட
எங்களை விட்டுவைக்கவில்லையே..
ஏனிந்த விந்தை
எதனால் இந்த சோதனை...?

மலையே...!
உன்னை உரமாக்கி.. உரமாக்கி
உயர்த்திய அண்ணனை..
உன்மீது வலம் வந்தே
நிரைபிடித்து..நிரைபிடித்து..
நிறம் மாறிய எங்கள் அன்னையை..

அள்ளிக் கொண்டு போக
அத்தனை சீற்றமென்ன..?

அள்ளிக் கொன்று போக
அத்தனை சீற்றமென்ன..?

என் தம்பிகள்
தும்பிகளாய் பறந்த வெளிகளை..
என் தங்கைகள்
மணல்வீடு கட்டிய மேடுகளை..
உன் மண்மேடு கொண்டு
கண் மூட செய்த கயவனா நீ...?

மூடிய மலைகளுக்குள்
முணங்கள் கேட்டாயோ...?
விம்மும் நெஞ்சங்களின்
விசும்பல் கேட்டாயோ...?

இறந்தபின் எரிப்பதுதான்
எங்கள் மரபென்றபோதும்
சுடுகாட்டை
இருகாடாக்கி
எங்கள் எலும்புகளை
புதைத்து வைத்தோம்..!

உழைத்துக் களைத்த
பலநூறு உடம்புகளை
இருநூறு வருடங்களாய்
எச்சங்களாய்
சேர்த்து வைத்தோம்..!

அத்தனையும் போதாதென்றா
அள்ளிக் கொண்டுபோனாய்...
தாரை... தாரையாய் – எங்களை
தள்ளிக் கொன்று போனாய்..!

ஏழு மணியானதும்....
பிரட்டுத்தப்பு சத்தம் என்று
புறப்பட்டுப் போகும்
என் அண்ணனை
புரட்டிப்போட்ட கோபம் என்ன...?

ஏழு மணியானதும்....
சங்குசத்தமென்று...– உனை
நோக்கி ஓடிவரும்
எங்கள் அன்னையர்க்கு
நீயே சங்காகி
நீர் ஊற்றி போனதென்ன...!

ஏழு மணியானதும்
"இஸ்கூல்" மணிச்சத்தமென்று
என் தம்பி, தங்கை
எழுந்திருப்பான்....
இன்று "ஹெலி கோப்டர்"
சத்தம் என்று
எழும்பி வந்தவர்க்கு நீ
எமனாகிப் போனதென்ன..?

ஏழு மணிதானே
எங்களை எட்டுத்திக்கும்
அனுப்பிவைக்கும்!
–இன்று
ஏழரைச் சனியாகி எம்மை
இழுத்துக் கொன்று போனதென்ன..?

உன்னை மிதித்தேறி
உழைத்தது தவிர ...
உரம் கொண்ட மேனி கொண்டு
உன்னை உழுதது தவிர..
அவர் செய்த காயமென்ன – நீ
அவர்களை அள்ளிய மாயமென்ன?

மண்வெட்டி தோள் கொண்டு
மலை மண்ணை வெட்டியது
உன்னைப் பண்படுத்தத்தானே நீ
அவர்களை
புண்படுத்தி போனதென்ன..!

மலையே !
யாரும் அடித்தால்
ஓடிவந்தோம் உன்னிடம் – இன்று
நீயே எட்டி உதைத்தால்
நாங்கள் ஓடுவது யாரிடம்...?

மீரியபெத்தையில் – எல்லை
மீறிய இயற்கையே
எழுதி வை..!
இதுவும் என் வரிதான்:
"மேலே குந்தும் மலை வீழ்வேன் என
எச்சரித்து நின்றபோதும்
மேல் கொத்(து)மலை எங்களை
குடைந்துகொண்டு சென்றபோதும்
இந்த மண்ணிலேயே மாள்வோம்
இந்த மண்ணிலேயே மீள்வோம்"

இது எங்கள்
மடகொம்பரை மண்ணுக்கு
மட்டுமல்ல
மண்மூடிய மீரியபெத்தைக்கும்
எட்டும்...! கிட்டும்.!

மண் அள்ளிப் போட்டுத்தானே
அஞ்சலி செய்வோம்
மண்ணே அள்ளிப்போட்டால்
மானுடர் நாம் என்ன செய்வோம்..?

மண்மூடி
கண்மூடிய என்
மலைத் தேச மாந்தருக்கு
சீனத் தேசத்தில் இருந்து
செய்தேன் செவ்வணக்கம்!!

– மல்லியப்புசந்தி திலகர் –
[கண்ணீர் சிந்திய காலை குவாங்கோ
[சீனா] 30-10-2014]

கடவுளின் துணிக்கை

வெட்டி யடித்தது யுகமின்னல்,
விஞ்ஞானத் தேள் வந்து மெல்லக்
கொட்டிற்று, "கடவுள் குற்றுயிரர்
ஆய்விட்டார்" என்று வானொலிப்
பெட்டிக்குள் இருந்து "பென்டகன்" அறிஞர்
பேசினார். சிலிர்த்த அரசியலார் மதுப்
புட்டியைத் திறந்து பூமியின் வெற்றிப்
பூரிப்பில் மூழ்கித் திளைத்தனரே!

திளைப்பின் ருசியில் திரிந்தவர், போரை
விளைப்பதை நன்கு விழைந்தார் – உழைப்பின்றி
உண்டு கொழுக்கும் உபாயம் அறிந்தவரோ
குண்டுவைத் தார்இன்னு மே!

"இன்னும் கடவுளின் மரணச்சேதி
ஏன் வரவில்லை?" என்றெழுந்தவரோ
பென்னம்பெரிய தொலைநோக்கி நீட்டி
பிரபஞ்சமெங்கும் துளாவினரே!
கண்ணினில் எவரும் படுவதாயில்லை
ஆதலால், கடவுள் இறந்தாரெனப்
பண்ணினர் உறுதி. "∴பக்ஸ், ஈமெயில்கள்"
பறந்தன, பெரியோர் பயந்தனரே!

பயந்தவர் பார்த்தார் கடவுளை மூடி
இயந்திரம் குண்டெல்லாம் ஓங்க – வியந்தார்
"மனித குலத்தினது சாதனை மகத்தே
இனியெவர்நேர் என்றார் எமக்கு."

"எமனுக்கும் இறுதியை விஞ்ஞானம் குறித்ததே"
என்றே அனைவரும் கைகொட்டி மகிழ்கிற
சமயத்தில் பார்த்திந்தப் பூமி அசைந்தது,
சமுத்திரம் வாய் திறந்து ஊரை அடைந்தது,
"அமையத்தகும் நான் பெரியவன் ஆதல்
அடிமைகளே இனிப் பணி செய்யும்" என்று
குமையத் தொடங்கிய மனிதனைப் பார்த்ததும்
குலுங்கி வெடித்து இயற்கை சிரித்தது.
சிரிப்பின் நுனியிலே பற்றிய சீற்றம்
எரிப்பிலென் செய்வான் மனிதன்? – தரிப்பிற்கு
ஓரிடம் இன்றி அழுது திரிந்தான், ஓ
பேரிடர் பெற்ற பிறகு.

பிறகென்ன, விஞ்ஞானம் இறப்பித்த கடவுளை
பிணக்குகள் தீர்க்கின்ற வெண்புறாச்
சிறகினில் கண்டனம், உயிரெலாம் ஒன்றாய்ச்
சிரிக்கையில் அவர் குரல் கேட்டோம்,
விறகினில் தீபோல் விளங்கிடு பவரோ,
வேற்றுமை மறந்தொன்று சேர்கின்ற
உறவுகள் கோர்க்கும் கரங்களுள் வந்து
உயிர்த்தனர், தொலைந்தது வருத்தம்.

– ஸ்ரீ.பிரசாந்தன்

எங்கள் கவிதை...

சகித்துக் கொள்ள முடியா
பிணவாடை அடிக்கிறதா?
.....!
ஆம்
எங்கள் கவிதைகளை அணுக
இந்த பிணவாடை உங்களுக்கு வழிக்காட்டும்

இருப்பின் முகத்தைக்
கிள்ளி ஒழித்து விட்டீர்கள்

இலக்கற்ற கனவுகளை
வாக்குறுதிகளால் அலங்கரித்து
எங்களுக்கு உண்ணக் கொடுத்தீர்கள்

இப்படி தின்று
செரித்து செரித்து
பெரிய எலிகளை கடவுளாக்குகிறோம்

பெரிய எலிக்கடவுள்கள்
எங்களின் இடது கையை பசியாறிவிட்டது
எல்லோருக்குமான ஜனநாயகத்தை உணர்வற்றதாக்கிவிட்டது

ஆயினும்
ஏழு நாட்களும்
முழு மூச்சினை
மலையின் செழிப்பிற்கு கொடுத்து நடக்கின்றோம்

ஆம் தோழர்களே
எங்கள் கவிதையில்
எலும்பாய்...விகாரமாய்...
துருத்திக் கொண்டு தெரியும்
நூற்றாண்டு வலியை...
தொலைவான கனவை...
கை சிக்காத வாழ்வை...
அதிகாரம்
மறைத்து வைத்த முகத்தை...

இப்படித்தானே
பகிர வேண்டும்
பூச்சற்ற பிணவாசனையோடு

– சண்முகம் சிவகுமார்



குறுங்கவிகள்

பட்டினி

பணிப்பெண்
பணக்கார வீட்டில் பட்டினி;
பிள்ளைகளோ
சொந்தவீட்டில் பட்டினி.

சிறுவர் தினம்

சிறுவர் தினத்தன்று
வீதியெங்கும் கொண்டாட்டம்;
அனாதை விடுதியில்
சிறுமி துஷ்பிரயோகம்.

மேதினம்

எட்டு மணிநேர வேலையென்பது
மேதினப்பிரகடனம்;
கடைப்பையன்கள் மட்டும்
இதற்கு விதிவிலக்கு.

மகளிர் தினம்

வீதிகளில் கொண்டாடுவது
சர்வதேச மகளிர் தினம்;
வீடுகளிற் தொடர்வது
குடும்ப வன்முறை.

சமூகவிரோதி

செய்வதோ
கள்ளமர வியாபாரம்;
மரம் வளர்ப்போமென்று
ஊரெல்லாம் பிரசாரம்.

ஊருக்கு உபதேசம்

உயிர்களைக் கொல்லாதீரென்று
ஊருக்கு உபதேசம்;
வீட்டில் உண்பதோ
மதுவுடன் மாட்டிறைச்சி.

— கா.தவபாலன்

என் நோக்கில் கவிதை

அடியேனும் கவிதை எழுதியதுண்டு
அக்கவிதைகள் தமிழ் கவிதை
மரபிலமையாது வெளி ஒதுங்கி
நின்றாலும் "புதுக் கவிதை"என்ற
வடிவில் இருந்ததனால் 1960 களில்
பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டன

1960களில் சமூகமோ,மனித இன்னல்களோ
என் மனதில் தைத்தில,மாறாக
தனிமனித முரண்படு நிகழ்வுகளை
தத்துவ, உளவியல் நோக்கில் பதிந்தவை
அவை என உணர்ந்தேன்

இந்நிலையில் அமரர் கைலாசபதி
வானம்பாடி,எழுத்து இதழ்களைத் தந்து
அபிப்பிராயம் கேட்டு வைத்தார்.
எழுத்தில் வந்த பிச்சமூர்த்தி,
தரும சிவராமுஆக்கங்கள்
பிடிக்கவே இல்லை. வைதீஸ்வரன் பிடித்தது.

அதேபோல் அப்துல்ரகுமானோ மேத்தாவோ
வெறும் சொல்லடுக்கு வீரராய் இருக்க
சிற்பி,வைரமுத்து போன்றோர்
கவிதை இன்பம் தருவதாய் உணர்ந்தேன்

புதுக் கவிதை ஈழத்தில் பிரபல்யமானபோது
அவ்வகை எழுத்தை ஆதரித்த நான்
அவை வெறும் ஸ்லோகங்களே எனக்
கண்டு கொண்டேன். கருத்து மாறியது.
புதுக்கவிதை, மரபுக்கவிதை வேறுபாடின்றி
கவிதை கவிதையாக இருக்க வேண்டும் என்றுணர்ந்தேன்.

கவிதைப் பொருள் எவ்வகையாய்
இருப்பினும் அவை கவிதைக் கூறுகள்
கொண்டிருத்தல் வேண்டும்

என் அளவுகோல்கள்
எல்லோரும் ஏற்க
வேண்டும் என்றில்லை

ஆயினும் நான்விரும்புவது
சொல் வளம்,புத்தாக்கப் பிரயோகம்,
ஓசை இன்பம், கூடுமானவரை
யாப்பிலமைந்த கட்டுக் கோப்பு

என் நோக்கில் கவிதை பற்றி
மொழிந்தேன். ஏற்பீர்கள் என நம்புகிறேன்.

சட்ட திட்டம் இல்லை எது எது நிற்குமோ
சங்கப் பாடல்கள் போல் தமிழ் மொழி காலத்திற்கேற்ப
வளைந்து கொடுக்கும் தன்மை வாய்ந்தது அல்லவோ

— கே.எஸ்.சிவகுமாரன்

நீ நீயாக இரு

மனத்திரை
ஓரங்களில்
மௌனிக்கும்
எண்ணங்கள்

எண்ணங்களின்
தூக்கங்களில்
தொலைந்திடும்
கனவுகள்...

கனவுகளின்
நிழலுருக்களில்
நிஜங்காண
ஏங்கிடும்
மனங்கள்...

மனங்களின்
மண்டியிடுதலால்
மழுங்கிடும்
மாண்புகள்...

எண்ணங்களும்
கனவுகளும்
மனங்களும்
மற்றவர்க்கு
அடிமையாக
இருக்கும்வரை
நீ நீயாக
இருக்கமாட்டாய்...

சுயமிழந்த
வாழ்வுதனை
வரித்துக்கொண்டு
வாழ்வதற்கா
வருகைதந்தோம்...?

அர்த்தப்படா
வாழ்வுதனை
வாழ்வதற்கா
படைக்கப்பட்டோம்...?

விமர்சனம்கண்டு
உடைவதற்கும்
தூற்றுதல்கண்டு
குடைவதற்கும்
நீ என்ன உயிர்ப்பிழந்த
முதுமரமா....?

உன்னை விமர்சிப்பவன்
புத்தனுமில்லை
இராமனுமில்லை
நீ நீயாக
இருக்கும்வரை...

– கே.எம்.செல்வதாஸ் –

சீதை

ஒரு சாலையோரவளைவில்
நின்று கொண்டிருக்கிறேன்...!

மனிதர்களற்ற தெரு!
நேற்று...
அதற்கு முன் ஒரு நாள்,
பல்லாண்டுகளுக்கு முன்னம்...
நான் நின்று கொண்டிருந்தேன்!

காற்று சலித்திருக்க வேண்டும்!
மூசி,மூசி அது வீசுவதைக் கேட்டபின்
ஓய்ந்து போனதையும் பார்த்தேன்!

அருகே விசாலித்த
தீயின் கருகல் வாடை!
தீப்பிழம்பில்
மண் துகளொன்று
ஒட்டிக் கருகிச் சுருண்டதைக் கண்டு
தூரப் பரந்த சாக்குருவி
விலகி ஓடிற்று!
அதன் குரல் வளர்ந்து பெருகி
காலச்சக்கரத்தில் நசுங்கிப் புரண்டது!

நான் நின்று கொண்டிருந்தேன்!
அதே சாலையோரத்து வளைவு!

நேற்று நின்ற இடம்!
அதற்கும் முன் ஒரு நாள்...!
அதற்கும் முன்
இன்னொரு நாள் போல்...
எப்போதும் ஏதோ ஒரு வடிவில்,
அது தனித்த காட்டுப்பாதை!
நான் நின்று கொண்டிருந்தேன்
நெடுங்காலமாய்...!

ஒளிக்கரைசலை வடிகட்டிய
மரங்களின் நிழல்கள்
என்னை விழுங்குகின்றன...!

இருளின் ஓசைக்குள்
பறவைச்சத்தங்கள்
அமுங்கிப் போயின!

காலடிச்சத்தம்
ஒன்றுதானும் இல்லை!

அலுத்துப் போனபின்
பூமியின் ஒரு வெடிப்புக்காகக்
காத்திருக்கிறேன்!

– தாட்சாயணி –

செவ்வாய்க்கிழமை

"அம்மா..."
பசியோடு ஒரு
பரிதாபக்குரல்.
"என்ன..."
எட்டிப் பார்த்து
இரக்கமாய்க் கேட்டாள்
இந்த வீட்டம்மா.

காலையிருந்து
சாப்பிடல்ல
கால்தூக்கி
நடக்க முடியல்ல
கால் வயித்துக்கு சரி
கஞ்சி இருந்தா தாங்க.
அந்த ஆண்டவர் ஒங்கள
ஆசீர் வதிப்பாங்க..
தளதளத்துச் சொன்னான்
வளவு நுழைந்த
பிச்சைக்காரன்.

உள்ளே ஓடினாள்.
உள்ளம் கரைந்தாள்.
தட்டு நிறைய
சாதம் இட்டாள்.
வேகம் கொண்டு
வெளியே வருகையில்
விறாந்தை இருந்த
கலண்டர் காட்டியது
இன்றைய நாள்
செவ்வாய் என்று.

இல்லம் வரும் எவர்க்கும்
செவ்வாய் என்றால்
தண்ணீரும் கொடுக்காத
கண்ணிய பரம்பரை இது.
சரீரத்துப் பசியை
சம்பிரதாயம் மதிக்கவில்லை.
சாதத்தை
சமையலறையில்
வைத்தாள்.

செவ்வாயில
எதுவும் குடுத்தா
சிறக்காது வீடு.
நாளைக்கு வாங்க
தாராளமாய்த் தாறன்.
அம்மா சொன்னாள்.
அழுதபடி நடந்தான்
அந்த பிச்சைக்காரன்.

– யோ.புரட்சி –



வாழ்க்கை என்பது

என்ன கண்கள்
மேகமாக கரைந்தோடுகிறது...?
வாழ்க்கை என்பது
வருத்தத்தின் பாதிதான்!

சிந்து கண்களை
தொடந்தும் சிந்த விடு...
தோல்விகளிடம் மட்டும்
தோற்று விடாதே!

கண்ணீர் சிந்தாவிட்டால்
கவலையின் அர்த்தம் புரியாது
கண்ணீரின்
தாலாட்டுப் பாடல் கேளாது!

புன்னகை என்பது
மகிழ்ச்சியின் மலர் வடிவம்
உதட்டில் மலரும்
அகத்தின் பூவது!

முகம் பூவாக மலர்ந்து
தொடர்ந்தும் இருக்க முடியாது
காலையில் மலர்ந்து
மாலையில் வாடும்
பூவாகவே இருக்க முடியும்!
அதற்காக
செடி செத்து விடுகிறதா?

வாழ்க்கை என்பது
புன்னகை பாதியாகவும்
கண்ணீர் மீதியாகவும்
இணைக்கப்பட்டிருக்கும்
இன்ப துன்ப சக்கரம்!

வாழ்க்கை என்பது
சோகங்களாலும்
சந்தோசங்களாலும்
நிரப்பப்பட்டிருப்பதால்
இரண்டும் எம்மோடு
இருக்கவே செய்யும்!

இப்பொழுது
எதனால் அழுகிறாய்...?
அழு பரவாயில்லை!
ஆனாலும்
அழிந்து விட மட்டும்
முயற்சி செய்யாதே...!
கவலையெல்லாம்
கண்ணீர் கழுவி விடும்.

– மிஹிரிந்தலை ஏ.பாரிஸ்–

ஸி.வி. வேலுப்பிள்ளையின் கவிதை முகம்

1969 ல் "செய்தி" பிரசுரத்தார் தமிழாக்க கவிதைகளை தனியான நூலாக வெளியிட்டதன் பின்னரே ஸி.வியை தமிழ் இலக்கிய உலகம் கண்டுகொண்டது. அதுவரை அவர் ஆங்கில இலக்கிய சூழலில் மாத்திரமே அறியப்பட்டுள்ளார்.



மல்லியப்புசந்தி திலகர்

புழுதிப்படுக்கையில்
புதைந்த என் மக்களைப்
போற்றும் இரங்கற்
புகல்மொழி இல்லை
பழுதில்லா அவர்க்கோர்
கல்லறை இல்லை
பரிந்தவர் நினைவுநாள்
பகருவார் இல்லை
ஊனையும் உடலையும்
ஊட்டி இம்மண்ணை
உயிர்த்தவர்க்(கு) இங்கே
உளங்ககிந்தன்பும்
பூணுவாரில்லை அவர்
புதைமேட்டிலோர் - கானகப்
பூவைப் பறித்துப்
போடுவாரில்லையே

எனும் வரிகள் இலங்கை மலையக மக்கள் பற்றி எழுதப்பட்ட, பரவாலாகப் பாடப்படும் அமரத்துவமான வரிகள். இந்த வரிகளின் சிந்தனையாளர் மக்கள் கவிமணி ஸி.வி.வேலுப் பிள்ளை. அவரால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட வரிகளை தமிழாக்கம் செய்து இவ்வாறு உலாவரச் செய்தவர் மறைந்த கவிஞர் சக்தீ பால அய்யா.

இலங்கை மலையக இலக்கியத்தினைப் பற்றி உரையாட முற்படும் போது யாருமே தவிர்த்துவிட்டுப் போக முடியாத ஆளுமையாக திகழ்பவர் ஸி.வி வேலுப்பிள்ளை அவர்கள். இந்த வருடம் அவரது நூற்றாண்டு நினைவு.

1914 ஆம் ஆண்டு செப்டெம்பர் 14 ஆம் திகதி நுவரெலியா மாவட்டத்தின் வட்டகொடை எனும் சிறு நகரை அண்டிய மடகொம்பரை எனும் தேயிலைப் பெருந்தோட்ட குடியிருப்பு சூழலில் பிறந்தவர் ஸி.வி.வேலுப் பிள்ளை. 1984 ஆம் ஆண்டு நவம்பர் 19ம் திகதி கொழும்பு தலங்கம பிரதேசத்தில் காலமானார்.

அவர் வாழ்ந்த எழுபது ஆண்டு கால வாழ்வில் ஆசிரியர் - அரசியல் வாதி- தொழிற்சங்கவாதி - கவிஞர்- நாவலாசிரியர்- நடைச்சித்திர படைப் பாளர்- நாட்டார் பாடல்களின் சேகரிப் பாளர்- கட்டுரையாளர் - பத்திரிகை யாசிரியர்- சமூகத் தொடர்பாடலாளர் என பல்வேறு ஆளுமைகளைப்பதிவு செய்திருக்கும் ஸி.வி.வேலுப்பிள்ளை அவர்களின் சிறப்பு அவரது கல்விப் புலமை. ஆங்கிலத்தில் நேரடியாக படைப்புகளை செய்யும் பணியை 1930 களியே மலையகத்தில் மேற் கொண்டுள்ளார் என்பது பெரும் வியப்புக்குரிய செய்திதான்.

பன்முக ஆளுமைகளில் அவரது கவிதை முகம் பற்றிய சுருக்க மான பார்வையைத் தருவதாக இந்தப் பத்தி அமைகிறது. இலக்கியத்தில் முதன்மையானது கவிதை என்பதே நம்பிக்கை. அதுபோலவே பின்னாளில் பன்முக ஆளுமையாக அறியப்பட்டா லும் ஸி.வியும் கவிதையிலேயே தனது இலக்கிய பயணத்தைத் தொடங்கி யுள்ளார். அந்த கவிதை முகத்தாலேயே "மக்கள் கவிமணி ஸி.வி.வேலுப்பிள்ளை" என இன்றும் அறியப்படுகிறார்.

பாடசாலை மாணவனாக இருந்த காலத்திலேயே வாசகனாக, கவிஞனாக வளர்ந்த ஸி.வி.வேலுப் பிள்ளை அந்த காலத்தில் வங்கக்கவி ரவீந்திரநாத் தாகூரின் கவிதைகளில் பெரும் பாதிப்புக்கு உள்ளானவராக, அவரது கீதாஞ்சலியை விரும்பிப் படித்தவராக, அதே பாணியில் "விஸ்மாஜினி" எனும் ஆங்கில கவிதை நாடகத்தை எழுதியுள்ளார். மட்டுமல்லாது 1934 ல் கவிஞர் தாகூர்

இலங்கை வந்திருந்த போது அவரைச் சந்தித்து தனது கவிதை ஆக்கத்தை சமர்ப்பித்து ஆசியும் பெற்றுள்ளார். கவிஞர் தாகூரைப் பற்றி, Tagore at A Glance எனும் படைப்பையும் தந்துள்ளார். அதேபோல Vismadjni Vismadgenee, Wayferer, Ananda's Dream, In Ceylon's Tea Garden போன்ற ஆங்கில கவிதை நாடகங்களையும் நெடுங்கவிதைகளையும் எழுதியுள்ளார். "இலங்கைத் தேயிலைத் தோட்டத்திலே" எனும் கவிதைத் தொகுப்பு கவிஞர் சக்தீ பாலையா அவர்களினால் தமிழாக்கம் செய்யப்பட்டது.

ஆரம்ப காலங்களில் தாகூர் வசப்பட்டு மரபுசார் இலக்கிய பரப்பில் திகழ்ந்த இவர் ஆங்கிலத்தில் எழுதியதன் காரணமாக அவர் பழகும் சூழலும் மேட்டுமைத் தொடர்பு களாகவே இருந்திருக்கின்றன. அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் ஆசியாவில் புகழ்பெற்ற ஓவியரும் கவிஞருமான ஜோர்ஜ் கீற் அவர் களை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அப்போது ஜோர்ஜ் கீற் அவர்கள் நமது மக்களைப்பற்றி நாம் பாட வேண்டிய, எழுதவேண்டிய தேவை பற்றி ஸி.வி.வேலுப் பிள்ளைக்கு தெளிவுபடுத்தியுள்ளார். ஸி.வி.வேலுப்பிள்ளை அவர்களே தனது "புதுமை இலக்கியம்" எனும் பத்தியில் இது பற்றி குறிப்பிட்டுள்ளார்.

அதன் பின்னர் தனது படைப் பாளுமையை தான் வாழ்ந்த மலையக தோட்டப்பகுதி மக்களின் வாழ்வியலோடு இணைத்துக்கொண்டதன் பிறகு சாகாவரம் பெற்ற In Ceylon's Tea Garden என்ற ஆங்கில நெடுங்கவிதையினை படைக்கலானார்.

1982 ஆண்டு June 15 ஆம் திகதி பேராசிரியர் க. கைலாசபதி அவர்களுக்கு எழுதியிருக்கும் கடிதம் ஒன்றில், ஸி.வி. அவர்கள் பின்வருமாறு குறிப்பிடு கின்றார்: "The 'WAYFARER' verses which you have read were written in 1946 when I led the famous Kneversmere Harthal of 75000 workers in Hatton Region"

" 'IN CEYLON'S TEA GARDEN' was written during and after the 1952 Satyagragaha performed before the prime minister's office."

அவரது நோக்கில் தானே முன்னின்று வழி நடாத்திய தோட்டத் தொழிலாளர் ஹர்த்தால் போராட்டம் ஒன்றை முன்னிறுத்தி எழுதிய 'WAYFARER' (வழிப்போக்கன்) என்கிற கவிதை நாடகம் மற்றும் மலையக மக்களின் குடியுரிமை பறிப்புக்கு எதிராக தான் பங்குகொண்ட, பிரதமர் அலுவலகத்துக்கு முன்பாக நடைபெற்ற சத்தியாக்கிரக போராட்டத்தினையும் அடிப் படையாகக் கொண்டு தான் கவிதைகளை படைப் பாக்கியுள்ளதாக குறிப்பிடுகின்றார்.

1963 ஆம் ஆண்டு ஆபிரிக்க ஆசிய எழுத் தாளர்களின் ஒன்றியம் அந்த பிரதேச நாடுகளில் வாழும்



கவிஞர்களின் கவிதைகளைக்கொண்ட ஒரு தொகுதியை வெளியிட்டுள்ளது. அதில் மலையகத்தில் கொழுந்து பறிக்கும் மாந்தர் பற்றி ஸி.வி.வேலுப்பிள்ளை Tea Pluckers என ஆங்கிலத்தில் எழுதிய கவிதையும் சேர்க்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

"புழுதிப்படுக்கையில் புதைந்த என் மக்களை போற்றும் இரங்கற் புகழ் மொழியில்லை.. என்று தொடங்கும் ஸி.வி வேலுப்பிள்ளையின் மலையக மக்கள் பற்றிய கவிதை வரிகள் மிகவும் பிரபலமானவை. அவை இலங்கைப் பாடசாலை உயர்தரப் பாட விதானத்தில் சேர்க்கப்பட்ட வரிகள். இதனை வைத்தே ஸி.வியை வாசிக்கப் பழகினோம் என்பதை மறுக்க முடியாது. அந்தளவுக்கு கவித்துவம்மிக்கதாக தமிழாக்கம் செய்திருப்பார் சக்தீ பால அய்யா. இது குறித்து சக்தீ பால அய்யாவிடம் கேட்டபோது சொன்னார்: நான் வரிக்குவரி மொழிபெயர்ப்பு செய்யவில்லை. ஸி.வியின் ஆங்கில கவிதைகளான in ceylon's Tea Garden என்னில் ஏற்படுத்திய பாதிப்பு காரணமாக அதனை "தமிழாக்கம்" செய்தேன்.

எனவே இங்கு நடந்திருப்பது "மொழிபெயர்ப்பு" அல்ல "தமிழாக்கம்" என்பதை சக்தீ பால அய்யா தெளிவாகவே சொல்லி வைத்துள்ளார். தனியே ஒரு மொழிபெயர்ப்பாளராக மாத்திரம் சக்தீ பால அய்யா





செயற்பட்டிருப்பா ரானால் ஸி.வியின் கவிதைகள் இவ்வாறு தமிழில் ஜீவிதம் பெற்றிருக்க முடியாது. சக்தீ பால அய்யாவும் ஒரு தேர்ந்த கவிஞர் என்ற வகையில் கவித்துவ உள்ளத்தோடும் இலக்கிய நேர்மையோடும் ஸி.வியின் கவிதா சிந்தனையை ஆங்கிலத்தில் இருந்து தமிழில் தந்தவர் சக்தீ பால அய்யா. இந்த தமிழாக்க முயற்சிகள் நடந்த காலம் 1954- 1969 வரையான காலப்பகுதி.

1969 ல் "செய்தி" பிரசுரத்தார் தமிழாக்க கவிதைகளை தனியான நூலாக வெளியிட்டதன் பின்னரே ஸி.வியை தமிழ் இலக்கிய உலகம் கண்டு கொண்டது. அதுவரை அவர் ஆங்கில இலக்கிய சூழலில் மாத்திரமே அறியப்பட்டுள்ளார். எனவே ஸி.வியைத் தமிழுக்கு அறிமுகப்படுத்திய பெருமையும் சக்தீ பால அய்யாவுக்குண்டு.

பின்னாளில் பொன்.கிருஸ்ணசாமி (பத்திரிகை யாளர்), எஸ்.செபஸ்தியன் (ஆசிரியர்) மு.சிவலிங்கம் (எழுத்தாளர்) போன்றோர் ஸி.வியின் படைப்புகளை தமிழாக்கம் செய்தனர். ஸி.வி அவர்களே நேரடியாக தமிழில் எழுதவும் தொடங்கினர். அவை நாவல்கள், கட்டுரைகளாக இருந்தனவே தவிர ஸி.வி. தமிழில் கவிதைகள் எழுதியதாக தகவல்கள் இல்லை.

இந்த கட்டத்தில்தான் சக்தீ பால அய்யா எனும் மொழிபெயர்ப்பாளனான கவிஞனின் சீரிய பணி பற்றி சிந்திக்க வேண்டியுள்ளது. ஸி.வி யின் கவிதைகள் மீது ஆர்வம் கொண்ட எனக்கு, தேயிலைத் தோட்டத்திலே ... எனும் நூலை முழுமையாக வாசிக்கத் தேடிய போது, அது கிடைக்காதபோது, சிரமங்களுக்கு மத்தியில் கிடைத்த நூல் பாதி எரிந்த பிரதியாக அமைந்த போது அதனை மீள் பதிப்பு செய்ய நினைத்தமையின் அடுத்த பரிமாணமே அம்மாவின் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட "பாக்யா பதிப்பகம்". 1990 களின் பிற்கூறுகளில் எனக்கு ஏற்பட்ட சிந்தனையை 2000 ஆம் ஆண்டின் பிற்கூறுகளிலேயே நடைமுறையாக்கும் சாத்தியம் கிடைத்தது.

2007 ஆம் ஆண்டு சர்ச்சைகளுக்கு மத்தியில் சக்தீயின் தெளிவான விளக்கங்களுடனான சக்தீயுரை - 2 உடன் எனது விளக்கமான பதிப்புரையுடன் பாக்யா பதிக்பகத்தின் முதல் நூலாக ஸி.வி.யின் "இலங்கைத் தேயிலைத் தோட்டத்திலே..." கவிதை நூலை மறுபதிப்பு செய்தேன். இந்த மறுபதிப்பில் ஒரு மேலதிக முயற்சியாக ஆங்கில மூல கவிதைகளையும் இணைத்து ஒரே நூலாக வெளிக் கொணர்ந்தேன். இது புதீதாக மொழிபெயர்க்க அல்லது தமிழாக்கம் செய்ய வசதியாக இருக்கும் என்பது எனது எதிர்பார்ப்பு (நூலகம்.கொம் இணையத்தில் இந்த நூலை பார்வையிடலாம்).

எனது இந்த முயற்சிபற்றி கேள்விபட்டவுடன் மலையக இலக்கிய சூழலில் ஒரு சலசலப்பு ஏற்பட்டது. சக்தீ பால அய்யா ஸி.வியின் முழுமையான வீச்சை வெளிக்கொணரவில்லை என்பதுதான் அந்த சலசலப்பு. ஹட்டனை தளமாகக் கொண்டு இயங்கும் (இயங்கிய) "நந்தலாலா" இலக்கிய நண்பர்கள் இதுபற்றி தமது இதழிலே குறிப்பிட்டது மாத்திரமின்றி ஆரம்ப வரிகளை நவீன வடிவில் தரவும் முயன்றனர்.

குறிப்பாக ஸி.வி. ஆங்கிலத்தில் குறிப்பிடும் Tom...Tom Throb எனும் தப்பொலியை சக்தீ "தப்பு" குறிப் பிடாமல் "பேரிகை" என்று குறிப்பிடுவதில் இருந்தே "தவறு" ஆரம்பித்துவிடுவதாக "குற்றச்சாட்டு" எழுந்தது. இருந்துவிட்டு எப்போதாவது தலைகாட்டி மறையும் "நந்தலாலா" அந்தப் பணியை இன்றுவரை நிறைவு செய்யவில்லை.

இந்த நிலையிலேயே 14 செப். 2014 அன்று மலையக கலை இலக்கிய பேரவை சார்பாக அந்தனி ஜீவா ஏற்பாடு செய் திருந்த ஸி.வி நூற்றாண்டு தொடக்க விழாவில் தலைமையுரையாற்றிய பி.பி.தேவராஜ் அவர்கள் இந்த மொழிபெயர்ப்பு சர்ச்சைகள் பற்றியும் நவீன தமிழாக்க வடிவத்தின் தேவைகுறித்தும் உரையாற்றியது மட்டுமல்லாது சிலவரிகளை தமிழாக்கம் செய்தும் வாசித்தார்.

1969 ல் "செய்தி" பிரசுரத்தார் தமிழாக்க கவிதைகளை தனியான நூலாக வெளியிட்டதன் பின்னரே ஸி.வியை தமிழ் இலக்கிய உலகம் கண்டு கொண்டது.

பேரிகைக் கொட்டெழு
பேரோலி துடிப்பும்
புலர்த லணர்த்தப்
புரளுமாம் வைகறை..

என சக்தீ பால அய்யா 1960களில் எழுதியதை

தப்போசை
அதிர்ந்து ஒலித்திட
திடுக்கிட்டு நின்றது
காலைப் பொழுது ..!
தேயிலை தளிரில்
உருண்டோடிய
கடைசிப் பனித்துளி
காலை கதிரில்
உருகி மறைந்தது ...

என 2014 ல் நவீன மயப்படுத்தியுள்ளார் பி.பி.தேவராஜ் அவர்கள்.

இந்த தமிழாக்க முயற்சியும் இன்னும் செம்மைப்படுத்தப்பட்டு நூலாக வெளிவரும் சாத்தியம் உள்ளது.

மக்கள் கவிமணி ஸி.வி.வேலுப்பிள்ளை அவர்களின் 100வது பிறந்த நாள். 1952களில் அவர் எழுதிய 'In Ceylon's Tea Garden' எனும் ஆங்கில நெடுங் கவிதைத் தொகுப்பின் கடைசி ஆங்கில வரிகளின் தமிழாக்கமாக கவிஞர் சக்தீ பால அய்யா தந்த "இலங்கைத் தேயிலைத் தோட்டத்திலே" எனும் நெடுங் கவிதையில் இருந்து ஒரு சில பகுதிகளைப் பகிர்ந்து கொள்வது பொருத்தமானது.

நூற்றாண்டு காலமாய்
நுழைந்த இவ்விருட்டை
வேரோடழிக்க
என் தமிழ் மக்கள்
கூறுவர் சிகர
உச்சியில் ஏறிக்
கூறுவர் திடல்கள்
யாங்ஙணு மடுக்கவே
விடுதலைக் குரலது
வெற்றிக்குரலது
வீரக்குரலது
விரைந்தெழும் கேட்பீர் ..!

பாட்டாளி வர்க்கத்துக்கு தன் கவிதைகளை மானுட நேயத்துடன் சமர்ப்பணம் செய்துள்ள மகா கவிஞனை அவரது நூற்றாண்டில் நினைவுகூர்வது வரலாற்றுக் கடமையாகிறது

அடிமை நிலையை
அகற்றவும் அழைக்கும்
அன்புக் குரலது
அன்பரீர் கேட்பீர் !
வாக்குரிமையோடு
வளநாட்டுரிமையும்
ஊக்கமும் வெற்றி
ஓம்பிடும் காலம்
பூக்குமே யந்தப்
புண்ணிய நாள்தனில்
ஆக்கம் புரிந்தவர்
அமைதி இழந்தவர்
மூச்சிலே சுதந்திரத்
திருகலந்திடுமே
மூச்சிலே விடுதலைச்
சுகம் மலர்ந்திடுமே
பேச்சிலே வீரமும்
உறுதியும் மாட்சியும்
பிறந்திடும் வெற்றிப்
பெரு வாழ்வாமே..!

1948 ஆம் ஆண்டு குடியுரிமைப்பறிக்கப்பட்ட மலையக மக்கள் பின்னாளில் வளநாட்டுரிமையும் ஊக்கமும் வெற்றியும் அடைவர் என கவிதையில் கனவு கண்டிருக்கிறார் ஸி.வி. வேலுப்பிள்ளை அவர்கள். அந்த கனவு இன்று ஓரளவு நனவாகியுள்ளது. இன்னும் அடையப்பட வேண்டியவைகளும் உள்ளன.

நாழிக்கு நாழி
வீதியில் நின்று என
யாழினை எடுத்து
கீதத்தை இசைப்பேன்....
ஈழத்தின் மானுடர்க்காய்
வயல் புல்வெளிகளிலும்
தேயிலை, ரப்பர்
தோட்டங்களிலும்
பிறந்திட்ட மானுடர்க்காய்...
ஆம், நான் காதலிக்கும்
அவர்களுக்காய்..

என, பாட்டாளி வர்க்கத்துக்கு தன் கவிதைகளை மானுட நேயத்துடன் சமர்ப்பணம் செய்துள்ள மகா கவிஞனை அவரது நூற்றாண்டில் நினைவுகூர்வது





பாரதி என்ற சாரதி

தன்கரத்தைக் கண்ணீரில் கழுவிக் கொண்டு
தமிழ்வளர்த்த பாரதியார், ஒருநா ளேனும்,
பொன்சங்கிலிகள் போட்டுக் கொண்டதில்லை
பொருள் சேர்க்கும் ஆசை அவர்க் கிருந்ததில்லை
மன்னுபுகழ் மிகப்பெற்று உயரு முன்பே,
செத்து விட்ட பாரதியின் எழுத்தும், பாட்டும்,
இன்றைக்கோ, நாளைக்கோ மட்டும் அல்ல
என்றைக்கும் திருக்குறள்போல் நிலைத்து நிற்கும்

காமத்தை எழுப்புகின்ற கவிதை செய்யும்
கவின்சினி மாக்கவிஞரை காசினி கண்டும்
சேமஇல்லை என்றுரைக்கும், தோட்டம் தந்த
செவ்வாழை குலைஎன்று, இவரைப் போற்றும்,
ஊமையராய் குருடர்களாய் வாழ்தல் நன்றோ,
உலகத்தீர் என்ற இவர் பாடல் எங்கே?
பூமெத்தை பெண் வர்ணனையே செய்யும்
பண்டிதர்கள் அவர் பாடல் எங்கே?

வானத்தை மேல் நோக்கிப் பார்க்கும் மீசை
வைத்திருக்கும் பாரதியார், மாந்தர் வாழ்வில்
கூனலெனும் சொல்லுக்கே, இடங்கொ டுத்தல்
கூடாது என்றுரைத்தார், நாங்கள் உண்ணும்
தானியம் போல், தேவையுள்ள கருத்தும் செய்யுள்
சரித்திரத்தில் மாறுதலும், நமக்குத் தந்தார்
ஏனத்தில் தேன்வடிக்கும் வையத் தார்க்கு,
ஏட்டினிலே தேன்வடித்துக் காட்டி யுள்ளார்

நிலத்திற்கு அழகுதரும் பொருள் இரண்டு
நெல்ஒன்று, மற்றொன்று கரும்பு ஆகும்
அலைஅசையும் தடாகத்திற்கு அழகு, வண்ண
அரவிந்தமாம் தாமரைப்பூ அழகு ஆகும்
உலைதன்னில் அரிசிதனைப் போட்டிடாமல்,
உமிதன்னை அள்ளி வந்து போடலாமோ?
கலை அரசன் பாரதி வழி வந்த கவிஞர்
கவனமாய் அவன் பாதை பேணவேண்டும்

பொதுக்கவிஞன், புதுக்கவிஞன், நிகண்டு என்னும்
புத்தகத்தில் இருந்து வரும் சொற்கூட் டத்தைப்
பதிக்காமல், எல்லோர்க்கும் புரியும் சொல்லால்
பாட்டெழுதிக் காட்டிவந்த பார திக்குத்
துதி போதா, அவன் போலி அறிஞன் அல்லன்!
சுயவிளம்ப ரத்திருநாளும் தேவை இல்லை!
இதையுணர்ந்து பாரதியை பேணிப் பாட்டால்,
இனியொரு புதுஉலகம் படைத்து நிற்போம்

நீயே அரசன்

வாக்காளப் பெருமகனே, தேர்தல் நன்னாள்
வருகின்ற குணங் குறிகள் தெரிந்திடுவாய்!
மாக்களென உனையிங்கு மதித்தோ ரெல்லாம்,
மக்களாட்சி தந்துள்ள மகத்து வத்தால்
நீக்குவதற்கு வகையின்றி உன்னை நாடி
நெருங்கிடுவார், விந்தை பல பேசிப்பேசி,
ஊக்கமொடு, நோக்கமிலா நோக்க மெல்லாம்,
உரைத்திடுவர், உணர்த்திடுவர், அறிவாய் நீயே

மனிதரிலே மேம்பட்டோர் என நினைக்கும்,
மதோன்மத்தர், பெம்மான்கள் மனதை மூடிப்,
புனிதமிகு உன்கரத்து வாக்குச் சீட்டால்
புது உறவு பெற வருவர், புரிந்து கொள்வாய்!
இனிதான இன சமத்துவமும் பேசி
எளியோரை வலியோர்கள் வசியம் செய்வர்!
கனிவாக, அரசியலின் கதையைச் சொல்லிக்
கண்ணாம்பூச்சி காட்டுவர், காண்பாய் நீயே!

இன்றொருநாள் யாவர்க்கும் அரசன் நீயே!
ஏழையுந்தன் கரத்திலுள்ள வாக்குச் சீட்டே
சென்றெதையும் நிலைநாட்டும் செங்கோலாகும்!
சீர்தூக்கிச் சிந்தனையைச் செலவு செய்து,
நன்றிதனை மறவாத ஆளைத் தேர்ந்து,
நன்முறையில் சமாதானம் நாட்டில் ஓங்க,
என்றைக்கும் பணத்துக்குப் பணிதல் இன்றி,
எப்போதும் தலைநிமிர, வாக்கைப் போடு!

சூழ்ந்திருக்கும் துயரங்கள் யாவும் தீர்த்துத்
தொலைத்துவிட உன்னாலும் ஆகும்! என்றும்
தாழ்ந்திருக்கும் கட்டாயம் இனியும் இல்லை!
தகுதிமிகு வாக்காளர் பட்டியலின் மேல்
வாழ்ந்திருக்கும் உன்பெயரின் வலிமை தன்னை
வகையாக முறையோடு நீ யுணர்ந்தால்,
வீழ்ந்திருக்கும் சமுதாயம் எழுச்சி பெற்று,
வெற்றிபெறும் விழிப்படைவாய் அன்பு நண்பா

நீர்வை கி.மயூரகிரி

வானம் நிறையும் தனிமை

பெரும் குரலெடுத்துப் பாடிக்கொண்டிருக்கிறது
இலையுதிர்காலத்தின் கடைசிப் பாடலை நீண்டவால்க் குருவி.

வானத்தின் சோகங்களையும் வீதியின் தனிமைகளையும்
பழுத்த ஊசிஇலைகளின் துயரங்களையும்
துணைக்கழைத்து நேசிப்பின் வரிகளை இழைத்துக் கூவியழுகின்றது.

சேர்ந்து இசைக்கும் குரலொன்று வருமென்ற தேடலில்
நியமம் தப்பாத இடைவெளிகளை
சலிப்பின்றி விட்டுக் காத்திருக்கவும் செய்கின்றது.

நீண்டவால்க் குருவியின் ஒற்றைக்குரலில்
சூரியன் மரணிக்கத்தொடங்குகிறான்.

இருளின் பெருக்கத்தொடு இயைந்து
மௌனத்தின் இடைவெளியும் நீண்டு
கனக்கத் தொடங்குகையில்,

அந்த இடைவெளிகளின் நிசப்தத்தில்
மூச்சின் ஒலிகளை நிறுத்திக்
காவலிருக்கத் தொடங்குகிறேன்.

இன்னொருகுரல் எங்காவது ஒலித்துவிடாதா....
நீள்கின்ற தனிமை இந்த இலையுதிர்காலத்தோடு கலைந்துவிடாதா ....

நீண்டவால்க் குருவியின் ஒற்றைக்குரலும் தளம்பத்தொடங்குகிறது.
குளிர் மெல்லப் பரவ.
அங்குமிங்கும் வெண்துகள்கள் சிந்தத்தொடங்குகிறது.

எங்கும் இருள், தூண்களில் மின்குமிழ்களில் இருந்து
தடித்த கோடுகள் நீள்கின்றன.
யன்னல்கள் அடைத்துக் கொள்கின்றன.

உதிர்ந்துகிடக்கும் மஞ்சள் இலையொன்றை எடுத்து
நரம்புகளோடு பேசத்தொடங்குகிறேன்.

உள்ளங்கைகளில் தவறிவிழுந்த ஒற்றைத் துளியின் கூட்டில்
நீண்டவால்க் குருவியின் மௌனத்தால்
நட்சத்திரமொன்று உதிர்ந்துகொண்டதை உணர்ந்தேன்.

காலடியில்,
வானம் வெறுமையாகிக் கிடந்தது.

இன்றென் பெருவாழ்வு

பறவைகளின்றி வானம் இறந்து கிடக்க,
இலைகள் கழற்றிய கிளைகள்
காற்றோடு குலவுகின்றன,

மதில்களில் பூனைகள் இல்லை.
வாசல்களில் எந்தவொரு அரவங்களும் இல்லை.
அறைகளில் ஒளிரும் மின்குமிழ்கள்
கண்ணாடி யன்னல்களில் வழியத்தொடங்குகின்றன.

குளிர் புணர்ந்து அந்தி கவிழ்ந்துவிட்டது.
இனியிருள் சூழ்ந்து அமைதி வளர்ந்துவிடும்.

மூச்சுக் காற்றில் வெப்பம் தெறிக்க,
உள்ளங்கைகளில் குளிர் குத்தும்.
இரண்டுபட்டுக் கிடக்கிறது தேகம்.
மனதும்,

கிடுகுவேலிப் புலுனிக்குருவி நான்
இந்தப்பனிக் குளிக்கும் மரங்களில் எனக்கேது மறைவு.

செயின் நதியும் ஈபிள் கோபுரமும்
மோனோலிசாவின் முகமும் உலகின் அழகான ராஜபாட்டையும்
டயானாவின் கார் மோதிய தூணும்
கடிகாரத்தின் இலக்கங்களாகிடச் சுற்றிக்கொண்டிருக்கிறேன்.

தொடரூந்துகளிலும் இரவுநேர ஊர்திகளிலும்
அவதியோடு கழிந்ததுபோக மிச்சமிருக்கும் உறக்கத்தோடு
கம்பளியொன்றுக்குள் புதைந்துவிடுதலும்,

வலிந்து திணித்த புன்னகையோடு
முகமறியாதவனுக்குப் பதில் வணக்கமும்
நண்பனுக்கு வாழ்த்தும்,
தொலைபேசி அழைப்புக்குச் சிரிப்பும்
இந்தப் பெருவாழ்வின் பக்கங்கள்.

வாழ்வைக் கடையும்
காலக்கயிறாகி விலகாது கிடக்கும்
ஏழாவது அறிவே இன்றெனக்குக் கிடைத்த சாபமோ.

வல்லைவெளியின் கண்டல் மரங்களிலும்
வல்வைக்கடலின் முருகைகற்களிலும்
நீண்ட வயல்வெளிகளின் வரப்புகளிலும்
இன்னும் ஒளிந்திருக்கலாமென் வாழ்வு.

திரும்பிப் பார்க்கிறேன்.
பனிபடர்ந்த வீதியில் உருகிக்கொண்டிருக்கிறது
என் பாதச்சுவடுகள்.

-நிற்கோமுதாசன்

புதுமை விரும்பியாகிய நீ

மரபை உடைத்து
மக்கள் முன்னே பாடம் புகட்டினாய்
உரைவீச்சும் கவிவீச்சும்
உன்னை முன்னேற்றி
முழு மதியாக்கியது
பெண்கள் விடுதலைக்காய்
கண்கள் கலங்கி நின்றாய்
தலைமையை உன்னிடம்
தந்து நின்றோம்.
உன் மென்மையான
குரலுக்காய்
நாம் உரத்து கோஷமிட்டோம்.
இன்று நீ
அமைதி பூங்காவாய்
அடங்கியிருந்து
குடும்ப வாழ்வில்
அமர்ந்து கொண்டாய்.
மரபுகாத்து தாலாட்டு பாடுகிறாய்.
பேச்சு சுதந்திரமும்
உனக்கில்லையோ?
பேசு பேசு
உன் குரலால் பேசு
நாங்கள் உனக்காய்...!

லயத்து சிறையில்

ஏதோ நோயாளிகள் என எண்ணி
எங்களுக்கு பரிகாரம் சொல்வது போல
ஏதேதோ சொல்கிறார்கள்
கல்லாகியிருந்து அவர்கள் கதைகளுக்கு
செவி சாய்க்கிறோம்.
நாங்கள் நோயாளிகள்தான்!
வாழ்க்கையில் விடிவு காணாத நோயாளிகள்.
லயத்து சிறையினிலே
கலயம் காலில் தட்டுப்பட
கண்மூடி தூங்குபவர்கள்.
வந்தவர்கள்
வீடு தருவோம் வீதி சமைப்போம்
பாலம் அமைப்போம் என எமக்கு
வாக்கு அளிக்கின்றனர்
எங்கள் வாக்குகளை
தாங்கள் பெற்றுக் கொள்ள;
எத்தனை பேர் வந்தார்
வந்தவர்கள் பலர் பதவியில் ஏறி
மகிழ்வு காண்கின்றனர்.
நடக்க முடியா நமது பாதையில்
நடந்து வந்தது
நம் தோளில் தட்டி தோழமை கொள்கிறார்
நாங்கள் இன்னும்...!

– வதிரி சி.ரவீந்திரன்



திசைகாட்டிக்காக தேடும் காந்தங்கள்

திசை புரியாமல் எல்லோரும்
இங்கு தனித்திருக்கின்றோம்
தூரங்கள் நடக்கின்றோம்
எல்லோருமாக பயணிக்கின்றோம்
ஆனாலும் இன்னும் பயணம்
கேள்வி குறியாகின்றது.

ஒவ்வொரு காலமும்
திசைகாட்டிகள் வாங்கி விடலாம்
என்ற கனவு மட்டும்
மாறி மாறி தொடர்கின்றது
ஆனாலும் புரியவில்லை
ஒவ்வொரு காலமும்
திசைகாட்டிகள் வாங்கப்படுகிறது
பின் செயலற்று போகிறது
தொலைகின்றது

இரவு, பகல் என மாறினாலும்
திசைகள் கேள்வி குறியாகின்றன
ஒவ்வொரு தரமும்
திசைகாட்டி கிடைக்குமென
புள்ளடி இட்டு பணமிட்டு ஏமாற்றம்

நிகழ்காலம்
திசைகாட்டியை நாங்களே
தயாரிக்க காந்தம் தேடுகின்றோம்

– எஸ்.பி.பாலமுருகன்

மூடர்களைப்போல..

மலர்ந்து நிமிர்ந்து கிடக்கிறது
பந்தியில்
காக்கை குந்திய
வாழையிலை!..

இரத்த மணம் மாறி
கறியாய் கோப்பையில்
கொதித்து வெந்து இருக்கிறது
பழியுண்ட கடா!..

அடுப்பில் வாட்டி வதக்கி
கூட்டாக பரிமார
தயாராகிறது
கூத்தை குத்தாப் பச்சை
மரக்கறிகள்!..

கரைத்து கணக்காய்
சேர்க்கப்பட்டிருக்கிறது
இவையனைத்திலும்
உப்புடன் க(த)ண்ணீர்!..

ஊறல் அரிசிகள் மட்டும்
ஏன் இன்னும்
அடம்பிடிக்கிறதோ தெரியவில்லை வேகுவதற்கு?
மூடர்களைப்போல முட்டரிசிகளாக
அவை எதற்கு?..

– மு.அ.மு.முர்சித்



மொழிபெயர்ப்பும் கவிதையும்

அ. யேசுராசா

ஒரே கவிதையை வெவ்வேறு நபர்கள் மொழி பெயர்த்திருக்கின்றனர்; இவற்றில் காணப்படும் வேறுபாடுகள் ஆச்சரியமானவை. மொழிபெயர்ப்பாளரின் தனி ஆளுமை வெளிப்பாட்டினால், மொழிபெயர்ப்பில் மொழிப் பிரயோகம் வேறுபடலாம்.

*மா*ணவர் - இளைஞருக்கான இந்தக் கவிதைப் பயிலரங்கில் கலந்துகொள்வதில் மகிழ்ச்சி. மொழிபெயர்ப்புக் கவிதைகள் பற்றிய கருத்துகளை நான் பகிர்ந்து, இத்துறையில் உங்களின் கவனத்தை ஈர்க்கச் செய்யவேண்டுமென்பதே அமைப்பாளர்களின் நோக்கம். எனது அனுபவங்களின் ஊடாக நான் பெற்ற சில கருத்துகளை, உங்களுடன் பகிர முயல்கிறேன்.

1. நாவல், சிறுகதை, கவிதைத் துறைகளில் மொழி பெயர்ப்பு ஆக்கங்கள் ஏராளமாக வந்துகொண்டுள்ளன. மொழிபெயர்ப்பு ஏன் தேவை எனப் பார்க்கும்போது, பொதுவான அம்சங்களைக் காணமுடியும். இங்கு, குறிப்பாகக் கவிதை குறித்து முன்னர் நான் எழுதியதைப் பொருத்தங்கருதித் தருகிறேன்:

"அவ்வப்போது பிறமொழிக் கவிதைகள் தமிழ் மொழி பெயர்ப்பில் படிக்கக் கிடைக்கின்றன. நல்ல மொழிபெயர்ப்பாக அமைந்த கவிதைகள் தரும் அனுபவமும், உள்ளக்கிளர்வும் வித்தியாசமானவை. அவற்றில் வெளிப்படும் தற்புதுமையினை நான் விரும்புகிறேன். தமிழில் சுயமாக எழுதப்படும் கவிதைகளில் அத்தகைய அனுபவங்கள் அபூர்வமாய்த்தான் கிடைக்கின்றன. மாறுபட்ட நிலப் பிரதேசங்கள், காலநிலைகள், பண்பாட்டு மரபுகள், அறிவியல் - தத்துவ வளர்ச்சிச் சூழல்களில் வேர்கொண்டு வெளிப்படும் உணர்வுகள் என்பதால், தம்மளவிலேயே ஒரு நூதனத்தன்மையை அவை கொண்டுள்ளன போலும்! நூதனப்பான்மைகள் மட்டுமல்லாது மனிதப் பொதுமைகளும் அவற்றில் அற்புதமாக வெளிப்படுகின்றன."

-தூவானம் *(பக். 44)*

இன்னொரு முன்னோடி எழுத்தாளரின் கருத்து களையும் நோக்கலாம்:

"இதில் 'வெளிக்குரல்கள்' என்ற தலைப்பில் சில பிற மொழி கவிதைகளை மொழி பெயர்த்து தந்திருக்கிறேன். புதுக் கவிதை இப்போது கொஞ்சம் செக்குமாடாக சுற்ற ஆரம்பித்திருப்பது போல் படுகிறது. உள்ளடக்கம் வீச்சு, விரிவு இரண்டிலும்

நானாவிதமோ நீட்சியோ பெற தயங்குகிறது. புதிதாக எழுத ஆரம்பிப்பவர்கள் இரண்டாம்தர, மூன்றாம்தர படைப்புகளை 'இமிடேட்' செய்வது அதிகமாகிறது. சத்தான, தக்கான கவிதை களை முதல்தர கவிதைகளை தொடர்ந்து படித்தால்தான் பயன் இருக்கும். கவிதையின் தரம் உயர வழி ஏற்படும். எனவே பிற மொழி கவிதைகளை மொழிபெயர்த்து தருவது அவசியமாகும்."

– சி.சு. செல்லப்பா
மாற்று இதயம்
(10.05.1974)

2. கவிதை மொழிபெயர்ப்பு சாத்தியமானதுதானா என்ற ஐயம் பலரால் தொடர்ந்து வெளிப்படுத்தப் படுகிறது; மொழிபெயர்ப்பில் ஏற்படும் பல்வகைக் குறைபாடுகளைப் பலர் சுட்டிக் காட்டுகின்றனர். இவ்வாறு தெரிவித்த நமது முக்கிய ஆளுமைகள் சிலரின் கருத்துகளைப் பார்க்கலாம்.

" 'மொழிபெயர்க்கப்பட முடியாமல் இருப்பது கவிதை களின் உயிர்நிலையான பண்புகளில் ஒன்று' என்று 'இலூஷன் அண்ட் றியலிற்றி' என்னும் விமர்சன நூலொன்று கூறும். அந்த நூலின் ஆசிரியர் கிறிஸ்ற்றோஃவர் கோட்வெல், மிகவும் பிரதானமான ஓர் உண்மையை ஓரளவு மிகைப்பட்ட அழுத்தங்களுடன் இவ்வாறு சொல்லியிருக்கிறார். கவிதைகள் மொழிபெயர்க்கப்படாமல் இல்லை. மெய்தான். ஆனால் மூலக் கவிதை தந்த அனுபவத்தை எந்தவொரு தலைசிறந்த மொழிபெயர்ப்புத்தானும், சற்றேனும் திரிபில்லாமல், நூற்றுக்கு நூறு 'சரி செப்பமாகத்' தந்துவிடுவதில்லை. இதற்கு ஏதுக்கள் பல."

– இ. முருகையன்
மொழிபெயர்ப்பு நுட்பம்,
பக். 122

"ஒரு படைப்பை மூலமொழியிலிருந்து இரண்டாம் மொழிக்குப் பெயர்க்கும்போது சில அம்சங்கள் இழக்கப்படு கின்றன, சில அம்சங்கள் புதிதாகச் சேர்கின்றன. எந்த மொழி பெயர்ப்பிலும் இது தவிர்க்க முடியாதது. இரண்டாம் மொழியி லிருந்து மூன்றாம் மொழிக்குப் பெயர்க்கும்போது இந்த இழப்பு இன்னும் அதிகமிருக்கும் என்பது புரிந்து கொள்ளக்கூடிய உண்மை தான்."

– எம்.ஏ. நு:மான்
இரவின் குரல்,
பக். xvi

" 'மொழிபெயர்ப்பாளர் ஒரு துரோகி' என்கிறது ஒரு இத்தாலியப் பழமொழி. ஒரு கவிதையை மொழிபெயர்க்கையில் மூலத்தின் கட்டமைப்பு, படிமம், ஒலி, சந்தம் முதலியவற்றுக்கு இணையானவற்றை மொழிபெயர்ப்பில் கொண்டுவர முடியாது என்பதே அப்பழமொழியில் பொதிந்துள்ள பொருள்."

– எஸ்.வி. ராஜதுரை.
அன்னா அக்மதோவா
கவிதைகள், பக். 6

"…. உண்மையில், ஒரு மொழியிலே வெளிப்படுத்தப் படும் உணர்வுநிலையை, அது வெளிக்காட்டும் கலாசாரப் பின் புலத்தை, அந்த மொழிசார்ந்த குறியீட்டுப் படிமங்களை அல்லது உருவகங்களை மற்றொரு மொழியில் கொண்டுவருவதென்பது இலகுவானதன்று. குறிப்பாகக் கவிதைக்கே உரிய தனித்துவமான மொழியினை இலக்கு மொழிக்குள் கொண்டு வருவதென்பது இன்னும் சிக்கலானதாகும்."

– லறீனா ஏ. ஹக்
மௌனத்தின் ஓசைகள்,
பக். viii - ix

3. எனினும், கவிதை மொழிபெயர்ப்பு முயற்சிகள் நடைபெறுகின்றன. இலக்கியச் சிற்றேடுகளில் மொழிபெயர்ப்புக் கவிதைகள் வருகின்றன; புகழ்பெற்ற பிறமொழிக் கவிஞனின் கவிதைகளைக் கொண்ட தனி நூல்கள் மட்டுமல்லாது, பல்வேறு கவிஞர்களின் கவிதைகள் கொண்ட தொகுப்பு நூல்களும் – உலகின் ஏனைய மொழிகளைப் போலவே, தமிழிலும் வெளிவந்த படி உள்ளன.

i இலக்கு மொழிப் பண்பாடு, மரபு என்பவற்றுக்கு இயைபாக மொழிபெயர்ப்பைச் செய்யலாமா என்னும் கேள்வி எழும்புகிறது.

அ) 'கோலா' என்ற கொட்டை (nut) கொடுத்து வரவேற்றல் ஆபிரிக்கப் பண்பாடு. அதற்குப் பதிலாக வெற்றிலை கொடுத்து அல்லது சந்தனம் பூசி பொட்டு வைத்து வரவேற்பதாக மாற்றலாமா? என்று, ஒருவர் கேட்கிறார். இதுபோலவே எழுத்தாளர் அகிலன், தான் மொழிபெயர்த்த மாப்பசானின் சிறுகதைகளில், பாத்திரங்களுக்குத் தமிழ்ப் பெயர்களைச் சூட்டியுள்ளார்!; அங்கு பிரெஞ்சுமாந்தர்களைக் காண இயலவில்லை.

ஆ) முருகையன், எஸ்றா பவுண்ட்டின் 'ஒருவரம்' கவிதையில் வரும் ஜூப்பிற்றர் தெய்வத்தை சனீசுரன் என மாற்றியுள்ளார். ஜூப்பிற்றர் தெய்வம் மேற்கு மரபில் 'வியாழன்' கோளுடன் சேர்த்துப் பார்க்கப்படுவது. தமிழர் மரபில் 'வியாழன்' தேவகுரு, திருட்டு புரட்டுகளுக்கு புரவலனாக முடியாது. அதனால், ஆங்கிலத்தில் Jupiter ஆக இருந்த தெய்வம் தமிழில் சனீசுரன் ஆயிற்று என, முருகையன் விளக்கம் தருகிறார்.

இ) இதே கவிதையில்,

" சுங்கான் புகையிலையும் – சுதியான
சுதுமலை யிற்சுருட்டும்
அங்காந்து கொள்ளத் தூண்டி – அழைக்கிற
அம்பன் புகையிலையும்"

என வருகிறது. சுதுமலை, அம்பன் ஆகிய இடச் சொற்கள் எஸ்றா பவுண்ட்டுக்கு உரியன அல்ல என்பதால், பொருத்தமற்றவை ஆகின்றன.

ஈ) காளிதாசனின் 'சாகுந்தலம்' நாடகத்தில், சகுந்தலை கணவன் வீடு செல்லும்போது கண்ணுவ முனிவர் வாழ்த்துகிறார். இதனை மகாலிங்கசிவம்,

"சகுந்தலை செல்லும் தூரம் குற்றியலுகரம்
போல் குறுகுவதாக!"

என மொழிபெயர்த்துள்ளார். தமிழுக்கேயுரிய குற்றியலுகரம் வடமொழிக் காளிதாசனின் படைப்புக்குப் பொருந்துமா?

ii கவிதைகளின் பொருளை வசனத்தில் மொழிபெயர்ப்பதையும் சிலர் செய்கிறார்கள்.

இதனால் கவிதைக்குரிய ஓசை, இலயம் என்பன இழக்கப்பட்டு விடுகின்றன.

உ+ம்:

அ) தாகூரின் 'கீதாஞ்சலி' இவ்வாறு மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

ஆ) கலீல் ஜிப்ரானின் பல ஆக்கங்களைப் பலர் மொழிபெயர்த்துள்ளனர்.

III மொழிபெயர்ப்பில் இயன்றவரை மூலக் கவிஞனின் தனித்தன்மைகள் பேணப்படவேண்டும். வேற்று மொழி, வேற்றுக் கலாசாரத் தன்மைகளின் அந்நியத்தன்மை மொழிபெயர்ப்பில் வாசகனால் உணரப்படவேண்டும். கவிதைக்குரிய தொடர்ச்சியான ஒத்திசை பேணப்படுவதும் அவசியம். சில மொழிபெயர்ப்பாளர்கள் இவற்றைத் தெளிவாக வலியுறுத்துகின்றனர்; இது முக்கியமானதாகும்.

"... பிரபல கவிகளின் கவிதைகளை மாதிரிக்குத் தந்திருக்கிறேன். மூலக் கவிதைகளின் வரியமைப்பு, தொனி, நடையை கூடியமட்டும் காப்பாற்ற முயன்றிருக்கிறேன். எனவே கவிதைக்குக் கவிதை நடை மாறுபாடு இருப்பதைக் கவனிக்கலாம்."

–சி.சு. செல்லப்பா
மாற்று இதயம்

"... அடுத்து ஒரு முக்கிய விஷயம். தமிழ்க்கவிதை மரபிற்காகக்கூடத் தழுவலாக இவை மொழிபெயர்க்கப்பட வில்லை. மலையாளக் கவிதையை அதன் அனைத்து இயல்புகளிலும் மாற்றமின்றித் தமிழ் வடிவமாக்கும் முயற்சி இது."

– வி.எஸ். அனில்குமார்
பாரதிபுத்திரன்
மிளகுக் கொடிகள்

4. கட்டுரைகளை மொழிபெயர்ப்பது போன்ற தல்ல படைப்பிலக்கியங்களின் மொழிபெயர்ப்பு முயற்சி.

நல்ல மொழிபெயர்ப்பாக அமைந்த கவிதைகள் தரும் அனுபவமும், உள்ளக்கிளர்வும் வித்தியாசமானவை. அவற்றில் வெளிப்படும் தற்புதுமையினை நான் விரும்புகிறேன். தமிழில் சுயமாக எழுதப்படும் கவிதைகளில் அத்தகைய அனுபவங்கள் அபூர்வமாய்த்தான் கிடைக்கின்றன.

நாவல், சிறுகதை போன்றவற்றை மொழிபெயர்ப்பதற்கு படைப்பாற்றல் திறனைக் கொண்டவராக மொழி பெயர்ப்பாளர் இருத்தல் அத்தியாவசியமானது; அப்படி யானால்தான் மொழிபெயர்ப்புகளில் கலைத்துவம் இருக்கும். ஆயினும், கவித்துவ மொழிபெயர்ப்பு கடின மானது; அதனால் கவிதா மொழிபெயர்ப்பு இன்னும் கூடுதல் படைப்புத் திறனைக் கோரிநிற்கிறது. கூர்மை, செறிவு, ஒத்திசை போன்றவை கவிதைகளில் பேணப்பட வேண்டும்; எனவே, நல்ல கவிஞரால் அல்லது கவிதா உணர்வு உள்ளவரால்தான், கவிதையைக் கவிதையாக மொழிபெயர்க்க முடியும்.

"பாட்டினையே பாட்டாய்ப் பெயர்க்கும் பணி பெரிது;
மீட்டும் முதல் நூல் விளைத்தோன் அவன் பட்ட
பாட்டின் வழி ஆம் பெயர்ப்பு மறுபடைப்பே...."

என்ற மஹாகவியின் வரிகள், கவிதை மொழி பெயர்ப்பின் முக்கியத்தை நன்கு வெளிப்படுத்துகின்றன.

அ) உயிர்ப்பற்ற மொழிபெயர்ப்புகளும் உள்ளன தான்! கவிதை ஆற்றல் அற்றவர்கள் மொழிபெயர்ப்ப தால் இந்தக் குறைபாடு நேர்கிறது.

ஆ) மரபுமுறையில் மொழிபெயர்க்கும்போது எதுகை, மோனை, சீர், தளை முதலியவற்றைப் பேணுவதில் கவனம் செலுத்தும்போதும் கலைத்துவக் குறைபாடுகள் நேர்கின்றன. கே.கணேஷின் பல மொழிபெயர்ப்புகளில் இவற்றை அவதானிக்கலாம்.

இ) விடுபாடுகளும் புதிய சேர்க்கைகளும்கூட சில வேளைகளில் நிகழ்கின்றன.

ஜோசப் ஃப்ரொட்ஸ்கியின் கவிதையொன்றை 'மேரியும் கிறிஸ்துவும்' என்னும் தலைப்பில் சோ.ப. மொழிபெயர்த்துள்ளார். அதில்,

அண்ணல் தன்மலர் வாய்மொட்டவிழ்ந்தது

என்ற வரி மூலக் கவிதையில் இல்லை; இதைப்போலவே கவிதையின் இறுதியில் வரும்,

உன்னவன், உன்னவன்

என்பதும் உள்ளது. ஒருமுறை கையாளப்படவேண்டிய உன்னவன் என்னும் சொல், இரண்டு தடவை கையாளப்பட்டுள்ளது. எதுகைக்காகவும் அழுத்தத் திற்காகவும் கையாளப்படும்போது, மூலக்கவிதையில் விலகல் நேர்கிறது.

ஈ) பிரச்சார நோக்கில், தமக்கு உவப்பான உள்ளடக் கத்தைக் கொண்ட கவிதைகளைத் தேர்வுசெய்யும் போதும் குறைபாடுகள் நேர்கின்றன.

உ+ம்:

'சோசலிசக் கவிதைகள்' (1981) கவிதைத் தொகுப்பிலும், 'பணிதல் மறந்தவர்' (1993) என்ற சி.சிவசேகரத்தின் தொகுதியிலும் கலைத்துவமற்ற பிரச்சாரக் கவிதைகள் பலவற்றைக் காணலாம்.

5. ஒரே கவிதையை வெவ்வேறு நபர்கள் மொழி பெயர்த்திருக்கின்றனர்; இவற்றில் காணப்படும் வேறு பாடுகள் ஆச்சரியமானவை. மொழிபெயர்ப்பாளரின் தனி

ஆளுமை வெளிப்பாட்டினால், மொழிபெயர்ப்பில் மொழிப் பிரயோகம் வேறுபடலாம். அதைப்போலவே, அவர்கள் மொழிபெயர்க்க எடுத்துக்கொண்ட பிரதிகளின் வேறு பாட்டாலும் (ஒருகவிதைக்கு வெவ்வேறு மொழி பெயர்ப்புகள் ஆங்கிலத்தில் உள்ளன.), பொருளிலும் வேறுபாடுகள் ஏற்படலாம். கீழே தரப்பட்டுள்ள நான்கு கவிதைகளில் இவ்வேறுபாடுகளை நீங்கள் அவதானிக் கலாம். மாவோ சேதுங்கின் 'வெண்பனி' என்னும் கவிதையின் முதலாவது பந்தி மட்டும் இங்கு தரப்பட்டுள்ளது.

வெண்பனி

"வடநாட்டுக் காட்சி :

நூறு காதம் உறைபனிப் பிடியில்,
ஆயிரம் காதம் சுழலும் வெண்பனி.
பெரு மதிலதனின் இரண்டு மருங்கும்
தனியோர் வெள்ளை விசால வெளியாம்.
மஞ்சல் நதியின் விரையும் ஓட்டம்
முனைக்கு முனையாய் ஸ்தம்பித் திருந்தது."

–சி. சிவசேகரம்
மா ஓ சேதுங் கவிதைகள் (1976)

வெண்பனி

" இதோ ஒரு வடபுலக் காட்சி :
உறைபனியில் சிக்கிய ஒரு நூறு காதங்கள்.
உதிரும் பனித் துகள்கள் ஓராயிரம் காதங்கள்.
பெருஞ் சுவரின் இருமருங்கும்
எங்கும் நிறைந்திடும் வெள்ளைப் பெருவெளி.
மஞ்சள் நதியின் விரைந்த நீரோட்டம்
நதியின் இரு முனைகளுக்கு இடையிலும்
உறைந்து கிடக்கிறது."

– எஸ்.வி. ராஜதுரை
மா சேதுங் கவிதைகள் (1981)

வெண்பனி

வடபுலக் காட்சி வனப்பாய் உள்ளது.
முன்னூறு மைல்வரை பனிபடர்ந் துள்ளது
மூவாயிரம் மைல் வெண்பனித் தூவல்
பெருங்கற் சுவரின் இருபுறங் களிலும்
அகண்ட மான வெண்ணிறத் தோற்றம்.
மஞ்சள் நதியின் விரைந்தநீர் ஓட்டம்
முடிவு வரையும் உறைந்துபோய் உள்ளது."

– எம்.ஏ. நு:மான்
'அலை', புரட்டாதி – ஐப்பசி, 1976

கண்டெடுப்பு

" வடபுலத்துக் காட்சி!
நெடுஞ் சுவரின் இரண்டு பக்கமும்

வெவ்வேறு மொழிப் படைப்புகளினதும், கவிஞர் - விமர்சகரின் கருத்துகளினதும் அனுபவங்கள் காலப்போக்கில், உங்களின் இரசனை யையும் மதிப்பீட்டையும் பக்குவப்படுத்தும். கவிதை பற்றிய உங்கள் அறிவை அவை அகலிப்பது மட்டுமல்லாது, கவிதை ஆக்கச் செயற்பாட்டுக்கும் உந்து தலைத் தரும்;

ஒரே பனி! பனி!
அகன்ற ஆற்றில்
ஆழமும் பலமும் மிக்க வெள்ளம்!'
– *சோசலிசக் கவிதைகள் 1981*

கறுப்பு எழுத்தில் உள்ளவற்றை உற்று நோக்கும்போது வேறுபாடுகளைக் காணலாம். ஒரு கவிதையில் நூறு காதம் ஆயிரம் காதம் எனப்படுவது, இன்னொரு கவிதையில் முன்னூறு மைல்வரை மூவாயிரம் மைல் என வந்துள்ளது. ஒரு கவிதையில் ஸ்தம்பித் திருந்தது. எனப்படுவது, இன்னொன்றில் உறைந்து கிடக்கிறது. என வந்துள்ளது. வெண்பனி என்னும் தலைப்பு ஒரு கவிதையில் மட்டும் கண்டெடுப்பு என வந்துள்ளது!

இவ்வாறு வெவ்வேறு நபர்களால் மொழி பெயர்க்கப்பட்ட வேறு சில கவிதைகளை ஒப்பிட்டுப் பார்ப்பதும் நல்லது. உ+ம்:

அ) இ.முருகையனும் சி.சு செல்லப்பாவும் மொழிபெயர்த்த வில்லியம் பிளேக்கின் கவிதை (நச்சுமரம்; விஷமரம்).

ஆ) சோ. பத்மநாதனும் அ.யேசுராசாவும் மொழி பெயர்த்த ஜோசப் ஃப்ரொட்ஸ்கியின் கவிதை (மேரியும் கிறிஸ்துவும்; நிலை மயக்கம்).

இ) கெக்கிராவ ஸுலைகாவும் அ. யேசுராசாவும் மொழிபெயர்த்த அன்னா அக்மதோவாவின் கவிதை (N.Pக்கு... ; வெற்று இரவு...).

தமிழகக் கவிஞரான சமயவேல், 'மொழி பெயர்ப்பின் மாயை' என்னும் தலைப்பில் நல்ல கட்டுரை யொன்றை எழுதியுள்ளார். ஓசிப் மெண்டல்ஷ்டாம் என்ற ரஷ்யக் கவிஞரின் கவிதையொன்று மொழிபெயர்ப்பு களில் எவ்வாறெல்லாம் மாறுகிறதென, அதில் விபரிக்கிறார்; படிக்கவேண்டிய கட்டுரை. 'உயிர் எழுத்து' (ஆடி 2013) சிற்றிதழில் அக்கட்டுரை வெளியாகியுள்ளது.

6. நல்ல மொழிபெயர்ப்புக் கவிதைகள் ஏராளம் உள்ளன. வசதிகருதி சிறிய கவிதைகள் சிலவற்றை மட்டும் நோக்குவோம்.

அ) றொபேட் ஃவ்றொஸ்ற் ஓர் அமெரிக்கக் கவிஞர்; இவரது கவிதைகள்மீது, முன்னாள் இந்தியப் பிரதமரான ஜவஹர்லால் நேரு ஈடுபாடு கொண்டிருந்தார் எனவும் அறிகிறோம்.

பனித்துகள்

ஹெம்லொக்* மரக் காக்கை
என்மீது
பனித்துகள் உதறிய
தோற்றம்,
மாற்றியது என்
மன நிலையை;
துயரிற் கழியாதும்
காத்தது -
எஞ்சி இருந்த நாளை!

*ஒருவகை நச்சுமரம்.

-கவிதை

(ஆவணி - புரட்டாதி 1994)

குறைந்த வரிகளைக் கொண்ட இறுக்கமான சிறிய கவிதை; வெளிப்படையானதுங்கூட. ஆனால், நச்சு மரத்திருந்து பனித்துகளை உதறிய காகத்தின் செயல், மானுடத் துயரிலிருந்து மீளும் வெளிச்சத்தைத் தருவது அருமையாகவுள்ளது. கற்பனைபண்ண முடியாத - கவிஞனின் உண்மை அனுபவத்தின் - வெளிப்பாடாகவும் இக்கவிதை ஆக்கம் அமைந் திருக்கிறது.

ஆ) ழாக் ப்ரெவெர் புகழ்பெற்ற பிரெஞ்சுக் கவிஞர். வெ.ஸ்ரீராம் பிரெஞ்சு மொழியிலிருந்து நேரடியாக மொழிபெயர்த்த அவரது கவிதைகளின் தொகுப்பு, 'சொற்கள்' என்னும் பெயரில் வந்துள்ளது.

முதல் நாள்

அலுமாரியில் வெண்ணிற விரிப்புகள்
கட்டிலில் சிவப்பு விரிப்புகள்
தன் தாயில் ஒரு குழந்தை
அதன் தாய் பிரசவ வலியில்
தந்தை வராந்தாவில்
வராந்தா வீட்டில்
வீடு நகரத்தில்
நகரம் இரவில்
அலறலில் சாவு
வாழ்க்கையில் குழந்தை.

இக்கவிதையின் அமைப்பு வித்தியாசமானது. ஒன்றில் ஒன்றில் இன்னொன்றில் எனச் சித்திரித்து, தாயில் இருந்த குழந்தையை 'வாழ்க்கையில் குழந்தை' ஆக மாற்றிக் காட்டுகிறது.

இ) அன்னா அக்மதோவா புகழ்பெற்ற ரஷ்யக் கவிஞர். மெல்லுணர்வுக் கவிதைகளுடன், அதிகார அடக்குமுறையின் துயர வலிகளையும் பேசுபவை அவரது கவிதைகள்.

பிரிதல்

மாலை,
சரிவான பாதை என்முன்னால்.
நேற்றுத்தான்,
"என்னைமறவாதே" என
காதலோடு அவன், வேண்டினான்.
இன்று வெறுங்காற்றும்,
இடையனின் அழு குரலும்மட்டும்.

தூய ஊற்றினருகில்,
'செடார்' மரங்கள் அலைப்புறுகின்றன.

-1914

-அலை

(சித்திரை - வைகாசி 1978)

இது ஓர் அழகிய மெல்லுணர்வுக் கவிதை. பெண்ணின் குழம்பி மங்கிய மனநிலையையும் எதிர்கொள்ளும் சூழலின் சிக்கலையும் மாலை, சரிவான பாதை என்பன குறிக்கின்றன. தூய ஊற்று காதலுக்கும், செடார் மரங்கள் காதலருக்கும் குறியீடாக உள்ளன!

7. மொழிபெயர்ப்புக் கவிதை நூல்களின் விபரங்கள் உங்களின் வாசிப்புக்குப் பயன்படும்.

அ). இலங்கை நூல்கள்

1. பலஸ்தீனக் கவிதைகள் - எம்.ஏ. நுஃமான்
2. காற்றில் மிதக்கும் சொற்கள் - எம்.ஏ. நுஃமான்
3. இரவின் குரல் - எம்.ஏ. நுஃமான்
4. பூவரசம்பூ - வ.அ. இராசரத்தினம்
5. பாலை - சி. சிவசேகரம்
6. பணிதல் மறந்தவர் - சி. சிவசேகரம்
7. மா ஓ சேதுங் கவிதைகள் - சி. சிவசேகரம்
8. ஒரு வரம் - இ. முருகையன்
9. சிறைக் குறிப்புகள் - கே. கணேஷ்
10. பல்கேரியக் கவிதைகள் - கே. கணேஷ்


இ.முருகையன்

கே.கணேஸ்


சி.சிவசேகரம்


எம். ஏ.நுஃமான்

ரொபேட் ஃவ்ரொஸ்ற்


ஸ்ரூக் பிரௌவர்

அன்னா அக்மதோவா

11.எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்னருமைத் தாய் நாடே - கே. கணேஷ்
12.தேயிலைத் தோட்டத்திலே - சக்தீ அ. பாலையா
13.பனிமழை - அ. யேசுராசா
14.மௌனத்தின் ஓசைகள் - லறீனா ஏ. ஹக்
15.பட்டுப் பூச்சியின் பின்னுகை போலும் - கெக்கிராவ ஸுலைகா
16.தென்னிலங்கைக் கவிதைகள் - சோ. பத்மநாதன்
17.ஆபிரிக்கக் கவிதை - சோ. பத்மநாதன்
18.காற்றின் மௌனம் - பண்ணாமத்துக் கவிராயர்
19.நாளை இன்னொருநாடு - எம்.கே.எம். ஷகீப்
20.கலேவலா - உதயணன்
21.நாளையும் மற்றொரு நாள் - எம். சீ. ரஸ்மின்
22.பிளேக் கவிதைகள் - வை. சுந்தரேசன்
23.உன்னை வாசிக்கும் எழுத்து - அஷ்ரப் சிஹாப்தீன்

ஆ) தமிழக நூல்கள்

1. 25 கவிதைகளும் 500 கமாண்டோக்களும் - யமுனா ராஜேந்திரன்
2. மா சேதுங் கவிதைகள் - எஸ்.வி. ராஜதுரை
3. அக்கரைப் பூக்கள் - எஸ்.வி. ராஜதுரை
4. மண்ணும் சொல்லும் மூன்றாம் உலகக் கவிதைகள் - எஸ்.வி. ராஜதுரை
5. சோசலிசக் கவிதைகள்
6. தலைப்புச் செய்திகள் மூன்றாம் உலகக் குரல்
7. உலகக் கவிதை - பிரம்மராஜன்
8. மிளகுக் கொடிகள் - வி.எஸ். அனில்குமார் பாரதிபுத்திரன
9. ஓர் அவசரநிலைக் கால இரவு
10. மாற்று இதயம் - சி.சு. செல்லப்பா
11. கவிதையின் திசைகள் - சுகுமாரன்
12. பப்லோ நெரூடா கவிதைகள் - சுகுமாரன்
13. வீணையே வாளாக - என். ஆர். தாசன்
14. காற்றுக்குத் திசை இல்லை - இந்திரன்
15. தற்கால மலையாளக் கவிதைகள் - ஜெயமோகன்
16. சொற்கள் - வெ. ஸ்ரீராம்
17. அன்னா அக்மதோவா கவிதைகள் - லதா ராமகிருஷ்ணன்

8. நானும் கவிதைகள் சிலவற்றை மொழி பெயர்த்துள்ளேன். அவை முதலில் சிற்றிதழ்களில் வெளியாகி, பின்னர் 'பனிமழை' என்னும் தொகுதி யாகவும் வந்துள்ளன. எனது மொழிபெயர்ப்பு முறை எப்படி அமைகிறது என்றும் பார்க்கலாம்.

ஆங்கில மொழியில் நான் வாசிக்கும் கவிதை களில் பிடித்த சிலவற்றைக் குறித்து வைத்துக் கொள்வேன். இலகுவில் என் மனதைக் கவர்ந்தவையாக அவை இருக்கும். சிக்கலான - புரிதலில் கடினமானவற்றுக்கு, நான் முக்கியம் கொடுப்பதில்லை. குறித்துவைத்த கவிதைகளில் மொழிபெயர்ப்புக்காக ஒன்றை எடுத்து, அதனைப் பலமுறை வாசிப்பேன். தெளிவான புரிதல் ஏற்பட்டபின், அதற்குரிய தமிழ் வரிகள் தானாகவே மனதில் தோன்றும். ஒத்திசையுடன் வரிகள் அமையும்போது, அவற்றைக் குறித்துக் கொள்வேன். இயன்றவரை ஆங்கிலக் கவிதையின் வரி வடிவத்தைப் பேணியே மொழிபெயர்ப்பு வரிகளை அமைப்பேன். பின்னர் அந்த மொழிபெயர்ப்பை வெவ்வேறு நேரங் களில் படிக்கும்போது தோன்றும் திருத்தங்களையும் செய்துகொள்வேன். கவிதையின் மொழிபெயர்ப்பு திருப்தியாக அமைந்தபின்பே, அதன் இறுதி வடிவத்தைப் பிரசுரத்துக்குக் கொடுப்பேன். இந்த வகையில்தான் எனது மொழிபெயர்ப்பு முயற்சி நடைபெறுகிறது.

9. முடிவுரையாகக் கூறுவதானால், நூலகங்கள் மற்றும் தனியார் சேகரிப்பிலிருந்து மொழிபெயர்ப்புக் கவிதை நூல்களை நீங்கள் பெற்றுப் படிக்க வேண்டும். சிற்றிதழ்களிலும், இணையப் பக்கங்களிலும் வரும் கவிதை பற்றிய கட்டுரைகளையும் குறிப்புகளையும் உள்வாங்கவேண்டும். வெவ்வேறு மொழிப் படைப்பு களினதும், கவிஞர் - விமர்சகரின் கருத்துகளினதும் அனுபவங்கள் காலப்போக்கில், உங்களின் இரசனை யையும் மதிப்பீட்டையும் பக்குவப்படுத்தும். கவிதை பற்றிய உங்கள் அறிவை அவை அகலிப்பது மட்டு மல்லாது, கவிதை ஆக்கச் செயற்பாட்டுக்கும் உந்து தலைத் தரும்; புதிய பரிமாணங்கள் கொண்ட கவிதை கள் எதிர்காலத்தில் உங்களிடமிருந்தும் உருவாகும்!

இந்தக் கவிதைப் பயிலரங்கில் பங்குபற்ற எனக்கு வாய்ப்பளித்த கரவெட்டி பிரதேசச் செயலக நிர்வாகத் தினருக்கும், குறிப்பாக கலாசார அலுவலருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்து அமர்கின்றேன்!

(கரவெட்டி பிரதேசச் செயலகத்தில் நடை பெற்ற 'மாணவர் - இளைஞருக்கான' கவிதைப் பயிலரங்குத் தொடரில், 'மொழிபெயர்ப்பும் கவிதையும்' என்னும் தலைப்பில், 03.11.2013 இல் நான் ஆற்றிய உரையின் கட்டுரை வடிவம்.)

- 17.11.2014.

***

ஒற்றையடிப்பாதை

உயிரின் சுவடுகளை
வன்மம் தின்றபின்
எஞ்சிய நத்தைக்கோதாய்
காட்டிலே தனித்துக்கிடக்கிறது
ஒற்றையடிப்பாதை
பிணங்களின் பசளையில்
பசுந்தேமலாய் வியாபிக்கும் அறுகம்புல்
ஒற்றையடிப்பாதையினை
மூடிவிட அந்தரிக்கிறது

விலங்குகளின் காலடித்தடங்கள்
காட்டுமிராண்டித்தனத்தால்
காவுகொள்ளப்பட்டன
ஒரு கைப்பிடியளவு வெயிலைக்கூட
யாசிக்காத ஆழ்கடல்போல
மர்மம் நிறைந்தன
ஒற்றையடிப்பாதையிலே
வேடர்கள் பயணித்த நாட்கள்

அருங்காட்சியகத்தில்
தொங்கிக்கொண்டிருக்கும்
என்பு எச்சங்களும்
காலத்தின் வயிற்றைக் குமட்டவைக்கும்
நாற்றம் பொதிந்த
வாள்முனையின் திமிரும்
வெளிப்படுத்திக் கொண்டேயிருக்கும்
வேட்டையின் மகிமையை

– இ.சு.முரளிதரன்



குழந்தையும் அரசனும்!

2 – ஆம் அரசனின் வருகை*...
நகரெங்கும் பெருகிய 'இலையான்' கூட்டம்,
சீருடையணிந்து இரும்புக் குழலுடன்
பரபரக்கிறது
முழத்துக்கு முழம்,
"ஆசியாவின் ஆச்சரியமாக....!"

'யாழ்தேவி' எழுப்பும் ஒலி –
"ஐயோ! வன்னியின் அவல ஒலி"
தூய மனக் "குழந்தை' கத்த,
"இல்லை,
விடுவிப்பின் மகிழ்ச்சை!"
என்ற
அரசனின் குரல்,
சிவப்புச் சால்வை மடிப்பின்
நூலிழைகளில் தொங்குகிறது....

காலில் வீழ்ந்தும்
முதுகு மடிந்து கூனியும்
வெற்றிலை மடித்துத் தந்தபடி,
நமது 'அடப்பக்காரர்'கள்....!

- அரசனின் வருகை – உமா வரதராஜனின் சிறுகதைத் தலைப்பு

– பயணி



ஊர்க்கடைகள்

என்னை எனக்கு
விளம்பரப்படுத்தவும்
விரோதிக்கவும்
விருப்பமில்லை

மற்றவரை விளம்பரப்படுத்தியே
எம் அடையாளம் தொலைகின்றது
இருப்பு இடம் மாறுகிறது
தனித்துவம் தலைகவிழ்கின்றது
இப்படித்தான்
யாரோவின் விளம்பரங்களால்
ஊர்க்கடைகள் சோபையிழக்கின்றது

மற்றவர் சுயநலம்
கண்ணுக்குத் தெரியாததால்
கருகுகின்றது காலங்கள்
மற்றவர் சிரிப்புக்கள்
அன்பு என்றுதான்
ஏமார்ந்து போகின்றோம்

அழுது கொண்டும் சிலர்
ஆனந்தப்பட்டுக் கொள்கிறார்கள்
யாரோ ஒருவரை திருப்திப்படுத்தவே
ஏமாறுகின்றோம் என்று தெரிந்தும்
ஏமாறுகின்றோம்.

– ஜோ.ஜெஸ்ரின்

காற்று

காற்று வரட்டும்
கதவைத்திறந்து விடுங்கள்
யன்னலை ஏன் மூடுறீர்கள்...?
அது படபடக்கும் ஒலி
நெஞ்சை அதிரவைக்கிறதா...?
கலங்காதீர்கள்!
மாயைத்தோற்றத்தை
மனசுக்குள் வளர்க்காதீர்கள்!
காற்று வரட்டும்
கதவைத்திறந்து விடுங்கள்.
அதன் திசை வழியே
சென்று வீசட்டும்.
கறைபடிந்த கரங்கள்
இல்லையாயின்
காற்றின் வரவை ஏன் தடுக்க வேண்டும்...?
நாட்டுக்குள் சீனப்பெருஞ்சுவர்கள்
புதிதாய் முளைப்பதால்
ஜ.நாவின் வாடை
வீசுவதைத் தடைசெய்ய முடியுமா..,?
ஜப்பான் நண்டுகளை
மடிக்குள் கட்டுவதால்
அது குடையத்தானே செய்யும்...?
அவைகளை வெளியே விட்டுவிடுங்கள்!
காபன் வாயுக்களைக் களைந்துவிட்டு
உயிர் வாயுக்களுடன்
கைகுலுக்குவோம்
காற்று வரட்டும்
கதவைத்திறந்து விடுங்கள்!

– கே.சின்னராஜன்

குறி

என்னைக்குறிவைத்தொருவன்
எதிரில் – மறைவில் –
எங்ஙனும் சுழல்கின்றான்
என் மீது கொண்ட காதலாலல்ல;
என்றோ ஒரு நாள் குதறும் எண்ணமே
அவன் கண்ணில் தெரிவதாய் உணர்ந்தேன்!
உள்ளூரப்பயம் தானென்றாலும்
வெளிக்காட்ட முனையாமல்
எதிர்க்கும் திராணி பற்றியே
இப்போதெல்லாம் என்மனம்
எண்ணக்கணக்கில் மிதக்கலாயிற்று!

என்குணம் நன்கறிந்த
என்னுயிர்த் தோழியிடம் மட்டுமே
இதுபற்றி வாய்திறந்தேன்;
எதற்கும் கவனமென எச்சரித்தாள்.
சின்னாட்கள் என்னோடிணைந்து வந்து
சிறுக்கனவன் வந்து வேவு பார்த்தாள்;
அவனுள்ளும் கிலி பரவுவதாய் எடைபோட்டு
என் பயம் நீக்கிவைத்தாள்
கூட்டாகக் குழிபறிக்கும் எண்ணமின்றி
தானேயனுபவிக்கும் சித்தமவன் பாலிருப்பதாக
தன் கணிப்பையறிவித்தாள்;
என் கணிப்பும் அதுவாயிருந்ததால்
அது பற்றி அலட்டிக்கொள்ளாது அமைதியானேன்!
எங்கள் எண்ணக்கிடக்கை போலவே
ஒரு நாள் என் கரம் பற்றி இழுத்தானவன்;
பற்றியிழுத்தாலும் பதற்றம் தெரிந்தது.
சட்டென நான் தாக்குதலுக்குத் தயாரானேன்
என் குறி அவனால் சிதையு முன்னே
அவன் குறியதிரக் குறி வைத்தேன்;
"அய்யோ" என்றவன் அரற்றியபடியே
அவதிப்பட்டான், சிலகணங்கள்! பின்
அவ்விடம் விட்டகன்றான்
என்றைக்குமினி என்பக்கம்
திரும்பியும் பார்க்கானென
என்மனம் உறுதிகொண்டது

நம் பண்பாடிதுவென்று நவின்று
நானும் சேலையணிந்திருந்தால்
எங்ஙனமிது கைகூடும் –?
"சல்வாரி" கூட பெண்ணுக்கு
தருணத்தில் கைகொடுக்கும்!
தலைக்கு வரும் ஆபத்தைத்
தடுக்குமெதுவும் ஆயுதம்தான்

– கணே.மகேஸ்வரன்



வெற்றிடத்தின் இருப்பு

பொய்ப்பிக்க முடியாதவை
மெய்ப்பிக்கப்பட்டன
பொய்ப்பிக்க முடியுமென்று
ஐயாறு வருடத்தில்
இனத்தின் எழுச்சியும்,
வீழ்ச்சியும்
நாம்,
சம தொடைகளாய்...
உப தொடைகளாய்...
வெற்றுத்தொடைகளானோம்...
அவர்களோ,
அகிலத் தொடையாயினர்
தர்மத்தில் அகரம் சேர்ந்ததா?
அன்றேல் நீங்கியதா?
எது எங்கே நிகழ்ந்தது
தேவரும் அசுரரும்
குருதிகுடிப்பில் போட்டியிட்டனர்
விடம் தலைக்கேறும் வரை
பரமசிவனும் தடுக்கவில்லை
பாவிகளை மீட்க,
பிதாவும் சுதனை அனுப்பவில்லை
ஊழிக்கூத்து முடிந்தது...?
இப்போது வெற்றுத்தொடையின்
இருப்பிற்காய்
எத்தனையோ விண்ணப்பங்கள்
இருப்பின்றி தொடர்கிறது
எம் வாழ்வு.

– க.தர்மதேவன்

மரணம்

இன்று அந்த
குப்பைத்தொட்டி
முழுமை பெற்றுவிட்டது
நேற்று மாண்ட
சுவர் ஓரப்பல்லியின்
சிதிலமடைந்த எச்சம்,
நாய்க்கும் போடாது,
நயவஞ்சகமாக
வீசி எறியப்பட்ட சில
பாண் துண்டங்கள்,
பாதி கரித்து மீதி எஞ்சிய
பாட்டியின் கோரைப்பல்,
காறிய பொழுதுகளில்
சளியுடன் உமிழ்ந்த – சில
எச்சிற்துகள்கள்,
காய்ந்த பின்பும் காற்றில் நடனமிட்டு – பின்,
கதவோரம் வீழ்ந்து உறங்கிய
சருகுத்துளிர்கள்
அதுமட்டுமல்ல,
மீதமாய்,
இன்னும் ஒன்றுண்டு...
படிக்க முன்பே கிழித்தெறியப்பட்ட,
நேற்றைய கவிஞனின்
"உயர்வுக்கிறுக்கல்கள்"
– அவையும்,
உயிரிழந்ததுவாய்...

– விஜிதா ரகுநாதன்

மொழியற்ற வெளியின் குரல்

ஒளியற்றுப்போன இருள்
நிலத்தில்
இன்னும் இன்னுமாய்
ஒளிர்ந்து கொண்டிருக்கின்றன
உருப்பெற முனையும்
உணர்வுப் பொறிகள்.

இரக்கமில்லா மழை இருளில்
இரங்கிக் கொண்டிருக்கின்றன
குரலற்றுப்போன
பாடல்கள்.

அடக்கப்பட்ட
கொடு நிலத்தில்
இன்னுமாய்
அடங்க மறுத்துக்கொண்டன
அடங்கா அவாக்கள்.

விளக்கெரியா கரு நிலத்தில்
கருமை எச்சங்களை
சப்பித்துப்பிக் கொண்டிருந்தது
அருகதையற்றுப் போன இரா.

எதுவுமற்ற இருள் வெளியில்
ஏகாந்தப் பெருமூச்சுக்களோடு
எருக்கலை மர இருக்கில்
ஓரிரண்டு மின்மினிப் பூச்சிகள்
போவதும் வருவதுமாக
ஒளிர்ந்து கொண்டன.

மிகப்பெரும் கண்ணீர்களாலும்
குருதி வெள்ளங்களாலும்
நனைக்கப்பட்ட ஈர நிலத்தை
காற்றால் தன்னிலும்
ஆற்ற முடியாத படி
துயரங்களை
கக்கிக் கொண்டிருக்கின்றது
நிகழ்வெளி.

விழி உருகி மொழி கருகி
கனன்று கொள்ளும் – இக்
காலப் பெருவெளி மாத்திரம்
என்றும் ஒலித்துக் கொண்டிருக்கும்
மொழியற்ற வெளியின் குரலாய்.

– வெற்றி.துஷ்யந்தன்

றியாஸ் குரானா



சந்திப்பு
இ.சு.முரளிதரன்

றியாஸ் குரானா ஈழத்தின் முக்கிய இலக்கிய ஆளுமையில் ஒருவர். பரந்த வாசிப்பின் ஊடாக தன்னை வளர்த்துக் கொண்டவர். கவிதையின் பல்பரிமாணங்களை நன்கே அறிந்தவர். தனித்துவமான ஆற்றல்மிகு கருத்துகளை இலக்கிய உலகிற்கு வழங்கி வருபவர்.

இ.சு.முரளிதரன் -
உங்களுக்குள் ஒருபடைப்பாளியை இனங்கண்டு கொண்ட காலத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள்?

றியாஸ் குரானா -

மிகத் துல்லியமாக எனக்குள் படைப்பாளியை இனங்கண்ட காலத்தை அடையாளப்படுத்த முடியாது. ஏன் எவராலும் அப்படி அடையாளப்படுத்த முடியாது என்றே நினைக்கிறேன். அப்படி அடையாளப்படுத்த முனைபவர்கள் தங்களைப்பற்றிய ஒரு கற்பனையான செய்தியை பரப்ப முயல்கிறார்கள் என்றே கருதுகிறேன். சில வேளை இப்படியான கேள்வியை குத்து மதிப்பாகவும் சாதாரணமாகவும் எதிர்கொள்ள ஒரு பதிலைச் சொல்லியிருக்கவும் கூடும். ஆரம்பத்தில் நாம் எதனோடு அதிகப் பழக்கத்தை கொண்டிருக்கிறோமோ அது நாளடைவில், நமது தேர்வுக்கான ஒன்றாக மாறி விடுகிறது. சிலர் அதைத் தேர்வு செய்துவிடுகிறார்கள். சிலர் தவிர்க்கின்றனர். இன்னும் எனக்குத் தெரிய பல எழுத்தாளர்கள் தங்களுக்கு படைப்பென்பது எங்கோ வானத்தின் மறைவிலிருந்து தங்களை மட்டும் பிரத்தியேகமாக தொடர்பு கொண்டு என்னை எழுது என்று சொல்லுவதாக நம்பிக்கொண்டிருக்கின்றனர். அப்படியான நகைச்சுவை நிரம்பிய நம்பிக்கைகள் என்னிடமில்லை. இலக்கியம் என்பது பயிற்சியினூடாக வும் பயில்தல்களினூடாகவும் சாத்தியமாகக் கூடிய ஒரு துறைமட்டுமே. இலக்கியத்தை ஒரு துறை என

ஏற்றுக்கொள்ளக் கூடிய வாசிப்பு இன்னும் பரவலாக இங்கு வாய்த்திருக்கவில்லை. அது கடவுளின் பணிப்பின் பேரில் சிலமனிதர்களுக்கு மாத்திரமே நிகழுகின்ற ஒரு அதிசயம் என்ற கட்டுக்கதைகளைப் பரப்பிக்கொண்டிருக்கின்றனர். இந்தக் கட்டுக்கதை இலக்கியவாதிகளை ஏனைய மனிதர்களில் இருந்து தனிச்சிறப்பான ஒரு வகையினராக காட்டிக்கொள்ள தேவையானதாக இருக்கிறது. நான் மூத்தம்மாவோடு தான் எனது குழந்தைப் பருவத்தை கழித்தவன். அவர் சொல்லும் கதைகள் எனக்கு கவர்ச்சியாக இருந்தன. அவைகளைத் தவிர வேறுகதைகளை கேட்கும் வாய்ப்பு யாருக்கும் இருப்பதில்லைதானே. அந்தக் கதைகள் கொண்டிருக்கும் மாயங்களில் எனக்கு ஒருவகைப் பிடிப்பு இருந்தது. உதாரணமாக நிலா நிலா ஓடிவா என்ற சிறிய பாடலைப் பார்க்க முடியும். நிலவோடு மூத்தம்மா பேசுவதாகவே எனக்குத் தோன்றும். நிலவோடு பேசுவதென்பது உண்மையில் ஒரு விசித்திரமானதுதான். அப்படி பேசும் ஆர்வம் எனக்கும் ஏற்பட்டது. பின்னர் புத்தகங்கள் வாசிக்கக் கிடைத்தன. எனது நண்பர்களாக புத்தகங்களினுள் இருக்கும் கதை மனிதர்களும், கவிதைச் செயல்களும் நெருக்கமாக வந்தன. அவைபோலவும் அதிலிருந்து வேறுபட்ட நிலையிலும் எழுத முயற்சித்தேன் என்னால் முடிந்தது. அதையே நான் தேர்வு செய்துகொண்டேன். அனைத்து மனிதர்களும் இப்படியானவர்கள்தான். தங்களால் எது முடிகிறதோ அல்லது எதைப் பயின்று செயல்படுத்த முடிகிறதோ அதைச் செய்கிறார்கள். சிலருக்கு திறம்பட சமைக்க வருகிறது. அதுபோல எனக்கு எழுத வருகிறது அவ்வளவுதான். எழுத்தை படைப்பாகக் கருதினால் சமையலும் ஒரு படைப்புத் தான். எனது இந்த ஆர்வத்தை ஒரு கட்டத்திற்குமேல், அப்படியே விட்டுவிடவில்லை. இலக்கியம் என்பதைப் பயின்றேன். இலக்கியம் என அழைக்கப்படும் பிரதி களை அதற்கான வழிகளில் நெருங்கினேன். தனியான ஒரு காலத்தில் அதை அடையாளம் காணவே இல்லை. சிறுவயதில் பலவிடயங்களை சந்திக்கிறோம் அதில் நம்மால் முடிகிற ஒன்றைத் தேர்வு செய்கிறோம் அவ்வளவுதான்.

இ.சு.முரளிதரன் -

படைப்பாளியிடம் நிகழ்கின்ற புறந்தள்ள முடியாத அநாம உந்துதலே படைப்பாக உருவெடுக்கிறது என்பார்கள். அத்தகைய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள சிறுகதை, நாவல் என்பன நோக்கி நகராமல் கவிதை என்ற வடிவத்தை தேர்ந்தெடுத்த காரணத்தை விளக்குவீர்களா?

றியாஸ் குரானா -

இந்தக் கேள்வியில் மூன்று விசயங்கள் இருக்கின்றன. மிக இலகுவாக எடுத்துக்கொள்ள முடியாத விசயங்கள் அவை. என்னுடைய இலக்கியப் புரிதலுக்கு முற்றிலும் முரணானது. "புறந்தள்ள முடி யாத ஏதோ ஒரு உந்துதலே படைப்பாக" உருவெடுக் கிறது என்பதோடு எனக்கு உடன்பாடே இல்லை. இது விபரிக்க முடியாத ஒருவகைக் கூற்று. இது தவிர்க்க முடியாத ஏதோ ஒன்று தானாக நிகழ்கிறது. அல்லது இயல்பாக உருவெடுக்கிறது. என்ற அர்த்தங்களைத் தரக் கூடியது. ஆம், அப்படியான திசையிலிருந்துதான் இந்த வகை கருத்துக்களை முன்வைக்கிறார்கள். படைப்பு என்பதே உருவாக்கப்படுவது என்ற பொருளைத் தந்து விடுகிறது. அதாவது தயாரித்தல். அங்கு இயல்பானது என்று ஏதும் இல்லை. சிந்திப்பதே மொழியாலான ஒரு நிகழ்வுதான். மொழி இயல்பானதல்ல. கட்டமைக்கப் பட்டது. ஆக, கட்டமைக்கப்பட்ட மொழியைக்கொண்டு பிரதிகளை தயார்செய்கிறோம். தவிர்க்க முடியாத உந்துதல் என்பது ஒருவகைத் தேர்வு. தவிர்க்கமுடியாதது என்பதை அந்த எழுத்தாளரே தீர்மானிக்கிறார். குறித்த ஒன்று தவிர்க்க முடியாதது என்பதை பொதுவான ஒன்றாக மாற்ற முடியாது. அது நபர்களுக்கு வேறுபடக் கூடியது. குறிப்பான சூழல், குறித்த சமூகம், குறித்த மொழி, தனிநபர்கள் என ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொன்று தவிர்க்க முடியாத ஒரு அம்சமாக கட்டமைக்கப்படலாம். இதை இன்னும் எளிமைப் படுத்திச் சொல்லுவதெனில், யதார்த்தம் என்பதே புனைவுகளால் ஆனதுதான்.

அடுத்த விசயம் அனுபவத்தை பகிர்ந்து கொள்ளுவதே இலக்கியப் பிரதி என நம்புவதாகும். இதை பல வகைகளில் அழைப்பார்கள். யதார்த்தத்தை பிரதி பலித்தல் என்றெல்லாம் நாம் எதிர் கொண்டிருக்கிறோம். ஆம், அது இலக்கியம் குறித்த ஒரு காலகட்டத்தின் கருத்துநிலைதான். அந்தக் கருத்துநிலைகளினூடாக கிடைத்த கொடைகளை பயின்றுதான் இன்றைய இலக்கியம் செழுமைப்பட்டிருக்கிறது. அல்லது தன்னை மாற்றியமைத்திருக்கிறது. புதிய அனுபவத்தை உரு வாக்குவதே, நவீனம் கடந்த இலக்கியப் பிரதிகள் என்ற பேச்சு விவாதிக்கப்படுகிறது. அதே நேரம், அனுபவத்தை அல்லது யதார்த்தத்தை பிரதிபலிக்க இலக்கியப் பிரதி இடந்தருமா? என்பதை "பதாகை" என்ற இந்திய இணையச் சிற்றிதழில் விவாதித்திருக்கிறேன். நீங்கள் படிக்கலாம்.

அடுத்த விடயம் மிக முக்கியமான ஒன்று. ஏன் கவிதைப் பிரதிகளைத் தேர்ந்தெடுத்தீர்கள் என்பதுதான். இலக்கியப் பிரதியாக ஒன்றை கண்டடைவதற்கு ஏதும் வழிமுறைகள் இருக்கின்றனவா? அல்லது இலக்கியம் அல்இலக்கியம் என பிரித்து வைக்கக் கூடிய வழி முறைகள் இருக்கின்றனவா? இல்லை. இலக்கியத் தன்மை என்று கருதப்படும் பல அம்சங்களை இலக்கிய மற்றது என கருதும் பிரதிகளிலும் கண்டுபிடித்தபோது இவ் அதிர்ச்சி நிகழ்ந்தது. ஏற்கனவே இருக்கின்ற நாவல், சிறுகதை, கவிதை போன்ற வடிவங்களுக்கும் இதுவே நிலை. ஏதோ ஒரு வசதியான கருத்துருவாக்கத்தினால் இவைகளை தனித்தனியான வடிவங்களாக அடையாளப் படுத்துகிறார்கள். அந்த கருத்துருவங்கள் துல்லியமான தல்ல. ஏனென்றால், வடிவங்களாக இவைகளைப் பிரிக்க முடியாது. அப்படிப் பிரிப்பதற்கு இடந்தராது என்பதே இங்கு மிக முக்கியமான ஒன்று. இந்த வடிவங்களைச் சுட்டி ஒருவகையில் அனேகமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய

பொதுவான ஒரு ஒத்துழைப்பை இலக்கியச் செயற் பாட்டாளர்கள் பின்பற்றினாலும், இவைகளைப் "பிரதி" என்ற ஒரு முக்கிய கலைச்சொல்லால் பாவிப்பதையே இன்று மேற்கொள்கின்றனர். பிரதி என்பது இலக்கிய வடிவங்களை மாத்திரம் சுட்டுவதற்கு பயன்படுத்தப் படுவதில்லை என்பதையும் சொல்லவிரும்புகிறேன். நான் கவிதை என அழைப்பது மிகக் குறைவு. கவிதைக் கான மாற்று என்றோ அல்லது, கவிதைப் பிரதி என்றோ தான் அழைப்பேன். எனது கவிதைப் பிரதியினுள், ஒரு வகைக் கதைசொல்லலும் நிறைந்திருக்கும். நாவல் மற்றும் சிறுகதை என்ன செய்ய முற்படுகிறதோ அதன் நீட்சியையும் எனது கவிதைப் பிரதியினுள் கொண்டு வந்திருப்பேன். ஓரளவு சரியாகவும் புதுமையாகவும் சொல்வதெனில் நான் எழுதுபவை கவிதைகள் அல்ல. நான் கவிஞனுமில்லை. அவை கவிதைக்கான மாற்றுப் பிரதிகள். நான் கவிதை சொல்லி. அனுபவங்களை நான் பகிர்ந்து கொள்ளவில்லை. புதிய அனுபவங் களைப் பிறப்பிக்கும் சாத்தியங்களைக்கொண்ட கவிதைப் பிரதிகளை உருவாக்குகிறேன். வடிவங் களுக்குள் ஒன்றை கொண்டுவந்து சேர்ப்பதென்பதே கட்டுப்பாடுகள் நிறைந்ததுதான். நாவல், சிறுகதை, கவிதை இவைகள் இப்படித்தான் இருக்கவேண்டும் என வடிவம் கட்டாயப்படுத்துமானால் இலக்கியம் என்பது சுதந்திரமான செயற்பாடு அல்ல என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள். இலக்கணங்களை மீறியும் கடந்தும் தான் நவீன கவிதை உருப்பெற்றது என்றால், நாவல்,சிறுகதை,கவிதை என்ற வடிவங்கள், அதாவது இவற்றுக்கு இன்றியமையாத இலக்கணங்களாக இந்த வடிவங்கள் கட்டுப்படுத்துமென்றால் அவை களையும் உடைத்துக்கொண்டும், மீறியும் செயற்படுவதே நவீனம் கடந்த இலக்கியச் செயல் என்பேன்.



இ.சு.முரளிதரன் -

தமிழில் நவீன கவிதையின் ஒழுங்கினைக் குலைத்து மாறுபட்ட பிரதிகளை உருவாக்கி யவர்களில் கவனிப்பிற்குரிய ஒருவரான நீங்கள். ஆரம்ப கால ஜனரஞ்சக வாசிப்புச் சூழலை "ஓரளவேனும்" விட்டுவிடுதலை யாகிய விதத்தைப்பற்றிக் கூறுங்கள்.

றியாஸ் குரானா -

உண்மையைச் சொல்வதானால் நான் இன்னும் ஜனரஞ்சக வாசிப்பை விட்டு வெளியேறவில்லை. அப்படி வெளியேறவும் விரும்பவில்லை. தொடர்ச்சியாக அனைத்துவகை எழுத்துக்களையும் வாசிக்கவே செய்கிறேன். ஒரு மொழியில் குறித்த ஒருவகை எழுத்துக்கள் தான் இலக்கியம் என திணிப்பதை மறுக்கிறேன். இலக்கியத்தில் செயற்படுவதாக அழைத்துக்கொண்டால், அந்த மொழியில் இருக்கும் இலக்கியம் என விளிக்கப்படும் எழுத்துக்களின் அனைத்துக் கோணங்களையும், அனைத்து வகையினங்களையும் எதிர்கொண்டுதான் ஆகவேண்டும். இதில் சிலதை கொண்டாடியும் சிலதை இழிவானதாகவும் கருத இங்கு இடமே இல்லை. அப்படிச் செயற்படுவது இலக்கிய ரீதியிலான வன்முறைதான். அனைத்து வகையான எழுத்துக்களுக்குமான வாசகர் களும் தேவைகளும் ஒரு சமூகத்தில் இருக்கத்தான் செய்யும். அப்போதுதான் அது பன்மையான ஒரு சூழலைக்கொண்டிருக்க முடியும். இராணுவ ஒழுங்கு போலவோ, அரசு, மற்றும் மதங்கள்போலவோ ஏதோ ஒருபகுதியை தீயதாகக் கருதி அழித்துவிட இலக்கி யத்தில் இடமிருக்க முடியாது என்றே நினைக்கிறேன். அனைத்தையும் பேசவும், எழுதவுமான சுதந்திரமான வெளி அது. இதை தவறாக புரிந்துகொள்ளத் தேவை யில்லை. அனைத்து வகை இலக்கியங்களும் இருப்ப தற்கும் செயற்படுவதற்குமான இடம் கொடுக்கப்பட வேண்டும் என்றுதான் சொல்கிறேனே தவிர. அவை அனைத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்தை முன்வைக்கவில்லை. இதுதான் சிறந்தது, இது மோசமானது எனவே தேவையற்றது என யோசிப்பது அரசியல் சார்ந்த ஒரு நிலைப்பாட்டிற்கு இட்டுச் செல்லக் கூடியது. ஆனால், விமர்சனங்கள் முக்கியமானது. இந்தப் பிரதி என்ன செய்கிறது என்றோ அல்லது என்ன செய்ய முற்படுகிறது என்றோ தங்கள் கதைகளை விபரிக்க இடமுண்டு. அதுதான் தேவையானதும் கூட. ஜனரஞ்சக எழுத்துவெளியை நெடுங் காலமாக நவீன இலக்கியவாதிகள் குப்பை என்றே வர்ணித்து வந்திருக் கின்றனர். அதனூடாக அதன் வாசகர் களாக இருக்கும் பெருந்திரளான மக்களை புறந்தள்ளிவிட்டிருக் கின்றனர். இப்படிப் புறந்தள்ளியவர் களிடம் "நீங்கள் யாருக்காக, எதை, ஏன் எழுதுகிறீர்கள் எனக் கேட்கப்பட்டால் அவர்கள் சொல்லும் பதில் ஆச்சரிய மானதாக இருக்கும் - மக்களுக்காக எழுதுகிறோம், மக்களின் பிரச்சினை களை எழுதுகிறோம், மக்களை மகிழ்விக்க எழுதுகிறோம் என்பார்கள். இது முற்றிலும் முரண்பாடானது. என்னால் தெளிவாகச் சொல்ல முடிகிற ஒன்றுதான். நவீன இலக்கியவாதிகள் ஜனரஞ்சக இலக்கியங்களையும் படிக்க வேண்டும். ஜனரஞ்சக எழுத்தாளர்கள் நவீன இலக்கியங்களையும் படிக்க வேண்டும். இந்த இருவகை இலக்கியங் களுக்குமிடையே இருக்கின்ற பரம் பரைப் பகை முடிவுக்கு கொண்டுவரப் பட வேண்டும். அதன் மூர்க்கமான எல்லைக்கோடுகள் அழிக்கப்பட வேண்டும். இலக்கியம் என்பது

ஒருவகை எழுத்துக்களாலான ஒரு நிகழ்வு என்பதை ஏற்பதினூடாகத் தான் இது சாத்தியமானது. அனைத்து வகை இலக்கியங்களையும் வாசிக் கிறேன். அனைத்தின் மீதும் விமர் சனங்களும் ஏற்புக்களும் இருக்கத் தான் செய்கிறது. ஒரு இலக்கியச் செயற்பாட்டாளன் இப்படித்தான் இருக்கமுடியுமென்று நினைக்கிறேன்.



இ.சு.முரளிதரன் -

பின் நவீனத்துவ வாசிப்பிற்குரிய வகையிலே சிறுகதையும் நாவலும் உருவாக்கப் பெற்றுள்ளன எனினும் கவிதை பின் தங்கிய நிலையில் உள்ளதே...! அதற்கான காரணங்களை குறிப்பிடமுடியுமா?

றியாஸ் குரானா -

இவை பின்நவீன வாசிப்புக் குரியவை. இவை பின்நவீன வாசிப்புக் குரியவையல்ல என என்றோ அல்லது பின்நவீன வாசிப்புக்குரிய வகையில் பிரத்தியேகமாக ஒருபிரதியை உரு வாக்க முடியுமா எனத் தெரியவில்லை. அப்படி இருக்குமெனில் அதை நீங்கள் தான் சொல்ல வேண்டும். கோட்பாடு களுக்கேற்ப எந்தப் பிரதிகளும் உரு வாக்கப்படுவதில்லை. பிரதிகளை வாசிப்பதில் ஏற்படும் சிக்கல்களைத் தவிர்ப்பதற்கே, அதாவது பிரதிகளை வாசிப்பதற்கு ஏற்படுத்தப்படும் முறைமைகளே கோட் பாடுகளாகும். அதேநேரம் பின்நவீன வாசிப்பென்று தனியாக ஏதும் இல்லை. பின்நவீன வாசிப்பு என்பது, பலவகையான பிரதி அணுகுமுறைகளை உள்ளடக்கி யிருக்கின்ற ஒருவகைச் செயற்பாட்டுமுறைதான். நமது சங்க காலக் கவிதைகளைக்கூட பின்நவீன வாசிப்பு முறைமைகளினூடாக அணுக முடியும் என்றே நினைக்கிறேன். இலக்கியம் என நம்பப்படும் அனைத்துப் பிரதிகளின் முன்னேயும் பின்நவீன வாசிப்புக்களை பிரயோகித்துப் பார்க்கமுடியும். நாவல், சிறுகதைகள், கவிதைகள் என அனைத்திலும் சம காலத்தில் பெரும் மாற்றம் நிகழ்ந்துதான் இருக்கிறது. இங்கே ஒரு முக்கியமான விசயத்தைச் சொல்ல வேண்டும் விமர்சன முறைகள்தான் தமிழில் வளர்ச்சி யடையவில்லை. மிகப் பின்தங்கிய நிலையில் இருக்கின்றது.

இ.சு.முரளிதரன் -

"ஈழத்துக் கவிதைகளின் அரசியல் மதிப்பை முழுமையாக விலக்கி விட்டு எஞ்சும் கவித்துவ மதிப்பைக் கொண்டே கவிதைகளை மதிப்பிடுவேன்" என்ற ஜெயமோகனின் புரிதல் குறித்து...?

றியாஸ் குரானா -

நிச்சயமாக ஜெயமோகன் இப்படிக் குறிப்பிட வில்லை. இப்படியான அதிர்ச்சிதரக் கூடிய அறிவிப்புக்களை அடிக்கடி செய்து, இலக்கிய வெளியில் மிக நகைச்சுவையான பவர் ஸ்டாராக இன்று வலம் வருபவர் இவர் ஒருவரே தான். அரசியல் உள்ளடக்கங்கள் அதிகரித்து கவிதைகள் பிரச்சாரத் தன்மை அதிகரித்துவிட்டது என்றோ அல்லது இதற்கு நெருக்கமான பொருள்தரக்கூடிய சொற்களால் அறிவித்திருப்பார். நான் இதிலிருந்து சற்று வேறுபட்ட ஒரு கருத்தை ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். ஈழத்து இலக்கியம் அரசியலை நம்பியே உயிர்வாழ்கிறது. அரசியலை ஏற்றி வாசிப்பதற்கு ஏதுவாக இலக்கியப் பிரதிகளை உருவாக்கும் நடை முறையை அதிகம் கொண்டாடியது. அப்படி இருந்தால்தான் ஈழத்து நவீன இலக்கியம் என்றெல்லாம் பெரும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன. அரசிய லுக்கு சேவகம் செய்யும் ஒன்றாக இலக்கியம் மாற்றப்பட வேண்டிய சூழல் உருவானது. அரசியல் சூழலை இலக்கியம் நடித்துக்காட்ட முடியும் என்றும், நடித்துக்காட்ட வேண்டும் என்றும் கதைகள் மேலெழுந்தன. அன்று இலக்கியத்தை தீர்மானிக்கும் ஈழத்து சக்தியாக இருந்தவர்கள் இதன் பின்னணியில் செயற்பட்டனர். ஏதாவது ஒரு அரசியல் கதையின்றி ஈழத்து இலக்கியப் பிரதி ஒன்றுக்கு எந்த வலிமையுமில்லாது போனது. அந்தப் பிரதியை அணுக முடியாதுபோனது. அரசியலை நம்பியே இலக்கியம் என்ற ஒன்று உயிர்வாழ வேண்டிய கட்டாயத்தை உருவாக்க முயற்சித்தனர். அது அவர் களால் கைகூடவில்லை. இலக்கியத்தை தன்னைப் போல ஒரு தனித்துவத் துறையானதும், செயற்பாடானது மான அரசியலின் கீழ் செயற்பட வைக்க முடியாது தானே. இலக்கியம் தனியானதுறை. அதற்கென்று முற்றிலும் வேறுபட்ட தனித்துவங்களுடன் கூடிய, மாயமான செயற்பாடுகள் உண்டு. ஒரு அரசியல் நிகழ்வோ, அல்லது அரசியல் செய்தியோ தன்னை வெளிப்படுத்துவதைப்போல, இலக்கியப் பிரதி வெளிப் பட்டு நிற்க முடியாது. முற்றிலும் வேறுபாடுகளுடன்தான் இருக்க முடியும். இது தவிரவும், அரசியல் நிலவரங்களை பிரதிபலிக்க இலக்கியப் பிரதி இடந்தரவும் போவ தில்லை. அடிப்படையில், இரண்டும் முற்றிலும் வேறு வகையான உள்ளக நிலவெளியையும் தன்மைகளையும் கொண்டது. அதாவது, இலக்கியப் பிரதி ஒரு அரசியல் சம்பவத்தை பிரதிபலிக்க முடியாது. ஆனால், அச்சம்பவத்தைப் போன்ற ஒரு புனைவான மாதிரியை புதிய அனுபவமாக உருவாக்கித்தரும். இதில் ஜெயமோகனுக்கும் எனக்குமிடையிலான முரண் என்னவெனில், கவித்துவம் குறைந்த அரசியல்



பிரச்சாரம் அதிகரித்திருக்கிறது ஈழத்துக்கவிதைகளில் என்கிறார். அதுவும் ஒரு காலகட்டத்தை மாத்திரமே மனதில் வைத்துப் பேசுகிறார் என நினைக்கிறேன். அரசியல் சம்பவங்களை நடித்துக்காட்டுவது கவிதை களாகாது. அதேநேரம், அரசியல் சம்பவங்களை அப்படியே பிரதிபலிக்க கவிதை இடந்தராது என்கிறேன். ஈழத்து அரசியல் நிலவரம், ஏதோ ஒரு விடுதலையை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த நிலையில், அந்த எதிர் காலத்தில் வைக்கப்பட்டிருந்த விடுதலைக்காக தமிழ் மொழியின் அனைத்து அம்சங்களையும் பயன் படுத்தியது. மனிதர்கள், காடுகள், தொடங்கி இலக்கியம் வரை இப்படித்தான் ஈழத்துக் கவிதையும் மிக மோசமாகப் பயன்படுத்தப்பட்டது. ஆனால், ஈழத்துக் கவிதைகளை நெடுங்காலமாக தனது கட்டுப் பாட்டுக்குள் வைத்திருக்க அரசியலால் முடியாது போய் விட்டது என்பதுதான் இன்றைய நிலவரம். ஒரு காலகட்டத்து ஈழத்து இலக்கியம் என்பது, வாழ்வு அரசியல் பிரச்சினைகளை மாத்திரமே கொண்ட மைந்தது என வலியுறுத்த முற்பட்டது. ஆனால், அது அப்படியல்ல. பலவகையான பிரச்சினைகளாலானது வாழ்வு. அரசியல் பிரச்சினை என்பது அதிலொன்று தான் என இன்று இலக்கியம் திரும்பியிருக்கிறது. பல வகையான பிரச்சினைகளில் ஏதாவதொன்றை முதன்மைப்படுத்துவதென்பது அதிகாரம் சார்ந்த நடைமுறைக்கு இணங்கிப்போதல்தான்.

இ.சு.முரளிதரன் –
சமகால இலக்கியச் சூழல் திருப்தி தருகின்றதா?

றியாஸ் குரானா –

ஆமாம். நிச்சயமாக. தமிழின் விரிந்த பரப்பிற்குள் மிகத் திருப்திகரமானதாகவே இருக்கின்றது. ஈழத்தைப் போன்ற மட்டிலும் திருப்தி தருவதாகவே இருக்கின்றது. காலச்சுவடு மற்றும் உயிர்மை இதழ்கள் இலக்கியம் என முன்வைக்கும் பிரதிகளிலிருந்து முற்றிலும் மாற்றமான பிரதிகளை வாசிக்கவும், எழுதவுமான ஒரு சூழல் கிடைத்திருக்கிறது. ஈழத்திலிருந்தும் புலம்பெயர் இடங் களிலிருந்தும் பல சிற்றிதழ்கள் வெளிவருகின்றன. மகுடம், மறுகா, ஜீவநதி, ஆக்காட்டி, எனத் தொடரு கின்றன. அதேநேரம் பழைய இலக்கிய மனநிலையை தக்கவைக்கும் காலம் போன்ற இதழ்களும் வருகின்றன. தமிழ்நாட்டில் புதுஎழுத்து, வலசை, வெயில்நதி, சால்ட், திணை, கொம்பு, கல்குதிரை, இப்படி பல மாற்று சிற்றிதழ்களைச் சொல்ல முடியும். நவீன இலக்கியம் பெரும் பதட்டத்திற்குள்ளாகியிருக்கின்ற காலமும் இது தான். நவீனத்தை கடந்தும், கடக்க முற்படும் எழுத்துக் களும் உருவாகிக் கொண்டிருக்கின்றன. மலேசியாவி லிருந்து வல்லினம் (இணைய இதழாகவும்) போன்ற சிற்றிதழ்களும், சிங்கப்பூரிலிருந்து தங்கமீன் போன்ற இணைய இதழ்களும் வெளிவருகின்றன. என்றுமில்லாத வாறு இலக்கியம் உலகளாவிய நிலைப்பாடுகளை உடனுக்குடன் அறியவும் வாசிக்கவுமான நிலை ஏற்பட்டி ருக்கிறது. அதிகமான இலக்கிய வகைமாதிரிகளும், அதிகமான இலக்கியப் போக்குகளும் முயற்சிக்கப்படு கின்றன. பதாகை போன்ற இணையச் சிற்றிதழ்களும் இளைய இலக்கியச் செயற்பாட்டாளர்களும் இயங்கிக் கொண்டிருக்கின்றனர். சமகாலம் என்பது இலக்கி யத்தைப் பொறுத்த மட்டில் முக்கியமானதுதான். பரவ லான வாசிப்பற்றவர்களுக்கும், பழைய இலக்கியங்களில் தங்கிவிட்டவர்களுக்கும் முக்கியமற்றதாகத்தான் இருக்கும். பழமையில் தங்கிவிட்ட எவருக்கும் அவர்கள் காலத்தைத் தவிர வேறு எந்தக்காலமும் முக்கிய மற்றதாக இருப்பதில்லை. இதில் வியப்பேதும் இல்லை.

இ.சு.முரளிதரன் –
பின்நவீனத்துவக் கதைசொல்லிகளைக் கொண்டாடும் நீங்கள், சாருநிவேதிதாவை மட்டும் "மோசமானஅரசியல்வாதிக்கு நிகரானவர்" என ஒதுக்குகிறீர்களே?

றியாஸ் குரானா –

நான் யாரையும் கொண்டாடுவதில்லை. கவனிக் கிறேன். கொண்டாடுவதற்குப் பின்னால் வேறு காரணங்களும் இருக்க வாய்ப்புண்டு. கவனிப்பது இலக்கியச் செயலில் முக்கியமானது. ஆமாம், சாரு நிவேதிதாவை நமது உள்ளூர் அரசியல் வாதிகளுக்கு நிகரானவராகவே பார்க்கிறேன். தன்னை முன்னிலைப் படுத்துவதிலும், தன்னைச் சுற்றி ஒரு பிம்பத்தை உரு வாக்குவதிலும் திட்டமிட்டுச் செயல்படுபவர். இணையத்தில் பிச்சை எடுக்கும் இலக்கியவாதி என்ற ஒரு பெயரும் அவருக்குண்டு. ஆனால், அவற்றுக்கு வெளியே பெரும் வசதி வாய்ப்புக்களோடு இருக்கும் எழுத்தாளர் அவர். வாசகர்களை தனக்கு சேவகம்

செய்யும் பக்தர்களாக மாற்ற முயற்சிப்பவர். ஆம், வாசகர்களை மிக அதிகம் பயன்படுத்துபவரும் அவர் தான். சாருவின் விமர்சனங்கள், மற்றும் இலக்கியம் குறித்த தேர்வுகள் போன்றவற்றுடன் எனக்கு எந்த உடன்பாடும் இல்லை. தன்னுடைய ஒரு பக்தருக்கு அராத்து என நினைக்கிறேன் தானே கொஞ்சம் கதை களை எழுதிக்கொடுத்து (அதற்கு காசு வாங்கி யிருக்கலாம்) தொகுப்பாக போட்டுவிட்டு, அதற்கு ஒரு உரையையும் எழுதியிருந்தார். அதில் உலகில் மிக முக்கியமான ஒரு எழுத்துவகை என முன்னிலைப் படுத்தினார். அதை எப்படிக் கண்டுபிடித்தார் என்ற வழி முறைகளை விபரிக்கவே இல்லை. நமது அனைத்து விமர்சகர்களும் கிட்டத்தட்ட இப்படிப் பட்டவர்கள்தான். ஆனால், இவரின் புனைவெழுத்துக்களின் மீது எனக்கு குறைவான விமர்சனங்களே உண்டு. தமிழில் முக்கிய மான புனைவுகள் என்றுதான் நான் கருதுகிறேன். ஆப்தீன், மற்றும் ரமேஸ்பிரேம் போன்றவர்களின் எழுத்துக்களை சுவீகரித்து தனது பெயரில் வெளி யிட்டே ஆரம்பத்தில் தன்னை ஒரு எழுத்தாளராக அறிமுகப்படுத்திக்கொண்டார் என்ற கதைகளும் உண்டு. அது கிட்டத்தட்ட உண்மையும் கூட. அந்த எழுத்தாளர்களே அதை சொல்லியும் இருக்கிறார்கள். அதன் பிறகான எழுத்துக்கள் தமிழின் முக்கியமான புனைவெழுத்துக்களே. அனேகமாக ஒரு குறித்த காலத்தோடு தங்கிவிடும் எழுத்தாளர்கள் மத்தியில் தலைமுறைதாண்டியும் தனது எழுத்துக்களை புதிதாக வைத்திருக்க சாருவால் முடிகிறது என்பதே இங்கு முக்கியமானது. இலக்கியத்தை வைத்து அவர் செயற் படும் விதங்களின் மீதே அந்த விமர்சனத்தை முன் வைத்தேன்.

இ.சு.முரளிதரன் -

முகநூல் - இணைய வலைப்பதிவுகள் என்பன ஈழத்து இலக்கியத்தை வேறொரு தளத்திற்கு நகர்த்திச் செல்லும் என்ற நம்பிக்கை உள்ளதா?

றியாஸ் குரானா -

இந்தக் கேள்விக்கான பதில் மிகச் சாதாரண மானதுதான். அது ஏற்கனவே வேறொரு தளத்திற்கு நகர்த்திச் சென்றுவிட்டது. நூறோ இருநூறோ அச்சிட்டு அதைவிடக் குறைவானவர்களே படித்தும் விவாதித்தும்தான் இன்றிருக்கின்ற நிலைக்கு ஈழத்து இலக்கியம் நகர்ந்திருக்கிறது. ஆனால், இணையம் அதை மாற்றியமைத்திருக்கிறது. உலகளாவிய ரீதியில் தமிழைப் பேசுகின்ற, தமிழில் இலக்கியச் செயற் பாட்டாளர்களாக இருக்கின்ற அனைவரையும் ஒரு புள்ளியில் சந்திப்பதற்கான அதிக வாய்ப்புக்களை தருகிறது. அதே நேரம், எல்லையற்ற வாசிப்பை திறந்து விட்டிருக்கிறது. உலகளவில் பெரும் எழுத்தாளர்கள் எனக் கருதத்தக்கவர்களை மிக இலகுவாக சந்திக்கவும், உரையாடவும் வாய்ப்பளித்திருக்கிறது. இந்த வளங் களை ஏற்கனவே பலர் பயன்படுத்தியபடியேதான் இருக் கிறார்கள். அது நகர்ந்தும் இருக்கிறது. புதிய தலை முறையினர் மிகச் சரியாகவும், கவனமாகவும் இணையத்தை பயன்படுத்தினால் மிக முக்கியமான இலக்கிய மாற்றங்கள் சாத்தியமே.

இ.சு.முரளிதரன் -

சினிமா மொழியின் நுட்பத்தினை கையாண்டு உலகின் கவனத்தை ஈர்த்துள்ள சிங்களத் திரைப்படங்கள் இன முரண் பாட்டினை பக்கசார்பற்ற நிலையில் வெளிப்படுத்தியுள்ளதாக கருது கிறீர்களா?

றியாஸ் குரானா -

நிச்சயமாக இல்லை. கௌதமச் சித்தார்த்தனுடைய பார்வையுடன் நான் அதிகமும் இணங்கிப்போகிறேன். தற்போது தமிழ்ச் சூழலில் இருக்கின்ற முக்கியமான விமர்சகர் இவர். தமிழ் நாட்டைச் சேர்ந்தவர். எனது நண்பரும் கூட. ஆயினும், இன முரண்பாட்டை அரசசார் பற்ற ஒரு நிலையில் கொண்டு செல்ல விருப்பம் கொண்டிருப்பதை அறிய முடிகிறது. அசோகா ஹந்தகம திரைப்பட மேக்கிங் என்று சொல்லும் சினமாச் செயலை உலகளவிலுள்ள சிறந்த திரைப்படங்களுடன் போட்டி யிடத்தக்க வகையில் உருவாக்குகிறார். விவாதிக்க என்று பல நுண்மையான அரசியலை தனது திரைப்படங் களினூடாக பேச்சுக்கு கொண்டுவருகிறார். சார்பு நிலை யில்லாமல் செயற்படுவது எனச் சொல்வது ஒரு பேராசை யுடன் கூடிய நல்ல எதிர்பார்ப்பு மாத்திரமே. மற்றப்படி அது சாத்தியமே இல்லை. ஏதாவதொன்றின் சார்பு நிலையில்தான் உரையாடலே தொடங்குகிறது. இந்தச் சார்பு நிலை என்ற கருத்தாக்கம் புத்திஜீவிகள் மத்தியில் நிலவுகின்ற மிக மோசமான ஏமாற்று வேலை. அதாவது

நடுநிலையாகச் செயற்படுகிறோம் என அறிவிப்பவர்கள் தான் அதிகமும் தந்திரசாலிகளாக இருக்கிறார்கள். நடுநிலை என்கின்ற ஒன்று இல்லவே இல்லை. என்னைக் கேட்டால், வன்முறைக்கு அதுவும் ஒட்டு மொத்த வன்முறைக்கும் எதிராக செயற்பட விரும்பு பவன் தான். இங்கு எனது சார்புநிலை வெளிப்படை யானது. வன்முறைக்கு எதிரானது என்றவகையில். ஆனால், ஒரு பிரச்சினை என்னவெனில், அதை என்னால் திறம்பட செய்தல் சாத்தியமா என்ற கேள்வி இருக்கிறது. வன்முறைக்கு எதிராக செயற்பட விரும்பும் ஒரு இலக்கியச் செயற்பாட்டாளன் என்று மட்டுமே சொல்ல முடியும். செயல்படுபவன் என முடிவான ஒரு அறிவிப்பை செய்ய முடியாது. அப்படிச் செய்தால் நான் ஏமாற்றும் வேலையை ஆரம்பிக்கிறேன் என்றே அர்த்தம். என்னிடம் ஒரு முக்கியமான கேள்வி இருக் கிறது. அடிப்படையில் நாம் வன்முறை செலுத்துபவர் களாகவும், அதிகாரம் செலுத்துபவராகவும் இருக் கிறோம். இது எப்படி நம்மிடமிருக்கிறது? இதைக் கண்டடைவதுகூட வன்முறைக்கு எதிராக செயற்படு வதற்கான ஆரம்பம்தான். இதை மறுத்து நான் வன் முறை செலுத்தாதவன், அதிகாரங்களை பிரயோகிக் காதவன் என தன்னை தூய்மையான ஒரு மனித ஜீவியாக காட்ட முற்படுவதே மிக மோசமான வன் முறையாகும். சிங்களத் திரைப்படங்கள் தமிழ்மொழி வெளியை அதற்கு சார்பான கருத்துநிலைகளை பெரியளவில் அக்கறைகொள்ளும் என்பது ஒரு அப்பாவித்தனமான எதிர்பார்ப்பு மாத்திரமே. ஆனால், ஈழத்தில் தமிழ் மொழிச்சமூகங்களை அக்கறை கொள்ளும் சினிமாக்கள் இல்லாத வெற்றிடத்தில், சிங்களத் திரைப்படங்கள் இனமுரண்பாட்டை பேச முற்படுவது, நமக்காக அவர்கள் சிந்திக்கிறார்கள். நமக்காக அவர்கள் சினிமாவினூடாக உரையாடு கிறார்கள், விவாதிக்கிறார்கள் என்ற மேலதிகமான ஒரு நம்பிக்கையை வளர்க்கத் தேவையில்லை. நமக்காக மற்றவர் எதையாவது செய்வதாக நம்பவைப்பதே கூட, நம்மைச் செயற்படாமல் ஆக்குவதுதான். அதற்காக இனமுரண்பாடு குறித்து பேசும் சிங்களத் திரைப்படங் களை சந்தேகத்துடன் பார்க்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தவில்லை. விமர்சனத்தோடு அணுகுங் கள் என்றுதான் சொல்கிறேன். விமர்சனமென்பது கொஞ்சமும் இரக்கமற்ற விமர்சனத்தை சொன்னேன்.

இ.சு.முரளிதரன் -

இலங்கையில் அதிகாரமையங்களை கட்டமைக்கும் தரப்பினர் சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிரான செயற்பாடுகளையே முன்னெடுத்து வந்துள்ளனர். சிறுபான்மை இஸ்லாம் சமூகத்தை சேர்ந்தவர் என்றவகையில் இது குறித்த உங்களின் கருத்து நிலைப்பாடு?

றியாஸ் குரானா -

அதிகாரத்தின் முன் உண்மையைப் பேசுங்கள் என்ற எட்வட் செய்யத்தின் கூற்று சற்று கவர்ச்சியானது தான். ஆனால், உண்மையை மாத்திரமல்ல எதையும் பேசமுடியாதபடி மிக மோசமான நிலையில் இன்று அதிகாரங்களினால் திரட்சியுற்ற நிலையில் இருக்கிறது இன்றைய இலங்கை அரசு. சிறுபான்மைச் சமூகங்களை மட்டுமல்ல அனைத்துத் தரப்பையும், ஏன் நீதித் துறையையும் கட்டுப்படுத்தவும் செய்கிறது. அதன்மீது தலையிடுகிறது. மிகமோசமான பாசிச சிங்கள அமைப்புக்களை ஊட்டி வளர்க்கிறது. மக்களை இராணுவக் கண்காணிப்பில் நடத்துவதைப்போன்ற ஒருவகை கையாள்தலைச் செய்கிறது என்ற விமர்சனங் களை நீங்கள் அறியாததல்ல. அப்படி இருக்கும் நிலை யிலும், யுத்த வெற்றியின் மகிழ்ச்சிகளாலும் பெருமிதங் களினாலும் ஒரு புதிய உளவியலை கட்டமைத்திருக் கிறது. இந்த உளவியல் மிக மோசமானது. அரசியல் இருப்பை மையப்படுத்தி இந்த உளவியலை பெருக் கினாலும், காலப்போக்கில் இது மற்றமை எனக் கருதப் படும் இலங்கைச் சிறுபான்மைச் சமூகங்களை மிக துரதிஷ்டவசமான இட வரைக் கொண்சென்றுவிடும். சிறுபான்மைச் சமூகங்களான தமிழைப் பேசுகின்ற தமிழர்கள், முஸ்லிம்கள், மலைத் தமிழர்கள், தலித்கள் என அனைவரும் ஏதோ ஒரு உடன்பாட்டில் இணைந்து தான் இந்தச் சூழலை எதிர்கொள்ள வேண்டும். அரசியல் அர்த்தத்தில்தான் இந்தவகை விசயத்தை முன் வைக் கிறேன். பகைகள், முரண்பாடுகள் என்பது நிரந்தரமான தல்ல. சாத்தியமான நேரத்தில், சாத்தியமான வழிமுறை களில், ஒருங்கிணைந்து செயற்படுவதுதான் அரசியல் செயற்பாட்டுக்கு தேவையான ஒன்று. இது கனவானது என்பதுகூட எனக்குத் தெரியும். ஆனால், தமிழ் மற்றும் முஸ்லிம் செயற்பாட்டாளர்கள் இணைந்து செயற் படுவது அரசியல் நிறுவனங்களைப்போல் கடினமான ஒன்று அல்ல. இலங்கையில் இனி எந்த அரசு அமையப் பெற்றாலும், தற்போது உருவாகியிருக்கும்பொது உளவியல் நல்லதல்ல. அது குறைவடையக்கூடிய சாத்தியங்கள் சிந்தனைக்கெட்டிய வரை தோன்ற வில்லை.

இ.சு.முரளிதரன் -

இன்றைய தலைமுறையினரிடம் வாசிப்பில் பாரிய தேக்க நிலை தென்படுகிறது. தமிழ் சூழலில் இந்நிகழ்வு எத்தகைய விளைவு களை ஏற்படுத்துமென எண்ணுகிறீர்கள்?

றியாஸ் குரானா -

வாசிப்பில் தேக்க நிலை உருவாகியிருப்பதாக கருதவில்லை. சமூக வலைத்தளங்கள், இணைய இதழ்கள் என்பன வந்த பிறகு வாசிப்பு அதிகரித்திருக் கிறது என்றே நினைக்கிறேன். வாசிப்பவர்களின் எண்ணிக்கைகூட பாரியளவில் அதிகரித்திருக்கிறது. ஏதோ ஒன்றை அனைவரும் வாசித்தபடியேதான் இருக்கிறார் கள். ஆனால், எவைகளை வாசிக்கிறார்கள் என்பதில் வேண்டுமானால் வேறுபாடுகள் இருக்கின்றன. அது அவர்களின் தேர்வு சம்பந்தப்பட்டது. இதைத்தான் வாசிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்த முடியாது. அது சுதந்திரமான ஒன்று. இலக்கியப் பிரதிகளுடன் வாசிப்பைத் தொடருகிறார்களா? என்ற அச்சம் நிரம்பிய கேள்வியாக இது இருக்குமானால் இருக்கலாம்.

இலக்கியம் என்பது ஒரு மனிதன் கட்டாயம் வாசித்தே ஆகவேண்டிய முக்கியமான ஒன்று அல்ல. பல இலக்கியவாதிகள் இலக்கியம் மிக முக்கியமான சாமான்தான், அதை கட்டாயம் ஒருவர் வாசித்திருக்க வேண்டும் என நினைத்திருக்கிறார்கள். இது நகைச் சுவையான ஒன்று. உண்மையில் அப்படியல்ல. விரும்பியவர்கள் வாசிக்கவும், விரும்பும்போது விட்டு விலகிச் செல்லவும் கூடிய ஒன்றுதான். மக்கள் இலக்கியங்களை வாசிக்கிறார்கள் இல்லை என்று பெரிய அறம் சார்ந்த உலகப் புகழ்பெற்ற துயரத்தை நாம் உருவாக்கத் தேவையில்லை. இலக்கியத்தை வாசிப் பவர்களுக்காகவே நாம் செயற்படுகிறோம். கட்டாய வாசிப்பு என்ற ஒன்றை வாசகர்களின் மீது சுமத்த முடியாது. இளம் தலைமுறையினர் மிக அதிகம் வாசிக்கின்றனர் மிக வித்தியாசமான விசயங்களைக் கூட வாசிக்கின்றனர். இலக்கியவாதிகள் விரும்பினால் அல்லது முடிந்தால் இளைஞர்கள் வாசிக்கும் அம்சங்கள் என்னவென்று கண்டறிந்து இலக்கியப் பிரதிகளினுள் கொண்டுவாருங்கள் அப்போது அவர்கள் இலக்கியப் பிரதிகளையும் வாசிக்கும் நிலை ஏற்படும். முன்புபோல் இலக்கியத்தை மாத்திரம் படித்து இலக்கியத்தை உருவாக்கிவிட இன்று முடியாது. உலகிலுள்ள அனைத்து விசயங்களையும் முடிந்தவரை வாசித்து அவைகளை இலக்கியப் பிரதிகளினுள் அதாவது, இலக்கியமாக மாற்ற வேண்டிய தேவை யிருக்கிறது. அப்படி மாற்றினால் இப்படி ஒரு கேள்வி அவசியமற்றுப் போய்விடும். இலக்கியம் சார்ந்த வாசிப்புக்களை விட்டு இளைய தலைமுறை விலகிச் சென்றால் அது இலக்கியத்திற்குத்தான் இழப்பேதவிர புதிய தலைமுறையினருக்கல்ல. இலக்கியத்தை வாசிக்கச் செய்ய வேண்டுமென்றால், இலக்கிய வாதிகள் தான் தமது வாசிப்பை பல்வகை சார்ந்ததாக மாற்றியமைக்க வேண்டும். அதே நேரம் தமது இலக்கியப் படைப்பை மாற்றியமைத்து புதிய ஒன்றை படைக்கவோ உருவாக்கவோ வேண்டும். நமது இலக்கிய வாதிகளுக்கு இலக்கியப் பிரதிகள் என நம்பப் படுகின்ற வற்றோடு மட்டும்தான் ஓரளவு உறவிருக் கிறது. மற்றைய விசயங்கள் பூச்சியம். இன்று அப்படி யானவர்களை நூதனசாலைகள் கூட காட்சிப்படுத்த ஏற்காது. இலக்கியவாதிகளிடம்தான் வாசிப்பு குறைந் திருக்கிறது. அவர்கள் வாசிக்காது விடுவதினூடாக எதிர்காலத்தில் எந்த மாற்றமும் நிகழ்ந்துவிடப் போவ தில்லை. புதிய தலைமுறை பல்துறைசார்ந்தும் அதிக மாக வாசிக்கிறார்கள். அதனூடாக அவர்களின் எழுத்துக்கள் புதிதாகவும் முற்றிலும் மாறுபட்டதாகவும் வெளிப்படத் தொடங்கியிருக்கின்றன.

இ.சு.முரளிதரன் -

இன்றைய இளந்தலைமுறையினரில் யாருடைய எழுத்துக்களை முக்கியமானதாகக் கருதுகின்றீர்கள்?

றியாஸ் குரானா -

பலரைச் சொல்ல முடியும். ஒவ்வொரு வகை யிலும் அனைவரும் முக்கியமாகப்படுகின்றனர். இது ஒரு பட்டியலைக் கோருகின்ற விசயம்தான். பட்டியலோடு எனக்கு உடன்பாடு குறைவு. மலேசியா, சிங்கப்பூர், இந்தியா, புலம் பெயர்நாடுகள் மற்றும் ஈழம் என மிக அதிகமான புதியவர்கள் எழுதிக்கொண்டிருக்கின்றனர். அவர்களை தேடிவாசிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். அதே நேரம் எனக்கு முக்கியமானவர் களாகப் படுபவர்கள் மற்றவர்களுக்கு முக்கியமானவர் களாக அமைய முடியாது. எனவே பட்டியலைத் தவிர்க்கிறேன். ஈழத்து இலக்கியம், புலம் பெயர் இலக்கியம் என்பதைப்போல இன்று முக்கியமான இலக்கியமாக மலேசியத் தமிழ் இலக்கியத்தையே கூட்டிக்காட்டுவேன். பெரும் ஆளுமைகள் என யாருமற்று ஒரு இளைஞர்கூட்டம் தானாகவே ஒரு நவீன மற்றும் நவீனம் கடந்த இலக்கியச் செயற்பாட்டை முன் னெடுத்து செயற்பட்ட படி இருக்கின்றனர். பல பெண்ணியச் செயற்பாட்டாளர்களும் உருவாகி யிருக்கின்றனர். வல்லினம் இணைய இதழை நீங்கள் படிக்க முடியும்.. ம. நவீன், கே.பாலமுருகன், யோகி என இன்னும் பலர் அங்கு இயங்குகின்றனர். சிங்கப்பூரில் ஜெயந்தி சங்கர் போன்றவர்களை குறிப்பிடலாம்.

ஈழம், இந்தியா, மற்றும் புலங்களிலுள்ளவர் களை பெயரிடவில்லை. தவிர்க்க நினைக்கிறேன். முக்கியமானவர்கள் என்ற பட்டியலில் இடம்பிடிப்பது சுலபம். அதற்கு பல வழிகள் உண்டு. நமது முன்னோர் அதற்கு சாட்சி. பிரமிளை ஈழத்து கவிஞனாக சொல்வதி லிருந்து தவிர்ந்தது. மற்றும் மு. தளையசிங்கம் தமிழில் சிந்தனை வெளியில் இருந்து இலக்கிய வாசிப்பு முறை ஒன்றை உருவாக்கிய இவரை அதிகமும் பொருட் படுத்தாது கைவிட்டது முக்கியமான ஒன்று. அதற்கான காரணம் முற்போக்கு இலக்கிய முகாமுக்கு எதிரான ஒரு இலக்கியச் செயற்பாட்டை கொண்டிருந்ததுதான். எனது "நாவல் ஒன்றின் மூன்றாம் பதிப்பு" என்ற கவிதைத் தொகுப்பை இவருக்கே சமர்ப்பணம் செய்திருந்தேன். முக்கியமானவர்கள் பட்டியலில் மட்டுமே வரமுடியும். இப்படி முக்கியமானவர்கள் என்ற பட்டியலில் வந்த எத்தனையோ பேர் இன்று எங்கே? ம்.. முக்கியமானவர் கள் நமக்குத் தேவையில்லை. செயற்பாட்டாளர்கள் தான் தேவை.

மா புளிப்பது அப்பத்துக்கு...

இயற்கை
அழிவையும் ஆக்கத்தையும்
கொண்டது.
ஆக்கத்துள் அழிவிருக்கின்றது;
அழிவினுள் ஆக்கம் இருக்கின்றது;

இயங்கியல்.
அழிவும் ஆக்கமுமாக
வாழ்க்கை நகர்கிறது;
இருப்புத்தொடர்கிறது

முரண்பாடுகளே
அழிவின் காரணம்
ஒருங்கிணைப்பே
ஆக்கத்துக்கான
வழி.

முழுமையை நோக்கிய பயணமே
நம் வாழ்க்கை.

தவறு செய்யாத மனிதன்
எவனுமில்லை:
கற்றுக்கொண்டு மேல் நகர்வது
வாழ்க்கை;
இலட்சியம்;
பேர்வாழ்க்கை

காட்மிராண்டி அலைவு.
ஆற்றங்கரை நிரந்தர வாழ்க்கை.
கலாசார ஆத்மீக விழுமியங்கள்
மன்னர் ஆட்சி
ஜனநாயக சிந்தனைகள்.
முதலாளித்துவ சுரண்டல்
சோஸலிஸ
பொதுவுடமை
இலக்குகள்.
பொறாமை, சுயநலம்,
அதிகார வேட்கை.
சட, உயிர், மன
இயல்புகளில்
ஆத்மீக இறக்கம்
உன்னத சிந்தனைகள்

இப்போது
ஜனநாயகம்

எங்கனும் இல்லை
எனினும்
ஜனநாயகத்தை நோக்கிய
உந்துதல்
இலட்சியமாகிறது
சோஸலிஸம் எங்கும்
இல்லை
ஆனால்
அதன் வித்துக்கள்
எம்முள்
துளிர் விட்டுள்ளன
சுதந்திரமும், சகோரத்துவமும் இல்லை
அவற்றைக்கொண்டுவரும்த்
ஆக்கத்திறன்
எம்மிடமுள்ளது

முதலாளித்துவமும், சர்வதிகாரமுந்தான்
எங்கும்
இன்றிருக்கும்
ஆட்சிமுறை

We are Cannibals
We are Civilized barbarians

ஆனால்
அதனைக்கருவறுக்கும்
வித்துக்கள்
காத்துக்கிடக்கின்றன
நம்முயற்சியை
எதிர்நோக்கி,
நிலம் பிளந்து
துளிர்விட்டு
மரமாக....

தானாக ஏதும்
நேராது.

– இ.ஜீவகாருண்யன்

நீறு பூத்திருந்த குலவிருது கோத்திரங்கள்

பறைமேளம் கேட்கிறது...,
ஊர் அதிர்ந்து போயிற்று...!

எல்லோரும் கூடி இருந்தும்
துரையண்ணன்...;
வாழ்ந்த புகழ் அளக்கும்
அந்தச்சிறுவீட்டில்
அவலம் நிகழ்ந்துளது...!

வெற்றிலை பாக்குத்
தட்டங்கள் முற்றத்தில்
எங்கும் நடை பயில...;
எல்லோர் உதடுகளும்
செம்பவளமாகிச்
சிவப்பேற அளந்த கதை
முன்னூறாயிரமாய்...
முகடுடைத்துப்பறக்கிறது...!

வருவோரை எல்லாம்
வரவேற்கும் பறைமேளம்
பேரோசையோடு...
புலம்பி அதிர்கிறது...!

மென்பானம் ஏந்திச்
சிலர் திரிவர்... அதைவாங்கிச்
சின்னக் குழுலூடே
சுவைப்பர் சிலபேர்கள்...!

இடைக்கிடையே அந்தப்
பட்டாசு வெடிச்சத்தம்...;
மண்டபத்து அழுகுரல்கள்...;
ஒப்பாரி... எலாம் மீறித்
தடை தாண்டி விண்நோக்க...
தகிக்கிறது பவனவெளி....!

இவ்வாறாய் ஆங்கு....

சூக்குமம் பறந்த உடற்
தூலத்தை வைத்துச்
செயல் நடக்கச்
சில குரல்கள்...,
வந்து புதிதாகக்
குறைதேடத் தொடங்கியன...!

கூரை முடி கும்பம்...
குறைவாக வைத்தவன் யார்...?
இரைந்து அதிகாரத்
தொனியோடு குரலொன்று.!

துறையண்ணன் என்ன
சாதி குறைந்தவரா...?

குலப்பெருமை தெரியாது...;
கோத்திரமும் புரியாது...!

இவ்வாறாய்ச் சில குரல்கள்...,
பின்னணியில் இருந்தும்
குசுகுசுப்புக் கேட்கிறது...!

ஓமோம்... எல்லாமறிவோம்...;
துரையண்ணன் முழு மனிதர்...;

கூரைமுடி கும்பம்...,
குலவிருது...கோத்திரங்கள்...:
எல்லாம் துரையண்ணன்
கும்பி நிறைந்தனவோ...?

மனிதகுலம் நேசித்த
மாபெரிய மனிதரவர்...,
தனிமையிலே வாழ்ந்தாலும்
சமுதாயச் சிற்பியவர்...!

இந்தக் கிராமத்தில்
இருக்கின்ற மக்களெல்லாம்
தன் சொந்தமென்று
சமத்துவத்தைப் போத்தித்தார்...!

அன்னவரை உங்கள்
குலவிருதுக்கோத்திரத்துள்
எண்ணிக்கணக்கெடுக்க
வேண்டாம் காண்....!
விட்டிடுங்கள்...!

என்றார் சிலபேர்கள் ...,
ஓமோம் என்பது போல்
பறைமேளம் அதிரப்
பட்டாசும் வெடித்தனவே...!

— முல்லைவீரக்குட்டி

மூச்சடங்கா முனைப்பு நோக்கி

துரோகங்கள் மலிந்த பூமியில்...
ஈனங்கள் நிறைந்த பாதையில்.....
எப்படி நிமிர முடியும்
மனித நேசிப்புக்கள்?

கருத்தாடல்களைக்கருவறுக்கும்
செப்புச்சன்னங்களுக்கு மத்தியில்
செப்புகின்ற
தூயவார்த்தைகள் அனைத்தும்
துகிலுரியப்படுகின்றன
குருதி நெடில்களோடு.

குரல்வளைகளைத் துளைக்கும்
குண்டுகளுக்குப் பின்னால்
ஆடம்பரங்களின் உச்சமும்
அராஜகங்களின் எச்சமும்
கைகோர்த்த அணியாக!

மூச்சடக்க முனைப்புக்கொள்ளும்
இயற்கைக்கு மாறான செயற்பாடுகளில்
பேச்சுக்கள் அடக்கப்படலாம்?!
உடல்கள்
பிணமாக்கி புதைக்கப்படலாம்,?!
ஆயினும்,
வீச்சுக்கொள்ளும்
மூல ஆணிவேரின்
உணர்வுகளில் உறைந்திருக்கும்
வீரியம்
வீழாவழி நோக்கியபடி...
என்றென்றுகா!

– அலெக்ஸ் பரந்தாமன்

மனித மனம்

மனம் தூய்மை ஆயின்
மானிட உடல் செயல் யாவும்
மாண்பாய்த் தூய்மை காணும்
மகாத்மாக்கள் இவ்விதமாக
மகத்துவம் பேணிவாழ்ந்தமை காண்மின்!
அகத்தில் உண்மை ஏற்றிட வாரீர்!

எம் மனம் ஆசை மோகத்துள்
எஞ்ஞான்றும் மூழ்குதல் செயலாய்
வஞ்சகம் கொண்டு உடல் செயற்படுதல்
அஞ்சி நிற்காது பொய்யுரைத்தல்
கஞ்சத்தனம் காட்டி ஆங்கே
கொஞ்சிக் குலவுதல் நித்தமும் காணீர்!

இத்தகு மனம் எக்கணமும் பெரும்பிழை
எத்தனங்களைச் செய்ய வைத்தல் தகும்
உத்தமர் வெல்வரா? ஓர்மின்!
தத்தமது மனம் போன போக்கில்
எத்தகு பகுத்தறிவைப்பெற்றிடினும்
சுத்தமாய் அதன் வழி ஒழுகுதல் காணோம்

மனித மனம் பகட்டைக்காட்டும்
புனிதம் தேடிச்சென்றிட முன்வரா
அநியாயம் நிகழ்த்தியும் பெருமை காணல்
அநித்திய உலகில் செருக்கில் நிமிர்தல்
ஏனிது? என்று உற்றுப்பாராது
காணும் செயல்களில் மூழ்கித்திளைக்க
வைக்கும்

– வெலிப்பன்னை அத்தாஸ்

அலகை

கனவுமொழி சரசமொழி
மரணக் கொடுக்கின்
தருணம் கரு இருக்கும்
சரணமடைய மனசு துடிக்கும்
வரனும் சிறைப்பட்ட காலம்
விருதலையாய்
கிளைதாழும் மழை விழுந்து
துளிதுளியாய் நிலம் சிந்திக்
குழைப்பாரம்
மனசோடு ஒட்டி வைச்ச
என் கனவுக்குஞ்சே
சாய்ஞ்சாடி சாய்ஞ்சு ஆடி
தினம் விரக்திக்கு
விருத்தி உரை எழுதி
தேஞ்ச வயது
பிரிவு நனி இரங்கி
தெருவில் அலை கானல் நீர்
ஒரு துளியும் பருகாமல்
நாக்கு சுணைக்கும்
கைமண்டை ஏந்தி
களைத்த இளசு

– கல்வயல் வே.குமாரசாமி

முள்வேலி முடிச்சு

அறிவைத்தேடிய ஊர்தனில்
அமுதமொழி விதைத்தவன்
குழந்தை,
இடையில் முறித்தான்
கல்வி
எப்படி நம்புவேன்?
தரவு குறிக்குள்...இவன்
எங்கிருந்து வந்தான் சொல்?

பதினெட்டு வயதில் தாய்மை
வெள்ளை ஆடைக்குள் மூழ்கும்
விதவை புதினத் திரைக்கிழித்து
ஏழ்மை கோல் ஒடிக்க
மனஉயிர்ப்பு அரங்கமோ?
எங்கிருந்து இவள் வந்தாள்?

கட்டிய படலை வேலி
காற்றுப்புகாத பண்பு கோடு
ஜானகி கற்புக்கு வரம்பிட்டு
காதலுக்கு தாழ்போட்டு
வளர்ந்தவள்
ஏங்கானும், வீதிவிளக்கில் விதி
நோவாள் விசித்திர நோய்கண்டு.

■ - பூனாகலை நித்தியஜோதி

வாழ்க்கை

ஒப்பனைகளின் அழகில்
மறைந்து கிடக்கின்றன
நிஜங்கள்
போலியாய் நடிப்பதே
இதமாய்த் தெரிகிறது
பலருக்கு.
விதியை நோகவும்
விலகிப் போகவும் முடியாதபடி
விரிகின்றன
சிறையின் எல்லைகள்.
இருப்புக்கும் இறப்புக்கும் இடையே
நெளிந்து கொண்டிருக்கிறது
வாழ்க்கை.

பேச்சர்கள்

பேச்சர்களின்
முழக்கத்தில்
தேன் குடித்த காதுகள்
உதிரப் பெருக்கில்
சுருண்டு பெருக்கில்
சுரண்டு போயின.
மீண்டும்
தேனைச் சுமந்து கொண்டு
பேச்சர்கள்.
கேட்கக் காதுகளுமில்லை
பாய இரத்தமுமில்லை

– ந.குகபரன்

வரலாறு மாறிக் கொண்டிருக்கிறது!

நேற்றைய நிஜங்களில்
யதார்த்தங்கள்
புரிந்தாலும்
வரட்டு பிடிவாதத்தால்
வாய்ச்சவடால் பேசும்
வன்மச் சமுதாயம்
தலையெடுக்கும் காலமிது!

வேதாந்தங்களும்
படிப்பினையும்
செய்ய முடியாததை
தனித்துவமும் மதத்துவமும்
செய்து முடிக்குமென
தப்புக்கணக்குப் போடும்
மத ஆளுமைகளுக்கு
அறிஞர்களும் அரசியல்வாதிகளும்
துணை போவது தான்
காலத்தின் கட்டாயமா...?

பாராபட்சமான
அணிந்துரைகளும் பாராட்டல்களும்
சில மேதவிலாசங்களையும்
மேதாவிகளையும்
தடம்மாறச் செய்துவிடுவதால்
பஞ்சசீலத்தின் – மகிமை
அரசியல் சகதிக்குள்
மூழ்கிப் போய்
வரலாற்றையே
மாற்றிக் கொண்டிருக்கிறது!

– நா.ஜெயபாலன் – பிபிலை

இ.இராஜேஸ்கண்ணன்



பெண்ணியக் கவிதைகள் நோக்க வேறுபாடுகளுடன் கூடிய தடங்கள்

"பெண்ணியம்" என்பது ஒரு தனித்துவம் வாய்ந்த கோட்பாடாக நிலைபெற்றுவிட்டது. இந்தக் கோட்பாடு இன்று பல்வேறு துறைகளிலும் தன் முனைப்பான செல்வாக்கினைச்செலுத்தி வருகின்றது. இன்றைய பெண்ணியமானது ஒரு "பல்துறை இடைத் தொடர்புள்ள" (interdisciplinary) சமுதாயத்துக்கான விளக்கமளித்தலுடன் தொடர்புள்ள கோட்பாடாகப் பரிணமித்துள்ளது. இதனால், பல்வேறு புலமைத்துறை சார்ந்தவர்களின் சிந்தனைகளின் திரள்விளைவாகத் தான் "பெண்ணியம்" என்பதை சரிவர விளங்கிக் கொள்ளமுடியும். மானுடவியல், உயிரியல், பொருளியல், வரலாறு, சட்டம், இலக்கியம், தத்துவம், அரசறிவியல், உளவியல், இறையியல் போன்ற துறைசார் புலமையாளர்களின் கண்ணோட்டங்களை உள்ளடக்கியதாக இந்தக் கோட்பாடு விளக்கப்படு கின்ற அதேவேளையில் அத்துறைகளில் பிரயோகப் படுத்தப்படுகின்ற ஒரு அணுகுமுறையாகவும் அமைவது குறிப்பிடத்தக்கது. குறித்த இத்துறைகளிலான புலமை யாளர்கள் இரண்டு நோக்கில் பெண்ணியத்தினை பயில்கின்றனர். ஒன்று, தங்கள் தங்கள் துறைசார் அறிவினை அகலப்படுத்தவும் ஆழப்படுத்தவும் அவசிய மான பல்துறை இடைத்தொடர்பினை வளர்த்தல். மற்றையது, உலகவாழ்வு முறை மாற்றத்தில் சமூகத் தினை விமர்சன ரீதியாக புரிந்து கொள்வதற்கான அடிப் படைகளை விருத்தி செய்தல். இந்த இரு நோக்குகளும் பெண்ணியத்தினை ஒரு பொதுமைப்படுத்தப்பட்ட கோட்பாடாக மாற்றிவிடுகின்றது.

பெண்ணியம் என்பது மானுட அனுபவங்களை மற்றும் சமூக வாழ்வு பற்றிய மிகப்பரந்த கருத்துநிலை யின் முறைமையினை பெண்மையமான கண் ணோட்டத்திலிருந்து பொதுமைப்படுத்தித் தருகின்ற ஒரு கோட்பாடாகும். இது பின்வரும் மூன்று முறை களில் பெண்ணை மையப்படுத்துகின்றது.

1. சமூகத்தில் பெண்களின் அனுபவம் மற்றும் நிலைமை (Situation) என்பவற்றைப் பிரதான விடயமாக விசாரணைக்கு உட்படுத்தல்.
2. சமூக உலகத்தில் பெண்ணின் விசேடமான நலன்நோக்கு அடிப்படையில் வாழ்வுலகத்தினை நோக்குதல்

3. பெண் சார் பிலான விமர் சனங்கள் மற்றும் செயற்பாடுகளை முன்னெடுத்து பெண்ணுக்கான நலன்மிகு உலகத்தினை உருவாக்குதல்

இந்த மூன்று வழிமுறைகளையும் உள்ளடக் கியதாகத்தான் "பெண் விடுதலை" தொடர்பான சிந்திப்புக்கள் அமைந்தன. அவை செயற்றிறன் மிக்க இயக்கங்களாக (activist movements) வளர்ந்தன. அவற்றுக்கென மிக நீண்ட வரலாறு உண்டு. அந்த வரலாறு பெண்ணுரிமைப் போராட்டங்களாக அமையும். அந்த வரலாற்றின் விளைபொருளாகவும் அதே நேரத்தில் அவ்வரலாற்றுத்தடத்தினைச் செப்பனிட்ட சிந்தனைகளாகவும் பல்வகைப்பட்ட பெண்ணியக் கொள்கைகள் விளங்கின. அவை தமக் கிடையிலான கண்ணோட்டங்களில் வேறுபாடுகளைக் கொண்டிருப்பினும் இறுதி இலக்காக பெண்களைத் "தழைகளிலிருந்து மீட்டெடுத்தல்" என்பதையே நோக்காகக்கொண்டிருந்தன.

மற்றைய துறைகளைப் போலவே இலக்கியத் திலும் "பெண்ணியம்" செல்வாக்குமிக்கதொரு கொள்கையாகிவிட்டது. Elizabeth Abel, Mary Daly, Kate Millet, Juliet Mitchell, Mary Wollstone Craft முதலிய பலர் ஆரம்பத்தில் இலக்கியத்துறையில் பெண்ணியம் தொடர்பிலான ஆய்வுகளைச் செய்தனர். பெண்உரிமை தொடர்பான வலிமைமிக்க கோசங்கள் 18ம் நூற்றாண்டிலேயே தொடங்கிவிட்டது. சமூகம், பொருளாதாரம், அரசியல் அடிப்படையிலேயே கோரப்பட்டுவந்த இந்த உரிமைகள் இருந்து வந்த பண்பாட்டுத்தளத்தினைக் கேள்விக் குறியாக்குபவையாக அமைந்தன. பெண்ணுரிமைக் கான போராட்டங்களும் பண்பாட்டுப்புரட்சிகளாக அமைதல் வேண்டும் என்பதை இவை மீளமீள வலி யுறுத்தின. இந்தப்பண்பாட்டுப் புரட்சிக்கான கோரிக்கைகள் பல தளங்களில் முன் வைக்கப் பட்டாலும் இலக்கியத்துறையில் இதற்கான முன்னெடுப்புக்கள் தனித்துவம்வாய்ந்தனவாகும்.

நவீன இலக்கியங்களில் சிறுகதை, நாவல், கவிதை போன்றவற்றில் பெண்ணியம் தனித்துவமான கொள்கையாக வெளிப்பட்டது. இன்று இது ஒரு இலக்கியப்படைப்பாக்கத்துக்கான கொள்கையாகவும் இலக்கிய விமர்சனத்துக்கான கொள்கையாகவும் அமைந்துள்ளது. தமிழ் இலக்கியச் சூழலிலும் பெண்ணியம் சார் படைப்பாக்க முயற்சிகள் குறிப்பிடத் தக்களவில் நிகழ்ந்தேறியுள்ளன. இன்று தமிழ் இலக்கியச் சூழலில் தமிழ் நாட்டிலும், இலங்கையிலும், புலம்பெயர் சூழலிலும் பெண்ணிய நோக்குடன் கூடிய பல படைப்பாளிகள் அடையாளப்படுத்தும்படி உள்ளனர். ஔவை, சிவரமணி, சுல்பிகா, மல்லிகா, அம்பை, மைத்ரேயி, பார்வதி கந்தசாமி, பெண்ணியா, ராஜேஸ்வரி பாலசுப்ரமணியம், அனார், ராணி சீதரன், பவானி, தமிழ்ப்பிரியா முதலிய பல படைப்பாளிகளின் பட்டியல் நீண்டு செல்லும். இவர்கள் பெண்ணிய நோக்கிலான கவிஞர்களாகவும், சிறுகதைப் படைப் பாளிகளாகவும் பிரித்து இனங்காணப்படுகின்றனர். இக்கட்டுரையில் கவிதைத்துறையிலான பெண்ணிய நோக்கே அதிக கவனம் பெறுகின்றது.

ஒப்பீட்டளவில் பெண்களின் பிரச்சினைகள், எதிர்பார்ப்புக்கள், நம்பிக்கைச்சிதைவுகள் என்பவற்றை வெளிப்படுத்த ஏனைய படைப்புக்களை விட கவிதை சாதகமான ஊடகமாக அமைந்தது. இதனால் பெண் படைப்பாளர்களில் பலர் தம்மை கவிஞர்களாக அடை யாளப்படுத்தியுள்ளனர். அத்துடன் இன்னொரு விசேட மான அம்சத்தையும் குறிப்பிட வேண்டும். அதாவது எல்லாப் பெண்படைப்பாளிகளும் பெண்ணியத்தை தனது படைப்பின் கொள்கையாக கொண்டிருக்கவு மில்லை. அது மாத்திரமின்றி பெண்ணிய நோக்கின் வேறுபட்ட "பிரமாணங்களையும்" பெண்படைப்பாளி களிடம் காணமுடிகின்றது. இந்தப் பிரமாணங்களாக பின்வரும் நான்கு வகைபாடுகளைக்குறிப்பிடலாம்.

1. பால்நிலை வேறுபாடுகளை (gender difference) மையப்படுத்திய பண்பாடு சார் பெண்ணியம், உயிரியல் சார் பெண்ணியம், சமூகமயமாக்கல் மற்றும் நிறுவனமயப் படுத்தல் சார் பெண்ணியம், சமூகம் மற்றும் உளவியல் சார் பெண்ணியம் என்ற வகைப் பாடுகள்.
2. பால்நிலை அசமத்துவத்தினை (gender inequalitity) மையப்படுத்திய தாராண்மை வாத பெண்ணியம், மார்க்ஸிச பெண்ணியம் என்ற வகைப்பாடுகள்.
3. பால் நிலை ஒடுக்குமுறை (gender oppression)யினை மையப்படுத்திய உளப்பகுப் பாய்வுப் பெண்ணியம், தீவிரவாத பெண்ணியம், சோசலிஷ பெண்ணியம் என்ற வகைப்பாடுகள்
4. பெண் தனது சமூக வாழ்விடத்தின் தன்மையினால் (social location) அனுபவிக்கும் வேறுபாடுகள், அசமத்துவம் மற்றும் ஒழுங்குமுறைகளை பன்மைத்துவம் (diversity), விமர்சனம் (Critique) "ஒடுக்கு முறையின் காவி மூலியங்கள்" (vectors of oppression) என்ற மூன்று அடிப்படைகளில் நின்று புலமை நிலைப்பட்ட ஆய்வுக்கு உட்படுத்தும் பெண்ணியத்தின் மூன்றாம் அலையை (Third wave ferminism) மையப் படுத்திய வகைப்பாடு

இந்த நான்கு வகைப்பாடுகளும் இன்று வரை பெண்ணியம்/ பெண்ணிலை வாதம் எவ்வாறு பல நோக்க வேறுபாடுகளுடன் கூடிய தடங்களைக் கொண்டு வளர்ந்தன என்பதைப் புலப்படுத்தும்.

உலகளாவிய ரீதியில் பெண்ணிய நோக்கில் வந்த படைப்புக்களில் மேற்கண்ட போக்குகளின் வகை பாடுகளைக் காணமுடியும். இந்த நான்கு வகைப் போக்குகளும் இலக்கியங்களில் எப்படிப் பிரதிபலிக்கப் பட்டன என்பதைப்பார்ப்பதே இலக்கியப் படைப்பில் பெண்ணியம் வெளிப்பட்ட விதம் பற்றிய முறையான பகுப்பாய்வாக அமையும்.

இலங்கையின் தமிழிலக்கியச் சூழலில் பெண்ணியம் சார்ந்த கவிதைகளில் மேற்கண்ட நான்கு

பெண்ணியா

அனார்

போக்குகள்/வகைபாடுகளின் பிரதிபலிப்பினை தனித்து ஆராய்வது பெரியதொரு ஆய்வு முயற்சியாகும். இதனை இந்தக்கட்டுரையில் நிறைவேற்றுவது சாத்தியமில்லை. எனினும், பெண்ணியக்கவிதைகளில் இதற்கான சில அடிப்படைகளைச் சுட்டிக்காட்ட முடியும்.

பால்நிலை வேறுபாட்டினை மையப்படுத்திய வகைப்பாட்டில் சமூக நிறுவனங்கள் மற்றும் தனி யாள்களிடத்தில் ஆண்மையமான விசேடத்துவமான அம்சங்கள், பெண்மையமான விசேடத்துவம் குறித்து கருத்துக்கள் எவ்வாறு செல்வாக்குச்செலுத்துகின்றன என்பது பிரதானமாக கருத்திலெடுக்கப்படும். பொது வாகப் பெண்கள் தொடர்பான கொள்கை வகுத்தல் களில் அவர்களின் விசேட தேவைகளான பேறுகால விடு முறை, மார்பு புற்றுநோய், பிள்ளை வளர்ப்பு தொடர்பாக கவனமெடுக்குமளவிற்கு அவளின் அசமத்துவப் பாதிப்புக்களைக் கூறுவது கிடையாது. அவள் மீதான முதாலாளித்துவ வேலை நிறுவனங்களின் தாக்கம், அவளின் சுகாதார பராமரிப் பிலான பாராபட்சநிலை கருத்தில் எடுக்கப்படுவ தில்லை. இந்நிலையில் பெண் மற்றும் ஆண் என்ற வேறுபடுத்தல் சரியாக பயன்படுத்தப்படுகின்றதா? மனிதனிடத்தில் நிலவும் பால்நிலை வேறுபாடு அவசியமானது தானா? இந்த வேறுபாடு நிலைமைக்கு ஏற்றவகையில் (contextualized) வடிவமைக்கப்படுகிறதா? என்ற வினாக்கள் எழுகின்றன. பின் நவீனத்துவ சிந்தனையில் "பெண்" பற்றிய எமது பொதுக் கருத்துக்கள் சமூக நிலைமையில் வேறுபடும் சூழலில் அவளை வடிவமைப்பதால் வரும் கருத்தாக்கம் தான் என வலியுறுத்தப்படுகின்றது. பண்பாடுசார் பெண்ணிலை வாதம், உயிரியல் சார் பெண்ணிலை வாதம், சமூகமயமாதல் சார் பெண்ணியல்வாதம் என்பன இதை வலியுறுத்திப் பேசுகின்றன. மனிதரிடை எழும் முரண்பாடுகளைத் தீர்ப்பதில் பெண்ணின் ஒத்துழைப்பு, பராமரிப்பு, சாந்தம், வன்முறை இன்மை போன்றன முதன்மை பெறுகின்றன. ஒழுக்கவியல் நடுநிலை மற்றும் தீர்மானம் எடுத்தல், தாயாதல் (mothering) தொடர்பு கொள்வதிலான பெண்மைப்பாணி (female style of communication), மனவெழுச்சி தரும் அனுபவங்களில் வெளிப்படையாக இருக்கும் திறன், நெருக்கமான உறவிலும் பாலியல் விடயங்களிலும் கொண்ட விந்தை தரும் (fantasies) இயல்பு குறைந்தளவு ஆக்ரோஷ நடத்தைகள், அமைதியான வழிமுறைகளைப் படைக்கும் பெருந்திறன், பாலியல் ரீதியில் மனைவி, தாய், வீட்டுரிமையாளர் என்று வகுக்கப்பட்ட தொழிற் பிரிவுகள், சிறுவயதிலிருந்து நிகழும் சமூகமயமாக்க லால் கற்பிக்கப்படும் பாத்திர/நடிபங்கு வேறுபாடுகள், உற்பத்தி செய்தலும் மீள் உற்பத்தி செய்தலிலுமான பொறுப்பு போன்ற பெண்பற்றிய பண்பாடு, உயிரியல், சமூக உளவியல் சார்ந்த கருத்து நிலைகளால் பால் நிலை ரீதியாக அவள் வேறுபடுத்தப்பட்டாள் இத்தகைய கருத்து நிலைகளை உள்ளவாறு வெளிப் படுத்தும் போக்கு "எனது அண்டை வீட்டுப்பெண்" என்ற சல்மாவின் கவிதையில்,

"தன் வாழ்நாள் முழுக்க
சிலருக்காவது
குறைந்த பட்ச நேர்மையுடனிருக்க
விசுவாசமுடனிருக்க கற்பிக்கப்பட்டு
விருப்பத்தோடிருக்கிறாள்
எதன் பொருட்டென்பதில்
சந்தேகங்கள் இல்லை
அவளிடம்"

என்று பெண்ணுக்காகவே வகுக்கப்பட்ட "குறைந்த பட்ச நேர்மை", "விசுவாசம்", "விருப்பத்தோடிருத்தல்" தொடர்பாக சிந்திக்க வைத்து "சாந்தமாய் ஏற்கும்" பெண்ணின் இயல்பைச் சாடுகின்ற சல்மா,

"தனக்குள்
கரைந்தழிந்து கொண்டிருக்கும்
அவளுக்கு
தன்வாழ்வைப்பற்றி
காற்றின் வெற்று வெளியில் புகையென
மிதந்து போய்க் கொண்டிருக்கும்
தனது அடையாளங்கள் பற்றி
நிறமிழந்த
தனது இளமையைப்பற்றி
கை நழுவும் சோப்பென

பிடிபடாத தனது விதியைப் பற்றி
உதிர்ந்து கொண்டிருக்கும்
தன் பருவங்கள் பற்றி
சிரத்தையேயில்லை
இதில் எவற்றுக்குமே
அவள் இரைவதேயில்லை
முனுமுனுப்பதும் இல்லை
வலியை வலியென்று
சொல்லத்தெரிவதில்லை
அவளுக்கு"

பெண்ணின் விதி "கைநழுவும் சோப்பென" என்று காட்ட முற்படுவது ஆழச்சிந்திக்கத்தக்கது. அவளின் சிரத்தை அப்படியே முழுதாக சமூகத் திடமும், பண்பாட்டினிடத்திலும் எந்தவிதமான "வினா எழுப்புதலுமின்றி" கையளிக்கப்பட்டுவிட்ட நிலையினை தெளிவுடன் கூறுகிறார்.

துர்க்காவின் கவிதை ஒன்றில் (கண்ணில் தெரியுது வானம்: பக் - 282) பெண்ணின் fantasies மற்றும் intimacy தொடர்பிலான பாலியல் கலந்த சமூகப் பார்வையின் வெளிப்பாடு பதிவாகின்றது. இதனை,

"மேஜை மீது உட்கார்ந்திருந்தாள்
நீண்டு விரிந்த விரல்களும்
கனவுகள் நிறைந்த விழிகளும்
அவிழ்ந்து நெளிந்த கூந்தலில்
உயிர்த்திருந்தாள்
அவன் கைகள் உரசிக்கொள்ள
உயிர்த்தது தீக்குச்சித்தலை
நெருடல்கள் இல்லாமலே நெருங்கினான்
பரவசத்தோடு அவள் நெற்றியில்
பற்றிக்கொண்டது
ஆயுள் தேய்ந்த தீக்குச்சி
அங்குலங்கள் அகலமாகி வெளிச்சம் நிறைய
மௌனமான அலறல்களை மீறி
மிருகங்களின் சிரிப்பொலிகள்
கலையறிய கசங்கியவர்களிடம்
சிதைவதற்காக சிருஷ்டிக்கப்பட்டவள்
எரிந்து கொண்டிருந்தாள்"

என்று வெளிப்படுத்தி "சிதைவதற்காக சிருஷ்டிக்கப்பட்ட" பெண்ணின் துயர் நிலையினையும் மிருகங்களின் சிரிப்பொலிகளாக வரும் இச்சையின் உறைவிடமாகப் பெண் அமைவதையும் குறிப்பிடு கின்றார்.

பண்பாடும், சமூகமும், சமூக உளமும் ஒரு பெண்ணுக்கு எப்படி "கூண்டின் கம்பிகளாக" உள்ளன என்பதை "சௌமி" என்ற கவிஞர்,

"நாம் பாட நினைத்து
வாய் திறந்தால்
எம்மைச் சூழ உள்ள
கூண்டின் கம்பிகள்
எம்மை ஊமையாக்குகின்றன
நாம் ஆடவென்று
உடலசைத்தால்
அச்சுறுத்தும் பலவிழிகள்
எம்மைப் பிடுங்குகின்றன"

என்ற வரிகளால் வெளிப்படுத்துகின்றார்.

"நிறங்களை அழுபவள்" (காலம், இதழ்34 ஜனவரி மார்ச், 2010) என்ற தலைப்பிலமைந்த அனாரின் கவிதை ஒன்று வெளிப்படுத்தப்பட முடியாத பெண்ணின் மீதான சுமைகளின் அழுத்தத்தைப் பாடுகின்றது.

ஒளவை

சல்மா

"தினமும் நிறத்திட்டுக்கள் ஊறிய
தலையணையை சுத்தப்படுத்தி விடுவதற்காக
நடுச்சாமத்தில் துயிலெழுந்து கொள்கிறாள்.

இரத்தக் கண்ணீரின்
சிவந்த கறைகளைத் துடைக்க
அடிக்கடி முகத்தைக் கழுவுவதாக
"கண்ணீர்" கறுப்பாகச் சிந்துவதை மறைக்க
கண்களில் கோளாறு
"கண் மை" கரைகின்றது போன்ற
பொய்களைக் கூறுவதாகச் சொல்கிறாள்.
.....
.....
குளியல் அறையில் வெள்ளை
சமையல் அறையில் ஊதா
படுக்கை அறையில் மஞ்சளாகி சிந்தி
உதிரும்
நிறங்களின் வெம்மை.
உலகின் மொத்த நிறங்களும்
அவளது கண்ணீராக மாறிய இப்பொழுதில்
நிறங்களைத் தீட்டுவதிலும் தேர்விலும்
அதனை விரும்புவதிலும்
அவதானமா இருங்கள்

வெகுகாலமாக ஒருத்தி
நிறங்களை அழுவது தொடர்பான
கடினமான வேதனை பற்றி
உங்களுக்கு எதுவும் தெரியாது என்ற போதிலும்
உங்களில் ஒருவரே
அதற்கு முழுப்பொறுப்பாளி என்பதையும்
தயவு செய்து ஞாபகம் வைத்திருங்கள்"

இந்தக்கவிதை தீவிரமாக விறைப்பாக எதை யும் வெளிப்படுத்தவில்லை. ஆனால், காலங்கால மாக நிறங் களை அழும் பெண் களின் கடினமான வேதனையை மிக இயல்பாக கூறுகின்றது.

இரண்டாவது நோக்கு நிலையானது பெண்கள் மீதான அசமத்துவங்களை காரணகாரியங்களோடு விளக்க முற்படுகின்றது. பெண் தனது சுயதிறன் விருத்திக்கான பொருள்வளம், சமூக அந்தஸ்து, அதிகாரம், வாய்ப்புக்கள் என்பவற்றை குறைந்த பட்சமே பெறுகின்றாள். இது பெண்ணும் ஆணும் தமக்கான சமூக இடத்தினை (social location) பகிரும் நிலையிலான பாரபட்சத்தின் விளைவாகும். இது தனிப்பட்ட உயிரியல் வேறுபாட்டால் வருவதல்ல. சமூக நிறுவன அமைப்புக் களின் வெளிப்பேறுகளாகவே இது அமைகின்றது. ஆண்வழிச்சமூக அமைப்பொன்றில் பெண்களை "அண்டிப்பிழைப்பவர்களாக" (subordinate) காணும் நிலையை இது உருவாக்குகின்றது. இத்தகைய நிலைமைகளை விளக்க முற்படும் பெண்ணியக் கவிதை கள் பால் நிலை அசமத்துவம் என்ற விடயத்தினைக் கருத்திலெடுக்கின்றன. அசமத்துவத்தை காரணங் களுடன் பேசுகின்றன. பெண்ணின் நிலையை மட்டும் இவை பேசுவதில்லை. நிலைமைக்கான மூலங்களையும் விளக்க முற்படுகின்றன. பெண்கள் மீதான சுரண்டல் களைப் பாடுகின்றன. பெண்மீதான சுரண்டலும், ஆண்ஆதிக்கமும் எந்த வகையில் நிறுவனமயப்படுத்தப் பட்ட ஒன்றாக அமைந்துள்ளது என்பதைக் கூறுகின்றன.

பெண்ணியாவின் "வதைபடலம்" என்ற கவிதையில்,

"உனக்குத் தெரியுமா?
என் இதயத்தில்
எத்தனை கீறல்கள் இருக்கின்றன என்று?
.....
.....
எப்போதாயினும் நீ உணர்ந்ததுண்டா?
உன் வரண்டு போன கௌரவத்திற்காய்
என்னையல்லவா நீ
கொன்று கொண்டிருக்கிறாய்"

வரட்டுத்தனமான ஆண்மயமான கௌரவத்தினால் பலியாகும் பெண்களின் குரலாக ஒலிக்கின்றது.

"அவர்கள் பார்வையில்" என்ற அ.சங்கரியின் கவிதை,

"சமையல் செய்தல்
படுக்கையை விரித்தல்
குழந்தை பெறுதல்
பணிந்து நடத்தல்
இவையே எனது கடமைகள் ஆகும்"

என்று கூறுவது ஒரு குடும்பம் என்ற சூழலில் பெண் எவ்வாறு "படிமம்" கொள்ளப்படுகிறாள் என்பதையும் எந்தெந்த வகையில் சுரண்டப்படுகிறாள் என்பதையும் வெளிப்படுத்துவதாக அமைந்தது.

"விடுதலை வேண்டினும்" என்று சங்கரியின் இன்னொரு கவிதையும்,

"வானிற் பறக்கும்
புள் எல்லாம் நானாக
மாறவும் எண்ணினேன்
ஆனால்
காலிற் பிணைத்த
இரும்புக் குண்டுகள்
அம்மியும் பானையும்
தாலியும் வேலியும்"

என்று இதனையே பாடுகின்றது. அதாவது ஒரு பெண் குடும்பத்திலும் சமூகத்திலும் சுதந்திரமாக இல்லா திருக்க அவளைப் பிணித்த காரணிகளாக எவை அமைந்தன என்பதை (அசமத்துவத்துக்கான காரணிகளை) வெளிப்படுத்துகின்ற கவிதை வரிகள் அவை.

சன்மார்க்காவின் "விழிப்பு" என்ற கவிதை மாக்ஸிய பெண்ணிய வாத்தின் மையப்பொருளான பெண்மீதான சுரண்டலைப் பாடுகின்றது.

"சமையல் செய்யும் இயந்திரமாக

ஆண்டுகள் பல தூங்கிக்கிடந்தாய்
உன் சிறு வீடே உனதுலகானது
உனது வாழ்நாள் இவ்வாறாக
உழுத்துப்போனது
உன்னைச்சுரண்டி வாழ்ந்தது உலகம்
உன்னை நினைத்து அழுதவர் கொஞ்சம்"

என்ற வரிகளில் பெண்மீதான சுரண்டலுக்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு எனவும், அவளது வாழ்வு வீடு என்ற சிறு உலகத்தில் வரையறைப்படுத்தப்பட்டது எனவும் பெண் "இயந்திரமாக" விளங்கி வருகிறாள் எனவும் பலவகையில் அவளின் சுரண்டலை வரலாற்றுடன் இணைத்துப்பேசுகின்றது.

மூன்றாவது நோக்கு நிலையின் அடிப்படையில்தான் தீவிரவாதப் பெண்ணியக்கருத்துக்கள் அடங்குகின்றன. அதாவது ஒடுக்கப்பட்டவளாக பெண் மாறிவிட்ட நிலையினை இவர்கள் பேசுவார்கள். பால்நிலையில் ஒடுக்கப்பட்ட பெண்ணை விடுதலை பெறச்செய்ய என்ன வழிமுறைகள் வேண்டும் அந்தத் தீவிர மாற்றம் எப்படி நிகழ்ந்தேற வேண்டும் என்பதனை இவர்கள் பேசுவார்கள். இத்தகைய நோக்குடையவர்கள் உலகளாவிய நிலையில் பெண்ணின் பெறுமானச்சிதைப்புக்கு (universal devaluing) எதிராகக் குரலெழுப்பி பெண்ணுக்கென நேர்முகமான விழுமியங்கள்/ பெறுமானங்கள் (positive values) உண்டு என்பதனை வலியுறுத்துதல், அத்துடன் ஆண்வழிச் சமூக முறையினால் வன்முறைமூலம் ஒடுக்கப் படுகின்ற (violently oppressed) பெண்களை விடுவித்தல் என்ற இரு மனவெழுச்சி சார்ந்த மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு இயங்குவர். இந்த மாற்றங்களை முன்னிறுத்திப்பாடும் பல கவிஞர்கள் பலர் உளர்.

ஔவையின் "ஒரு தோழியின் குரல்" என்ற கவிதையில்,

"மீண்டும் மீண்டும்
அடுப்படி தஞ்சமாய்
அடிமை வாழ்வே தலை எழுத்தாக
எத்தனை நாள் தான் இந்த வாழ்வு....?"

என்று மாற்றம் நிகழ்ந்தாக வேண்டுமென்ற நிலைக்கு வருகின்றார். பின்னர்,

"மானாக மருளாதே
அன்னம் போல அசையாதே
வீறு கொண்டு எழு
எமது உரிமைகளை வென்றெடுப்போம்"

என்று உரிமைக்காக போராட வேண்டும் என்று வழி சமைக்க முனைவதைக்காணலாம். இத்தகைய கோசத்தினுள் ஒருவகை உளஎழுச்சி நிலை (emotional) உள்ளுறைந்திருக்கும். இது முன்பிருந்த அத்தனை தழைகளையும் கேள்விக்குள்ளாக்குவதுடன் புரட்டிப்போட்டு புதுவுலகம் காணும் அவாவாக வெளிப்படும்.

"உன்னைச்சுற்றிக் கிடுகு வேலிகள்
இனியும் இருப்பதை அனுமதிக்காதே
இன்னும் என்னடி இருட்டினில் வேலை?"

என்பது "புதுவுலகம்" காணும் அவாவின் பாற்பட்டதே.

மைத்ரேயியின் "பெண் இனமே..." என்ற கவிதையில் (கல்லறை நெருஞ்சிகள், 2004: பக் 10),

"உன் உறங்கும் காலம்
முடிவுறும் வேளை
இதோ மிக அருகில்
"அடுக்களை அரசி"
"கற்புத்தெய்வம்"
மெல்லியாள் etc. etc.
எல்லாம் வெறும் கனவுப்
பொன் விலங்குகள்
சுயநலக்காரர் உன்மேற் சூட்டிய
மாய முட்கிரீடங்கள்
.....
.....
கனவுகள் வேஷங்களைக் கலைந்து
விரைவில் விழித்தெழு!"

என்று பாடுவது மேற்கண்ட மனஎழுச்சி நிலைப்பட்ட மாற்றத்துக்கான அவாவே.

வெளிப்படுத்தல் என்ற கவிதைத்தொகுப்பில் (சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம், 2001) "விஜிகலா புவனேந்திரன்" எழுதிய "ஆமை" என்ற கவிதையில் (பக்: 06),

"நான் ஆமை நான் ஆமை
நான் பிறக்கும் போதே
நீ இப்படித்தான் வாழ வேண்டும் என்று
என் உடலைப் பாதுகாக்க
ஓடையும் சேர்த்து வைத்துவிட்டார்கள்
நான் என் வீட்டையும் சுமந்து கொண்டு
திரிகின்றேன்
இது எனக்குப் பெரும் சுமையாக இருக்கிறது
அதைக்கழற்றிவிட்டு நடந்து பார்க்க
விரும்புகின்றேன்"

என்று பாடுவது சுமந்து செல்லும் ஓடாகவும் ஒழிந்து கொள்ளும் ஓடாகவும் விளங்கும் பெருஞ் சுமையை இறக்கி வைக்கத்துடிக்கின்ற பெண்ணின் அவாவினை வெளிப்படுத்துகின்றது.

சிவரமணியின் பெண்விடுதலை தொடர்பான கருத்து நிலை தீவிரமானது. அவரின் "விடுதலை" என்ற கவிதையில்,

"விலங்கொடு கூடிய
விடுதலை மட்டும்
வேண்டவே வேண்டாம்!
தோழர்களே
விலங்குகளுக்கெல்லாம்
விலங்கொன்றைச் செய்தபின்
நாங்கள் பெறுவோம்
விடுதலை ஒன்றை"

விலங்குகளை அறுத்தெறியத் துடிக்கும்







அதேவேளை விலங்காய் நிற்கும் காரணிகளை அகற்றி விட வேண்டும். என்று தேவையினையும் வலியுறுத்தப் படுகின்றது.

பெண்ணியத்தின் மூன்றாம் அலை என்பது பெண்ணியத்தினுள் மையப்படுத்தப்பட்ட ஒரு புலமைத்துவ வளர்ச்சி நிலை என்பர். சமகால பூகோள நிலைப்பட்ட ஒழுங்குகளுடன் இணைக்கபட்ட வகை யில் சமகாலப்பெண்கள் இயக்கங்களின் வெற்றிகரமான வளர்ச்சியை குறிகாட்டுவதாகவும் அமைந்தது. இதனுள் மூன்று போக்குகள் அமைந்தன. ஒன்று ஆதிக்கச் சுற்றுவட்டம் ஒன்றினுள் "வெளியாராய்" (stranger) வாழும் அனுபவத்தைப்பெறுவது. இது ஒடுக்கு முறைக்கு உட்படுத்துபவர்களுடன் நெருக்கமான இணைவுள்ளவர்களாக தம்மை இனங்காணுதல் ஆகும். இது பெண்ணின் பன்மைத்துவ அனுபவங்களை "தோலுரித்து" (depiction) காட்டும் முயற்சியாகும். இரண்டாவது பின் நவீனத்துவ விவாதங்களின் வழியானது. இது பெண்ணை விளிம்பு நிலையில் (margins) உள்ளவளாக காணுகின்றது. விளிம்பு நிலைப்பெண்களான தன்னினச் சேர்க்கையாளர் (lesbians), கூலி வகுப்பினர் (working class women) போன்றவர்கள் பாலியல் கருத்து நிலை மற்றும் பெண்ணின் சமமற்ற அந்தஸ்து என்பவற்றை மாத்திரமன்றி அவள் மீதான எல்லா வகையிலும் பரந்த ஆதிக்க முறைமைகளையும் குறித்து விவாதித்தல். மூன்றாவது, பெண்ணின் வேதனைகளின் வெவ்வேறான அளவுகளையும் (calculus of pain) ஒடுக்குமுறை மற்றும் சலுகைகளின் வெவ்வேறு காவி மூலியங்களை யும் (vectors of oppression and priviledge) விளங்குவதாக அமைகின்றது. இது பால் நிலையும் இனத்துவமும், பால்நிலையும் வர்க்கமும், பால்நிலையும் உலகமயமாக்கலும் போன்ற பலவிடயங்களைப் பேசுகின்றது. அதாவது இனத்துவம், வர்க்கம், சாதி, வயது போன்ற பெண்ணின் மீது செலுத்தும் ஆதிக்கத்தினைக் கூறுகின்றது. இன்னொரு வகையில் சொல்வதானால் பெண் வெவ்வேறு வாழ் விடச்சூழலில் தான் அனுபவிக்கும் வேதனை களின் அளவை வெளிப்படுத்துவ துடன், பெண் என்பதால் அவளுக்கு ஏற்படும் பிரச்சினை களுக்கு மேலாக இனம், சாதி, வயது, வர்க்கம் போன்றவற்றால் அவள்மீது சுமத்தப்படும் மேலதிக சுமைகளையும் சுமக்கின்றாள். இவற்றையும் இன்றைய பெண்ணிய நோக்குநிலையுடைய தமிழ்கவிஞர்கள் பாடத்தொடங்கிவிட்டனர்.

சிறுபான்மை இனமொன்றினுள் பெண்ணின் பிரச்சினைகள், ஒடுக்கப்பட்ட சாதிப்பெண்ணின் மீதான ஆதிக்கங்கள், உழைக்கும் வர்க்கத்தின் பெண்கள் சுமக்கும் துயர் நிலைகள், பதின்ம வயதுப்பெண்கள் மீதான வன்முறைகள் என்று நீளும் ஒடுக்குமுறைகளுக்கு எதிரான குரல்கள் போன்றவற்றை பெண்ணியத்தின் மூன்றாம் அலை பேசுகின்றது.

சிவரமணியின் "எமது விடுதலை" என்ற கவிதையில்,

"விடுதலை என்றீர்
சுதந்திரம் என்றீர்
எம் இனம் என்றீர்
எம் மண் என்றீர்.
.....
.....
விலங்கொடு கூடிய
விடுதலை மட்டும்
வேண்டவே வேண்டாம்!"

என்று வரும் வரிகள் இனவிடுதலை, மண் விடுதலை என்றெல்லாம்

பேசுவது பெண் விடுலையையும் இணைத்ததுதான் என்பதை உணர்த்துகின்றன,

பெண்ணியாவின் "அவள் என் சகோதரி" என்ற கவிதையில்,

"எங்கோ அவள்
அழுதபடி இருக்கிறாள்
தன்னை அவன்
நிர்க்கதியாக்கிய போது
தன்முன்னே
உறவுகளை வீழ்த்திய போது
தன் குழந்தைகளை
கண்ணெதிரிலேயே
வக்கிரப்புன்னகையுடன்
சுட்டுச்சாய்த்த போது
மூடியபடியே இருந்ததற்காய்
மேற்கத்தைய வெறிபிடித்த நாய்கள்
உடலைச் சூறையாடிய போது
.....
.....
எல்லா இடங்களிலும் அழுகிறாள்

அவள் என் சகோதரி
.....
எண்ணைக் கிணறுகளுக்காக
நடக்கும் பழிப்போரில்
தான் என்கிற சுயத்தை
அடையாளத்தை தொலைத்து
அழுதபடி இருக்கிறாள்"

என்று காட்டப்படும் மத்திய கிழக்கின் போர்களுக்குள் துவளும் ஒரு முஸ்லீம் பெண்ணின் calculus of pain வெளிப்படுகின்றது. இது வெறுமனே பெண்ணின் பிரச்சினை அல்ல ஒரு ஏகாதிபத்திய மனோபாவம் என்ற காவியமூலியம் (vector) பெண்ணுக்குக் கொடுக்கும் சிதைவை இக்கவிதை பாடுகின்றது.

மேற்கண்ட எடுத்துக்காட்டுக்களின் வழியாக பெண்ணிய நோக்கு நிலைகளின் வளர்ச்சிக்கு சமாந்தரமாக தமிழ் கவிதைகளில் பெண்ணியம் தொடர்பான வெளிப்படுத்தல்கள் நிகழ்த்தப்பட்டு வந்திருக்கின்றன என்பதை அறியலாம். இக்கட்டுரையானது சொல்லாத சேதிகள், பெயல் மணக்கும் பொழுது, எனக்கு கவிதை முகம் (அனார்), நம்மைப் பற்றிய கவிதை(ஆகர்ஷிகா), ஒரு கடல் நீருற்றி(பஹீமா ஜெகான்), இது நதியின் நாள் (பெண்ணியா), என் கவிதைக்கு எதிர்த்தல் என்று பெயர் வை! (பெண்ணியா), கல்லறை நெருஞ்சிகள்(மைத்ரேயி) போன்ற பெண் கவிஞர்களினூடான பயணத்தின் வழி சாத்தியமானது. ஆயினும் இலங்கைத்தமிழ் கவிதைச் சூழலுக்கு வெளியே தமிழகம், மலேசியா, சிங்கப்பூர், புலம்பெயர் நாடுகளில் வெளிவரும் பெண்ணிய நோக்கு நிலையுடைய கவிதைகளின் வழியான முழுமையானதொரு பார்வையின் மூலம் தான் மேலும் சரியானதொரு அடையாளப்படுத்தலைச் செய்ய வாய்ப்பு ஏற்படும். உதிரிகளாக வரும் சில பெண்ணிய நோக்குடைய கவிதைகள் முழுவீச்சுடன் வருகின்றன. பெண்ணிய நோக்குநிலைகளை வெளிப்படுத்திய ஆண் கவிஞர்களின் பார்வைகளும் தனித்து கருத்திலெடுக்கப்பட வேண்டும். இவையாவும் நிகழுகின்ற போது தமிழ் கவிதைகளில் வெளிப்படும் பெண்ணிய நோக்கின் செல்நெறி பற்றிய சரியான பதிவுகள் சாத்தியமாக்கப் படலாம். ●



பெயர்ச்சி



இலைகள் இல்லாத
மரத்தில் தான்
அந்த
இரு பச்சைக்கிளிகள்
வந்து அமர்ந்தன.
அவை உட்கார்ந்த
வேளை,
ஒரு மழைத்துளி
அதன்
உச்சாணிக்கொம்பில்
பட்டுத்தெறித்தது.
திடீரென அம்மரம்
துளிர்த்துப்
பச்சை போர்த்திக்கொண்டது.
தொகையாகத்
தளிர்கள்;
அவற்றில்
அரும்பு
மொட்டு
மலர்
என அம்மரம் குலுங்கியது!
சிறு பிஞ்சுகளும்
அங்கொன்று இங்கொன்றாய்த்
தோன்ற....
சிலபொழுதுகளில்,
பிஞ்சுகள்,
காய்களாகிப் பழங்களுமாயின.
பழங்கள் கனிந்து பழுத்ததும்
அயலில் உள்ள பறவைகள் –
தேன் சிட்டுக்கள்
கரகரத்தபடி காகங்கள்
இன்னும் குக்குறுப்பான்
அடைக்கலாங்குருவி
கொண்டைக்கிளாத்தி
மைனா
மணிப்புறா
ஆள்காட்டிப்புள்
கரிக்குருவி
புலுனி
தவிட்டு நிறச் சப்பட்டைக்குருவிகள்
அடிவயிற்றில் மஞ்சள் தடவிய
தூக்கணாங்குருவிகள் –
இன்னும் இன்னும்
பெயர் தெரியாதவை
ஆங்கு
வகை தொகையற்றுப்
படை எடுத்தன
—அங்கு மொய்த்த
எறும்புகளுடன்
அவை
போட்டி போட்டுப்
பழங்களைச் சுவைத்தன
பின்னர்,
எச்சமிட்டன,
எச்சம்
பெரும் திரணையாக்குவிய,
அந்தச்செறிவான
எருத்திடலில்,
சில பூக்கள் மலர்ந்தன
மலர்ந்த அப்பூக்களின்
தேன்
வழிந்தோடி
பக்கத்தில் குட்டையாய்த் தேங்கியது,
குட்டையிலும்
மலர்கள்...!
அம்மலர்கள்
அனைத்தின் மணமும்
ஒன்று சேர்ந்து
அவ்வூரை அள்ளி எடுத்து,
வானில்
நிலாவுக்குப் பக்கத்தில்
வைத்தது.

இப்பொழுது
அவ்வூரில்
நான்...நான் மட்டும்தான்
இருக்கிறேன்!

— க.சட்டநாதன்

காத்திருப்பு

காலம் கரைகிறது காத்திருப்பால்
காணமற் போகும் வரிசையில் மணித்துளிகள்
ஏன் மாதங்களும் வருடங்களும்
கருவிலே தோன்றிக் கடைசிவரை
காத்திருப்பு நம்முடன் கைகோர்க்கின்றது

முந்தி வரும் விந்துக்காய் சூல் முட்டையின்
முதற்காத்திருப்பு
விரைந்து வந்த விந்துடன்
இணைந்த முட்டை கருவாகி
உயிர் உலகிற்கு வெளிவர
ஈரைந்து மாதம் கருவறையுள் காத்திருப்பு

அன்னைமடி சுரந்த அமுதப்பால் சுவைத்து
மண்ணில் விளைந்த நெல்லுமணிச் சோறுண்ண
ஆறுமாதம் வரை ஆவலுடன் காத்திருப்பு
ஐந்து வயதுவரை ஆரம்பக்கல்விக்கும்
அனுமதி கிடைக்குமா என வெட்டுப்புள்ளிக்கும்
கல்வியோடு காத்திருப்பும் சேர்ந்திருக்க

பட்டம் பெற்ற பின்னும்
பதவிக்காய் காத்திருப்பு
பதவிதனை உறுதிசெய்ய பலகாலம் பார்த்திருப்பு
உள்ளம் கவர்ந்தவளைக் காணவில்லையென
ஊர்க்கோடியில் காத்திருப்பு
காத்திருப்பு காதலில் கட்டாயம் வேணுமென்னும்
காதலியின் கண்டுபிடிப்பு

எண்ணியவள் போல் இவள் இல்லைஎன்று
இன்னொருத்திக்காய் இளைஞனின் காத்திருப்பு
சீதனம் சேர்க்காத சிறுபாவத்தால்
சீரின்றிக்கழியும் கன்னியரின் காத்திருப்பு
இங்குவந்து எழுதிவிட்டு எடுப்பார் வெளிநாடு என்று
ஏக்கமூச்சுக்களுடன் தொடரும் காத்திருப்பு

தடங்கல் எல்லாம் தாண்டி வந்து
தாலி ஏறும் தறுவாயில் ராகுகாலம் வந்து நிற்க
மணமேடையிலும் மற்றுமொரு காத்திருப்பு
பத்துமாதம் சென்றிடப் பெற்றுவிடும்
பாலனுக்காய்ப் பல காலம் காத்திருப்பு
பல இலட்சம் செலவழித்தும் பலனின்றிக் காத்திருப்பு

பள்ளி சென்ற பிள்ளை பக்குவமாய்
பாதை வழி காணும் வரை பெற்றவரின் காத்திருப்பு
வேலைக்குச் சென்றவர் வீதியில் வில்லங்கம் ஏதுமின்றி
மாலைக்குள் மனை வந்து சேர வேண்டி
மனைவியின் காத்திருப்பு
கொடுத்த வாக்கை நினைப்பதற்கும்
அடுத்த தேர்தல் வரை அரசியல் வாதியின் காத்திருப்பு

ஓய்வின்றி உழைத்துச்சலித்து
உழைக்காமல் ஊதியம் பெற
அறுபது வயது வரை காத்திருப்பு
அரசு தரும் உதவித்தொகை ஆயிரம் ரூபாய்க்கு
எழுபது வயது வரை ஏங்கிக் காத்திருப்பு

எல்லா நோயும்
என்னுள்ளே தஞ்சம் புக
எடுத்துவிடு இன்னுயிரை என ஏங்கி அழைத்து
எமனுக்காய் ஈன உடல் காத்திருப்பு
ஈமக்கிரியைக்கும் ஏற்ற
குரு ஓடிவரும் வரை
ஊன உடல் காத்திருப்பு
கொள்ளி போடும் பிள்ளை
கொழும்பு வந்து சேரும் வரை
பெட்டியுள் பிணமும் காத்திருப்பு

மரணத் துடக்கை துடைத்து விட
மாதம் ஒன்று காத்திருப்பு
மறக்காமல் திவசம் ஒன்று
செய்துவிட
வருடம் ஒன்று காத்திருப்பு

காத்திருப்புச் சாகரத்துள்
சலிக்காது மீண்டும்
சாதிக்க எண்ணி மறுபிறப்பிற்காய்
ஆவலுடன் ஆன்மாவின்
அடுத்த காத்திருப்பு.

மாமாதிவதனன்

எஞ்சிய இருப்பும்

கொட்டிக்கிடக்கும்
காட்சிகளெல்லாம்...
கற்பூர வாசணையாய்
கருவாட்டுக்கூடையில்

சிந்திக்க மறந்து
சந்திகளும் சிரிக்க...
சாக்கடைகளிலெல்லாம்
சல்லாபங்கள்...

நாகரிகமென்று
நாடகமாடி...
நாற்றமடிக்கும்
ஊத்தைகள்...

கட்டிக்கிடக்கும்
கோவணத்தையும்...
கழற்றிப்போடும்
கைங்கரியங்கள்...

பிறப்புக்கள் கூட
திரை மறைவில்...
நளினங்கள் மட்டும்
நிர்வாணமாய்...

கட்டிய தடங்களுக்கும்
வட்டியை கேட்குது...
வேட்டி அவிழ்ந்த போதும்
வேசம் போடும் வர்க்கம்...

தம்தலை மறந்தும்
தலைமுறை திரியுது...
தலைகள் கழற்றிக்கொண்டு
விலைகள் கேட்பதால்...

இழந்தவைகளுடன் – நாம்
இருப்புக்களும் சேருது...
இருட்டறையின் – உள்
ஒட்டடைகளாக...

– வே.முல்லைத்தீபன்



போர்க்களம்

நாட்டைப் போர்க்களமாக்கி மானிடத்தையும்
மக்களையும், அநியாயமாகக் கொன்றழித்த
அதர்மத்தின் காவலன் துரியோதனனும்,
அவன் வெறிபிடித்த படைகளும்
போர்க்களத்தில் நின்று எக்காளமிடுகின்றன.
சூதின் சூத்திரதாரியான கள்ளச்சகுனி
எட்டப்பர்களோடு வில்லேந்தி நிற்கின்றான்.
போர்க்களம் மரண ஓலங்களால்
விம்மிப்புடைத்து, வெடிப்பதைப்பார்த்து,
மனிதம் மனம் நொந்து அழுகின்றது
கூலிக்கு மாரடிக்கும் குக்கல்களும், நக்கல்களும்
செத்துக்கிடக்கும் பிணங்களை உண்ணுவதில்
போட்டிபோட்டுக்குரைக்கின்றன
அதர்மம் ஆணவத்தால் தலைவீங்கி
களத்தில் தர்மத்தை அழிப்பதைப்பார்த்து, மடங்களில்
வேதம் ஓதும் சந்நியாசிகள், மதுவில் மயங்கிய
விரல்களுக்கு வெறியூட்டிக்கொண்டிருக்கின்றனர்
போர்க்களம் உக்கிரமடைகின்றது
அதர்மத்தை அழிக்க கண்ணன் விழிக்கிறான்
காண்டீபன் எழுந்து நிமிர்ந்து நிற்க, மறுகணம்
போர்க்களம் சின்னாபின்னமாகி சிதைகின்றது
அதர்மங்கள் அழிய தர்மம் சிரிக்கின்றது
பாவம்! பேய்களும், பிணந்தின்னி கழுகுகளும்
வாழ இடமின்றி ஓடுவதைப்பார்த்து
காலதேவன் கிக்கிளம் கொட்டி மகிழ்கின்றான்.

– எஸ்.முத்துமீரான்

தாங்கிடா விழுதுகள்!

பல்கிளை பரப்பி நின்று
பழமோடு நிழலும் தந்த
பாரிய விருட்சமொன்று
பருவத்தால் பலம் இழந்து
கூனிய முதுகினோடும்
கோடுகள் பதிந்த தோலும்
மாயவன் சங்கு ஒத்த
மயிர்களில் சிலவும் தாங்கி
ஆதரவற்றோர் இல்ல
வாயிலை வெறித்து நோக்கி
"வாரிசு வருமா" என்று
ஆவலாய் காத்து நிற்கும்.

வாரிசு மூன்று பேரில்
வயல் நிலப் பிசகால் ஒன்றும்
வடிவுடை மனையாள் சொல்லை
மறுத்திடா மைந்தன் ஒன்றும்
"தாய்தனைப்பார்த்தாலே
தந்தையை ஏற்கேன்" என்று
காரணம் சொல்லி ஒன்றும்
கழன்றனர் கடமை விட்டு

வேர்தனைச் செல்லரித்த
ஆலினை நிகர்த்த தந்தை
விழுந்திடா தணைப்பதற்கு
விழுதுகள் எதுவுமின்றி
ஏங்கிடும் நிலைதான் இங்கு
இன்றைய மனிதம் ஈதே!

– புத்தூர் வே.இளையக்குட்டி

நான் பனைமரமல்ல!

சொந்தங்கள்
சொல்வார்கள்
நாளெல்லாம்
நல்லூரான்
காதுகளுக்குள்
கண்ணீரோடு ஏதேதோ சொல்லி!
ஏகப்பட்ட விரதங்கள்
தானிருந்து
முத்தான எனை
பெற்றெடுத்து
முருகன் பெயரான!
குமரன்... எனப்
பெயர்வைத்தாயாம்
எனக்கு!

கொடூர யுத்தம்
தலைவிரித்தாடி!
தன் பசிக்கு
எனைக்கேட்க
அதிர்ந்து போனாய்!
ஆகாரம் மறந்து போனாய்
அன்றே ஆசை மகனை!
அலை கடல் வழியே
ஆங்கில தேசத்துக்கு
ஆள் மாற்றினாய்
இடியான போரில் நீ!
படி தாண்டும் போது
பழியான சேதி கேட்டு!
சவமானேன்
சத்தியமாய் நானும்
இப்போது,
சமாதானக்காற்று
சடுதியாய் வீசுவதால்
ஊர் வரச்சொல்லி
வேண்டும் சொந்தங்களே!
எல்லாம் மறந்து!
என் மனையில்
இனியும் நான்
இன்புற
பனைமரமல்ல நான்.

– பா.ரிசாந்தன் – வெறட்டன்



கவிதை என்றால்?

தாமரைத்தீவான்

1. உணர்ச்சி: -

பொங்குவெறித் தமிழ் கொண்டு போர்க் களத்தே அவ்வை எனும் பூவை அந்நாள்/ செங்குருதி குளித்திருந்த தமிழ்மன்னர் சிறப்பெல்லாம் கவிதை ஆக்கித்/ தங்கமணித் தமிழ் தந்தாள், அட நீங்கள் தாய்த் தமிழை மறந்து நாட்டில்/ தெங்கிள நீர்முலை பாடித்திரிகின்றீர் கவிஞர்களா, செத்துப்போங்கள்! (காசியானந்தன்)

II பொழுதெல்லாம் செல்வம் கொள்ளை கொண்டு போகவோ, நாங்கள் சாகவோ?/ அழுது கொண்டிருப்போமோ ஆண்பிள்ளைகள் அல்லமோ, உயிர் வெல்லமோ? (பாரதியார்)

2. கற்பனை: -

மதியும் மடந்தை முகனும் அறியா பதியிற் கலங்கிய மீன்! (1116) /(வள்ளுவர்)

II அனிச்சப் பூக்கால் களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு நல்லபடா அபறை! (1115) (வள்ளுவர்)

3. சொல்லாட்சி: -

பனியால் நனைந்து வெயிலால் உலர்ந்து பசியால் அலைந்தும் உலவா/ அநியாய வெங்கண் அரவால் இறந்த அதிபாவம் என்கொல் அறியேன்/ தனியே கிடந்து விட நோய் செறிந்து தரைமீதுருண்ட மகனே/ இனியாரை நம்பி உயிர்வாழ்வம் என்றன் இறையோனும் யானும் அவமே! (ஆசு கவிராயர்)

II கும்பிட்டுக் கொண்டிருந்தார் சாது கூத்தாடிக் கொண்டிருந்தாள் மாது/ தம்பட்டம் மட்டும் இடை மூட, அவள் ஆட, அவர் அம்பொத்த விழிகள் அவர் மீது! (மகாகவி)



4. உவமை: -

தேனைப்போல் மொழியுடையாள், அன்றலர்ந்த செந்தாமரை போன்ற முகத்தாள் கொண்டை/ மீனைப் போல் விழியுடையாள், விட்டதிர்ந்த மின்னைப்போல் நுண்ணிடையாள், யாவுங்கொண்ட/ வானைப்போல் உயர்வாழ்வு வாழ்ந்தாள் என்றன் மகிழ்ச்சிக்கு மகிழ்ந்து நான் நைந்தால் நையும்/மானைப்போன்றாள் எனக்குத் தானோ அன்றி வறிதே நான் சாகத்தான் பிறந் துள்ளேனோ? (பாவேந்தர்)

II தூண்டில் புழுவினைப்போல் - வெளியே, சுடர் விளக்கினைப்போல்/ நீண்ட/ பொழுதாக எனது நெஞ்சந் துடித்ததடி/ கூண்டுக்கிளியினைப்போல் - தனிமை கொண்டு மிகவும் நொந்தேன்/ வேண்டும் பொருளையெல்லாம் - மனதுவெறுத்துவிட்டதடி! (பராதி)

5. கருத்து:-

யாதும் ஊரே, யாவரும் கேளீர்/ தீதும் நன்று பிறர்தரவாரா! (கணியன்)

II ஆள்வினையும் ஆன்ற/அறிவும் என இரண்டின் நீள்வினையால் நீளும்குடி! (1022) (வள்ளுவர்)

6. சுருக்கம்:-

நாகையிலே வாழ்கின்ற தோகை, அவள் நன்னுதலில் துன்பத்தின் ரேகை! ஆக அவள் கண்டது பேராழியிலே தன் கொழுநன் போதையில் அணிந்த தலைப்பகை! (மகாகவி)

II அவன் பட்டுவேட்டி கட்டுவது பற்றிய கனவிலே படுத்திருந்த போது/ கட்டியிருந்த கோவணமும் களவாடப்பட்டது! (வைரமுத்து)

7. அழகு:-

காலை இளம்பருதியிலே அவளைக்கண்டேன், கடற்பரப்பில் ஒளிப்புனலில் கண்டேன், அந்தச்/ சோலையிலே மலர்களிலே தளிர்கள் தம்மில் தொட்ட இடம் எலாம் கண்ணில் தட்டுப்பட்டாள்! மாலையிலே மேற்றிசையில் இலகுகின்ற மாணிக்கச்சுடரில் அவள் இருந்தாள், ஆலஞ்/ சாலையிலே பேசுகின்ற கிளியின் கூட்டம் தனில் அந்த அழகென்பாள் காட்சி தந்தாள்! (பாவேந்தர்)

II சான்றோர்/நெஞ்சகஞ்சோட்கழகு! (அவ்வையார்)

8. இன்பம்:-

ஆயன்கிளியானான், ஆச்சி கனியானாள்/ மாயத் திரவினிக்கும் மல்லிகைக்கும் தென்றலுக்கும் வாயில் திறந்தார் காண்வாயோடு வாய்வைத்துத்தோயும் கலவியதே தொலையாக்/ கலவியெனச் சாயும் பொற் கோபுரமாய்ச்சாய்ந்தார், அவரிடத்தே/ நீயும் நடந்து நீ பெற்ற செம்பருத்திச் சேயும் நடந்தே திருவோடவர் வீட்டில் கோயில் எடுத்துக் கொள்ளீரோ தைப்பாவாய்! (கண்ணதாசன்)

II மாங்கட்டு வேடன் மகளை மருமகன் பால்/ போங்காட்டில் இன்பம் புணர்ந்தானே ஆங்காணும்/ மக்கள் மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்/ சொற்கேட்டல் இன்பம் செவிக்கு! (இரட்டையர்)

9. இசை:-

சோலை மலரொளியோ - உனது சுந்தரப் புன்னகை தான்! நீலக் கடல் அலையோ எனது நெஞ்சில் அலைகளடி!/கோலக் குயிலோசை உனது குரல் இனிமையடி வாலைக் குமரியடி கண்ணம்மா மருவக் காதல் கொண்டேன்! (பாரதியார்)

II. அம்மா நான் விளையாடப் போறேன் - கையில், அன்புடன் பட்சணம் தந்தனுப்பென்னை!/ சும்மா நான் உட்கார மாட்டேன் - நல்ல தோழர் அழைக்கின்றார் நாழிகையாச்சு! (சு.பாரதி)

10. தாளம்:-

கைத்தல நிறைகனி, அப்பமொடவல்பொரி கப்பிய கரிமுகன் அடிபேணி/ கற்றிடுமடியவர் புத்தியி லுறை பவர் கற்பகமென வினை கடிதேகும்! (அருணகிரி)

II. கொலை வாளினை எடடாமிகு கொடியோர் செயல் அறவே/குகைவாழ் ஒரு புலியே உயர்குணமேவிய தமிழா? (பாவேந்தர்)

11. பழமை:-

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம் என்ப! (தொல்)

II. நிறைமொழி மாந்தர் பெருமையிற்கிளர்ந்த/ மறைமொழிதானே மந்திரம் என்ப!(தொல்)

12. புதுமை:-

என் நிலத்தை விற்ற அந்த இரவில் உறங்கவே இல்லை, தவளைகள் அழைப்பால்!(ஹைக்கூ)

II. குரல் மட்டும் இல்லையென்றால் காலைப் பனியில் காணாமற் போயிருக்கும், வெள்ளை நாரைகள்! (ஹைக்கூ)

13. பதிவு:-

முருகு பொரு நாறு பாணிரண்டு முல்லை/ பெருகுவளமதுரைக்காஞ்சி- மருவினிய/ கோல நெடுநல் வாடை கோல் குறிஞ்சி பட்டினப்/பாலை கடாத்தொடும் பத்து!

II. மருக்காரைசுக்கு மருதம் வேர் வெள்வேல்/ எருக்காவாரை பிரம்போடேழும்- நறுக்கி! நாலி லொன்றாய்க் காய்ச்சி நாலு நாள் கொப்பளிக்கப்/ பாலன் பல்லாம் கிழவன் பல்!

14. பல்பொருள்:-

முத்திருக்கும் கொம்பசைக்கும், மூரித் தண்டேந்திவரும்/ கொத்திருக்கும் நேரே குலை சாய்க்கும் - எத்திசைக்கும்/தேமணக்கும் சோலைத் திருமலைராயன் வரையில்/ஆமணக்கு மால் யாணையாம்! (காளமேகம்)

II. குடம்பை தனித் தொழியப் புள்பறந்தற்றே /உடம்போடுயிரிடை நட்பு! (338 குறள்)

15. விளங்காமை:-

மாங்காய்ப் பாலுண்டு மலை/மேலிருப் போர்க்குத் தேங்காய்ப்பாலே துக்கடி-குதம்பாய் தேங்காய்ப்பாலேதுக்கடி?(கு.சித்தர்)

II. கோயிற் குருக்கள் ஒரு பாங்கின் தெப்பக்-குளத்தின்மேலே அவன்வீடு/தாவிக்கொண்டு தொடை தட்டுகிறான் நிலம் சாருமோ கேளடி ஞானப் பெண்ணே?(வா.கும்பி)

16. விடுகதை:-

வெந்தகறி மணப்பதேன்? வேந்தர் படை முறிவதேன்? பெருங்காயத்தால்!

II. முன்னமோர் ஊரின்பேராம்! முதலெழுத் தில்லாவிட்டால்/அந்த ஊர் அரசன் பேராம்! நடுவெழுத் தில்லாவிட்டால் நாலுகால் மிருகத்தின் பேர்/கடை யெழுத்தில்லாவிட்டால் கள்ளென்றும் சொல்லலாமே! (மதுரை- துரை- மரை-மது)

17. கதை:-

கோடுறு சினையிற் காகம் கூடு வைத்தனேக காலம்! பேடொடு கூடிவாழும் பெருமரப்பொந்தில் வந்தே/ ஆடிய கரும்பாம்பொன்றங்கதுபெறு முட்டை யெல்லாம்/நாடியே குடித்துப்போக நலிந்துளம் மெலிந்து வாடி...(பஞ்சதந்திரம்)

II. குறுமுயல் சிங்கம் தன்னைக் கொன்ற துண்டஃதோவென்னில்/செறியுமோர்காட்டிலேயோர் சிங்கமுண்டந்தக்காட்டில்...(ப.தந்திரம்)

18. ஓவியம்:-

மன்னர் விழித்தா மரை பூத்த மண்டபத்தே/ பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள் - மின்னு மணிச்/செய்யகால் வெள்ளைச் சிறையன்னம் செங்க மலப்/பொய் கைவாய்ப் போவதே போன்று!(நள வெண்பா)

II. கடல் நீரும் நீலவானும் கைகோர்க்கும், அதற்கிதற்கும்/இடையிலே கிடக்கும் வெள்ளம் எழில் வீணை, அவ்வீணைமேல்/அடிக்கின்ற காற்றோ வீணை நரம்பினை அசைத்தின்பத்தை/ வடிக்கின்ற புலவன் தம்பி, வண் கடல் பண்பாடல் கேள்! (பாவேந்தர்)

19. புரட்சி:-

ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர் உதையப் பராகி விட்டால் ஓர் நொடிக்குள்! ஓடப்பர் உதையப்பர் எல்லாம் மாறி ஒப்பப்பராய் விடுவார் உணரப்பா நீ!(பாவே)

II. இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்!(1062 குறள்)

20. இரக்கம்:-

கண்தாம் கலுழ்வதெவன் கொலோ தண்டா நோய் தாம் காட்ட யான் கண்டது!(1171 குறள்)

II. மன்னுயிரெல்லாம் துயிற்றி அளித்திரா, என் அல்லது இல்லை துணை!(1168 குறள்)

21. ஆழம்:-

உடுத்ததுவும் மேய்த்ததுவும் உம்பர்கோன் தன்னால்/ எடுத்ததுவும் பள்ளிக்கியையப் - படுத்ததுவும்/ அந்நாள் எறிந்ததுவும் அன்பிலிருந்ததுவும்! பொன்னா வரை இலை காய் பூ! (காள)

II. ஓகாமாவதோ டுடுடுடு நேரொக்க/நாகார் குடந்தை நகர்க்கிறைவர்- வாகாய்/எடுப்பர் நடம்புரிவர் ஏறுவர் அன்பர்க்குக்/கொடுப்பர் அணிவர் குழைக்கு! (காள மேகம்)

22. வினாவிடை:-

மோனை முத்தமிழ் மும்மதமும் பொழி/ ஆனைமுனவந்தெதிர்த்தவன் யாரடா?/ கூனையுங் குடமும் குண்டுச்சட்டியும் பானையும் பணு மங்கு சப்பையல்யான்!(புக)

II. ஒரு காலடி நாலிலைப் பந்தலடி?(கம்) ஆரையடா சொன்னாய் அது?(அவ்வை)

1. உள்ளத்துள்ளது கவிதை- உணர்ச்சி உரு வெடுப்பது கவிதை/ தெள்ளத்தெளிந்த/தமிழில் அதனைத்தீட்டி விடுப்பது கவிதை! (தேசிகர்)

2. ஆர்வத்தீயால் அன்புள்ளுருகி அருவிபோலே வருவது பாட்டாம்!(கவியோகி)

3. பழமை விழுந்து மனதுள் கிடந்து பயிராகி/ செழுமை நிறைந்த புதமை குழைத்து விளைவாகி/ அழகும் பொழிந்து அறமும் புதைந்து கலையாகி/ இளமைக்கயிற்றில் கனவைத் தொடுதல் கவியாகும். (நீலா)

4. சுவை புதிது பொருள் புதிது வளம்புதிது சொற்புதிது சோதிமிக்க நவகவிதை! (பாரதியார்)

5. கண்ணுக்குத்தெரியாத ரகசியத்தைக் கைது செய்து பார்ப்பதுவோ?(வைரமுத்து)

6. எளிமையின் இயல்பான வாழ்பனுபவக்கீற்றால் வேய்ந்த குடிசையே?(வில்வரெத்தினம்)

7. உப்புக்கும் பாடிப்புளிக்கும் ஒரு கவிதை! ஒப்பிக்கும் என்றன் உளம்! (அவ்வையார்)

ஆன்ம தவங்கள்

காத்திருப்புக்கள் வீணாகவில்லை
உன் தரிசனத்தினால்
ஆன்ம தவங்கள் மெருகேறின
உன் ஆகர்ஷிப்புகளினால்
நம்
வார்த்தைகளும் எண்ணங்களும்
கைகோர்த்துக் கொண்டன.

என்
தேடல்கள் எனக்கோர்
வேண்டும் வரம் தரும்
தேவதையைத் தந்தன.

எல்லாவற்றிலும்
தரிசாய்ப்போன மனம்
இன்று உன்னை மட்டும்
பூக்க அனுமதித்து விட்டதே!

என் ஆர்வங்கள் எல்லாம்
அணைகின்ற வேளையில்
உன் பிரசன்னம்
என்னை விழிக்கச் சொன்னது.

என் முனைகள்
மழுங்கடிக்கப்பட்ட வேளையில்
உன் சகவாசம்
அவற்றைக் கூர் தீட்டியது.

என்
இதயத்தின் ஓலங்கள்
உன் புன்னகையில்
இனிமை பெற்றன.

இதற்கு நான்
என்ன தரப்போகின்றேன்
என் இதயத்தைத் தவிர.

நரைநதி

அற உணர்வுகளும்
குற்ற உணர்வுகளுமற்ற
வதைத்தல்கள்...
சிறுபிள்ளைத்தனப் பெருமிதங்கள்...

அகங்காரங்களின்
காயப்படுத்தல்களுடனும்...
கொஞ்சமிக்க

அந்நியமாதல்களுடனும் நதி...!

நீண்ட அடைகாப்பின் பின்
வெளிப்படுத்தப்பட்டவைகள்...
பின்னும் பிரவகித்தலற்று
ஓய்ந்து போயின!
மீதமின்றித் தீர்ந்து போயின!

வேர்களைத் தின்கின்ற விழுதுகளுடன்...
புறக்கணிக்கப்பட்ட தேவதையாய்...
சுயமிழந்த மொழிகளுடன்
அடையாளமற்றுப் போனவைகள்...

வீடுகளிலிருந்து அந்நியப்பட்டன
நெருப்பு நதிகள்!

வறண்டநதி கீதமிசைப்பதில்லை!
துவண்ட கால்கள்
பொங்கிப் பிரவகிப்பதுமில்லை!
இயல்பிலா முகமூடிகளுடன்
இறுகிப்போன நதிகள்...

நினைவுகள் புதைந்த
ஒப்பனைகளற்ற
வாழ்க்கையில்...
தனது கரைகளைத்
தானே வகுத்துக் கொண்டது
நரைநதி...!

–செல்வமனோகரி

கருக்கு

மரண வாசல் தவிர்ந்த
எல்லா வழிகளும்
அடைபட்டுக்கிடக்கின்றன
உருக்குலைந்த உடல்
ஒட்டிக்கிடக்கின்றது

செருக்கழிந்த மனம்
அசைபோடுகிறது;
நியம வழி நடந்து
தேடிய தேட்டங்கள்
அர்த்தமற்றவையாய்....

விழிநீர் கடையோரம்
தேங்கிய நிலை,
துயரினைப் பறைசாற்றும்.
படுக்கை அருகே
பந்துக்களின் துருவல்கள்
கூரம்பாய் பாய்கின்றன;

"இன்னும் எத்தனை நாள்
இழுபட்டுக் கிடக்கும் சொற்கள்"
சொற்கள் காதில்
அறைகின்றன.

"சொத்தின் மேல் ஆசை
ஏங்கித் தவிக்கின்றது"
இன்னொரு அக்கினிச்
சொரியல் –
செவியில் கேட்கிறது.

பற்றொழித்துப் பல காலம்
நகர்ந்து விட்டாலும்
உற்றாரும் மற்றவரும்
எள்ளி நகையாட
இதுதான் தருணமா?
என
ஏக்கம் குமையும்.

கருக்கின் முனைகள் போல
கீறும் சொற்களுடன்
எத்தனை நாட்கள் இன்னும்...

– வே.ஐ.வரதராஜன்

தேர்தல் வரும் காலம்

தேடிவரக்காலம் வரும்
தேர்தலெனும் பேரில் வரும்
கூடியொருகூட்டம் வரும்
குதுகலத்தைக்காட்டி வரும்

ஓட்டெமக்குப் போடுமென்பர்
ஓரணிக்குள் சேருமென்பர்
வீட்டைவிட்டு வாருமென்பர்
வீட்டுரிமை கிடைப்பதற்கு

காட்டிலுள்ள மிருகப்பெயர்
கட்சிக்குத்தெரிந்து வைப்பர்
கேட்டதெல்லாம் கிடைப்பதற்கு
கீறவைப்பர் புள்ளடியை

கைகுவித்து வந்து நிற்பர்
கைவிரித்து விடுவதற்கு
பொய்குவித்துச் சொல்லிடுவர்
பொய்யுரையாய் இருப்பதற்கு

வாக்குறுதி உரைத்திடுவர்
வாய்க்குறுதி இல்லாமல்
சாக்குருவி போலவரும்
சகுணமாகப் பறந்திடுவர்

கண்திறக்க வந்திருக்கும்
கடவுளெனக் காட்சி செய்வர்
எண்ணிறந்த கதையளந்து
எம்மோடு ஒன்றிடுவார்

கால்நடையாய் வந்திடுவர்
காலைவாரி விட்டிடுவர்
பாலாடை நிறத்துடனே
பளிச்சிடுவர் வெல்வதற்கு

அச்சடித்த காகிதத்தை
அள்ளித்தந்து சென்றிடுவர்
பச்சையாகச் சொல்லிடுவர்
பார்த்தெமக்குப்போடுமென்று!

– செ.ஞானராசா

வண்ணத்துப் பூச்சிகளின் பாதை

வண்ணத்துப் பூச்சிகளின் வருகின்றன.
கண்களைத்திறந்து வைத்திருங்கள்
எங்ஙனும் ஒளிநிரம்பிய வெளிகளில்
ஒரு கிராமத்திலிருந்து
மறு கிராமமாக
வயல்கள், தோட்டங்கள், பற்றைக்காடுகள்
குளங்கள், கேணிகள், குட்டைகள்
மேலும்,
இராணுவ முகாங்கள், முன்பள்ளிகள்,
பூங்காக்கள், கோவில்கள் என
நிலையையும் நிரையையும் உற்சாகத்துடன்
குழப்பியவாறு,
அவைகள்
எல்லையற்று நீளும் தங்கள் பாதையில் வருகின்றன.
கண்ணி வெடி வயல்கள்,
உடைந்தும், சிதைந்தும் பற்றை மண்டியதுமான
முன்னம்
மனிதர்கள் வசித்த வீடுகள் மேலாலும்
அவை பறந்து வருகின்றன.
வண்ணங்கள் தான் எத்தனை?
தனிவர்ணங்கள், புள்ளிகள், கோடுகள்
சுருள்வட்டங்கள், கீற்றுக்கள்
அவை பல அழகுகள்.
சில
புற்களிலும் பூவரசுகளிலும் ஓய்வெடுத்து
மீண்டும் பறக்கின்றன.
புல்மேயும் மாடுகளின் மேல் உரசி,
பேசுகின்றன.
பெரும் வீதிக்கேறும் சில
பேரூந்துகளில் மோதி இறக்கின்றன.
இறந்தும்,
காற்றால் அழுத்திக் கண்ணாடிகளில் ஒட்டியிருக்கின்றன.
இருந்தும்,
பேரூந்தின் மேலாலும், பக்கவாட்டிலும்
பறந்து வருகின்றன.
பிறப்பின் இரகசியமே அவற்றின் பறப்புத்தான்.
கண்களைத் திறந்து வைத்திருங்கள்
வண்ணத்துப்பூச்சிகள் வந்து கொண்டிருக்கின்றன.

– குருதத்

சவாலை வெற்றிகொள்வோம்

சின்ன சின்ன கனவுகளோடு
சிகரம் தொடும் நினைவுகளோடு
சிந்தனைக்கவிகளில்
சிந்தைமிகு புரட்சிகள் பல செய்திடுவோம்
சவாலை வெற்றி கொள்வோம்...!

பகட்டுக்கு உணவளித்து
பணத்தினை பறைசாற்றும்
பார்புகழும் மேன்மக்களை அழித்து
புரட்சிகள் பல செய்திடுவோம்
சவாலை வெற்றி கொள்வோம்!

கலை இழந்து
கற்கும் கல்வி மறந்து
கலாசாரம் சீரழிந்து
கலியுகமாகும் எம்மண்ணில்
புரட்சிகள் பல செய்திடுவோம்
சவாலை வெற்றி கொள்வோம்!

இடர்கள் பல தாங்கி
இன்னல்கள் பல சுமந்து
இமயத்தின் கல்விதனை
இதயத்தில் உரமாக்கி
புரட்சிகள் பல செய்திடுவோம்
சவாலை வெற்றி கொள்வோம்!

நட்டநடு வீதியிலே
தளர்வாய் நீளும் கைகளை தட்டிக்கொடுப்போம்!
ஏக்கத்துடன் காத்திருக்கும்
ஏழையின் வாழ்வுதனை எட்டிப்பிடித்து
புரட்சிகள் பல செய்திடுவோம்
சவாலை வெற்றி கொள்வோம்!

விலைவாசி ஏற்றம்
விளைநிலங்களின் சீற்றம்
நவீனத்தின் மாற்றம்
நாகரீகத்தின் தோற்றம் – என
மனித வாழ்வு அஸ்தமிக்கும் பொழுதுகளில்
புரட்சிகள் பல செய்திடுவோம்
சவாலை வெற்றி கொள்வோம்

– வல்வை மு.ஆ.சுமன்

கவிதையெனும் நுண்கலையும் மனுஷ்ய புத்திரனின் கவிதைமொழியும்

ந.சத்தியபாலன்

"நீராலானது" தொகுப்பின் கவிதைகளை முன்வைத்து ஒரு பகிர்வு

தமிழ் கவிதையுலகில் தனது தனித்துவப்படைப்பியல்பால் நன்கறியப் பட்டவர் மனுஷ்ய புத்திரன்.

2002ஆம் ஆண்டில் இளம் படைப்பாளிகளுக்கான உயரிய தேசிய விருதான சன்ஸ்கிருதி சம்மான் வழங்கப் பட்டது.

2010, 2011 ஆகிய ஆண்டுகளில் தமிழகத்தின் பத்து செல்வாக்குமிக்க மனிதர்களில் ஒருவராகத்தேர்ந்தெடுத்தது. இவரது "அதீதத்தின் ருசி" கவிதைத் தொகுப்பு 2011ல் கனடாவின் தமிழ்த் தோட்ட விருதினைப் பெற்றது. அதே ஆண்டில் ஆனந்தவிகடன் சஞ்சிகையால் அதீதத்தின் ருசி சிறந்த கவிதைத் தொகுப்பாக தேர்ந்தெடுக்கப் பட்டது.

"என் படுக்கையறையில் யாரோ ஒளிந்திருக்கிறார்கள்" என்னும் தொகுப் பின் மூலம் பிரபலமான இவர் இதுவரை பத்துக் கவிதைத் தொகுப்புக்களையும் ஐந்து கட்டுரைத் தொகுப்புக்களையும் தந்திருக்கின்றார். எஸ்.அப்துல் ஹமீத் எனும் இயற்பெயர் கொண்ட இவர் உயிர்மை என்னும் சஞ்சிகையையும் பதிப்பகத்தையும் நடாத்தி வருகின்றார்.

எண்பதுகளில் எழுத ஆரம்பித்த மனுஷ்யபுத்திரன் கவிதை எழுதுவதில் தனக்கான ஒரு தனித்துவப்பார்வை, அணுகுமுறை, மொழியாட்சி, நுண்ணிய உணர்வு வெளிப்பாடு என்பவற்றால் கவனிப்புக்குரிய கவிஞராகவும் கவிதை படைக்கின்ற படிக்கின்ற கவிதை நேசர்கள் தவற விட்டு விடக்கூடாத பல படைப்புக் களைத் தந்தவராகவும் விளங்குகிறார்.

"நீராலானது" எனும் தொகுப்பின் கவிதைகள் மனுஷ்ய புத்திரனின் கவிதை மொழியால் எளிமையும் நெகிழ்வும் ஆழமும் மிக்க பண்புகளைக் கொண்டு சிறந்து திகழ்கின்றன.

> ஒரு கவிதையில் படைப்பாளியின் மனக்குரல் அவனது மொழியூடாக வெளிப்படுகிறது.

இந்தக்கவிதைகளின் பிரதான பாடுபொருளாக விளங்குவது "வாழ்வு" தான். எமது வாழ்வின் - எமது சகமனிதர்களின் உள் மற்றும் புற இயல்புகள் ஏற்படுத்துகின்ற நுண்ணிய தாக்கங்களையே இவர் தனது கவிதைகளில் பதிவு செய்கிறார்.

மிகவும் ஆழமானதும் நுண்ணியதும் தொலைவான செல்பரப்புக்களைத் கொண்டதுமான நுண்கலை கவிதை.

ஒரு கவிதையில் படைப்பாளியின் மனக்குரல் அவனது மொழி யூடாக வெளிப்படுகிறது. தேர்வாகும் சொற்களினூடாக வெளிப்படு வதைக்காட்டிலும் ஆழமானதும் - சில சமயங்களில் அந்தச் சொற் களின் நேரடி அர்த்தங்களைத் தாண்டியதுமாக கவிதை விளங்குகிறது.

"விறகில் தீயினன் பாவிற்படுநெய்போல்
மறை நின்றுழல் மாமணிச் சோதியான்"

என்கின்ற இறை வியாபகத்தைச் சொல்லும் பக்தி இலக்கியத் திலும் நிலவூறித்ததும்பும் விழிகளும்... எனக்கண்ணம்மா வின்

விழியழகு பாடும் பாரதியின் வரியிலும்

"ஐயோ இவன் வடிவென்பதோர்

அழியா அழகுடையான்" என்னும் இராமாயண வரிகளிலும் சொல்லப்பட்டதற்கு அப்பாலானதும் சொல்ல இயலாமை என்கிற தன்மை யுமே கவிதையின் உறைவிடமாய் விளங்குகின்றன.

காலங்காலமாய் வாழ்ந்து வரும் கவிதையின் இத்தகைய வியப்பின் உறைவுகள் ஆழ்பொருளாய் நின்று அழகு தருகின்றன.

மனுஷ்ய புத்திரனின் எளிமையான கவிதை களில் இத்தகையதும் இதற்கு அப்பாலானதுமான ஒரு பொருள் உறைதன்மை விளங்குவதைக் காணலாம். சிக்கல்களோ இறுக்கமோ அற்ற ஒரு வைப்பொழுங் கில் கட்டமைக்கப்படும். இவரது கவிதை வரிகள் தாங்கி வரும் நுட்பமானதும் செல் தொலைவு கொண்டதுமான பண்புகள் கவனித்து உணரப்படவேண்டியனவாகும்.

'அந்த இடம்' என்று ஒரு கவிதை;

"போகும் போது
உன்னுடன் கொண்டு வந்த
எல்லாவற்றையும்
எடுத்துக்கொள்கிறாய்
ஆனால்
அந்த இடம் மட்டும்
அப்படியே எஞ்சிவிடுகின்றது
நீயும் கொண்டுவராத
ஏற்கனவே இருந்துமிராத
அந்த இடம்"

'இருவர்' என்கிற அறியப்படாத பாத்திரங் களின் சந்திப்பையும் பிரிவையும் பேசும் இந்தக்கவிதை சொல்லும் செய்தி என்ன?

இந்தக்கவிதையை ஆழ்ந்து படிக்கிற போது உருவாகின்ற மனநிலை மாற்றம் தான் வாசகனிடத்தில் ஏற்படுத்தப்படும் உடனடித்தாக்கம்.

எதிர்பாராத விதத்தில் இருவருக்கிடையிலான உறவில் விரிசல் தோன்றி விடுகிறது. உறவின் அடை யாளங்களையும் அழித்துவிடும் நோக்குடன் பிரிந்து போகின்ற அந்த உறவு, தான் கொண்டுவந்த அனைத்தையும் எடுத்துக்கொள்கிறது.

ஏதோ ஒரு கணத்தில் உருவாகி - வளர்ந்து நிலைத்த சொந்தமொன்று இன்னோர் கணத்தில் உடைந்து பிரிந்து போகிறது.

கொண்டுவந்த அனைத்தையும் எடுத்துப் போனபிறகு இருவருமே எதிர்ப்பாராத 'அந்தஇடம்' எடுத்துச்செல்லப்படாத ஒன்றாக எஞ்சிவிடுகிறது. அந்த இருவர் காதலன் காதலியாக - கணவன் மனைவியாக - இரண்டு நண்பர்களாக - யாராகவேனும் இருக்கலாம். அதுவல்ல முக்கியம் உணர்வின் கொந்தளிப்புக்களில் உறவுகள் உடைந்து போய்விடுகிற போது அந்த உறவு களுக்கான ஸ்தூல சாட்சிகளான இருவர் ஒன்றா யில்லாது போய்விடலாம்.

எனினும் அவர்களிடையே தோன்றிய உறவின் "இருப்பு" நிலைத்திருந்த காலங்களில் தோன்றுகின்ற அந்த இடம் பின்பு ஒரு நிரவ முடியாத இடைவெளி யாகிப் போவதுதான் சோகம் தோன்றுவதற்கும் முடிந்து போவதற்குமான இடைப்பரப்பில் நிகழ்கின்ற "வாழ்வு" என்பது உணர்வும் உயிரும் பகிர்வும் பரஸ்பர உறவும் கொண்ட உயிர்ப்பின் கணமாக எஞ்சி நிற்கிறது என்பதே "அந்த இடம்" சொல்லும் செய்தியாகிறது.

"ஒரு பிரியத்தைச் சொல்வது அல்லது சொல்ல முடியாமல் போவது அல்லது பிரியம் என்ற ஒன்றே இல்லாத உலகத்தைப் பற்றிச்சொல்வது என்பது தான் இக்கவிதைகளின் ஆதார நீரோட்டமாக அமைந்திருக் கிறது. இது ஏற்புக்கும் மறுப்புக்குமிடையே இடையறாது வளரும் நீர்த்திரையென இசைந்து கொண்டிருக் கின்றது" என மனுஷ்ய புத்திரன் தனது முன்னுரையில் சொல்லியிருப்பதை மேற்சொன்ன கவிதை எடுத்துச் சொல்வதைக் கவனிக்கலாம்.

இவ்விதமாகத்தான் தனது மிகப்பல கவிதை களில் வாழ்வை, மனிதர்களை, இருப்பை, அதன் துயரை நிலையை மனுஷ்ய புத்திரன் பதிவு செய்கிறார்;

புற நிகழ்வொன்றினால் தாக்குறுகின்ற போது கவிஞன் வெளிப்படுத்தும் கூரிய உணர்வின் குரலாக மாறுகின்ற கவிதையொன்றில் பேசப்படும் விடயங் களுக்குப் புறம்பான பேசப்படாத ஒரு விடயம் தோற்று விக்கின்ற உணர்வு, சுரீரென்று தைக்கும் அனுபவம், ஆழ்ந்த ஒரு பாதிப்பைத் தோற்றுவித்துப் போகிறது.

'தடயம்' என்னும் ஒரு கவிதை;

"அங்கே
ஒரு பெரிய கலவரம்
அப்போதுதான் ஓய்ந்தது என்றார்கள்
காலி மைதானமெங்கும்
செருப்புகள்
சிதறிக்கிடந்தன
எனக்கு
வேறோன்றையும்
பார்க்க வேண்டியிருக்கவில்லை"

மனிதர்களிடையே தோன்றுகின்ற அசம்பாவி தங்கள் எப்படியோ மனிதர்களைத்தான் பாதிக்கின்றன. சக மனிதர்களுக்கு எந்தக்காரணத்தினாலோ விளை கின்ற கவலைக்குரிய ஒரு தாக்கத்தின் புற அடையாள மொன்றே மனிதாபிமானமுள்ள ஒரு கலைஞனை துயருளவும் வதைபடவும் செய்யவல்லது என்பதை மேற்சொன்ன தடயம் நிரூபிக்கிறது

சிதறிக்கிடந்த செருப்புக்கள் நிகழ்ந்த கலவரத் தின் தீவிரத்தை. பாதிக்கப்பட்ட மக்கள் பட்டிருக்கக்கூடிய அவஸ்தைகளை எடுத்துக் காட்டியதால் கவிஞருக்கு "வேறொன்றையும் பார்க்க வேண்டியிருக்கவில்லை"

நவீன கவிதைப்பண்புகள் எத்தனை நுணுக்க மாக ஒரு மனிதனின் உள்ளுணர்வைப் பதிவு செய்வதற்கு உதவுகின்றன என்பதற்கு அடையாளமாக இது போன்ற பல கவிதைகள் விளங்குகின்றன.

மிகப்பெரிதும் யாந்திரிகமாகிவிட்ட மனித வாழ் வின் போலித்தனங்களும் பாசாங்குகளும் பல இடங்களும் மனுஷ்ய புத்திரனை மிக ஆழமாகப் பாதிக்கின்றன.

"பாறை" என்னும் அவரது கவிதை அதற்கு சிறந்த உதாரணமாகிறது.

ஆட்களைத்தவிர்ப்பது
ஒரு கலை
அவர்களை ஊடுருவிப்பார்ப்பது
ஒரு ஆயுதம்
முகத்தைப் பார்க்காமல் பேசுவது
ஒரு தந்திரம்
தான் யாரென்றும்
பிறர் யாரென்றும்
நினைவூட்டிக் கொண்டேயிருப்பது
ஒரு போர் முறை
எப்போதும்
எல்லாவற்றையும் இகழ்ந்து
அப்படியொரு சிரிப்பு
என்ன செய்யப்போகிறாய்
ஒரு புல் பூண்டு முளைக்காத
ஒருவரையும் தலைசாய்க்க விடாத
சிற்பியொருவனுக்கும் பயன்படாத
நீ களைத்துப்போகும் போது
இறக்கி வைக்க முடியாத
இந்தப்பாறையை.

எளிமையான சொற்தேர்வுகளோடு உன்னதமான கவிதைகளைப் படைப்பவர் மனுஷ்ய புத்திரன்.

அவர் வெளிக்காட்டும் அன்பு, பிரியம், அக்கறை மென்மையான தொடுதல்கள் போன்ற ஈரமான வார்த்தைப் பிரயோகம் இவை யாவுமே நீராலானது தொகுப்பில் விரவிக்கிடக்கும் மேலான மனிதப் பண்புகளாக ஒளிர்கின்றன.

மனுஷ்ய புத்திரன் தெரிவு செய்யும் களங்களும் மனிதர்களும் இந்த வாழ்வின் மிகுந்த மேன்மைப் பண்புகளைச் சுட்டிக்காட்டி "இதைக்கவனியுங்கள்" என்று சொல்வது போல் அமைபவை.

திருட்டுக்குற்றச்சாட்டில் கைது செய்த வயோதிபனைக் கைவிலங்கிட்டு பஸ்ஸில் அழைத்து வரும் பொலீஸ்காரர் தோள்துண்டால் கைவிலங்கை மூடிக் கொள் என அந்தக்கைதியிடம் தெரிவிப்பதாகச் சொல்லும் கவிதை நெஞ்சாழத்தைக் கீறவல்லது.

"மழையோடும் பசியோடும் வந்தான்"
கடைசி வாடிக்கையாளன்
துடைக்கப்படும் மேசைகளைப் பார்த்தான்
ஒழித்துப் போடப்படும் பாத்திரங்களை
ஈரம் படிந்த தரையினை
...ஏதாவது மிஞ்சியிருக்குமா என்று
கேட்க நினைத்தான்
கேட்காமலேயே அவர்கள் புன்னகைத்தனர்
அப்போது சாத்தியப்பட்டது அது மட்டுமே..."

என நகர்கின்ற "கடைசி வாடிக்கையாளன்" என்னும் கவிதை எம்கண்முன் விரிக்கும் காட்சி ஆழ்ந்த துயரத்தின் படிமம் ஆகிறது. இவ்வாறு ஒரு புதியதும் இதம் வாய்ந்ததும் இருண்ட மூலையில் பளீரென ஒளிபாய்ச்சும் விளக்கைப் போல தனது தனது கவிதைகளைப் படைக்கிறார் கவிஞர்.கவிதை தேடும் மனசுகள் மனுஷ்ய புத்திரனை அறியாதிருப்பது ஒரு பெரிய நஷ்டம் என்றே சொல்ல வேண்டும். •

ஏது வாழ்க்கை

ஒருத்தியினைக் காதலித்து ஊரறியக் கைப்பிடித்து
ஒயிலாக வாழ்வது தான் வாழ்க்கை! – தெருச்
சொறிநாய்போல் பலதோடும் சோடிகட்டிக்கலப்பதிலே
சோபிக்க மாட்டாதே வாழ்க்கை!

கண்ணென்னும் கணைவீசி காதல் மொழி தினம் பேசி
கன்னியினை ஈர்ப்பது தான் வாழ்க்கை! – தூய
பெண்ணவளை ஏமாற்றி பிறிதொருத்தி கழுத்தினிலே
பொற்றாலி இடுவதுவா வாழ்க்கை?

நாணித்தன் தலைசாய்த்து நளினங்கள் காட்டுகின்ற
நாயகியை பற்றுவதே வாழ்க்கை! – வீடு
காணி, நிலம், தங்கநகை, கைரொக்கம் எதிர்ப்பார்த்து
கைப்பிடிக்க விரும்புவதா வாழ்க்கை?

இனமில்லை மதமில்லை இதயங்கள் இணைவதிலே
இனித்திருமே சம்சார வாழ்க்கை! – திரு
மணமென்ற சோலைக்குள் மனமொன்றிப் புகுந்திட்டால்
மகிழ்வென்றும் குறையாதே வாழ்க்கை!

வயதென்ன வரம்பென்ன வஞ்சியவள் தோதென்றால்
வாஞ்சையுடன் வரிப்பது தான் வாழ்க்கை! – தன்
அயல்கூறும் கதைகேட்டு அன்புகொண்ட மங்கையினை
அழவைத்துப்பார்ப்பதுவா வாழ்க்கை?

ஓய்வு தரும் ஊதியமும் உடலழகும் கொண்டவளை
உன்துணைவி ஆக்குவதா வாழ்க்கை? – திங்கள்
பாய்விரித்து, தாய்மையது காணுமுன்னர் கப்பலிலே
பறப்பதுவா நீ காணும் வாழ்க்கை?

ஆசையுடன் உந்தனையே அரவணைக்க வந்தவளை
அரபுமண் அனுப்புவதா வாழ்க்கை? – வரும்
காசை நீ; புகைகூதில் கண்மூக்குத் தெரியாமல்
கரைப்பதுவா நீ கொண்ட வாழ்க்கை?

வெள்ளி, சனி, ஞாயிறு றென விரும்பியவள் தனைஏய்த்து
வேடிக்கை காட்டுவதா வாழ்க்கை? – நீ
பள்ளியறை பார்க்காமல் சத்திரத்து ஆண்டியெனப்
படுப்பதுவும் எழுவதுமா வாழ்க்கை?

சாதனைகள் பல புரிந்து சரித்திரத்தைப் படைக்காமல்
சமர் செய்யும் நிலைதானா வாழ்க்கை? – எழில்
மாதவனைக் கரம்பிடிக்க வேற்றவளைத்தூது விடும்
மா, மடையன் உனக்கென்ன வாழ்க்கை?

தெருவினிலும் விளையாட்டுத்திடலினிலும் உன்பொழுதைத்
தேய்க்கின்ற நிலைதானா வாழ்க்கை? – உடல்
உறவென்னும் இனிக்கின்ற உல்லாசம் தனைக்கண்டு
உவகை பெறச்செல்; அதுவே வாழ்க்கை!

– அ.கௌரிதாசன்

கே.எஸ்.சிவகுமாரன்



கவிதை எனின் எலியட் கூறுவது எது?

கவிதை தொடர்பாக உலகெங்கிலும் பொதுவான கருத்துக்கள் அனேகமாக ஒன்றாகத்தான் இருக்கின்றன. ஆயினும் பண்பாட்டு மரபிற் கிணங்கச் சிற்சில வேறுபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன.

இங்கு எனக்குப்பிடித்த ஆங்கிலேயக் கவிஞ ரான டி.எஸ்.எலியட் (T.S.ELIOT) எழுத்தில் தந்துள்ள சில கருத்துக்களைத் தமிழ் வாகசர்கள் நலன் கருதிச் சுருக்கமாகத் தர முயல்கின்றேன்.

சென்ற நூற்றாண்டில் ஆங்கிலக்கவிதை உணர்ச்சி மயமின்றி எழுதப்படலாயிற்று. அங்கு படிமம் எனப்படும் IMAGE முக்கிய பங்கை எடுத்தது. இதனைக் கவிதைப் புரட்சி எனவும் கூறலாம்.

கவிதையை அசையும் படிமங்களாகச் சில கவிஞர்கள் கணித்தனர்.அதாவது திரைப்படங்களில் வரும் கூறாமற் கூறும் படிமங்களின் தொகுப்பே கவிதை என்றனர். படிமம் என்பது வேறொன்றுமில்லை, படிமம் என்பது இங்கே சொற்சித்திரங்கள் எனலாம்.

அக்கால ஆங்கிலக்கவிஞர்களில் இந்தப் போக்கைப் பின்பற்றியவர்களுள் மூவர் குறிப்பிடத் தக்கவர்கள்; டி.எஸ்.எலியட், டி.ஈ.ஹியூல்ம் (T.E.HULME), எஸ்ரா பவுண்ட் (EZRA POUND) என்கின்றனர் நவீன ஆங்கிலத்திறனாய்வாளர்கள்.

நிழற் படங் கள் போன்ற படிமங் களின் தொகுப்பே கவிதை என்றார்கள் அக்காலக் கவிஞர்கள். சொல்ல முடியாத அரசியல், சமூக நிகழ்வுகளின் பின்ன ணியில் கவிஞர்கள் படிமங்களைப் பிரயோகித்தனர்.

ஆங்கிலேய மரபுக்கவிதைகளினின்று வேறு பட அவர்கள் தவிர்த்தவை எவையெனில், விவரணம் (NARRATION), வருணனை (DESCRIPTION), யாப்புகளில் இயாம்பிக் பென்டா மீட்டர் (IAMBIC PENTA METRE) என்ற வகை, தனிப்பட்ட இரசனை(SELF APPRECIATION) ஆகியனவாம். இவற்றிற்குப் பதிலாக அவர்கள் பயன்படுத்தியவை; கட்டற்ற பாடல் முறை (FREE VERSE), காட்சிகள், உடைந்த படிமங்கள் (FRAGMENTS), முழுமையான படிமங்கள் (IMAGES), மேற்கோள்கள் (Quotations), சுய விமர்சனம் (Self exitical).

டி.எஸ்.எலியட்டின் கவிதைகளில் காணப்படும் பொதுவான கவிதைக்கூறுகள் எவையெனப்பார்த்தால்:

நவீனத்துவப் பிரதிமைகள், மரபொழுங்கு உடைந்தமை, யதார்த்தத்தின் உடைந்த கூறுகள், மரபிலக்கியங்களில் பெறப்பட்ட மேற்கோள்கள், ஒன்றுக்கொன்று முரணான பண்புகளை இணைக்கும் முறை (PARADOXICAL), சுய கண்டனம், சொந்த வாழ்க்கையின் பிரதிபலிப்புக்கள் எனலாம்.

குறிப்பாக எலியட்டின் கவிதைகளில், கவிதை நீண்ட தொடராகவே இருக்கும். பந்தி பந்தியாக இருப்பது குறைவு. நிழற்படங்கள் போன்று அவரது கவிதைகள் அமையும். இன்னும் சொல்லப்போனால் உடன் நிகழ் கால ஜனரஞ்சக இசையில் பழையதையும், புதியதையும் புகுத்துமாற்போன்று (Remix) அவர் கவிதை காணப்படும். இன்னொரு பண்பு அவர் உளவியலாளர் சிக்மண்ட் ப்ரொய்ட் (SIGMUND FREUD) கோட்பாடுகள் சிலவற்றி னால் பாதிக்கப்பட்டவர் எனவும் கூறலாம்.

இக்கட்டுரையின் மையத்தில் நின்று விலகாமல் இருக்க எலியட்டின் வாழ்க்கைக் குறிப்புக்களை நான் தவிர்க்கின்றேன். அவர் வாழ்ந்த காலம் *(1888 – 1965)*

இங்கு இன்னொன்றையும் தெளிவாக்கிய பின் மேலே செல்வோம். குறியீட்டுக்கவிதை எனப்படும் (SYMBOLIST POETRY) போக்கில் எழுதிய பிரெஞ்சுக் கவிஞர்களின் வெல்வாக்குக்கமைய எலியட் படிமங் களை பிரயோகித்தார் எனலாம். அவருடைய கவிதைகள் சாதாரண கவிஞர்களுக்கன்றி, காத்திரமான வாசர்களுக் காக எழுதப்பட்டதனால், எலியட்டின் கவிதைகளில் சில இடங்கள் கருத்து மயக்கம் தருவனவாய் அமைவதுண்டு.

மொழியை அதன் இருப்பிடத்திலிருந்து அகற்றி வேற்றிடத்திற்கு மாற்ற வேண்டுமென்று எலியட் விரும்பினார். இதனை 'dislocate language' என்றார். அத்துடன் பழைய புதிய எழுத்துக்களினின்றும் எடுத்துக் காட்டுக்கள் தரப்பட வேண்டுமென்றும் குறிப்பிட்டார். நவீன வாழ்க்கை முறையில் காணப்படும் சிக்கலான நிகழ்ச்சி களைச்சித்திரிப்பதற்கும் அவற்றிற்கு அர்த்தம் காண்ப தற்கும் நேரடியான மொழிப்பிரயோகம் பயன்படாது என்றும் கருதினார். மறைமுகமாகவும், நேரடியற்ற முறை யிலும் செப்பவேண்டும் என்பது எலியட்டின் கருத்தாக இருந்தது. கவிதை சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் அதேவேளையில், பல்வேறு அர்த்தங்களையும், வியாக் கியானங்களையும் தரும் விதத்தில் அமைய வேண்டு மென்பது அவரது கருத்தில் ஒன்றாகும்.

புனல்

வானப் பாத்திரத்தில்
சொட்டுத் தண்ணீருமில்லை!
புனல் தேடிப் போயின
வெண் பஞ்சு மேகங்கள்
புனலெங்கே! தேடுவது?
பூமிக்குத் தண்ணீர்
புகட்டுவ தெப்படி?
வாய்பிளந்து கிடக்கும்
வையகத்திற்கு
நீர் வார்க்க நீரில்லை!

வெண்பஞ்சு மேகங்கள்
விரைந்தன புனல்தேடி

வாரிவழங்கும்
வள்ளண்மை கொண்டது
வானம்:
வானப் பாத்திரம்
வடிந்து கொண்டிருக்கும்போது
பூமி ஏனம் நிறைத்து
எக்களித்தோடும்

ஐயகோ!
அப்புனல் எங்கே?
எப்புனல்
அப்புனற் கீடாகும்?
அப்புனல் எங்கே?

சோனாவாரி மழை
சொரியாது நின்று
போனால் விளையுமா?
புவி மீது பயிர்கள்?
பேடும் அதன் ஆணும்
பிணைந்தின்பங் காணும்
போது பொழியுஞ் சுக்கிலப்
புனல் இல்லையேல்
மனிதனின் ஜனனமில்லை!

வான்புனல் இல்லாது
பயிர் வளர்ந்ததில்லை!
ஆண் புனல் இல்லாது
உயிர் பிறந்ததில்லை!

கண்ணீரும் நீர்தான்
கடல் நீரும் நீர்தான்
ஆனால்
விண்ணீர் மட்டுமே
விளைச்சலுக்குரிய நீர்
அந்நீர் போலுமே
இவ்விரு நீர்களும்!

வானப் பரப்பிலிருந்து
வருகின்ற நீரின்றி
நிலமுழுது ஆங்கதனில்
நெல்விதைத்த காராளர்
தவமிருந்து கழனிக்குத்
தண்ணீர் வேட்டல்

உயிர் அனைத்தும்
தண்ணீரின் உற்பத்தி
மனிதனும்
அந்நீரின் உற்பத்தி
அதனாற்தான் தளம்புகிறான்!

– ஏ.எம்.எம்.அலி

ஊதாநிறமாலை

அந்தி மாலை நேரம்
நகரமும்
நகரின் கட்டடங்களும்
மரம் செடி கொடிகளும்
மஞ்கள் பூசிக்கொண்டிருந்தன.

அப்போது
வான வெளியிலே
வண்ணப்பறவையொன்று
தன் குஞ்சுகளுக்காக
இரையுடன் பறக்க...

கதறிக்கொண்டு அலையும்
தாய்ப்பசுவொன்று
கன்றை நாடி ஓடிச்செல்ல..

காற்றுக்கூட
கால் முளைத்து
வீதியெங்கும் அலைந்து திரிய...

எந்நாளும் போல... அன்றும்
ஏக்கங்கள்... எதிர்பார்ப்புக்கள்
நம்பிக்கைகள்...ஏமாற்றங்கள்
உறவுகள்....பிரிவுகள்
சண்டைகள்..... சமாதானங்கள்
சந்தோஷங்கள்... சோகங்கள்
சந்திப்புகள்
சஞ்சலங்கள்
கனவுகள்
முத்தங்கள்...என
நகர வீதிகளில்
மனிதர்கள் தறி கெட்டு அலைய
அவர்களுள் ஒருவன்
தனது அன்றாட வேதனத்தை
நண்பர்களுடன் சேர்ந்து
குடித்துத்தீர்த்துவிட்டு
நடந்து செல்லும் போது
அவனது கால்
கல்லொன்றில் பட்டு இடற
அங்கே... கடையொன்றின்
கண்ணாடிப்பெட்டியொன்றுக்குள்
தனது சின்ன மகள் கேட்ட
சீனிமிட்டாயைக் கண்டதும்
அந்த மஞ்சள் நிறமாலை
தன்னை
ஊதா நிறமாக்கிக் கொண்டது.

– உ.நிசார்

நதிக்கரை நாகரிகம்

முற்றத்து மணலில்
மணல் வீடு கட்டியோ
தேங்காய் சிரட்டையில்
காக்காய் முட்டை போட்டோ
விளையாட அனுமதித்த
வெள்ளைச்சாமியின் மகன் தான்
மணல் லாரி ஓட்டுகின்றான்
இராமசாமியின் மகன் தான்
நதி மணலை தூர் வாரி
இமயமாய் உயர்த்தி
மணல் சாலை நடத்துகின்றான்.

உணவுக்காய் நூற்றாண்டுகளாய்
அலைந்து கொண்டே இருந்த
ஆதி மனிதனை
தன்மடியில் ஆற வைத்து
உணவளித்தது நதி

நாம் இழந்திருப்பது
நதி சுமந்து வந்த
கனிமங்களையும்
படைகளையும்
மட்டுமல்ல,
நம் மூதாதையர்களின்
புனிதங்களையும்
கொடைகளையும் தான்.

நமக்கு நதி கற்றுத்தந்த
நாகரிகத்தை
நதிக்கரையை புறக்கணிக்க
நம் பிள்ளைக்கு
கற்றுத்தந்து,
அநாகரிகம் செய்திருக்கிறோம்
நதிக்கும் நம்பிள்ளைக்கும்.

வறண்டு போனது
நதி மட்டுமல்ல
நம் மதியும் தான்
அது போகட்டும்!

சிரட்டை மணல்
விளையாடிய
நாமே இப்படியென்றால்,
பிளாஸ்ரிக்கிலான
பக்கோவும், டிப்பரும்
கொண்டலையும்
இன்றைய நாகரிக பிஞ்சுகள்
எதைத்தோண்டி
எங்கே அனுப்பப்போகிறார்களோ
யார் அறிவார்கள்?

— சாகித்யன்

கோடையின் கோலம்

கோடையது கோலங்கொண்டு
கோபமாய் சுமந்து வெப்பக்
கூடைதனைக் கொட்டிவைத்து
கூத்தாடும் எரிச்சலுக்குள்
நடைதனைக் காட்டுகின்ற
நாடகத்தை அரங்கேற்றி!
விடையாகி நிற்குமிந்த
வேதனையோ விழியைச்சுடும்!

பட்டப்பகல் பரிதியேறிப்
பார்க்கும் இடங்களெல்லாம்
சுட்டெரிக்கும் சுடர்முகத்தை
சூன்யமாய் ஆக்கி வைத்து
கட்டவிழ்த்து ஆடி நிற்கும்
கரகாட்டக் கூத்துக்குள்ளே
தொட்டுமனம் வேகவைக்கும்
தொடர்வினையின் காலமாகும்!

வழிந்தோடும் வியர்வை நீரும்
வரமாகி வதையுமாகி
அழுக்குதனை மேனி ஏற்றி
அணி உடையை
அசுத்தமாக்கும்
குளித்துடல் கழுவிக்கொள்ள
குளங்கிணற்றில் நீரும் வற்றும்
விழித்திடும் வெப்பக்கண்ணோ
விடியலின் விலாசம்
சொல்லும்!

பள்ளியது செல்லும் பிள்ளை
பாதையில் போகும் முதியோர்
தள்ளியே கரத்தை வண்டி
தன் வயிறு கழுவும் கூலி
உள்ளங்கள் நொந்து நின்று
உழலுகின்ற உபாதைக்குள்ளே
சுள்ளென்று சுடும் பகவான்
சூட்சுமத்தைக் காட்டி நிற்பான்!

கோடையின் கண்திறப்பால்
கொப்பளிக்கும் அனல் தீயில்
வாடியே அழியும் கதிரும்
வயல்களில் நாசமாகும்
நாடியேவளர்ந்து நின்ற
நற்பயிர்கள் நஷ்டமாகும்
வீடு வந்து சேரா வண்ணம்
விளைச்சல்கள்
கருகிப்போகும்!

ஏஸியில் வாழும் தலைகளுக்கு
இதுவொன்றும் பெரிதல்ல
காசு பணமுள்ளோர்க்கு
கடுங்கோடை
பொருட்டுமல்ல
தூசு படா முகங்களுக்கு
துன்பங்கள் ஒன்றுமில்லை
வாசில்லா மக்களுக்கே
வந்தவிதி துன்பமாகும்!

— பாவரசு பதியத்தளாவ பாறூக்

சி.வி யோடு

குன்றமெல்லாம்
நெடுமரங்கள்
கோரமென
நின்றக்காலம்
கும் இருட்டுக்
காட்டுக்குள்
நெஞ்சுரமாய்
கால்பதித்து
தம் உழைப்பை
தந்தவர்கள் – தாம்
கால்பதித்த
இந்(த) நாட்டை
தொழிற்துறையில்
தரம் உயர்த்தி பெரும்
துயரமிகு வாழ்வுகண்டர்.

துரைத்தனங்கள்
காட்டிவந்த துச்சர்களால்
சுரண்டலுக்கே
ஆளாகி – வரண்ட
நிலமாய் நின்றார்.
உயரவிடும் பட்டம்போல்
சுரண்டியவர் வாழ
சுரண்டப்பட்டோர்
வறுமைக்குள்ளே சுருண்டு
தினம்வாட

துயர்கொண்ட
தொடர்கதையாய்
நீண்டதன்று – எதுவும்
துயரற்ற சிறுகதையாய்
முடியவில்லை.

பத்தாத தினக்கூலி
இவர் பெற்ற போதும்
வற்றாத உடல் பெருத்தோர்
இவர் உழைப்பை தினம்
வரண்டுவதில்
சுரண்டுவதில் திரண்டு நின்றர்

உடல் வருத்தி
தினம் உழைக்கும்
கூட்டத்தாரின்
உழைப்பை மட்டும்
ஊளை நரி
சுரண்டவில்லை – அந்தோ...
முற்றாத கதிர் ஒடித்து
சிதைப்பது போல்
முகை வெடிக்குமுன்
சிறு மொட்டைக்
குலைப்பது போல்
சிறு சதைப் பிடித்த
இளசுகளை
சண்டாளர் கூட்டம்
சதை வெறியில் சீரழித்து
வதைத்ததுண்டு

ஏன் என்று
கேட்க ஓர் நாதியில்லை
எதிர்த்தாலோ
அடுத்த நாள் உயிருமில்லை

மலை சூழ்ந்த
கூட்டுக்குள்ளே
கைதிகளாய்
வதைப்படும்
விலங்குகளாய்
ஆக்கப்பட்டர்
வெங்கொடுமை
முடிவுக்கு
வந்திடாதோ பெரும்
சங்கடங்கள்
தீரவழி
தெரிந்திடாதோ என
வீட்டுக்குள்ளே
குமுறியவர் – மலை
காட்டுக்குள்ளே
இரும்மினாலும் குற்றமென்று
தெண்டம் கட்டும்
தண்டனைக்கு தள்ளப்பட்டர்

விடியுமுன்
தொழிலுக்கு எழுந்தவர்கள்
வெகுநாளாய் விடிவுக்கு
காத்திருந்தார் – தாம்
மடிந்தாலும்
அடுத்துவரும் தலைமுறைக்கு
படிப்புதான்
மகுடமென கனவுகண்டர்

விழிப்புணர்வும்
தொலைநோக்கும்
உள்மனதில்
இருந்தும்
ஊளையிடும்
நரிகள் முன்னே
ஊமையராய் நின்றர்

இருள் அகற்றும் ஜோதியென
இவர்கள் முன்னே
எரித்தனலோடு எழுந்தவரும்
இல்லாதில்லை

அத்தீயின்
ஒருபொறிதான்
சி.வி யானார் – இத்
தீவைத்தாண்டி
உள்ளவரும்
உள்ளப்படி
அறியும் வண்ணம்
கொடுமைப்படும் தம்மக்கள்
குறையனைத்தும் – எழுது
கோல் எடுத்து
அவர் வடித்து
வெளியில் விட்டார்

வதைப்பட்ட
தம்மக்கள்
துயர் துடைக்க
மக்கள் அவையிலும்
சிலகாலம்
வீற்றிருந்தார்
அவரோடு
சிலபேரும் இணைந்திருந்தர்

மலைநாட்டில்
தம்மக்கள் படும்துயரை
தீர்க்கவழி என்னவென்று
குரல் கொடுத்தார் – ஆனால்
பொல்லாத குணம் கொண்ட
அரசு அன்று செல்லாது
மலைநாட்டான்
வாக்கு என்று சொன்னதோடு
வாக்குரிமை
பறித்ததன்று சொந்தமில்லை

இவர்க்கிந்த
நாடு என்று கூச்சலிட
கும்பலையும்
ஏவியது
கூடற்ற
பறவையென ஆக்கியது

உழைப்பை மட்டும்
உறிஞ்சி தினம்
சுரண்டுமந்த
உழைப்பாளர்
உணர்வற்ற
அரசுக்கெதிராய் சி.வி யும்
அவரோடிணைந்தோரும்
எடுத்த முயற்சியும்
தொடுத்த போராட்டமும்
வரலாற்றுப்பதிவு தான்
என்றுமழியாத
கல்வெட்டுதான்
மலையில்
சி.வி யோடு
ஒருபாகம்
முடிந்ததானால்
சிறப்பாக
மறுவாழ்வும் பிறக்கவில்லை

அடுத்தடுத்து
தலையெடுத்த
தலைமைகளும் – ஒரே
குட்டையிலே
விழுந்த பல
மட்டையானார் – அரசு
சொன்னதற்கு
தலையாட்டும்
பொம்மையானர்
இதைக்கண்டு தான்
இயற்கைகூட சீறியதோ
தூ....! வென்று
மண்ணிறைத்து
தூற்றியதோ

காலத்தோடு
சி.வி யன்று
சொன்னதுபோல்

"ஆழப்புதைந்த
தேயிலைச் செடியின்
அடியில் புதைந்த
அப்பனின் சிதைமேல்..."
மேலும் மேலும்
உழைப்போர் உடல்கள்
உயிரோடுமிங்கே
புதையுண்டு
புதையுண்டே போவது
இருந்தும் – நாளை
கூர்முனையோடு
ஒரு கூட்டம்
செம்மேடாய் வளரும்

நலிவுற்ற தோழர்க்கு
திசையொன்றை காட்டும்

பொல்லாத கூட்டத்தை
இல்லாது ஒழிக்கும்

விடிவுக்கு போராட
துணிவோடு நிற்கும்.

– மல்லிகை சி.குமார் –

என்னிடம் இல்லாத் திறப்புகள்

காயங்களிடை
கரைகிறது
காதல்
கரைகிற காதலே
செமித்து மருந்தாகி
இனிக்கிறது

சொற்களில்
தடக்கி விழுகிறது
வாழ்வு!
சொற்களால்
எழுகிறது வாழ்வு
கோயிலாய்!

தன்முனைப்புற்றுத்
தருக்குகிறது
மனம்!
முனையுடைந்து
மூர்க்கங் கரைந்து
குழைகிறது மனசு!

விழுங்கும்
விருப்பங்கள்
புதைகிறது
தொண்டையில்!
தொண்டை வீங்கி
சொற்கள்
உடைகின்றன
கற்கண்டாய்!

நோயில்
வீழ்ந்ததாய்
நொருங்கிக் கூனுகின்றேன்
காற்றில்
பறப்பதாய்
கனவில் செருக்குகிறேன்

கால்களை முறிப்பதுவே
கைத்தடியும் தருகிறது
வாலினை நறுக்குவதே
வாலினையும் ஆட்டுது

மனசின்
கதவுத் திறப்புகள்
மடியினில் இல்லை
பூட்டுவதும் நானில்லை
திறப்பதுவும் நானில்லை
உள்ளிருப்பதுவே நான்!



அவள் வாழ்வு போல் முழிசும் கவிதை

அவளிடம் வார்த்தைகள்
இருக்கவில்லை
வரண்ட புன்னகைதான்
இருந்தது

ஏமாற்றங்களின்
கசப்புகளை
அவள்
கண்கள் நிரப்பியிருந்தன

கலைந்த கூந்தலைவிட
திக்கற்றிருந்தது அவள்
வாழ்க்கை

கனவுகளின் மரங்களில்
தாவித் தாவி ஏறியவள்
கிறிஸ்மரம் என்பதை உணர்ந்து
வழுக்கிய துயரங்களுடன்
வார்த்தைகள் தொலைந்து
நின்றிருந்தாள்

அவள் கனவுகளுக்கு
எல்லாப் பக்கமும் கண்
இருந்திருக்கவேண்டும்
ஒரு பாதையிலும்
போகமுடியாது
அப்படியே நின்றிருந்தாள்
குளுக்கோமாக் கண்களாய்
அவள் வாழ்வு
முழிசிக் கொண்டிருந்தது

ரோஜாப் பூக்களை இழந்த
முள் அவள்!
அந்த முள்ளில் இரண்டு
பனித்துளிகளாய்
அவள்
பிள்ளைகள்!
உலகம் அறியாத
உற்சாகம்
அவர்களுடையது

முள்ளில்
அவர்களின்
வாழ்வு
கொழுவியிருந்தது
குருதி
ஒழுகுவது
அவர்களுக்கு
வியர்வை
போலிருந்தது

முள்ளைப் பலரும்
கீறுகிறார்கள்
அவள் ஒடிந்து
கொண்டிருந்தாள்

பனித்துளிகளில்
அவள்
கண்ணீர்த்துளிகள் விழ
அந்த அத்வைத்தத்தில்
என்ன ஆகும் என்று
என் கவிதை
அவளைப் போல்
முழிசுகிறது!

குடிசையின் ஓலையில் எழுதிய கவிதை

எனது
ஓலைக்குடிசையின்
ஓலைகளில்
எழுதியிருந்தது தலைவிதி.

மழைகளில் அழியாத
எழுத்துக்கள்
நீரில் பிரதியெடுத்து
தலைக்கு அனுப்பின
செய்திகளை!

நீரில் பிரதியாகியிருந்த
எழுத்துக்களில்
துள்ளினர்
எனது பிள்ளைகள்!

நீர்த்துளிகள் துள்ளிவிட
குழந்தைகளும் துள்ளிவிட
உடைந்துகொண்டிருக்கின்றன
கனவுத் துளிகள்!

வானமும் அழுகிறது
என் நிலை அறிந்து என்று
சொல்லற்க!
வானத்தால்
நான் அழுகின்றேன்!

வானம் வீழ்ந்துவிட
நான் மட்டும் அழுந்திடனும்!

வானம் பிய்த்து
என் பிள்ளைகள் தலை
வெளித் தெரியட்டும்!

கண்கள் நட்சத்திரமாக
கனவு வானத்தில்
குழந்தைகள் தவழட்டும்

ஓலைக்குடிசையே
என் மீது விழுந்துவிடு!
இல்லை என் வயிறுபோல்
எரிந்துவிடு!

பிள்ளைகளின்
தலைவிதி
புதிய கூரையில்
எழுதப்படட்டும்!

த.அஜந்தகுமார்

தாயே எனது ஆசான்

என்னுயிர் இருக்கும் வரைக்கும் தாயே
நிச்சயமாக உன் நினைவே இருக்கும்
அன்னினைவினைக் கொண்டே உலகினில்
என் வாழ்க்கை நிகழ்வுகளும் இருக்கும் தாயே

இருளில் தவழ்ந்து கிடந்த பூமாதேவியை
வெளிச்சமூட்டிடும் சூரியசந்திரனாய்
மருளில் கிடந்த எனது கல்வியறிவுதனை
வெளிக்கொணர்ந்தவள் நீதானே தாயே!

தள்ளாடியவனுக்குத் தோள் கொடுத்துதவியவன் போல்
என் வாழ்வு சிறக்க தோள் கொடுத்தாயே அன்று
உள்ளமெல்லாம் மகிழ்வுற கஷ்டநிலையிலும்
என் கல்விக்கு உறுதுணையாய் இருந்தாயே நீ

வெற்றுக்காகிதம் போன்றுதானே நானிருந்தேன்
அப்படி வெறுமையாய் இருந்தென்னை
கற்றுத்திகழ்ந்தவர்களில் ஒருவனாக வடிவமைத்து
பொக்கிஷமாய்த் திகழ வைத்தவளும் நீதானே

வழித்துணையாக மட்டுமா எனக்கு நீயிருந்தாய்
அந்த வழியே நீயெனக் கொண்டேனே நானும்
மொழிவளத்தில் உச்சிக்கு நான் போய் நின்றாலும்
எவரையும் விட உன்னைத்தானே மெச்சிடுவேன் தாயே!

கண்ணிமை கூட ஒரு கணப்பொழுதில் தாயே
கண்ணிமைக்க மறந்து போகலாம்
மண்ணகத்தில் மலர்ந்த வாழ்வு வாழச் செய்தவென்னை
என்னிதயம் ஒரு போதும் மறக்கவே மறக்காதம்மா

அன்னையே உன் ஆசி பெற்று உன்னடி பணிந்து
வாழ்வுதனை செயற்படுத்திட்டாலெனக்கு
இன்னல்கள் எதுவும் அணுகிடாது தாயே
இருமையும் பேறுமே கண்டிடுவேனே நானும்

துன்பம்தான் தொடர்ந்திட்ட போதும் உன்னையே நானும்
நினைத்திட்டு துணிவுடன் எதிர்கொள்வேனே
இன்பமும் துன்பமும் எல்லோருக்கும் ஏற்படுவதொன்றே
படைத்தவன் வகுத்திட்ட நியதியம்மா அது

இத்தரணியில் நீயென்னை பிறக்கச் செய்த நோக்கமும்
தாய் தந்தையரைப் பேணத்தானே அம்மா
பத்தரை மாற்றாய் வாழவே பயிற்றிட்டாயே
என்றென்றும் கண்ணியம் சேர்த்திடுவேனம்மா நானும்

எத்தனை இழப்புகள் எனக்கு வந்தாலும்
நீயே எனது சொத்தாகப் பொருந்திடுவேனம்மா
இத்தனை எனது நல்வாழ்வுக்கும் ஆசானான
உன்னைத்தானே மார்தட்டிச் சொல்லிடுவேன் தாயே!

– எம்.எம்.அலி அக்பர் –கிண்ணியா



ஆறப்பொறுத்தல்

என்னவென்று சொல்வேனடி தோழி அவன்
என்னருகே வந்து நின்ற சேதி
கள்ளத்தனம் கொண்ட காளை என்
உள்ளத்தை கொள்ளை கொண்ட வேளை

அன்னம் நிகர் ஒத்த என்னை அவன்
அருகே வந்து தொட்ட நாளை
என்னம் நான் மறக்கவில்லை அவர்
இனிய அன்புத் தொல்லை

கள்ள மடல் கொண்டு தருவான் அவன்
கணப்பொழுதும் இங்கு தரியான்
அள்ள குறையா அன்பு உடையான் அவன்
அனைவர்க்கும் பொது சொத்தாவான்

மடல் விரித்து நான் படித்தவேளை எந்தன்
மைவிழியில் ஆள் நின்ற காளை
கடல் பரப்பில் நாமிருந்த நாளை – ஒரு
கனவு போல் நான் மறப்பனோ தோழி

பாக்கு மரத்தோப்பிலே ஒருநாள் எந்தன்
பருவத்தை விலையாக கேட்டான்
ஆக்குமட்டும் பொறுப்பீர் அன்பே நாம்
ஆவணில் கைப்பிடித்து ஆடிவிளையாடலாமே

நீக்கமற அன்பு இருந்தால் எந்தன்
நினைவாக சில நாள் பொறுப்பீர்
ஆக்கப் பொறுத்த நாங்கள்
ஆறப் பொறுத்தால் என்ன?

– சீ.என். துரைராஜா

ஒரு முட்கூர்

எனக்குள் எங்கோ உள்ளே மிக உள்ளே
வெளிக்கிளம்ப துடிக்கும் வேதனை விரிகிறது
மனதுள் ஒரு முட்கூரோ?
முள் தைத்த நாள் எதுவோ?
நினைவிற்கு வரவில்லை.
நீளச் சிந்தித்தும் அதுவென்
நினைவிற்குகுள் வரமறுத்து நிற்கிறது
"நெடுக வலி என்கின்றாய்
உள்ளே இருப்பதை உப்படியே விடுவதா?
உடனடியாய் அகற்றப்பார்" என்றால்
கிள்ளி எறிந்திடவோ
கிண்டி எடுத்திடவோ
செய்த முயற்சியெல்லாம்
வீணாகிப்போயிற்று.
அன்றே எடுக்காது அலட்சியமாய் விட்ட பயன்!
"ஒன்று மில்லை. சும்மா உவள் சொல்வாள்"
என்ற பேச்சும் குத்துகிறதென்காதை.
"என்றோ நடந்ததது
கனவென்று கருதிவிடு"
கட்டியணைத்து
கண்துடைப்பார் கதையுமிது.
அதுவோ
உள்ளே கிடந்து உறுத்தி உறுத்தி...
எவர் எது சொன்னாலும் கேட்டுத்தெளிந்து
மெல்ல உள்நுழைந்து மெதுமெதுவாய்த்தேடி
இருக்குமிடமறிந்து எவ்வித நோவுமின்றி
அதனை
கெல்லி எடுத்தெறிய கையொன்றைத் தேடுகின்றேன்.

– யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

வஞ்சகரின் வையகமே

வாழ்ந்து முடிந்தாச்சி வஞ்சகரின் உலகமையா
ஆய்ந்த அறிவுரைகள் ஆயிரமாய் உள்ளதாங்கே
வீழ்ந்து கிடக்கையிலே வீண்பழிகள் பேசுமிந்த
தாழ்ந்த குணமுடையோர் தரணியிலே தாராளம்!

உச்சிகுளிர உயிர்கொடுத்துப் பேசுமவர்
பச்சைப்குழந்தையென பரிதாபம் கொள்ளாதே
நச்சு விஷம் ஏற்றி, நாவடக்கம் இல்லாது
எச்சிலை உமிழ்கின்ற இழிநிலையில் பலருண்டு

கண்ணெதிரே கண்டவுடன் கைகூப்பிச்சிரிப்பவர்கள்
கயமைபிடித்தவரும் கனிமொழியில் பேசிடுவார்,
விண்ணதிர வேதாந்தம் வீதியிலே விளம்புகின்ற
விஷ ஜந்து போன்றவர்கள் வினைபலவும் செய்திடுவர்

விழுந்து கிடந்த வீழ்ச்சியினைக்கண்டிடினும்
எழுந்து நடப்பதற்கு எவருமங்கே துணையாகார்
அழிந்து சிதைந்து ஆதாரம் இல்லாதாய்
ஒழிந்து போவதனை ஓங்கீயே உரைத்திடுவார்

வாலைப்பிடித்து வாழ்வுநிலை கொண்டுயர்ந்தோர்
கோலைப்பிடித்தவர்கள் கொள்கையினைத் தாமிழந்து
பாலைவனத்தில் பயணமது போவதுபோல்
காலைப்பிடித்தாங்கே காரியங்கள் சாதிப்பார்!

ஆற்றுநீர் போன்று அள்ளிக்கொடுத்தவர்கள்
தோற்றுத்தொலை தூரம் துவண்டு போய் இருக்கையிலே
ஆற்றக்கரையினிலே அறுந்தமிழ்ந்த செடிகொடிபோல்
சேற்றில் புதையுண்டு சீரழியச் செய்வார்கள்

ஈருலகம் போற்றும் இறைதூதின் நபிமாரை
இகழுகின்ற ஈனர்களின் இல்லமடா இவ்வுலகம்
பகலிரவு பாராது பணிசெய்து வந்துடினும்
பரிகாசம் செய்யுமொரு பகட்டான கூட்டமுண்டு

உழைப்பால் உயர்ந்தோர்கள் உத்தமர்கள் பலருண்டு
பிழைப்பைக் குறைகாணும் பித்தர்களும் சிலருண்டு
உதட்டால் உதிர்க்கின்ற உண்மைகள் அத்தனையும்
இருட்டில் தொலைந்திட்ட ஈயாதார் பலருண்டு

சாதிமத பேதமுடன் சமத்துவத்தை அழித்தவர்கள்
நீதிநெறி பேசி நிலைகுலைந்து நிற்பவர்கள்
பாதிஅறிவுடையோர் பார்புகழ வேண்டுமென
மேதியினில் போதனைகள் மெய்சிலிர்க்கச் செய்திடுவார்.

வாய்விட்டுச்சொல்லிவிட வெட்கமாய் இருக்குதையா
வஞ்சகரின் வசை கேட்டும் வாஞ்சையுடன் வாழ்ந்ததுண்டு
பாய்போட்டுப்படுத்தவர்கள் பயங்கொள்ளார் பாரினிலே
பாசாங்கு வாழ்த்துரையில் பரிதாபம் காட்டிடுவார்!

– ஏ.சீ.எம்.இப்றாஹீம்

இடப்பெயர்வுக் கவிதை வடபுலத்து முஸ்லிம்களை முன்வைத்து...

1

காலனிய, பின்-காலனிய காலகட்டத்தில் கீழைத்தேயச் சமூகத்தினர் அதிக அளவில் இடம் பெயர்ந்தவர்களாகவும் புலம்பெயர்ந்தவர்களாகவும் இருக்கிறார்கள். காலனிய, பின்- காலனிய ஆய்வு களில் இடப்பெயர்வும், புலம்பெயர்வும் இரண்டுமே இடப்பெயர்வாகவே நோக்கப்படுவதுடன் அவ்விரு பிரிவினரை நிலம் இழந்தவர்களாகவும், அவர் தம் கலை இலக்கியங்கள் நிலம் இழந்தவர்களின் குரல்களாகவும் நோக்கப்படுகிறது.



ஆனால் நமது சூழலில், இடப்பெயர்வு என்பது, ஓர் ஆட்சி அதிகாரம் நிலவுகின்ற ஒரு நிலப்பகுதிகளிலிருந்து அதே ஆட்சி அதிகாரம் நிலகின்ற இன்னுமொரு நிலப்பகுதி யினை வாழ்விடமாய்க் கொண்டு செல்வது.

புலம்பெயர்வு என்பது ஓர் ஆட்சி அதிகாரம் கொண்ட ஒரு பகுதியிலிருந்து இன்னுமொரு ஆட்சி அதிகாரம் கொண்ட நிலப்பகுதியை வாழ்விடமாய்க் கொண்டு செல்வது. என்ப தாகவே பார்க்கப்படுகிறது

இக்குறிப்பில் நமது கவனம் இடப்பெயர்வு சார்ந்ததாக இருப்பதனால் காலனிய மற்றும் பின்-காலனிய காலகட்ட வரையிலான, ஒரே ஆட்சி அதிகாரத்தை கொண்டிருந்த நிலப்பகுதிகளிலிருந்து அதே ஆட்சி அதிகாரம் கொண்டிருந்த இன்னுமொரு நிலப்பகுதிக்கான ஈழத்துடன் சம்பந்தப்பட்ட, ஈழத்தைச் சேர்ந்த தமிழ் பேசும் மக்களின் இடப்பெயர்வுகள் எவை என பார்தோமானால்,

1) 1820களில் ஒரே ஆட்சி அதிகாரத்தின் கீழ் இருந்த தமிழகம் என்ற நிலப்பகுதியிலிருந்து வசதி நிறைந்த வாழ்வுக்கான வாய்ப்புக்கள் பெற்றுத் தருகிறோம் என்றெல்லாம் ஆசை வார்த்தை காட்டி இலங்கை என்ற நிலப்பகுதிக்கு அழைத்துக் கொண்டு வரப்பட்ட, இன்றைய மலையக மக்களின் முதல் தலைதுறையினரின் இடப்பெயர்வு.

2)1948 ஆம் ஆண்டு தொடக்கம் 1978 பின்னாலான காலம் வரை பறிக்கப்பட்ட பிரஜா உரிமை காணி சுகீகரிப்பு போன்றவை காரணமாக ஏற்பட்ட நெருக்கடிகள், வேலை வாய்ப்பு பறிப்பு என்பதன் காரணமாக வட-கிழக்கு பகுதிகளுக்கு மலைய மக்கள் மேற்கொண்ட இடப் பெயர்வு.

3)80களுக்கு பின்னான வடக்கு கிழக்கு பிரதேசத்திலிருந்து தம்

உயிர்களுக்கு பாதுகாப்புத் தேடி கொழும்பு மற்றும் தாம் சார்ந்த பிரதேசத்தின் மற்ற பகுதிகளுக்கு தப்பி ஓடி வந்த தமிழ் பேசும் (இவர்களில் முஸ்லிம் மக்களும் அடங்குவர்)மக்களின் இடப்பெயர்வு.

4) 90களில் குறுகிய கால அவகாசத்தில் விரட்டப்பட்ட, வெளியேற்றப்பட்ட வடபுலத்து முஸ்லிம் மக்களின் இடப்பெயர்வு.

இவ்வாறாக நான்கு நிலையில் காலனிய – பின் காலனியச் சூழலில் இலங்கை தமிழ்ப் பேசும் மக்கள் இடப்பெயர்வுக்கு ஆளாகி இருக்கிறார்கள்.

2

ஈழத்து தமிழ் பேசும் மக்களின் இடப்பெயர்வு புலம்பெயர்வு வழியாக நிலம் இழந்தவர்களின் குரல் என்பது, ஈழத்து நவீன தமிழ் கலை இலக்கியத்தில் அந்த வகையில் 1825 முதல் கொண்டு 70களின் இறுதி வரையிலான மலையக தமிழ் மக்கள் சமூகத்தினரிடையிலான இடர்பெயர்வுச் சூழலில், அச்சூழலை பின்புலமாகக் கொண்டு படைக்கப்பட்ட கலை இலக்கியங்களில் தான். முதல் முதலாக நிலம் இழந்தவர்களின் குரல் பதிவாகி இருக்கிறது.

அவ்வாறான கலை இலக்கியங்களில் அக்குரல் எவ்வாறு பதிவாகி இருக்கிறது என்பதை மலையக கலை இலக்கிய வரலாறு எழுதியவர்கள் பலர் எடுத்துக் காட்டி வந்துள்ள பொழுதும், அக்கலை இலக்கியங்களில் ஒலித்த குரல், நிலம் இழந்தவர்களின் குரலாக ஒலித்ததை அழுத்தமாக முன் வைக்க வில்லை என்றே எமக்குத் தோன்றுகிறது. அவ்வாறான கலை இலக்கியங்களில் ஒலித்த குரல் நிலம் இழந்தவர்களின் குரல் என்பதை அழுத்தமாக அடையாளப்படுத்த வேண்டிய தேவை இருக்கிறது.

அதை தொடர்ந்து 80களுக்கு பின்னான கால கட்டத்திலான தமிழ் பேசும் மக்களின் இடப்பெயர்வுச் சூழலில் படைக்கப்பட்ட கலை இலக்கியங்களிலும் அக்குரல் தொடர்ந்து ஒலித்தது. தொடர்ந்து 90களில் வடபுலத்திலிருந்து விரட்டப்பட்ட முஸ்லிம் மக்களின் கலை இலக்கியங்களிலும் அக்குரலை கேட்கக் கூடியதாக இருக்கிறது.

அவ்வகையான பல்வேறு இடப்பெயர்வுகளை பற்றியும், அதன் கலை இலக்கியங்களைப் பற்றியும் இடப்பெயர்வு கலை இலக்கியம் என்ற பரந்த அளவில் தனியாக பேச வேண்டிய தேவை இருந்தும் விரிவஞ்சி, 80களுக்குப் பின்னான இடப்பெயர்வு புலம்பெயர்வு சம்பந்தமான ஆய்வுகளில், 90களுக்கு பின்னான வடபுலத்து முஸ்லிம்களின் இடப்பெயர்வு சம்பந்தமான கலை இலக்கியங்களை பற்றி விரிவாக பேசப்படாததன் காரணமாக் 90களுக்கு பின்னான இலங்கை தமிழ் பேசும் மக்களான முஸ்லிம் மக்களின் இடப்பெயர்வு சம்பந்தமான அதிலும் குறிப்பாக அவர்தம் கவிதையைப் பற்றி மட்டுமே இடப்பெயர்வு கவிதையாக அடையாளப்படுத்தி பேசுவதே இக்கட்டுரையின் நோக்கமாகிறது.

3

இன்றைய யுகத்தில் மனித இன இருப்பின் மீதான அதிர்வு என்பது வன்முறை வடிவில் அதிகாரத்தின் பல்வேறு வழிகளில் செலுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதன் காரணமாக உரிமைப் போராட்டம் என்ற நிலைக்கு ஒவ்வொரு சமூகமும் தள்ளப்படுகின்றது.

அதேவேளை உரிமைப் போராட்டத்தில் பங்கேற்கும் அச்சமூகம் தானே ஓர் அதிகாரமாகத் தன்னைக் கட்டமைத்துக் கொள்ளும் போது தோன்றும் உள்நிலை முரண்பாடும், அந்தப் போராட்டச் சூழல் ஏற்படுத்தும் பாதுகாப்பின்மையும், போராட்டம் நிகழும் மண்ணைவிட்டு சொந்த மண்ணிலிருந்து அம்மக்களைப் புலம்பெயரவும் இடம்பெயரவும் வைத்து விடுகின்றன.

அவ்வாறான இடப்பெயர்வுச் சூழலில் இழந்து விட்ட மண்ணுக்கான ஏக்கமும் தவிப்பும் ஏற்படுத்தும் கேவலின் தொடர்ச்சியுடன் போராடுவதும் ஒரு வகையான போராட்டம்தான். அதாவது வேரோடு பிடுங்கப்பட்ட மண் அதற்குரிய இயல்புக்கேற்ப கொண்டிருந்த இடர்வுகளையும் மறந்து பிடுங்கப்பட்ட நிலையின் காரணமாக, விதைக்கப்பட்ட சரணாலயமான மண் தந்த அகதி வாழ்வின் இடர்வுகளையும் மீறியும் வாழ்ந்த மண் பற்றிய ரம்மியங்கள் ஏங்க வைக்கின்றன.

1990ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வடபுலத்தில் ஆயுதப் போராட்டத்திற்கு தலைமை வகித்தவர்களால் பரம்பரை பரம்பரையாக அங்கு வாழ்ந்துக் கொண்டிருந்த முஸ்லிம் மக்கள் குறுகிய காலகெடுப்பில் வெளியேற்றப் பட்டனர். அதற்கான காரணம் எதுவாயினும். அதற்காக பிற்காலத்தில் மன்னிப்புக் கேட்கப்பட்டாலும், பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த மண்ணிலிருந்து பலவந்தமாக விரட்டப்படுதல் என்பது பெரும் அவலம்தான். தமிழ் பேசும் மக்கள் என்ற ஓர் அடையாளத்துடன், வடபுலத்தில் வாழ்ந்த அம்மக்கள், முஸ்லிம் மக்கள் என்று அடையாளப்படுத்தப்பட்டு விரட்டப்பட்டது தமிழ் பேசும் மக்களுக்கான உரிமைப் போராட்டத்தின் பின்னடைவுக்கான காரணங்களில் ஒன்றாகி விட்டது என்பதுதான் உண்மை.

எல்லா வகையான அவலத்திற்கு அராஜகத்திற்கு ஆளாகும் ஒவ்வொரு சமூகக் கூட்டமும், அத்தகைய அவலத்தையிட்ட, அராஜகத்தையிட்ட அனுபவங்களை அவர்தம் கலை இலக்கியங்களில் வெளிப்படுத்துவது தவிர்க்க முடியாத ஒரு வெளிப்பாடு எனலாம்.

90களில் வடபுத்திலிருந்து விரட்டப்பட்ட முஸ்லிம் மக்களிடையே தோன்றிய படைப்பாளிகள் தாங்கள் விரட்டப்பட்ட அனுபவத்தை, இழந்த மண்ணை பற்றிய ஏக்கத்தை, அத்தோடு இடம்பெயர்ந்து வந்த சூழலில் எதிர்கொண்ட அகதி வாழ்வின் ஊடான அனுபவங்கள் பற்றிய ஆக்கங்கள் தந்து இருக்கிறார்கள். அவ்வகையான கலை இலக்கியங்கள் நாம் இங்கு இடப்பெயர்வு கலை இலக்கியம் என அடையாளப்படுத்துகிறோம்.

விரட்டப்பட்ட வடபுலத்து முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த படைப்பாளிகள் அவர்தம் இடப்பெயர்வு அனுப__

வாழ்வியலை பற்றி சிறுகதை நாவல் போன்ற வடிவங்களில் தந்தமை மிக மிக குறைவாக இருக்க, கவிதை வழியாக ஆழமாகவும் உணர்வுபூர்வமாக, உணர்ச்சிபூர்வமாக பதிவுச் செய்துள்ளார்கள். அவர்களில் மன்னாரைச் சேர்ந்த **கலைவாதி கலீல்**, மன்னார் எருக்கலப்பிட்டியைச் சேர்ந்த **எம்.எச்.எம். நிஃமத்**, முல்லைத்தீவைச் சேர்ந்த **முல்லை முஸ்ரிபா** மன்னாரைச் சேர்ந்த **உவைஸ்கனி**, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த **யாழ் அசீம்**, ஆகியோர் கடந்த காலத்தில் வட புலத்து முஸ்லிம் மக்களின் குரலை கவிதைத்துறையில் பதிவுச் செய்த முக்கிய கவிஞர்களாக எமக்கு தெரிகிறார்கள்.

இவர்களில் **கலைவாதி கலீல்** அவர்கள் நீண்ட காலமாக எழுத்து உலகில் இயங்கிக் கொண்டிருப்பவர். **இன்ஸான்** பண்ணையின் ஒரு முக்கியப் படைப்பாளி. அவரும் மன்னாரிலிருந்து இடப்பெயர்வுக்கு ஆளானவர். வடபுலத்து முஸ்லிம் மக்கள் விரட்டப்பட்ட 1990 ஆம் ஆண்டை நினைவு கூறும் வகையில் வருடம் தோறும் தொடர்ந்து கவிதைகள் தந்து கொண்டிருப்பவர்.

கலைவாதி கலீல், எம்.எச்.எம். நிஃமத், முல்லை முஸ்ரிபா, உவைஸ்கனி, யாழ் அசீம், ஆகியோர் கடந்த காலத்தில் வட புலத்து முஸ்லிம் மக்களின் குரலை கவிதைத்துறையில் பதிவுச் செய்த முக்கிய கவிஞர்களாக எமக்கு தெரிகிறார்கள்.

இவ்விடத்தில் கலைவாதி கலீல் ஆற்றிய ஒரு பணியை இங்கு பொருத்தம் கருதி நினைவுப்படுத்த விருப்புகிறேன். 80களில் கொழும்பிலிருந்து பாமிஸ் சமூக அமைப்பின் சஞ்சிகையாக வெளிவந்த **பாமிஸ்** எனும் சஞ்சிகையில் பலஸ்தீன கூடார்த்த சித்திர ஓவியரான **நஜீ-அல்-அலி** யின் கூடார்த்த சித்திரங்களுக்கு **சர்தார்** எனும் புனைப்பெயரில் எழுதிய கவிதைகளுடன் அச்சித்திரங்களையும் சேர்த்து 1999ஆம் ஆண்டு மன்னார் வாசகர் வட்ட வெளியீடாக **"ஓ.பலஸ்தீனமே! நஜீ-அல்-அலியும் ஹன்ஸல்லாவும்"** எனும் தலைப்பில் வெளியிட்டார். இதில் ஹன்ஸல்லா என்பது இஸ்ரேலிய இராணுவத்திற்கு எதிராக கல் எறிந்து போராடிய (Palestinian stone-thrower) சிறுவனின் பெயர்தான் **ஹன்ஸல்லா**. அவனை **நஜீ-அல்-அலி** அக்கூடார்ந்த சித்திரங்களில் சித்திரித்து இருப்பார்.

கலைவாதி அவர்கள் வட-புலத்து முஸ்லிம்கள் விரட்டப்பட்ட 9 ஆண்டு நினைவாக, அத்தொகுப்பை அவர்களுக்கு சமர்ப்பித்து இருந்தமையில் ஒரு பொருத்தப்பாடு இருந்தது. ஆக்கிரமிக்கபட்ட பலஸ்தீன நிலத்தை மீட்டெடுக்கப் போராடிக் கொண்டிருந்தவர்களின் சித்திரங்களுக்காக எழுதப்பட்ட கவிதைகளின் தொகுப்பாக அத்தொகுப்பு இருந்தமையே அப்பொருத்தப்பாடு ஆகும்.

அத்தொகுப்பிலேயே **"தணியுமா இந்த தாகம்?"** என்ற தலைப்பில் வட- புலத்து முஸ்லிம்கள் வாழ்ந்த மண்ணிலிருந்து விரட்டப்பட்டதன் நினைவாக ஒரு கவிதையையும் இணைத்து இருந்தார். அக்கவிதையை கலைவாதி கலீல் இவ்வாறாக முடிக்கிறார்.

தணியாது எங்களின் தாகம்-இந்தத்
தரங்கெட்ட வாழ்க்கை மீதெமக்கென்ன மோகம்.
இனி மீட்க வேண்டுமெம் பூமி-உடன்
எழுந்து வாசோம்பிக் கிடக்காம லேநீ!

ஆனாலும் கலைவாதி கலீலின் அத்தகைய கவிதைகள் நூல் உருவம் பெறாதது ஒரு குறையாகும்.

அடுத்த கவிஞராக சொல்வது என்றால் எருக்கலப்பிட்டியை சேர்ந்த, ஏலவே ஈழத்து சிறுகதைத் துறையில் கால் பதிந்திருந்த **எம்.எச்.எம். நிஃமத்**. இவர் 2000களின் ஆரம்பத்தில் **வா ஊருக்கு போவோம்** என்ற தலைப்பில் ஒரு நெடுங்கவிதை கொண்ட ஒரு தொகுப்பை புத்தளத்தில் வெளியிட்டார். அந்த நெடுங் கவிதையில் வட- புலத்து முஸ்லிம்கள் விரட்டப்பட்ட வரலாற்றின் சோகத்தை மிக தாக்கபூர்வமாக வெளிப் படுத்தி இருந்தார்... அக்கவிதை நூல் அன்றைய நிலையில் மிக கவனத்தை ஈர்த்தது. அத்தொகுப்பை தொடர்ந்து **"வாழ்ந்திடுவோம் வா"** எனும் அவரது தொகுப் பிலும் நிலம் இழந்தவர்களின் குரல் தொடர்ந்து ஒலித்தது.

நிஃமத் தனது **இழப்புகள்** எனும் கவிதையில் வடபுலத்து மண்ணின் வாசனையையும் வாழ்வியலையும் எடுத்துச் சொல்லி, அவை தம்மை இழந்த எங்கள் சோகத்தை விரட்டியவர்களும் புரிந்துக் கொள்ள வில்லை. தஞ்சம் புகுந்த முகாம்களும் புரிந்து கொள்ள வில்லை எனச் சொல்லி அக்கவிதையை இப்படியான பெருமூச்சுவுடன் முடிக்கிறார்.

"ம்...ஹூம் ...
அந்த முகங்களுக்கும்
இந்த முகாம்களுக்கும்

எங்கள் இழப்புகள்
எங்கே தெரியப்போகின்றன.....?"

சமீபகாலமாக அவரது இலக்கிய பங்களிப்பு மௌனத்திற்கு ஆளாகி இருப்பது ஏனோ தெரிய வில்லை.

அடுத்தவர் கவிஞராக **முல்லை முஸ்ரிபா** ஆவார். முல்லைத்தீவு பிரதேசத்தை பிறப்பிடமாய் கொண்டு புத்தளத்தில் அகதியாய் தஞ்சம் புகுந்தவர். இவரை பொறுத்தவரை வட-புலத்து முஸ்லிம்கள் மத்தியில் புதிதாய் உருவாக்கம் பெற்ற கவிஞர்களில், 80களுக்கு பின்னான ஈழத்து தமிழ்க்கவிதைப் போக்கோடு இணைத்து பேசும் வகையில் தன்னை வளர்ந்து கொண்டவர். வட-புலத்து முஸ்லிம்கள் விரட்டியடிக்கப்பட்ட துயரத்தை தனக்கான தனித்துவ மொழியில் நுண்ணியமான முறையில் தன் கவிதைகளில் வெளிப்படுத்தி வருபவர். அத்தோடு இன

விடுதலை போராட்டத்தில் முஸ்லிம்களின் பங்கு பற்றிய ஒரு பிரக்ஞை ஏற்படும் வகையில் எழுதியவர். **இருத்தலுக்கான அழைப்பு, அவாயுறும் நிலம், சொல்லில் உறைந்து போதல்** ஆகிய முக்கிய கவிதைத் தொகுப்புக்களை தந்தவர். தன் நூல்களுக்கு தேசிய சாகித்திய மற்றும் பிரதேச சாகித்திய, கொடகேபோன்ற விருதுகளை பெற்றவர். முல்லை முஸ்ரிபாவின் கவிதை பலவற்றில் நிலம் இழந்தவர்களின் குரல் ஆழமான அழுத்தமான மொழியில் பதித்திருப்பது மூலம், அவர் ஈழத்து இடப்பெயர்வு முக்கிய கவிஞர்களில் ஒருவராக வெளிப்படுகிறார்.

அவரது **மகா துயரழிக** எனும் தலைப்பிலான கவிதை இப்படித் தொடங்குகிறது

எமை உயிருடன் எங்ஙனம் புதைத்தீர்
தோழர்காள்.

எனத் தொடங்கி,

எமை உயிருடனெங்கு புதைத்தீர்
தோழர்காள்.

என நகர்கிறது.

முல்லை முஸ்ரிபா வின் **""மயூரா" என்றாகி விட்ட றிஸ்மியாவுக்கு"**, எனும் கவிதை இவரது கவிதைகளில் முக்கியமான கவிதை ஒன்று. அக்கவிதை தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டம் என்பதையிட்ட விரிவான ஓர் உரையாடலுக்கு வித்திடும் கவிதை. ஆயுதப் போராட்டத்தில் இணைந்து மரணித்து விட்ட வடபுலத்து முஸ்லிம் யுவதியை நோக்கி பேசும் அக்கவிதையின் ஒரிடத்தில்

உள் மண் மீதான தீராப்பற்று
நாம் உறைய முழுத்துண்டு நிலமற்ற எமதும் மண்ணில்
உன்னைத் துயில் வித்தது நிரந்தரமாய்

என்கிறார்.

அடுத்தவர் **யாழ் அசீம்**. இவரது கவிதைகள் வடபுலத்திலிருந்து விரட்டப்பட்ட முஸ்லிம்களின் வரலாற்றை அவர்கள் விரட்டப்பட்ட நாள் தொடக்கம் பிறந்த மண்ணின் வாசத்தைக் கவித்துவச் சொற்களில், மெல்லியச் சந்தத்துடன் உணர்ச்சிபூர்வமாக, இழந்த நிலத்தின் வரைப்படத்தை, அதன் காட்சிகளை படிமங்களாக தருகின்ற கவிதைகளாக இருக்கின்றன. அத்தகைய கவிதைகள் கொண்ட இவரது தொகுப்பு ஒன்று **மண்ணில் வேரோடிய மனசோடு** எனும் தலைப்பில் வெளிவந்துள்ளது. இத்தொகுப்பு கொடகே சாகித்திய விருதைப் பெற்றுக் கொண்டது. அத்தொகுப்பில் **இது கவிதையல்ல** எனும் கவிதையில்

இழந்த மண்ணுக்காய்
ஏங்கும் இதயத்தின்
ஏக்கப் பெருமூச்சுக்கள்
இப்பொழுது நினைத்தாலும்
இதயம் சுடுகிறது-இல்லை
இதயம் எரிகிறது.

இக்கவிஞர்களின் வரிசையில் அடுத்தவர். **உவைஸ்கனி**. இவர் மன்னாரைச் சேர்ந்தவர். இவரும் முஸ்ரிபாவை போல் வடபுலத்து முஸ்லிம்களின் இடப் பெயர்வு நிலையினை தனித்துவமான மொழியில் வெளிப்படுத்த முயற்சித்தவர். ஆனால் தொடர்ந்து அவரது கவிதை எழுத்துப் பிரதிகள் காண முடியாமல் இருக்கிறது. இவரது கவிதைகள் **மனிதனோடு நடந்தப்படி, கல் உயிர்** ஆகிய தொகுதியில் காணக்கூடியதாக இருக்கிறது. இவருடைய **அகதி** எனும் கவிதையில்

எரிந்த கூரையாய் இன்று வரைக்கும்
வெளிக்காமல் போனது எங்களுடைய கிழக்கு.
அது போலவே புழுதியின் பொழுதுகளுடே
பூச்சியமாய்க் கழிகிறது வாழ்வு.

மேற்குறிப்பிட்ட ஐந்து கவிஞர்களை முக்கிய கவிஞர்களாக குறிப்பிட்டதற்கு காரணம் இடப்பெயர்வு கவிதை இலக்கியம் என்பதற்கான முன்னோடிகள் இவர்கள் என்பதற்காக மட்டுமே.

இவர்களை தொடர்ந்து வட- புலத்து முஸ்லிம் சமூகத்திலிருந்து பல கவிஞர்கள் தோன்றாமல் இல்லை. அவர்களும் நிலம் இழந்த வட- புலத்து மக்களின் துயரை பாடிதான் இருக்கிறார்கள். அவர்களை நாம், யாழ் முஸ்லிம் இணையத்தளத்தின் வெளியீடாக வெளி வந்துள்ள வட - கிழக்கு முஸ்லிம்களின் துயரை பாடுகின்ற கவிதைகளைக் கொண்ட வேர் அறுதலின் வலி" என்னும் கவிதைத் தொகுப்பில் இனங்காணக்

வட- புலத்து முஸ்லிம் சமூகத்திலிருந்து பல கவிஞர்கள் தோன்றாமல் இல்லை. அவர்களும் நிலம் இழந்த வட- புலத்து மக்களின் துயரை பாடிதான் இருக்கிறார்கள்.

கூடியதாக இருக்கிறது. அதில் வட - புலத்து முஸ்லிம் சமூகத்தில் பெண் கவிஞர்களும் இருக்கிறார்கள் என்பதையும் அத்தொகுப்பு இனங் காட்டியது. உ- ம் ஜென்சி கபூர்.

இறுதியாக வட- புலத்து முஸ்லிம்கள் தான் இழந்த நிலத்தை முழுமையாக இன்னும் மீட்டு எடுக்காத நிலையில், பாகிஸ்தானிய பின்-காலனியச் சிந்தனையாளர் தாரிக் அலி அவர்கள் குறிப்பிடுவது போல், சொந்த நாட்டுக்கு திரும்ப முடியாத நிலையில் புதிய கலாசார் வாழ்வு முறை திணித்தலுக்கு ஆளாகுகிறார்கள்; என்ற கூற்றுக்கு இணங்க, (இங்கு சொந்த நாடு என்பதை சொந்த நிலம் என்று நாம் வாசித்துக் கொள்ளலாம்.) சொந்த மண்ணிலிருந்து துரத்தப்பட்ட வட-புலத்து முஸ்லிம்களில்,

அத்தகைய திணித்தலுக்கு ஆளாகிப் போன ஒரு புதிய தலைமுறை தோன்றி விட்ட நிலையிலும், இழந்த மண் இன்னும் முழுமையாக மீட்டெடுக்கப்படாத நிலையிலும், வடபுலத்து முஸ்லிம் மக்களின் இடர்ப்பெயர்வுக் கவிதையில் இழந்த மண்ணுக்கான ஏக்கமும் அவாவும் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் என்பது தவிர்க்க முடியாத ஒன்றுதான்.

காட்டு தர்பார்

ஊளையிட்டது ஒரு நரி!

குரைத்துக் குரைத்துக் கூட்டம் போட்டது.
காட்டில் இருந்தொரு
கறுப்பு...!

சேனையாகச் சில மிருகங்கள்
சேர்ந்து கொள்ள...,
சிக்கித் தவித்தன "சின்னப்" பிராணிகள்!

கீலம் கீலமாய் கிழிக்கப்பட்டு...
உறைந்த இடங்கள் உடைக்கப்பட்டு...
நம்பிக்கைகள் நடைமுறையெல்லாம்
மறுக்கப்பட்டு...,
சிதைக்கப்பட்டன சின்னப் பிராணிகள்!

காட்டில் தர்பார்...!

என்ன நடந்தும்
பேசாதிருந்தே பிழைப்பு நடத்தின
சில தலையாரிப் பிராணிகள்!

பிழைகளை இந்தப்
பிராணிகள் மேலே போட்டுக் கொண்டதால்...
சலுகைகள் பெற்றுக்
குடும்பம் நடத்தின
பிராணித் "தலை" சில!

உரத்தொலி எழுப்பிய ஓரிரு தலைகளும்
பதவி மகுடியில் மயங்கிப் போயின.

நடப்பவை யங்கே நடந்து கொண்டிருக்க
பார்த்துக் கொண்டே
"இவர்கள்
எங்களின் இளைய சகோதரர்"
என்றதாம்
ஆங்கொரு பெரிசு"!

– பாலமுனை பாறூக்

வருத்தப்படாத வாலிப வயதினர்

மண்ணில் உலவும் இளவயதினர்
வழிமாறிச் செல்லும் பயணங்கள்
கண்ணில் வலியிடும் காண்நிலையினை
கவிதை சொல்லும் கேளுங்கள்

கட்டிளங்காளையர் குழுக்களாகி
கடிவாளம் பூட்டாக்குதிரைகளாகி
கட்டியாளும் கலாச்சார சீருக்கெதிரிகளாகி
கெட்டழியும் கடைஞரென அலைகிறாரே

முதிராத வயதுதனில் பழுத்தவராகி
மதுபோதை மோகிப்பு மிகவதிகமாகி
உதிரும் சருகென நலிந்தவராகி
எதிர்கால வாழ்வினை இழக்கின்றாரே

சட்டத்திற்கு பணியாதவராகி சமூகத்து
மட்டத்திலும் மதிப்பு நிலை பேணாதவராகி
பட்டிதொட்டி பரப்புக்கள் எல்லாம்
பரவி வரும் விசக்கிருமி போலானாரே

அடாவடித்தனங்களின் மொத்த உருவாகி
ஆகாத துற்செயல்களின் மூலவர்களாகி
படுபாதம் புரியும் பயங்கரவாதிகளாகி
கொடுவாளது கையிலேந்தி கொலையாளுகிறாரே

மொட்டையன் குழுவென்றும் கழுத்துவெட்டி
கட்டையன் குழுவென்றும் கூட்டுக்கூடி
சட்டமதன் விரோதிகளெனும் காட்டாச்சியாளராக
கொட்டமடித்து வீடு புகுந்து கொள்ளையுமடிக்கிறாரே

தேசகாரியம் எதையும் தெரியாதவராகி
நாசகாரியம் கையாளும் இழிகுணராகி
நீசராகினர் போதைவஸ்து பாவனையாளராகி
தோசமாகினர் சமூகமதன் நோயுமாகினரே

பெற்றவர் கனவுகளை கானலாக்கி
கற்றுணர்ந்த கல்விதனை வீணுமாக்கி
தெருசுற்றும் ஈனப்பிறவிகள் நிலை கண்டு
பற்றியெரியுது பெற்றெடுத்தவர் மனமே!

– அல்வாயூர் சிவ. சிவநேசன்

கறையான்களின் கண்ணீர்

"கொல்லென்று" சிரித்துக்
குதூகலமாய் வாழ்ந்திருந்த
"செல்கள்" கோவென்றழுகின்றன
அணுவணுவாய் மண்ணுருட்டி
அல்லும் பகலும் பாடுபட்டுழைத்துக்
கட்டி வைத்த கோட்டையிந்தப்
புற்று.....!
எங்கிருந்தோ ஒத்துண்டு ஓடிவந்து
இடந்தேடி ஊர்ந்தூர்ந்து
படமெடுத்துப் படங்காட்டிப்
பின்னர் –
பயங்காட்டி எங்கள்
புற்றுக்குள் புகுந்து கொண்டன...
இந்த நாகங்கள்....!
நாசமாய்ப்போனதுகள்....!
சீச்சீ! நாசமாய்ப்போகாதுகள்
நாங்கள் தான் நாசமாய்ப்போனதுகள்
தாவித்திரியும் அப்பாவித்தவளைகள்!
பிஞ்சுக்குஞ்சுகள் பெட்டைக்கோழிகள்
சேவல்களையும் பிடித்துண்டு
தினவெடுத்துத் திரியுதுகள்...
எங்கள் புற்றுக்குள் வந்து படுத்து
ஏப்பம் விடுகிதுகள்,
உஷ் சென்றிரைந்து
உசார் கொண்டு சீறி அச்சத்தை ஊட்டி எங்கள்
அடிமனத்துள் உறைய வைத்து
உச்சத்தில் நின்று ஆடுதுகள்....!
உரத்த குரலில் உசுப்பேற்றிப் பாடுதுகள்
இதுகளோடயிப்போ
இங்குள்ள விரியன் வளலையுடன்
சாரைகளும் வந்து
சல்லாபம் பண்ணிப் படுக்குதுகள்....
கீரிப்பிள்ளைகளையுங் கிட்டடியிற் காணயில்ல
கருடன்கள் வந்து கலைச்சாலும்
பரவாயில்ல...!
எங்கள் புற்றைவிட்டு இதுகளெப்போ
போய்த்தொலையும் நாள்வருமோ...!

– நிலா தமிழின் தாசன்

ஏன்

உன்னை நான்
பார்க்கும்போது
நிலம் நோக்கி
உன்
பெருவிரலால்
நிலத்தைக் கீறுகிறாயே
அங்கே என்ன
தேடுகிறாய்
என்காதலையா?

குணம்

வரட்டு குணம்
என்கிறார்களே
அது
உன்னிடம்
இல்லவே
இல்லை
முரண்டுகுணம் தான்.

பயன்பாடு

ஓடை வழி ஓடி வரும்
நீரோடை
கங்கைவரை வழிந்தோடும்
இருகரையும் வளம் பெறவே
கங்கையுடன்
கலந்த பின்னால்
வளமற்றுக் காணப்படும்
நிலத்துக்கு ஏது பயன்?

விமர்சனமும் சவாலும்

விமர்சகர்
அறிவுக்குச் சவால் விட்டார்
அறிவு அமைதியானது
நம்பிக்கைக்கு சவால் விட்டார்
கோபம்
கனன்றெழுந்தது.

– எம். எம். மன்ஸூர்



நவீன கவிதை குறித்த திறனாய்வுகள் அறிமுகக்குறிப்புக்கள்

– அஸ்வத்தாமன் –

தமிழகத்தில் 1926ஆம் ஆண்டு பாரதியின் வசனகவிதை உருவாக்கத்தை தொடர்ந்து புதுக்கவிதை குறித்த திறனாய்வுகள் நானறிந்த வகையில் 1930களிலேயே தோற்றம் பெறுகின்றது. மணிக்கொடி இதழில் கவிதையா வசன கவிதையா என்ற வாதமே இதனைத் தொடக்கி வைத்தது. 1934இல் மணிக்கொடி பிச்சமூர்த்தியின் காதல் கவிதையை வெளியிட்டதை தொடர்ந்து இச்சர்ஜை வேகம் பெற்று 1950களின் இறுதி வரை நிலைத்தது. 1934இல் ஊழியன் இதழில் புதுக்கவிதை முயற்சிகளைத் தொடர்ந்த புதுமைப்பித்தன் வசன கவிதைகளை விமர்சித்தும் எழுதியும் வந்தார். பின்னர் இவ்விவாதம் கு.ப.ரா, க.நா.சு, ந.பிச்சமூர்த்தி, சாலிவாகனன் முதலியோரால் கலாமோகினி இதழின் வாயிலாக முன்னெடுக்கப்பட்டது. கு.ப.ரா(1944), புதுமைப்பித்தன்(1948) போன்றோரின் மறைவும் பிச்சமூர்த்தியின் இலக்கியத் துறவும் புதுக்கவிதையில் தேக்கநிலையை உருவாக்கியது. இக்கால கட்டத்தில் புதுக்கவிதை உள்ளடக்கம் குறித்து சரஸ்வதி 1959ஆம் ஆண்டு மலரில் எழுதிய கட்டுரை முக்கியமானது. தெளிவு, எளிமை, வேகம் கொண்ட பாரதியின் கவிதைகள் குறித்துப் பேசும் இக்கட்டுரை ஜேர்மனியக் கவிஞர் ரில்கேயிலன் பிரான்சியக் கவிஞர் பாதலெர், ரிம்போ, மல்லார்மே, வாலேரி முதலானோரின் கவிதைகளுடன் ஒப்பிடும்போது தமிழ்க் கவிதை செத்து விட்டது என்ற கருத்தையும் இக்கட்டுரை எடுத்துரைத்தது. டி.எஸ்.எலியட், எஸ்ராபவுண்ட் முதலானோரின் கவிதைகளுடன் ஒப்பிட்டு புதுக்கவிதையின் உருவம், உள்ளடக்கங்களை ஆழமாக நோக்கும் கட்டுரையாகும். 1959இல் தொடங்கப்பட்ட எழுத்து, 1970இல் தொடங்கப்பட்ட கசடதபற, 1971 இல் தொடங்கப்பட்ட வானம்பாடி முதலான இதழ்கள் புதுக்கவிதை இலக்கியத்தை வளர்த்தன. இவ்வேடுகளில் புதுக்கவிதை தொடர்பாக ஆக்கபூர்வமான விமரிசனங்களும் இடம்பெற்றன. எழுத்து இதழில் நானறிந்த வகையில் இருபதுக்கும் மேற்பட்ட கட்டுரைகள் வெளிவந்துள்ளன. பாரதி – பாரதிதாசன் கவிதை

திறனாய்வுகள், சங்க இலக்கியம் தொடர்பான கட்டுரை களைப் பிரசுரித்த எழுத்து மேலைத்தேய கவிஞர் களான டி.எஸ்.எலியட், எஸ்ராபவுண்ட், யேட்ஸ், ஆஃடன், லாவரி ஆகியோரின் கவிதைக் கோட்பாடு களையும் எழுத்து பிரசுரித்தது. 1973இல் வானம்பாடி களால் தொகுக்கப்பட்ட "வெளிச்சங்கள்" தொகுப்புக்கு 1975ஆம் ஆண்டு வெளிவந்த தெறிகள் இதழில் வெங்கட் சாமிநாதன் எழுதிய "வானம்பாடிகளின் வெளிச்சங்கள்"என்ற கட்டுரை சுய அனுபவத்தில் இருந்த கிளராத வானம்பாடிக்கவிஞர்களின் கவிதை களின் இயங்கியல் நிலையை அடியோடு தகர்த்தது.

இக்காலகட்டத்தில் நா.வானமாமலையின் "புதுக்கவிதை - முற்போக்கும் பிற்போக்கும்" என்னும் நூல் வெளிவந்தது. புதுக்கவிதையின் உருவம், உள்ளடக்கம் அதன் போக்குகள் முதலானவற்றை கருத்தில் கொண்டு தமிழில் எழுதப்பட்ட முதல் நூல் என்னும் வகையில் இந்நூல் முக்கியமானது. அக்கால புதுக்கவிதையின் போக்குகளை இந்நூலில் விரிவாக நா.வானமாமலை ஆராய்ந்துள்ளார். சமூக விமர் சனங்கள் பிரச்சினைகளுக்கு விடை தேடும் முயற்சி களாக உருமாறியுள்ள புதுக்கவிதை இருவர்க்கங்களின் கருத்து மோதல்களுக்கிடையில் நசுங்கி ஓலமிடு கின்றன எனக் கூறும் நா.வானமாமலை சர்ரியலிசம், நியோ பிராய்டிசம் எக்சிஸ்டென்ஷியலிசம். மார்க்சியம் முதலான பிற்போக்குத் தத்துவங்களை உள்வாங்கி புதுக்கவிதை இயங்குகிறது எனக் குறிப்பிடுகிறார். சமூக வர்க்கப் பிரிவுகளின் உறவுகளின் மாற்றங்களால் சமூகத்தையே மாற்றுகின்ற மானிட சக்தியின் பெருமையை புதுக்கவிதை பறை சாற்றுகிறது என்பார். புதுக்கவிதை குறித்து வெளிவந்த முதல்நூல் என்னும் வகையில் இந்நூல் முக்கியமானது. இந்நூல் வெளி வந்ததைத் தொடர்ந்து மார்க்சியர்களும் புதுக் கவிதையை ஏற்றுக்கொண்டனர். 1971 தில்லி தமிழ்ச் சங்கம் வெள்ளிவிழா மலரில் வெளிவந்த "இன்றைய தமிழ் இலக்கியம் புதிய போக்குகள்" என்ற கட்டுரையில் புதுக் கவிதையின் வருகையை நிராகரிக்கும் க.கைலாசபதி பிற்காலத்தில் வெளிவந்த தமிழன்பனின் "தோணி வருகிறது" என்ற புதுக்கவிதைத் தொகுப்புக்கு முகவுரை எழுதுகிறார். இம்முகவுரையில்

எழுத்துக்கால புதுக்கவிதைப் போக்கைச் சாடுகிறார். "எழுத்து வட்டத்துடன் முதலில்

நெருங்கியதொடர்பு கொண்டிருந்த சிலர் ஆங்கிலச்சொற்கள் இடையிட்ட அரைகுறைத்

தமிழில் மேலைநாட்டு புதுக்கவிதை சிலவற்றை எதிரொலிக்கத் தொடங்கினர். ஆரம்பத்

திலிருந்தே பின்பற்றும் போக்கு இவர்களது பிரதான பண்பாயிருந்தது. மனமுறிவு, பாலியல்,

தடுமாற்றம், நோய்மை, அந்நியப்படல் என் றெல்லாம்(சி.கனகசபாபதி போன்றோர்) இவர்களது

கவிப் பொருளுக்கு விளக்கமும் விவரணமும் கூறுவது கூட சருகுக்குள் கிடப்பவற்றை

மெத்தையிலே தூக்கி வைப்பதாகவே எனக்குத்தோன்றுகின்றது. யாப்பமைதி இல்லாவிடினும்

தமிழ் சொற்களின் இயல்பான சொல்லமைதி, பொருளமைதி போன்றவை தாமும் இவர்களது

கவிதைகளில் இல்பொருளாயிருந்தன... தருமுசிவராமு, ஞானக்கூத்தன் முதலியோர் கையில்

புதுக்கவிதை தன்னையே அழித்துக் கொள்ளும் பரிபக்குவ நிலையை யெட்டியது" என்பார்.

புதுக்கவிதையின் வடிவம் குறித்து பண்டிதர் களிடமிருந்தும் கம்யூனிஸ்டுகளிடம் இருந்தும் எதிர்ப்பு கிளம்பிய வேளையில் பேராசிரியர்க.கைலாசபதியால் மேற்குறிப்பிட்ட வகையில் குறிப்பிடப்படும் முனைவர் சி.கனகசபாபதி புதுக்கவிதையின் பரிணாம வளர்ச்சியைப் புதிய சிந்தனையோடு அணுகியவர். எழுத்து புதுக்கவிதைக்கு முக்கியம் கொடுத்து எழுந்த போது கேலியும் கிண்டலுடன் கடுமையான எதிர்ப்பை காட்டியவர்கள் இடதுசாரிகள் தான். இது குறித்து கி.சச்சி தானந்தம் அவர்கள் கூறும் போது தமிழ் கவிதையில் கொஞ்ச நஞ்சம் இலக்கணம் இருக்கிறது. அதையும் அழிக்க வந்துவிட்டான் பார்ப்பான் என பண்டிதர்களும், அமெரிக்க முதலாளித்துவத்தின் விற்பனையாளன் எனக் கம்யூனிஸ்டுகளும் சி.சு.செல்லப்பாவை தாக்கிய வேளையில் சி.கனகசபாபதி புதுக்கவிதையை மரபு வழி யாக ஆய்வுக்குட்படுத்தியவர். தமிழில் திறனாய்வுக் கலை வளர்ந்த காலகட்டத்தில் ஒப்பிலக்கியத் திறனாய் வினூடாக தமிழிலக்கியத்தை பிறிதொரு தடத்திற்கு கொண்டு சென்றவர். புதுக்கவிதையில் மரபுத் தொடர்ச்சி என்னும் கட்டுரை சங்க இலக்கியத்துடன் புதுக் கவிதையை ஒப்பு நோக்கி ஆய்ந்தது. புதுக்கவிதை என்ற யாப்பு மீறிய கவிதையை யாப்புடைய சங்கக் கவிதை களுடன் ஒப்பிடும் இக்கட்டுரையில் புதுக்கவிதையை புதுமைப்பித்தன் பஃறொடை வெண்பா விலும் கு.ப.ரா. ஆசிரியப்பாவிலும் சி.மணி வஞ்சியிலும் பிச்சமூர்த்தி வெண்செந்துரையிலும் அறுசீர் விருத்தத் தில் பாடியதை யும் எடுத்துரைக்கிறது. புதுக்கவிதையில் இணைக் குறளாசிரியப்பாவின் தாக்கம் இவர் கட்டுரையில் நுட்ப மாக வெளிப்படுத்தப்படுகிறது. இத்தடத்தில் வெளிவந்த "தமிழ்ப் புதுக்கவிதையில் மேல்நாட்டுத் தாக்கமும் மரபுத் தொடர்ச்சியும்" என்ற கட்டுரை புதுக்கவிதைகளை தமிழ் யாப்பு மரபுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்வதுடன் மேலைத் தேயக் கவிதை களுடனும், கவிதைக் கோட்பாடுகளுடன் புதுக் கவிதையை ஒப்பு நோக்கி திறனாய்வு செய்கிறது. இவருடைய பாரதியும் மணிக்கொடியும் பிச்சமூர்த்தியும் புதுக்கவிதை மாற்றங்களும் என்னும் கட்டுரை தமிழ்க் கவிதையில் நிகழ்ந்த குறிப்பிட்ட மாற்றங்கள் குறித்துப் பேசும் கட்டுரையாகும். கல்வியாளராகவும் திறனாய்வாள ராகவும் தமிழ்ப் பேராசிரியராகவும் இருந்த கனகசபாபதி புதுக்கவிதையின் உருவ அமைப்பு, உருவகம், படிமம், படிம இயக்கம், தனிமநடையியல், நாட்டுப்புறவியல், இருண்மை உத்தி, புராண உத்தி முதலானவற்றையும் புதுக்கவிதையின் பொதுவான கட்டமைப்பையும் விரிவாக விளக்கியவர். பாரதியும் பாரதிதாசனும் (1980), பாரதியும் பிறகும் பிச்சமூர்த்தியும் பிறகும் (1990), ச.கனகசபாபதி கட்டுரைகள் கவிதை:மரபும் புதுசும் (2003) இவருடைய கவிதை சார்ந்த நூல்கள் இவருடைய

ஆழ்ந்த புலமைக்குச் சான்று பகர்கின்றன. தமிழில் 1930களில் தோன்றி படிப்படியாக வளர்ச்சி பெற்ற புதுக்கவிதைக்கு மரபுவழி கூறுவதும் கல்வியாளர்கள் மற்றும் மரபுவாதிகளிடம் சமூக அங்கீகாரம் தேடுவதும் இவருடைய திறனாய்வின் முக்கிய பணியாகும்.

கைலாசபதி அவர்களால் புதுக்கவிதையை அழிக்கப்பிறந்தவர் எனக் கூறப்படும் தருமு சிவராமு புதுக்கவிதைப்படைப்பாளியாகவும் படிமக்கவிஞராக வும் அறியப்பட்டவர். பிரமிளால் கவிதை குறித்து எழுதப் பட்ட கட்டுரைகள் கால.சுப்பிரமணியத்தால் தொகுக்கப் பட்டு "வானமற்றவெளி" என்னும் தலைப்பில் நூலுருப் பெற்றது. புதுக்கவிதையை "சுயேச்சாகவிதை" என விழித்து ஜீன் 1960எழுத்து இதழில் எழுதிய கட்டுரை புதுக்கவிதைக் கட்டமைப்பை மேலைத்தேயக் கவிஞர்களுடன் ஒப்பிட்டு ஆராய்கிறது. புதுக்கவிதை யில் சொற்கள் நறுக்குத் தெறித்தாற் போல இருக்க வேண்டும் எனக்கூறும் பிரமிள் காலநீட்சியின் பகைப்புலத்தில் ஸதூலப்பார்வைக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் புதுக்கவிதை குறித்துப் பேசுகிறார். பிரமிளின் உட்கிடக்கையின் வெளிப்பாடே இக்கட்டுரை. பிரமிளின் "கவிதைவளம்" படைப்பு, படைப்பாளியின் உரிமை குறித்து விவாதிக்கும் இக்குரல் கவிதை வெளிப் பாடு குறித்துப் பேசுகிறது. பிரமிள் பாரதி குறித்தும் பிச்சமூர்த்தி குறித்தும் எழுத்தில் எழுதிய கட்டுரைகள் ஆழமானவை. பாரதிக்கலை என்னும் நீண்ட கட்டுரை அக்டோபர் நவம்பர் 1961 இதழில் பிரசுரமானது. பாஞ்சாலி சபதம், குயில் நீங்கலாக பாரதி பாடலின் கவிதைநயம், பாரதியின் சாதனைகளை கலாரசனை



யோடு ஆராயும் கட்டுரையே இதுவாகும். விடுதலைச் சிறகு என்னும் கட்டுரை தத்துவார்த்த ரீதியில் பாரதியின் விடுதலைக்கவிதையை ஆய்வுக்குட்படுத்துகிறது. பாரதியையும் பிச்சமூர்த்தியையும் இணைத்து பிரமிள் கட்டுரைகள் பலவற்றை எழுதியுள்ளார். புதுப்பாதைக்கு வகுக்கும் கவிஞன் இவ்வகையில் குறிப்பிட்டு கூற வேண்டிய கட்டுரைகளில் ஒன்று. புகைக்காளான், கலைக்கிழவர் முதலானவை பிச்சமூர்த்தியின் படைப்புக்களை கலைத்திறத்துடன் அணுகும் கட்டுரைகளாகும்.

நேர்த்தியான படிமங்களுக்கூடாக வெளிப்படும் பிரமிள்கவிதைகள் பன்முகத்தன்மை கொண்டவை. ஆழ்ந்த வாசிப்பைக் கோரி நிற்கும் இக்கவிதைகள் மேலைத்தேய கவித்துவ உந்துதலாலும் ஏற்பட்டவை. நகுலன் பிரமிளின் கவிதை குறித்துக் கூறும்போது "சுவாமிகளில் நான் சக்கரவர்த்தியுமல்லன்" என்ற வரி எலியட்டின் வரியை நினைவுறுத்துகிறது" என்கிறார். இதனைப்போன்று தமிழவன் "வெளிச்சச் சிறகு" என்னும் பிரமிளின் கவிதையடி "மாயகோவ்ஸ்கியின் "Sun grew wings" கவிதைவரியையும், "இழந்த படிமங்களைக் கணக்கில் வை" என்னும் பிரமிளின் கவிதையடி "எலியட்டின் "A Heap Of Brookeen images" என்ற கவிதை யடியையும் பிரதிபலிக்கிறது என்பார்". பிரமிள்கவிதை களை சிவசேகரம் முதலானோர் செய்நேர்த்தியற்ற படிமங்களுக் கூடாக கட்டுண்டவை எனக் கருதி பிரமிளை புறமொதுக்கினாலும் ஒரு சிலகவிதைகளை தவிர்த்து நோக்கும் போது கட்டிறுக்கமுள்ள சொற்களுக் கூடாக ரசானுபவத்தை ஏற்படுத்தும் செய்நேர்த்திமிக்க கவிதைகளே இவை எனலாம்.இதேபோல் இவரின் விமரிசன ஊழல்கள் என்னும் நூலும் திறனாய்வில் காணப் படுகின்ற சாதிசார்புநிலை உள்ளிட்ட வெளிப்படையான சில உண்மைகளை பகிரும் நூலாகும்.

தமிழ் இலக்கியத்தில் மரபுக்கவிதைக்கூடாக முகம் காட்டிய ஞானக்கூத்தன் எள்ளல் தன்மையுடன் (parody satire) கூடிய புதுக்கவிதைக்கூடாக அங்கதக் கவியாக தன்னை முன்னிறுத்திக் கொண்டவர். எழுபதுகளில் க்ரியா எஸ்.இராமகிருஷ்ணன், சா.கந்த சாமி, ந.கிருஷ்ணமூர்த்தி ஆகியோருடன் இணைந்து கசடதபற இதழைத் தொடங்கியவர். ஆரம்பகால தமிழ் விமர்சகர்கள் ஞானக்கூத்தனின் கவிதைகளை க.நா.சு.வுக்கும் ஞானக்கூத்தனுக்கும் இடையிலான நட்பினை மையப்படுத்தியே நோக்கினர். இதன் முகமாக இவருடைய கவிதைகளை ஒருவித முற்கற்பிதங்களுடன் எரிச்சலோடே ஆய்வுக்குட்படுத்தினர். (கவிதைகளுடன் ஒரு சம்வாதம் மற்றும் சில கட்டுரைகள்). தமிழில் முற்றிலும் மாறுபட்ட கோணத்தில் கசடதபற இதழில் நா.காமராசன் குறித்து இவர் எழுதிய கட்டுரை இன்றளவும் தமிழ் இலக்கியத்தில் வைத்துப் பேசப்படு கின்றது. கணையாழி இதழில் கவிதை குறித்து இவர் எழுதிய கட்டுரைகள் "கவிதைக்காக" என்னும் தலைப்பில் நூலுருப் பெற்றது. சங்க இலக்கியம் தொடங்கி நவீன இலக்கியம் வரை இவருக்கிருந்த புலமையின் வெளிப்பாடே "கவிதைகளுடன் ஒரு சம்வாதம் மற்றும் சில கட்டுரைகள்" என்னும் தொகுப்பு. எம்.ஏ. நுஃமானுக்கு சென்ற ஆண்டு கொடுக்கப்பட்ட அதே விளக்கு விருதை 2004இல் பெற்றுக் கொண்டார். 2009இல் சாரல்விருதும் இவருக்கு வழங்கப்பட்டது. மரபுக் கவிதையில் தொடங்கி அங்கதக்கவியாக வியாபகம் பெற்ற ஞானக்கூத்தன் எட்டுக்கவிதைகளில் அமைப்பியல்வாதக் கவிஞராகவும் (தேங்காய்), பின்நவீனத்துவக் கவிஞராகவும் (ஆபத்தான நாட்கள்)

பரிணமித்தார். "அன்று வேறு கிழமை", சூரியனுக்குப் பின் பக்கம்", "கடற்கரையில் சில மரங்கள், மீண்டும் அவர்கள், ஞானக்கூத்தன் கவிதைகள், பென்சில் சித்திரங்கள் முதலான தொகுப்புகள் இன்றளவும் பேசப் படுகின்ற தொகுப்புக்களாகவே உள்ளன. பேராசிரியர் க.கைலாசபதி கூறியதைப் போன்று ஞானக்கூத்தனால் புதுக்கவிதை தன்னை அழித்துக் கொள்ளவில்லை. பிறிதொரு தளத்துக்கு நகர்ந்துள்ளது என்றே கூறலாம்.

புதுக்கவிதை திறனாய்வில் முன்னோடியாக விளங்கியவருள் வல்லிக்கண்ணனும் ஒருவர் இவருடைய "புதுக்கவிதை தோற்றமும் வளர்ச்சியும்" என்னும் நூல் சிறுசஞ்சிகைகளுக்கூடாக புதுக்கவிதை வளர்ந்த வரலாற்றை விரிவாக எடுத்துரைக்கிறது.

ராஜமாத்தாண்டனின் புதுக்கவிதை வரலாறு என்னும் நூல் தமிழகம், ஈழத்தின் புதுக்கவிதை வரலாற்றைத் ரசனை முறையின் அடிப்படையில் திறனாய்வு செய்யும் முக்கிய நூல்களில் ஒன்று. மரபு கவிதை வசன கவிதையாகி புதுக்கவிதையாக மாறிக் கோலொச்சியதை 2003ஆம் ஆண்டு வரை ஆய்வுக்குட் படுத்தும் இந்நூல் ஈழத்துப் புதுக்கவிதையின் வளர்ச்சிப் போக்கை சிறு சஞ்சிகைகளை ஆதார மாகக் கொண்டும் ஆய்வுக்குட்படுத்துகிறது. புதுக் கவிதை தொடர்பான ஆய்வுகளை பல்கலைக்கழகம் வாயிலாக முன்னெடுத்தவர்களுள் தமிழவனும் முக்கிய மானதொருவர். புதுக்கவிதை நாலு கட்டுரைகள் (1970), இருபதாம் நூற்றாண்டு கவிதை முதலான தமிழவனின் நூல்கள் நவீன கவிதை தொடர்பான விரிவான ஆய்வு முயற்சிகள் ஆகும். நவீன கவிதையின் வடிவம், காலமும் கருத்தும் குறித்துப் பேசும் இந்நூல் நவீன கவிதையில் காணும் பழைமை வாதத்தையும் புதியமுறைமையில் நோக்குகிறது. து.சீனிச்சாமியின் "இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை புதிய போக்குகளின் தோற்றம் வளாச்சி" அரசியல், சமூக பண்பாட்டுத் தளத்தில் வைத்து கவிதைகளை விரிவாக ஆய்வுக்குட்படுத்தும் நூலாகும். இந்நூலில் இடம் பெறும் நவீன காலகட்ட எழுச்சி, ஆங்கிலேயர் ஆட்சிக் காலப் போக்குகள்: யாப்பு மரபுக் கவிதையின் செல்வாக்கு, விடுதலைக்கான போக்குகள்: யாப்பு மரபுக்கவிதை என்னும் பகுதிகள் புதிய முறைமையின் ஆய்வு அடிப்படையில் நவீன கவிதைகளின் எழுச்சியை சித்திரிக்கிறது. இவை தவிர தமிழில் புதுக்கவிதை தொடர்பாக து.மூர்த்தியின் இக்காலக் கவிதைகள், ஆ.செகநாதனின் புதிய கவிதைகளில் மார்க்சியம், அ.மார்க்ஸின் எது கவிதை, ந.வீ.ஜெயராமனின் புதுக்கவிதையியல், பாலாவின் புதுக்கவிதை புதுப்பார்வை எண்ணற்ற நூல்கள் பல வெளிவந்தன.

புதுக்கவிதையின் உத்திகள் தொடர்பாக சிலம்பொலி செல்லப்பனின் வளரும் தமிழ் இக்காலத் தமிழ்க்கவிதை உத்திகள் (1985), ச.வே.சுப்பிர மணியத்தின் கம்பன் இலக்கிய உத்திகள் (2002), சி.இ.மறைமலையின் புதுக்கவிதை முப்பெரும் உத்திகள் (1986), இரா. சம்பத்தின் புதுக்கவிதையில் இலக்கிய இயக்கம் (1992), அப்துல் ரகுமானின் புதுக்கவிதையில் குறியீடு(1990), சுதந்திர முத்துவின் படிமம் முதலான நூல்களும் வெளிவந்தன.

ஈழத்து நவீன கவிதைகளை முன்னிறுத்தி வெளிவந்த நூல்கள் என்னும் வகையில் பேராசிரியர் கா.சிவதம்பி அவர்களின் தமிழ்க் கவிதைப் பாரம் பரியம்",செ.யோகராசாவின் "ஈழத்து நவீன கவிதை", மு.பொன்னம்பலத்தின் "திறனாய்வு சார்ந்த பார்வைகள்", க.அருணாசலத்தின்"ஈழத்துத் தமிழ்க் கவிதை வளர்ச்சி", பொ.கமலரூபனின் "எண்பது



களுக்குப் பின் ஈழத்துப் புதுக்கவிதை" பெரிய.ஐங்கரனின் "இருபதாம் நூற்றாண்டுக் கவிதை" முதலான நூல்கள் வெளி வந்துள்ளன. பேராசிரியர் கா.சிவதம்பியின் தமிழ்க் கவிதைப் பாரம்பரியம் இருபத்தியாறு முன்னுரைகளைத் தாங்கி வெளிவந்தது. இந்நூல் சங்க இலக்கியம் தொடங்கி இற்றைவரையான தமிழ்க் கவிதைகளின் தன்மைகளையும் மாற்றங்களையும் பொதுவாக ஆராய்வதுடன், இலக்கிய கர்த்தாக்களின் படைப்பி லக்கியங்களை வரலாற்றுப் போக்கில் முன் வைக்கிறது. மு.பொன்னம்பலம், க.அருணாசலத்தின் நூல்கள் கால அடிப்படையில் கவிதைகளை வகைமையாகப் பிரித்த பகுப்பாய்வு செய்கின்றன. ஈழத்து நவீனகவிதைகளின் புதிய உள்ளடக்கம், புதிய தரவுகள், புதிய போக்குகளை ஆராயும் நூல் என்னும் வகையில் முக்கியமானது. பெரிய.ஐங்கரனின் "இருபதாம் நூற்றாண்டுக்கவிதை" மேலைத்தேயக் கோட்பாடு களுடன், தமிழக, ஈழத்துக் கவிதைகளையும் ஒருங் கிணைத்து எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் விளங்குகிறது. இவை தவிர துரை மனோ கரனின் "இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி" மு.பொன்னம்பலத்தின் "திறனாய் வின் புதிய திசைகள்", கந்தையா ஸ்ரீகணேசனின் "ஈழத்து கலை இலக்கிய உலகு விமர்சனக் கட்டுரைகள்" அ.யேசுராசாவின் "குறிப்பேட்டிலிருந்து", இ.ஜீவகாருண்யனின் "தேடலும் விமர்சனங்களும்", சி.சிவசேகரத்தின் "விமர்சனங்கள்-1", "விமர்சனங்கள்-2", ஜெயமோகனின் "ஈழ இலக்கியம் ஒரு விமர்சனப் பார்வை", அ.முகம்மது சமீமின் "எனது

இலக்கியத் தேடல்" முதலான நூல்களிலும் ஈழத்துக்கவிதைகளின் போக்குகள் வளர்ச்சிகள் ஆராயப்பட்டுள்ளன. திருமலை நவத்தின் "திருகோணமலை கலை இலக்கிய வரலாறு" பிரதேசரீதியாக திருகோணமலைக் கவிதை களையும் அதனைப் படைத்த படைப்பிலக்கிய ஆளுமைகளையும் அறிமுகப்படுத்தி ஆவணப்படுத்து கிறது. வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக் களத்தால் வெளியிடப்பட்ட "அண்மைக்கால நவீன இலக்கியப் போக்குகள்" என்னும் நூல் வடக்கிலுள்ள வவுனியா, வன்னிப்பிராந்தியம், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் முதலான பிரதேசங்களைச் சேர்ந்த கவிதைகள் குறித்து ஓரளவுக்கு இனம் காட்டும் நூல் என்னும் வகையில் இந்நூல் சிறப்புடையது.

இலங்கையில் மலையக இலக்கியம் தனித்துவமாக நோக்கப்பட வேண்டியதொன்று. மலையகக் கவிதைகள் குறித்தான ஆய்வுகள் தற்காலத்தில் நிறையவே வெளிவந்துள்ளன. பேராசிரியர் தில்லைநாதனின் இலங்கைத் தமிழ் இலக்கியம், பேராசிரியர் க.அருணாசலத்தின் மலையகத் தமிழ் இலக்கியம், அந்தனி ஜீவாவின் மலையகமும் இலக்கியமும் முதலான நூல்களில் மலையகக்கவிதைகள் காலரீதியாகப் பகுப்பாய்வுக்குட் படுத்தப்படுகின்றன. அத்துடன் 1980களுக்குப்பின் மலையகக் கவிதைகள் குறித்த கட்டுரைகளாக பேராசிரியர் செ.யோகராசாவின் "மலையகத் தமிழ்க் கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்", "மலையகக் கவிதை இலக்கியம்", "மலையகத்தில் மக்கள் இலக்கியம் கவிதையை அடிப்படையாகக் கொண்ட சில அவதானிப்புக்கள்", "மலையகக் கவிஞர்களின் சமுதாய நோக்கு" முதலானவை வெளிவந்தன. இக்கட்டுரைகள் மலையக மக்களின் வாழ்வியலையும் அவர்கள் வாழ்வதற்காகப் பட்ட அவலங்களையும் நவீனகவிதைகளுக்கூடாக பதிவு செய்கின்றன.

1980களுக்குப்பின் பெண்கள் மத்தியில் ஏற்பட்ட விழிப்புணர்ச்சி பெண்ணிலைவாதக் கவிஞர்களின் வரவிற்கு வழி வகுத்தது. இக்காலப்பகுதியில் வெளிவந்த "சொல்லாத சேதிகள்" தொகுப்பை அடுத்து பெண்களாற் பெருமளவு கவிதைகள் எழுதப்பட்டதுடன் அவை தொடர்பான ஆய்வுகளும் விரிவாக இடம் பெற்றன. சு.ஜெயச்சந்திரனின் "பேசாப் பொருட்களைப் பேசிய ஈழத்துப் பெண் கவிஞர்கள் மரபுகளும் மீறல்களும்", பேராசிரியர் செ.யோகராசாவின் ஈழத்துப் பெண்கள் இலக்கிய வரலாறு, ஈ.குமரனின் ஈழத்துப் பெண்கள் சிந்தனையில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திய சொல்லாத சேதிகள், மேமன்கவியின் "ஈழத்துப் பெண்ணியக் கவிதைகள்", ஒளவையின் "நவீன தமிழ்க் கவிதைகள் ஒரு பெண்ணிய நோக்கு", சி.ரமேஷின் "நவீன தமிழ்க் கவிதைப் புலத்தில் ஈழத்துப் பெண் கவிஞர்கள்", போன்ற கட்டுரைகள் பெண் கவிதைகள் குறித்து பேசுகின்றன. பெண்கவிதைகளின் போக்குகள் அதன் வெளிபாட்டு நிலைகளையும் உத்திகளையும் இக்கட்டுரைகள் பேசுகின்றன.

1983 இனக்கலவரத்தை அடுத்து தமிழ் மக்கள் அரசியல் தஞ்சம் கோரி ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றதன் பின்னர் அம்மக்கள் தம் புகலிட அநுபவங் களை இலக்கியப் படைப்புகளுக்கூடாக வெளிப் படுத்தினர். அவை தொடர்பான விரிவான ஆய்வு நூல் களும் ஆய்வுக்கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. கிருஷ்ணப்பிள்ளை விசாகரூபனின் "புலம்பெயர் கவிதை உருவம், உள்ளடக்கம், உணர்த்தும் முறை", சித்திர லேகா மௌனகுருவின் "இலங்கைத் தமிழரின் புலம் பெயர் இலக்கியம்", "புலம்பெயர்வும் பண்பாடும் ஈழத் தமிழரின் புலம்பெயர்இலக்கியம்", சு.செல்வகுமாரனின் "ஈழத்துப் புலம்பெயர் இலக்கியம் பன்முக வாசிப்பு", தெ. வெற்றிச் செல்வனின், "ஈழத்தமிழர் புகலிட வாழ்வும் படைப்பும்", முதலான நூல்களும் மற்றும் சுரேஷ் கனக ராஜாவின் "ஈழத்துத் தமிழ்க் கவிதை அடுத்த கட்ட வளர்ச்சி", கொ.றொ.கொன்ஸ்ரன்ரைனின் "புலம் பெயர்தலும் புலம் பெயர்ந்த ஈழத்தமிழரின் இலக்கிய முயற்சிகளும்", பேராசிரியர் செ.யோகராசாவின் "புலம்பெயர் கலாசாரமும் புகலிட இலக்கியமும்", எ.நதிராவின் "புலம் பெயர் பெண்கள் கவிதைகளில் புலம்பெயர்வு வாழ்வும் அடையாளச் சிக்கல்களும்" முதலான கட்டுரைகளும் புலம்பெயர்த் தமிழ் மக்களின் பாடுபொருளுக்கூடாக அவர் தம் வாழ்வியற் அம்சங்களை ஆய்வுக்குட்படுத்து கின்றன.

நவீன கவிதைகள் குறித்தான ஆய்வுகள் விரிந்து பரந்து பட்ட சூழலில் அவற்றினை திறனாய்வு செய்வது என்பது கங்கையை அகத்தியர் கமண்டலத் துக்குள் அடக்கிய கதையாகவே முடியும். என் அறிவுக்கு எட்டிய வகையில் கவிதைத் துறையில் மறைக்கப்பட்ட விடயங்களையும் பார்க்கப்படாத பக்கங்களையும் வெளிப்படுத்தியுள்ளேன்.

●

கேலியான வேள்வி

பட்டுத்தெறித்த ஒளிக்கதிரில்
வெட்டிச்சரிந்தன வெள்ளாட்டுத்தலைகள்
அருவிகொட்டி ஓடும் ஆறுபோல்
குருதி கொட்டி நனைந்தது பூமி

பிணம் தின்னி மனம் குளிர
பிசகாது வசமானது வேள்வி
வேள்வியால் பிறந்தது கேள்வி
கேள்வியால் பிறந்தது வேள்வி

கேள்வியும்வேள்வியும்
எங்கள் வாழ்வில் கேலியானது

– செல்லக்குட்டி கணேசன்

இத்தாற் சகலருக்கும்...



ஒரு –
நீண்ட காத்திருத்தலுக்குப் பின்னரான
நன்கு திட்டமிடப்பட்ட அதிரடித் தாக்குதலைப் போல
காலா கால மௌனத்தின் பின்
என் கபாலம் திறந்து
எந்நேரமும் வெளிக்கிளம்ப
தயாரான நிலையில் கவிதை.
வராமலேயே போய்விட்ட
எம் வசந்த பொழுதுகளும்
காலச் சிறைக்குள்
அடைபட்டுப் போன
ஞாபக உளைச்சல்களும்
இனத்தின் பேரால்
மொழியின் பேரால்
உறிஞ்சப்பட்டுப் போன
எம் இளமைக் காலங்கள்
கடந்து போன புகையிரதமாய்
மூன்று தசாப்தச் சுமையோடு
ஏமாற்றப்பட்ட
பயணிகளாய் நாம்....
குருதி நிறமாகும் நிலமாகி
நினமணம் வீசும் என் நாடு
இன்று உலகமெங்கும்
தன் வெற்றிக் கதை போதிக்கும் நிலையில்..
குப்பிக்குள் அடைத்து
பாம்புப் புற்றுக்குள் எறிந்ததுவாய்
உலகின் மனிதாபிமானம்.
சொந்த முகவரி மறந்து ...
அச்சத்தில் அந்நியமாய்
தம்மை அடையாளப்படுத்தவே
அவஸ்தையுறும் ஒரு இனம்
மனித கபாலத்தே சதைப்பிச்சை யாசிக்கும்
போலி மனிதர்கள்.
மீண்டும் மீண்டும்,
இனக் குட்டைக் குழப்பித்
தூண்டிற் புழுக்களுடன்
உறுமீன் விலையெண்ணி
மோனத் தவத்துடன் அயல் முதலைகள்
மிருகங்கள் பசியாற
தம் உறவுகளையே உணவாக்கும்
அகிம்சா தேசம்...
சாதி, மதம்,பேதம், வாதம்
முடிவற்ற கால் கொண்ட "ஆக்டோபஸ்" இடை
நாம் சிக்க
எவர் உயிர்க்கும் அர்த்தம்
இல்லையென்றே போனதிங்கே
இனிப் பிரதேசங்கள் மாறலாம்
புதிய நினைவுச் சின்னங்கள் தோன்றலாம்
புரிந்து கொள்ளுங்கள் (படிக்கும்)
சரித்திரம் என்பது நிகழ்வது அல்ல
சிலர் நினைத்தபடி எழுதி வைப்பது
தேவனே !
தேவனே!!
மீண்டும்

பதுங்குகுழி வீடு – 2009



நிலமும் கடலும்
நந்திக்கடல் நீரேரியும்
மரணத்தை ருசித்த காலமது!

அதிலும்
மண்ணின் நாவுகள்
பிணத்தின் சுவையைச் சுவைத்துச் சுவைத்துச்
சலித்துப்போன நாட்களது.

போர் வெறியில்
இருபக்கமிருந்தும் ஏவகணைகள் ரவைகள்
ராங்கிகளின் உறுமல்

மரணங்கள்
மரத்திலிருந்து இலைகள் உதிர்வது போல்
மிக எளிதாய் நடந்தபடியிருக்க
புது மாத்தளன் கலைவழியே
முள்ளிவாய்க்கால் வரைக்கும்
அலையடிக்கும் இருள் கடலைச்சபித்து
கடலுக்கப்பால் கனவுகளை
விதைத்தபடி நடந்தேன்.

நம்பிக்கையிழந்த நாட்களெனினும்
நம்பிக்கையோடிருந்தோம்.

மேலிடத்தில் திட்டங்கள்
மேலும் இருப்பதாய் பேசியதை நம்பினோம்.
பார்த்திருந்தோம் பசித்திருந்தோம்
காலம் கனியுமெனக் காத்திருந்தோம்

துயருற்று அழுதோம்
துக்கித்துத் தொழுதோம்
குற்றுயிராகி நாய்
குருதியில் கிடந்தோம்
உறுப்புக்கள் இழந்தும்
உறுதியாய் இருந்தோம்
விம்மினோம் விசும்பினோம்

நாளுக்கு நாள் வியூகங்கள் மாறின
தளபதிகள் மாறினர்
தளபதிகள் காணாமல் போயினர்

சேனையதிர்ந்தது
திக்கொன்றாய்த் திசையொன்றாய்
குழுக்கள் பிரிந்தன

அப்போதும் நாமெல்லாம் நம்பிக்கையோடிருந்தோம்
குருதி நிறைந்த துர்மணம் வீசும்
பதுங்கு குழிகளுக்குள்
நம்பிக்கையோடுதானிருந்தோம்.

கடலைக் கடக் ஓட்டியுமில்லை
கரைபோய்ச்சேர ஒருவர்தானுமில்லை

கர்த்தரே காப்பாற்றும்
எப்போது உன்னிடத்தில்
இளைப்பாறுதல் பெறுவேன்
என் இருதயம் கலங்காதிருக்க
வழி செய்வாய் இறைவா.

"நிர்க்கதியான மக்களின் காவலரண்" என தன்னைப் பிரகடனப்படுத்திய சிலி தேசம் தந்த உன்னதகவி

பப்லோ நெரூடா



கெகிறாவ ஸ்லைஹா

பூமிக்கும் கோள்களுக்குமிடையிலான
மனிதனின் பயணம் தொடங்கியாயிற்று.
களைத்துச் சலித்த மாந்தர்
அமைதி குடிகொண்ட நிலவைக் குழப்பியடித்து
அவர்தம் போதைப்பொருட்களுக்கும்
இதரபிற வியாபாரப் பண்டங்களுக்கும்
அங்கே கடை விரித்தாயிற்று.

முதிர் திராட்சை
பூமியெங்கும் விளைந்து கிடக்கிறது
இப்போதிங்கே.
கடலுக்கும் கோர்டிலெராஸ் மலைகளுக்குமிடையே
திராட்சைரசம் வழிந்தோடப் போகிறது
இனியிங்கே.

என் அன்னைபூமி மீது
செர்ரிப்பழங்களின் நர்த்தனங்கள்.

என் கறுப்புச் சிறுமியரின் இசைப்பாடல்கள்.
அவர்தம் இசைக்கருவி மீதில்
பட்டுப் பளபளக்கும் நீர்த்துளிகள்.

திராட்சை ரசம் இங்கே விதவிதமாய்,
அற்புதச் சுவையில் நா ஊற
அருந்துவோன்தனைக் கிறங்கச் செய்யும்
விதமாய்.

கடலும், நிலமும் கொண்டதென் இல்லம்.
கபில நிறத்து விதையென அழகிய கோலம்
காட்டும்
என் பெண்மணியின் உருண்ட பெரிய கண்கள்.

பசுமையும், வெண்மையுமாய்
தனக்குத் தானே ஆடையணிவித்துக்
கொள்ளும்
இரவில் நான் காணும் கடல்.
நிலவொளியில், கடல் சென்ற
மணப்பெண்ணாய்
உறங்கும் அலை நுரைகள்.
இல்லையில்லை,
நான் என் கிரகத்தை மாற்றிக் கொள்ளப்
போவதில்லை....!!!

தன் தாய்மண்ணின் மீது கொண்ட தீராக் காதலினால் வேற்றுக் கிரகத்துக்கு வெளியேறுதல் குறித்து அசட்டையாய் இருக்க விரும்புகின்ற ஒரு கவிஞனின் குரல் இது. 97 களில் நான் ஆங்கில ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போதுகளில் எனக்குக் கற்பிக்கப்பட்ட இலத்தீன் அமெரிக்கக் கவி பப்லோ நெரூடாவின் மேற்சொன்ன "The Lazy one" கவிதையை பின்னாளில் இங்ஙனம் மொழிபெயர்த்து என் "பட்டுப்பூச்சியின் பின்னுகை போலும்..." முதல் கவிதைத் தொகுதிக்குச் சேர்த் திருந்தேன். பப்லோ நெரூடா குறித்த என் தேடல் பின்னாளிலும் முடிவுறாமல் தொடந்த வண்ண மிருந்தது.

நெப்தாலி ரிக்காடோ ரேயிஸ் பசோல்டோ என்று இயற்பெயர் கொண்டிருந்த பப்லோ நெரூடா ஸ்பானிய மொழியின் உன்னதக் கவி. ஜேன் நெரூடா என்கிற செக்கோசுலோவாக்கியக் கவிஞனின் மீது கொண்ட காதலினால் தனக்கான புனைபெயரை அவரே இப்படித் தெரிந்து கொண்டார்.

தந்தை ஒரு புகையிரத நிலைய ஊழியர். தாய் ஒரு பள்ளி ஆசிரியை. நெரூடா பிறந்து இரண்டே மாதங்களில் தாய் இறக்க, அவர் தந்தை ஒன்பது வருஷங்களுக்கு முன்னம் தன்னோடு வாழ்ந்து ஒரு குழந்தையையும் பெற்றுக் கொண்டிருந்த ஒரு பெண்ணை மணந்து கொண்டார். அந்தச் சகோதரி லோராவுடன் வளர்ந்தார் நெரூடா. சிற்றன்னை கார்டியா மார்வாடி நெரூடா மீது அளவற்ற பாசம் கொண்டிருந்தார். பெருந்தாய் என்று அவரைப் புகழ் வாராம் நெரூடா. முதல் முயற்சியாக தனது எட்டாம் வயதில் நெரூடா எழுத முயற்சித்த கவிதைகூட அத்தாயைப் பற்றியதாம்.

ஜூலை 12, 1904 இல் பிறந்த நெரூடா செப்டம்பர் 22, 1973 69ம் வயதில் சந்தியாகோ சிலியில் இறந்தார். அவர் சிலி தேசம் கண்ட அற்புதமான கவிஞர் மட்டுமல்ல கல்வியியலாளரும், அரசியல்வாதியும்கூட. பசுமை யினதும் நம்பிக்கையினதும் அடையாளமாக பச்சைநிற மை கொண்டே எழுதுவாராம் நெரூடா. இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த கவியாக, சமூக உணர்வு கொண்ட போராளியாக, மார்க்ஸிய தத்துவங்களில் ஈடுபாடு கொண்டவராக மிளிர்ந்த நெரூடா இலங்கையுட் பட பல நாடுகளில் ராஜதந்திரியாகப் பணியாற்றியவர். சிங்கப்பூர், பர்மா போன்ற நாடுகளில் அவர் தொழில் புரிந்திருக்கிறார்.

பதின்மூன்றாம் வயதில் அவர் படைத்த கட்டுரைத் தொகுப்பு "Enthusiasm and Perseverance" வெளிவந்தது. பருவ வயதினனாகயிருந்தபோதே கவி அந்தஸ்து கிடைத்தது அவருக்கு. அதிகமாக ரொபர்ட் ஃப்ரொஸ்ட், ஜேம்ஸ் ஜொய்ஸ், வோல்ட் விட்மன் போன்றோரைப் படித்ததில், பலவிதமான ஸ்டைல்களில் எழுதினார். சர்ரியலிஸ்ட் கவிதைகள், சரித்திரக் கதைகள், அரசியல் கொள்கை விளக்க அறிக்கைகள், காதல் கவிதைகள் என பல விதமாய் அவரது படைப்புகள் வெளிவந்தன. அவர் எழுதுவதை அதிகம் எதிர்த்தவர் அவர் தந்தை. மற்றவர்கள் பெரும் ஊக்குவிப்பு நல்கினார்கள். கப்ரியேல் மிஸ்ட்ரால், பின்னாளில் நோபல் பரிசை வென்றவர், நெரூடாவின் எழுத்துக்கு பெரும் ஆதரவு நல்கினார். "Books of Twilight" "வைகறைக்கதிர்கள்" முதல் கவிதைத் தொகுப்பாகும். அது அவரது பத்தொன்பதாம் வயதில் 1923 இல் வெளிவந்தது. அவரது "20 Love Poems and Songs of Despair", "20 காதல்கவிதைகளும் ஒரு விரக்திப்பாடலும்" 1924 களில் வெளிவந்தபோது மக்களுக்குள் பெரும் கிளர்ச்சி யூட்டிய ஸ்பானிய மொழி நூலாக அது கருதப்பட்டது. அதுவே நெரூடாவை புகழின் உச்சியிற் கொண்டு வந்து நிறுத்தவும் செய்தது.

"ஆதலினால்
நான் காத்திருக்கிறேன்
ஒரு தனிமைப்பட்ட வீடென,
நீ மறுபடி எனைக் காணும்வரை
என்னில் வந்து நீ வாழும்வரை
அதன் பிறகு,
என் யன்னல்களுக்கு வலி
எடுக்கின்றவரைக்கும்..."

என்றெல்லாம் அதிலே சொட்டச் சொட்டக் காதலை வடித்தவர் பப்லோ நெரூடா. அவரது இன்னொரு கவிதை இப்படி நீளும்.

"நான் உனை விட்டு வந்தேன் பீதியுடன்
மணிப்பளிங்காய் என்னிலிருந்து நீ
சஞ்சலத்தோடு மறைகிறாய்

காதலின் மிகைப்பிலோ என்னால் ரணமுற்றோ
நான் அளித்த முடிவற்ற வாழ்வின் பரிசுகள் குறித்து
நின் நயனங்கள் மூடிக்கிடக்கின்றன...
எனதன்பே,
நமக்குள் இருந்த தாகம்தனை
ஒருவருக்கொருவர் அறிந்திருந்தோம்.
அனைத்து நீரினையும் குருதியினையும்
முழுதுமாய்க் குடித்திருந்தோம்.
நம்முள் ஒருவருக்கொருவர்
விஞ்சிய பசியினை கண்டுணர்த்திருந்தோம்.
தீ சுட்டெரித்துக் கடித்த மாதிரி
புண்களை ஒருவரில் ஒருவர் எஞ்ச வைத்து
ஒருவரையொருவர் கடித்திருந்தோம்
ஆயினும்,
காத்திரு எனக்காய்
உன் இனிமைகள் அனைத்தும்
சேகரித்து வைத்து
தருவேன் நான்
உனக்கும் ஒரு ரோஜா...

1950இல் சர்வதேச சமாதானத்துக்கான விருதை வென்றிருந்த நெரூடா 1971 இல் இலக்கியத்திற்கான நோபல் பரிசையும் வென்றார். 1964 இல் தனக்குக் கிடைத்த நோபல் பரிசை மறுத்த பிரான்ஸிய தத்துவாதி லான் போல் சார்தர் அவர்களிடம் அவ்வாறு மறுப்பதற் கான காரணம் வினவப்பட்டது. தனக்கு முன்னம் அதற்கு பப்லோ தகுதியானவராயிருக்கிறார் என பதில் வந்ததாம் அவரிடமிருந்து. கொலம்பிய நாவலாசிரியர் கப்ரியேல் கார்ஸியா மார்கோஸ் நெரூடா பற்றிக் குறிப்பிடுகையில் "சகல மொழிகளிலும் இருபதாம் நூற்றாண்டின் மேலான கவி அவர்" என்கிறார்.

சிலி கம்யூனிஸக் கட்சியின் செனட்டராக இருந்தவர் பப்லோ. 1948களில் சிலியின் ஜனாதிபதி கோல்ஸேல்ஸ் கம்யூனிஸத்தை மறுத்தபோது, நெரூடாவின் கைதுக்கான வாரண்ட் கட்டளை பிறப்பிக் கப்பட, தோழர்கள் அவரை மறைத்து வைத்தனர். பின்னர் ஆர்ஜென்டினாவுக்குத் தப்பித்துச் சென்றார். தன்னை "வன்கண்ணாளர்களின் வைரி" என்றும், "நிர்க்கதியான மக்களின் காவலரண்" என்றும் பிரகடனப்படுத்திய எழுத்தாளர் அவர். நோபல் பரிசை ஏற்றுக்கொண்டதாக அறிவித்த பின்னம், சிலியின் சோஷலிஸ ஜனாதிபதி சல்வடோர் ஏலென்ட் அவரை 7000 மக்கள் அளவில் கூடியிருந்ததோர் அவையிலே பேசுமாறு அழைத்து கௌரவப்படுத்தினார். 1975 இல் ஏலென்ட் அரசு கவிழ்க்கப்பட்டபோது, புற்றுநோய் கண்டு சந்தியாகோ மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருந்த பப்லோ நெரூடாவை கன்சவேர்டிவ் தலைவர் பினேஷோட்டின் இராணுவப்படை மக்களிடமிருந்து தனிமைப்படுத்தியது. இறந்தபோது பொது நிகழ்வாக அதைக் கொண்டாட அரசு அனுமதி வழங்காதிருந்தது மட்டுமன்றி, உயிர்பிரிந்த சில மணித்தியாலங்களில் அவரில்லத்தை தீயிட்டுக் கொழுத்தவும் செய்தது. அவரது இறுதி ஊர்வலத்திலே ஊரடங்கையும் மீறி துயர்தோய்ந்த முகங்களோடு மக்கள் பாதைகளில் குழுமி நின்றார்கள். அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டு சில மணித்தியாலங்களில் சந்தியாகோவில் ஸன்போர்ஜா நிர்வாகப் பிரதேசத்தில் இராணுவ சிப்பாய்களினால் தீக்கிரையாக்கப்பட்ட ஆயிரக்கணக்கான நூல்களில் நெரூடாவின் நூல்களும் அடங்கும். அவரது சுயசரிதம் சொல்லும் கவிதைத்தொகுதி அவரது மறைவின் பின்னர் 1982 இல் வெளியானது.

வன்முறைகளை உணர்ச்சி ததும்ப எதிர்க்கிற தொனி அவருடையது. அவரது "Explaining a few things.." "சிலவற்றுக்கு சில விளக்கங்கள்" கவிதையானது, ஸ்பெயினின் சிவில் யுத்தத்தை பின்னணியாகக் கொண்டது.

"நீங்கள் கேட்டிடப் புறப்படுவீர்கள்.
தரையெங்கனும் பூத்துக்குலுங்கிடும்
லைலக் புஷ்பங்கள்
மற்றும் பொப்பிப்பூ போர்த்திய
பிரகிருதிகள் அனைத்தும் எங்கேயென...?
கூடவே,
பறவைகளும், அவைதம் பொந்துகளுமாய்
சொற்கள் பிரவாகம் எடுத்து
மழையோ மறுபடி சோவெனக் கொட்டுதல் பற்றி.
நான் சொல்வேன் எனக்கு நடந்தவை
அனைத்துச் செய்திகளும் உங்களுக்கு..

மாட்ரிட் நகர்புறச் சுற்றுப்புறத்தே
மணிகளும், கடிகாரங்களும், மரங்களும்
சூழ நான் வாழ்ந்திருந்தேன்.
காய்ந்து போன காஸ்ட்டிலின் வதனம் தனை
கண்ணெட்டும் தொலைவிலிருந்து
உங்களுக்குக் கண்டிடலாம்.
அஃது ஒரு தோற்சமுத்திரம் எனலாம்.
அழகு மலர்களின் இல்லமென
எனதில்லத்தை அழைப்பார்கள்.
ஏனெனில்,
எங்கனும் ஜெராண்யம்
பூத்து மிகைத்திருக்கும்.
நாய்களும், குழந்தைகளும்
குதூகலமாய் விளையாடப்
பூத்துச் சிரிக்குமென் இல்லம்.
உடன்பிறப்பே சொல் ஞாபகம் உண்டா,
பூமி மீதில் நின்று கொண்டே
ஆனி மாதத்துச் சுடரொளியில்
மூழ்கிய புஷ்பங்களை
உன் வாயில் ஊற்றியது
ஞாபகம் உண்டா சொல்?
அனைத்தும் பேரிரைச்சலாய்
வர்த்தகக் கூக்குரல்கள்,
சிலைகள் நிமிர்ந்து மிளிர்ந்த நம் பேட்டை,
சூரியவொளி

கூராய்த் துளைக்கும் கூரைகள்,
பாதைகள் கனத்த நெரிசல்கள்,
ஆவல் தூண்டும் சுவைமிகு மாப்பண்டங்கள்.
கும்பமாய்க் குவிந்திருக்கும் மீன்களின் சந்தை,
கடலைப்போலக் குவிந்த தக்காளிப்பழங்கள்,
தந்தம் கடைந்தெடுத்தாற்போல மின்னும்
உருளைக்கிழங்குகள்,
மீற்றர், லீட்டரென ஒலித்தோங்கும்
ஜீவிதத்தின் அர்த்தம்நிறை ஒலிக்கலவைகள்.

அன்றோர் காலைப்புலர் பொழுதில்
அகோரமாய் உயிர் பசித்த மிகையுணர்வில்
கோரத்தீ கனன்று புறப்பட்டது பூமி தனிலிருந்து.
அன்று தொட்டு தொடர்ந்தது
எரிபிழம்புகளும், வெடிமருந்தும்
கூடவே குருதியினாறும்.
அறியாததா நீ உடன்பிறப்பே?

எசமாட்டிகள் புடைசூழ
ஆகாய விமானங்களிலும்,
கப்பல்கள், தோணியிலும்
வந்து வந்திறங்கினர்
பச்சிளங் குழந்தைகளைக் கொல்ல
கொள்ளையர்கள் கூட்டமென.
விளையாடிய குழந்தைகளின்
குருதி வீதியெங்கிலும் பாய்ந்தது
சடைச்சல் ஏதுமின்றி.
ஓநாய்களே வெறுப்புதிர்க்கும்
ஓநாய்கள் கூட்டமது.
பாம்புகளே வெறுப்பு கொள்ளும்
விஷப்பாம்புக் கூட்டமுமது.
முகத்துக்கு நேரே நான்
அலையெனவே
ஸ்பெயினின் குருதியே கண்டேன்.
பெருமை பிடித்தலைந்த கத்திகள் தாங்கிய
அரக்கர்கள் அவர்தமை
மூழ்கடிக்கப் புறப்பட்ட அலையாய்.
துரோகத் தலைவர்களே,
பாருங்கள் இறந்து விட்ட எனதில்லத்தை.
பாருங்கள் சிதறுண்ட ஸ்பெயினை.
பூக்களுக்கு பதிலாய்
ஒவ்வோர் இல்லத்திலும்
உலோக மழை பொழிந்திற்று.

ஸ்பெயினின் முடுக்குகளில்
ஸ்பெயின் மீள முளைக்கிறது.
இறந்த குழந்தைகள் கண்களிலிருந்து
துப்பாக்கிகள் முளைக்கின்றன.
ஒவ்வோர் குற்றத்திலிருந்தும் தோட்டாக்கள்
தோற்றம் பெறுகின்றன.
ஒவ்வொன்றும் ஒருநாள்
ஒரு இதயத்தை காவுகொள்ளும்.

நீங்கள் கேட்டிடப் புறப்படுவீர்கள்
எனதருமைத் தாய்நாட்டின்
பெரும் எரிமலைகள், இலைகள், கனவுகள்
பற்றிப்பாடிய என் கவிகள் எங்கென்று.

வாருங்கள் வந்து பாருங்கள்
வீதியெலாம் பாயுங் குருதி.
வாருங்கள் வந்து பாருங்கள்
வீதியெலாம் பாயுங் குருதி.
வாருங்கள் வந்து பாருங்கள்
வீதியெலாம் பாயுங் குருதி....!!!

வாழ்நாளில் நாற்பதுக்கும் அதிகமான நூல்களை எழுதினார். சமூகப் போராட்டங்கள் காரணமாக அவரை நாடுகடத்தவும் செய்தார்கள். அப்போது அவர் எழுதியது "Canto General"(1950). தவிர அன்றாட வாழ்வு பற்றி அவர் எழுதியது "Elementary Odes"(1954).

நெரூடாவின் "Tonight I can write The Saddest lines..." கவிதை அவரது அழகான கவியாற்றலுக்கு சான்று பகரும். 1924இல் எழுதப்பட்டது அது.

"இன்றிரா எனக்கு இயற்றுதல் இயலும்
ஆகவும் துயரார்ந்த வரிகள் தமை.

எழுத, உதாரணம் கொள்வதெனில்
"தாரகைகள் நீலநிறத்தே தொலைவிலிருந்து
மின்னி நடுங்க இரா சிதறுண்டிருக்கின்றது."

நடுநிசிக்காற்று ஆகாயத்தே
சுற்றிச்சுழன்று பாடும்.
இன்றிரா எனக்கு இயற்றுதல் இயலும்
ஆகவும் துயரார்ந்த வரிகள் தமை.
அவளை நான் நேஸித்தேன்
சிலபோது அவளும் அவ்விதமே நேஸித்தாள்
என்னை.

அது போன்றே இராக்கள் முழுதும்
என் கரங்களுள் அவளை
சிறைப்படுத்தியே இருந்தேன் நான்.
முடிவற்ற ஆகாயத்தின் கீழே அவளை
மறுபடி மறுபடி நான் முத்தமிட்டேன்.

அவளை நான் நேஸித்தேன்
சிலபோது அவளும்
அவ்விதமே நேஸித்தாள் என்னை.
அவளது பெருத்த அமைதிநிறை நயனங்களை
எவர்தான் நேஸிக்காதிருத்தல் இயலும்..

இன்றிரா எனக்கு இயற்றுதல் இயலும்
ஆகவும் துயரார்ந்த வரிகள் தமை.
அவள் என்னோடு இல்லையென்று சிந்திக்க
அவளை இழந்துவிட்டதாய் நான் உணர
இந்தப் பெரும் இரவை

அவளின்றி இன்னமும் கனக்கும்
இப்பெரும் இரவைக் கேளுங்கள்.
வரிகள் வீழும் ஆன்மாவின் மீதில்
பனி புல்வெளியில் கொட்டுதல்போல.

அவளைப் பேணவியலா என் காதல்
என்ன அர்த்தமும் உடையதன்று.
நட்சத்திரங்கள் நிரம்பியதாயிருக்கிறது இரவு.
இரா சிதறுண்டிருக்கின்றது அவள்
என்னோடில்லை.

இது மட்டும்தான்.
தொலைவில் யாரோ பாடிக்
கொண்டிருக்கிறார்கள்.
எனது ஆன்மா திருப்தியுற்றதாயில்லை
அவளை இழந்துவிட்டிருப்பதில்.

என் பார்வையோ அவளைத் தேடுகிறது.
அவளை என்னோடு நெருங்கிடச் செய்தாலும்
இதயமோ அவளைத் தேடித்திரிகிறது.
அவள் என்னோடில்லை.

அதே மரக்கிளைகளுக்கும்
மரங்களுக்கும் வெண்மை பரத்திய அதே இரவு
நாமும் அந்நேரத்தின் அதுபோலயில்லை.

நான் அவளை நேஸிக்கவில்லை.
அது நிச்சயம். ஆயினும்,
நான் எப்படி அவளை முன்னம் நேஸித்தேன்..
என் குரலோ
அவளை சென்றடைகின்ற தென்றலைத்
தேட முயலுகிறது.

எனதான முத்தங்கள் போல.
அவளது குரல்,
அவளது பிரகாசம் ஒளிரும் உடல்,
முடிவிலி நயனங்கள்.
நான் அவளை நேஸிக்கவில்லை.
அது நிச்சயம்.
ஆயினும் சிலவேளை நான்
அவளை நேஸிக்கிறேன்.
காதல் குறுகியது.
மறத்தலோ மிக நீளமாய் நீள்கிறது.
என் கரங்களுள் அவளை
சிறைப்படுத்தியே இருந்தேன் நான்
இதுபோன்ற இரவுகளில்
அவளை இழந்து விட்டிருப்பதில்
என் ஆன்மா திருப்தியாய் இல்லை.

இது
அவள் உருவாக்கி
நான் அனுபவிக்கவென்றான
இறுதியான வலி ஆயினும்
இக்கடைசி வரிகளை
எழுதுவேன் நான் அவளுக்கேயென்று.

இறுதியாய்,
பப்லோ நெரூடாவின் "உனது பாதங்கள்" கவிதை அனைத்தையும் விஞ்சிய காவியக் காதலை சொல்லுகிறது.

உன் முகம் பாராதிருக்கிறபோது
பார்த்தேன் உன் பாதங்களை.
வளைந்த எலும்பின் கடினப்பாதங்கள்.
உனக்கவை நிறைய ஒத்தாசை புரிகின்றன
மேலிருக்கும் இதமான பாரத்தின்
சுமையைச் சுமந்திருக்க.
உனதிடை, மார்பகங்கள்,
அவை மீதிருக்கும் ஊதாக்கதிர்நிறத்து
இரட்டை முலைக்காம்புகள்.
உன் கண்களை ஆசுவாசமாய் நகர்த்தும்
அவற்றின் குழிகள்
வார்த்தைகள் உதிரும்
உனதகன்ற கனிவாய்
சிவந்தவுன் மயிரிழைகள்
என் சின்னக் கோபுரமே..
ஆயினும்,
நேஸிப்பேன் உன் பாதங்களை
ஏனெனில்,
அவை நடந்தலைந்தன பூமியில்
காற்று மழைநீர் எதையும் பாராமல்
என்னை நீ வந்தடையும் வரை
என்னில் நீ வந்து சேரும்வரை....

வேறெவரதோ முத்தங்கள் அவள் மீதில்

பச்சோந்திகளே பதில் சொல்லுங்கள்

அதோ எரிந்து போய் விட்டன...
சில்லறைக்கடை முதல் –
ஆட்டுக்கொட்டகை வரை,
எண்ணிலடங்காத
காயம் கண்ட உள்ளங்கள்.
இன்னொரு மியன்மாரின் – ஈமானிய
அழுகுரல் பேருவளை மண்ணில்
அரங்கேறுகின்றது – இதோ பாருங்கள்!

அடித்தான், எரித்தான், வெட்டினான்
கடைசியில் வைத்தான் வேட்டு, இரு
உயிர்களுக்கு கூடு –
தந்தையைக்காணாது
தாயின் சேலையில் தொங்கியழும்
அவர்களின் பிஞ்சு மழலைகளின்
ஏக்கங்களுக்கு
விடை சொல்வது
யார்...?

எரிந்துவிட்ட
ஏராளமான சோகை
வர்த்தகத்திற்கு
நிவாரணமளிப்பது – யார்?
முன்னால் எரிந்து சாம்பலான
இதே மண்ணின் மைந்தனுக்கு
மாதங்கள் உருண்டும் கிடைத்தது
என்ன...?

ஓர் நாணயத்தைக் கையில் எடுத்த
படுமுட்டாள் கூட ஓர் பக்கம்
சின்னத்தையும் மறுபக்கம்
வெறுமையையும் பார்த்தால்
தலையை சொறிந்து சிந்திப்பான்
தானே இது என்ன நாணயம்
என்று....!!

ஆனால்
இந்த அறிவிலி
ஹலால் ஹறாம் என்று எழுப்பிய
கோஷம் – அந்நியரையும் இஸ்லாமிய வானில்
ஹலால் ஹறாம் பிறையைத்
தேடத் தூண்டியது

அல்குர்ஆன்...அல்குர்ஆன்...என்று
தூக்கிக்காட்டினான் அந்த அறிவிலி
அதில் பற்றில்லா முஸ்லிம்களுக்கும்
ஏன்... கவிஞர்களுக்கும் கூட
அது, இதைப்படி படி

என்பது போல் கேட்டது!
"ஸீப்ஹானல்லாஹ்"

புதினம் என்னவென்றால்,
எட்டுத்திக்கிலும் சிதறிக்கிடந்த
எண்ணற்ற ஜமாத் கொள்கைகளை
ஒன்று கோர்க்க வைத்தது!

அல்கைதா அல்கைதா என்று இல்லாத
களீதாவைக்கூறி – இலங்கையின்
தலையெழுத்தில் பத்ரின் "முஸ்அபையும்"
"முஆதையும்" உருவாக்கிப் போட்ட
ஆட்கள் இன்னும் கைதாகாமல்
இருக்கிறார்கள்.

ஆறு வயது இளவன் முதல் – அறுவது
வயதுக்கிழவன் வரை
பலஸ்தீனக்காரணைனப் போல்
கற்களுடன், சமையலறைப்பொருட்களுடன்...
ஸீப்ஹானல்லாஹ்....!!
நம்மாயுதம் அதுதான் பாருங்கள்

ஏனாம்.... முடிந்ததும் முடியவில்லை
முஸ்லிம்களுக்கு மாத்திரம்
ஊரடங்குச் சட்டம் –
அவர்களுக்கு இட்ட சட்டம்!

நிறைமாதக் கர்ப்பிணி கூட குறுமதில்
தாண்டிய பதிவுகளை மிதித்துப்போட
முடியாது – காக்கிச்சட்டையும்,
கறுப்புக்கோட்டும் – கூடான
அரச சீட்டும் – சிவப்புத்துண்டும்
தாங்கும் காந்திகளுக்கு
"பச்சோந்திகள்" என்று
பச்சை குத்தப்பட்டு விட்டது!

"சட்டத்தை உடைப்பதற்கு
நாட்டில் ஆயுதம் வைத்திருப்பது
நாங்கள் தான்" என்பதை
உலகத்திற்கு உரக்கச்
சொல்லிவிட்டார்கள் – அதிகம் பேர்கள்!!!

உலகமன்றமே அமைதியிழந்து
கோஷம் எழுப்பி
இலங்கை மைந்தனுக்க
நீதி வேண்டும் வேளையிலும் கூட
யாசகர் முதல் வேற்றுதேச இனம் வரை
பேசுபொருளான போதிலும் –
நீதி இன்னும்
பீதியில் இருப்பது
ஏன்??
இது நீதியைச்சுட ஏவிவிட்ட
உலகின்
கேள்விக்கணை!!!

போலிக்குற்றச்சாட்டு
ஆட்சிப்பொடுபோக்கு
ஆயிரம் களவுகள்
"நிரபராதி" சிறைக்குள்
"குற்றவாளி" குளிர் அறைக்குள் – சொகுசு
ஏன்???

பதில் சொல்லுங்கள் – ஏனெனில்
நீங்கள் கண்டவாறு
தூக்கிவந்து
போட்டுடைத்த
சட்டத்தின்
சொந்தக்காரி நான்!!!

நதியின் முகடு

நதிகள் முன்னோக்கி பாயவேண்டும்
நாதங்கள் நிழலாகி காய வேண்டும்
விழிகள் சிவப்பாகி பூக்க வேண்டும்
விடியல் சமனாகிக் காக்க வேண்டும்

பள்ளிக்கல்வி தாய்மையாக வேண்டும்
பட்டக்களரி தூய்மையாக வேண்டும்
வெள்ளைப்புறாக்கள் பறக்கவேண்டும்
வெற்றி நிலாக்கள் நிறக்க வேண்டும்

உழவன் கலப்பை தங்கமாக வேண்டும்
உழைப்பவன் வியர்வை வைரமாக வேண்டும்
இளைஞன் பார்வை கணனியாக வேண்டும்
இல்லாதவன் கோர்வை மாளிகையாக வேண்டும்

யுவதியின் மூளை மகுடமாக வேண்டும்
யுகத்தின் ஆணை மனிதமாக வேண்டும்
அகதியின் வாழ்வு ஆனந்தமாக வேண்டும்
அகிம்சையின் வார்ப்பு பூரணமாக வேண்டும்

சாதித்தடிப்பு அழியவேண்டும்
சதிர்க்கூத்து அழியவேண்டும்
புதிய உலகம் பிறக்க வேண்டும்
பூட்டிய விலங்கு உடைய வேண்டும்

சங்கப்பலகை செழுமையாக வேண்டும்
சரித்திரத்த தேவதை முழுமையாக
வேண்டும்
தங்கத்தமிழ் மழையாக வேண்டும்
தாயக உணர்வு மலையாக வேண்டும்

– நல்லை அமிழ்தன் –

தேர்தல் காலம்

இன்று முதல் நம்
சுண்டு விரலுக்கும் ஆபத்து...
வேட்பாளர்களெல்லாம்
மை கொண்டு
அலைகிறார்கள்
பச்சை குத்த...

பயமாயிருக்கிறது
அதிலும் கலப்படமோ அவர்களின்
வாக்குறுதிகளைப் போல...
அள்ளித் தெளிக்கிறார்கள்
சாக்கடை வாய்களால்
நாளைக்கு உங்களுக்கு
விடிவென்று...

ஒருவருக்கொருவர்
வசைப்பாடுகிறார்கள்
ஒன்றுமில்லா அரசுக்கு
துதிபாடுகிறார்கள்...

மந்திரிகளின் கஜானாவெல்லாம்
கரைந்து செல்கிறது
குவாட்டருக்கும்
கோழி பிரியாணிக்கும்...

தேர்தல் முடிந்தால்
மீண்டும் நிறைந்து விடும்
கஜானாக்கள்...
வாரிக் கொடுத்த மக்களுக்கோ
வாழ்க்கையெல்லாம்
முட்கள்...

– பிரசன்னா–

உள்ளவனே

வாழ்வு கசக்கிறதே – முருகா
வார்த்தையில் சொல்லவொணா!
தாழ்ந்த நிலை அடடா முருகா
தாங்க முடியலையே?

மூத்த குறிஞ்சியனே – அட நீ
முன்வந்த தெய்வமல்லோ?
காத்திட மாட்டாயோ அழகா
கார்மயில் ஊர்தியனே?

நேற்றுவரையிலும் – குமரா
நெஞ்சம் மகிழ்ந்ததடா
காற்றுப்புயவலாச்சே கெடுவாய்
கடல் கொதிக்கிறதே!

ஓராயிரமிருந்தும் – தெய்வமே
உன்னருள் வேண்டுகிறேன்!
பாராள வந்தவன் நீ ஓராறு
படைவீடுள்ளவன் நீ!

உன்வரலாற்றினிலே கதைகள்
உள்ளே நுழைந்ததடா!
என்ன இருந்தாலும் – உன்இயம்
எங்கள் சிவன் இயமே!

சிந்துவைச்சைவம் எனப் – பலரும்
தேர்ந்து கடைப்பிடித்தார்!
இந்துவாய் மாற்றினரோ அதிலே
எத்தனை தெய்வமடா!

இன்றுள்ள தெய்வமெல்லாம் – கடம்பா
எண்ணமுடியலையே!
நன்றிதோ ஆரியமோ புகல்வாய்
நாங்கள் திராவிடரே!

வாழ்வை இனித்திடவை சேயோயே
வணக்கம் உந்தனுக்கே!
தாழ்ந்த நிலை போக்காய் – வேலனே
தமிழோடுள்ள வனே!

– தாமரைத்தீவான்

மொழிபெயர்ப்பின் மாயை

சமயவேல்

சென்றமாதம் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட 'ஓசிப் மெண்டல்ஷ்டாம்மின் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகள்' என்ற தலைப்பில் இரண்டு தொகுப்புக்கள் வாங்கினேன். ஒன்று "நியூ யார்க் ரெவ்யு புக்ஸ்" வெளியிட்டது. க்ளாரென்ஸ் ப்ரவுன் மற்றும் டபில்யு.எஸ்.மெர்வின் ஆகியோரால் மொழிபெயர்க்கப்பட்டது. (முதல் பதிப்பு 1973). இரண்டாவது பெங்குயின் கிளாஸ்ஸிக்ஸ் வெளியிட்டது. மொழிபெயர்ப்பாளர் ஜேம்ஸ் கிரீன். (முதல் பதிப்பு 1977/1989) இந்த இரண்டு தொகுப்புக்களிலும் உள்ள அதே கவிதைகள் பெரும் வித்தியாசங்களுடன் இருந்தன. இதில் எம்.எஸ்.மெர்வின் ஒரு புகழ் பெற்ற கவிஞர். அவர் மெண்டல்ஷ்டாம் கவிதைகளை உள்ளது உள்ளபடி மொழிபெயர்க்காமல் அவருடைய கவிதைப்போக்கில் ஆனால், மிக அருமையாக மொழி பெயர்த்திருப்பதாக குறிப்பு ஒன்றைப் படித்தேன். ஜேம்ஸ் கிரீன் தொகுப்பில் திருமதி நடெழ்டா மெண்டல்ஷ்டாம் எழுதிய முன்னுரை, மொழி பெயர்ப்பது குறித்த பல ஆழ்ந்த எண்ணங்களை உருவாக்குகின்றன.

ஜேம்ஸ் கிரீன் தொகுப்பிற்கு நடெழ்டா மெண்டல்ஷ்டாமின் முன்னுரை:

குறிப்பாக, ஓர் உண்மைக் கவிஞனுடைய கவிதைகளை வடிவத்துக்கும் உள்ளடக்கத்துக்கும் (அல்லது பொருள்) இடையில் முரண்பாடு இல்லாத - இரண்டும் எப்பொழுதும் புதியதாகவும் ஆனால் ஒரு மிகச்சிறிய வித்தியாசத்துடன் (அவைகளுக்கிடையில் பெரும் வேற்றுமை இல்லாத படி) கூடிய கவிதைகளை மேலும் கவிஞனின் "தான்" எப்பொழுதும் மிக வெளிப் படையாக உணரப்படும் இடங்கள் கொண்ட கவிதைகளை மொழிபெயர்ப்பது இந்த உலகிலேயே மிகக் கடினமான காரியமென நான் நினைக்கின்றேன். மரீனா ஸ்வெட்டவேயா கூறியருக்கிறார், அவரால் மெண்டல்ஷ்டாமைப்போலவே எழுத முடியும். ஆனால் அதை அவர் விரும்பவில்லை என்று அவர் ஒரு பெரும் கவிஞராக இருந்தாலும் அவர் கூறுவது தவறாகும். அவர் மாயகோவ்ஸ்கி மற்றும் பாஸ்டர் நாக்கின் பாதிப்பில் எழுதினாலும் அவர் ஸ்வெட்டயேவாகவே இருந்தார். ஏனெனில் அவர்கள் 'புதுமையானவர்கள்' எனவே, எளிதில் பரவக்கூடியவர்கள். ஆனால், மெண்டல்ஷ்டாம் கவிதைகளை மரபுரீதியாக காத்தவர், அதை நகலெடுப்பது மிகவும் கடினமானதாகும்



திரு.ராபர்ட் லோவெல்லின் மொழிபெயர்ப்பு மிகச்சுதந்திரமானதாகும். திரு.பால் செலானின் ஜேர்மன் மொழிபெயர்ப்பும் சுதந்திரமானதாகும். ஆனால், அவை இரண்டு மூலப்பிரதியிலிருந்து வெகுதொலைவில் இருந்தன. எனக்குத்தெரிந்தவரை கிரீனின் மொழி பெயர்ப்பு, நான் எக்கொழுதும் காணாத மிகச்சிறந்த தாகும். இத்தாலிய மொழிபெயர்ப்புக்களைக்குறித்து எனது கருத்துக்களை கூற இயலாது. ஏனெனில், எனக்கு இத்தாலி மொழி தெரியாது. அது போலவே ஆங்கிலம், ப்ரென்ச் மற்றும் ஜேர்மன் மொழிகளும். எல்சா ட்ரியோ லெட்டைப் பொறுத்தவரை அவைகள் அவரைப் போலவே எளிமையானவை மற்றும் முரட்டுத்தனமானவை.

மெண்டல்ஷ்டாம் கூறியிருக்கிறார் உள்ளடக்கம் உறிஞ்சப்படுகிறது. உள்ளடக்கத்திலிருந்து, ஈரப்பஞ்சி லிருந்து தண்ணீரைப்போல. பஞ்சு உலர்ந்ததும் அங்கு ஈரம் என்பதே இருக்காது. எனவே, உள்ளடக்கத்தைத் தருவதற்கு - இதைச்செய்வதில் திரு.கிரீன் வெற்றி பெற்றிருக்கிறார் - ஒரு வழியல் வடிவம் அல்லது லயம், மொழிபெயர்ப்பில் கொண்டுவரவே இயலாத லய இசைவு, மிக எளிமையான அதே சமயத்தில் மாயமான முறையில் சிக்கலானதுமான லய இசைவு. கவிதை ஒரு மாயம்(நடெழ்டா மெண்டல்ஷ்டாம், 1976)

ஜேம்ஸ் கிரீன் தொகுப்பிலிருந்து நான் மொழி பெயர்த்திருக்கும் 30ஆவது (1912) கவிதையை கவிஞர் பிரம்மராஜனும் எம்.எஸ்.மெர்வின் அல்லது ராபர்ட்

ட்ரேஸி தொகுப்பிலிருந்து மொழி பெயர்த்திருக்கிறார். இரண்டையும் கீழே கொடுத்திருக்கிறேன் எனக் கென்னவோ பிரம்மராஜனின் மொழிபெயர்ப்பு தான் நன்றாக இருப்பதாகப்படுகின்றது. நடெழ்டா குறிப்பிடு கின்ற லய ஒத்திசைவை பிரம்மராஜன் அருமை யாக கொண்டுவந்திருக்கிறார். கவிதையைப் போலவே மொழிபெயர்ப்பும் ஒரு மாயை தான் போலும்.

கவிதை எண் : 30

In the haze your Image
Trembled; it troubled
And eluded me; mistakenly
I said 'Good God'

The name of the lord - a large bird
flew from my breast
In front: a swirl of mist
behind: the emty cage.

எனது மொழிபெயர்ப்பு:

மங்கலில் உனது உருவம்
நடுங்கியது; துன்புறுத்தியது
மற்றும் என்னை ஏமாற்றியது; தவறுதலாக
நான் கூறினேன் "நல்ல கடவுளே"

கடவுளுடைய பெயர் -ஒரு பெரும் பறவை
என் நெஞ்சிலிருந்து பறந்தது
முன்னால்: ஒரு பனிமூட்டச்சுழல்
பின்னால்: வெற்றுக்கூடு.

பிரம்மராஜனின் மொழிபெயர்ப்பு:

(ராபர்ட் ட்ரேஸி மொழிபெயர்த்த தொகுப்பி லிருந்து)

பனிப்புகையில், மாறிக்கொண்டேயிருக்கும்உனது
துன்புறுத்தும் வடிவின் அருகில்
நெருங்கமுடியவில்லை
"இறைவா" என்று சொன்னேன் அப்படிச்
சொல்ல நினைக்காமலே,
ஆனால் தவறிவெளிப்பட்டுவிட்டது.
அந்தச்சொல்.

என்இதயத்திலிருந்துஒருபெரியபறவையைப்போல்
கடவுளின் நாமம் திடீரென்று பறந்து சென்றது
மேலே அடர்ந்த பனிப்புகை
முன்னேறிக்கிளர்ந்தது.
ஒரு வெற்றுக்கூடு எனக்குப்பின்னால்
இருந்தது.

1. பிரம்மராஜன் : பக்கம் 267, சமகால உலகக்விதை, உயிர்மை வெளியீடு, டிசம்பர், 2007

பின் குறிப்பு:

இக்கட்டுரையை நண்பர் சுதீர் செந்திலுக்கு அனுப்பியதும், அவர் ஒரு மொழிபெயர்ப்புச் செய்தார். மொழிபெயர்ப்பில் அவர் எளிதில் திருப்திப்படமாட்டார். திரும்பதிரும்ப மூலத்தை நெருங்கிச் செல்ல முனைந்து நம்மை பாடாயப்படுத்திவிடுவார். அவரது மொழி பெயர்ப்பு:

சுதீர் செந்தியின் மொழிபெயர்ப்பு:

மனதில் தெளிவற்ற உன் உருவம்
நடுங்கியது; தொந்தரவு செய்தது.
என்னிடமிருந்து தப்பிச்சென்றது தவறுதலாகச்
சொன்னேன் 'கடவுளே'

கடவுளின் பெயர் ஒரு விரிந்த பறவையென
என் மார்பிலிருந்து பறந்தது
முன்னால் ஒரு பனிச்சூழல்
வெற்றுக்கூடோ பின்னால்.

இது இத்துடன் நிற்கவில்லை. சுதீர் இந்தக் கவிதையை வேறு ஒரு நண்பருக்கு - ஜெயன் - அனுப்பி அவருடைய மொழிபெயர்ப்பையும் பெற்று எனக்கு அனுப்பி வைத்தார்.

ஜெயனின் மொழிபெயர்ப்பு:

கலங்கித்தெரிந்த உன் தோற்றம்
நடுங்கியது; தொந்தரவு செய்தது
தப்பிச்சென்றது; தவறிச்சொன்னேன்
"கடவுளே"

பெரும்பறவையாக கடவுளின் பெயர்
என் மார்பிஇருந்து பறந்தது
முன்னால்: ஒரு பனிச்சூழல்
பின்னால்: ஒரு வெறும் கூடு

மொழிபெயர்ப்பில் ஏற்படும் சிக்கல் இதுதான். சுதீர் என்னோடு விவாதிக்கும் தருணங்களிலெல்லாம் மொழிபெயர்ப்பை ஒருவரே செய்யக்கூடாது. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் இணைந்து கூட்டாகச் செய்யும் போது படைப்பின் மூலத்தை வெகுவாக நெருங்க முடியும் எனச்சொல்வார். மேலே செய்யப்பட்ட மொழிபெயர்ப்பிலிருந்து ஒரு மொழிபெயர்ப்பை உருவாக்கிப்பார்த்தேன் அது:

மனதில் தெளிவற்ற உன் உருவம்
நடுங்கியது; துன்புறுத்தியது
என்னிடமிருந்து தப்பிச்சென்றது; தவறுதலாக
சொன்னேன் 'கடவுளே'

கடவுளின் பெயர் ஒரு விரிந்த பறவையென
என் இதயத்திலிருந்து பறந்து சென்றது
முன்னால்; ஒரு பனிச்சூழல்
பின்னால்: ஒரு வெறும் கூடு

வாசகர்களும் படைப்பாளிகளும் இது குறித்து விவாதிக்கலாம். இதே கவிதைக்கு வேறு விதமான மொழிபெயர்ப்பையும் செய்து எனக்கோ "உயிர் எழுத்தி"ற்கோ அனுப்பலாம்.

நன்றி: உயிர் எழுத்து (ஜீலை 2013)

ஊற்றுக்குள் கலந்து

முட்டிமோதுகின்ற உணர்வலைகள்
அதிர்ந்து எழுந்து சொல்லாக உருப்பெற
உள்ளக்கிடக்கைகளில் அள்ளி யெடுத்தாலும்
நினைவுகளில் நினைவின்றி மூழ்கிக்
கிடக்கும் எண்ணங்கள் பற்பல
தட்டியெழுப்பிவிடும் சந்தர்ப்பங்கள்
ஜீவநதியாகப்பாய்ந்தோட!

என்னை நான் என்று சொல்லிவிட முடியவில்லை
எனக்குள் நான் என்னைத் தேடுகின்றேன்
பழமைகளும் புதுமைகளுமாய் கலந்து
ஒளிக்கீற்றாய் புதிய கருத்துக்களாய்
எழுந்து கவி காடும் காந்தப்புலன்கள்
ஜீவநதியாகப் பாய்ந்தோட!

காந்தப்புலங்கள் வடிவங்களை அச்சேற்றும்
வடிவங்கள் அற்ற நிலையிலும் வடிவங்களுக்கான
குறியீடுகள் எண்ணங்களுக்கு உருக்கொடுக்கும்
கவிதைகள் போல, உணர்வுக்குள் ஊற்றுக்
கண்ணாய் ஜீவநதி பாய்ந்தோட
அன்பு காதல் கருணை இரக்கம் பக்தி பாசம்
உணர்வுக்குள் உணர்வாகி ஆட்சி செய்யும்!

இதழ்கள் எழுபத்தைந்து பரப்பி
உணர்வுக்குள் என்னை அறியாமல் ஊடுருவி
உணர்வுக்குள் உணர்வாக
ஊற்றுக்குள் கலந்து
ஜீவநதியாய்ப் பாய்ந்தோட
களமமைக்கும் கவிதைக்களம்
வாழிய பல்லாண்டு தொடர்ந்து எம்
எண்ணங்களுக்கு வடிகால் அமைத்து
ஜீவநதியாய்ப்பாய்ந்தோட!

– இ.ஜெயபாலன்

விதியின் வலி

வெள்ளிநிலவொழியில்
விழித்தெழுந்து நான்
வீசுவலைதானெடுத்து விரைந்தேன்
வல்வைக்கடல் நோக்கி

காற்றடித்த வேகத்துடன் மழைபொழிய
கடலங்கே கொந்தழித்து நிரைபொங்கி
கரையெல்லாம் தரைதட்டி என்
கட்டிவைத்த படகதனை கண்முன்னே
கடல் கொண்டு சென்றது காண். என்
கண்ணீரோ கடல் நீரில் கலந்தன்றோ

என்னவளும் பிள்ளைகளும் பசித்த வயிற்றோடு
எனைப்பார்த்து விழிநோக்கிக்காத்திருப்பர்
வலைவீசி மீன்பிடித்துவருவான், என
வந்தவழிநோக்கிக் காத்திருப்பாள் மனைவி
விழிவைத்துக்காத்திருக்கும் மனையாள் முன்
வீடு செல்வது தகுமா என்றெண்ணி
வலையை எடுக்கின்றேன் வீசுவதற்கு
வெறும் கையுடன் வீடு செல்ல எண்ணாது.

காற்றும் மழையும் சேர்ந்து கடல் பொங்கிக் கனைக்கிறது
கட்டறுத்த காட்டாறு போல் கடல்வெள்ளம் நுரைக்கிறது
எடுத்தேன் வலைதனை வீசினேன் கடல் மடியில்
என்ன செய்வேன் என் நிலையும் அதுவாச்சே
விதிக்குக்கூட என்னுடன் விளையாட விருப்பம் போல்
வீசினேன் வலையை வீசிய வலையுடன் என்னையும்
கடல் கொண்டுசென்றதுதான் கரையில்லா இடத்துக்கு
கடல் நீரும் என் கண்ணீரும் ஒன்றானது

என்னுள் என்னவமும் என் பிள்ளைகளும்
என்னை எதிர்ப்பார்த்திருக்கும் காட்சி
என்னைக்குடைந்தெடுக்கிறது நெஞ்சை
என் விதியை என்னென்று சொல்வேன்

– புதுவை ஆனந்தன்



கண்மூடி பார்த்திருக்கும் கௌதமர்

முப்பதாண்டுப்போரின் வடுக்களைச் சுமந்தபடி
முகம் கறுத்து வாடி வருகின்றவர்களை வரவேற்க
முளைத்து நிற்கின்றன வெள்ளரசு மரங்கள்
தழைத்து செழிப்புற்றிருக்கும் இம்மரங்கள்
நெடுஞ்சாலை ஓரம் பரந்து கிளை பரப்பியபடி
இலைகளை அசைத்து பயணிகளை வரவேற்கின்றன.
மரங்கள் மனிதர்களுக்கு உதவுபவைதான்.
உணவு காற்று நிழல் என பலவும் தந்து
மனிதரை உயிர்வாழவைத்து உதவுபவைதான்
பல வழிகளில் எமக்கு உதவிடும் மரங்களை
நூற்றாண்டுகள் கடந்தும் துதித்து வரும் எம்மால்
இந்தப் புதிய மரங்களை ஏனோ ஜீரணிக்க முடியவில்லை
வரலாற்றில் அசோக சக்கரவர்த்தி அனுப்பி வைத்து
தீசனும் சங்கமித்தையும் கொண்டுவந்து நாட்டிய
வெள்ளரசு மரங்களின் வாரிசுகளாம் இம்மரங்கள்!
புத்தபிரானின் உயிர் ஜீவகாருண்ய தத்துவங்கள்
எவருக்கும் பொருத்தமான உயர்வானவை தான்!
ஆனாலும் கொலைஞர்களுக்கு அதைச்சொல்ல லாயக்கில்லை
விலங்குகளுக்கு ஜீவகாருண்யம் காட்டியபடி
மனிதர்களைக்கொன்று குவித்தவர்கள் இவர்கள்
நாங்கள் தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காக
இவர்கள் சாலையோரம் நாட்டிய அரசமரங்கள்
ஆக்கிரமிப்பிற்கும் குடியேற்றத்துக்கும் திணிப்பிற்கும்
சத்தமின்றி துணைபோகின்றன யாரும் அறியாமலே
எம் அடையாளங்களையும் தனித்துவத்தையும்
அழிப்பதற்காய் நாட்டப்பட்டு வேர்பதிக்கும் அவை
எங்கள் பண்பாடு கலாசாரங்களைச் சிதைக்கின்றன
எம்மை அழித்தவர்கள் நாட்டி வேர்பதித்த மரங்கள்
எமக்கு நிழலையும் காற்றையும் தந்தாலும் கூட
அவற்றின் வேர்பதிப்பு எம்மை கடுப்பேற்றுகின்றன
தம்மீதுவெறுப்பைச் சொரியும் காரணம் புரியாமல்
எம்மை இலைஅசைத்து வரவேற்கும் அரசமரங்களை
கண்களை மூடியபடி பார்த்திருக்கிறார் கௌதம புத்தர்!

– ச.முருகானந்தன்

சமாதானம்

கண்களில் பிணக்காட்சியும்
நாசியில் இரத்த வாடையும்
செவியில் சித்தம் கலங்கிடும்
வெடியும் – செல்லடியோசையும்
மனம் முழுக்க துக்க நிலையாய்!

கடந்து போன...
யுத்த காலங்களில்
இரத்த உறவிழந்து
சொத்து சுகமிழந்து
போற்றிய கலையிழந்து
தேற்றுவார் யாருமின்றி
இன்னும் பல இழந்து...!

யுத்தத்தின் விளைவிதுவோ – இல்லை
முன்வினைப்பயனிதுவோ
மொத்தத்தில் அழியுதிங்கே – என்று
ஏங்கித் தவித்து நின்றோம்...!

இழந்தது போதும்
இனியும் வேண்டாம் யுத்தம்
எதிர்கால அத்தியாயங்கள்
யுத்தம் என்ற அரக்கனால்
எரிக்கப்படுவதை எதிர்த்து
சமாதானம் என்னும் நீரோடையில்
எல்லோரும் சேர்ந்து கொள்வோம்!

வீட்டுக்கு வீடு குரல் எழுப்புவோம்
சமாதானம் சமாதானமென்று
நாட்டுக்குள் ஒருவரையொருவர்
தாக்கிக் கொள்ளாமல் வாழ்வோமென்று
தத்தம் மனதிலே தத்துவம் கொண்டால்
நித்தமும் நிலைத்திடும் இத்தரையில் சமாதானம்!

– வி.லோகேஸ்வரி

சமரபாகு சீனா உதயகுமார்

நடந்து வந்த சுவடுகளை மீட்டி நினைக்க வைக்கிறது கவிஞர்.த.ஜெயசீலனின் "புயல் மழைக்குப் பின்னான பொழுது"



த.ஜெயசீலன் என்றறொரு கவிஞனின் இன்னொரு கவிதைத்தொகுதி "புயல் மழைக்குப் பின்னான பொழுது" எனும் தலைப்பிடப்பட்டுள்ளது. ஏலவே "கனவுகளின் எல்லை", "கைகளுக்குள் சிக்காத காற்று", "எழுதாத ஒரு கவிதை" என்று அவரின் கவிப் பிரசவங்கள் இடம்பெற்றுள்ளன. அவை சிறந்த நூலுக்கான பரிசுகளையும் பாராட்டுக்களையும் பெற்றிருக்கின்றன.

தனது சின்னவயதிலேயே ஈழத்துக்கவிஞர்கள் பட்டியலில் இடம்பெற்ற தகைசார் திறமையாளராகக் கணிக்கப்பட்டவர். க.பொ.த. (உ/தர) தமிழ் பாட விதானத்திலும், பல்கலைக்கழக பட்டப் படிப்புத் தமிழ்ப் பாடவிதானத்திலும் இவர் கவிதைகள் இடம் பெற்றுள்ளன. "ஈழத்துக் கவிதைகளும் கவிஞர்களும்" என்ற மிக நீண்ட பாரம்பரியத்தை யாரும் கற்க முற்படு கின்றபோது கவிஞர் த.ஜெயசீலனின் கவிதைகளையும் அவர் பற்றிய குறிப்புக்களையும் கற்றுத்தான் ஆக வேண்டும். அப்பிடி ஈழத்துக் கவிதை சார்ந்த ஆய்விலே கவிஞர் த.ஜெயசீலன் தவிர்க்க முடியாத ஒரு பாத்திரமாகும்.

கவிஞர் த.ஜெயசீலன் கவிதையின் மரபுசார் நெறிகளை முறைப்படி கற்ற ஒரு நிபுண ராவார். அவருக்குக் குருவாக இருந்தவர்களில் கவிஞர். முருகையன் முக்கியமானவர். முருகையனின் கவிதைகளை எந்தளவுக்கு ரசிக்கின்றோமோ அதே ரசனை அல்லது அதை விடக் கூடுதலான ரசனையினை இவரது கவிதைகளிலும் காணக் கூடியதாக இருக்கின்றது.

முருகையன் கவிதைகள் ஓசை நயமிக்கவை. பிரமிப்பான பொருள்நயம் கொண்டவை. சந்தம், சீர், தளை, கட்டு இவை யெல்லாம் சமாந்தரமான வரிசை யில் மிளிருபவை. இப்படியான சிறப்பம்சம் கொண்ட கவிதைகளைப் படிக்க வேண்டும் என்ற ஆவலே எவரையும் தூண்டும். அதனாலேயே முருகையனின் கவிதைகள் வெற்றி பெற்றிருக்கின்றன. அவரோடு சேர்ந்து அவருடைய மாணவன் த.ஜெயசீலனும்தான்.

டால்ரனின் கூர்ப்புக்கொள்கையின் படி எந்தவொரு உயிரினத்தினதும் ஆற்றல் சந்ததி கடந்து செல்கின்றபோது அதிலொரு பிரமிப்பான ஆற்றல் வெளித்தெரியும். கடந்தகால தற்கால அனுபவ அடையாளங்களை ஒப்பிட்டு பார்க்கின்ற போது அதன் தற்கால குழுமத்தின் ஆற்றல் கண்டு வியப்பவரும் உளர்.

உதாரணமாக, நாங்கள் சின்னஞ்சிறு வயதில் இருந்தபோது வீட்டிலே செய்த குறும்புகள் பார்த்து பெரியவர்கள் எங்களைச் சினந்து ஏசியிருக்கிறார்கள். சிலநேரங்களில், அந்த வயதில் தர்கரீதியாக பெரியவர் களோடு வாதிடுகின்றபோது, அல்லது எங்களிடம் இருந்த ஏதாவது பிரத்தியேக திறன் வெளிப்படும் சந்தர்ப்பத்தில் அதே பெரியவர்கள் எங்கள்

சொக்கினைக் கிள்ளிக்கொஞ்சி விட்டுச் செல்வதையும் பாராட்டியதையும் கண்டிருக்கின்றோம். அதனால் சந்தோசித்திருக்கின்றோம்.

ஆனால், இன்றிருக்கின்ற சின்னஞ்சிறியவர் களின் கதை காரியங்களும் அவர்களின் செயற்பாடு களும் பிரமிப்பானவை. அதி நவீன தொழில் நுட்ப வளர்ச்சியோடு அவர்களின் சமாந்தரமான அறிவியல் ஆற்றல் சார்ந்த பயணிப்பினைக் காண்கிறபோது புருவங்கள் உயர்த்தி வியக்கின்றோம். அவை தொடர்பான பல விடயங்களை அவர்களிடமே கேட்டு அறிய வேண்டுமென்ற அவாவும் எங்களுக்குள்ளே ஏற்பட்டு வருகின்றது. இது புதுமையான ஒன்றில்லை. அதற்காக யாரும் வெட்கப்படத் தேவையுமில்லை. ஏனென்றால், ஒரு சந்ததிக்கு அடுத்து வருகின்ற சந்ததியினர் திறமைசாலிகளாகவும், வித்தியாசமான சிந்தனை போக்குடையவர்களாகவும் இருப்பார்கள் என்பதே மெய்யாகும். கட்டாயம் அப்பிடித்தான் அவர்கள் இருக்க வேண்டும்.

அப்பிடிப் பார்க்கின்றபோது கவிஞர்.த.ஜெய சீலன் எனும் கவிஞர் கவிதைத்துறை சார்ந்து மிகப் பெரிய தேர்ச்சியுடையவராகவே மிளிர்ந்து வருகின்றார். இவர் கவிதைகள் படித்து ஈழத்து மூத்தகவிஞர்களும், தமிழ்த்துறைப் பேராசிரியர்களும் பாராட்டியதை நான் கண்டிருக்கின்றேன். அந்தளவுக்கு அவர் கவிதைகள் புது வடிவமாகவும், புது நோக்காகவும் படைக்கப் பட்டிருக்கின்றன.

எனது சிந்தனைக்கு எட்டிய வரையில் இவரின் அனேக கவிதைகள் ஒருமுறை படித்து பொருள் விளங்கக் கூடியவை அல்ல. அந்தளவுக்கு இலகுவான வாசிப்பிற்குள் உள்ளடங்கக்கூடியதாக அவை அமைந் திருக்கவில்லை. அதற்காக ஒருமுறைக்கு பலமுறை படித்தும் பொருள் விளங்காத சொற்குவியலைத் தந்துவிட்டு இதுதான் கவிதை என்று சொல்லவும் அவர் முனையவில்லை. இருமுறையோ அல்லது அதற்கு மேற்பட்ட முறையோ படிக்கின்றபோது கட்டாயம் பொருள் விளங்கி வருவதோடு அப்பொருள் விளக்கம் அதிசயிக்க வைக்கும் ஆற்றல் வாய்ந்தவையாகவும் காணப்படுகின்றன. அப்படி மொழிகளை செம்மை யாகவும், இயல்பான மொழிக்கோர்ப்புச் சரமாகவும் இடையிடையே புதிராகவும் துருத்தி நின்று வியக்க வைக்கின்றன. படிப்பவர்களின் சிந்தனா வெளியினை தட்டிவிட்டுச் செல்பவையாகவும் மனதுக்கு ஒரு சுகம் தருபவையாகவும் அவை விளங்குகின்றன.

இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள பெரும் பாலான கவிதைகள் குறியீட்டுப் பாங்கில் அமைந்த கவிதைகளாகும். படிமங்கள் அளவோடு அழகாய் புகுந்து நெளிந்திருக்கின்றன. இடையிடையே வார்த்தைகள் சேர்ந்தும், பிரிந்தும் நின்று மொழி வாலாயமாய் அசைந்திருக்கின்றன. அந்த அசைவுகூட கவிதைக்கு ஓர் அழகியலையும் கவிதை கட்டுறுப்பை யும் தந்திருக்கின்றன.

தொகுதியின் உள்ளே மொத்தம் 59 கவிதைகள் இடம்பெற்றுள்ளன. அவை வேண்டுதல் பற்றியும், நடந்து வந்த பாதைகளைத் திரும்பிப் பார்க்கும் எண்ணங்களைத் தூண்டுவது பற்றியும், சுயநல மனிதர்களின் இருப்புநிலை பற்றியும், இனிய காதல் பற்றியும், போர் அவலம் பற்றியும், போரின் பின்னான மனிதரின் வாழ்வியல் அந்தரம் பற்றியும், பெண் பற்றியும், போராளிகளை அவமதிப்போடு நோக்கும் மக்களின் சந்தர்ப்பவாத போக்குப் பற்றியும், அரசியல்வாதிகளின் குருட்டு நிலை பற்றியும், தமிழ்நாட்டு உறவுகளின் எழுச்சி பற்றியும், கனவு பற்றியும், நனவு பற்றியும், மனம் பற்றியும், விடாமுயற்சி பற்றியும், விரும்பாதவர்கள் பற்றியும், சாதி பற்றியும் பாடுகிறார். இப்படியாக கவிதையின் பாடு பொருள்கள் நீண்டு செல்கின்றன.

கவிதையிலே ஒப்புவமைத் தன்மை:

கவிதைகள் படிக்கின்றபோது படிப்போர் மனத் தெறிப்பு அந்தக் கவிதை பற்றியே குவிக்க வேண்டும். அப்போதுதான், அக்கவிதை பற்றிய கிரகிப்பு சீராக இருப்பதோடு கவிப்பொருள் விளக்கமும் ஒரு வியப்பைத் தந்துபோகின்றது. இதுவே மனதுக்கு ஒரு ஆறுதல் தரக்கூடியது. கவிதையோ சிறுகதையோ சும்மா பொழுது போக்கிற்காகப் படித்தல் கூடாது. அவை படிக்கின்ற போது மனதில் புத்துணர்வை ஏற்படுத்த வேண்டும். இக்கவிதைத் தொகுதியிலே இடம்பெற்ற ஒப்பியல் தன்மையின் புதுமையைக் கண்டு யாரும் ரசிக்கலாம்.

"வெட்டி வைக்கப்பட்ட சர்க்கரைப் பூசனியின்
துண்டொன்றாய் மஞ்சள் நிலவு"

(பிறைபார்த்தல் – பக்கம் 04)

"நேற்றுக் கிழித்த நகம்போல என்றார்கள்
அதுவும் நான்காம் பிற என்றே பொருமினார்கள்"

(பிறைபார்த்தல் – பக்கம் 04)

இங்கே மஞ்சள் நிலவு என்பதும், நான்காம் பிறைச் சந்திரன் என்பதும் எப்பிடி இருக்கின்றன? என்பதை மனித யதார்த்த வாழ்வியலோடு ஒப்பிட்டுச் சொல்லியிருக்கின்ற விதம் மிகவும் பாராட்டுக்குரியன வாகும்.

"ஒவ்வொரு வானொலியும் ஒவ்வோர் அலைவரிசை
தன்னில் இயங்குவதாய்த் தான்
மனிதர் நினைவுகளும்
ஒவ்வொரு அலைவரிசை கொண்டன"

(அலைவரிசை – பக்கம் 05)

அலைவரிசை என்பது கண்ணுக்குத் தெரியாத ஒன்று. மனித நினைவுகளும் அவ்வயமானவையே! வானொலி ஒவ்வொன்றும் வேறுவேறான அலைவரிசை யினை உடையவை. அவற்றிலிருந்து வரும் பாடல்களின் துல்லியமும் வேறானவையே! அது போலவே மனித நினைவுகளும் மாறுபட்டுத் தெரிகின்றன.

"தரைவரளும், பித்த
வெடிப்பான பாதம்போல் பாளம்பாளமாய் பிளக்கும்"

(சமாளிப்பு – பக்கம் 22)

பித்தவெடிப்பு எவ்வகையானது. அது பார்ப்ப தற்கு அசிங்கமாகத் தெரிவதோடு அதிலிருந்து வரும் உபத்திரவம் என்பது கொடுமையானது.

"இரையிலோடிப் போன பின்னும்
தண்டவாளம் அதிர்வதுபோல்

திரும்பி நீ சென்றாய் தெரியாதவள் போல்"

–(நீ இல்லா பொழுது – பக்கம் 23)

நீ என்னைக் கண்டு கொண்டாய் என்பதை நான் கண்டு கொண்டேன். ஆனால் நீயோ திரும்பி நிற்கிறாய் எப்பிடியென்றால், இதற்கு முதல் எப்பவுமே நீ என்னைக் கண்டிருக்கவில்லை! எப்பவும் எதுவும் என்னோடு நீ கதைக்கவில்லை! என்பதுபோல நிற்கிறாயே! அப்பிடி நீ நிற்கும் போது நான் எத்தனை ஏமாற்றங்களை உள்வாங்கித் தவிக்கின்றேன் தெரியுமா? என்று ஒரு காதலன் தன் காதலிக்காக ஏங்குவதைச் சொல்கிறது இந்த ஒப்புவமை.

இப்படியாக நிறைய இடங்களில் ஒப்புவமையின் வெளிப்பாடு இயல்பாய் வந்து குதித்திருக்கின்றன. அவை கவிதை வாசிப்பின் விருப்பை இன்னும் ஊன்றி முகர முனைக்கின்றன.



கவிதையிலே குறியீட்டு வடிவம்:

கவிதையிலே குறியீடு என்பது ஒரு முக்கியம்சமாகும். குறியீட்டு வடிவிலே கவிதைகள் படைக்கின்ற போது வாசகர் ஒவ்வொருவரும் தங்களுக்குப் பரீட்சயமான ஒரு விடயத்திற்குப் பொருத்தி அதன் உண்மைநிலை பற்றி ஆராய்வார்கள். அது சரியாகவும் இருக்கும். ஆனால், கவிதை புனைந்தவர் இன்னொரு நோக்கத்திற்காகச் சொல்ல வந்திருப்பார். அது சில வேளைகளில் வாசகனுக்கு உடனடியாகவே தெரிய வந்துவிடுவதுண்டு.

"கப்பலிலே தப்பிக் கரைமீண்ட சிப்பந்திச்
சின்னஞ்சிறுசுகள்
திரிசங்கு சொர்க்கத்தில்
சிறைமீண்ட செல்வங்கள் செல்லாத காசுகளாய்"

(புயல் மழைக்குப் பின்னான பொழுது பக்கம் 12)

இறுதிப் போர் இங்கு கப்பல் என்றும், சின்னஞ் சிறுசுகள் அப்பாவித் தமிழ் இளைஞர்கள் என்றும் சிறை மீண்ட செல்வங்கள் முன்னாள் போராளிகள் என்றும் என ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொன்றைச் சமமாக்கிப் பொருள் விளங்கிப் பாருங்கள்.

குருவியில்லாக் கூடுகளில் குரங்குகள் குடியேற
குரங்குகளை ஏய்த்துச் சில குயில்கள் முட்டை இட்டுத்
தமைப் பெருக்க... எடுப்பார்கைப் பிள்ளையாச்சு
என்முற்றம்!

– (புயல் மழைக்குப் பின்னான பொழுது – பக்கம் 12)

குருவி என்பவர் யார்? குரங்குகள் என்பர் யாவர்? அந்தக் குரங்குகளை ஏய்த்து பிழைக்கிறவர்கள் யார்? என்பதை யாருமே தெரிந்து விடுவார்கள்! "என் முற்றம்" என்பது எம் இன்றைய தமிழ்தேசம்தான் என்று யாரும் சொல்லும்போது!

கவிதையிலே படிம வடிவம்:

"கனவுகளால் தையலிட்ட
வலைகளோடும், வெற்றுப் படகோடும்
பசிநெருப்புப்
புகையும் வயிற்றோடும் போகின்றார்!"

"வெறுமையும் வறுமையும் வறுக்கத்
துவண்டுறங்கும் சிறுசுகளின்
முகத்தைச் செபித்தபடி..."

(நிச்சங்கள் அற்ற நெடு வாழ்வு 08)

"மனசுகள் செமிக்காமல்
இட்டுமுட்டாய்க் கிடந்து
தொண்டை வரை வந்து
நாவிலேறிச் சொல்லாக
வெளிவர முடியாமல் மிகவும்
தவித்ததன்று!"

(சிதைந்த மனச்சாட்சி பக்கம் 25)

"இலையுக்கி மனமரத்தின் வேர்களுக்கே உரமாகும்
காய்ந்துதிர்ந்த நினைவிலைகள்
காய்ந்துக்கிப் போவதுதான்
நல்லது"

(நினைவிலைகள் – பக்கம் 31)

ஒரு நாள் பொழுதும் வாழ்வும்:

காலை, பகல், பிற்பகல் என்று வாழ்வு நிலையினை மூன்றாக வகைப்படுத்துகின்றார். அந்த முப்பொழுதின் கடைசிக் கூறாகிய பிற்பகல் பொழுதில் வாழ்ந்து கொண்டிருப்பதாகச் சொல்கின்றார். அப்போது அவர் மனதிலே பல ஏக்கங்கள் தோன்றி மறைகின்றன. அந்த ஏக்கத் தவிப்புக்களில் தான் இழந்தவற்றைச் சொல்ல முயல்கிறார்.

அவ்வாறான காலைப்பொழுதில் தான் இளமையாக இருந்ததாகவும், அந்த வயதில் இன்பங்களால் புத்துயிர்ப்புப் பெற்று எதையும் கிரகிக்கும் சிந்தை இருந்ததாகவும் வஞ்சகமில்லா அன்போடு யாரோடும் கலந்து குதூகலித்ததாகவும் சொல்லுகின்றார். தாய் தந்தையரின் தயவில் தங்கி வாழ்ந்த அந்த வாழ்வியலில் தனக்கிருந்த பொறுப்பு நிலையினை உணராமல் போனதையும் அதை அறியாத தான் அக்காலைப் பொழுதில் மிகச் சந்தோசமாக இருந்ததாகவும் இயம்புகின்றார்.

பகற்பொழுதான தன் இளமைப் பருவத்தில் தன் திறன் வளர்ந்த கதையினையும், இளமைத் துடிப்போடு போட்டி போட்டு ஜெயித்துச் சாதித்த கதையினையும் சொல்லிவிட்டு கைகளுக்குச் சிக்கிவிடாத ஆசைகளுக்கு ஏங்கித் தவித்ததையும் அந்த ஆசையில் நனைந்து இன்புற அவாப்பட்டு அலைகழிந்த வேதனைகளையும் அதில் தான் பெற்ற வெற்றிகளையும் சொல்லுகின்றார்.

பகல் எனும் வாழ்வின் நடுப்பொழுதைக் கடந்து பிற்கலில் வந்து நின்று, ஆடிய ஆட்டம் என்ன? பாடிய பாட்டு என்ன? இந்த பிற்பகல் எனும் முதுமையில் இவையெல்லாம் இழந்து என் வேகம், என் ஆற்றல், என்

பலம் எல்லாம் மெதுமெதுவாய் குறைந்து வந்ததனை உணர்ந்து கொள்கின்றார். மனவேதனை கொள்கின்றார். தன் ஆட்டம் முடிந்து விட்டபொழுதாக அங்கலாய்க்கின்றார்.

மனிதர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் வாழும் காலத்தில் தாம் ஒவ்வொருத்தரும் சாதித்து வாழுவ தாகவே நினைத்துக்கொள்கின்றனர். ஆனால், அவரின் வாழும் காலம் ஓய்ந்து உடல் இயலாமை வருகின்றபோதுதான் அவனுக்கு வாழ்வுபற்றிய புனிதத்தின் ஞானம் பிறக்கின்றது. உண்மை உணர்ந்து வெட்கப்பட்டுக்கொள்கின்றான்.

"இவையென்ன அந்தி பின்னந்தி மெல்லிரவு
இரவு நடுஇரவு துயிலிரவு
என்றாகி
ஒரு பொழுதில் என் வாழ்வு
அஸ்த்தமன மாகிவிடும்
என்பதையும்
அதற்குள் என் வாழ்வினது அர்த்தமாக
என் செய்யப் போகின்றேன்? என்பதையும்
புரியாமல்
ஓட்டமும் நடையுமாக
பதற்றம் மிகவுற்று
ஒன்றிலும் பிடிப்பற்று
உறக்கம் மிகத் தொலைத்து
என்கட்டுப் பாட்டைமீறி இழுபட்டும் போகின்றேன்!

காலமோ கணமும் தரிக்காமல் ஓடுகிற
புரவிகளாய் வாழ்வை
இழுத்து நகர்த்திடுது!

(வாழ்வினது அர்த்தம் – பக்கம் 77)

என்ற கவிதையினைப் படித்து முடித்தபோது "தலாய் லாமா" சொன்ன அந்த பொன் வார்த்தைகள் தான் நெஞ்சிலே ஊடுருவிப் பாய்ந்தன.

"என்னை மிகவும் ஆச்சரியப்படுத்தியவன் மனிதன் தான்! ஏனென்றால் அவன் பணம் சம்பாதிப்பதற்காக தனது ஆரோக்கியத்தைத் தியாகம் செய்கின்றான்! பிறகு, இழந்த ஆரோக்கியத்தை திரும்பப் பெறுவதற்கு தான் சம்பாதித்த பணத்தைத் தியாகம் செய்கின்றான்! பிறகு, நிகழ்காலத்தை அனுபவிக்க மறந்து எதிர்காலத்தை எண்ணி கனவுகளில் மிதக்கின்றான்! அதன் விளைவாக அவன், நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தில் என்று எல்லாக் காலங்களிலும் வாழ முடியாமல்த் தவிக்கின்றான்! தனக்கு இறப்பே இல்லை என்ற இறுமாப்போடு வாழ்கின்றான்! கடைசியில் வாழாமலே சாகின்றான்!" என்பதே அவரின் அந்தப் பொன்மொழி ஆகும்.

கவிதை அனைத்தையும் படித்து முடித்தபோது சில விரிசல்களையும் இனம் காணக்கூடியதாக இருந்திருக்கின்றது.

"ஒரு புனிதம்" என்று வரவேண்டியவை "ஓர் புனிதம்" என்றும் (பக்கம் 19), "ஒரு மூலையிலே" என்று வரவேண்டியவை "ஓர் மூலையிலே" என்றும் (பக்கம் 27), "ஒரு திசையில்" என்று வரவேண்டியவை "ஓர் மூலையில்" என்றும் (பக்கம் 62), "ஒரு முடிவோடு" என்று வரவேண்டியவை "ஓர் முடிவோடு" என்றும் (பக்கம் 63), "ஒரு நாள்" என்று வரவேண்டியவை "ஓர் நாள்" என்றும் (பக்கம் 65) என்றும் "ஒரு துளியின் சிற்றனுங்கல்" என்று வரவேண்டியவை "ஓர் துளியின் சிற்றனுங்கல்" என்று வந்துள்ளன.

அதாவது, உயிர் எழுத்தோடு தொடங்கும் ஒரு சொல்லின் முன்னால் மாத்திரமே ஓர் என்பது வர முடியும். இது தவிர்த்து ஏனைய இடங்களில் மட்டுமே ஒரு என்பதை உபயோகிக்கலாம்.

(இந்தப் பயன்பாடு ஆங்கிலத்திலும் உண்டு. அதாவது an, a இன் பயன்பாடுகளைச் சொல்லலாம்)

பொதுவாக, கவிஞர் த.ஜெயசீலனின் கவிதைகளின் நயம்பற்றிச் சொல்வதென்றால் அவை நிரம்பச் சொல்லிக் கொண்டே போகலாம். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல, இங்கே சில கவிதைகளை மட்டுமே நான் எடுத்து அதன் சுவை பற்றி பகிர்ந்திருக்கின்றேன். அவை பற்றிச் சின்னதாகச் சிலாகித்திருக்கின்றேன். ஒவ்வொரு கவிதையும் ஒரு சிறுகதை போல பொருள் விளக்கத்தோடு வடிவமைக்கப் பட்டிருக்கின்றன.

நாம் நடந்து வந்த சுவடுகளையும் எங்கள் அருகாய்ப் பதிந்த சுவடுகளையும் கவலையோடும், கண்ணீரோடு பதிவேற்றமாகியிருக்கின்றன.

அவை கவி உருப் பெற்றிருக்கின்றன. அக்கவிதைகள் புது வடிவமாய் நின்று வாசிப்போர் நெஞ்சங்களை யோசிக்கவைத்து விடுகின்றன.

கவிஞர் த.ஜெயசீலனின் கவிதைகள் இனிமைக் கனவுகள் போல் எல்லையற்றவை! கைகளுக்குள் சிக்காத காற்றுப் போல் மனதை விட்டு நீங்காத படிமங்கள், அவை! தன் கவிதைகளில் அவர் எதை எழுதவில்லை? எவையோ அவை பற்றியெல்லாம் எழுதியிருக்கின்றார். அவற்றிலே புதுமை செய்திருக்கின்றார். அவர் மீண்டும் வென்றிருக்கின்றார்.



ஒளிப்படம் - யாழ்நிலன்

பட்டியலிலிருந்து நீக்குதல்...

வண்ண வண்ணத் தோரணங்களாய்
மனிதர்களைப் பதித்துத் தொங்கவிட்டிருந்தாலும்,
ஆழ்குளிர் வர்ணம் நிரப்பி
அழகுபடுத்தியிருந்தாலும்,
சிலவேளைகளில் சிலரைப்
பட்டியலிலிருந்து நீக்கத்தான் வேண்டியிருக்கிறது;
சிறிது யோசிக்கவும் வேண்டியிருக்கிறது.

செய்த சிறு உதவிகள்
உபத்திரவங்களாய் மாறும்போது,
கருணையின் முகம் தரித்து
கொடூரப் பல் நீளும்போது
பட்டியலிலிருந்து ஒருவரை நீக்கத்தான் வேண்டியிருக்கிறது.

வெண்மையாய் சிரித்து நிற்கும் பூக்களின்மீது
எரிதிராவகம் வீசும்போது,
மணிமணியாய் சேர்த்து வைத்த அருள் நிதியில்
வக்கிரச் சேற்றை ஒருவர் அள்ளி வீசும்போது
அவரை நீக்கத்தான் வேண்டியிருக்கிறது.

நன்மைகளும், நல்லெண்ணங்களும் சூழ்ந்ததல்ல
என் பட்டியலின்
மெய்ம்மை.
எனினும்,
முட்கள் கீறி நொய்ந்து போன கரங்களால்
என் பட்டியலை ஏந்தி
நல்லெண்ணமும், நம்பிக்கையும் நிரம்பிய மனதோடு
சரி செய்கிறேன்,
இன்னும் நீங்காத மானுட நேஸம் பற்றிய
தீராத அவாவோடு.

என் இறைவா

கீறிவைத்த கோட்டில்
பார்த்து நடக்கும்போது
சிறிது தடுமாறினாலும்
கைகொடுத்துத் தூக்குகின்றாய்.

கேலிச் சிரிப்பொழுகும்
முகங்களின் முன்னே
தலைநிமிர்ந்து நடக்கும்
வலிமை தருகின்றாய்.

விளிம்பில் நின்று தத்தளித்தாலும்
மூழ்கிப் போகாவண்ணம்
உயிர்க்கரம் கொடுத்து
கரை சேர்க்கின்றாய்.



சோதனையால் கனக்கும் இதயத்தில்
அதைத்தாங்கவும் மீளவும்
வரம் கொடுக்கின்றாய்.

பிறர் கண்ணறியா
மாயக்கரம் நீட்டி
அருள் மழையிழுத்து
நனையவும் விடுகின்றாய்.

பசியால் கொதிக்கும் வயிற்றுக்குள்ளே
பறவையின் சொண்டில் வார்த்ததுபோல
பச்சை நெல் மணிகளை
சமயம் பார்த்து
அள்ளியிருகின்றாய்.

இவ்வளவோடு,
பாசி பிடித்த ஏணிப்படிகளில்
சறுக்கிடாவண்ணம்
காப்பாற்றினாலும்,
மேலே செல்லமுடியாத
ஒரு தடைப் படியும்
ஏன் வைத்தாய்?

நிலமிசை விம்பங்கள்

மேகம் தொலை வானம்
பொலிவெழில் தொலைய
வெளி நீலம் வெளிறி
காற்றுதை எத்தனத்தில்
மேலெழும் மேகத்தூசுகளால்
பால்மணல் வெளியில்
அசையும் சித்திரங்கள்
நிலவொளித்
தூரிகையால்...

அலைச்சித்திர படிவில்
நிலமசை விம்பங்கள்
சலன சித்திரமாய்
ஆற்று மேற்றடங்கள் போல்
சலசலக்க...
வான் நீல விரிப்பில்
பிறையுடை நிலா
என்னசைவில் தானசைந்து
என் தரிப்பில்
துணைநின்று
என்னோடு வலம்வர
இரவிருளும்
இனிதாய் இதமாய்
.....
ஆயிரம் சந்தோசிப்புக்கள்
விடிவேளை
கீழ்த்திசை மலர் உதய சூரியன்
களவாடும் பிளம்பொளியால்
என் துணை நிலா
எழிலொளி மங்கி
நிலவிருப்பு
கேள்வியாக
மனவிருப்பில்
சூரிய வெறுப்பலைகள்

ஒழிக! சூரியன்
எழுக!!
நிலவு தேசப்படைகள்

சூரிய அஸ்தமனத்தில் தான்
சந்திரோதயச் சிறப்பு
மறைவில்
உதயம்,
மரணத்தில்
ஜனனம்
வாருங்கள்



தோழர்களே!
மேற்றிசை
கடல் வீழ் சூரியனை
ஆற்றில் பதைப்போம்

ஆற்றுச் சூட்டில்
கடல் நீர் வற்றி
சமுத்திர சரித்திரம் ஒழிய
பிறக்கும்
நில இராட்சியத்தில்
நிலவொளித் தூரிகையால்
பால் மணல் வெளியில்
சலன சித்திரமாய்
நிலமசைவிம்பங்கள்
ஆற்றுமேற்றடங்கள்
போல் சலசலக்கும்.
புது சரிதம் பிறக்க
இனியென்றும்
நிலாக்காலம்.

அடக்குமுறைகளை எதிர்த்த "கவிஞர்க்குக் கவிஞர்" இ.முருகையன்

அ.பௌநந்தி

மரபிலக்கியப் பரிச்சயமும் நவீன இலக்கிய ஆளுமையும் மிக்க முருகையன் மார்க்சியத்தின்பால் ஈடுபாடு கொண்டிருந்தார் என்பது அவருடைய கவிதைகளைப் படிக்கும்போது புலனாகும்.



ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகில் மறக்கப்பட முடியாத ஆளுமையாக விளங்குபவர் கவிஞர் இ.முருகையன் அவர்கள். யாழ்ப்பாணத்தின் சாவகச்சேரியில் உள்ள கல்வயல் என்னும் கிராமத்தில், இராமுப்பிள்ளை செல்லம்மா தம்பதி களின் மகனாக, 1935.04.23 அன்று பிறந்தார். 1950 களின் ஆரம்பத்தில் கவிதையுலகில் கால்பதித்த முருகையன், கவிதைகளை எழுதியுள்ளதோடு, பாநாடகங்கள், நாடகங்கள், வானொலி நாடகங்கள், திறனாய்வுகள், மொழிபெயர்ப்புகள் போன்றவற்றை யும் எழுதியுள்ளார். "நோக்கு" (1964 - 1965) என்ற கவிதைக் காலாண்டிதழின் இணையாசிரியராகவும் விளங்கியுள்ளார்.

கவிஞர் இ.முருகையனுடைய படைப்புக்கள்.

- **கவிதைத் தொகுதிகள்**

ஒருவரம்
நெடும்பகல் (காவியம்)
ஆதிபகவன்
அது அவர்கள் (நீண்ட கவிதை)
மாடும் கயிறு அறுக்கும்
நாங்கள் மனிதர்
ஒவ்வொரு புல்லும் பூவும் பிள்ளையும்

- **பாநாடகங்கள்**

வந்து சேர்ந்தன தரிசனம்
கோபுரவாசல்
வெறியாட்டு
மேற்பூச்சு
சங்கடங்கள்

- **காவியம்**

தகனம் (மஹாகவியுடன் இணைந்து எழுதியது)

- **மேடை நாடகங்கள்**

கடுழியம்
அப்பரும் சுப்பரும்

- **மொழிபெயர்ப்பு**

உண்மை பாநாடகம்

- **திறனாய்வு நூல்கள்**

ஒரு சில விதி செய்வோம்

இன்றைய உலகில் இலக்கியம்
கவிதை நயம் (பேராசிரியர் க.கைலாசபதியுடன் இணைந்து எழுதியது)

- கட்டுரைகள்

இளநலம்
மொழிபெயர்ப்பு நுட்பங்கள்

- உரைநடைச் சித்திரம்

திருவெம்பாவையர்

சுதந்திரன், வீரகேசரி, ஈழகேசரி, அமுதசுரபி, கலைமகள், தீபம், எழுத்து, தாமரை போன்ற இதழ்களில் இவருடைய கவிதைகள் வெளிவந்துள்ளன. மரபிலக்கியப் பரிச்சயமும் நவீன இலக்கிய ஆளுமையும் மிக்க முருகையன் மார்க்சியத்தின்பால் ஈடுபாடு கொண்டிருந்தார் என்பது அவருடைய கவிதைகளைப் படிக்கும்போது புலனாகும். "கவிஞர்க்குக் கவிஞன்" என்று பேராசிரியர் கைலாசபதியாலும், "புலமைக் கவிஞன்" என்று பேராசிரியர் சிவத்தம்பியாலும் போற்றப்படுமளவிற்கு முருகையனுடைய கவிதைகள் கனதியும் காத்திரமும் மிக்கவையாக காணப்படுகின்றன. இலங்கை அரசால் வழங்கப்படுகின்ற "சாகித்திய இரத்தினா" விருது 2007 இல் முருகையனுக்கு வழங்கப்பட்டமை அவருடைய கவிதைகளுக்குக் கிடைத்த மற்றொரு அங்கிகாரமாகும்.

பல்துறை ஆளுமைமிக்கவரான கவிஞர் முருகையன் எழுதிய "எண்ணம்" என்ற கவிதையில் அவரது கவிதைகளின் நோக்கத்தை அறியலாம்.

"நெஞ்சை உணர்த்தி
நிமிர்ந்திட, வாழ்க்கையின்
நீசத் தனத்தைப்
பயமு றுத்த
பஞ்ச முறத்துயர்
விஞ்சிடும் சோதரர்
பாடுகள் சாடும் ஓர்
பாதை செய்-ய
சீறும் புவித்துயர்
மாறுமட் டும்விசும்
பேறும் முயற்சியை
ஒத்தி வைக்க
ஆறுதல் இன்றி என்
எண்ணமும் ஆவியும்
ஆர்வமும் இன்று
துடிக்குத-டா"

என்று புவியில் மக்கள் படும் துயர் போக்க கவிதை பாடும் பணியைத் தனதாக்கிக் கொண்டார்.

வறுமையால் வாடும் மக்களின் துயரங்களை தனது கவிதைகளின் பாடுபொருளாக்கியிருக்கின்றார். "கொடிது கொடிது வறுமை கொடிது" என்று ஔவையார் பாடிய வறுமையை, முருகையன் பார்க்கும் விதம் வித்தியாசமானது.

"நெருப்போ சிற்றுயிர் வயிற்றுள் நுழைந்தது
எரித்து வருத்திச் சுருட்டி அலைத்தது
துடித்துப் பதைத்த சிற்றுயிர்,
தடால் எனச்
சரிந்து விழுந்தது, தரையிலே"

என்று சிறுவனொருவன் பசியால் வாடி வதங்கித் துடிக்கும் சோகத்தை எம் உள்ளத்தில் துயரம் ததும்ப நிலைநிறுத்துகின்றார்.

ஈழத்துத் தமிழிலக்கிய கர்த்தாக்களின் கவனத்தையீர்த்த முக்கிய விடயங்களில் சாதிய அடக்குமுறை குறிப்பிடத்தக்கது. சிலர் வெளிப்படையாக தம்மை நல்லவர்களாக, கற்றவர்களாக, சாதிய அடக்குமுறையை எதிர்ப்பவர்களாகக் காட்டிக் கொண்டாலும் அடிப்படையில் அவர்கள் சாதியத்துக்கான ஆதாரங்களைத் தேடி அலைகின்றார்கள் என்பதை, "எழுச்சிதான் எமக்குத் தேவை" என்ற கவிதையில்,

"வேதத்தை ஆகமத்தை
வேறெதன் பொருட்டென்றாலும்
ஓதற்கு நாட்டம் இல்லா
உத்தமப் பொரியார் எல்லாம்
சாதிக்குச் சான்று தேடிச்
சாத்திரம் புரட்டுகின்றார்
தீதுக்காய் நெடுக வாழ்வோன்
திருக்குறள் படித்தல் போலே!"

என்று பாடுகின்றார்.

சாதி அடக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுத்தவர் மட்டுமன்று. மலையக மக்களின் துயரங்களையும் வறுமைகளையும் அதற்கான கரணங்களையும் அப்பட்டமாக வெளிப்படுத்துகின்றார். எமது நாடே மலையக மக்களின் உழைப்பைச் சுரண்டி அவர்களின் உதிரத்தைக் குடித்து வாழ்கின்றது. ஆனால், அவர்களின் முன்னேற்றத்தைப் பற்றி அக்கறையோடு சிந்திக்க வில்லை.

"மாடு மாடு என்று பல ஏசி
திட்டிக் கொட்டி துரத்தி விரட்டிச்
சாமம் வரைக்கும் சாறு பிழிந்து
சக்கை வாங்குவீர்கள் பொடியனை
வீட்டு வேலைக்காரப் பொடியனை
"மாடுகள்" தங்கள் வாய் நுரை தள்ள
மூசி மூசிக் களைக்காவிட்டால்.....
உங்கள் வீட்டில் உலைகள் கொதிக்குமோ?
பொடியனின் தமையனும் தாயும் தந்தையும்
மாமனும் மாமியும் மச்சான் காரனும்
உடமைப் பிழிய ஒருப்படாதிருந்தால்...
மலை முகடுகளில் தேயிலை வளருமோ?
வங்கியில் எல்லாம் காசு புரளுமோ?
ஐந்து நட்சத்திரக் ஹோட்டலில் அமர்ந்து
நண்டைக் கடித்து விறண்டி சுவைத்தபின்
புகையினை ஊதும் இளைய மருமகள்
நோன்மதி நாட்களில் திலக்கா எனப்படும்
இளைஞரின் அருகில் இருந்து கொஞ்சவும்
கண் இமை சொருகிக் கனவில் ஆழவும்
உச்சக் குரலில் ஓசை புறப்பட
எச்சில் வாயால் இராகம் இழுக்கவும்



மச்சில் வாழவும் வசதிகள் வாய்க்குமோ?
மாடு மாடு என ஏசுகின்றீர்
மாடுகள் கயிறுகள் அறுக்கும்
ஆடவர் மகளிர் அது செய்யாரோ!"

அவருடைய இந்தக் கவிதை வரிகள், ஆளும் வர்க்கத்துக்கெதிரான அச்சுறுத்தலாக, அடக்கு முறைக் கெதிரான ஆவேசக் குரலாக ஒலிக்கின்றன.

கவிஞர் முருகையன் இன ஒடுக்குமுறையின் கொடூரங்களின் மத்தியில் வாழ்ந்தவர். இனக்கலவரங்கள், அழிவுகளைக் கண்டவர். அதனால், அவருடைய கவிதைகளில் அவை ஆத்மார்த்தமாக வெளிப்படுகின்றன. தமிழர்கள் அகதிகளாக, ஏதிலிகளாக அல்லற்பட்டு அலைந்தனர் என்பதை,

"வீடிழந்து தெருவிலே நிற்கின்றோம்
வெட்டப்பட்டும் அடிபட்டும் சாய்கிறோம்
தேடிவைத்த சில பண்டம், சல்லிகள்
திருடப்பட்ட அகதிகள் ஆகிறோம்
ஓட ஓட விரட்டப்படுகிறோம்
ஓங்கி மோதி உதைக்கப்படுகிறோம்
வயிற்றில் ஏறி மிதிக்கப்படுகின்றோம்...
வழியில் வைத்து மறிக்கப் படுகிறோம்
வயலில் விட்டுப் பொசுக்கப் படுகிறோம்
சிறையில் இட்டுச் சிதைக்கப் படுகிறோம்
செக்கில் இட்டுத் துவைக்கப் படுகிறோம்"

என்று பாடுகின்றார். துயரத்தின் வலிகளாக இவ்வரிகள் வெளிப்படுவதைக் காணலாம். சித்திரவதைகளும் அடக்குமுறைகளும் அடிமைத்தனங்களும் நிறைந்த சூழலில் தமிழர்கள் அவதிப்படுவதை இந்தக் கவிதை பேசுகின்றது. "வாயடைத்துப் போனோம்" என்ற கவிதையிலும் இன அடக்குமுறையின் கொடூர முகங்களைத் திரைகிழித்துக் காட்டுகின்றார்.

"என் நண்பா, மௌனம் எதற்கு?"
என்று கேட்டிருந்தாய்.
வாயடைத்துப் போனோம் வராதாம்
ஒரு சொல்லும்.
"திக்" கென்ற மோதல் –
திடுக்கிட்டுப் போனோமே!

பொய் வதந்திக் கொள்ளி பொசுக்கென்று
போய்ப்பற்ற
ஏற்ற வகையில்
இதமான நச்செண்ணெய்
ஊற்றி
அதில் ஊற வைத்த உள்ளங்கள் இல்லாமல்
இத்தனை தீய எரிவு நடைபெறுமா?

எத்தனை தீய எரிவு –தலையுடைப்பு,
குத்துவெட்டு, பாயும் குருதிக் குளிப்பாட்டு?

சற்று முன்னர் மட்டும் சகஜமாய்ச் சாதுவாய்ப்
பேசி இருந்த பிராணி
சடக்கென்று வாரை இருப்பாற் கழற்றி,
மனங்கூசாமல்
ஓங்கி விளாச ஒருப்பட்ட சிந்தையதாய்
மாறிவிட்ட விந்தை மருமம் என்ன?
சுர்ரென்று
சீறி எதிர்த்த செயலின் கருத்தென்ன?
கொள்ளை, திருட்டு, கொலைகள்,
கடையுடைப்பு,
பிள்ளை அரிவு, பிடுங்கல், வதை புரிந்து
சீறி எதிர்த்த செயலின் கருத்தென்ன?

ஒன்றும் எமக்குச் சாரியாய் விளங்கவில்லை.
"திக்"கென்ற மோதல் – திக்கிட்டுப்போனோம் நாம்.
வாயடைத்துப் போனோம்
வராதாம் ஒரு சொல்லும்."

விஞ்ஞானப் பட்டாதாரியாகவும் விளங்கிய காரணத்தினால் அவருடைய கவிதைகளில் விஞ்ஞானக் கருத்துக்களின் செல்வாக்கையும் காணலாம். "நெடும் பகல்" என்ற அவரது காவியம் இதற்குத் தக்க சான்றாக அமைகின்றது. ஆரம்ப காலக் கவிதைகளில் யாப்புப் போர்வைக்குள் நின்றுகொண்டாலும் பின்னர் கட்டுடைத்து வெளியேறி கருத்துக்களுக்கும் உணர்ச்சிகளுக்கும் முதன்மையளித்துள்ளமையைக் காணலாம்.

தமிழ் கவிதையுலகில் தனக்கென தனியான முத்திரையைப் பதித்துக்கொண்ட கவிஞர் முருகையன் அவர்கள் பன்முக ஆளுமைகொண் ஒருவராக அறியப்படுகின்றார். கவிதைத் துறையில் மட்டுமின்றி வேறு துறைகளிலும் காத்திரமான பங்களிப்பைச் செய்துள்ளமை மனங்கொள்ளத்தக்கது. உணர்ச்சக் கொந்தளிப்புக்கு இடங்கொடாமல் நிதானமான கவிதைப் பயணத்தை நடத்தியவர். தேர்ந்தெடுத்த சொற்களைப் பயன்படுத்தி அமைதியாக ஓடும் நதிபோல அவரது கவிதைகள் பயணிக்கின்றன. இனமுரண் பாட்டின் கோரத்தனங்களைக்கூட இதமாக எடுத்துக் கூறும் அவரது மொழிப்பக்குவம் மிகமுக்கியமான அம்சமாகும். உருவத்தாலும் உள்ளடக்கத்தாலும் எடுத்துரைப்பாலும் ஈழத்துத் தமிழ்க் கவிதைப் போக்கை புதுப்பாதையை நோக்கிப் பயணிக்க வைத்தவர்களில் முருகையனும் விதந்து குறிப்பிடப்படவேண்டியவர்.

கொன்று தின்னும் பேரொலி

பொய்த்துப் போயிற்று மழை
வலிமையின் திண்மத்தைக்
கரைத்துப் பாயும் ஆறும்
வற்றிப் படுக்கிறது.

மொய்த்து இரையும் பறவைக்கு
இங்கு உணவில்லை
முடிவில்
பறவைகள் விட்டகழும்
பாழ் வெளி இது.

குழந்தையின் அழுகையொலி,
வெப்பக்காற்று அழைத்து வருகிறது.
வரண்டு வற்றிப்போன
ஆற்றின் பிளவுகளிடை
தெறித்துக் கிளம்பும்
மூவாயிரமாண்டுப் பேரொலி அது.

மண்ணிடுக்கிடை நுளைந்து அலைந்து
வெளியேறும் பேரொலியை
மந்திரக் குடுவைக்குள் அடைத்து
காடு புகுந்தான் ஒரு முனிவன்

வெம்மை படர்ந்த
மண் அடுக்குகளின் மேலாய்
கடந்து போகும் பறவைகள்
செத்து விழுகின்றன
அங்கு எந்தப் பறவைகளுக்கும்
நீர் இல்லை.

மூவாயிரமாண்டுத் தொன்மத்தை
கிளறித் தின்றபடி
சிரிக்கிறான் அந்நியமாய் ஒருவன்

நான் தனித்து விடப்பட்ட வெளி,
சூழ்கிறது என்னை
மூவாயிரமாண்டு முழுமொத்தக்
குழந்தைகளின் அழுகையொலி

கடல் காவிச் செல்லும் மரணம்

சிதிலக் குகையினூடு
போன போக்கில் நகரும் வாழ்வு
புன்னகை பீச்சி
அலையுமொரு
தெருநாயின்
வீணீரில் மிச்சப்படுகிறது.

காற்றறைந்து போகாத
ஒரு மாயக் குகைக்குள்
மெய்யுருகிக் கண்ணீர் பூத்து
கடவுளைத் தேடுகிறது
வாழ்தல் பெருங்கடல்

அலை கொண்ட பெருங்கடல்
வாழ்வின் நிசப்தங்களை விழுங்கி
இருளடர்ந்த தன் கூந்தலுக்குள்
சிக்கித் தகிக்கச் செய்கிறது
நிசப்தம் ஊதிப் பெருத்து
பெரு வெடிப்பாகி
அலைகளுள் சிக்குண்டு
மாயப் பிறப்பெடுத்து
பின் கரையில்
தலைமோதிச் சாகிறது.

அலையைக் கொன்றழித்த கடலும்
கடலைக் கொன்றழித்த அலையும்
பெருக்கெடுத்து எல்லோர்
கனவிலும் விரிய
தெருநாயின் மூக்கில் வியர்க்கிறது
மரணத்தின் நாற்றம்.

ஈழத்தில் "குறும்பா"வின் தோற்றமும் வளர்ச்சியும்

பேராசிரியர்.செ.யோகராசா



சென்ற நூற்றாண்டின் ஆறாம் தசாப்தமளவிலேயே ஆங்கில வடிவமான Lime rick குறும்பா என்ற பெயருடன் தமிழிற்கு அறிமுகமாகியது. தமிழிற்கு இதனை அறிமுகப் படுத்தியவர், ஈழத்து நவீன கவிதை முன்னோடியான "மஹாகவி" என்பது இலக்கிய ஆர்வலர் பலரு மறிந்ததொன்று ஆரம்ப காலத்து மஹாகவி 66 தொடக்கம் அண்மைக்கால பாலமுனை பாறூக் வரை அவ்வப்போது ஈழத்துக் கவிஞர்கள் குறும்பாவைக் கையாண்டு வருகின்றனர். ஏறத்தாழ ஐம்பதாண்டுகால வரலாறுகொண்ட இக்குறும்பாவின் தோற்றம், வளர்ச்சி பற்றியும் முக்கிய ஆளுமைகள் பற்றியும் குறும்பாவில் அவர்கள் ஏற்படுத்திய மாற்றங்கள் பற்றியும் அவதானிப்பது பயனுடையது.

தொடர்ந்து செல்வதற்கு முன்னர் "குறும்பா"வின் இயல்புகள் பற்றி அறிவது அவசியமானது (மஹாகவியினது தமிழ்க் குறும்பாவின் இயல்புகளே இவ்வேளை

கவனத்திற்குள்ளாகின்றன). இவ்விதத்தில் பின்வருவன கவனத்திற்குரியனவாகின்றன:

(i) குறுகிய பா வடிவம்
(ii) குறும்புப் பா
(iii) ஒரே எதுகையுடைய மூன்றடிகள் கொண்டது
(iv) குறும்புடன் சிந்திக்கத்தூண்டுவது
(v) காட்சி, துணுக்கு சம்பவம் ஊடாக வெளிப்படுவது
(vi) இறுதி அடியில் அழுத்தம் வெளிப்படுவது
(vii) ஐந்து வரிகளில் அமைவது.

காய் - காய் தேமா
காய் - காய் - தேமா
காய் - காய்
காய் - காய்
காய் காய் தேமா

அறுபதுகளளவில் மஹாகவி தமது நூறு குறும்பாக்களையும் வெளியிடுவதற்குக் களமமைத்துக்கொடுத்தது, எம்.ஏ.ரஹ்மான் நடத்தி வந்த இளம்பிறை என்ற சஞ்சிகையாகும். (இக்குறும்பாக்களுக்கு "சௌ" பொருத்தமான ஓவியங்கள் வரைந்திருந்தார்) இந்நூறு குறும்பாக்களும் பல் வேறு பொருள்களிலமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக,

பின்வரும் மூன்று குறும்பாக்கள் அமைகின்றன.

முத்தெடுக்க மூழ்குகின்றான் சீலன்
முன்னாலே வந்துநின்றான் காலன்
சத்தமின்றி, வந்தவனின்
கைத் தலத்திற் பத்து முத்தைப்
பொத்தி வைத்தான் போனான்முச் சூலன்

உத்தேசம் வயது பதினேழாம்
உடல் இளைக்க ஆடல் பயின்றாளாம்
எத்தேசத் தெவ்வரங்கம்
ஏறாளம் ஆசிரியர்
ஒத்தாசையால் பயிற்சி பாழாம்

சிவபெருமான் இந்நிலத்தில் வந்தார்
சில்லாலைப் பக்கம் நடந்தார்
அவர் உடை–கண் டால் விடுமா
அவ்விடத்து நாய்? அப்பன்
அவசரமாய்த் தம்விடை இவர்த்தார்.

லிமரிக்கிலும் பார்க்க மஹாகவியின் குறும்பாவின் பார்வை அகலமும் ஆழமும் கொண்டது என்பது "எஸ்.பொ" வின் கருத்து சான்றாக, முறையே லியரும், மஹாகவியும் இயற்றிய பின்வரும் குறும்பாக்கள் அவரால் காட்டப்படுகின்றன:

There was an old man of cape Horn
Who wished he had never been born
So he sat on a chair
Till he died of despair
That dolorous man of cape Horn.

பெஞ்சினிலே வந்தழகக் கோனார்
பெருங்கதிரை மீதமர லானார்
அஞ்சாறு நாள் இருந்தார்
அடுத்த திங்கள் பின்னேரம்
பஞ்சியினாலே இறந்து போனார்.

லயரின் குறும்பாவிலே கேலிச் சிரிப்பு மட்டுமிருக்க, மஹாகவியின் குறும்பாவிலே கேலிச் சிரிப்புடன் சிந்தனையைத் தூண்டும் விடயமுள்ளது!

மஹாகவி குறும்பாவை தமிழிற்கு அறிமுகப் படுத்தியது மட்டுமன்றி அவ்வழி தமிழ்க் கவிதையின் பொருள் மரபை விரிவுபடுத்தினார் என்பதும் குறிப்பிடத் தக்கது. இது பற்றி எஸ்.பொ.பின்வருமாறு குறிப்பிடுவதும் கவனத்திற்குரியது: "கலைப் போர்வையில் நடைபெறும் ஆபாசம் சமையற் புத்தகம் பார்த்துச் சுவைக்கும் நாகரிகம், சுங்கக் கடத்தல், கஞ்சாக் கடத்தல், சீதனக் கொடுமை, சினிமாக் கொட்டகைகளிலே நடைபெறும் அங்கசேஷ்டைகள், பிறமொழி மோகம், புகழுக்கும் விளம்பரத்திற்குமாக நன்கொடை வழங்கும் நடிகர்களுடைய மனப்பான்மை, "விடுப்புப் பார்க்கும் இயல்பு, காதல் பற்றிய மனோரதியக் கற்பிதங்கள், இலக்கியக்காரரின் போலிப்புலமை, கைலஞ்சப் பெருக்கம், பண்டிதரின் பண்டிதம், செருப்பைத் தேய்க்கும் அளவிற்கான கஞ்சத்தனம்,

விஞ்ஞானப் புதுமைகள் ஆகிய எவையுமே மஹாகவியின் கூரிய பார்வைக்குத் தப்பாது. குறும்பாவுக்கு இசைவான பொருள்களாக நெகிழ்ந்து கொடுத்திருக்கின்றன.."

மஹாகவியைத் தொடர்ந்து எழுபதுகளளவிலே குறும்பா இயற்றியவர்களுள் எம்.எச்.எம்.ஷம்ஸ், கலைவாதி கலீல், ஜவாத் மரைக்கார் ஆகியோர் கவனிப்பிற் குரியவர்கள் (இவர்கள் மூவருமே அவற்றைத் தொகுப்புகளாகத் தரவில்லை. ஷம்ஸ், காசாலேசா என்ற தலைப்பிலே தமது குறும்பாக்களை தொகுத்து வெளியிடும் முயற்சியிலீடுபட்டிருந்தாலும் அவை நூலுருப் பெறவில்லை). பார்வைக்குக் கிடைத்த இவர்களது ஒருசில குறும்பாக்களுள் ஒவ்வொன்று கீழே இடம்பெறுகின்றது:

ஆறுதரம் சென்றவராம் மக்கா
ஹாஜிவர வேற்பு மிகப் பக்கா
காரிலவர் வந்திறங்கக்
கந்தலுடைப்பெண் விழியில்
பார்த்துவிட்டாள். ஆம்! அவரின் அக்கா

–எம்.எச்.எம்.ஷம்ஸ்

நபிஜயந்தி விழாவெடுத்தார் பெண்கள்
நாட்டியத்தைக் காணப் பல கண்கள்
நைலெக்சு நழு நழுக்க
நள்ளிரவில் வீடு வந்தார்
நாயகன்மார் இதயமெல்லாம் புண்கள்!

–கலைவாதி கலீல்

அந்தோ! ஹாஜிமார் கொடையிற் பாரி
அன்வர் வந்தான் பசிக்குதெனக்கூறி.
"இந்தா"வெனச் சதமிரண்டை
ஈந்து சென்றார் பெரும் பணத்தைப்
பந்தயத்தில் போட காரி லேறி.

–ஜவாத் மரைக்கார்



எண்பதுகளவிலே "குறும்பா" இயற்றியவர் களுள், அல் அஸுமத், நௌசாத் கொக்கூர் கிழான் ஆகியோர் முக்கியமானவர்கள்.

ஈழத்துக் குறும்பா வரலாற்றில் அல் அஸுமத் மிக முக்கியமானவர். தாம் நடத்திய பூபாளம் சஞ்சிகை யில் குறும்பாக்கள் பலவற்றை வெளியிட்டதனூடாக, குறும்பா உலகிற்குள் பலரை இழுத்துவந்தவர். தமது குறும்பாக்களூடாக, பலவடிவப் பரிசோதனை முயற்சிகளிலீடுபட்டவர். உ-ம்: -

(i) ***கோடீர்***

வேடுவர்கள் குகைவசித்த கோலம்
வீதியிலே வந்ததிற்குக் காலம்
விட்டொழிந்தார் சீலம்
விழைகின்றார் கூளம்
விதியுருளைச் சுழற்சியிலேஞாலம்

(விரிவஞ்சி, வேறு உதாரணங்கள் தரப்படவில்லை)

(ii) தொடர் குறும்பாக்கள் : உ-ம் :-

மலைத் தனயர்கள்

கோடிவிலை ஊரழைத்தும் வேண்டான்
குறிஞ்சியிங்கே வாழ்வென்று ழண்டான்
குளிர்நாட்டு மேனான்
கொள்ளையிட்டுப் போனான்
குடலரித்துக் கூலியிவன் மாண்டான்

மாளுமுளர் ஆண்நால்வர் பெற்றான்
மடமையிலே மூத்தவனோ இற்றான்
மறுவாழ்வு காணான்
மந்தை யென்றே ஆனான்
மண் பிறவா மனிதம் போற் செத்தான்

இரண்டாமவன் துரைமாரைக் கண்டான்
இலக்கியமாய் அவர் வாழிவைக் கொண்டான்
எவர் தாலி யேனும்
இவன்கையே காணும்
இயந்திரமாய்த் தனிமலையைத் தின்றான்
.....

(தொடர்ந்துவரும் பாடல்கள் விரிவஞ்சித் தரப்படவில்லை)

(iii) சமயஞ் சார்ந்த விடயங்களைப் பேசவும் பயன் படுத்தியமை. உ-ம்:

ஈத்து உவக்கும் இன்பம் (பூபாளம் 1983),

ஆண்டிலொரு திங்களைத் தேர்வு
அற்புதமாய் அடையுமொரு தீர்வு
ஆண்டவனில் நேச முற்றார்
அடியவர்பாற் பாச முற்றார்
அவனிதனில் நின்றொழிப்பார் சோர்வு

ஈகையுடன் தொழுகைபல தானம்
இயற்றியதால் இன்றில்லை ஈனம்
ஈதுவக்கும் இன்பநிலை
இன்றொருநாள் என்பதில்லை
என்றென்றும் திளைத்திடவேஞானம்

இஸ்லாமியச் சட்டங்களின் மகத்துவம் பற்றியும் "இஸ்லாமியச் சட்டங்கள் சுட்டெரிக்கும் பாலையல்ல, சுகந்தரும் சோலை" என்ற தலைப்பிலே தொடர் குறும்பாக்கள் அவரால் எழுதப்பட்டிருக்கின்றன. அல்அசுமத் குறும்பா கவியரங்குகள் (வானொலியிலும், மேடையிலும் நடத்தியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. தற்போது யாப்பியல் உரை நூலொன்று எழுதி வருகின்றார்)

எண்பதுகளளவிலே குறும்பா எழுதியவர்கள் தீரன் ஆர்.எம். நௌசாத், கொக்கூர் கிழான் கா.வை.இரத்தினசிங்கம் ஆகியோர் முக்கியம் பெறுகின்றனர்.

தீரன் ஆ.எம்.நௌசாத்தும், அல் அஜுமத் போன்று (கவிதைச்) சஞ்சிகையொன்று (தூது) நடத்தியவர் ஆசிரியத் தலையங்களைக்கூட சில சந்தர்ப்பங்களில் "குறும்பா" வடிவத்தினூடாக "எழுதி" யவர் இதனால் தொடர்குறும்பாக்களும் வெளிவந்தன. இச்சஞ்சிகை வெளிவந்தகாலம் பேரினவாத ஒடுக்கு முறையின் உச்சங்களும் ஆயுதப்போராட்டங்களும் நிகழ்ந்தகாலமாதலின் அவை பற்றிய குறும்பாக்கள் அதிகளவிலே இயற்றியவர். உ-ம்:

பரிமாற்றம் (ஆசிரியர்த் தலையங்கம்)

இனந்தோறும் துப்பாக்கிச் சத்தம்
தீ நரகில் மாமனுடங்கள் தத்தம்
தீய்ந்துவிடும் உயிருடமை
திரும்பாதா சமாதானம்
தீராதா உள்நாட்டு யுத்தம்

ஒற்றுமையாய்ப் பேச்சொலிக்கும் காலை
ஓர்குண்டு வெடித்திடுமொரு மூலை
ஒப்பமிட்டார் ஓடியொழிய
ஒரு கணத்தில் குழம்பிவிடும்

ஓலமிட்டமும் மனசெல்லாம் பாலை

.....

(தூது-10, 1986 யூன்)

"தீரன்" தொடர்ந்து எழுதி வருவதனால் "குறும்பாக சில குறும்பாக்கள்" என்ற தலைப்பில் சமகால விடயங்களும் அவரால் எழுதப்படுகின்றன.

உ-ம்:

கிறிஸ்மேன்

எங்கிலுமே "கிறிஸ்மேன்" தான் பேச்சு
எல்லோரும் வீட்டங்க வாச்சு
எத்தனிவன் ஏகலைவன்
ஏறிக்கூரை பிரிந்து
எடுத்துச் சென்றான்கோழி போச்சு

(நீங்களும் எழுதலாம் - மே-ஒக் 2011)

இக்காலப்பகுதியில் "கொக்கூர் கிழான்" கா.வை.இரத்தினசிங்கமும் குறும்பாக்கள் எழுதியிருப்பதாகவும் அவரது தொகுப்புகளில் அவை இருப்பதாகவும் தீரன் தகவல் தந்திருப்பினும் தொகுப்புகள் கிடைக்காத நிலையில் கொக்கூர் கிழான் தீரனுக்கு எழுதிய கடிதக் குறும்பாக்களுள் ஒன்று இவ்வேளை தரப்படுகின்றது:

ஆசிரியர் புலவர்மணி என்றன்
அகத்தில் அமர்ந்திருக்கும் அன்பன்
பாண்டியூரன் ஆஸாவும்
அன்பு முகை தீனுமற்ற
யாபேரும் நண்பர்களே என்பன்

(23-4-83)

(கொக்கூர் கிழான் யாப்பியல் நூலொன்றும் எழுதியுள்ளாராம்) பீர்முகம்மதுவும் இக்காலப்பகுதியில் குறும்பா எழுதியிருப்பினும் (தகவல் : தீரன்) அன்னார் பிற் காலத்திலெழுதிய தொடர் குறும்பாவே பார்வைக்குக் கிட்டியுள்ளது:

மஹாகவியைத் தேடி

".....

குறும்பாவைப் புதுவடிவாய்த் தந்தார்
கொதித்தெழுந்து சிலபேரும் வந்தார்
வெறும் வாயைச் சப்பியன்று
வீண்புரளி செய்தோரை
நறும்பாவால் நசுக்கிவழி போந்தார்"

குறிஞ்சித் தென்னவன் எக்காலப்பகுதியில் குறும்பா எழுதினாரென்று அறிய முடியாவிட்டாலும் மலையக மக்களது பிரச்சினைகள் சிலவற்றை (அல் அஸுமத் போன்று) தமது பாக்களில் வெளிப்படுத்தியிருக்கின்றார். உ-ம்:

குப்பன்வாழ் லயத்தினது கூரை
குளமாக்கும் வீட்டை மழைத்தாரை
தப்பாது இங்குவந்த
தகரமெல்லாம் ஓரிரவில்
அப்போதே அடையும் கொழும் பூரை!

பேசுபொருளுக்கேற்ப பொருத்தமான வடிவங்களைக் கையாள்கின்ற ஆற்றலுள்ளவரான சிவசேகரத்தின் குறும்பாக்கள் சில பனிமலரில் (லண்டன்) இடம்பெற்றுள்ளன. (இவ்வேளை அவை கிடைக்கவில்லை. இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் புதிய தலைமுறையினர் சிலர் குறும்பா எழுத ஆரம்பித்துள்ளனர். இவர்களுள் சிவபாலன் குறிப்பிடத்தக்கவர் (நகை, 2000) புலப்பெயர்வு தொடர்பான இவரது குறும்பாக்கள் கவனத்திற்குரியவை. உ-ம்:

பெருமை

"கந்தவனம் காலமாகி விட்டார்
கைதடியார் கடமைகளைச் செய்தார்
ஐந்து பிள்ளை கனடாவில்
ஆறாமவன் அபுதாபி
இந்தவகை பெருமையவர் கொண்டார்"

மஹாகவிக்குப் பின்னர் மேற்குறிப்பிட்ட பலரும் எழுதியிருப்பினும் மஹாகவிக்குப் பின்னர் அச்சில் வெளிவந்த குறும்பாதி தொகுப்பு "நகை" ஓவியங்களும் இவற்றிலுண்டு. (தொகுப்பின் தலைப்பு நகை" என்பதனால் ஆய்வாளர் சிலர் இத்தொகுப்பை நிராகரித்துள்ளனர். அவ்வாறெனில் அறுபதுகளுக்கு முற்பட்ட புதுக்கவிதைகளையும் நிராகரிக்க வேண்டும்) "மஹாகவி"யின் குறும்பாவிற்கு எஸ்.பொ.காத்திரமாக முன்னுரை தந்திருப்பது போன்று, "சோ.ப"வின் முன்னுரை இதற்குண்டு.

தொடர்ந்து எழுதியவர்களுள் இருவர் தொகுப்புகள் தந்துள்ளனர். ஒருவர், ஒலுவில்.எஸ் ஜலால்தீன் (சுடுகின்ற மலர்கள் 2002) காதலுணர்ச்சியும் போதனைப் பாங்குமுடைய குறும்பாக்கள் இத்தொகுப்பிலதிகமுண்டு. குறும்பான பாக்களும் கணிசமாகவுண்டு. உ-ம்:

வேலியிலே ஓட்டையிட்டுக் காளை
விருப்பமுற்றுப் பார்க்குமந்த வேளை
கேலி செய்ய வருவதுபோல்
கிட்டவந்து முட்டியுடன்
ஊற்றி விட்டாளாம் மிளகுத்தூளை

"மஹாகவி" யின் குறும்பாவி தொகுப்பிற்கு சிறந்த ஓவியங்கள் அணிசெய்ததுபோன்றும் காத்திரமான முன்னுரை (எஸ்.பொ) இடம்பெற்றது போன்றும்

இத்தொகுப்பும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. (முன்னுரை : ஷம்ஸ் ஓவியம் ஜனாப்.ஜலீல்)

மற்றொருவர், ஜே.வஹாப்தீன் (வெட்டுக் கற்கள், 2010). பல்வேறு விடயங்களையும் பாடும் இவரது குறும்பாக்களிலே பேச்சுமொழிப் பிரயோகம் ஒப்பீட்டு நோக்கில் பெருமளவில் இடம்பெற்றுள்ளன.

உ–ம் :

"பொன்னன் வெளிப்பூமியிலே சாமி
போகோலா கடற்கரையில் ஆமி
பொன்னான கிராமத்தின்
பொக்கிஷத்தை இழந்து விட்டோம்
போனவழி தெரியவில்லை பூமி.

ஓவியங்களுள் சில பொருத்தமானவையெனினும் பல இன்ரநெற்றிலிருந்து எடுக்கப்பட்டிருப்பதால் எரிச்சலூட்டுகின்றன. (இப்போதெல்லாம் சிறுவர் இலக்கியங்களுக்கும் அவையே பயன்படுகின்றன!

ஈழத்துக் குறும்பா தொகுப்பு வரிசையிலே இறுதியாக வந்துள்ளது, பாலமுனை பாறூக் குறும்பாக்கள் (டிசம்பர் 2013) தொடர்குறும்பாக்களும் யாப்புப் பரிசோதனைகள் சிலவும் ஒருபுறமிருக்க, சமகால, சமூக, அரசியல், கலை, இலக்கிய உலகு பற்றிய நுண்மையான விமர்சனப் பார்வை பல குறும்பாக்களின் அடிச்சரடாக அமைந்திருப்பது கவனத்திற்குரியது.

உ–ம்:

சந்தர்ப்பம்

சந்தர்ப்பம் சமயமெல்லாம் பார்த்து
சரியான தகவல்கள் சேர்த்து
சென்று கதைப் போமென்றே
செப்பியவர், பெரியவரைக்
கண்டவுன் நின்றுவிட்டார் வேர்த்து!

சமூகப் பிரச்சினைகள் என்ற விதத்திலே மத்திய கிழக்கு நாடுகளுக்குத் தொழில்புரியச் செல்கின்றவர்கள் தொடர்பான பிரச்சினைகளில் கவிஞர் கவனஞ் செலுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

உ–ம்:

சின்ன வீடு
மனைவியைத் தொழில் புரியவிட்டார்
மாதவளோ போய்ச் சேர்ந்தார் "கட்டார்"
இனி நமக்கோர் வீடமைப்பீர்
என்றவளும் பணமனுப்ப,

வெறி
பணிப்பெண்ணாய் சவூதிக்குப் பறந்தாள்
பிரிவாலே கணவருமோ கரைந்மதத்
மாதங்கள் கடந்துவிட
மாதவளும் காசனுப்ப
மறந்துவிட்டார் நிறைவெயில் மிதந்தார்.

"மலர்" என்பவர் கடந்த சிலவருடங்களாக, "தொண்டன்" சஞ்சிகையில் குறும்பா எழுதி வருகின்றார். அவற்றின் உள்ளடக்கம் துணிச்சலான சமூக, அரசியல் விமர்சனமாக வெளிப்பட்டாலும் வடிவ நோக்கில் மஹாகவி வழிவந்த குறும்பா வடிவத்திலிருந்து கணிசமாக வேறுபட்டிருப்பது, கவனத்திற் குரியது. (குறும்(புப்) பர் என்ற தலைப்பிட்டிருப்பதால் மட்டுமே இங்கு கவனத்திற்கொடுக்க வேண்டியிருந்தது)

உ–ம் :

அழியட்டும் சிறுபான்மை மதங்கள்
உடையட்டும் கோயில்கள் சிலைகள்
வழிமட்டும் பலசேனா காட்டுஞ்சன நாயகம் (?)
வளரட்டும் "தர்மிஷ்ட" நாட்டில்

இறுதியாக, மஹாகவி தொடக்கம் "மலர்" வரையிலான ஈழத்துக் குறும்பாவின் வளர்ச்சி பற்றி மதிப்பிடுவதற்கு முன்னர் சிலவிடயங்களைக் குறிப்பிடுவது அவசியம். அவையாவன

(i) மஹாகவி குறும்பாவைத்தமிழிற்கு அறிமுகப் படுத்தியது தொடர்பாகக் கூறப்பட்டுவரும் செவிவழிக் கதைகள் விரிவஞ்சி இங்கு பேசப்படவில்லை

(ii) தமிழ் இலக்கிய மரபிலே இவற்றை இனங்காண்பது பற்றியும் கூறப்படவில்லை

(iii) ஆங்கிலத்தில் லிமரிக்கின் தோற்றம், இயல்புகள் குறித்து அதிகம் கவனிக்கப்படவில்லை.

(iv) இவ்அவதானிப்பு முழுமையானது என்று கருத முடியாது. ஏனெனில், மொத்தமாகவுள்ள 15 கவிஞர்களுள், 09 பேர் தமது குறும்பாக்களை தொகுப்பு உருவில் கொண்டு வராத நிலையும் பத்திரிகை நறுக்குகள்கூட கிடைக்காத நிலையுமுள்ளன. பத்திரிகை நறுக்குகளில் இரு கவிஞர் களது (அல் அஸுமத், தீரன் நௌசாத்) குறும்பா நறுக்குகள் மட்டும் கணிசமாக இக்கட்டுரையாளருக்குக் கிடைத்துள்ளன. ஆக, எட்டுக் கவிஞர்களே முழு ஆய்வுக்குட்பட்டுள்ளனர். ஏழு கவிஞர்கள் பெயர் அளவில் மட்டும் கவனிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி கவிஞர்களது குறும்பாக்கள் பற்றிய மதிப்பீடு மஹாகவியின் குறும்பா இயல்புகளையும் சிறப்புக்களையும் அடிப்படையாகக் கொண்டு மட்டுமே இவ்வேளை அவதானிக்கப்படுகின்றது. இவ்விதத்தில், பின்வருவன கவனத்திற்குரியன

(i) பொருள்மரபு அகற்றி பெற்றுள்ளது.

(ii) மூன்றடி அமைப்பிலும் ஐந்துவரி அமைப்பிலும் சில மீறல்கள் ஏற்பட்டுள்ளன. அம்மீறல்கள் குறைபாடு களாகக் கருதப்பட வேண்டியது அவசியமன்று.

(iii) தனிப்பாக்கள் தொடர்நிலைப்பாக்களாக மாற்றம் பெற்றுள்ளது. இது அவசியமா என்பது ஆய்விற்குரியது.

(iv) கவிஞர் சிலர் குறும்பாக்களூடாக போதனை செய்வதிலும் தத்துவ அலசலிலும் ஈடுபட்டிருப்பது பொருத்தமானதல்ல. ஏனெனில் அவற்றினூடாக நகைச்சுவையுணர்ச்சி வெளிப்படவில்லை.

(v) பொருத்தமான ஓவியங்கள் அமைவது பலராலும் பின் பற்றப்படவில்லை.

(vi) சிலரது குறும்பாக்களுள் பல, செயற்கைப் பண்பு பெற்றுள்ளன கற்பனையும் சொற்தேர்வும் குன்றியு முள்ளன.

(vii) சிரிப்பிற்கும் இத்தனைக்கும் "சமத்துவம்" கொடுக் கின்ற குறும்பாக்கள் குறைவாகவே உள்ளன. ஏனெனில் அவ்வாறெழுவது கடினமானது (தமிழ் இலக்கிய மரபிலேகூட நகைச்சுவைக்கதைகள் குறைவே).

ஹைக்கூ

வருமதி

உணவுகள்
உண்கிறது மனிதனை!
சலரோகம்

வறுமை

செருப்பு
தைத்தவனை தைத்தது!
முட்கள்.

வறட்சி

மாரிகாலம்
குடைகள் உள்ளது!
மழையில்லை.

வன்முறை

பறிக்கும் போது!
வெள்ளை றோஜாக்களும்
சிவப்பாகும்

ஊழியில் பூமி

கடல் நடுவினில்
உருண்டோடும் கட்டையொன்று
உருக்குலைகிறது...!
ஊன்றிய விழிகள் ஏதும்
உருக்குலைந்த கட்டையை
உற்று நோக்கியும்
நோக்காது நகர்கின்றன...!
மீனினங்களின் விளையாட்டு
மேடையாகி
மீனினங்களை மகிழ்விக்கின்றது
உருக்குலைந்த கட்டை – தான்
உக்கிச்செல்வது
தெரியாமலே...!

கடவுள் பாதி

வண்ணத்துப்பூச்சியொன்று
தன் வனப்பைக் காட்டி
வட்டமிடுகின்றது...!
கண்களைக்கவரும்
காட்சி கண்டே
களிப்படைந்து
கொள்கிறேன்....!
என் வீட்டு முருங்கை
மரத்தில் உள்ள
மயிர்கொட்டிப்புழுக்களுக்கு
தீ வைத்தபடியே....!

– பொலிகையூர் பொன். சுகந்தனின் கவிதைகள்



விழித்திருமகளே!

விஞ்ஞானத்தின் விந்தைகள் இமயமாய்
மெய்ஞ்ஞானத்தின் வலிமை பாதாளமாய்
விலங்குகள் நிறைந்த உலகினில் வாழ்ந்திடக்
கலங்கிடும் மகளே கவனமாய் இருந்திடு!
ஒற்றைக்கண்ணால் உறங்கிக்கொண்டே
மற்றைக்கண்ணை விழிப்பாய் வைத்திரு!

"ரிப்ரொப்" உடையிற்"சென்ற்" மணம்வீச
ஆங்கிலச்சொற்களைத் தேனாய்க்குழைத்து
அழகைப்புகழ்ந்துனைக் காக்கையாய் மாற்ற
அந்தரப்பட்டிடும் தந்திர நரிகள்

"பேஸ்புக்" மூலம் வலையை விரித்து
இரைவரும் வரை பொறுமையாய் இருந்தே
அகப்பட வைக்கும் பெருவலைச்சிலந்தி

ரெலிபோன் மூலம் வீடியோ அனுப்பி
உணர்வைக்கிளறும் உன்மத்தக்கரடி

காதல் என்ற போர்வையில் அழைத்துக்
கட்டில் நிகழ்வை வீடியோ எடுத்து
விரும்பிய போதெல்லாம் விருந்துண அழைக்கும்
விஷப்பல் கொண்ட விரியன் பாம்பு

தலையை மாற்றி வெற்றுடல் புகுத்தி
குலமகள் தன்மேற் களங்கம் சுமத்தித்
திருமண நிறுத்திடும் பட்டடை நாய்கள்

ஓரிரா முழுவதும் நாரியை முறித்துக்
கணவன் காட்டும் உச்ச நிலையை
மிகச்சிறு நிமிட ரெலிபோன் கதையில்
அடைந்திட வைக்கும் பசைநாப் பல்லி

இத்தனை ஜந்துகள் மத்தியில் வாழ்கிறாய்
விழித்திரு மகளே! விழிப்பே காத்திடும்!

– ம.பா.மகாலிங்கசிவம்



எளிமையும் சந்தமும் சங்கமிக்கும் இணையற்ற கவிஞன் மஹாகவி

அ.பௌநந்தி

இலங்கையின் வடபாலுள்ள யாழ்ப் பாணத்தின் வளமிக்க அளவெட்டிப் பிரதேசத்தில் துரைச்சாமி உருத்திரமூர்த்தி 1927.01.09 அன்று பிறந்தார். தனது பதினாறாவது வயதில் ஈழகேசரியில் எழுதிய "மின்னல்" என்ற கவிதையோடு கவிதை யுலகில் பிரவேசித்தார். எனினும், 1940களின் ஆரம்பத்திலிருந்தே முழுமூச்சுடன் கவிதையுலகில் வலம்வரத் தொடங்கினார். ஆரம்பகாலத்தில் சிறுகதை, கவிதை ஆகிய இரண்டையும் எழுதியிருந் தாலும் பின்னர் கவிதையே தனது பெயரை தகைமைப் படுத்தும் என்பதை உணர்ந்து கொண்டார். மஹாகவி என்ற புனைபெயரே நின்று நிலைத்துவிட்டாலும், பண்டிதர், மாபாடி, மாகாலட்சுமி, பாணன், வாணன், காப்பியாற்றுக் காப்பியனார், புதுக்கம்பன், புதுநாப் புலவர் ஆகிய புனைபெயர்களிலும் கவிதைகளை எழுதியுள்ளார். ஈழத்து இதழ்களான ஈழகேசரி, மறு மலர்ச்சி, சுதந்திரன், உதயம், வீரகேசரி, தினகரன், கவிஞன், நோக்கு, தேனருவி, தேன்மொழி போன்ற வற்றிலும், தமிழக இதழ்களான கிராம ஊழியன், கலைமகள் போன்றவற்றிலும் அவரது கவிதைகள் வெளிவந்துள்ளன.

ஆங்கில மொழிமூலம் கற்ற து.உருத்திர மூர்த்தி அவர்கள் 1945 இல் எழுதுவினைஞராக அரசபணியை ஆரம்பித்து அரசகரும மொழிகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் உயர் பதவியை அலங்கரிக்குமளவிற்குப் பணியாற்றியவர்.



மஹாகவியின் படைப்புக்களில் நூலுருப்பெற்றவை.

- வள்ளி (மஹாகவி கவிதைகள்)
- மஹாகவி குறும்பா
- கண்மணியாள் காதை (வில்லுப்பாட்டு)
- கோடை–பாநாடகம்
- ஒரு சாதாரண மனிதனது சரித்திரம்
- வீடும் வெளியும் – கவிதைத் தொகுதி
- கந்தப்ப சபதம் – காவியம்
- சடங்கு காவியம்
- மஹாகவி கவிதைகள்
- புதியதொரு வீடு பாநாடகம்
- கல்லழகி காவியம்
- தகனம் – காவியம்
- முற்றிற்று பாநாடகம்

இவற்றில் கண்மணியாள் காதை, கோடை, புதியதொரு வீடு ஆகியன மேடையேற்றப்பட்டு வரவேற்பைப் பெற்ற படைப்புக்களாக அமைகின்றன. "தகனம்" கவிஞர் முருகையனும் மஹாகவியும் சேர்ந்து எழுதிய படைப்புக்கள். தனது சமகால

எழுத்தாளர்களையும் மதிக்கின்ற பண்பினை அவர் கொண்டிருந்தார் என்பதை சேர்ந்து எழுதிய கவிஞர் முருகையனே சிறப்பித்துக் கூறியுள்ளார். (இன்று இலக்கியகாரர்களில் சிலர் இலக்கிய மோதலைவிடுத்து ஆட்களை எதிர்க்கின்ற கொள்கையுடையவர்களாக இருப்பது மனவருத்தத்திற்குரியது.)

மஹாகவியினுடைய கவிதைக் கொள்ளை எதுவென்பதை அவருடைய கவிதைகளினூடாகவே தரிசிக்க முடிகின்றது. இயற்கை வனப்பையும் காதலையும் தெய்வத்தையும் ஆளும் வர்க்கத்தையும் பாடிவந்த புலவர்களுக்கு ஈழத்துத் தமிழ்க் கவிதை செல்ல வேண்டிய புதுப்பாதையை மஹாகவி காட்டினார். மக்களது பிரச்சினைகளை மனங்கொண்டு கவிதை பாடவேண்டியதன் அவசியத்தை நன்குணர்ந்த மஹாகவி அவர்கள் தனது கவிதைப் பிரகடனத்தை முன்வைக்கின்றார்.

"இன்னவைதாம் கவி எழுத
ஏற்ற பொருள் என்று, பிறர்
சொன்னவற்றை நீர் – திருப்பிச்
சொல்லாதீர்! சோலை, கடல்,
மின்னல், முகில், தென்றலினை
மறவுங்கள். மீந்திருக்கும்
இன்னல், உழைப்பு, ஏழ்மை, உயர்வு
என்பவற்றைப் பாடுங்கள்"

அவர் வாழ்ந்த சூழலில் மக்கள் வாழ்வியலின் உண்மையான விம்பத்தை கவிதையூடாக வெளிக் கொண்டுவருவதில் மஹாகவி அதிக கரிசனை காட்டியுள்ளார் என்பது அவரது கவிதைகளைப் படிக்கின்ற போது புலனாகின்றது. "மீண்டும் தொடங்கும் மிடுக்கு" என்ற அவரது கவிதை ஏருழவர்களின் (விவசாயிகளின்) கடின உழைப்பையும் சலியாத மனத்தின் வலிமையையும் காட்டி நிற்கின்றது. வரண்ட வலிமையான நிலத்தை ஓயாது கிண்டுகின்ற உழைப்பாளிகள் அதன் பயனைப் பெறுவதற்கு முன்னரே இயற்கை சதிசெய்து விடுகின்ற சம்பவம் பலவேளைகளில் நடைபெற்றுள்ளது. எனினும், அவர்கள் அதற்குச் சற்றும் சளைக்காது மீண்டும் மீண்டும் முயற்சி செய்து உழைப்பால் உயர்பவர்கள்.

"மப்பன்றிக் காலமழை காணா மண்ணில்
சப்பாத்தி முள்ளும் சரியாய் விளையாது
ஏர்
ஏறாது காளை இழுக்காது
எனினும் அந்தப்
பாறை பிளந்து பயன் விளைப்பான்
என் ஊரான்.

ஆழத்து நீருக் ககழ்வான் அவன்
நாற்று
வாழத்தன் ஆவி வழங்குவான். ஆதலால்
பொங்கி வளர்ந்து பொலிந்தது பார் நன்னெல்லு.

என்று கடின உழைப்பால் விளையும் நெல்லின் சிறப்பைப் பாடிய கவிஞர் இயற்கை அவர்கள் கனவில் மண்ணள்ளிப் போட்ட துன்பியலையும் கூறத்தவறவில்லை.

"....வாடும் வயலுக்கு வார்க்கா முகில், கதிர்கள்
கூடும் சிறு பயிர்மேல்
"சோ"வென்று நள்ளிரவிற்
கொட்டும்....."

என்று அந்த அழிவுகளைப் பாடுகின்றார். ஆனால், அவன் அதற்குத் துவண்டு போகாமல் மீண்டும் மிடுக்கோடு மண்வெட்டி தொழில் சுமந்து வயலுக்குச் செல்லும், செல்லவேண்டிய மனத் தைரியத்தையும் உண்வுபூர்வமாக வெளிக்காட்டத் தவறவில்லை.

காற்று, மழை, குளிர் என்று எதையும் பொருட்படுத்தாது கடலுக்குச் சென்று உழைக்கின்ற நீருழவராகிய மீனவர்களது நாளாந்த வாழ்வியல் தேவைகளைக் கூட பூர்த்திசெய்ய முடியாத வறுமைத் துயரில் மாண்டு போயிருக்கிறார்கள் என்பதை மஹாகவி எடுத்துக் காட்டியுள்ள நுட்பம் மிகச் சிறப்பானதாகும்.

"ஓட்டைக் குடிசை ஒழுக விழித்திரவில்
நாட்டைக் கடந்தான். நடுக்கடலில்
போட்ட
வலையை வலித்திழுத்தான்
வந்ததோ பாசி!
குலையாத நெஞ்சைக் கொடுத்தே அலையோடு
முட்டி அதன் மேன் முகட்டில் மிதந்து விழும்
மொட்டைப் படகை முடுக்கினான்
வெட்டவெளி நீரை உழுதான்
நெடுநாட் பழக்கமிது
பாரை, சுறா என்று பார்த்திருக்கும்
ஊரை
மகிழ்விக்க வல்ல மனிதன், வயிற்றை
அகலும் பசியால் அயரான்."

பசியோடு அயராத உழைக்கவேண்டிய நிலையைக் கண்டு துடிக்கின்றார். கவிஞர் முதலில் பாடிய கவிதைக் கொள்கை இவ்விரு கவிதைகளிலும் முரண்பாடின்றி வெளிப்படுவதைக் காணலாம். இந்த மீனவரின் துயர வாழ்வியலை, "புதியதொரு வீடு" என்ற பாநாடகத்தில்,

"சிறுநண்டு மணல்மீது படம் ஒன்று கீறும்
சிலவேளை இதைவந்து கடல் கொண்டு போகும்
கறிசோறு பொதியோடு தருகின்ற போதும்
கடல் மீதில் இவள் கொண்ட பயம் ஒன்று கானும்
வெறுவான வெளிமீது மழைவந்து சீறும்
வெறிகொண்ட புயல் நின்று கரகங்கள ஆடும்
நெறிமாறுபட நூறு சுழிவந்து சூழும்
நிலையான தரைநீரில் இலைபோல ஈடாடும்
இருளோடு வெளியேறி வலை வீசினாலும்
இயலாது தரவென்று கடல் கூறலாகும்
ஒருவேளை முகில் கீறி ஒளிவந்து வீழும்
ஒருவேளை துயர் நீள உயிர் வெந்து சாகும்"

என்று நண்டு கரையில் கீறும் படத்தை அலை அழிப்பது போல, கடல் மீனவர்களின் வாழ்வியல் எதிர் பார்ப்புக்களை அழித்துவிடுகின்ற துயரத்தை சித்திரித்துக்

காட்டுகின்றார். இங்கு மஹாகவி யினுடைய கவிதை களின் ஓசை நயத்தை உணரலாம். மீனவர்கள் வலை இழுக்கின்றபோது பாடுகின்ற பாடலின் ஓசைக்கேற்ற வகையில் பாடியுள்ளார். இசைக் குடும்பப் பின்னணியில் பிறந்தமையால் மஹாகவியிடம் ஓசை, சந்தம் சிறப்பு வெளிப்படுவதைக் காணலாம்.

சாதி அடக்குமுறைகளும் முரண்பாடுகளும் தலைதூக்கித் தாண்டவமாடிய சூழலில் அதன் கொடுமைகளை இரத்தமும் சதையுமாக பதிவு செய்தவர்களில் மஹாகவியும் முக்கியமானவர். "தேரும் திங்களும்" என்ற கவிதை, பலராலும் அறியப்பட்ட கவிதையாகும். உணர்ச்சி பொங்க சாதி அடக்கு முறையின் கொடுமைக்கு எதிராக குரல் கொடுக் கின்றார்.

"ஊரெல்லாம் கூடி ஒருதேர் இழுக்கிறதே
வாருங்கள் நாமும்பிடிப்போம் வடத்தை
என்று
வந்தான் ஒருவன்.....
"நில்" என்றான் ஓராள்
"நிறுத்து" என்றான் மற்றோராள்
"புல்" என்றான் ஓராள்
"புலை" என்றான் இன்னோராள்
"கொல்" என்றான் ஓராள்
"கொழுத்து" என்றான் வேறோராள்

கல்லொன்று வீழ்ந்து
கழுத்தொன்று வெட்டுண்டு
பல்லோடு உதடு பறந்து சிதறுண்டு
சில்லென்று செந்நீர் தெறித்து
மல்லொன்று நேர்ந்து
மனிதர் கொலையுண்டார்..."

இறை சந்நிதானத்தில் நடந்தேறிய கொலைக் கொடுமையை மனிதநேய அடிப்படையில் நோக்கி யுள்ளமை அவதானிக்கப்பட வேண்டியதாகும். தேரை சமுதாயத்தின் குறியீடாகக் கொண்டு ஓர் அழகிய நாடகம்போல கூறுவதிலுள்ள நயம் சிறப்பானது. உணர்வுத் தொற்றல் உன்னதமானது.

மஹாகவியினுடைய பாநாடகங்கள், வில்லுப் பாட்டு, காவியங்கள் போன்றன வாழ்க்கைச் சூழியில் அகப்பட்டுத் தத்தளிக்கும் வெவ்வேறு சமூகத்தவர் களின் துயரங்களை வெளிப்படுத்தி நிற்கின்றன. "கோடை" அந்நியராட்சி எமது சமூகத்தில் ஏற்படுத்திய அதிர்வுகளை, பாதிப்புக்களை கலைநயத்துடன் அழகுறப் பதிவுசெய்துள்ளது.

மஹாகவியினுடைய "குறும்பா" நயமிக்கது. குறும்பா என்ற வடிவத்தைப் பலர் பயன்படுத்தியிருந் தாலும் மஹாகவிக்கு அது "கைவந்த கலையாகவே" அமைந்துவிட்டது எனலாம். அவருடைய குறும்பா "குறும்புப் பா" என்று சொல்லத்தக்க வகையில் சமூதாயப் பிரச்சினைகளைக் கிண்டலும் கேலியுமாக எடுத்தியம்புக்கின்றன. குறும்பா தொகுதியில் அவர் எழுதியுள்ள முன்னீட்டில் "கவிதை உலகளவு பரந்து பல்வேறுபட்டது. கடவுளையும் காதலியையும் போற்றுவது மட்டுமன்று அதன் பணி. கட்டித்த சிந்தனை யுடைய பண்டிதர்களும், கோட்பாடுகளை விழுங்கி விட்டுச் செமித்துக்கொள்ள முடியாதவர்களும் மோப்பதற்கும், மோந்து முணுமுணுப்பதற்குமாக எழுதப்படுவதன்று கவிதை. அது சாதாரண மனிதனது பழுதுபடா உள்ளத்திற் பாயப் பிறப்பது." என்று கூறி யிருப்பது அவரது கவிதைகளின் இலக்கை இயம்பு கின்றது.

"உத்தேசம் வயது பதி னேழாம்
உடல் இளைக்க ஆடல் பயின் றாளாம்
எத்தேசத் தெவ்வரங்கும்
ஏறாளாம்! ஆசிரியர்
ஒத்தாசை யால், பயிற்சி பாழாம்"

என்ற குறும்பாவில் நடனம் பயிலச் சென்ற பிள்ளை ஆசிரியரால் நாசமாக்கப்பட்ட செய்தியை நகைச்சுவை யாகக் கூறுகின்றார்.

சீதனத்தின் மேல் மோகம் கொண்ட ஆண் வர்க்கத்தை நோக்கி,

"சொந்தத்திற் கார், கொழும்பிற் காணி,
சோக்கான வீடு, வயல், கேணி
இந்தளவும் கொண்டுவரின்
இக்கணமே வாணியின் பாற்
சிந்தை இழப்பான் தண்டபாணி"

என்று கிண்டல் செய்கின்றார்.

காலனுக்கே கையூட்டுக் கொடுக்கக்கூடிய "பெரிய மனிதர்களின்" வல்லமையை கிண்டலாச் சொல்லுகின்றார்.

"முத்தெடுக்க மூழ்குகின்றான் சீலன்
முன்னாலே வந்துநின்றான் காலன்
சத்தமின்றி, வந்தவனின்
கைத் தலத்திற் பத்து முத்தைப்
பொத்தி வைத்தான். போனான் முச்சூலன்!"

மஹாகவியினுடைய குறும்பாக்கள் கற்குந் தோறும் சலிக்காது நயமளிப்பவை. சிலர் அரச உத்தியோகம் பார்த்துவிட்டு ஓய்வெடுத்தால் ஓய்ந்து போய்விடுவர். அதுவே அவர்களின் அழிவுக்குக் காரண மாகிவிடுகின்றது. ஆனால், மறுபுறத்தில் உடலுழைப் பாளர்கள் ஓய்வின்றி உழைப்பதையும் ஆரோக்கியமாக வாழ்வதையும் நாம் காணமுடிகின்றது.

"பென்சனிலே வந்தழகக் கோணார்
பெருங்கதிரை மீதமரலானார்.
அஞ்சாறு நாள் இருந்தார்
அடுத்த திங்கள் பின்னேரம்.....
பஞ்சியிலே இறந்து போனார்."

மஹாகவியினுடைய கவிதைகளின் வெற்றிக்கு எளிமையான சொற் பிரயோகமும் பேச்சோசையைக் கையாளும் லாவகமும் அடிப்படைக் காரணங்கள் எனலாம். இவை சாதாரண மக்களிடமும் களிப்பை ஏற்படுத்தி கவிதைகளைக் கற்கத் தூண்டும் தன்மை யுடையவையாகக் காணப்படுகின்றன.

எளிமையான உவமைகளை அழகாகக்

கையாளும் மஹாகவி, உரையாடல் பாங்கில் எழுதியுள்ள கவிதைகள் அதிகம். பா நாடகங்கள், காவியங்களில் கவித்துவத்தோடு உரையாடலின் சிறப்பையும் தரிசிக்க முடிகின்றது. காதல் கவிதைகள் சிலவற்றை யும் அவர் எழுதியுள்ளார். எனினும், அவற்றுள்ளும் அவரது சமூக நோக்கு மேற்கிளம்புகின்றது. இதற்கு, "வள்ளி" என்ற அவருடைய கவிதை சிறந்த எடுத்துக் காட்டாகும்.

"கொள்ளை வெய்யில் இம்மாலை
வேளையில்
கொள்ளை கொள்ளும் ஓர் மஞ்சள் –
நிறம்
கொண்டிருக்குது, கொஞ்சம்
கிள்ளைகள் அதோ கிளை
அடைந்தன,
வள்ளி வீடு செல்கின்றாள் – வயல்
வரம்பிலே நடக்கின்றாள்...
நெல்லிடிக்குமாம், நீர் இறைக்குமாம்
புல் செதுக்குமாம் கைகள் – அதனால்
பொலிவு பெற்ற அவைகள்!
கல்லொடு ஒத்தது காரிகை உடல்!
வல்லிடை இடை, எனினும் – அது
வருந்தக் கண்டு உளம் உழையும்"

என வயலில் வருந்தி உழைக்கும் பெண்ணழகைக் கண்டு காதல் வயப்படும் கவிஞரின் சமூக நோக்கு கவனிக்கத்தக்கது.

தனது கவிதைக் கொள்கையிலிருந்து விலகாத மஹாகவி அவர்கள் எளிமை, இனிமை என வாசகர்களை வசப்படுத்தக் கூடிய வகையில் கவிதைகளைப் பாடியது மட்டுமின்றி பாடுபொருளாலும் கனதியான பார்வையை வெளிப்படுத்தியவர். கவிதைக் கான புதிய வடிவத்தை வெற்றியோடு அறிமுகப்படுத்தும் முயற்சியிலும் வெற்றி பெற்றுள்ளார் என்றே கூறலாம். காவியங்கள், வில்லுப்பாட்டு, பாநாடகம், குறும்பா என பலவகையிலும் தனது பெயரை பதித்துச் சென்றுள்ளார்.

மஹாகவி அவர்கள் 1971 யூன் 20 அன்று இவ்வுலகை நீத்தார். ஈழத்துத் தமிழ்க் கவிதை யுலகையும் தாண்டி தனது இருப்பை நிலைநாட்டியுள்ளமை வெளிப்படையானது. கவிதைபற்றிய ஆய்வினை மேற்கொள்கின்ற போது விலக்கப்பட முடியாத ஆளுமையாக அவர் விளங்குகின்றார். அவருடைய பிள்ளை களான சேரன், ஒளவை ஆகியோரும் தமிழ் கவிதையுலகில் கவனிப்பைப் பெற்றுள்ளனர் என்பதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டிய முக்கியமான விடயமாகும்.

•

துப்பாக்கி முனை பேசியது



வெள்ளையன் பிரசவித்த
கொள்ளையன்
நான்தான்!
இயந்திர நூற்றாண்டின்
உயிர் வேட்டை
எந்திரன் நான்தான்!
கண்திறந்தால் நான்
கதிகலங்கும் உன் ஊண்!
காரணம் நான்தான்!
பேசினால் நான்
வசம் ஆகும் யமனிடம்
உன் உயிர்...
உத்தி விதைத்தவன் நான்தான்!
பசி – புசிக்க
ஐந்தறிவு....
வாழ்வை ருசிக்க
ஆறறிவு....
காதலர் இதயம்
கண்டுவிட்டதாக.....
கட்டுக்கதை திரிப்பர்!
மார்பை துளைத்து
இதயம்....
கண்டு கொன்று
வருபவன் நான்தான்!
மனித விலங்கினம்
மாற்று இனம் பிரித்த
மரணப்போராட்டத்தில்
கதாசிரியன் நான்தான்!
காவல் துறை....
காற்சட்டை தாங்கியில்
பாசக்கயிறு
நான்தான்!
பாதாளக்கோட்டையில்
கலி காலனின்

கூலியன் கையில்
வாலிப உயிர்
வேட்டையன்
நான்தான்!
நீதி அநீதி
பாவம் – பரிதாபம்
கவலை கண்ணீர்
என் கண்களில்
மறைக்கப்பட்டவை!
பிறப்பிருந்தும்
இறப்பற்ற....
ஈனப்பிறவி நான்தான்!
யுத்தத்தால்...
யுகம் அழிகையில்
மனிதன்...
ஜாதி – இனம்
மொழி – மதம்
ஆணவம் – அகந்தை
பெரியோன் – சிறியோன்
பிரிவினவாத
உயிர்பறித்து....
மனிதநேயம்
கொடிபிடித்தாலே....
மரணிப்பேன் நான்
அன்றி.....?

த.தர்ஷன் ஹெரோட்டன்

புதுவையின் கவிதைகள் பற்றிய பார்வை



புதுவை என்ற புனைபெயரால் கவிதையுலகில் அறியப்பட்ட இரத்தினதுரை புத்தூர் கிராமத்தில் பிறந்தவர். காத்திரமான கல்விப் பின்னணி கிடைக்காத போதும் கனதியான கவிதைகளைப் பாடும் கலை கைவரப் பெற்றிருந்தார். சிற்பக் கலைஞரான இவர், சிறு வயதிலிருந்தே வாசிப்புப் பழக்கத்தையுடையவராக விளங்கினார். இவரது சிறிய தந்தையான திரு நெல்வேலி கந்தசாமி இடதுசாரிச் சிந்தனையுடையவ ராக விளங்கினார். சிறிய தந்தையுடன் தொழில் நிமித்தம் வாழ்ந்த காலத்தில் சிறிய தந்தைக்கிருந்த சமூக அக்கறை புதுவையிடமும் தொற்றிக் கொண்டிருக்க வேண்டும். தனது 14ஆவது வயதில் எழுதிய "மழைக்காலம்" என்ற கவிதையுடன் எழுத் துலகில் காலடியெடுத்துவைத்த புதுவை, வியாசன், மாலிகா ஆகிய பெயர்களிலும் கவிதைகளை எழுதி யுள்ளார். அவருடைய கவிதைகள் பல்வேறு அடக்கு முறைக்கெதிரான குரலாக ஒலிப்பதைக் காணலாம்.

புதுவையின் கவிதைத் தொகுப்புக்கள்

- வானம் சிவக்கிறது
- ஒரு சோழனின் காதற் கடிதம்
- நினைவழியா நாட்கள்
- இரத்த புஷ்பங்கள்
- உலைக்களம்
- பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்

போருணர்ச்சிப் பாடல்களை விடுத்து அவரை ஒரு கவிஞராக நோக்கும்போது ஆரம்பத்தில் சமூக அக்கறையுடைய கவிஞராகவே காணப்படுகின்றார். அவர் கவிதையுலகில் எந்தக் கொள்கையோடு பிரவேசித்தார் என்பதை அவரது கவிதைகளிலிருந்தே தரிசிக்கலாம்.

"கன்னியர் அழகைப் பாடேன்
காதலைப் பாடேன், வானின்
வெண்ணிலா தன்னைப் பாடேன்
விசரரைப் பாடேன், ஆனால்...
எண்ணரும் துயரத் தோடு
ஏழைகள் வாழும் வாழ்க்கை
இன்னுமா? பொறுக்க மாட்டேன்
இதற்கொரு முடிவு காண்பேன்"

என்று ஏழைகளின் வாழ்க்கைக்காக குரல் கொடுக்கும் கொள்கையோடு கவிதையுலகில் பிரவேசித்தார். நிறுவனக் கல்வியறிவு குறைந்தவரான புதுவையின் கவிதைகளைக் கண்டு சிரித்தவர்களும் உள்ளனர். ஆனாலும், அவர் தனது கவிதைப் பணியைக் கைவிடேன் என்பதை உறுதிபட உரைக்கின்றார்.

"கற்றவர் என்ற மாயைக்
கவிஞர்கள் சிரித்த போதும்
சற்றுமே நில்லேன், ஏழைச்
சனங்களின் துயரம் போக்கச்
சொற்களால் கவிதை யாப்பேன்"

என்று குரல்கொடுக்கின்றார்.

சமுதாய ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து சமவுடைமை சித்தாந்தத்தை நிலைநாட்ட வேண்டும் என்ற அவா அவருடைய கவிதைகளில் ஒலிப்பதைக் காணலாம். ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடு நீங்க அனைவரும் உழைக்க வேண்டும் என்று அறைகூவு கின்றார். பணத்தைத் தேடிப் பாதுகாத்துவைக்கும் பாத கரை எதிர்க்க தன் கவிதைக் கணையை ஏவுகின்றார்.

"மாடியிற் சில மானுடர் வாழவும்
மரத்தடியிலே கற்றபலர் சாகவும்
தேடியே பணம் சேர்த்தவர் தூங்கவும்
சேர்த்தவர்க் கதை கொடுக்கவும்
நீடியாதிது என்றுமே சொல்லுவோம்
நிச்சயம் இதை மாற்றியே தீருவோம்"

என்று சூழுரைக்கின்றார். அவருடைய கவிதைகளில் ஓசைநயம் காணப்படுவது மேலும் சிறப்புக்குரிய விடய மாகும். அடிநிலை மக்களின் துயரங்களைக் கண்டு கொதித்தெழும் கவிஞர் அவர்களின் வறுமை நீங்கப் பாடும் கவிஞனே உண்மைக் கவிஞன் என்கின்றார். உடல் உழைப்பால் உயர்ந்த மக்களைப் பாட வேண்டும் என்ற கருத்துடையவர். அடக்கப்பட்ட சமூகப் பின்னணியிலிருந்து வந்த புதுவையிடம் ஆவேசக் குரல் ஒலிப்பதை அனைவரும் காணமுடியும்.

"கஞ்சிக்காய் உழைக்கும் மாந்தர்
கடல்மடி தவழ்ந்து சென்று
குஞ்சிரால், ஓரா, ஒட்டி
கூடை மீன் கொணர்வோர், தேகப்
பஞ்சியென் றெதுவுமின்றிப்
பனைமரப் பதநீர் சேர்ப்போர்
சஞ்சலம் துடைக்கப் பாவில்
சாத்திரம் எழுதும் தீரர்"

என்று உண்மைக் கவிஞர்கள் யார் என்பதை அடை யாளம் காட்டுகின்றார். சுப்பிரமணிய பாரதியாரின் கவிதைகளின் தாக்கம் இவருடைய கவிதைகளில் வெளிப்படுவதை உணரமுடிகின்றது. அவர்பாடிய சுதந்திரம், சாதியெதிர்ப்பு, பெண்விடுதலை, சுரண்டல் போன்றவற்றைப் பற்றிய கவிதைகள் அவரை ஒரு கவிஞராக அடையாளப்படுத்துகின்றன.

இலக்கியம் படைப்பதால் மட்டும் பாரைத் திருத்திவிட முடியாது என்பது அவருடைய நிலைப் பாடாக விளங்குகின்றது. இதனை அவருடைய கவிதை யொன்றில்,

"எழுத்தாணி பிடிப்பதினால் எல்லாம்
தெரிந்தவர்போல்
பழுதான இப்பெரிய பாரைத் திருத்துவதற்கு
தம்மால் முடியுமெனத் தம்பட்டம்
அடிப்பவர்போல்
தும்மற் படைப்புக்களால் தூசுதட்ட
முடியுமென
நம்புகின்ற இயக்கத்தில் நானில்லை...."

என்று பாடுகின்றார்.

1977இல் ஏற்பட்ட இனக்கலவரத்தின் காரணமாக தென்னிலங்கையை வாழிடமாகக் கொண்ட தமிழர்கள் பரிதாபமாகத் துரத்தப்பட்டனர். இழப்புக்களால் பாதிக்கப் பட்டனர். மார்க்சியக் கட்சிகள்கூட இதனைப் பெருமள வில் கண்டுகொள்ளவில்லை. இந்நிலையில் மார்க்சியத் சிந்தனையுள்ள கவிஞன் என்ற வகையில் தனது எதிர்ப்பை அவர் வெளியிடத் தயங்கவில்லை.

"இருமொழி ஒரு நாடென்று
இதுவரை இருந்த நீதி
தெருவினிற் கிடக்குதம்மா
தேசியம் என்ற பிள்ளை
கருவிலே சிதைந்த காட்சி
கண்களிற் தெரியுதம்மா"

என்ற கவிதைகளில் அவரது மனக்கொதிப்பினை வெளிப்படுத்துகின்றார்.

புதுவை அழகிய காதற் கவிதைகளையும் எழுதியுள்ளார். எனினும், அவை எண்ணிக்கையில் மிகக் குறைவானவையே. அன்றியும், தேசியப் பிரச்சினையை முனைப்போடு பாடத் தொடங்கியதால் அவை முக்கியமிழந்து போயின என்றே கூறலாம்.

"கையணைப்பில் சிக்குண்டு
களைத்த இளம் உடல்கள்
பெய்யும் பனிக் குளிரால்
பிறகும் இணைந்து கொள்ளும்"

என்று காதல் பிணைப்பின் சுகத்தை கவிதையாக்கி யுள்ளார்.

பெண்ணடிமைத்தனத்திற்கெதிரான கவிதை களையும் புதுவை பாடியுள்ளார். பண்டைக்காலம் தொடக்கம் இன்றுவரை சமுதாயத்தில் பெண்ணடக்கு முறை பல வடிவங்களிலும் வெளிப்படுவதை அவதானிக்கலாம். இதற்குப் பதச் சோறாக "இருளி லிருந்து எழுக" என்ற கவிதையைக் குறிப்பிடலாம்.

"எழுக என் தங்காய்! எழுக என் தங்காய்!
இருளிலிருந்து எழுக என் தங்காய்!
மலையென நிமிர்க! மலையென நிமிர்க!
மாதவப் பேறே மலையென நிமிர்க!
கத்தரிக்காய் பொரிப்பதற்கா கையுனக்கு?"

என்ற வரிகளில் பாரதியாரின் பெண்விடுதலைக் கவிதை களின் சாயல் தென்படுவதைக் காணலாம்.

புதுவை, காலத்தின் குரலாக நின்று யதார்த்த மான கவிதைகளைப் புனைந்திருக்கின்றார். அழகிய உவமைகளைக் கையாளும் வல்லமைகொண்டவர் என்பதோடு எளிமையான சொற்களைக் கையாண்டு உணர்ச்சி பொங்க கவியாக்கும் வல்லமையுடையவர். அவரது கவிதைகளுக்கு சந்தம் அழகூட்டும். புரட்சிப் பாடல்கள் பலவற்றை எழுதி மக்களால் அறியப்பட்ட புதுவை, நல்ல கவிஞராகவும் விளங்கியிருக்கின்றார். ஈழத்துத் தழிழ்க் கவிதை என்று பேசுகின்றபோது புதுவை இரத்தினதுரையை நீக்கிவிட்டுப் பார்க்க முடியாது என்று பலரும் சொல்லுமளவிற்கு அவருடைய கவிதை முக்கியத்துவமுடையனவாகக் காணப்படுகின்றன.

செல்வநிதி காண்போம்

நாளும் பொழுதும் விரைகிறது
நாடுமதிலே சுழல்கிறது
வாழும் மக்கள் குறைதீர
வழிகள் என்று புலருமாமோ!

ஓடும் பஸ்ஸில் சனக்கூட்டம்
ஒவ்வொரு தினமும் விபத்ததிகம்
வாடும் மனித ஜீவனுயிர்
வன்மை களைய வழி வருமோ!

படித்தோரெங்கும் நிறைவுண்டு
பாமரர் மீள நிலமுண்டு
நீடிய பாதை நிறைந்திருந்தும்
நிம்மதியற்ற நிலையேனோ!

மகளிர் கழகம் அதிருந்தும்
மங்கையர் சுதந்திரம் கிடையாது
இகழும் பாலியற்தீய செயல்
அகலும் தன்மை விளையாதோ!

வாலிபர் தொழிலிற் திண்டாட்டம்
வேலைத்தலத்தில் போராட்டம்
கூலியாள் வருவாய் போதாக்குறை
குற்றம் பெருகும் விதி யாது!

பொருட்கள் நாட்டில் அதிகரித்தும்
புண்ணிய தலங்கள் வலுத்திருந்தும்
வருமானமெங்கே மக்களிடை
வறுமை நீங்கும் நாள் வருமோ!

இலஞ்சக்கொடுமை தலைவிரித்து
இல்லாமை நேர்மை குலைவுற்று
இலங்கைத்தீவின் பேர்நாமம்
இடரில் வீழ்ந்து மாய்கிறது!

அற்றை நாளில் யாம்கண்ட
அருமை பெருமை புகழ் யாவும்
இற்றைக்காலம் அருகியதே
இனியும் அந்நாள் காண்போமோ!

மாற்றார்தேசக் கலாசாரம்
மலிந்து எம்மில் உறவாடி
வேற்றுமை வம்பு அநாகரீகம்!
வளர்ந்து மிருகக் குணமானோம்.

ஆற்றல் கல்வி பெருக்கெடுக்கும்
ஆழக்கடலாம் கல்வி கற்றோர்
வேற்றுமை மறந்து காடு காப்போம்
வற்றாச்செல்வநிதி சேர்ப்போம்!

– மூதூர் கலைமேகம்

கடவுளின் பெயரால்

பயம் அப்பிய
தெருக்களில்
பார்க்கும்
மனித முகங்களில்
எல்லாம்
மிருக சாயல்
தொழுகை
மறந்த வாழ்விங்கு
தன்னைத்
தொழச்சொல்லி
அடம்பிடிக்கிறது
அகங்கார
ஞானத்தில்
அடுத்தவர் வாழ்விங்கு
அடகு வைக்கப்படுகிறது
நொருங்கிப்
போயிருப்பவை
கட்டடங்கள்
மட்டுமல்ல
எங்கள்
இதயங்களுந்தான்
எந்தக்கடவுளின்
பெயரால்
எந்த நம்பிக்கையைப்
பாடுவது
போதி மரத்தவனின்
காலடியில்
கசங்கிப்போய்
வாடிக்கிடக்கின்றன
நேசிப்பின் மலர்கள்
அன்புக்கான பயணத்தில்
அழுகுரல்களே
மிஞ்சிப்போக
ஆடையிழந்து
அம்மணமாய்க்
கிடக்கிறது மனிதம்

– புலோலியூர் வேல்நந்தன்

ஒரேயொரு மழை வெவ்வேறு நிறங்களில் பெய்கிறது

ஒரேயொரு மழைதான்
வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு நிறங்களில்
பெய்து கொண்டிருக்கின்றது
திடீரென ஒரே இடத்தில் வெவ்வேறு பொழுதில்
வெவ்வேறு நிறத்தில் பொழிகிறது பெருமழை
சில போது
வெவ்வேறு ஆட்கள் மீது
அல்லது ஒரேயொரு ஆள் மீது
பல்வேறு நிறங்களில் பரவுகிறது அதே மழை

அன்றும் பெய்யும் போது
கடைத்தெருவெங்கும் தீமூட்டி எண்ணெய் வார்த்தது
அலைந்து திரிபவர்களின் ஜூப்பாக்களிலும் ஹிஜாப்களிலும்
மழைத்தீ சுட்டது
அது சிவந்த மழை
ரத்தம் சொட்டச் சொட்ட நனைதலே விதியெண்ணி
நாவிறைத்துப்போன சனங்கள் மேல்
மேலும் மழை
காவி நிறத்தில் பெருக்கிறது.
காவி மழை
பகல்களைக் கொன்று இரவுகளைத் தின்னுகிறது

படுக்கையைச் சுருட்டி தலையில் புதைத்தவாறு
மேலும் மேலும் அலைதல் தொடருகின்றன
பர்தாப் போட்ட வீடுகளும்
தாடி நீண்ட கடைகளுமாக

மழை பற்றிய தலைப்புச்செய்திகளுடன்
புறப்படுகிறது பெரும் புயல்
அது மழையின் நிறங்களில் தீவிரமேற்றுகிறது
முன்னமிருந்து கோவில்களின் மணியோசையும்
இப்போதில் மசூதிகளின் பாங்கொலியும் அடங்கிட
இந்தக் கொடூரமென்ற கனமழை
இங்கில்லா வேறிடத்தில்
வெள்ளை நிறடெடுத்து மிக அமைதியாய்ப் பூக்கிறது
பன்சலைகளின் பிரித்தோதலும் அடங்கா வெளி
நனைகிறது சாந்த மழையில்
மழையின் கொடுங்கோல் குறித்து
மரங்கள் திசைபரவிக் கொதித்தெழுகையில்

நேற்றுக் காவி நிறத்தில் பெய்து
எல்லாமாய் அழித்து விட்டுப் போன அதேமழை
மெதுவாய் வெள்ளை நிறத்தில் வந்து
எரித்து விட்டுப்போன சாம்பலையள்ளி
புனர்நிர்மாணம் புரிகிறது கண்டு
பூரிக்கின்றன சில காளாண்கள்
மழையின் நிறங்கள் பற்றி
இன்னும் அழுகிறது வானம்

காற்றுக்கு ஒரேயொரு கலர்தான்

நிறமில்லை இனமில்லை காற்றுக்கு
வேறுபாடே கிடையாது
காற்றினது உயிர் மொழி சுதந்திரம் என்பது தான்
எனினும்
இந்தக்காற்று வீசத் தொடங்குகையில்
வேறுவேறு மாயாஜாலம்
காட்டி
கூத்தாட்டம் புரிகிறது

காற்றுக்கு வெவ்வேறு வடிவங்களா
வாயடைத்து அழுதது வானம்

சற்றைக்குள் காற்று நீல நிறமானது
அது
கடல் குடித்த திமிரோடும்
வானத்தை விழுங்கிய கெமையோடும் வீசியது

காற்று வீசவும் அதற்குச் சாமரை வீச எழுந்த
ஒரு நூறு மரங்கள்
காற்றிலிருந்து உதிரும் நீலத் தூசுகளை
அள்ளித்தின்று உடல் பெருக்கத் தொடங்கின

மீளவும் நீலம்பாரித்துக் கிடக்கும் உடல் மீது
நீலாம்பரி மகுடியெடுக்கிறது காற்று

காற்று நேற்று பச்சையாய் இருந்தது
பச்சைக்காற்று வெறும் வெற்றுப்பேச்சுக்காற்றாய் வளர்ந்தது.

அது படர்ந்த திசையில்
குளிர்மை கிடையாது குதூகலமும் குன்றியது
நம்பிக்கையிழந்து கிடக்கிறது தும்பிக்கையிழந்து

காற்றுச் சிலபோது சிவப்பு மஞ்சள் மெரூன் காவி
அன்றேல் வெறும் புது நிறமெடுத்து வீசலாம்
திசைமாறி

நான்
நிறக்காற்றுக்களால் உயிரடைத்துக் கிடக்கிறேன்
வெள்ளைக் காற்றை அவாவியபடி
மேலெழுந்து பறக்கிறது சிட்டுக்குருவி.

இப்னு அஸ்மத்

சிங்களக் கவிதைகளின் தோற்றமும்–வளர்ச்சியும்



சூழலின் ஆதிக்கத்துடன் இயற்கைக் காரணிகளைக் கொண்டு உருவாகியதாக சிங்களக் கவிதைகளின் தோற்றம் பற்றி கூற இயலும். இவ்வாறாக தோற்றம் பெற்ற சிங்களக் கவிதைகள் பௌத்த தர்மத்தின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தன. இக்கவிதைகள் பௌத்த தர்மத்தின் சிந்தனைகளை தழுவியவாறே வெளிப்பட்டன, பரவலாயின.

சிங்களக் கவிதைத்துறை தொடர்பிலான பண்டைய சான்று என்ற வகையில் இதுகாலவரையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள சில கல்வெட்டுக்கள் குறிப்பிடப்படுகின்றன. இவை சிங்கள இலக்கியத் துறையின் ஆரம்ப காலத்தை ஆராய்கின்ற ஆய்வாளர்களது மிகுந்த அவதானத்திற்கு உட்பட்டவையாகும். இவை சிங்களக் கவிதை வரலாற்றின் ஆரம்ப யுகம் தொடர்பிலான உறுதியான சான்றினை வழங்குகின்றன.

பௌத்த தர்மத்தின் சிறப்பியல்புகளையும் தெளிவான மனநிலையை எட்டுவது குறித்துமான கருத்துகளையே ஆரம்பகால சிங்களக் கவிதைகள் கொண்டிருந்தன. இந்நிலை தொடர்ந்து வந்ததும் குறிப்பிடத்தக்கது.

மூன்றாம் நூற்றாண்டு காலத்தில் சிங்களக் கவிதைகள் தோற்றம் பெற்றதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். கொஸ்சொகம, கிரிந்த, ஹபுதகல, கறந்தபொல, கொரதொட்ட, நுவரகந்த போன்ற இடங்களிலிருந்து கண்டெடுக்கப்பட்ட கல் வெட்டுக்கல் இதனை உறுதிப்படுத்துவதாக அமைகின்றன.

கொஸ்கமகந்த என்னும் இடம் அநுராதபுர மாவட்டத்தில் மரதன்கடவல என்னும் ஊருக்கு அண்மித்து அமைந்திருக்கிறது. இங்கிருந்து கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டில் காணப்படுகின்ற கவிதை வரிகள் மூன்றாம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது.

மகரக்கந்த கமனீ
ஹபயக தெவனபியக
(ர)ம(னி)ப(ரி)ய மிலகதிக
விஹரெ கா(ரி)கெகதிய

இச்சிங்கள மொழி வழக்கு இப்போது பொது நடை முறையில் இல்லை. இதன் அர்த்தம் "இறைவன்பால் மிகுந்த விருப்புடைய காமினி அபய என்னும் அரசரின் அழகிய மனைவியான கதிய என்பவரால் மிலகதிக விகாரை செய்யப்பட்டது" என்பதாகும். இவ்வாறே ஏனைய கல்வெட்டுக்களிலிருந்தும்

மூன்றாம் நூற்றண்டிற்குரியதான கவிதைகள் உறுதிப்படுத்தப்படுவதாக கூறப்படுகின்றது இவற்றின் உரிய காலகட்டங்களை நிச்சயித்துக் கூறயியலாத தொரு நிலையும் காணப்படுகிறது. எனினும் இக்கவிதைகள் அநுராதபுர யுகத்தின் ஆரம்ப கால கட்டத்திற்குரியவை என்பதை மட்டும் நிச்சயித்துக் கூறயியலும்.

கொழும்பு யுகத்துக் கவிதைகள்

பண்டைய காவியங்களின் கருப்பொருட்கள் மற்றும் கலைத்துவ முறைமைகளுக்கு எதிரான ஆழமான போராட்டமாக 20 ஆம் நூற்றாண்டின் சிங்களக் கவிதைகள் எழுச்சி பெறுகின்றன. இப்போரட்டமானது தனித்த தேசிய அடிப்படை சார்ந்த போரட்டமன்றி தேசிய மற்றும் சர்வதேச சாதகங்களால் வளர்ச்சி பெற்ற போராட்டமாகும்.

பிரபல கவிஞர் மீமன பிரேமதிலக தனது நவீன கவிதை தொகுப்பிற்காக (இரு பாகங்கள்) எழுதியிருந்த நீண்ட முன்னுரையும், பிரபல கவிஞர் சாகர பலன் சூரிய தனது முதலாவது கவிதை நூலுக்கு எழுதிய 19 பக்கங்களைக் கொண்ட முன்னுரையும் மேற்படி போராட்டத்திற்கான அடிப்படையாக அமைந்தன.

ஒரு பக்கத்தில் மாத்தறை கவிதை பாரம் பரியத்தின் கலைத்துவ முறைமைக்கு எதிராக மக்கள் மயப்படுத்தலை முன்னெடுத்துச் செல்வதாக இந்த அடிப்படைப் பங்களிப்பினை இனங்காண இயலுமான துடன், மறுபக்கத்தில் மேலைத்தேய கற்பனாவாத பாரம்பரியத்தை - இரவிந்திரநாத் தாகூரின் கவிதை பாரம்பரியத்தையும் சிங்களக் கவிதைத்துறைக்குள் கொண்டு வரும் மிகவும் முக்கிய அடிப்படை அம்சமாகவும் இது அமைந்தது.

இதன் பயனாக தெளிவான, யதார்த்தமான, பரந்த அர்த்தங்கள் கூடிய கவிதைகளுக்கான புரட்சி ஏற்படுகின்றது. இது கொழும்பு யுகத்து கவிதைகளை முறையற்ற விமர்சனங்கள் ஊடாக தாக்கிய பேராசிரியர் சரத் சந்திரவினை அடியொட்டி வந்த ஒரு சில சிஷ்யர் களால் குறிப்பிடப்படுகின்ற வகையில் மூன்றாம் தர போராட்டம் அல்ல. இன்று நாம் போற்றுகின்ற சிங்களக் கவிதைகளைத் தோற்றிவித்த மிகமுக்கியமானதும், தீர்மானமானதுமான கலைத்துவ போரட்டமாகும்.

எந்தவொரு கலைத்துவ செயற்பாடுகள் சார்ந்தும் கட்டுப்பாடுகள் இருந்து வருவதுடன் ஐம்பதாவது தசாப்த காலத்தின்போது இந்த கட்டுப் பாடுகளின் தன்மை யாது என்ற கேள்வி சுதந்திர கவிதை களின் பாரம்பரியம் சார்பில் எழுப்பப்பட்டது.

கொழும்பு யுகத்து சிங்களக் கவிதைகளாவன வெறுமனே கலைத்துவ படைப்புகளன்றி, அவை குறிப்பாக சமுக, கலாசார படைப்புகளாகவும் அமையப் பெற்றன.

கொழும்பு யுகத்து சிங்களக் கவிதைகள் குறித்து கலாநிதி சரத் அமுனுகமவின் கருத்தினை இங்கே சுட்டிக்காட்டுவது சிறந்ததெனக் கருதுகிறேன். கலாநிதி சரத் அமுனுகம, பேராசிரியர் சரத்சந்திரவின் கருத்துக்களை மீள உச்சரிக்காமல் அக் கவிதைகள் பற்றி சுயமாக பார்த்த பார்வையே அவரது கருத்தினை இங்கு சுட்டிக்காட்டுவதற்குக் காரணமாகிறது. இவர் வெறுமனே இலக்கிய விமர்சகர் என்ற ரீதியில் மட்டு மல்லாமல் அத்தளத்தையும் தாண்டி ஒரு சமூகவிய லாளர் என்ற வகையிலும் தனது கருத்துக்களை தெரிவித்திருந்தார்.

"கலாசாரங்கள் ஒன்றுக்கொன்று மோதுகின்ற காரணத்தைக் கொண்டு ஒரு கலாசாரம் இன்னொரு கலாசாரத்தின் பல்வேறு குணாதிசயங்களை தன்னகத்தே கொள்கின்ற விதம் காட்டப்படுகிறது. இதற்கு சிறந்த உதாரணமாக கொழும்பு யுகத்தின் கவிதைகளை எடுத்துக்கொள்ளலாம். ஆங்கில ஆக்கங்கள் மற்றும் மொழிபெயர்ப்புகள் இலங்கையில் பரவலாகி இராவிட்டால் சிங்களக் கவிதைத்துறையில் கொழும்பு யுகம் என்றொன்று இல்லை. கொழும்பு யுகத்தின் கவிதைகள் இலக்கியத்துறை சார்ந்தவை மட்டுமன்றி எமது நாட்டில் அண்மையில் ஏற்பட்ட விசேட பொருளாதர, சமூக, கலாசார துறைகளையும் சார்ந்தவை." (கலாநிதி சரத் அமுனுகம "கலாசாரமும் நவீன சிங்களக் கவிதைகளின் ஆரம்பமும்")

பேராதனை யுகக் கவிதைகளும் சமூக கலாசார பிறழ்வும்

கொழும்பு யுகக் கவிதைகளில் ஆரம்பித்த இச் சமூக, கலாசார துறை சார்ந்த இரண்டாம் கட்டமானது பேராதனை யுகக் கவிதைகள் மற்றும் நாவல்கள் ஊடாக பூர்த்திசெய்யப்பட்டதாகக் கூற இயலும்.

கொழும்பு யுகக் கவிதைகள் பேராதனை யுகக் கவிஞர்களால் பாரிய விமர்சனங்களுக்கு உள்ளாக்கப் பட்ட போதிலும் இந்த இரு துறைகள் சார்ந்த உள்ளார்ந்த நோக்கம், சம்பிரதாயங்களை உடைத்து நாளாந்த வாழ்க்கையை மீண்டும் மீண்டும் பல்வேறு இலக்கிய வடிவங்களில் கட்டியெழுப்புவதாகவே இருந்தது.

சிறி குணசிங்க போன்ற கவிஞர்கள் மேலைத் தேய கவிதைகளின் உள்ளடக்கங்களையும் வடிவங் களையும் ஆழமான கலாசார அறிவு சார்ந்த வகை யிலேயே புரிந்துகொண்டிருந்தனர். இதில் குணதாச அமரசேகர மேலைத்தேய மற்றும் தேசிய சம்பிரதாயங் களினுடாக வளர்ச்சி பெற்ற ஒரு நடைமுறையை தன தாக்கிக்கொண்டார்.

ஆரம்ப யுகத்தில் தீர்மானத்துடன் கூடிய போராட்டத்தின் பின்னர், கொழும்பு யுகக் கவிதை யானது கிராமங்கள் தோறும் பொழுதுபோக்கு ஊடக மாக அமைந்திருந்தது. கவியரங்குகள், பத்திரிகைகள், கவிதை ஏடுகள் மற்றும் தொலைக்காட்சி கவிதை நிகழ்வுகள் பேன்றவற்றில் இது தங்கியிருந்ததுடன் இதனுடன் நவீன வளர்ச்சிப் போக்கு மிகவும் குறைந்தளவிலேயே காணப்பட்டது.

பேராதனையுகத்தின் பின்னரான நவீன சிங்களக் கவிதைகள்

பேராதனை யுகத்தின் பின்னர் நவீன சிங்களக் கவிதைகள் பல்வேறு வளர்ச்சிப் போக்குகளை கண்டு புதியதோர் பயணத்திற்கு அடிப்படையாக அமைந்தன. எனினும் இவ்வனைத்து வளர்ச்சிப் போக்கினூடாக ஆரம்பகாலத்து மேற்படி யுகங்கள் சார்ந்த குணாதிசயங் களை முன்னெடுத்து செல்லவும் தவறவில்லை.

50-60 களில் மேலெழுந்திருந்த புதுக்கவிதை - மரபுக்கவிதை பேதங்களுக்கு பதிலாக இங்கு ஹைக்கூ கவிதைகளின் உள்ளார்ந்தங்கள், குறுகிய உள் ளார்ந்தங்கள் மற்றும் ஓசை நயமிக்க சிறுகவிதைகள் தொடர்பிலான பேதங்களே மேலெழுந்திருந்தன. எனினும் பல கவிஞர்கள் கொழும்பு யுகக் கவிதைகளை விட வேறுபாடான கவிதைகளின் பால் ஈடுபாடு கொண்டிருந்தனர். குணதாச, அமரசேகர போன்றோர் விடயங்களை மேலோட்டமாக கையாளும் மிக எளிமை யான முறைமையினை கொண்ட கவிதைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தனர்.

ஓசை நயமிக்க சிறுகவிதைகளின் பிரவேசத் துடன் சிங்களக் கவிதைத் துறையில் மாறுபட்டதொரு நிலைப்பாடு தோற்றம் பெற ஆரம்பித்தது. இங்கு குணதாச அமரசேகர, தர்சன ரத்னாயக்க, எரிக் இலயப்ப ஆராச்சி ஆகிய மூவரும் ஓசை நயமற்ற வசன நடை கொண்ட (இதனை பக்கவாத கவிதைகள் என்பர்) கவிதைகளில் இருந்து சிங்களக் கவிதைகளை மீட்டெடுக்க அதிகூடிய பங்களிப்புக்களை நல்கி யோராவர். இவர்கள் கவிதையாக்கங்களில் ஈடுபட்டது மாத்திரமின்றி கவிதைகள் தொடர்பிலான தங்களது கருத்துக்களை மிக அதிக அளவில் எழுதியும் வெளி யிட்டும் வந்தனர். சிங்களக் கவிதைகள் தொடர்பிலான கருத்துவாத போராட்டங்களிலும் பங்கெடுத்தனர்.

இக்காலகட்டத்தில் கவிதையின் மொழி பற்றிய கருத்து வாதங்களும் மேலோங்கியிருந்தன. ஓசை நயத்துடன் கூடிய சம்பிரதாயங்களில் வளர்ச்சி பெற்ற மொழியின் அவசியம் தொடர்பில் குணதாச அமரசேகர வலியுறுத்தி வந்தார்.

கவிதைக்கென ஒரு மொழி இல்லாவிடினும் நடைமுறையில் உள்ள மொழியை ஒழுங்கு ரீதியில் கவிதைகளுக்கு எவ்வாறு பயன்படுத்துவது என்பதே இதன் அர்த்தமாக கொள்ளப்படக்கூடியது

பேராதனை யுகக் கவிஞர்கள் கொழும்பு யுகக் கவிஞர்களுடன் பலத்த தத்துவார்த்த போரட்டத்தில் ஈடுபடலாயினர். இதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது ரி.எஸ்.எலியட்டின் கருத்தாகும்

"கவிதைகளின் ஓசை நயத்துடன் இணைந் துள்ள பல்வேறு குணாதிசயங்கள் அதன் அர்த்தங்களி லிருந்து தூர விலகி இருக்காது அதனுடன் கேந்திரமான பிரிவுகளாக இருத்தல் வேண்டும்" என்பது எலியட்டின் கருத்தாகும்.

எலியட்டின் விமர்சனங்களின் தாக்கங்களை குணதாச அமரசேகர, சிறி குணசிங்க, ஏ.எம்.ஜி.சிறி மான்ன போன்ற சிங்களக் கவிதைகளுக்கான தத்து வார்த்த அடிப்படையை உருவாக்கியவர் களிடையேயும் பல்வேறு வகையிலும் காணலாம்.

இதன் பின்னரான சிங்களக் கவிதைகளின் வளர்ச்சிப் போக்கானது பல்வேறு குணாதிசயங்களை கண்டு வந்துள்ளது.

இவ்வாறான வளர்ச்சிப் போக்கின் ஊடாக சிங்களக் கவிதைத்துறையின் வீழ்ச்சிப் போக்கிற்கு வழிவகுத்துக் கொண்டிருப்பவர்களும் இல்லாமல் இல்லை.

"நான்கு வார்த்தைகளை பொருத்தி கவிதை எழுதத் திறனில்லாத நிலையில் எந்தவொரு ஈர்ப்புமற்ற வார்த்தைகளை எழுதி புதுக்கவிதைகள் எனக் கூறுகின்றனர் சில கவிஞர்கள்.

குடும்ப வாழ்க்கை மற்றும் தனது தொழிலிடம் கடந்து சிந்திக்காத ஒரு நிலை சிங்களக் கவிஞர் களிடத்தே மிக அதிகமாக காணப்படுகிறது. குடும்ப வாழ்க்கை என்னும் போது தனது துன்பதுயரங்கள் மாத்திரமே அதிகமாக எடுத்துக்காட்டப்படுகிறது. இந்நிலை மாற்றம் பெறவேண்டும்" என இலங்கை பிக்குமார் பல்கலைக்கழகத்தின் ரத்தனதெனியே மேதானந்த தேரர் நவீன கவிதைகள் பற்றி அண்மையில் கூறியிருந்த கருத்தும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

இறுதியாக அண்மையில் படித்த சுமிந்த கித்சிறி குணரத்னகே எழுதிய கவிதைகளில் சிலவற்றை இங்கு தர விரும்புகின்றேன்

யாழ் நூலகம் எரித்தமை குறித்து எம்.ஏ.நுஹ்மான் எழுதியிருந்த கவிதை காலத்தால் அழியாதது. சுமிந்த கித்சிறி அச்சம்பவத்தை இப்படிக் கூறுகிறர்

புத்தர் துப்பாக்கி சூட்டில் இறந்தார்
அதிகாரக் கூட்டத்தினர் அவரைக் கொன்றனர்
கீழே விழுந்து கிடந்த அவரது ஸ்ரீ தேகம்
யாழ் நூலகத்தின் நுழைவாயிலின்
படிக்கட்டருகில்
.....
திருக்குறள் வாசனையையே பரப்பி
நூலகம் தீப்பிடித்த போது
நகர் மத்தியில் கல்லானான்
அந்த வீணைக் கவிஞன்
.....
அப்பா.... அப்பா...
நாங்கள் வென்ற இடம் எது?
இராணுவ மாமாக்கள் புலிகளை
அழித்த இடம் எது?
களப்பில் ஊன்றி ஊன்றி
கொடி நாட்டிய இடம் எது?
கேட்டவாறே மகன் தேடுகிறான்
நந்திக்கடல் அடையாளத்தை.

Bina Agarwal

ஐக்கிய ராச்சிய மான்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் பொருளியல் சூழல் அபிவிருத்திக்கான பேராசிரியர். டெல்லி இந்திய பொருளியல் வளர்ச்சி நிறுவகத்தின் முன்னாள் பணிப்பாளர். 'A Field of One's Own' பல விருதுகளை வென்ற இவரது பிரசித்தமான நூலாகும். இந்தியாவின் பொருளியலாளராக இந்தியாவின் அபிவிருத்தி, கிராமப்புற வாழ்க்கைகள், வறுமை நிலை, சமத்துவ மின்மை, பெண்களது சொத்துரிமைகள் பற்றி அதிகம் கவனத்தைச் செலுத்தியவரும் கூட. டெல்லியிலும், கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்திலும் கற்றவர். எட்டு நூல்கள் எழுதியிருக்கிறார். 2002 இல் அபிவிருத்திக் கற்கைக்காக பங்களிப்பு நல்கியமைக்கு மால்கம் ஆதிசேஷ்யா விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட இவர், விவசாயப் பொருளாதாரத்தில் ஆற்றிய பங்களிப்புக்காக 2005இல் ரமேஷ் சந்ரா அகர்வால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். 2008 இல் இந்திய இலக்கியத்துக்கும், கல்விக்கும் இவராற்றிய தொண்டுக்காக பத்மஸ்ரீ பட்டம் வழங்கப்பட்டது. 'மொன்சூன்' அவரது கவிதைத் தொகுப்பு. சிறு வயதில் ராஜஸ்தானிலுள்ள தன் பாட்டி வீட்டில் தங்கியிருக்கும் அற்புதமான நாட்களை அடிக்கடி நினைவுகூருகிறார். அந்தக்காலங்களே பால் ரீதியிலான சமத்துவமின்மை, இன ரீதியிலான சமத்துவமின்மை பற்றி அறிகிற வாய்ப்பைத் தனக்குத் தந்ததாக கூறுகிறார் அகர்வால்.

சீதை நீ பேசு

சீதை, அக்கதையின் உன் பக்கத்தை நீ சொல்.
அதன் மறுபக்கத்தை நாம் நன்கு அறிவோம்.
உன் தந்தை உன்னை
ஒரு ராஜகுமாரனுக்கு மணம் செய்து கொடுத்தார்,
உன் கணவன் கையிருக்கும் வில்லைப்போலவே
எளிதில் வளையக் கூடியவளாய்
உன்னை இருக்கச் சொன்னார்
அந்த மந்திர வில்லை
ராமன் உடைத்ததை நீ கவனிக்கவில்லையா?
அங்கிருந்து நீ அனுப்பப்பட்டபோது,
இலட்சிய மகளான நீ
பணிவோடு தலைகுனிந்து நடந்தாய் என்று
அவர்கள் சொல்கின்றனர்.

உன் கணவனோடு நீயும்
நாடு கடக்கத் தீர்மானித்தாய்.
தனிமைப்பட்டாய், கடத்தப்பட்டாய்
பின்னர் நிராகரிக்கப்பட்டாய் –
கனன்றிடும் தீச்சுவாலையில் கற்பு பரீட்சை.
பலியாள், இருமுறை பலியாளாக்கப்பட்டாய்
ஆன்மாவை பொசுக்கிவிடாமல்
அந்தத் தீச்சுவாலைகள்
பூக்களாய் மாறியிருக்க முடியுமா?

அவர்கள் சொல்கின்றனர்
நீதான் இலட்சிய மனைவியாம்
நீ அவனைக் கேள்வி கேட்கவில்லை
அவனை அவன் வழியில் போகவிட்டாய்
உன் கதை வரைந்த கவிகள் சொன்னார்கள்:
ஒரு பெண் ராமாயணம் கேட்கத் தகுதியற்றவள்
ஒரு விலங்கைப்போல
அடிபட்டு மாய மட்டுமே அவள் பொருத்தமானவள்.
அத்தகைய கவிதை என்றேனும்
உனக்குப் புகழைக் கொண்டுவருமா?
இருப்பினும்
அந்தப் பொய்மைகள் தொடர்ந்தபடியிருக்க
எதிர்ப்புகள் எவையுமின்றி
அவர்கள் தங்கள் கவிதைகளைப்
பாடிக்கொண்டேயிருந்தனர்.

சீதை நீ பேசு
அந்த மந்திர வில்லை ஒற்றைக் கையால்
லாவகமாய் தூக்க முடிந்தவள் நீ
ஒரேயொரு சொல்லால்
பூமிக்கு கட்டளையிட முடிந்தவள் நீ
அவர்கள் எப்படி உன்னை மௌனமாக்கினர்....?

ஆங்கிலத்தில்:– பினா அகர்வால்
தமிழில்:– கெகிறாவ ஸுலைஹா

பெரிய ஐங்கரன்

ஈழத்து நவீன கவிஞர்களின் போக்கும் நோக்கும்

(அண்மைக்கால அவதானிப்புகளின் நாட்குறிப்புச் சுருக்கம்)



சமூகப் பொருளாதார அரசியல் இயங்குதளங்களை உற்று நோக்கி, அதன் அசை வியக்கங்களைப் புரிந்து கொண்டு தமிழ்க்கவிதை மரபின் இடையறாத பெருந்தொடர்ச்சியை உள் வாங்கி, எதிர்காலத்தை எட்டிப் பிடிக்கக் கூடிய தீர்க்கதரிசன ஞானத்தோடு மொழியியலின் பரந்துபட்ட வளர்ச்சிப் போக்கின் துணையோடு புதியதோர் உலகம் செய்கின்ற தத்துவக் கோட்பாடுகளில் மூழ்கித்திளைத்து வேண்டுவன வற்றை வாரி முகந்து கொண்டு, உலகக்கவிதை களின் தரத்திற்கு சமாந்தரமாக, நீண்டு நிலைக்க வல்ல சிறந்த கவிதைப் பிரதிகளை தரக்கூடியவர் கள், அண்மைக்காலத்தில் ஈழத்தில் யாரும் தோன்றியதாகத் தெரியவில்லை. 21 ம் நூற் றாண்டுக்கு முன்னர், வேர் ஊன்றிய கவிஞர் களைத் தவிர்த்துப் பார்த்தால், மிக அண்மைக் கவிஞர்களின் பங்களிப்பு, முன்னைய கால ஈழத்துக் கவிஞர்களின் பங்களிப்பிற்கு ஈடு கொடுப்பதாக இல்லை.

இலங்கையின் வடக்கே "பழையன பாடுதல்" வெகுவிமர்சையாக நடந்து கொண்டிருக்கிறது. கிழக்கிலோ மண்ணில் ஒட்டாமல், விண்ணில் பறந்து கவிதைபாடும் மரபொன்று தோன்றிவிட்டது. பாடு பொருளில் வறுமையானது, வடக்கிற்கும் கிழக்கிற்கும் இன்று பொதுவாகிவிட்டது. இன்னொரு வகையில் கூறுவதானால் விடுதலைப் புலிகள் இருந்த காலத்துப் பொருள்மரபு, அதனுடைய பன்முகப்பட்ட அதோடு ஊடாடுகின்ற கருத்தியல் சார்ந்த பொருள்மரபு வடக்கை ஆக்கிரமிக்க நவீன தென்னிந்தியக் கவிஞர்கள் போன்று பின் நவீனத்துவம், பின் அமைப்பியல் முதலிய விஞ்ஞானக் கருத்தியல் சார்ந்து அவர்களை அவ்விதமே பின்பற்றுகின்ற முறைமை கிழக்கிலே நடந்து கொண்டு இருக்கிறது. தனியே இளைஞர்களை மட்டும் கருத்தில் கொள்ளாமல் பெண்ணியக் கவிஞர்களையும் உளங்கொண்டால் இவ்வுண்மை மேலும் உறுதிப்படும். இப்போக்கிற்கு விதிவிலக்காகவும் ஒரு சிலர் இருக்கிறார்கள். வடக்கிலே அகிலனையும் கிழக்கிலே சுஜந்தனையும் (நிலம் பிரிந்தவனின் கவிதை) உதாரணமாகச் சுட்டலாம்.

பின்நவீனத்துவம், பின் அமைப்பியல் போன்ற கருத்தியல்கள், தமிழ் சூழலுக்கு முற்றிலும் புதியவை. எனவே, அவற்றை அணுகும் போது மிகக் கவனமாக அணுக வேண்டும். அவற்றின் எண்ணக்கருக்களை தமிழ் சூழலுக்குள் கொண்டு வரும்போது ஏற்படுகின்ற தாக்கங்களை கவனத்தில் கொள்ளுதல் முக்கியமாகிறது. இலக்கியப் பாரம்பரியம், கோட்பாட்டு விழுமியங்கள் நிறைந்த தமிழ்ச் சூழலுக்குள் பின் அமைப்பியல் என்ற விஞ்ஞான மார்க்கத்தை அவ்வளவு சுலபமாகப் புகுத்த முடியாது. அவ்வாறு புகுத்தினாலும் அவையிரண்டும் மிகவெளிதில்

புணரா. தாமரை இலையில் தண்ணீர் போலத்தான், தமிழ் சூழலுக்குள் புகுந்த பின் அமைப்பியல் அதனோடு ஐக்கியப்படாமல் தனித்து நின்றது. பின் அமைப்பியலின் நுணுக்கமான நுட்பமான கருத்தியல்கள் வாசகர்களை கவரவும் இல்லை. அவர்களுக்கு அவை புரியவு மில்லை. குறி, பிரதி வாசிப்பு, கட்டவிழ்ப்பு போன்ற கலைச் சொற்களின் தெளிவும் ஆசிரியனின் மரணம், வாசகன் கொள்வதே பிரதியின் பொருள், பிரதி என்பது ஒரு வெற்றுத்தாள், பன்மையியல் முதலாகவுள்ள எண்ணக்கருக்களின் முழுமையான அர்த்தமும் வாசகனுக்கு இன்னமும் விளங்கிய பாடில்லை. இவற்றின் விழுமியங்கள் தமிழ் இலக்கியத்தை வளப் படுத்தின; வளப்படுத்த உதவும் எனினும் இவை பற்றிய தெளிவோ பூரண ஞானமோ அவற்றின் செறிவான நுட்பமோ இன்னும் வாசகனைத் தொற்றிக் கொள்ளவு மில்லை. பற்றித் தொடரவுமில்லை. இவை பற்றி சம்பூரண அறிவும் அனுபவமும் ஈழத்தில் ஒரு சில கவிஞர்களுக்கே உண்டு. இதனால், மற்றவர்கள் மேலும் மேலும் குழம்பி, குழம்பிக் கொண்டே இருக்கிறார்கள். ஆய்வாளர்களின் நிலை சொல்லவே தேவையில்லை. இவ்வாறுள்ள பல ஏதுக்களால் ஈழத்தில், பின் அமைப்பியலின் வழிவந்த கனதியான பொருண்மைகள் பின்வாங்கி தோற்றுப் போயின. இத்தகையதொரு காலப்பின்னணியில் தான், இத்தகைய பொருண்மைகளை முதன்மைப்படுத்தி பிரதிகள் பெருகின. படைப்பு நூல்கள் புற்றீசல் போல் பெருகிய வண்ணம் உள்ளனவே தவிர, படைப்பை நெறிப்படுத்தும் ஆய்வு நூல்கள் ஈழத்தில் பின் அமைப்பியல் சார்ந்து இன்னும் வெளிவரவேயில்லை. இதனால் பிரதிக்கும் வாசகனுக்குமான இடைவெளி மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.

இத்தகையதொரு சிக்கலான சூழ்நிலையை புரிந்து கொள்ளாமல் இவ்வெண்ணக்கருக்கள் சார்ந்து வடக்கிலும் பிரதிகள் தோன்றத்தொடங்கிவிட்டன. அவற்றினுடைய ஒட்டுமொத்த வடிவமாக மயூரரூபன் அண்மையில் வந்து நிற்கிறார். சித்தாந்தன், யாத்திரீகன், தானா.விஷ்ணு போன்றோரின் நெறி முறைமையில் இன்னும் பலர் எழுதிக்கொண்டே இருக் கிறார்கள். உண்மையில் இவர்களுடைய நெறி முறைமை என்பது அனார், றஸ்மி, அலறி, மஜீத் போன்ற கிழக்கினுடைய முறைமையை ஒத்ததாகவோ அல்லது மனுசிய புத்திரன், தேவதேவன், கரிகாலன், சுகுமாறன், பிறேம்ரமேஸ், கலாப்பிரியா போன்ற தென்னிந்திய முறைமை ஒத்ததாகவோ கொள்ள முடிகின்றது. குட்டிரேவதி, சல்மா, மாலதி மைத்ரி, சுகிர்தராணி போன்றோரின் முறைமையை ஒத்ததாக வும் கொள்ளலாம். உண்மையில் இவைகள் எல்லாம் மேற்கத்திய முறைமையில் இருந்து தமிழிற்கு வந்து சேர்ந்த விதம் சுவாரசியமானது. இவ்விதமாக வழிவந்த இத்தகைய நுட்பமான மொழிக் கையாளுகையானது தமிழ் இலக்கியத்திற்கு புத்தொளி பாய்ச்சியது என்பது உண்மையே ஆனால், இவற்றினுடைய மறுபக்கமானது இருள் செறிந்த உலகமாகவே கொடூரமயமாகவுள்ளது. இந்த இருள் செறிந்த உலகைச் சுற்றியே இன்றைய பிரதிகள் தோன்றுகின்றன. இங்கும் இந்நிலையே தொடர்கிறது. வேண்டுவனவற்றை கொண்டும் வேண்டாதனவற்றைத் தள்ளி ஒதுக்கும் நிலையும் இருந் திருந்தால் பிரதிக்கும் வாசகனுக்கும் இடைவெளி பெருகு கின்ற பாரதூரமான இன்றைய நிலை வராமல் இருந்திருக்கலாம்.

உண்மையில் இவர்கள் யாரை நோக்கி பிரதியைக் கொடுக்கிறார்கள் என்ற கேள்வி மிகமிக முக்கியமானது. வாசகன் என்பவன் ஒரே தரத்தில் உள்ளவன் அல்லன். இலக்கியப் பயிற்சி, வாழ்நிலை, உலகஞானம், கருத்துநிலை, சாதி, தொழில், வயது என்ப வற்றைப் பொறுத்து வாசகனின் தரம் வேறுபடும். அதற்கேற்ப பிரதியின் பொருளும் வேறுபடும். எனவே, இவ்விடத்தில் ஆசிரியன் நின்று நிதானிக்க வேண்டும். இன்றைய ஈழத்துப்படைப்பாளிகள் பலரும், தென்னிந்தி யாவில் உள்ள நூல் வெளியீட்டு நிலையங்களை நோக்கி, அங்குள்ளவர்களை பொருட்படுத்தியே பிரதி களைப் படைப்பதால் அவர்களது வாசக வட்டம் குறுகி விடுகிறது. யாருக்கு விளங்காவிட்டாலும் என்ன, வெளியீட்டு வட்டத்திற்கு மட்டும் பிரமிப்பை உண்டு பண்ணினால் போதும் என்ற நோக்கிலே பிரதிகளை உற்பத்தி செய்கிறார்கள். கருப்பொருள், மொழி எல்லாமே அவர்களுக்கு ஏற்றதாக அமைக்கிறார்கள். இதனால், ஈழத்தின் தொற்றுகை, ஈழத்தின் மண்மணம், ஈழத்தின் நிற பேதங்கள் யாவும் செத்துவிடுகின்றன. ஈழத்தின் ஆன்மா பிடுங்கப்பட்டு வெற்றுடல்களாகவே அப்பிரதிகள் போய்ச் சேருகின்றன. அந்நிலையில் "மிகைப்படுத்தல்" எல்லாவிதத்திலும் மிதமிஞ்சி நிற்கிறது. இந்நிலைமையும் உண்மையில் கிழக்கில் இருந்தே வடக்கு நோக்கி பாய்ந்தது.

வடக்கு யுத்த பூமியாக விளங்கியதால் எல்லாப் பக்கமும் அடைபட்டு விளங்கியது. இதனால் இலங்கை யின் ஏனைய பகுதிகளோடு, உலகின் ஏனைய பிராந்தியங் களோடு தொடர்பு முற்றாகத் துண்டிக்கப்பட்டு விட்டது. பொருளாதாரத்தடை, இராணுவத்தின் முற்றுகை, பேரினவாதத்தின் அடக்குமுறை முதலானவற்றால் வடக்கு முற்றாகத் துண்டிக்கப்பட்டது. இலங்கையின் எந்தப்பாகத்திற்கும் போவதற்கும் உடல் பரிசோதனை கிடையாது. ஆனால், வடக்கிற்கு மட்டும் வருவதற்கு உடல் பரிசோதனை செய்யவேண்டிய சட்டமொன்றை மிக அண்மைக்காலம் வரை அரசு விதித்திருந்தது. இவ்வாறு எல்லாவிதத்திலும் வேறுபடுத்தப்பட்ட வடக்கில் புதுமைகள் எதுவும் உட்புகவில்லை. இதனால், விஞ்ஞானமும் அறிவியலும் வடக்கிற்கு பின்னரே வந்து சேர்கின்றன. இவ்விதமாக பின் நவீனத்துவம், பின் அமைப்பியல் என்பனவும் மிகத்தாமதமாகவே வந்து சேருகின்றன. இப்போது, கிழக்கை சுற்றிச் சூழ்ந்ததைப் போன்று இவை வடக்கையும் சுற்றிச்சூழ்ந்து கொண்டன. இன்று இலங்கை முழுவதும் இத்தகைய, முற்றிலும் தமிழிற்கு புதிய கோட்பாடுகள் வந்து நிலைத்து விட்டன.

ஆனால், முழு ஞானத்தோடும் தெளிவோடும் நிலை பெற்றனவோ என்றால் இல்லை என்பதே உண்மை யான பதிலாகும்.

பொங்கி பிரவாகிக்கும் விஞ்ஞான வசதிகளும், பிரளய வெள்ளம் போல் ஓடிவரும் பணக்குவியல்களும் இலங்கை எங்ஙனும் இன்று கவிஞர்களைத் தோற்று வித்துள்ளன. நான்கு சுவருக்குள் இருந்துகொண்டு, அண்டசராசரத்தையே வலம் வரும் இன்றைய விஞ்ஞான யுகக் கவிஞர்கள், உள்ளங்களில் ஒட்டி யிருக்கும் மண்ணின் நிறத்தைக் கண்டு கொள்ளாமல், மேகத்தின் மேல் சவாரி செய்து கொண்டு, சூரியனை எட்டிப் பிடிக்கும் பிரமையோடு, சந்திரனிற்கு தேனில விற்குப் போய் விடுகிறார்கள். இவர்களிடம் ஆழ்ந்த கன்ற சமூக அரசியல் பொருளாதார சிந்தனைத் தளமோ அவற்றினுடைய அதிர்வலைகளோ இருப்ப தாகத் தெரியவில்லை. முகப்புத்தகத்தில் முப்பது கவிதை களை வாசித்துவிட்டு, அதன் தாக்கத்தில் கவிதை எழுதுகின்ற கவிஞர்கள் பெருகிவிட்டார்களே அல்லாமல், பாரதியைப் போன்று, தாகூரைப் போன்று காலத்தை உருவாக்கும் கவிஞர்கள் தோன்ற வில்லை. முன்னர், வைரமுத்து, மேத்தாவின் தாக்கத்தில் எழுதியவர்களைப் போன்று, இவர்களும் தாக்கத்தின் அளவிற்கு ஏற்ப காதல் கவிதைகளையோ அல்லது அதனைப்போன்ற அமைப்பிலான கவிதைகளையே எழுதுகிறார்கள். பின்னர் கவித்துறையையே மறந்து தூங்கி விடுகிறார்கள். சதா சர்வ காலமும் கவிதை யோடு புணருகின்ற மெஞ்ஞானம் இவர்களுக்கு இல்லை. அடிமைப்பட்டுக் கிடக்கும் வறுமைத் தேசத்தை தூக்கி நிறுத்தவல்ல திராணி இவர்களது கவிதைக்கு இல்லை. பாழ்பட்டு சிதைந்து கிடக்கும் மானிட வினத்தை உயிர்ப்பித்து ஊட்டச்சத்து ஊட்ட வல்ல நெஞ்சுரமும் இவர்களுக்கு இல்லை. கண்ணீர் இல்லாத மேதினியை, அவலம் இல்லாத மானிட சாதியை உருவாக்கவல்ல நிமிர்ந்த ஞானச்செருக்கோ, ஏகாதி பத்திய கவித்துவ ஆண்மையோ இவர்களிடம் இல்லை. இவர்களுடைய பிரதிகளில் ஆழமான சிந்தனை யோட்டமோ, வியக்கவைக்கும் தத்துவச் செறிவோ, ஒளிதரவல்ல உணர்வூட்டமோ, எதுவுமே மேலாண்மை பெற்றிருப்பதில்லை. மேலோட்டமான பார்வையும் மிகையான உணர்ச்சிக்கொந்தளிப்புக்களும் கூறியது கூறலும் மிகைப்படுத்தப்பட்ட சுய யதார்த்தங்களுமே இவர்களிடம் மேலோங்கி நிற்கின்றன. பொதுமை ஞானமும் ஓங்கி ஒன்றித்த உண்மை உணர்வலையும் புதியன பாடுதலும் ஊன்றி நிலைக்கவல்ல சித்தாந்த வேட்கையும் நீண்ட உலக தரிசனமும் புலமைப் பாரம்பரியமும் அண்மைக்கால கவிஞர்களிடத்தில் இல்லை என்பது நான் கண்டறிந்த மிகப்பெரிய பேருண்மையாகும். அவர்களது பிரதிகளே, அவர்களது வாசிப்பின் பகைப்புலத்தை காட்டி விடுகின்றன.

இன்று மொழியியல் ஆய்வும் அதன் வளர்ச்சிப் பரப்பும் பன்மடங்கு வளர்ந்துவிட்டது. நுணுக்கமாகவும் ஆழமாகவும் நுழைமாண் நுண்புலத்தோடும் பெரும் பயிற்சியோடும் மிகப்பெரிய சிந்தனை உரையாடல் களோடும் மொழியியலை அணுகவேண்டிய காலமிது. மொழியல் கூறுகளின் மேலாதிகத்தைப் பாய்ச்சி, கவிதை யியலின் வளத்தையும் வனப்பையும் வசதிவாய்ப்புக் களையும் வளர்த்தெடுக்க வேண்டிய காலமிது. முற்றிலும் புதிய உத்திகளையும் நுட்பமான அணுகு முறைகளை யும் பயன்படுத்தி மொழியியலின் அரண்மனைச் சிகரங்களுக்குள் கவிதையியலை ஒளியேற்ற வேண்டிய யுகம் இது. இது வரை எந்தக்கவிஞராலும் கையாளாத புதிய மொழி நுட்பத்தையும் உத்தி முறையையும் பயன்படுத்திப் புதுமை செய்தேன் என்று அண்மைக்கால கவிஞர்களில் நெஞ்சு நிமிர்த்தும் திறன் யாருக்கும் இல்லை. ஒன்றைப் பார்த்து "உற்பத்தி செய்தல்" இன்று ஈழத்தில் மலிந்து விட்டது. சுயரூபம், அகஞானம், மேதா விலாசம், பழமையில் திளைத்த முதிர்வு, புதுவுலகைப் படைக்கும் வல்லமை, மந்திரம் போன்ற மொழியின்பம் இத்தகைய கவிதா இலக்கணங்கள் இன்று மலையேறி விட்டன. வடக்கிலும் கிழக்கிலும் இன்று கவிதையின் வலிமை செயலற்றுப்போனதற்கு முக்கிய காரணம், பாடு பொருளில் ஏற்பட்ட வறுமையே ஆகும். போரியல் முற்றுப்பெற்ற பின்னர் இன்னொரு உண்மை நிறைந்த பாடுபொருளுக்கு பற்றாக்குறை நிலவியது. இந்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முடியாமல் போன தால்தான் பாரிய தேக்கமொன்று நாடெங்கும் நிலவ வேண்டி வந்தது. போரியலின் வடுக்களைப் பாடிக் கொண்டு இன்னமும் காலம் கடத்தமுடியாது. இங்கு போரின் வடுக்களை குறைத்து மதிப்பிடுவதாக எண்ணி விடக்கூடாது அடுத்த கட்ட இலக்கிய நகர்வு என்ன? என்பதே இங்கு மேற்கிளம்பும் வினாவாகும். இத்தகைய தேக்கநிலைக்குள், வடக்குக்கிழக்கு எங்கும் நிலை பெற்று விட்டன என்பது அண்மைக்கால வரவுகளின் மூலம் தெளிவாகின்றது. அதனால் தான், வடக்குக் கிழக்கு கவிதைகளை விட, மலையகத்தின் அண்மைக் கால கவிதைகள் நெஞ்சைத்தொடுவனவானவுள்ளன. புசல்லாவைக் கணபதி, லட்டியாந்தோட்டை கருணா கரன், சண்முகம் சிவகுமார், பபியான் போன்ற பல மலையகக் கவிஞர்களது கவிதைகள் பொய்யடிமை அற்று விளங்குகின்றன. இவர்களோடு பாலரஞ்சனி சர்மாவையும் சேர்த்துக்கொள்ளலாம். அரசியல்வாதிகளின் கபட நாடகங்கள், மலையக மக்களது அவலங்கள், வறுமை அடக்குமுறைக்குள் சிக்கித் தவிக்கும் அவர் களது சின்னாபின்னப்பட்ட வாழ்வியல், தொழிலாளர் களின் பிரச்சினை என இன்று வரை தொடர்ந்து கொண்டிருக்கின்ற மலையக மக்களின் நிதர்சன யதார்த்தத்தை இவர்கள் வார்த்தைகளில் கொண்டு வந்து தருவது, இவர்களுக்கு பாடுபொருள் வறுமை இன்னும் ஏற்படவில்லை என்ற உண்மையை உணர்த்தி நிற்கின்றது. வடக்குக்கிழக்கின் இன்றைய முக்கிய நட்சத்திரங்களான அனார், அலறி, சித்தாந்தன், யாத்திரீகன், கு.றஜீபன், நெடுந்தீவு முகிலன், மஜீத், தானா விஷ்ணு, துவாரகன், வஸீம் அக்கிரம் போன்ற கவிஞர்களது உத்திகள், கவித்துவ வீச்சு, மொழிக் கையாளுகை

என்பன மலையகக் கவிஞர்களை விட எவ்வளவோ உயர்ந்து சிறந்து திகழினும் இவர்களது உள்ளடக்கம் அண்மைக் காலத்தில் கேள்விக் குறியானதால் இவர்களது கவிதைகள் கூறியது கூறலாகவும் பழமை பாடுதலாகவும் மேற்கத்தைய மோகம் கொண்டதாகவும் விளங்கி பழைய செல்வாக்கை இழக்கத் தொடங்கிவிட்டன. இப்படிக் கூறுவதன் கருத்து வடக்குக் கிழக்கு கவிதைகளை மலையகக் கவிதைகள் விஞ்சிவிட்டன என்பது அல்ல. வடக்குக் கிழக்கிற்கு ஏற்பட்ட பாடுபொருள் வறுமை மலையகத்திற்கு இன்னும் ஏற்படவில்லை என்பதே. இவ்வாறு வடக்குக் கிழக்கு கவிஞர்கள் உள்ளத்தில் இருந்து அந்நியப்பட்டு போவதற்கு அவர்களது உயிரோட்டம் இழந்த இயந்திரப் பாங்கான உற்பத்திக் கவிதை முறைமை இன்று பல்கிப் பெருகியமையே முக்கிய காரணம் எனல் வேண்டும். இத்தகைய இயந்திர உற்பத்திகள் வெகுவிரைவில் காலாவதித் திகதியைக் கடந்து பழுதடைந்து விடுகின்றன.

ஈழத்தில் இன்னொரு புறம் எதிர்ப்புக் கவிதை கலாசாரம் கோலோச்சுகிறது. சிங்களப் பேரினவாதத்தை எதிர்க்கும் தமிழ்ச்சூழலும், தமிழ்த் தேசியத்தையும் அதனுடைய தாக்கங்களையும் எதிர்க்கும் முஸ்லிம் சூழலும் இலங்கையில் வேர் ஊன்றி வளர்கிறது. காசி ஆனந்தன், புதுவைரத்தினதுரை போன்றோரிடம் இருந்து முகிழ்ந்தெழுந்த சிங்களப் பேரினவாத எதிர்ப்புக்குக்குரல் இன்று சர்வதேச வலுவும் திமிரும் பெற்று தீபச்செல்வனிடம் வந்து நிற்கிறது. அஷ்ரப் ஷிஹாப்தீனின் "சைத்தூண்" என்ற கவிதையில் இருந்து அல்லது "மீஸான் கட்டைகளின் மீள எழும் பாடல்கள்" என்ற தொகுதியில் இருந்து வீறுகொண்டு எழுந்த தமிழ் எதிர்ப்புக்குரல் படிப்படியாக வளர்த்து இன்று அறபாத்திடம் நிலைபெற்று நிற்கிறது தீபச் செல்வனும் அறபாத்தும் இன்றைய ஈழத்தின் இருபெரும் குரல்கள் என்பதில் ஐயம் இல்லை. இன்னொரு வகையில் சொன்னால், தீபச்செல்வன் நசுக்கப்பட்ட தமிழ் இனத்தின் ஆன்மா என்றால், நசுக்கப்பட்ட முஸ்லிம் இனத்தின் ஆன்மா அறபாத் எனலாம். இவ்விரண்டு குரல்களும் சற்றும் பிசகாமல் தத்தம் பாதைகளில் பயணித்துக் கொண்டே இருக்கின்றன. ஆனால், வரலாற்று நோக்கில் இவர்கள் இருவரும் ஒற்றைத்தளம் கொண்டவர்களாகவே விளங்குகின்றனர். தட்டையான ஒருபக்க நோக்கு வளர்ச்சி என்று ஆகாது. பாரதியின் சுதந்திரப் பாடல்கள், அவனுடைய முழுமையான பாடல்களின் மூன்றில் ஒருபகுதியே என்பதை விபுலானந்தரும் கூறியிருக்கிறார். சுதந்திரப்பாடல்கள் மட்டும் பாடியிருந்தால் பாரதியும் தட்டையான ஒரு நோக்குப் பார்வை உடையவன் என்று ஆகியிருக்கும். ஆனால், உலக உயிர்களை நேசிக்கும் பக்குவமும் தீர்க்கதரிசனமும் பாரதியிடம் குடிகொண்டிருந்த காரணத்தால் பாரதி எல்லாவற்றையும் மேவிவிடுகின்றான். எனவே, தீபச்செல்வனும் அறபாத்தும் ஏனைய இலங்கைக் கவிஞர்களைப் போன்றே மிகையான உணர்ச்சிக் குவிப்புக்களில் இருந்தும் கூறியது கூறல்களில் இருந்தும் விட்டு விடுதலையாகி புதியதோர் வெளிக்கு வர வேண்டியது அவசியமாகின்றது. அந்த வெளி, மானிடத்தை நேசிக்கும் பரந்துபட்ட பிரபஞ்ச வெளியாக இருக்க வேண்டும் பிரபஞ்ச வெளியில் நின்று கொண்டு சிற்றுயிர்களின் துன்பதுயரங்களை சிதறடிக்கும் சீர்மிகு கவிகளைப் பாடின், இவர்கள் இருவரும் காலத்தை வென்று நிற்பர்.

கருணாகரனும் நல்லதொரு கவிஞனே. விடுதலைப் புலிகளின் காலத்திலேயே அவரது ஆளுமை மேற்கிளம்பியது புலிகளின் காலத்திற்குப்பின், அரசோடு ஐக்கியப் பட்டுப்போனார். புலிகளின் காலத்தில் எழுந்த அவரது கவிதைக்கும் இன்றைய அவரது கவிதைக்கும் இடையே வேற்றுமைகள் நிறையவுண்டு. குறிப்பாக கோட்பாட்டு ரீதியான மாற்றமே மேல் எழுகிறது. முன்னர், முன்னதை மேன்மைகொள் நீதி எனக் கொண்டார். பின்னர், பின்னதை மேதினியின் விதியெனக் கண்டார். அபரிமிதமான கவித்துவம், தனிப்பாங்கான சொல்லாட்சி முறைமை, லாவகமான உத்திகள் என அவரிடம் இயல்பாகவே குடிகொண்ட ஆற்றல்களால், தனது இருநிலைப்பட்ட நியாயங்களையும் அவர் சத்திய மொழியாகவே எடுத்துக்கூறியுள்ளார். முன்னர் தான் கூறிய கருத்துக்களுக்கு பதில் தருவதாக அவரது அண்மைக்கால கவிதைகள் பல அமைந்துள்ளன.

"நிறமற்ற மலரொன்று
அலைமீதில் தவழ்ந்தது அவ்விரவில்
பிறகு, கடலாகி விரிந்தது
பகலில் கரைந்தது"

என்று, விடுதலைப்புலிகளின் தலைமையை இரத்தினச்சுருக்கமாப் படிமப்படுத்தி சொற்களுக்குள் சிக்கனப்படுத்தி கவிதையாக்கியிருந்தார். கவிதை ஞானத்தில் வெளிவந்தபோது, பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. மலர், அலைமீதில் தவழ்ந்து விரிந்து பின் கரைந்துவிடுகிறது. அந்தமலர் நிறமற்றது. அது, கரைவதற்கு பின்னர் மட்டுமல்ல முன்னரும் அது நிறமற்றதுதான் என்கிறார் கவிஞர். இக்கவிதை ஒன்றின் மூலமாகவே கருணாகரனின் இன்றைய நிலையினைப் புரிந்து கொள்ள முடியும். இவ்வாறு, காலங்கள் மாறும் போது நிலைகள் மாற்றம் அடையலாம். அது, தவறு அல்ல, ஆனால், அந்த நிலைகளின் திசைகள் மாறுவதில்லை மாறக்கூடாது. கவிதை என்பது கோட்பாடுகளின் பிரசாரப்பீரங்கி அல்ல. அது, பிரசாரம் செய்தவற்காகப் பயன்படுத்துகின்ற ஒரு நவீன ஊடகமும் அன்று. உண்மையில் கவிதை என்பது, எல்லாவற்றையும் கடந்து, எங்கும் வியாபித்து நிற்கும் பரப்பிரமம் போன்றது. கவிதை, ஆன்மாவின் மொழி. இத்தகைய பேருண்மை, இன்று உருவமற்றுவிட்டது. உருவமற்ற பேருண்மை, அழிந்துவிடுவதில்லை. அது அருவமாகி நிற்கும் காலத்தின் சுழற்சிதான், இதனை உணர்த்தும். இதை உணரும் போது மனிதன் பேதங்களைக் கடந்து விடுகின்றான். ஒரு மகாகவியிடம் முரண்பாடுகள் தோன்றலாம். ஆனால், அவனது அந்தரங்கச் செல்நெறி ஒரு போதும் மடைமாறாது. அவனது மடைமாற்றம், புதியதொரு காலத்தின் சிருஷ்டிப்பாகவே அமையும்.

பகல் பொழுதில் மழை

பகல் பொழுது முழுவதுமாக
மழை பெய்கிறது
நிசப்தம் இரவு முழுவதும்
மௌனத்தை போர்த்திக் கொள்ளுகிறது
பகலின் அடைமழை
எங்களை நனைப்பது
மட்டுமல்ல
எல்லாவற்றையும் ஸ்தம்பிதம்
செய்கிறது
சோம்பேறிகளுக்கு
இந்த மழை வெறுப்பாகலாம்
எங்களுக்கு
வெறுப்பல்ல
எதுவுமோ செய்ய முடியாமல்
நிமிடங்கள் வெறுமனே
நகர்கின்றன
நிமிடங்களை செலவளிப்பதில்
உடன் பாடில்லாமல்
கவிதைகளை படித்து படித்து
புரிதலுக்கான புதிய நடையை
பயிலுகின்றேன்
பகல் பொழுதில் மழை
பரவாயில்லை.

– எஸ்.திலகவதி

ஆர்த்தியின் சுவர்

ஆர்த்தியின் சுவர் ஆசீர்வாதிக்கப்பட்டிருந்தது
எண்ணற்ற தெய்வங்களின் உருக்களால்...
இன்னும் அது உயிரூட்டப்பட்டிருந்தது
சடை நாய்க்குட்டிகளாலும் சிறு குருவிகளாலும்....

இடி முழக்க காலங்கள் பூமியின் கருப்பை
பிளந்த நாழிகையொன்றில் சுவர்களின்
கூரைகள் எரிதணலாய் போயின...எஞ்சிய
சுவர்களில் தெய்வங்கள் மட்டும் காணாமல்
போக பிந்திய உயிரினங்கள் பிணக்காடுகளின்
குழிகளுள்ளே புதைந்து கொண்டன.....

ஓவியம் வரைந்த ஆர்த்தியின் கரங்கள்
அக்கினி குஞ்சுகளால் இரை கொள்ளப்பட
முண்டம் சுமந்துள்ள வெற்று விழிகளால்
கருமை மண்டி கிடக்கும் சுவர்களை வெறித்தபடி
நகர்ந்து கொண்டிருக்கின்றன ஆர்த்தி எனும்
காவு கொள்ளப்பட்ட ஓவியையின்
பரம பத நாட்கள்.....

– லலிதகோபன்

நல்லவை கற்றிடு

மெல்லவே ஒட்டும் நற் பழக்கம்,
முயற்சித்து வருந்தியே வளர்த்துக்கொள்.
மனத்துக்கு நிம்மதி தினமும் தரும்.
உறவு வாழ்வையும் உவப்பாய் மாற்றும்.
பெயரையும் புகழையும் பெற்றுத் தரும்.
பயன்தரும் பெரு மூலதனமும் ஆகும்.

தீய பழக்கம் வேகமாய் ஒட்டும்.
துயரத்தில் உன்னைத் தினமும் ஆழ்த்தும்.
சிக்குண்ட பறவையென உள்ளம் கலங்கும்.
விடுதலைக்காய் துடிப்பாய், கிடைக்காது.
மானக் கேடும் சிறைவாழ்வும் சொந்தமாகும்.
தொடங்காதே, பிறரை அதில் வீழ்த்தாதே.

நல்ல ஆளாய் வாழ், உனக்கே அது நலமாகும்.
நல்லது செய்து பிறரையும் நெறிப்படுத்து.
உன் வாழ்வும் உலகும் மேம்பாடடையும்.
இருளில் வாழ்வோர் உன்னால் ஒளிபெறுவர்.
இறைவனின் அருளொளி உன்னை நிரப்பும்
இதயத்தின் நல் ஆவல்கள் நிறைவாகும்.

– அருள்திரு இராசேந்திரம் எஸ்ரலின்

எல்லோரும் செல்வர் என்று சொல்ல வேண்டும்



சமாதானமாக நாம் வாழ வேண்டும்
சண்டை இனி இல்லை என்று சொல்ல வேண்டும்
பகை, படை இல்லாத நாடு வேண்டும்
பாரெல்லாம் பார்த்து வியக்க வேண்டும்
வாவிகளில் நீர் நிறைய வேண்டும்
வயலெல்லாம் நெல் விளைய வேண்டும்
மகாவலி நீர் வடக்கே வரவேண்டும்
மக்களெல்லாம் மன்னரை வாழ்த்த வேண்டும்
வீதியோரம் மரங்கள் வளர வேண்டும்
மாதம் இரு மாரி பொழிய வேண்டும்
அகதி அடைப்புக்கள் மறைய வேண்டும்
அனைவரும் மனிதர் என்று எண்ணவேண்டும்
ஒழுகும் குடிசைகள் ஒழியவேண்டும்
அளவான வீடுகள் அமையவேண்டும்
தரையெல்லாம் தாவரம் தளைக்க வேண்டும்
தரமற்ற மண் என்ற கதை வேண்டாம்
ஆவினம் புல்மேய வெளிவேண்டும்
பால்வளம் சிறக்கச்செய்யவேண்டும்
ஆலைகள் பல் தொழிற்சாலைகள் வேண்டும்
வேலை இல்லை என்ற சொல் இனி வேண்டாம்
ஏழை, வறுமை என்ற சொல் வேண்டாம்
எல்லோரும் செல்வர் என்று சொல்ல வேண்டும்

– மேவரற்கேணியன்

தன் கையே தனக்குதவி

போதை விற்பனையும் போக்கறுந்த லொட்சுகளும்
தீதை விதைக்கவென வந்ததுகாண் – பாதை
தனிவகுத் துப்பயணம் செய்வோம் அறிவுக்
கனியிருக்கக் காய்கவர்வ(து) ஏன்

தீமை உணர்வோம் திருந்த வழிகற்போம்
நாமே நமக்குதவி நன்கறிவோம் – பூமியதில்
ஒற்றுமையே நம்மினத்தை ஏற்றமுறச் செய்யுமடா
கற்றுணர்ந்த பாடந்தான் காண்

தீயணைக்கும் தண்ணீராய் சீறுகுணங் கொண்டவனாய்
நோயொழிக்கும் மாமருந்தாய் நீமாறு – தாயகத்தில்
ஏற்றமிகு வாழ்விருக்கு ஏதுகுறை உந்தனுக்கு
ஆற்றலைநீ ஆழ்மனதிற் கொள்

என்றும் விழித்து எழும்புகையில் கொண்டுவிடு
நன்றென வாழ்வதற் கோர்ஓர்மம் – சற்றயர்ந்தால்
நம்மை மிதித்து நமதினமே வேறென்பார்
எம்மைநாம் காத்திடுவோம் வா

– ச.லலீசன், அச்சுவேலி

தொலைந்த கவனம்

பற்றிப்பிடித்துப்
படரும் கொடிகள்

கனுக்களில் காய்கள்
சிறிது பெரிதாய்

வழிப்போக்கர்களின்
கவனம் காய்களைத்
தாங்கும் கொடிகளில்

கொடிகளைத்தாங்கும்
விருட்சம் தலைகுனிய
முடியாது வழிப்போக்கர்களை
மட்டுமே பார்த்திருந்தது

காய்கள் ஆயப்பட்டன
ஆய்ந்தவர்களும் விருட்சத்தை
மறந்து தம்போக்கில்
கவனத்தைப்பதித்தபடி...

– திருமலை சுந்தா



யாத்ரிகன்

வில்வண்ணை ஒரு விழுது



வேர்களைத் தேடுதல் என்பது போர் யுகத்தின் புகழ்பாடுதல் என்றாகாது; நிலங்கள் தழுவிய ஒழுகலாறில் சுட்டி ஒருவர் பெயர் கூறாக்காதலின் அகம் பொதுமையில் "தாம் கலந்து" நிற்பதும் வேருக்குச் சொந்தமானது தான். அறநெறிக் காலத்தில் நிலம் தழுவிய வாழ்வொழுக்கம் பிடுங்கப்பட்டது. பின்னால் பக்தி இலக்கிய காலத்தில் நிலம் சார் ஒழுக்கத்தை இன்னொரு தளத்தில் நடுகை செய்ய "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என உறுதிபடச் சொல்லியதும் எமது வேருக்கு சொந்தமானது தான் . "எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்" என்று வாழ் வளித்த ஊர்களைப் புதுப்பிக்க கோரிக்கை விடுத்து ஊரின் மக்களை எல்லாம் ஆற்றுப்படுத்தியவர்கள் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பொதுமைப் பாடிகளின் வாரிசுகள் தான்:

இது ஒரு நெடிய போராட்டம்; இந்தப் போராட்டத்தின் ஊடே ஆதிப்பொதுமையின் பிரக்ஞை யின் தம்முள் கறந்தெடுத்ததுவாய் சஞ்சீவிச் செடியின் சாறுகலந்து இன்றைய தமது நோய்கட்கு மருந்திடவல்ல கவிஞர்கள் எத்தனை பேர் உள்ளார்கள்? இன்றைய முக்கியமான கேள்வி இது. கேள்வி என்பது தீவிரமான சுய விசாரணையின் தேடலாக வேண்டும்.

மேற்குறித்த தேடல்சார் தத்துவ மொழிகள் "வில்வண்ணை" எனது, உயிரோடிருத்தல் கவிதைத் தொகுதியில் முன்னுரையாக எழுதித்தந்தவை. அந்த முன்னுரையே அவரது வாழ்வயின் இலக்கிப்புலத்தில் இறுதியுரையாகவும் அமைந்தது.

"சு.வில்வரத்தினம்" என்பது வெறும் பெயரல்ல... அலாதியான பண்புகளின் அடையாளம்! மானுடத்தின் மாண்புமிகு குணங்களை தன்னகத்தே கொண்ட ஒரு நல்ல மனிதன். வில்வண்ணையை ஒரு நல்ல மனிதன் என அடையாளம் கண்ட பின்னரே அவரை ஒரு நல்ல கவிஞனாக அடையாளப்படுத்த முடியும். இது அவரோடு பழகிய அத்தனை பேருக்கும் தெரியும். எழுத்தாளர் நிலாந்தனின் மொழியில் சொல்வ

தானால் "அவர் அன்பினால் நிரம்பி வழியும் பாத்திரம்"!

"சு.வி" எனச்செல்லமாக அழைக்கப்படும் சு.வில்வரத்தினம் ஈழத்துத் தமிழ்க்கவிதைத்துறை என்பதனைத் தாண்டி தமிழ்க்கவிதைப்பரப்பில் தவிர்த்து விட முடியாத மிக முக்கியமான ஆளுமையாகக் காணப்படுகின்றார். வில்வண்ணையைத் தவிர்த்து விட்டு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஈழத்துத் தமிழ்க் கவிதை வரலாற்றினை எவராலும் பதிவு செய்ய முடியாது. அத்துணை தூரம் கவிதைப்பரப்பிலே அத்வைதமாகியும் விரவியும் காணப்படுகின்றார்.

வில்வண்ணையின் கவிதைத் தொகுப்புக்கள் இன்று வரையும் பேசப்படும் தொகுப்புக்களாக காணப் படுகின்றன. அலை வெளியீடான "அகங்களும் - முகங் களும்", ஆகவே வெளியீடான "காற்றுவழிக் கிராமம்" V.J.பதிப்பகத்தின் வெளியீடான "காலத்துயர்" மற்றும் அவரது சொந்த வெளியீடான "நெற்றிமண்" கவிதைத் தொகுப்பும், "வாசிகம் குறிப்பும்" ஈழ மண்ணிலே பதிப் பிக்கப்பட்டவை. அதேவேளை சு.வியின் அனைத்துத் தொகுப்புக்களையும் உள்ளடக்கியதோடு தொகுப்பில் அடங்காத வேறுபல கவிதைகளையும் இணைத்து தமிழ்நாட்டில் விடியல் பதிப்பக வெளியீடாக "உயிர்த்தெழும் காலத்திற்காக" எனும் தொகுதி வெளிவந்தமையும் குறிப்பிடத்தக்கது. மேலும் வானம் பாடியின் ஈழத்துக்கவிஞர்களுக்கான சிறப்பிதழில் கவி வடித்த கவிஞர்களுள் சு.வியும் முக்கியமானவர்.

பிரபஞ்ச யதார்த்தம் என்னும் மிகப்பெரிய தத்துவத்தினை வரித்துக் கொண்டவர். அல்வாயைப் பிறப்பிடமாகக் கொண்ட குருஜீ ஞானகுரு (நந்த கோபாலகிரி) அவர்களை ஆன்மீக குருவாகக் கொண்ட மு.தளையசிங்கம், மு.பொன்னம்பலம் ஆகி யோரோடு சு.வில்வரத்தினமும் அடங்குகிறார். ஆயினும் மு.த, மு.பொ போன்றோரின் வழிவந்த இலக்கிய ஆளுமையாகவும், முற்போக்குச் செயற் பாட்டாளராகவும் "சு.வி" தன்னை அடையாளப் படுத்துகிறார்.

ஆன்மீகம், தமிழ்தேசியம், சமூகப்பார்வை என்பவற்றைப் பாடுபொருளாக கொண்ட "சு.வி", கட்டிறுக்கமான மொழிப்பிரயோகத்தினை வசப்படுத்தி யிருந்த போதிலும், மரபு - புதுக்கவிதை என்பவற்றின் கலவையாக சந்தத்திலே கவி வடிக்கும் வல்லமையும் பெற்றிருந்தார். சிறுமைகளைக் கண்டு பொங்கியெழும் பாரதியின் கவிதைகளின் அலைவரிசையோடு பொருந்திப்போகும் பல கவிதைகளை தமிழுக்கு தந்தவர். மானுடத்தின் வலியை பொறுத்துக் கொள்ள முடியாமல் வீறுடன் உணர்ச்சிக் கவிதைகளை தமிழுக்கு ஈந்தவர்.

ஊதடா சங்கு!
ஊதடா சங்கு!
.....
.....
தர்ம அதர்மப்போர் வந்து மூள்கையிலே
தர்மமே வெல்லும் எனப்பறை சாற்றியே
வலம்புரி தூக்கினான் குருஷேத்திரத்திலே
வந்தனன் மீண்டுமென்றூதடா சங்கு
வந்ததே புதுயுகம் ஊதடா சங்கு

ஊதடா சங்கு!
ஊதடா சங்கு!

("அகங்களும் - முகங்களும்" - புதுயுக சங்கொலி)

இவ்வாறு சிறுமை கண்டு பொங்கியெழுந்து, தான் வரித்துக் கொண்ட கொள்கைக்குச் சார்பாக இறுதிவரை போராடியவர்.

"சு.வி" தனியே கவிதைத்துறையில் மட்டுமல்ல, நல்ல இசைப் பாடகனாகவும் திகழ்ந்துள்ளார். மஹாகவி, மு.பொ போன்றோர் கவிதைகளையும், தனது கவிதை களையும் இசைப்பாடலாக்கிப் பாடிக்காட்டுவார். மட்டக் களப்பில் உள்ள மாணவி ஒருவர் "சு.வி" யின் கவிதை களைப் பாடல்களாக்கி இசையமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. "சு.வி" மறைந்த பின்னரும் அவரது படைப்புக்கள் வசீகரமான முறையில் இன்னொரு பரிமாணம் பெற்றுள்ளமை அவதானத்திற்குரியது.

ஈழத்தை விடவும் தமிழ்நாட்டிலே தான் சு.வி பெரிதும் புரிதலுக்குரியவராகக் காணப்படுகின்றார். மணற்கேணி ரவிக்குமார், பாண்டிச்சேரி கண்ணன், S.V. இராஜதுரை போன்றோரால் பாரதிக்கு அடுத்தபடியாக முற்போக்குச் சிந்தனை கொண்டவர் என விதந்துரைக் கப்பட்டவர். பாரதியைப் போன்று அரசியல், ஆன்மீக, சமூகப் பார்வைத் தளங்களில் இயங்கி, எழுத்திற்கும் வாழ்விற்கும் இடைவெளி களைந்த யதார்த்த நிலையே இத்தகைய மதீப்பீடு தமிழ் நாட்டில் மையங்கொள்ள முகாந்தரமாக அமைந்திருக்கலாம்!

வில்வண்ணை சிறந்ததொரு சமூகச் செயற் பாட்டாளராகவும் அமைந்துள்ளார். முற்போக்குச் சிந்தனை மிகுந்த மு.த, மு.பொ போன்றவர்களோடு இணைந்து சாதியத்திற்கு எதிரான போராட்டங்களில் பங்கெடுத்துள்ளார். புங்குடுதீவு கண்ணகையம்மன் ஆலயத்தில் வேதக்காரர்கள் தண்ணீர் அள்ளக்கூடாது என்ற சாதிவெறியர்களின் குரலுக்கு எதிராக குரல் எழுப்பியவர். இந்துவாக இருந்தும் தீண்டாமைக்கு எதிரான போரிலே கலந்து, அடிபட்டு, சிறைவாசம் அனுபவித்தார். மு.த போல் சு.வி யும் நோய்வாய்ப்பட ஏதுவாக அமைந்த காரணிகளுள் இதுவும் ஒன்றாயிற்று.

வில்வண்ணையை எல்லோராலும் விளங்கி கொள்ள முடியுமா என்பது கேள்விக்குறியே. பழகுவதற்கு இனிமையான மனிதர்; பண்பானவர் வயது வேறுபாடின்றி அனைவரையும் அணைத்து தட்டிக்கொடுக்கும் தன்மை அதிகம் கொண்டவர். "சு.வி." கவிஞனாக வாழ்ந்ததை விடவும் அதிகமதிகம் மனிதனாக வாழ்ந்தார். பிழைகளை நெற்றிக்கு நேரே சுட்டிக்காட்டும் அவரது துணிவு எல்லோருக்கும் பிடிக்கும்.

வில்வண்ணை ஆத்மஞானமும், தமிழ் புலமையும் வாய்க்கப் பெற்றவர். அதனால் தான் அவரால் அவருடைய அந்திமகாலம் வரை எழுத முடிந்தது. "மாஜி" எழுத்தாளர்கள் உள்ள இவ்வுலகில், தனது நோய்க்காலம் தவிர, ஏனைய வாழ்வியற் காலத்தில் ஆளுமை மிகு இலக்கியப் புலமையாகவே

செயற்பட்டார். இதற்கு அவர் பின்னாட்களில் "உயிர்த்தெழும் காலத்திற்காக" தொகுப்பில் எழுதிய கவிதைகள் அவரது எழுத்துக்காலப் பின்னணிக்கு சான்றுபகர்கின்றன.

ஒரு படைப்பாளியின் படைப்புக்களை அகவயம், புறவயம் சார்ந்த நிலையில் வகைப்படுத்தும் விமர்சகர்கள் சு.வி யினது படைப்புக்கள் மீதான பார்வையினை இவ்வாறான நோக்கில் முன்வைக்கும் போது பின்னடைவையே சந்திக்கின்றனர். ஏனெனில், ஆன்மீக, சமூக, அரசியல், தன்னுணர்வுத் தளங்களில் வேரூன்றியே இவரது அனுபவங்கள் கவித்துவம் பெறுகின்றன. "சு.வி" பழந்தமிழ் பரிச்சயமும் தேவார அருட்பாக்களில் ஊறித்திளைத்த ஞானமும் குவிந்து, தொன்மங்கள் வழியே கவிதையில் வெளிப்பாட்டினைச் செய்துள்ளார். மரபுகளைச் சார்ந்து புதுக்கவிதையோடு நவீன உலகிலே பிரவேசித்து, எதையும் எதிர்கொள்ளும் வல்லமையும் பொருந்தி, தமிழ் இலக்கிய வரன்முறைக்கு உட்பட்டு கவிதைகளை யாத்திருக்கின்றார்.

"சு.வி" இன் கவிதைகளை ஆழமாக நோக்கு மிடத்து மரபுகளை மீறாது, உள்ளிருந்து முளைக்கும் வரிகளை அவதானிக்கலாம். தனக்கே உரித்தான சொல்லாட்சிகளையும் சொற் புனைவுகளையும் உருவாக்கித் தந்திருக்கின்றார். (சிறுவம் - மழை மழைத்தது பனி பனித்தது) அத்தகைய சொல்லாட்சி களில் இருந்தே சு.வி யின் இலக்கிய ஆளுமையின் செழுமையினை அறிந்து கொள்ள முடியும்.

சு.வி யின் இன்னொரு பக்கம், அவர் தீவிர தமிழ்ச்செயற்பாட்டாளராக இயங்கினார். இதன் பின் புலத்திலேயே இவரது புங்குடுதீவு வீடு இடிக்கப்பட்டு எரிக்கப்பட்டது. இதனாலே இவர் திருகோணமலையில் வசித்து வந்தார். எப்போதுமே சொத்துக்களைச் சேர்த்துக் கொண்டவர் அல்லர். தனது கொள்கை களுக்கு முற்சாய்வோ பக்கச்சாய்வோ இன்றி இறுதி வரையும் தமிழ்த் தேசியத்தின் மேல் அபிமானங் கொண்டு, செயற்பாட்டாளராகவும், தமிழ்ப்பற்றாளராக வும், நாட்டுப்பற்றாளராகவும் விளங்கினார்.

சு.வி யின் மீதும் சில விமர்சனக்கணைகள் இருக்கவே செய்தன. பிற்காலத்தில் தனது நம்பிக்கை களையும் கொள்கைகளையும் விருது, அங்கீகாரம் என்பவற்றிற்காக சில விட்டுக்கொடுப்புக்களுடனான சமரசங்களில் ஈடுபட்டார் என குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்படுகின்றன. எனினும் இவற்றை அர்த்தமற்ற பழிகள் என மறுக்கும் குரல்களும் ஈழத்திலே உள்ளன.

"உயிரோடிருத்தல்" தொகுதியின் முன்னுரை யின் இறுதிப் பந்தியைச் சுட்டி நிறைவு செய்கின்றேன்.

"இளைய யாத்திரீகர்களே!

தேடலின் திசை விரிந்த உலகம் உங்களது. தேடிச்செல்லுங்கள் இளைய பறவைகளே! திசைகள் திறந்தபடியே உள்ளன. அறிவும் உயர்வும் இருகை இறக்கைகளாக முன்னீட்டு அலகே குறியாக ஒளிர, எரிமலைகளின் மேலாக பறந்தபடியே இரு. உனது அடுத்த இறக்கம் மண்ணில் ஒரு பெரும் வருகையாக புதிய எல்லைகளில் குடியமர்ந்து இருக்கட்டும்."

முயற்சிகளால் முழுயும்

இடி இடிக்கும்
வெடி வெடிக்கும்
இவனின் மனம் துடிக்கும்
இமயம் தொடத் தவிக்கும்

தந்தை நடந்த பாதை
தங்கம் போல் ஜொலிக்கும்
தாயவள் கனவுகள்
தலையின் உள்ளே வசிக்கும்

திறமைக்கான வாசல்
திறந்துவிடப்படும்
திகதிகள் மட்டும் சிலரால்
திருடப்படும்

பெண்ணை ரசிப்பது
பெருமையாய் இருக்கும்
பெற்றோர் அறிந்தால்
பெயர் கூட வெறுக்கும்

உன் வறுமையோ
வரலாறாகும் வருந்தாதே



இப்றாஹீம் அஹ்சன்

உன் கருத்துக்கள்
கடல் தாண்டும் கலங்காதே

வானைப் பற்றிய
சிந்தனைகள் வேண்டாம்
வானளவிற்கு வாழ்வைப் பற்றிய
சிந்தனைகள் வேண்டும்

வாழ்ந்த பின்னும்
வாழ வேண்டும்
வறிய நெஞ்சங்கள்
வாழ்த்த வேண்டும்

அனைத்து ஆரம்பமும்
உனதாக வேண்டும்
அதன் முடிவுகள்
தானாகத் தோன்றும்

முயற்சிகளை நீ
முடியாதவை என்று சொல்லாம்
முயன்று பார் இளைஞனே
முழு உலகம் ஓர் நாள் வெல்லலாம்

அந்தகனின் ஒற்றைச்சொல்



உலரா வெற்றுக் குவளையைப் போல
என்மனதில் விளாப்புறும்
சிலதுளி ஞாபகங்கள்

ஞாபக வரிகளை
ஒறுக்கும் எத்தனிப்பாய்...
இருள் வெளியின் அவதிக்கணங்களை
கைகளுக்குள் பொத்தியபடி,
காற்றாய்... விரைகிறேன்

சுயம் மாறாக் கனத்த நாட்களின்
உலைவுகள்...
என்மீது குவிகின்றன

ஆட்காட்டிக்குருவி
குரலெழுப்பிய ஒரு கணத்தில்....
அறுந்து தொங்கிய
என்மூச்சு,
அதனால் புறந்தள்ளப்பட்டும்
என்னுள்,
பம்பரமாய் சுழல்கிறது....
அவன் "ஒற்றைச்சொல்"

கனவில் வரும் காற்றில் நானும் அவர்களும்

ஒன்றன்மேல் ஒன்றாய்...
குழம்பிப்பதியும்,
செக்குமாட்டுத் தடங்களாய்...
உப்பவிக்கும் கனவுகளில்...
நேர்கோட்டுப்பயண
அடைவு வெளிச்சத்தில்...
பிரகாசித்த முகங்கள், மீள மீள உயிர்க்கின்றன.

முற்றுப்பெற்ற நாட்களின்
புள்ளிகளுக்கு,
எனையழைக்கிறது...
அவர்களின் கையசைப்பு

அவர்களின்,
"காலம்"
தொலைந்த வெளியில்...
என் நிழலும் படிந்தழிகிறது

இதயத்துள் அதிரும்
அர்த்தம் பொதிந்த புன்னகைகளை
காற்றில் தேடியலைகிறேன்

வலிப்பாடலை மீட்டியழுகிறது...
யாரோ ஒருவனின்,
புல்லாங்குழல் அதில் கரையும் என்னை
சுவாசித்து வாழ்கின்றான், வேறொருவன்.

அழுதெழும் காற்றில்....
நானும் அவர்களும்
சந்தித்துப் பிரிகிறோம்

பொலிகைகூர் சு.க. சிந்துதாசன்

புதியகாதல் பாடம்

எதிர்ப்பின் எதிர்ப்பில்
ஒரு உண்மை
தெரிந்தது
அதனால்
உன்னை மனமாரக்
காதலித்தேன்
ஆனால்
உன் காதலிலோ
இதயம் பேசியது
அதனால்
என் மனம் மௌனித்தது
உன்
இதய சிற்றறை வீச்சு
என் இதயம் திறந்தது.
என் இதயம் திறந்த போது
நான், நீ என்னும்
பேதம் மறைந்தது
நான் ஆண்
நீ பெண்
எனும் பேதம் மறைந்தது
ஆத்ம வெளி
பிரசன்னமானது
இங்கு நான் உன் உடைமை. அல்ல
நீயும்
என் உடைமை அல்ல
எனும்
புதிய காதல் பாடம் மலர்ந்தது.

வினோ நடராசா

அ.பௌநந்தி

சமவுடைமை தழுவிய கவிஞன் - சாருமதி

ஈழத்தில் தரமான கவிதைகளோ, புனைகதைகளோ தோன்றவில்லை என்ற சேறுபூசுதல்களுக்கும் அப்பால் இலங்கைத் தமிழ் இலக்கியங்கள் யதார்த்த நிலையில் நின்று மக்களது வாழ்வியலை சித்திரிக்கின்றன என்ற உண்மையை மறுக்க முடியாது. அந்தவகையில் ஈழத்துத் தமிழ்க் கவிதைகளும் குறிப்பிடத்தக்க இடத்தை வகிக்கின்றன. இலங்கையில் தமிழ்க் கவிதையின் தரத்தை உயர்த்தி புதுப்பாதையில் நகர்த்தியவர்களுள் மஹாகவி, நீலாவணன், இ.முருகையன் போன்றவர்கள் முக்கியமானவர்கள். அவர்களைத் தொடர்ந்து பலர் கவிதைகளை எழுதியுள்ளனர் - எழுதி வருகின்றனர். அவ்வாறு ஈழத்துத் தமிழ் கவிதையுலகில் தனது பெயரையும் பதித்துச் சென்ற சாருமதி முக்கியமானவர்.

யாழ்ப்பாணத்திலுள்ள மூளாய் என்னும் கிராமத்தில் (1947 1998) இவர் பிறந்தார். கந்தசாமி யோகநாதன் என்னும் இயற்பெயர் கொண்ட சாருமதி நீண்ட காலமாக மட்டக்களப்பில் வாழ்ந்தவர். அதனால், அவர் மட்டக்களப்பைச் சேர்ந்த கவிஞராகவே கருதப்படுகின்றார். இந்தியாவில் தோன்றிய வளர்ச்சியுற்றிருந்த நக்சல் பாரி இயக்கத்தின் தலைவர், புரட்சியாளரான சாருமஜீந்தார் என்பவர் மீதுகொண்ட பற்றினாலும் மார்க்சியத்தில் கொண்ட ஈடுபாட்டினாலும் தனது பெயரை "சாருமதி" என மாற்றிக்கொண்டார்.

மக்களது அன்றாட வாழ்வியல் பிரச்சினைகளை தனது பொதுவுடைமைச் சிந்தனைகளினூடாகத் தரிசித்தார். மட்டக்களப்பு பிரதேசத்தில் பொதுவுடைமைச் செயற்பாடுக்களில் முன்னின்று உழைத்த கிருஷ்ணன் சின்னக்குட்டி, கவிஞர் சுபத்திரன் போன்றவர்களோடு நெருக்கமான தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு பொதுவுடைமையை நிலை நாட்ட வேண்டுமென்ற கனவோடு உழைத்தவர். பல வேறு தொழிற் சங்கங்களோடு இணைந்து அவர்களின் உரிமைகளுக்காகவும்விடுதலைக்காகவும்போராடியவர்.

இலங்கைத் தமிழ்க்கவிதை, மரபுநிலையிலிருந்து விலகி புதுமை நோக்கிப் பயணிக்கத் தொடங்கிய காலப்பின்னணியில் சாருமதியினுடைய கவிதைகள் தோற்றம் பெறுகின்றன. 1970 களில் இருந்து கவிதையுலகில் காலடியெடுத்து வைத்த சாருமதி அவர்கள், குமரன், தாயகம், தீர்த்தக்கரை, நந்தலாலா, வயல், பூவரசு ஆகிய இதழ்களில் தனது கவிதைகளை எழுதியுள்ளார். சமூகத்தின் பிரதிநிதியாக நின்று சமூகத்தில் தான் கண்டுகொண்ட, அனுபவித்த அடக்குமுறைகளையும் அநியாயங்களையும் எதிர்த்துக் குரல் கொடுத்துள்ளார். தனது உணர்வுகளை வெளியிடும் ஓடையாக கவிதைகளைப் பாடியுள்ளார் என்பது அவருடைய கவிதைகளை நோக்குகின்ற போது புலப்படும். அவர் எழுதிய கவிதைகளில் நூறு கவிதைகளைத் தெரிவு செய்து "நந்தலாலா" குழுவினர் "அறியப்படாத மூங்கில் சோலை..." என்ற தொகுதியாக 2010 இல் வெளியிட்டுள்ளனர்.



மார்க்சிய சிந்தனையின் அடிப்படையில் இயங்கிக் கொண்டிருந்த சாருமதி அக்கருத்துக்களைப் பிறரிடம் விதைப்பதிலும் வீறாப்பாய்ச் செயற்பட்டார். அடக்குமுறை வெளிப்படுகின்போது அதற்கெதிராகக் குரல்

கொடுத்ததால் பலவேறு சவால் களைச் சந்தித் தவர். இதற்கு அவருடைய கவிதைகளே சாட்சியம். "அடக்கு முறைகளை எதிர்த்துப் பாடுவேன்" என்ற அவரது கவிதையில்,

"நியாயங்களை என்கவி
நிறுத்திப் பிடிப்பதனாலா
நீங்கள் என்னிடம்
விசாரணைக்கு வருகிறீர்கள்.

நீங்கள் வந்து
விசாரிக்கத் தொடங்குவதனால்
என் கவி நியாயத்தைத் துறந்திடுமா...?
என் மனதுகளில்
கவிதை ஊற்று
சுரவாமல் போய்விடுமா?

காலத்தின் கண்ணாடியாய்
என் கவி
ஏழைகளின்
வாழ்விற்குப் போராடினால்
நீங்களேன்
என் வீட்டு
வாசலைத் தேடவேண்டும்?
.....
ஏழையாய்ப் பிறந்தவன் நான்
ஏழ்மையின் கொடுமை
நோயில் துடிப்பவன் நான்
என்னால் உங்களின்
ஆசையைப் பாட முடியுமா?
என் வர்க்கத்தின்
ஆத்திரங்களை மூட முடிமா?"

என்று அவர் தனது உள்ளத்து உணர்ச்சிக் கொந்தளிப்புகளை வினாக்களாகத் தொடுக்கின்றார். தன்னை ஆளப்படும் வர்க்கத்தின் பிரதிநிதியாகவே கருதியுள்ளார். காலத்தின் கண்ணாடியாகத் தன் கவிதை ஒலிப்பதை ஒப்புக்கொள்கின்றார். இந்நிலைப் பாட்டை அரசியல் சார்ந்த அவரது கவிதைகளிலும் தரிசிக்கலாம். அவர் கவிதை எழுதத் தொடங்கிய காலப் பகுதியில் இலங்கைத் தேசியத்தை ஆதரித்திருந்தார். அதாவது, நாம் எல்லோரும் ஒரு நாட்டு மக்கள் என்று கொண்டார். முரண்பாடுகளற்ற, மனிதத்தை நேசிக் கின்ற அனைத்து மக்களும் சகோதரர்களே. மொழி ரீதியாக, இன ரீதியாக முரண்படும் நிலை அவசிய மற்றது என்பதை தனது கவிதைகளில் வெளிப்படுத்தி யிருந்தார். வறுமையில் வாடும் தமிழ்ப் பெண்மணி பொன்னம்மாவிற்காக சிங்கள இனத்து நண்பன் சைமன் என்பவன் தனது நண்பர்களிடம் பணம் சேர்த்துக் கொடுக்கின்றான். அவளது துயரத்துக்காகக் கண்ணீர் வடிக்கின்றான். ஒரு தமிழன் முன்வந்து செய்யாத உதவியை சகஇனத்து நண்பன் செய்யும் போது அவனது மனிதாபிமானத்தைக் கவிஞரால் பாடமலிருக்க முடியவில்லை. அங்கே வறிய வர்க்கம் என்ற நிலைப்பாடே கவிஞரது கண்களுக்குத் தென்படு கின்றது. "நாம் இலங்கையர்" என்னும் கவிதையில்,

"அது அழுகையா?
அல்லது ஆத்திரமா?
அவன் சிங்களவனா?
இவள் தமிழச்சியா?
எனது இதயம்
ஓர் துடிப்புத் துடித்து நிமிர்ந்தது
அது
பொன்னம்மாவிற்காகவா?
அல்லது ஒரு
வர்க்கத்திற்காகவா?
.....
மீண்டும் மீண்டும்
எங்கும் எங்கும்
எனக்குக் கேட்டது
நாங்கள் மக்கள்
நாங்கள் இலங்கையர்
என்ற குரலே

எங்கள் கண்ணீர் அழுகையா?
எங்கள் கண்ணீர் ஆத்திரமா?
அல்லது விரைவில்
வெடிக்கப்போகும் ஓர்
வெடியின் திரிச் சிதறலா?"

என்று பாடுகின்றார். இங்கு வர்க்க ஏற்றத் தாழ்வை எதிர்த்துத் தனது போராட்டம் தொடரும் என்பதையும் அவர் கூறிவைக்கின்றார். இந்நிலைப் பாட்டை, "இராமர்களின் வருகைக்காய் அகலிகைகள் காக்கட்டும்" என்ற பிறிதொரு கவிதையிலும் காணலாம். ஆனால், 1980 இற்குப் பின்னரான அவரது கவிதைகளில் இன அடக்குமுறைகளுக்கு எதிரான குரல்கள் காத்திர மாக ஒலிப்பதைக் காணலாம். இன அடக்குமுறையும் அதனால் ஏற்பட்ட போராட்டமும் தமிழ் மக்களுக்குப் பல பாதிப்புக்களையும் தந்தபோது அதன் கொடூரங்களை தமிழ் மக்களின் பிரதிநிதியாக நின்று பார்க்கின்றார். சுற்றிவளைப்புக்கள், கைதுகள், காணாமல் போதல்கள், இடப்பெயர்வு அவலங்கள் என்று தமிழ் மக்கள் பட்ட அவலங்கள் அவரை வெகுவாகப் பாதித்திருக்கின்றன. அன்றியும் இத்துன்பங்களை அவரும் அனுபவித்திருக் கின்றார். இவற்றுக்கு அவரது கவிதைகளே சான்று களாக அமைந்துவிடுகின்றன. "அவரே இட்டார்" என்ற கவிதையில்,

மீண்டும் எரிந்தது யாழ் நகர்
எங்கள் மேனி எரிந்ததடா
ஆண்ட பரம்பரைக் கதை யளந்தோர்
தேர்தல் ஆசை நிறைந்த தடா
மாண்ட மனிதரின் பிணங்கள் தெரு
மண்ணில் கிடந்த தடா
வேண்டிய விடுதலைத் தாகம் எங்கே
பலர் வீடும் எரிந்த தடா

ஆலயம் எரிந்ததடா இங்கே கல்விச்
சாலையும் எரிந்த தடா

பாழாய்ப்போன படைகளினாலே
எங்கள் பாதைகள் எரிந்த தடா
வாழப் பிறந்தவர் நாங்கள் இல்லையென்ற
வக்கிரம் அவர் கொண்டால்
காலக் கலண்டரில் கட்டாயம் இந்நாடு
கடைசியில் ரெண்டாகும்.
.....
இத்தனை காலமும் இருமொழி நாடென்ற
இருப்பினை நாம் இழந்தோம்.
எத்தகை பொறுமைகள் கொண்டிருந்தோம்! இனி
எங்களில் ஏது பிழை
இத்தரை இரண்டாகப் போவதற்கான
வித்தினை அவரே இட்டுவிட்டார்."

என்று இனப்பிரச்சினைக் கொடுமைகளையும் அதற்கான காரணங்களையும் வெளிப்படுத்துகின்றார். "மனிதர்களை நேசிப்பேன்" போன்ற அவரது வேறு கவிதைகளிலும் இக்கருத்துத் தொனிப்பதைக் காணலாம்.

உள்நாட்டு அரசியல் பிரச்சினையையும் அதற்கான காரணங்களையும் மட்டுமல்லாது உலக அரசியல் நிலைப்பாட்டையும் அவர் கூர்ந்து கவனித்திருக்கின்றார். ஆதிக்க வல்லரசுகள் அடுத்தவர்களை அடிமைப்படுத்தும் செயல்கண்டு குமுறுகின்றார்.

தமிழ் நாட்டில் வெண்மணி என்ற இடத்தில் உழைக்கும் மக்களின் போராட்டத்தை அடக்குவதற்காக அன்றைய தமிழ் நாட்டு அரசு 48 அப்பாவிகளைக் கொன்றது. அண்ணாத்துரையும் கருணாநிதியும் அதற்கு ஆதரவாக இருந்தார்கள் என்று கவிஞர் தன் ஆவேசத்தை வெளிப்படுத்துகின்றார். அன்றியும், காந்தியம் பேசும் பாரத தேசத்தின் போலித்தனத்தைப் போட்டுடைக்கின்றார். "வெண்மணியே ரெத்தத்தால் பதிலிறு" என்ற கவிதையில் கூலிக்காகப் போராடிய அப்பாவி ஏழைகளை எரித்துக்கொன்ற கொடுமையைக் கண்டு தனது எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றார்.

"கூனிக் கிடந்த தமிழர்
குனிந்த தலை நிமிர்ந்து
ஏற்றநடை போட்டு
எதிரிப்படை நாணியோட
ஆண்ட பரம்பரை மீண்டும்
ஆள எழுந்ததெங்கள்
அண்ணாவின் ஆட்சியென்று,
கல்தோன்றா மண்தோன்றாக் காலத்தே
முன்தோன்றிய மூத்த தமிழ்க் குடியென
வரலாற்றுப் பொய் பேசும்...
கருணாநிதித் தம்பிகளும்
ஈழத்தின் காற்சட்டைக் காந்திகளும்
வெண்மணிக்கு என்ன சொல்வர்
தஞ்சை மடி வெண்மணியில்
அரிஜனங்கள் என்ற பெயருள்
மகாத்மாவால்
தாழ்த்தி விடப்பட்ட மக்கள்
இந்த ஊழல் தமிழ் ஆட்சியில் தான்
உயிரோடு எரிக்கப்பட்டார்..."

அமெரிக்க வல்லாதிக்க அரசு உலக அரங்கில் தன் ஆதிக்கத்தை நிலைநாட்ட பல அழிவுகளைச் செய்கின்றது. மற்றவர்களது சுதந்திரத்தில் தலையிடும் எந்த ஆட்சியையும் அடக்குமுறையையும் கண்டு கவிஞர் வெகுண்டெழுகின்றார். ஆதிக்கத்துக்கு எதிரான குரல் அவர் கவிதைகளில் பரவலாக ஒலிக்கின்றது. "நெம்பென் மண்" என்ற கவிதையில் அமெரிக்கா ஆதிகத்துக்கு எதிரான போருக்கு ஆதரவு தெரிவிக்கின்றார்.

"நெம்பென் மண்ணில்
சினந்து நிற்கும்
தியாகச் சுடரே

அடிக்கும் கைகள்
ஆயிரம் மீறி
அமெரிக்க டாங்கி
கொடுமைகள் சாக
சுடுடா...!

அணைத்த பெற்றோர் – அவரை
குண்டால் அழித்தார்.
அன்புப் பிள்ளைகள்
ரெத்தம் பீற
நெஞ்சம் தவித்தார்.
அமெரிக்க நாய்கள்
அழிந்தே சாக
சுடுடா...!"

என்று நீண்டு செல்கின்றது அந்தக் கவிதை. சோவியத் ரஷ்யா ஒரு சோசலிச நாடாக இருந்தபோதும் அது ஏனைய நாடுகள் பலவற்றின் மீது தனது ஆதிக்கத்தைத் திணிக்க எத்தணித்தது. சமவுடமையைப் போதிக்கும் ஒரு நாட்டின் இத்தகைய ஆதிக்கப் போக்கு ஆரோக்கியமற்றது. ஈரான், ஆப்கானிஸ்தான், செக்கஸ்லோவாக்கியா, கிழக்கு ஐரோப்பா, எரிற்ரியா, கம்பூச்சியா போன்ற நாடுகளில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டக் கங்கணம்கட்டி நின்ற சோவியத்தை, "நவீ ஜார்களின் நரகபூமியே" என்ற கவிதையில் சாடுகின்றார். உள்நாட்டு அரசியலையும் தாண்டி உலக அரசியலில் கவிஞருக்கிருந்த அக்கறையையும் உழைக்கும் வர்க்கத்தின் மீதான பற்றுதலையும் அநியாயத்தைத் தட்டிக்கேட்கும் உந்தலையும் அவரது கவிதைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

உழைக்கும் வர்க்கம் ஊருக்குழைத்தாலும் அவர்களுடைய வாழ்வு வசதியற்றதாகவே காணப்பட்டது. தமது அடிப்படை வசதிகளைக்கூட பெற்றுக்கொள்ள முடியாதவர்களாக அவர்கள் அல்லற்பட்டனர். விவசாயிகள் கடினமாக உழைத்தும் வறுமையின் பிடியிலிருந்து மீளமுடியாது தவிக்கின்றனர். இயற்கையும் அவர்களுக்கெதிராகச் சதிசெய்கின்றது. இத்துயரங்களைச் சாருமதி தனது கவிதைகளில் வேறு இடங்களிலும் பதிவுசெய்துள்ளார்.

"அடக்கப்பட்டவர்கள் என்றும்
இதுபோல் அடக்கப்படவில்லை.

விவசாய வயிறுகளை
வறுமை தின்ன
இன்று அவர்கள்
தெருவிற்கு வந்து விட்டார்.

அழுதழுது ஓய்ந்த அவர்களது
கண்களில்
இப்பொழுது
கனல் பொறிகளே மிச்சம்"

என்று "மீகாமன் நாங்களே" என்ற கவிதையில் விவசாயிகளின் வறுமையையும் அதற்கெதிராக அவர்கள் போராடப் புறப்பட்ட செய்தியையும் கூறுகின்றார். "எனது கிராமத்தின் ஒரு வருடம்" என்ற கவிதையிலும், விவசாயக் கிராம மக்களின் வாழ்க்கையை அனுபவ ரீதியாக வெளிப்படுத்துகின்றார். விதைவிதைத்து, பயிர் வளர்ந்து, குடலை தள்ளி, நெல்முற்றி குடிசையில் மக்கள் புத்துயிர்ப்பு வாழ்க்கை வாழ்ந்தாலும் அது ஆறு மாத காலமே. அதற்குப் பின்னர் அவர்களை மீண்டும் வறுமை ஆட்கொள்ளும்.

"அரை வயிறு நிறைய
ஆறுமாதம் ஓடும்
மறுபடியும்
விதை விதைப்பு
சிறு மழை பெரு மழை
வரைகள் நிறையும்
வக்கடைகள் உடையும்
தலைவிரித்தாடும் பயிர்கள்.
பருவம் அறிந்த
பறவைகளின் வருகை
குடலை காயும்வரை
எமது கிராமத்தின்
குடல்களும் காயும்"

என்று வறுமையின் சுழல் சக்கரத்தைப் பாடுகின்றார். "நிகர உழைப்பின் நிராசைகள்" போன்ற வேறு கவிதைகளிலும் விவசாய மக்களின் கடின உழைப்பையும் வறுமையையும் அவர் பாடியுள்ளார்.

தனியே விவசாயிகளின் பிரச்சினைகளைப் பற்றி மட்டுமின்றி தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் மலையக மக்களின் விடுதலைக்காகவும் குரலெழுப்புகின்றார். மலையகத்தில் சம்பள உயர்வு கோரி போராடியதற்காக டெவன் தோட்டப்பிரதேசத்தில் 1978 இல் சிவனு லெட்சுமணன் என்ற பதினெட்டு வயது இளைஞனைச் சுட்டுக் கொன்றார்கள். சாருமதி இக்கொடுமையைக் கண்டு கொதித்தெழுகின்றார். "இது அஞ்சலியல்ல ஆத்திரம்" என்ற கவிதையில் சிவனு லெட்சுமணனுக்காக தனது அஞ்சலியைச் செலுத்துவது மட்டுமின்றி, அவனைக் கொன்றவர்களுக்கெதிராக வெகுண்டெளும் வர்க்கத்தின் பிரதிநிதியாக தன்னையும் உட்படுத்திப் பாடுகின்றார். "போருக்கெழுந்தேன்" என்ற அவருடைய கவிதையும் கடின உழைப்போடு போராடும் வர்க்கத்தின் வறுமையைப் பதிவுசெய்திருக்கின்றது.

"காலை
ஆலைச் சங்கின்
அலறல் கேட்டெழுந்தேன்.

கடன் ஒழிய
கடன் தின்னும் வேலை
நோக்கி ஓடினேன்.
மாலை வருவேன்.
மறுபடி மறுபடி
இருட்டில் விடுதலை அடைவேன்
....."

உழைக்கும் வர்க்கம் வறுமையில் வாட சுரண்டும் வர்க்கம் சுகபோகத்தை அனுபவித்திருப்பதை உலகெங்கும் கண்டுகொள்ளலாம். சாருமதி தான் வாழும் சமூகத்தில் காணப்படுகின்ற வர்க்க ஏற்றத் தாழ்வுக்கான காரணங்களை அலசுகின்றார். தாம் சுரண்டப்படுகின்றோம் என்பதைக்கூட சுரண்டப்படுவோரால் பலவேளை உணர முடிவதில்லை. "வருங்கால ஏழையின் வாழ்வைத்தேடி", "உழைப்பாளர்கள் வென்று விட்டால்" ஆகிய கவிதைகள் நாட்டுப்புற வாழ்வியல் பின்னணியில், நாட்டுப்புறப் பாடல் மெட்டில் சுரண்டலுக்கான காரணங்களை வெளிப்படுத்துகின்றன.

தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே நடைபெறுகின்ற உரையாடலாக அமைந்த "வருங்கால ஏழையின் வாழ்வைத் தேடி" என்ற கவிதையில் தலைவன்,

"வாழ்வொரு விதியென்றால்
வஞ்சித்தவர் யார் மச்சி
வயிறழுதால் கஞ்சிக்கு
வயல் விளைவதேன் மச்சி"

என்று பாடுகின்றான். அதற்குத் தலைவி,

"வயல் விளைவது போடிக்கு
வயிறழுவது கூலிக்கு
வாழ்விற்கு இறைவன்
வைத்த விதி இது மச்சான்"

என்று பதிலளிக்கின்றாள். "உழைப்பாளர்கள் வென்று விட்டால்" என்ற கவிதையில் தாய்க்கும் மகனுக்குமான உரையாடலில்,

"கொத்து வேலை செஞ்சேனே அம்மோவ்
குடலும் சிரிக்கலையே
குத்து வலி தாங்கலையே அம்மோவ்
கொடுமை பொறுக்கலையே"

என்று மகன் கேட்கின்றான். அதற்குத் தாய்,

"கொடுமைக்கு முடிவில்லையே மவனே
குடிசைக்கு விடிவில்லையே
உடமைக்குப் பொருளில்லையே மவனே
உழைப்பவர்க்கு வாழ்வில்லையே"

என்று பாடுகின்றாள். முஸ்லிம் சமூகத்து தந்தைக்கும் மகனுக்கும் இடையிலான உரையாடலாக அமையும் "ஊருக்கு நியாயம் வேணும்" என்ற கவிதையிலும் இவ்வுணர்வைத் தரிசிக்கலாம்.

"சுபஹ
பாங்கு சொல்லக் கேட்டு

கூடு சமையப் போற வாப்பா
அவன் போடி யார் உனக்கு
அள்ளித் தந்ததென்ன வாப்பா!

அள்ளித் தந்த தொண்டுமில்லை
அல்லாதான் விட்டவழி
பள்ளி மரைக் காரரோட
பகிடி சேட்டை வேண்டாம் பொடியா

பள்ளி மரைக்கார் தான் அவக
பாவம் செய்யலாமோ வாப்பா
சொல்லிச் சொல்லி அல்லா பேரை
கொள்ளை அடிக்கலாமோ வாப்பா"

என்று அமைகின்ற கவிதைகளில் சுரண்டல் பற்றிய காரணங்களை இளந்தலைமுறை உணரத் தலைப்பட்டு விட்டது என்பதைக் காணலாம். அவர் கவிதையைச் சொல்லும் முறையிலுள்ள அழகு வாசகர்களை கவரக் கூடியதாக அமைந்துள்ளது என்பதோடு கருத்தாழம் மிக்கதாகவும் காணப்படுகின்றது. கிராமியப் பேச்சு வழக்குச் சொற்களின் பயன்பாடு கவிதைக்கு மேலும் உயிர்ப்பைக் கொடுக்கின்றது.

தமிழ் நாட்டோடு ஒப்பிடுகையில் பெண்ணடிமையின் கொடுமைகள் ஈழத்தில் குறைவாகவே காணப்படுகின்றன எனலாம். பெண்களது பிரச்சினைகள் மற்றும் அவர்கள் குடும்பத்திலும் அதற்கு அப்பாலும் எதிர்நோக்கும் அடக்குமுறைகள் பற்றியும் ஈழத்துக் கவிதைகள் பேசுகின்றன. அந்தவகையில் பல கவிஞர்களைக் கூறலாம். சாருமதியினுடைய கவிதைகளில் பெண்களது பிரச்சினைகள் குறிப்பிடத்தக்க கவனிப்பைப் பெறவில்லை என்றே கூறலாம். ஆனாலும், அவருடைய, "எழுக தோழியரே எழுக", "பெண்ணும் சிலுவையும்" ஆகிய கவிதைகள் குறிப்பிடத்தக்கன.

"மனித குலத்தின்
ஒருபாதியை
இருளில் கிடத்தி விட்டு
எந்த நாடாவது
உதயத்தைக் காண முடியுமா?

சொத்துடைமை வர்க்கங்களின்
சித்தங்களினால்
சிறை வைக்கப் பட்டிருக்கும்
பெண்ணின் சிந்தனைகள்
எப்பொழுது
சுதந்திரத்தைத் தரிசிக்கும்?
வளையல்களினதும் கொலுசுகளினதும்
வடிவில் மதிமயங்கி
வாழ்வின்
துயரங்களைப் புதைக்கமுயன்ற
தோழியரே!
எழுக! இனி எழுக!!"

என்ற கவிதையில் பெண்ணடக்குமுறைக்கு எதிராக ஆர்ப்பாட்டமற்றவகையில் தனது கருத்தை முன்வைக்கின்றார். வர்க்க அடக்குமுறை, சுரண்டல் போன்ற விடயங்களில் காணப்படுகின்ற உணர்ச்சிக் கொந்தளிப்பை பெண்ணியம் சார்ந்த அவரது கவிதைகளில் தரிசிக்க முடியவில்லையென்றே கூறலாம்.

சாருமதியினுடைய பல கவிதைகள் தன்னுணர்ச்சிக் கவிதைகளாக அமைந்துள்ளன. தனது தாய், மனைவி, வறுமை பற்றிப் பாடப்பட்டுள்ள கவிதைகளை இதற்குச் சான்றாகக் கூறலாம். "காதலால் போட்ட முடிச்சு", "ஒரு கதை கானல் நீர் ஆகிறது", "உன்னைத் தவிர எனக்கென்று யார் உண்டு", "ஓ என்னுயிரே" போன்ற கவிதைகள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன.

சாருமதி ஒரு கவிஞனாக மட்டுமின்றி சஞ்சிகையாளனாகவும் அறியப்படுகின்றார். அவர் "வயல்" என்ற சஞ்சிகையை நடத்தியுள்ளார். பலவேறு நெருக்கடிகளின் மத்தியில் ஆறு இதழ்களே வெளிவந்தநிலையில் அம்முயற்சி நின்றுபோயிற்று. எனினும், அது மட்டக்களப்புப் பிரதேசத்தில் இளம் எழுத்தாளர்கள் பலர் எழுதுவதற்குக் களம் அமைத்துக்கொடுத்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும். சாருமதி தான் வாழ்ந்த காலத்தில் தனது கவிதைகளை தொகுதியாக வெளியிடவில்லை. ஆனால், சுபத்திரனுடைய கவிதைகளைத் தொகுத்து வெளியிட்டார். இதிலிருந்து அவருடைய சமூக நோக்கையும் தன்னலம் கருதாத செயலூக்கத்தையும் கண்டுகொள்ள முடியும். அவரது கவிதைகளில் கவிதைக்கான அழகியல் அம்சங்கள் சற்றுக் குன்றியிருந்தாலும், அவற்றின் பாடுபொருள் என்று நோக்குகின்றபோது வர்க்க ஏற்றத் தாழ்வுகளை நிராகரித்துப் போராடுகின்ற சமவுடைமைச் சிந்தனையுடைய கவிஞனாகத் தன்னை அடையாளப்படுத்தியுள்ளார். ●

வேர்க்குள் வார்த்த நீர்

வீரம் மணக்குது நெற்றியிலே நல்ல
ஈரம் கனக்குது கண்களிலே
தீரம் பிறக்குது நெஞ்சினிலே நல்ல
திறமை வளருது நெஞ்சினிலே

பாரம் சுமக்கும் தோள்களினால் - இந்த
பாரினை ஆண்டிட வேண்டுகிறேன்
சீர்பெறும் வையமும் உன்னாலே நீ
சிந்தனை செய்திடு நல்லவனே

பாரினில் யாவரும் ஒன்றானால் - காக்கும்
பரமனும் நம்மெதிர் வந்து நிற்பான்
ஓரணு நீ என்று தள்ளாதே அவை
ஒன்றினைந்தால் அவை ஆற்றலடா!

பாருழைப்பாளரின் சிந்தையிலே ஒரு
பக்குவம் காண்பது தேவையன்றோ!
வேருக்கு வார்த்த நீர் கொம்பினிலே வந்து
பக்குவம் ஆகும் பழமெனவே!

– ஏ.எலியாசன்

நான், என், எனது!

நான் ஸபா
நகர் தர்கா
தமிழ்புலம்
சரளம் ஆங்கிலம், சிங்களம்
இலங்கை வங்கி
உயர, உயர ஏறி இயங்கி
போய்தமிழகம் தங்கி
ஓய்வு தந்து இப்போ ஒதுங்கி
பாட வராது, பாடல் வரும்
கலை, ஆட வராது விளையாட வரும்
கவிதை வரும்
கவிதை எனது பொழுது போக்கு
அதிலும் தெரியும் தொலைநோக்கு
"விடைக்குள் வராத வினாக்கள்"
என்னை இரவில்
தூங்கவிடாத கனாக்கள்
பல, பல திணுசுக்கவிதைகள்
சில ஊரின் சிறுசிறுகதைகள்
ஊடகம், நான் நீந்திய தடாகம்
சூப்பு, ஒரு வலைதளம்
இருப்பு அமெரிக்க நிலம்
சூப்பர் கவிஞரின் பெயர்
மூப்பு, இனம் முப்பதாயிரம் பேர்
அமெரிக்காதான் அனேகம் பேர்
ரஜனியைப்போல் அத்தனையும் சூப்பர்
நூற்றி எண்பது தேசத்தவர்கள்
சிலர் அறிஞர், வழக்கறிஞர்கள்
மூவரி ஹைக்கூக்கள்
ஒரே ஒரு வரி கவிப்பாக்கள்
எல்லாமே மணக்கும், பூக்களைப்போல்
இரவு, பகல் கவிபூக்கும்
சூரியகாந்தியும் இரவில் பூக்கும்
பனியில் தோய்ந்து வரும் வடதுருவக்கவிதைகள்
தூசு படிந்த அரேபியக்கவிதைகள்
கண்ணீரில் நினைந்து வரும்
கல, கல சிரிப்போடு வரும், கவிதைகள்
கவி அவைக்கு, தனிச்சுவை அவைக்கு
கண்கள் வாசிக்கும், கவிஞர், ஆண்கள், பெண்கள்
கருத்துக்குறித்து உடன் அஞ்சல் வரும்
ஆகா, ஆகா என்று மகிழ்ச்சி அஞ்சல் வரும்
அய்யோ, அம்மா என்று அலறும் அஞ்சல் வரும்
வாழ்க என்றே வாழ்த்துவார்கள்
வளர்க என்று போற்றுவார்கள்
கருத்துகுறித்து உடன் அஞ்சல் வரும்
நம்தேசக்கவிஞர்கள் முப்பத்து மூன்று பேர்



கவிதைகள் எட்டுநூறும் கட்டுக்கரும்புத்தேன்
எனது கவிதைகள் முன்னூற்றி ஐம்பது
மனதின் கனவது இன்னும் அமைப்பது
ஈழத்துத்தேயிலை, சுரும் வெய்யில் மழை
காக்கை, குருவிகள் வாழ்க்கைப்பொறிமுறை
ஆறு, அருவிகள் அழகின் சூழ்நிலை
சின்னஞ்சிறு செடிகொடி
சிங்கமுக தேசக்கொடி
சும்மா வந்த சுதந்திரம்
அம்மா, ஐயா பாத்திரம்
என் கவிதை விதையாய் வரும்
எடிசன், எளியட், சேக்ஸ்பியர்
பெரிய அலெக்சாண்டர் பெயர்
என்கவிதை விதையாய் வரும்
தாய் தந்த தாய்ப்பால்
கவிஞர் ஏ.இக்பால்
என் கவிதை விதையாய் வரும்
இதயமில்லை ஒபாமாவுக்கு என்றேன்
இருந்தாலும் கனமான கல் என்றான் அமெரிக்கன்
இன்னும் இன்னும் அரும்பெரும்
கவிதை கவிதையாய் வரும்
கவிதையால் கொடிதைத்து உலகத்தில் பறக்கவிட்ட நான்
தர்கா நகர் ஸபா!

தர்கா நகர் ஸபா

ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பம்



சோ.பத்மநாதன்

மரபுக் கவிதையின் ஓசை நுட்பம் பற்றி "ஜீவநதி" வாசகர்களுடன் சில கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். கவிதை யாப்பமைதி பேண வேண்டிய அவசியம் இல்லை என்ற கருத்து வேகமாக பரவி வருகிற சூழலில், யாப்பு, ஓசை, அது இது என்று பேசுவது out of date என்று சிலர் எண்ணக்கூடும். ஆனால், நான் இங்கு சொல்லப் போகின்றவை மிக அடிப்படையான விடயங்கள்; எளிதில் புரிந்து கொள்ளக் கூடியவை.

கவிதைக்கு மிக இன்றியமையாத ஓசைக் கூறுகள் மோனையும் எதுகையும். இவற்றைப் பேணாத மரபுக் கவிதை இல்லையென்பது மட்டுமல்ல, பாமரர்கள் பாடிய நாட்டார் பாடல்கள் கூட இவற்றை வழுவாது பின்பற்றி வந்துள்ளமையைக் காணலாம்.

முதலெழுத்தொன்றி வருதல் மோனை எனப்படும். அதாவது ஒவ்வொரு சீரின் முதலெழுத்தும் ஒன்றி வரவேண்டும்.

"**கா**விக்கமலக்கழலுடன் சேர்த்தெனைக்
காத்தருள்வாய்...."

- இது கட்டளைக் கலித்துறை என்ற பாவினத்தில் ஓர் அடி. இந்த அடி ஐந்து சீர்களால் ஆனது. இரண்டு சீர்களில் மோனை அமைந்தாலே போதும். ஆனால் அருணகிரியார் நாலு சீர்களில் மோனை அமைத்திருக்கிறார்.

"**கா**னகத்துக்**கா**தலியைக்**கா**ரிருளில்**கை**விட்டு..."

- இது புகழேந்தியின் வெண்பாவில் ஓர் அடி.

நாலு சீரிலும் மோனை வைத்திருக்கிறார் கவிஞர். இப்படி அமைவதை முற்று மோனை என்பர். பாரதியின் இசைப்பா ஒன்றில் மோனைத் தொடை எவ்வாறு பேணப்பட்டுள்ளதென்பதைப் பாருங்கள்:

"...**க**ருதிக்**க**ருதிக்**க**வலைப்படுவார்
கவலைக்**க**டலைக்**க**டியும் வடிவேல்-(முருகா)"

மாணிக்கவாசகர் பாடிய திருவம்மானையில் ஒரு பாடல்:

"**ப**ண்**ண**மந்த**பா**டற்**ப**ரிசு**ப**டைத்தருளும்
பெண்**ண**மந்த பாகத்தன; **பெ**ம்மான்
பெருந்துணையான்
விண்**ண**மந்த கீர்த்தி**வி**யன்மண்டலத்தீசன்
கண்**ண**மந்த நெற்றிக்**க**டவுள்**க**லிமதுரை...."

ஒவ்வோர் அடியிலும் வரும் மோனைகள் அடையாளமிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

"**வா**ழைப்பழமே என்**வ**லது கையிற் சக்கரையே
ஏலம் கராம்பே உன்னை என்ன சொல்லிக்
கூப்பிட்டும்!"

இது கிழக்கிலங்கையில் வழங்கும் ஒரு நாட்டார் பாடல். படிப்பறிவில்லாத நாட்டுப்புற மக்கள் நாவில் பயிலும் கவிதையிலும் இவ்வோசைக் கூறு அமைந்

துள்ளமை கண்டின்புறலாம்.

II

இனி, எதுகைத் தொடையை நோக்கலாம். முதலெழுத்தொன்றி வருதல் மோனை என்றால், இரண்டாம் எழுத்தொன்றி வருதல் எதுகை எனலாம். தமிழ்க் கவிதையில் இத்தொடை அடிதோறும், முதற் சீரில் வரும்.

"கண்ணாவா ரேனுமுனைக்கைதொழாராயினந்த
மண்ணாவார் நட்பை மதியேன் பராபரமே!"
-தாயுமானார்

கண்ணாவார் - மண்ணாவார் இரண்டும் எதுகைகள்.

ஆங்கில, சிங்களக் கவிதைகளில் எதுகை அடியின் இறுதியில் வரும்; அதிலும் கடைசிச் சீரில் தான் வரும்.

"Twinkle twinkle little star
How I wonder what you are
Up above the world so high
Like a diamond in the sky"

என்ற பிள்ளைப்பாட்டில் star - are, high sky என்பன எதுகைகள்.

பிற்காலத் தமிழ்க் கவிதையில் - குறிப்பாக இசைப்பாக்களில் - அடிகளின் இறுதியிலும் எதுகைகளை வைக்கும் போக்கு வந்துள்ளமையைக் காணலாம்:

"வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்...
ஆடுகழை ஈனுமணி கோடிவெயில் எறிக்கும்
அம்புலியைக் கவழமென்று துய்பி வழிமறிக்கும்..."
-குற்றாலக் குறவஞ்சி

ஓசை நுட்பத்தைப் பேணுவதில் நிகரற்றவர் பாரதிதாசன். திரைப்படம் ஒன்றில் வந்த அவர் பாடல் இது:-

"ஓடு பிளந்த செம் மாதுளை போல் முகத்தில்
உள்ளம் விளைத்த நகை மின்னவும் - கா(து)
ஓரத்து வண்டுவிழி ஓடை மலர் முகத்தில்
ஓடியென் உளங் கவர்ந்து தின்னவும்
காடு சிலிர்கும்படி மேலாடு முன்றானை
காற்றோடு காற்றாகப் பின்னவும்
காதற் கரும்பு ஒன்று காலில் சிலம்பணிந்து
கடிதில் இடை துவள ஆடியதோ என்னவும் -
ஆடவந்தாள் என்னோ டாடவந்தாள்
மகிழ்ந்தா டவந்தாள்..."

சுருக்கங் கருதி ஒரு சரணத்தை மட்டும் மேலே தந்திருக்கிறேன். "மின்னவும் - தின்னவும் - பின்னவும் - என்னவும்" என எதுகைகளை அமைத்து செவியில் தேனைப் பொழிகிறார் பாரதிதாசன்.

இதற்கும் மேலே போய் ஓரடிக்குள்ளேயே எதுகைகளை அமைக்கும் வித்தாரம் அருணகிரிக்குக் கை வந்தது:

"முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்துக் கொரு வித்துக் குருபர..."

ஓர் அடி கூட இல்லை. பாதி அடி தான். அதற்குள் ஆறு எதுகைகள். ஈறுகளை நோக்கினால் "திருநகை சரவண - குருபர" என இன்னோர் அடுக்கு. இது போல அருணகிரியைத் தவிர வேறு யாரால் முடியும்!

கவிஞர்கள் ஏதோ யாந்திரிகமாக எதுகை மோனைகளை அடுக்குகிறார்கள் என்பதில்லை. பொருளுக்கு - வெளிப்படும் உணர்ச்சிக்கு - பொருத்தமான ஓசையை நுட்பமாகத் தேர்ந்தெடுப்பர். சூர்ப்பனகை தன்னை ஓர் அழகியாக உருமாற்றிக் கொண்டு வருகிறாள்: அவள் வருகையை வருணிக்கிறான் கம்பன்:

"பஞ்சியொளிர் விஞ்சு குளிர் பல்லவ மனுங்க
செஞ்செவிய கஞ்ச நிமிர் சீறடியளாகி
அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சியென வஞ்சமகள் வந்தாள்"

ஞ், ன், ங், ந் ஆகிய மெல்லின ஒலிகளைப் பெய்து செவிக்கின்பம் தருகிறான் கம்பன்.

இராமன் வனம் போய் விட்டான். கங்கைக் கரையில் குகனைச் சந்தித்து அவனோடு நட்புப் பூண்டுள்ள நிலையில், இராமனை மீண்டும் அயோத்திக்கு அழைத்து வரும் நோக்குடன் பரதன் குடிமக்களோடு அண்ணனை நாடிப் போகின்றான். பரதன் படையெடுத்து வருவதாகத் தவறாக எண்ணிய குகன் கோபப்படுகிறான்:

"ஆடு கொடிப்படை சாடியறத்தவ ரேயாள
வேடு கொடத்தது பாரெனு மிப்புகழ் மேவீரோ
நாடு கொடுத்தவென் நாயகனுக்கிவர் நாமாளும்
காடு கொடுக்கில ராகியெடுத்தது காணீரோ!"

கோபாவேசமாய்ப் பேசும் பேச்சுக்கு ஏற்ற வல்லின ஓசையாகிய "ட"கரம் பத்துச் சீர்களில் அமைக்கப்பட்டிருப்பது பொருத்தமாய் இருக்கிறதல்லவா?

ஒரே எழுத்து வரவேண்டும் என்ற விதி நெகிழ்த்தப்படுவதுமுண்டு: "வேயுறு மாசறு - ஞாயிறு - ஆசறு" என்ற எதுகைகள் சம்பந்தர் தேவாரத்தில் வருகின்றன. வல்லினத்தோடு இடையினம் வரலாம் என யாப்பிலக்கணம் விதிவிலக்களிக்கிறது. எனவே "ச"கரத்துக்கு "ய"கரம் எதுகையாயிற்று.

இது போலவே மோனைக்கும் விதிவிலக்குகள் உள. ச - த, ம - வ, ஞ - ந என்ற இணைகள் மோனைகளாக வரலாம்.

"தீடம் படைத்த கன்னெஞ்சும் தீடுக்கிட்டு
நடுநடுங்கிச் சிதறிப் போக
மடம் படைத்த ஒரு பாவிவஞ்சனையால்
காந்திமகான் மடியச்சுட்டான்..."
-(கவிமணி)

"ஞான மென்பதோர் சொல்லின் பொருளாம்
நல்ல பாரத நாட்டிடை வந்தீர்!
-பாரதி

இவை எல்லாம் உச்சரிப்பை ஒலியியலை - அடிப்படையாகக் கொண்டவை. மொழியியற் கோட்பாடுகளுக்கு அமைவானவை.



போதி மரங்கள்

மரங்கள்
பூமித்தாயின் வரங்கள்
பூமாதேவியின் மேனியின் மீது
செறிந்து முளைத்த
மச்சங்கள்

உலகமாதாவின்
உன்னதப்பொருட்கள்
பிரபஞ்ச உருண்டையின்
பிரதியீடுகள்

பூமித்தாயின் மீது
கடவுள் வரைந்த சித்திரங்கள்
ஒவ்வொரு மரமும்
மனிதனை விட
உயர்ந்த உயிர்கொண்ட
பொக்கிஷங்கள்

இலைகளின் இடைவெளியில்
தென்றல் உட்காரும்.
பூக்கள் அருந்தியதில்
அதன் உதட்டில் கசிந்து ஒழுகும்
பனித்துளி நீர்

நம்பிறப்பு முதல்
இறப்பு வரை
தன் கையேந்தி கொள்வது
மரங்கள் தான்

கோயிலில்லா ஊரில்
குடியிருக்காதே என்றார்கள்
மரங்களில்லா ஊரிலும்
குடியிருக்காதே என்கிறேன்.

மரங்களுக்கிடையே
எதிரிகள் இல்லை
நல்ல மரம் கெட்ட மரமென்று
பிரித்துப் பார்த்தது
மனிதன் தான்

மனிதா உன்போன்று!
மரம் மரத்தை
இழிவு படுத்தியதில்லை
இன்னொரு மரக்கிளையை
வேறொரு மரமும் உடைத்து விடுவதில்லை

காற்றை, வெயிலை
மழையை, மண்ணை
மரங்கள் பங்குபோட்டுக்
கொண்டதுமில்லை

குழந்தை வளர்க்கும்
ஒரு தாயின் கருணையோடு
மரமொன்று வளர்த்துப்பார்

ஒரு நல்ல மனிதன்
அறிவுரையை விட
ஒரு மரத்தடி நிழலின்
அரவணைப்புப் போதும்
அறிஞன் தரா ஞானம்
மரம் தரும் உனக்கு!

– செ.மோகன்ராஜ் –



திருவிழாவும் அடியார்களும்

திருவிழாக்களுக்கு பஞ்சமில்லை
வீதிகள் செப்பனிடப்பட்டு
தோரணங்கள் தொங்கும்;
"காரணமின்றித் தோரணம் ஆடாது"
அதிகாலை முதலே ஒலிபெருக்கி
அலறத்தொடங்கும்;
பூசைக்கான திரவியங்கள், சாத்துப்படி
அன்னதானங்கள், மேளதாளங்கள்
இன்னோரன்ன பிறவும்...

இப்போதெல்லாம் "மவுசு"
இன்னிசைக் "கச்சேரி"களுக்காகத்தான்!
புல்லாங்குழல், வீணை, மிருதங்கம், பரதம்
என கலை வளர்ந்தது
அது ஒரு காலம்!!
நாடகங்கள் அன்றும் இன்றும்
"நாளொரு மேனியும்
பொழுதொரு வண்ணமுமாய்"
அதோ "தேவி"யும்
மீண்டு(ம்) வருகின்றாளே!

"உயர்ந்த "மதி"லால்
எட்டிப்பார்க்கிறார்கள்;
உலகத்தின்
காவலுக்காகத்தான்(?)
கழுகும் தாழ்வாகப் பறக்கிறது!
பெருமழையை நினைந்து "மயில்"
தோகை விரித்தாடுகின்றது!!
தொட்டில் பழகத்தினால் போலும் – அந்த
"தொப்புள் கொடிக்கதையை"
இன்னும் சொல்லியபடி
தெய்வங்களே கைவிட்ட பின்னும்
"தெய்வப் பட்சிகளை" நம்புகின்றோம்!
ஒளிமயமான எதிர்காலத்திற்காம்
முன்னாள் சேனாதிபதி – கையிலே
தீப்பந்தம் ஏந்தியபடி;
யானைப் பாகனோ
தீராத அச்சத்தில்.
"கூத்து" மறுபடியும் ஆரம்பம்;
"கதிரை"ப் பூசைதான் நடைபெறாதே;
காற்றடிக்கும் பக்கம் "மரம்" சாயும் தானே!
மதில் மேல் இன்னமும் சேவல்;
மக்களோ மண்ணுக்குள்ளே!!
"மணி" ஓங்கி ஒலிக்கிறது;
"சங்கும்" முழங்குகிறது;
"திரை" மட்டும்
விலகப்போவதில்லை!
திருவிழாக்களின் போது மட்டுமே
"வீட்டுக்காரரை" தரிசிக்கும் பாக்கியம்!!
"வீடு" என்றால் மோட்சமோ?!
பூசை முடிந்துவிட்டது;
கரகோஷம், விபூதிப்பிரசாதம்
"வெற்றிலை", பாக்கு, பூ, பழம்
கண்களில் ஒற்றிக்கொள்வோம்

கானகத்தின்
காரிருளில்
பாதையைத்
தொலைத்து விட்டோம்;
ஓ... என் இன சனமே.

– கமலசுதர்சன் –

சுபத்திரன் கவிதைகளின் சமூக விடுதலைக் கருத்துத் தளம்

அ.பௌநந்தி



மட்டக்களப்பில் வாழ்ந்த பல இலக்கியகாரரிடம் முற்போக்குச் சிந்தனைகளை விதைத்த, மார்க்சியக் கருத்துக்களைப் பரப்பிய கிருஷ்ணன் குட்டி என்பவரே சுபத்திரனுக்கும் ஆதர்ஷ்ய புருஷன். மார்க்சிய சித்தாந்தங்களை அறிந்து கொண்டு அதன்பால் ஈர்க்கப்பட்ட சுபத்திரன் தன்னை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைத்துக் கொண்டு சமூக அடக்குமுறைகளுக்கு எதிராகத் தொடர்ந்து போராடினார்.

சுபத்திரன், உணர்ச்சிமிக்க கவிஞனாக, சமுதாய ஏற்றத்தாழ்வைக் கண்டு பொறுத்துக்கொள்ள முடியாத போர்க்குணமுள்ளவனாக, கொள்கைப் பற்றாளனாக இலக்கிய உலகில் தன்னை அடையாளப் படுத்திக் கொண்டவர். 1935.04.16 அன்று மட்டக் களப்பில் பிறந்த சுபத்திரனது இயற்பெயர் கந்தையா தங்கவடிவேல். ஆசிரியராகப் பணியாற்றிய சுபத்திரன் ஒடுக்குமுறைகளிலிருந்தான சமூக விடுதலைமீது வாஞ்சை மிக்கவராக விளங்கினார். இறக்கும்வரை (1979.10.30) சமூக விடுதலைக்காக உழைத்த, போராடிய ஒருவராக அவரைத் தரிசிக்கலாம். மட்டக்களப்பில் வாழ்ந்த பல இலக்கியகாரரிடம் முற்போக்குச் சிந்தனைகளை விதைத்த, மார்க்சியக் கருத்துக்களைப் பரப்பிய கிருஷ்ணன் குட்டி என்பவரே சுபத்திரனுக்கும் ஆதர்ஷ்ய புருஷன். மார்க்சிய சித்தாந்தங்களை அறிந்து கொண்டு அதன்பால் ஈர்க்கப்பட்ட சுபத்திரன் தன்னை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைத்துக் கொண்டு சமூக அடக்குமுறைகளுக்கு எதிராகத் தொடர்ந்து போராடினார். குறிப்பாக, சாதிய அடக்குமுறைகளுக்கு எதிராகக் குரல்கொடுத்த கவிஞர்களுள் முக்கியமானவராக அவரை இனங்காண முடிகின்றது.

தொழிலாளி, வசந்தம், குமரன் போன்ற இதழ் களில் கவிதைகளை எழுதிய சுபத்திரன் தன்னையொரு கவிஞராக மட்டுமின்றி துடிப்புள்ள போராட்ட வீரனாகவும் மாற்றிக் கொண்டார். 1960 களின் ஆரம்பத்தில் ஈழத்தில் வர்க்கப் போராட்டக் கருத்துக்கள் உச்சமடைந்தபோது அதன்பால் ஈர்க்கப்பட்டார். கவிதைகளைப் பாடியதோடு மட்டுமில்லாமல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வெகுஜனப் போராட்டங்களில் கலந்துகொண்டார். 1969 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு வெகுஜன மகாநாட்டில் சுபத்திரனுடைய முதலாவது கவிதைத் தொகுதியான "இரத்தக் கடன்" வெளியிடப் பட்டது. கம்யூனிச, மார்க்சிச சித்தாத்தங்களை தனது வாழ்வியல் தளமாக வரித்துக்கொண்ட சுபத்திரனுடைய அந்தக் கவிதைத் தொகுதியில் முழுக்க முழுக்க தீண்டாமைக்கெதிரான கவிதைகளே இடம் பெற்றிருந்தன. பின்னர் 1977 இல் கவிஞர் சாருமதி, இவருடைய கவிதைகளைத் தொகுத்து பூவரசுகள் என்ற அமைப்பின் சார்பில் "சுபத்திரன் கவிதைகள்" என்ற தொகுதியாக வெளியிட்டார். 2002 இல் "கவிஞர் சுபத்திரன் கவிதைகள்" என்ற தொகுப்பை, தேசியகலை

இலக்கியப் பேரவை, சி.மௌனகுரு அவர்களைத் தொகுப்பாசிரியராகக் கொண்டு வெளியிட்டது.

ஆரம்காலத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியோடு சேர்ந்து தீவிரமாக உழைத்த சுபத்திரன் பின்னர், அதற்குள் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக அதிலிருந்து விலகி கம்யூனிஸ்ட் கட்சியுடன் தன்னை இணைத்துக் கொண்டார். 1965 இல் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் எழுந்த கொள்கைப் போராட்டத்தில் தன்னை சீன ஆதரவு கொள்கை கொண்டவனாக அடையாளப்படுத்தினார். அதற்காகவே உழைத்தார். சாதி, இனம், மொழி என்று எந்த அடிப்படையிலேனும் ஒடுக்கப்படுகின்ற மக்களின் பக்கம் நின்று அவர் களின் விடுதலைக்காகக் குரல்கொடுக்கும் வீரத் தனத்தை அவரது கவிதைகளில் காணலாம். உணர்ச்சி மிக்க கொள்கைப் பற்றாளனாக விளங்கிய சுபத்திரன் தனது கொள்கைகளுக்காகப் பிறருடன் முரண்பட்டுக் கொண்டார். அதன் ஒரு வெளிப்பாடாகவே அவர் தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேறியமையைக் காணமுடிகின்றது. மனித சமுதாயத்தை நேசிக்கும் பொதுவுடமைக் கொள்கையுடையவனாக வாழ்ந்தார். இதற்கு அவருடைய கவிதைகளே ஆதாரமாக அமைகின்றன.

"எல்லாம் வல்ல
மனிதனே யுன்னை
வெல்லுதற் கெந்தப்
பிரபஞ்சத் துள்ளும்
எதுவுமே யில்லை
எழு! எழு! இன்றே
மாவோ தலைமையில்
அணிவகுக்கின்ற
அணியில் நில்லு"

சுபத்திரன் எழுதிய இவ்வாறான கவிதைகளே அவரைக் கட்சிப் பிரசாரம் செய்யும் கவிஞர் என்ற விமர்சனத்துள் தள்ளியது. ஆனால், அதற்கும் அப்பால் அவர் சமூக விடுதலையை நேசிக்கின்ற அந்த விடுதலைக்காக ஆத்மார்த்தமாகப் போராடத் துடிக் கின்ற ஒரு கவிஞனாக காணப்படுகின்றார். அகிம்சா வழியை மட்டுமின்றி தேவையானபோது ஆயுதப் போராட்டத்தையும் ஆதரிக்கின்றார். சமூகத்தில் நடை பெறுகின்ற அடக்குமுறைகளைக் கண்டு பொறுக்க முடியாத உணர்ச்சிக் கொந்தளிப்பே அவரது கவிதை களின் பிரவாகம்.

"விறுவிறுக்கும் என்கையால் பேனா தூக்கி
விறலொலிக்கும் கவி மட்டும் எழுதிவிட்டுக்
குறுமதியார் செய்கின்ற கூத்தைச் சும்மா
குரங்காட்டம் பார்ப்பதைப்போல் பார்க்க
மாட்டேன்

அறுஅறுஎன் றெழுகின்ற அனல் படைக்குள்
அணுவெடித்து எழுகின்ற சக்தியாக
மறுதீர்க்கும் பலமாகத் துவக்கைத் தூக்கி
மதமாக நான் செல்வேன் மறம் மேலானை
உலகத்தில் எங்கேனும் ஒரு புறத்தில்
உழைக்கின்ற ஒரு மனிதன் அல்லலுற்றால்
நிலத்தினிலே வாழ்கின்ற தொழிலாளர்கள்
நெஞ்சத்தில் மறங்கொண்டு பொங்க வேண்டும்
பலத்தாலே நாம் வளர்ந்து பெருத்து நின்றும்
பணப்பேய்க்குப் பணிவதென்றால்
அர்த்தமுண்டோ
பலத்தாலே பாரெல்லாம் வென்று இங்கு
பொதுவுடைமைப் பணிசெய்ய
உறுதிகொள்வோம்"

என்ற கவிதையில் உழைக்கும் தொழிலாளரை உலகப் பொதுவில் நேசிக்கின்ற கவிஞரது கொள்கைப் போக்கை உணர முடிகின்றது. அகிம்சை வழியில் சென்று எதனையும் சாதிக்க முடியாது என்று எண்ணிக் கொண்ட கவிஞர் ஆயுதப் போராட்டத்தை ஆதரிக்கும் கொள்கையுடையவராக வெளிப்படுகின்றார். லெனின், மார்க்ஸ், மாவோ, ஸ்டாலின் போன்ற விடுதலை வீரர் களின் பொதுவுடமைக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்ட கவிஞர் தனது கொள்கையின் அடிநாதமாக அவற்றையே கொண்டிருந்தார். திரிபுவாதம் பேசும் மனிதர்களை ஒதுக்கித் தள்ளி உழைக்கும் மக்களின் விடுதலை வாழ்வை வேண்டிநின்றார். சுரண்டலுக்கெதிரான சக்தியாக உழைக்கும் வர்க்கம் உருப்பெற வேண்டு மென்ற உந்தலை கவிதைகளில் வெளிப்படுத்தினார். மார்க்ஸிசத்தை மற வழியாகவே கண்டார்.

"மாக்ஸ் கண்ட தத்துவத்தை
மேடையேற்றி
ஆக்கமெனும் அணிகலனால்
அழகுசெய்து
வாக்கொளியால் திரிபுக்கு
வெடிகள் வைத்து
போக்கற்ற ஏழைகளைப்
பேணிக்காத்து
தூக்கத்தில் இருந்தவற்குத்
துணிவு ஊட்டி
தாக்க வந்த எதிரிகளைத்
தரையில் வீழ்த்தி
பூக்கட்டும் புதுப் புரட்சி
புதுமை நோக்கி
ஆக்கட்டும் புது உலகம்
என்று சொன்ன
தீங்கதிரே செங்கொடியே
லெனினே தூய
மாக்ஸிசமே மறமலரே
அறிவே உம்மைப்
பாக்கொண்டு போற்றுதற்குப்
பாரில் இன்று
மாஓ வின் கவிக்குத்தான்
சக்தியுண்டு"

என்று தன் கொள்கை நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றார். அவருடைய அரசியல் சார்ந்த கவிதைகளில் பெரும்பாலானவை கட்சிப் பிரசாரங்

களாக உள்ளன என்பது வெளிப்படையானது. ஆனால், அவற்றுள்ளும் அடிநிலை மக்களின் விடுதலை வேட்கை வெளிப்படுவதை மறுக்க முடியாது. அத்தோடு பெரும்பாலான கவிதைகள் மா ஓ பற்றியவையாகவே அமைந்துள்ளன. திரிபுவாதத்தை இலங்கையில் விதைக்க எண்ணியவர்களை வீணர்களாகக் கருதி எதிர்க்கும் கவிதைகளும் காணப்படுகின்றன. பாராளுமன்றம் சென்று சமவுடைமையை நிலைநாட்ட முடியும் என்று கருதி ஏழை மக்களின் வாக்குகளை ஏய்த்துப் பெறும் அரசியல்வாதிகளால் எந்தப் பயனுமில்லை என்பதை "வோட்டுக்கு இனியிங்கே வேலையில்லை" என்ற கவிதையில் பாடுகின்றார்.

"பாராளுமன்றத்தால் பொதுமைப் பூங்கா
படைத்தின்றே காட்டுகின்றோம் பார்ப்பீர் என்று
ஊராரை ஏய்க்காதீர் உலகம் என்றும்
உம்வாதம் ஏற்காது ஐயா சற்று
நேராகச் சிந்திப்பீர் நிறைவாய் இங்கு
நாம்பெற்ற அனுபவங்கள் ஒன்றா? இரண்டா?
போராடிப் பெறுவதுதான் பொதுமைப் பூங்கா
பாரெல்லாம் பொதுமைக்கு இதுவே பாதை"

ஏகாதிபத்தியத்திடம் எங்கள் உரிமைகளை விற்று வாழ்வதற்கு வழிகாட்டும் அரசியல் போக்கர் களை வன்மையாகச் சாடுகின்றார். இந்தப் பின்னணி யில் நின்றுகொண்டு உலக அரங்கில் நடைபெற்ற விடுதலைப் போராட்டங்களையும் அவர் ஆதரித்திருக் கின்றார். வியட்நாம் போராட்டத்தை ஆதரித்து "வெற்றிக்கு ஓர்ஆலயம்" என்ற கவிதையை எழுதி யுள்ளமையை இதற்குப் பதச்சோறாகக் காட்டலாம்.

சுபத்திரனுடைய "ஆண்டவன் நீதான்" என்ற கவிதை விவசாயிகளின் கடின உழைப்பையும் வாழ்வின் வறுமையையும் எடுத்துப் பேசுவதோடு அவர்கள் விடுதலையடைய வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

"ஆளப்பிறந்த விவசாயி – இங்கு
அடங்கிக் கிடந்தாஒரு நாளில்
கூழைப் பிசைந்தான் குடிசையிலே அவன்
குறுகிக் கிடந்தான் கொள்கையிலே
.....
பண்ணை முறையில் பலநூறு வயல்
பரப்பை உழுது உழைக்கட்டும்
திண்ணை தூங்கித் திரிபவர்கள் – அதைத்
தின்ன நினைத்தால் செருப்படிதான்"

என்று சுரண்டும் வர்க்கத்துக்கு எதிராக எச்சரிக்கைக் குரலை எழுப்புகின்றார். பண்ணை முறையை நிராகரித்து உழுபவருக்கே நிலம் உரித்துடையது என்னும் முறையை மாற்றியமைக்க வேண்டும் என்றும், விவசாயிகளின் வியர்வையில் சுகம் காணும் கூட்டத்தைக் கொழுத்த வேண்டும் என்றும் குமுறுகின்றான்.

இலங்கை இனப்பிரச்சினையின் கொடுமை களையும் சுபத்திரன் கவிதைகளில் பாடியுள்ளார். 1977 இலங்கையில் பெரியதொரு இனக்கலவரம் நடைபெற்று அதனால் தமிழ் மக்கள் தமது சொத்துக் களை இழந்தனர். தலைநகரிலிருந்து தமிழர்கள் வெளியேறினர். கொடுமையாகத் தாக்கப்பட்டனர். அதன் அழிவுகளை யும் கொடுமைகளையும் மட்டுமின்றி தமிழ் மக்கள் சுதந்திரமாக விடுதலைபெற வேண்டும் என்ற தன் வேட்கையையும் வெளிப்படுத்தியுள்ளார்.

"சிங்களம் தமிழின்
உயிரையும் கற்பையும்
நிலத்திற் சிந்தி
வெறி கொண்டாடிய
பேயின் செய்திகள்
உயிர்த்து நான் எழுந்ததும்
எனக்குக் கிடைத்ததே!

காடைத் தனத்திற்
கள்கறந் தருந்தி
மனித மாமிசம்
தின்றதாய்த் தகவல்கள்
உயிர்த்து நான் எழுந்ததும்
எனக்குக் கிடைத்ததே"

என்று பாடுகின்றார். பிணந்தின்னிகளால் மக்கள் அழிக்கப்பட்ட அகோரத்தை அப்பட்டமாக வெளிப் படுத்துகின்றார்.

சுபத்திரனுடைய கவிதைகளில் உணர்ச்சிக் கொந்தளிப்பை ஏற்படுத்துபவை அவர் பாடிய சாதிய எதிர்ப்புக் கவிதைகளே ஆகும். அவ்வாறான சாதிய எதிர்ப்புக் கவிதைகள் சாதிய எதிர்ப்புப் போராட்டங்களின் போது பாடல்களாகப் பாடப்பட்டமையும் குறிப்பிடத் தக்கது. தீண்டாமை என்னும் கொடிய நோயை எதிர்த்து எரியென எழுந்தவர் சுபத்திரன். சாதி அடக்குமுறையி லிருந்து விடுதலையடைய வேண்டுமெனில் போராட்டமே ஒரேவழியென்று கருதியதோடு அந்தப் போராட்டங்களை முன்னின்று செயற்படுத்தியவர். மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணத்தில் வந்து தீண்டாமை எதிர்ப்புப் போராட்டங்களில் பங்கு பற்றியதோடு பல கவிதைகளை யும் பாடியவர். அதனால்தான் தீண்டாமை சார்ந்த அவருடைய கவிதைகள் அப்போராட்டத்தில் வைத்து "இரத்தக்கடன்" என்ற தொகுதியாக வெளியிடப்பட்டது. அவருடைய கவிதைகள் அடக்கப்பட்ட சமூதாயத்து இளைஞர்களின் விடுதலை உணர்வினைத் தூண்டின. சாதித் திமிர் பிடித்தவர்களை நோக்கி தனது கவிதைக் கணையை ஏவியவர்.

"செந்தீ" என்ற கவிதையில்,

"சாதித் திமிருடன் வாழும் தமிழனோர்
பாதித் தமிழனடா அவர்
நீதி தனக்கொரு நீதி பிறர்க்கொரு
நீதியென் றாடுதடா தமிழ்
நீதி மறந்தவர் எந்த மதத்தினிற்
சாதி படித்தனரோ அதை
மோதி யுடைப்பது தானொரு பாதையென்
றோதி எழுந்திடுவாய்"

என்று தீண்டாமை விடுதலைக்கான எழுச்சியை

இளைஞரிடம் ஏற்படுத்தினார். தாழ்த்தப் பட்ட மக்களுக்காக ஆலயங்கள் திறந்துவிடப்படாமை கண்டு உள்ளம் கொதிக்கின்றார். மதநோய் பிடித்து அலையும் மானுடர் செய்கை நீண்டநாள் நிலைக்காது என்பது அவரது கொள்கை. "நெஞ்சை நிமிர்த்திடு வாய்", "வெல்லாது வீட்டுக்குத் திரும்பானையா!" போன்ற கவிதைகளில் இக்கொள்கையின் பற்று றுதியைக் காணலாம். அமெரிக்க வெள்ளையர்கள் கறுப்பர் என்று நிறபேதம் பேசுகின்றார். ஆனால், இங்கு பிறப்பாலே இந்துவாக ஒரே சமயத்தவராக இருந்தும் தாழ்த்தப் பட்டவர் என்று கூறி கோவிலுக்குள் செல்ல விடாது தடுக் கின்றார் என்றும் இறைவனையே அவர்கள் ஆலயத் துள் சிறை வைக்கின்றார்களே என்றும் வைக்கின்றார்.

தமிழர் - சிங்களவரிடையே காணப்பட்ட முரண்பாட்டை எதிர்க்க ஒற்றுமைப்பட்ட நாம் சாதி என்ற பெயரால் வேறுபட்டு நிற்றல் பொருத்தமானதா என்ற தர்க்க ரீதியான சிந்தனையை எம்மிடம் ஏற்படுத் தும் வகையில் அவரது கவிதைகள் காணப்படுகின்றன. அதுமட்டுமின்றி பிரமாவின் பாதத்திலிருந்து சூத்திரர் தோன்றினர் என பிரசங்கம் செய்து சாதி அடையாளங் களைப் பேணும் பரப்புரையைச் செய்யும் சாதித் திமிரர்களை நோக்கி பிரமனின் பாதம் என்ன சாதி என வினவுகின்றார். சாதி அடக்குமுறைக்கு எதிரான ஒரே தீர்வாக போராட்டத்தையே கூறுகின்றார். சட்டத்தாற் கூடச் செய்ய முடியாததை போராட்டத்தால் வெல்ல முடியும் என்கின்றார்.

"சட்டத்தாற் சவப்பெட்டி
செய்து வைத்துச்
சாதியென்று சாகுமெனக்
காத்துக் கொண்டு
கொட்டாவி விட்டிருக்கக்
காலஞ் சும்மா
காலுடைந்து நிற்கின்ற
கழுதையாமோ?"

என்று வினாவுகின்றார். அவரது கவி வினாக் கள் மக்களிடத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளன. சாதிய எதிர்ப்புத் தொடர் பாக சுபத்திரன் எழுதிய கவிதைகளில் "சங்கானை மண் ணே உனக்கு வணக்கம்" என்ற கவிதை குறிப்பிடத்தக்கது. இக்கவிதையின் தலைப் பினை சிலர் "சங்கானைக்கென் வணக்கம்" என்று பயன்படுத்து கின்றனர். யாழ்ப்பாணத்திலுள்ள சங்கானைப் பிரதேசத்தில் நிச்சாமம் என்ற பகுதியில் சாதி ஏற்றத்தாழ்வுக்கு எதிராக நிகழ்ந்த பேரெழுச்சி ஒன்றினை வாழ்த்தி வரவேற்பதாக இக்கவிதை அமைந்துள்ளது. உலக அரங்கில் நடை பெறுகின்ற வர்க்கப் போராட்டத்தைப் போன்றதாகவே சாதிய விடுதலைப் போரை அவர் கருதுகின்றார். சீன விடுதலைப் புரட்சியாளர் மாஓவின் சிந்தனையிலிருந்து முகிழ்த்த விடுதலையுணர்வாக அதனைக் காண் கின்றார். சுபத்திரனது கொள்கை சீனச் சார்புக் கொள்கையாக விளங்கியதால் நிச்சாமத்தில் நடை பெற்ற எழுச்சியையும் அதே பின்னணியில் நின்று அவர் நோக்குவது தவறானதன்று.

கவிதையின் பொருள், கலைநயம் கருதி அதனை முழுமையாக நோக்கலாம்.

"சங்கானைக் கென் வணக்கம்
சரித்திரத்தில் உன் நாமம்
மங்காது, யாழகத்து
மண்ணிற் பலகாலம்
செங்குருதிக் கடல் குடித்துச்
செழித்த மதத்துக்குள்
வெங்கொடுமைச் சாக்காடாய்
வீற்றிருந்த சாதியினைச்
சங்காரம் செய்யத்
தழைத்தெழுந்து நிற்கின்ற
சங்கானைக் கென் வணக்கம்

கோயிலெனும் கோட்டைக்குள்
கொதிக்கும் கொடுமைகளை
நாயினிலும் மிக்க
நன்றிப் பெருக்கோடு
வாயிலிலே நின்று
வாழ்த்தும் பெருஞ் சாதி
நாய்கள் – வாலை
நறுக்கி... எழுந்தாய்!
சங்கையிலே நீ யானை!
சங்கானை! அந்தச்
சங்கானைக் கென் வணக்கம்

எச்சாமம் வந்து
எதிரி நுழைந்தாலும்
நிச்சாமக் கண்கள்
நெருப்பெழுந்து நீறாக்கும்.
குஞ்சுக் குடிசைக்குள்
கொலுவிருக்கும் கோபத்தை
மெச்சுகிறேன்! சங்கானை
மண்ணுள் மலர்ந்த
மற்ற வியட்நாமே உன்
குஞ்சுக் குடிசைக்குள்
கொலுவிருக்கும் கோபத்தை
மெச்சுகிறேன்! சங்கானை
மண்ணுள் மலர்ந்த
மற்ற வியட்நாமே!
எண்ணத்தில் கோடி
ஏற்றம் தருகின்றாய்
புண்ணுற்ற நெஞ்சுக்குள்
புதுமை நுழைக்கின்றாய்
கண்ணில் எதிர்காலம்
காட்டி நிலைக்கின்றாய்!
மண்ணில் வெறியை
மோதி எரிக்கின்றாய்
திண்மை எழுந்த தீயாக நிற்கின்றாய்!
உன்னை எனக்கு உறவாக்கி விட்டவனை
என்னென்பேன் என்னென்பேன்

ஐந்து பெருங்கண்டத்தும்
எழுந்துவரும் பூகம்பம்
தந்தவனாம் மாஓவின்
சிந்தனையால் உன்நாமம்
செகமெல்லாம் ஒலிக்கட்டும் செங்கொடியின் வீடே!
சிறுமை உடைத்தெறியும் சிங்கத்தின் நெஞ்சே!
செய்தேன் உனக்கு வணக்கம்!
சங்கானை மண்ணே உனக்கு வணக்கம்!"

வர்க்கப் போராட்டத்திலும் சாதி எதிர்ப்புப் போராட்டத்திலும் இன எதிர்ப்புப் போராட்டத்திலும் தன்னைத் தீவிரமாக ஈடுபடுத்திக்கொண்ட சுபத்திரன் அவற்றுக்காகத் தாக்கப்பட்ட சம்பவங்களை, "வாழும் உரிமை எங்கேயுண்டு" என்ற கவிதையில் பதிவு செய்கின்றார். மாகோச் சந்தியில் வைத்து இனத்தின் பெயராலும், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் வைத்து சாதியின் பெயராலும், கொழும்பில் வைத்து வர்க்கத்தின் பெயராலும் தாக்கப்பட்டதாகக் கூறுகின்றார்.

மலையகத்தில் சம்பள உயர்வுகோரிப் போராடியதற்காக டெவன் தோட்டத்தில் வைத்து சிவனு லெட்சுமணன் என்ற இளைஞன் சுட்டுக் கொல்லப்பட்டபோது அந்த அநியாயத்துக்கு எதிராகக் குரல் கொடுத்தவர் சுபத்திரன். "மலையினும் பெரியது சிவனுவின் மரணம்" என்ற கவிதையில் இதனைப் பதிவு செய்துள்ளார். அதேபோல "பாரதத்தாய் விழித் தெழுவாள்" என்ற கவிதையில், தமிழ் நாட்டில் வெண்மணி என்ற இடத்தில் உரிமைக்காகப் போராடிய 48 அப்பாவி மக்களை இந்திய அரசும் தமிழ் நாட்டு அரசும் கொன்றொழித்த செய்தியைப் பாடுகின்றார். இவ்விரு கவிதைகளும் முறையே, சாருமதியின் "இது அஞ்சலியல்ல ஆத்திரம்", "வெண்மணியே ரெத்தத் தால் பதிலிறு" என்ற ஆகிய இருகவிதைகளோடும் பாடுபொருளாலும் பாடப்படும் முறையாலும் ஒத்திருப் பதை அவதானிக்க முடியும்.

சுபத்திரனுடைய கவிதைகளுக்கு உணர்ச்சியே உயிர். உணர்வுகளைத் தட்டியெழுப்பிப் போராடத் தூண்டும் வார்த்தைகளைக் கோர்த்து கவிபுனையும் ஆற்றலே அவருக்குப் பின்னால் இளைஞர் பலர் ஒன்றுதிரளக் காரணமாக அமைந்தது. அவரது கவிதையின் ஓசையும் நடையும் அதற்கு ஏற்றாற்போல அமையும். "முப்படை" என்ற கவிதை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

"எலும்புப் படைதான் செம்படை அது
ஏழைக் குலத்தின் மறப்படை
எழுந்து நடந்தால் பொடிப்பொடி – இந்த
எத்தர் குலத்தின் வாயடி

வாலைப் பிடிக்கும் எலிப்படை திரிபு
வாதம் நடத்தும் சிறுபடை
கோழைக் குலத்தின் பண்படி – இதற்குக்
கொடுத்திட வேண்டும் செருப்படி

முதலாளி வர்க்கப் பணப்படை – இது
முறிந்து கிழிந்த காட்போட்படை
இதற்குக் கொடுத்திடும் மின்னடி உலக
ஏகாதிபத்தியத் தார்க்கடி"

ஓசையும் உணர்ச்சியும் அவரது கவிதைகளின் இரு முக்கிய விடயங்கள். உவமைகள், உருவகங்கள் போன்ற அணிகளைப் பயன்படுத்துவது மிகமிகக் குறைவாகவே காணப்படுகின்றது. சாதாரண மக்களும் விளங்கிக்கொள்ளக் கூடியவகையில் எளிமையான மொழியைக் கையாள்கின்றார். ஒடுக்கப்பட்ட மக்களை நோக்கித் தனது கவிதைகளைப் பாடியமையால் இந்த எளிமைத் தன்மை அவசியம் வேண்டப்படுவதாயிற்று. எதிரிகளை முன்னிறுத்திக் கேள்வி கேட்பது போலவும், விடுதலை வேண்டி நிற்கும் வீரர்களை முன்னிறுத்தி உசார்ப்படுத்துவது போலவும் அவருடைய கவிதைகள் அமைகின்றமையைக் காணலாம். அடக்குமுறைக்கு எதிராகக் குரல்கொடுத்த, போராடிய, போராட்டங்களை முன்னின்று நடத்திய சொல்வீச்சுக் கவிஞனாக சுபத்திரன் காணப்படுகின்றார். பலவேறு சவால்களையும் நெருக்கடிகளையும் முரண்பாடுகளையும் சந்தித்த போதும் இறுதிவரை தனது கொள்கையிலிருந்து விலகாது வாழ்ந்தார். அவர் தனது 44ஆவது வயதில் அகால மரணத்தைத் தழுவிக்கொண்டாலும் அவரது கவிதைகள் தமிழ்க் கவிதையுலகில் முக்கிய கணிப்பைப் பெற்றுள்ளன என்பது மறுப்பதற்கில்லை.

தீக்காய்தல்

ஒரு சொட்டுத் தீ
விழுந்தெரிந்தது லயம்

உணவுப்பொதிகளிலும்
நிவாரண உடைகளிலும்
குழந்தைகள் மகிழ்ந்திருந்தனர்

முதல் செய்திக்காகவும்
முதல் உதவிக்கெனவும்
ஊடகங்களும் தொண்டர்களும்
வரிசைகளில்

கூரைத் தகடுகளையும்
அங்கத்துவப் படிவங்களையும்
அவசர அவசரமாய் அனுப்பின காகங்கள்

இந்த முறை வாக்கை
எமக்கிருங்கள்
இனி தீயெரியாதென்றன கட்சிகள்

ஒரு முதியவர் சலித்துக்கொண்டார்
எரிந்தாவது தொலையட்டும்
லயங்கள்

– மு.கீர்த்தியன்

அ.பௌநந்தி

நீலாவணன் கவிதைகளில் சமூக யதார்த்தம்

நீலாவணன் பழமையினூடாகப் புதுமை நோக்கிப் பயணிக்கின்ற கவிதைகளைப் பாடியிருக்கின்றார்.

நீலாவணன் கிழக்கிலங்கையைச் சேர்ந்தவர். அம்பாறை மாவட்டத்திலுள்ள (முன்னர் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்தது) பெரிய நீலாவணை என்ற இடத்தில் 1931.05.31 அன்று பிறந்த கேசகப்பிள்ளை சின்னத்துரை என்ற இயற்பெயர் கொண்ட நீலாவணன் ஆசிரியராகப் பணியாற்றியவர். 11.01.1975 இல் இறைவனடி சேர்ந்தார். குறுகிய காலம் வாழ்ந்தாலும் ஈழத்துத் தமிழ் கவிதை யுலகிற்கு கனதியான தனது பங்களிப்பை நல்கியுள்ளார். கே.சி.நீலாவணன், நீலா சின்னத்துரை, மானா பரணன், அம்மாச்சி ஆறுமுகம், கொழுவு துறட்டி, வேதாந்தி, எழில்காந்தன், இராமபாணம், சின்னான் கவிராயர், சங்கு சக்கரன், எறிகுண்டுக் கவிராயர் ஆகிய புனை பெயர்களில் இலக்கியங்களை ஆக்கியவர். தனது பிறந்த கிராமத்தின்மீது கொண்ட பற்றினால் நீலாவணன் என்ற பெயரையே சிறப்பாகக்கொண்டவர். அவருடைய கவிதைகளில் சமூக யதார்த்தம் வெளிப் பட்டு நிற்பதை அவதானிக்கலாம். சமூக யதார்த்தத்தை வெளிப் படுத்தக் கையாளுகின்ற மொழிநடை நீலாவணனுக்கேயுரிய தனிச் சிறப்பாகும்.

1948இல் "சுதந்திரன்" இதழில் கே.சி.நீலாவணன் என்ற புனைபெயரில் எழுதிய "பிராயச் சித்தம்" என்ற சிறுகதையுடன் இலக்கிய உலகில் பிரவேசித்தவர் நீலாவணன். அதே ஆண்டில் "தினகரன்" இதழின் "பாலர் கழகத்தில்" தனது முதலாவது கவிதையை எழுதியதாக அறியமுடிந்தாலும் அது பற்றிய மேலதிக விபரங்கள் கிடைக்கவில்லை. 1953 இல் "சுதந்திரன்" இதழில் வெளிவந்த "ஓடி வருவ தென்னேரமோ?" என்ற கவிதையே அவரை ஒரு கவிஞராக இலக்கிய உலகிற்கு அறிமுகம் செய்து வைத்தது. சிறுகதைகள், சிறுவர் கதைகள், சிறுவர் கவிதைகள், உருவகக் கதைகள், கட்டுரைகள், நகைச்சுவை உரைநடைச் சித்திரம் ஆகிய வற்றை அவர் எழுதியிருந்தாலும் நீலாவணன் என்ற பெயரை நிலைநாட்டியவை அவர் எழுதிய கவிதைகளே ஆகும்.

நீலாவணனது படைப்புக்கள்

- வழி - கவிதைத் தொகுதி
- வேளாண்மை - குறுங்காவியம்
- ஒத்திகை - கவிதைத் தொகுதி
- ஒட்டுறவு - கதைத் தொகுதி
- நீலாவணன் பாநாடகங்கள்
- நீலாவணன் காவியங்கள்

இலக்கியங்களைப் படைப்பதோடு நின்று விடாமல், இலக்கிய ஆர்வலர்களை ஒன்றிணைத்து இலக்கிய முயற்சிகளில் ஈடுபாடுகாட்டினார். கல்முனையைச் சேர்ந்த எழுத்தாளர்களை ஒன்றுதிரட்டி "கல்முனைத் தமிழ் எழுத்தாளர் சங்கம்" என்ற அமைப்பை 1961 இல் நிறுவி அதன் தலைவராகவும் பொறுப்பேற்று நடத்தினார். 1967 இல் "கல்முனை தமிழ் இலக்கியக் கழகம்" என்ற அமைப்பை ஆரம்பித்து அதனூடாக "பாடுமீன்" எனும் இலக்கிய இதழை நடத்தினார். அதன் கௌரவ ஆசிரியராகவும் அவரே

விளங்கினார். ஆனாலும், துரதிஸ்டவசமாக இரண்டு இதழ்கள் மட்டுமே வெளிவந்தன. பின்னர் அது நின்று போயிற்று.

நீலாவணனுடைய கவிதைக் கொள்கை பற்றி,

"பழமை கிடந்த மனதுள் விழுந்து பயிராகி
செழுமை நிறைந்து புதுமை குழைந்து விளைவாகி
அழகும் பொலிந்து அறமும் புதைந்து கலையாகி
இளமைக் கயிற்றில் கனவைத் தொடுதல் கவியாகும்"

என்று கூறுகின்றார். நீலாவணன் பழமையினூடாகப் புதுமை நோக்கிப் பயணிக்கின்ற கவிதைகளைப் பாடியிருக்கின்றார். அவர் கவிதையெழுதத் தொடங்கிய ஆரம்பகாலத்தில் யாப்பு இலக்கணத்தோடு எழுதி அடிகளை மாற்றி மாற்றி இட்டு எழுதினார். பட்டம், புதிர், எட்டாதிரு, பள்ளங்கள் போன்ற கவிதைகள் அவருக்கிருந்த யாப்பிலக்கண அறிவை வெளிப்தபடுத்தி நிற்கின்றன. மட்டக்களப்புப் பிரதேசத்திற்குரிய சொற்களை கவிதையில் அழகுறக் கையாண்டு வாசகர் மனதில் அதிர்வை ஏற்படுத்தியவர் நீலாவணன். சந்தம் அவரது கவிதைகளில் அழகுறச் சந்திக்கும். புதுமை நாட்டமுடைய பல கவிதைகளை எழுதியிருந்தாலும் அவருடைய கவிதை களில் ஆன்மீக பற்று வெளிப்படுவதையும் காணலாம்.

தமிழ் மீது தான் கொண்ட பற்றினை நீலாவணன் "பிறப்பு" என்ற கவிதையில்,

"பச்சைப் பசுந்தமிழில் பாடுவதும் நம்குழவி
கொச்சை மழலை குழைவதினும் பிச்சையிட்டு
ஆண்டான் அடிமையினை அட்டியின்றித் திட்டுதலும்
வேண்டும்! தமிழாயின் வேண்டுமடா!

என்று பாடியுள்ளமை இங்கு நோக்கத்தக்கது. திட்டுவது துன்பத்தைக் கொடுத்தாலும் அது தமிழில் திட்டும்போது அழகாகவே இருக்கும் என்று கூறுவது தமிழின்மீது அவர் கொண்ட அதீத காதலையே வெளிப்படுத்துகின்றது.

நீலாவணன் "உறவு" என்ற கவிதையில் போலி உறவின் தோற்றத்தைத் துகிலுரித்துக் காட்டுகின்றார். வறுமைப்படும்போது உதவாத, திரும்பிப் பாராத போலி உறவுகள் ஒருவன் இறந்த பின்னர் ஒப்புக்கு காட்டும் உறவில் எந்த ஒட்டுறவும் இல்லை என்பதை கிண்டலும் கேலியுமாகப் பாடியுள்ளார்.

"மரணித்துப் போன எங்கள்
மானாகப் போடிப் பெரியப்பா,
நீர் ஓர் பெரிய மனிதர்தான்!
பெட்டி இழைத்தும்,
பிரம்பு பின்னல் வேலை செய்தும்,
வட்டிக் குளத்து வரால் மீன் பிடிக்கக்
கரப்புக்களும் கட்டி விற்றுக்
காலத்தை ஓட்டும் ஒரு கிழவன்,
என்றே நம் ஊரறியும்
நேற்றுவரை.

பத்துநாள் தொட்டுப்
பகலிரவாய் பாய் மீதில்,
வைத்தியமே இன்றி,
வயிற்றாலடியோடும்,
சத்தி எடுத்தும், வாய்
சன்னீ பிசத்தியும்,
செத்தும் பிழைத்தும் கிடந்தீர்
சுவரோரம்...."

என்று மானாகப் போடிப் பெரியப்பா பலவேலைகளைச் செய்து தன் கடின உழைப்பால் வாழ்க்கையை ஓட்டினார் என்ற துயரத்தைப் பாடுகின்றார். ஒன்பது பிள்ளைகளைப் பெற்றும் ஊரெல்லாம் உறவிருந்தும் அவரது நோயிலும் துன்பத்திலும் ஒருவரும் பங்கெடுக்கவில்லை. அவரது மனைவி வள்ளி மட்டுமே அருகிருந்து பணிவிடை செய்தாள். அவர் இறந்துவிட,

"தந்தி கிடைத்து
மிக நொந்துபட்டு வந்தார்கள்.
அந்தி வரைக்கும் ஏதும்
ஆகாரம் தின்னாமல் குந்தியிருந்து,
குளறி அழுதார்கள்!
ஐந்தாறு காரில்
இரவே ஊர்போய்விட்டார்கள்!"

என்று நீளுகின்றது அந்தக் கவிதை. இங்கும் நீலாவணனின் கிண்டல் வெளிப்படுவதை நயக்கலாம். மிக நொந்துபட்டு வந்தார்கள் என்பது அவர் இறந்ததால் ஏற்பட்ட துன்பமல்ல. அவரது மரணச் சடங்கிற்குச் செல்லவேண்டி ஏற்பட்டுவிட்டதே என்பதால் ஏற்பட்ட வருத்தமேயாகும். அங்கு உண்பதற்கு உணவேதும் இல்லை. அவர் வீட்டில் அத்துணை வறுமை. தங்கியிருந்து அழுதால் உடன் போக முடியாது என்பதால் "குந்தியிருந்து குளறி அழுதார்கள்" என்று கூறியுள்ளார். "ஐந்தாறு காரில் இரவே ஊர்போய் விட்டார்கள்" என்பதன் மூலம் இதனை உணர்ந்து கொள்ள முடியும். இங்கு பிரதேசம் சார்ந்த பேச்சோசைச் சொற்களை மிகச் சிறப்பாகக் கையாண்டுள்ளார்.

நீலாவணன் வாத்தியாராக வேலை செய்தவர். அது அவருக்குக் கற்பித்துக்கொடுத்த பாடங்கள் அவரது கவிதைகளில் வெளிப்பட்டு நிற்கின்றன. அந்தவகையில், "இன்று உனக்கு சம்பளமா?", "பாவம் வாத்தியார்" ஆகிய கவிதைகள் குறிப்பிடத்தக்கன.

ஓர் ஏழைச் சட்டம்பியாருக்கு வருமானம் போதாது. அவர் சம்பளத்தை எடுத்துக்கொண்டு கடற் கரைக்குச் செல்கின்றார். கடல் இரைகின்றது. அவருடைய மனமும் இரைகின்றது. தன்னுணர்ச்சிகளை கடல்மேல் ஏற்றிப்பாடுகின்றார்.

"ஏன் கடலே இரைகின்றாய்
இன்றுனக்கும் சம்பளமா? ஏழை வீட்டில்
தான் நீயும் பிறந்தனையா?
தமிழா நீ கற்றதுவும்
தகாத வார்த்தை!
தேன்கடலாய் ஓடுமெங்கள்
திருநாட்டில் பிறந்த பயன்
தெரிகின்றாயோ?
வான் தந்த வளமிலையோ
வயல் தந்த நிதியிலையோ

வாடாதே நீ...
காற்செருப்புக் கழன்றதுவா?
கட்டுதற்கு இடமிலையா
கால் நூற்றாண்டாய்
தோற்பொருத்தித் தோற்பொருத்தி
துணையாக உழைத்த அவை
தொழிலில் ஓய்ந்தால்
போற்றுதற்கோர் பொதுக்கூட்டம்
போட்டதிலே பொன்னாடை
போர்த்து மேலும்
பாற்சோறும் பட்சணமும்
படைப்பதற்கு நின்னிடத்தே
பணமா இல்லை?....”

என்று தமிழ் வாத்தியாராகிய ஒருவர் படும் துன்பத்தைப் பாடும் அதேவேளை சமூகத்தில் நடக்கின்ற போலித்தனங்களையும் போட்டுடைக்கின்றார். காசு இருந்தால் காற்செருப்புக்குக்கூட சொந்தச் செலவில் விழாக் கொண்டாடும் வீணர்கள் இருக்கின்றார்கள் என்பதை கிண்டலோடு கூறுவது நீலாவணனுக்கே உரித்தான கலை. தொடர்ந்தும் அக்கவிதையில்,

“இபோசா பஸ்களிலே
ஏறுகையில், வியர்வையினால்
ஏழைதோழன்,
யப்பானார் இறக்குகின்ற
புறாமார்க் மல்வேட்டி
அடடா ‘டப்டப்’
‘சப்’பென்று மூச்சுவிட்டு
சல்லடையாய் மாறிற்றோ
சனத்துக் குள்ளே
இப்படியாய் அவமானம்
ஏதேனும் வந்ததுவா?
இரைகின்றாய் நீ!”

என்று வறுமையின் பலவடிவங்களையும் இக்கவிதையூடாக வெளிப்படுத்துகின்றார். அவருடைய “பாவம் வாத்தியார்” கவிதை, சமூக அக்கறையுடைய ஆசிரியர் ஒருவர், வேலை பார்க்கச் சென்ற இடத்தில் கடமையுணர்வோடு, சமூக அக்கறையோடு வேலை செய்ய எத்தணித்து அதனால் நிகழ்ந்த அவலத்தைப் பாடுகின்றது. இக்கவிதை வழிப்போக்கன் ஒருவன் ஆசிரியருக்குக் கூறுவதாகப் பாடப்பட்டுள்ளது.

“வாழத் தெரியாமல் வம்புகளில் போய்மாட்டும்
ஏழைப் புலவர் பெருமானே, என்ன இது!
கையிலே மூட்டை முடிச்சும் கவலைகளோர்
பையிலுமாய் நிற்கின்றீர்! ‘பஸ்சுக்கோ?’ நீண்டதொலை
தூரப் பயணம்போல்! தொந்தரவே! எங்களது
ஊரார் உமையிந்த ஊரைவிட்டே ஓட்டுதற்காய்...
கல்முனைக்குப் போயலைந்து காசும் கொடுத்து ‘ரைப்பிங்
செல்லையா’ அண்ணரது சிந்தனையைப் போட்டுடைத்து

வெல்ல முடியாது சோடித்த பிட்டிசத்தில்
சொல்ல வெட்கமே, எனினும் சொல்லாமலும் போக
ஒண்ணாதிருக்கிறது! ஓம் அந்தப் பிட்டிசத்தில்
உன்னாணை நானுமொரு கையொப்பம் போட்டதுண்மை!
ஏனென்பீர்? ஏதும் எனக்கோ தெரியாது...!
நானுமிந்த ஊரில்நெடு நாளாக வாழ்கின்றவன்.
போடென்றார் போட்டேன்!
நான்போடாது விட்டிருந்தால் –
ஓடென் றுமைப்போல் ஊரைவிட்டே ஓட்டிவிட்டால்...?

என்று நீள்கின்றது அந்தக் கவிதை. மீண்டும் மீண்டும் வாசிக்கத் தூண்டும் அந்தக் கவிதை ஆளும் வர்க்கத்தின் “அட்டகாசங்களை”ப் பட்டியற்படுத்துகின்றது. வாத்தியாருக்கு வழிப்போக்கன் தான் கிராமத்தில் பெற்றுக்கொண்ட அநுபவங்களை கூறி வழிப்படுத்துவதாகப் பாடப்பட்டுள்ளது.

நீலாவணனுடைய கவிதைகளில் காதல் கவிதைகள் சிறப்பாக அமைந்திருப்பதைக் காணலாம். அந்தவகையில் அவருடைய போகின்றேன் என்றோ சொன்னாய்?, காதல், குமையும் குயில், பொன்னி வயற்புறம் போவதேன், கதிர் பொறுக்குகின்றாள் போன்ற கவிதைகள் குறிப்பிடத்தக்கன. அவருடைய “போகின்றேன் என்றோ சொன்னாய்?” கவிதை அழகிய மொழியில் செதுக்கப்பட்ட சித்திரமாக காதல் உணர்வை அழகுற வெளிப்படுத்தி நிற்கின்றது.

“மண்ணிடை இரவுக் கன்னியின் ஆட்சி
இன்னும் தேயவில்லை – இளம்
தென்னையின் ஓலை பண்ணிய இன்பப்
பாட்டுக்கள் ஓயவில்லை
என்கடை வாயில் உன்னிதழ் ஊட்டிய
ஈரம் காயவில்லை எழில்
மின்னிடும் என்றன் மென்முலை தானும்
பின்னே சாயவில்லை!.....
.....
வேம்புக் குமரி தென்றல் காற்றின்
வெறியைச் சாடுகிறாள் – அந்த
வீம்புக் காரன் விரகப் பேயோ
டவளைக் கூடுகின்றான்!
தேம்பிக் கொண்டே ஆடையை அள்ளி
மார்பை மூடுகின்றாள் – உன்னைத்
தேடித் தேடி ஆழிக் கரையில்
ஒருபெண் வாடுகின்றாள்!”

நீலாவணன் சமூகப் பிரச்சினைகளைக் கிண்டலும் கேலியுமாகப் பாடுவது மட்டுமின்றி கிராமியச் சொற்களையும் அதிகம் கையாண்டு பாடும் கலை கைவரப் பெற்றவராகவும் காணப்படுகின்றார். கிழக்கிலங்கையில் ஆளுமைமிக்க இலக்கியப் படைப்பாளிகளை உருவாக்குவதிலும் அவருடைய பங்கு குறிப்பிடத்தக்கதாகக் காணப்பட்டுள்ளது.

எளிமையான உவமைகளையும் உருவகங்களையும் சிறப்பாகக் கையாளும் பண்பையும் அவருடைய கவிதைகளினூடாகத் தரிசிக்கலாம். எனவே, இலங்கைத் தமிழ்க் கவிதை வரலாற்றில் நீலாவணனுடைய பெயரும் நின்று நிலைக்கும் என்று உறுதிபடக் கூறலாம்.





த.கலாமணி

ஜப்பானிய ஹைக்கூ கவிதை மரபை விளங்கிக்கொள்ளல்

மொழி எவ்வளவுக்குப் பழமையானதோ கவிதையும் அவ்வளவுக்குப் பழமையானது என்பர். பொதுவாக, "தெளிவான ஓசை நயமும் பெரும்பாலும் இறுதியில் ஒலி இயைபும் கொண்ட அடிகளால் கட்டமைக்கப்பட்ட எழுத்துத் தொகுதியே கவிதை" என்ற பழைய மரபுவழிச் சிந்தனையிலிருந்து விடுபட்டு, புதுக்கவிதையும் கவிதையே என்ற நிறுவுதல் இன்று நின்று நிலைத்துவிட்டது. எனவே, மரபுக் கவிதை, புதுக்கவிதை என்ற வரையறைகளுக்கு அப்பால் கவிதை எதனைச் சொல்ல விழைகின்றது என்பதே கவிதையின் தனித்துவமாகும். வெறும் ஓசை நயம் மாத்திரம் கொண்ட பாடல்கள் கவிதைகள் ஆகா.

கவிதைகள் காலத்தின் உயிரோட்டமான பதிவுகள் ஆகும். வாழ்வியல் அனுபவங்கைளையும் தரிசனங்களையும் கவிஞன் தனது கவிதைகளில் பதிவு செய்கின்றான். எனவே, கவிஞனின் எண்ணங்களையும் உணர்வுகளையும் பட்டறிவுத் தெறிப்புச் செய்யும் கண்ணாடியாக கவிதை விளங்குகிறது. ஆயின், உண்மையில் கவிதை என்பது ஒரு தரிசன அனுபவத்தை வழங்க வேண்டும். அந்த அனுபவத்தை சொற் சிக்கனத்துடன் புதுமைப் புனைவாக மொழிதலே கவிதையின் பண்பாகும். நல்ல கவிதை நம்பிக்கை ஊட்ட வேண்டும்.

தமிழ்மொழி இரண்டாயிரம் ஆண்டுக்கும் மேற்பட்ட கவிதை வரலாற்றைக் கொண்டது. நீண்ட இக்கவிதை வரலாற்றினூடே, பல மாற்றங்கனைத் தமிழ்க் கவிதை கண்டு வந்துள்ளது. புதுக்கவிதையா மரபுக் கவிதையா என்ற பாகுபாடு யாப்புக் கொண்டு தீர்மானிக்கப் படுவது. யாப்புடன் எழுதப்படும் கவிதைகளை மரபுக் கவிதைள் என்றும் யாப்பில்லாமல் எழுதும் கவிதைகளை புதுக்கவிதைகள் என்றும் பாகுபடுத்தினும், கவிதை என்பது எப்போதும் கவிதைப் பண்பு களுடன் கூடியதாக கவிதையாகவே இருக்கவேண்டும். சொற்களைக் கொண்டு 'நகாசு' வேலைகள் செய்வது மாத்திரம் கவிதையைத் தராது. காட்சிப் படிமங்களுடன் கூடிய அனுபவ தரிசனத்தை கவிதை தரவேண்டும்.

கவிதை தரும் அனுபவ தரிசனத்தைப் பெறும் வாசகன் தனது வாசகநிலை அனுபவத்தை விரிவுபடுத்திக் கொள்கின்றான். உலகு பற்றிய புரிதலில் அவன் விழிப்புணர்வு பெறுகின்றான்; மென் மேலும் தனது அனுபவங்களை ஆழ, அகலப்படுத்திக் கொள்கின்றான். இந்நிலைமையை எய்துதலில், வாசகனின் அறிகை அமைப்பு (cognitive structure) முக்கிய பங்காற்றுகின்றது

ஜப்பானிய ஹைக்கூ மரபை விளங்கிக்கொள்ளலிலும் வாசக நிலை அறிகை அமைப்பு முக்கியமானது. மூன்று வரிகளில் ஒரு வாக்கியத்தை உடைத்துப்போட்டு விட்டால் அது ஹைக்கூ கவிதை ஆகிவிடும் என்ற புரிதலுடன் சிலர் தமிழில் ஹைக்கூ கவிதைகளைப் படைக்க முன்வருவது அவர்களின் அறிகை அமைப்பின் பல யீனத்தையே காட்டுகிறது. இன்று

பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளியாகும் மூன்று வரிகள் கொண்ட கவிதைகள் "ஹைக்கூ கவிதைகள்" என்ற பெயருடனேயே அடையாளப்படுத்தப்படுகின்றன. ஆனால், ஜப்பானிய ஹைக்கூ கவிதைகளின் பண்புகளை விளங்கிகொள்கின்றபோதே இந்த அடையாளப்படுத்தலின் பொருத்தப்பாடின்மையை உணர்ந்து கொள்ள முடியும்; தமிழிலும் நல்ல ஹைக்கூ கவிதைகளைப் படைக்க முடியும்.

ஹைக்கூ கவிதை என்றால் என்ன?

ஹைக்கூ கவிதை என்பது ஜப்பானிய கவிதையின் புராதன வடிவம் ஒன்றாகும். இது மூன்று அடிகளில் முறையே 5-7-5 அசைகள் என மொத்தம் பதினேழு அசைகளைக்கொண்ட ஒரு சிறு செய்யுள் வடிவமாகும். ஆனால், இச்சிறுவடிவம் அதிக சக்தியை உட்பொதிந்துள்ளது. ஹைக்கூ கவிதையின் சிறு வடிவம் காரணமாக படிப்பதற்கு எளிமையானதாக இருந்தாலும் பொருள்கொள்ளும்போது புதிராக இருக்கிறது. ஜப்பானிய கலாசாரத்தையும் வாழ்க்கை முறையையும் நன்கு அறிந்து கொள்கின்றபோதே ஜப்பானிய ஹைக்கூ கவிதையையும் விளங்கிக்கொள்ளமுடியும்.

ஜப்பானிய ஹைக்கூ வின் சுருக்க வரலாறு

ஹைக்கூ கவிதை வளர்ச்சிக்குப் பங்காற்றியோர் பலரெனினும் முக்கியமான ஹைக்கூ கவிதைப் புலமையாளர்களாக அல்லது தேர்ச்சிமிக்கோராக நால்வரைக் குறிப்பிடுவர். பாஷோ (Basho), பூஸன் (Buson), இஸ்ஸா (Issa), ஷிகி (shiki) ஆகிய இந்நால்வரும் ஹைக்கூ கவிதை மரபின் வரலாற்று நாயகர்களாவர். இவர்கள் வாழ்ந்த காலகட்டங்கள் வெவ்வேறானவை. கவிப்பொருளின் வெளிப்பாடு குறித்து, பாஷோ, பூஸன், இஸ்ஸா, ஷிகி நால்வரும் முறையே ஆன்ம நேயக்கவி, ஓவியக்கவி, மனிதநேயக்கவி, பிரபஞ்சக்கவி என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் வளர்த்தெடுத்த இக்கவிதை வடிவம், ஜப்பானில் மாத்திரமன்றி, உலகம் பூராவும் மதிப்புப்பெற்றுள்ளது.

ஜப்பானில் கி.பி 794 முதல் கி.பி 1186 வரையான காலப்பகுதியில் 5-7-5-7-7 என்ற ஒழுங்கில் உள்ள அசைகளாலான குறுகிய, சந்தக்கவிதை மரபு காணப்பட்டது. இது வாகா (waka) என அழைக்கப்பட்டது. பின்னர் கி.பி 1186 முதல் கி.பி 1600 வரையான காலப்பகுதியில் ரெங்கா (Renga) எனும் செய்யுள் வடிவம் பிரபல்யம் பெற்றது. ரெங்கா என்பது செய்யுட் தொகுதியொன்றால் உருவாக்கப்படுவதாகும். தனித்தனியாக முறையே 5-7-5, 7-7, 5-7-5, 7-7-... அசைகள் கொண்டதான செய்யுட் பத்திகளால் இணைக்கப்பட்ட ஒர் இணைப்புடைய செய்யுள் வடிவமாக (linked verse form) ரெங்கா விளங்கியது. இதனைத்தொடர்ந்து 16 ஆம், 17 ஆம் நூற்றாண்டுகளில், "ஹைக்கை நோ ரெங்கா" (Kaikai no renga) என்ற நகைச்சுவைச் செய்யுள் வடிவம் உருவானது. இந்த ஹைக்கை நோ ரெங்கா செய்யுளின் ஒரு வடிவமே பாஷோ என்பாரது கவிதைக்கூடம் (poetic school) ஆகும். இது ஷோமன் (shomon) என அழைக்கப்பட்டது.

இணைப்புடைய செய்யுளில், அது பழைய ரெங்காவாக இருந்தாலென்ன அல்லது ஹைக்கை வடிவமாக இருந்தாலென்ன, அதன் முதலாவது பத்தியானது முழுச்செய்யுளுக்குமான பின்னணியைத் தோற்றுவிப்பதோடு முக்கியம் வாய்ந்ததாகவும் காணப்படுகிறது. இந்த முதலாவது பத்தியானது 5-7-5 அசைகளாகக் காணப்பட்டதோடு, ஹொக்கூ எனவும் அழைக்கப்பட்டது. ஏனைய பத்திகளிலிருந்து, ஹொக்கூவை வேறுபடுத்திக் காட்டுவது ஹொக்கூவிலுள்ள பருவ காலச்சொல் (kigo) ஆகும். பாஷோ இயற்றிய கவிதை வடிவம் உண்மையில் ஹொக்கூ ஆகும். ஹைக்கூ என்பது ஒரு நவீனச் சொல்லாகும் .இது ஷிகி என்பாரால் பிரபல்யப்படுத்தப்பட்டது.

ஆனால், மேற்கத்தைய புலமையாளரைப் பொறுத்தவரை நவீன ஹைக்கூ, முன்நவீன ஹொக்கூ ஆகிய இரண்டும் ஒன்றே. இவை இரண்டுமே ஹைக்கூ என்ற பெயரினாலேயே அழைக்கப்பட்டன. எனவே பாஷோ, பூஸன், இஸ்ஸா, ஷிகி ஆகிய நால்வரின் செய்யுள் வடிவங்களும் ஹைக்கூ என்ற பொதுப் பெயரினாலேயே அழைக்கப்படுகின்றன.

இவ்வகையில், ஹைக்கூ கவிதையின் மூலவராக கொள்ளப்படும் பாஷோவின் ஹைக்கூ கவிதைகள் அவற்றின் எளிமைக்காகவும் திறந்த தன்மைக்காகவும் ஆழத்திற்காகவும் மென்மைக்காகவும் ஜப்பானில் பெரிதும் மதிக்கப்பட்டன. பாஷோவின் கவிதைகளின் சிறப்புக்கு அவரது வாழ்க்கை முறையும் காரணமாகும். 1644 இல் பிறந்த பாஷோ, தாழ்நிலையிலுள்ள சமுராய் (samurai) குடும்பத்தில் ஒருவராக வளர்ந்தார். அவருடைய தந்தை காவல் பணிசெய்யும் ஒரு சமுராயாக இருந்தார். அந்நாளில் வறுமை காரணமாக, குழந்தைகளை யுத்தக் கலை பயில குருகுலத்துக்கு அனுப்புவார்கள். அவ்வாறான ஒரு பிரபுவிடம் யுத்தக்கலைபயின்ற பாஷோ, அவரிடமிருந்து கவிதைகளையும் படித்தார். இளம் பருவத்தில் கவிதைக்கூட்டங்களில் பங்கு பற்றினார். கவிதை எழுதவும் ஆரம்பித்தார். 1666 இல் அவரது நண்பன் இறந்த போது மிகவும் துன்பமுற்று, மரபார்ந்த நிலப்பிரபுத்துவ சமூகத்திலிருந்து விலகும் எண்ணம் கொண்டார். வணிக வகுப்புக்கும் சமூகங்களுக்கும் அந்நாளில் வேண்டப்படுவதாக இருந்த நகைச்சுவைச் செய்யுள் வடிவமான "ஹைக்கை நோ ரெங்கா" என்ற செய்யுள் வடிவத்திலிருந்து பெற்ற முதலாவது பத்தி அமைப்பில் தனது கவிதைகளை அமைத்துக்கொண்டு, ஆன்மிக ஆழத்தையும் அழகியல் நுட்பத்தையும் பிரதிபலிக்கின்ற தனது சொந்த அழகிலை ஹைக்கூ கவிதைகளினூடாக விருத்தி செய்து கொண்டார். அவரது இருபதாவது வயதில் முதலாவது கவிதைத் தொகுதி வெளிவந்தது. பாஷோ ஜப்பான் முழுவதும் பயணம் செய்ததோடு தொடர்ந்து ஹைக்கூ கவிதைகளை எழுதியும் விருத்திபெறச் செய்து வந்தார். 1694 இல் அவர் இறக்கும் வரை அவரின் கவிதைப்பயணம் தொடர்ந்தது.

ஹைக்கூ கவிதையின் கட்டமைப்பு விதிகள்

- கணக்காக, 17 அசைகளை மாத்திரம் பயன்

பாஷோ

படுத்தவேண்டும்.

- இந்த அசைகள் முறையே 5-7-5 என்ற ஒழுங்கில் முதல் மூன்று வரிகளிலும் அமைய வேண்டும்.

- உவமை, ஒப்புமை அணிகளையோ உருவக அணிகளையோ பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

- பருவகாலத்தைக் குறிக்கும் சொற்களைப் பயன்படுத்தவேண்டும்.

ஹைக்கூ கவிதைகளைப் படைக்க வேண்டுமாயின், கற்பனையோடும் நல்ல ஞாபகத்தோடும் ஐம்புலன்களோடு விழித்திருத்தல், மனதைத்திறந்து வைத்திருத்தல், சுற்றியிருக்கும் இயற்கையையும் தன்னிடமுள்ள இயற்கையையும் கண்டுபிடித்தல், உற்றுக் கவனித்தல், தேடுதல், கண்டுபிடித்தல் மற்றும் உருவாக்குதல், எப்போழுதும் முழுமை நோக்கி முயற்சி செய்தல், பருவகாலத்தைக் குறிக்கும் சொற்களைப் பயன் படுத்துதல் ஆகியன அவசியமானவை என ஜப்பானிய இலக்கியக் கலைக்களஞ்சியம் எடுத்துரைக்கின்றது.

பூஸன்

ஹைக்கூ கவிதைகளில் காணப்படும் பண்புகள்

ஹைக்கூ கவிதையில் இரு எளிமையான விடயப் பொருட்கள் அவற்றின் வேறுபாட்டுத் தன்மையைக் காட்டும் வகையில் முதல் இரு வரிகளிலும் வைத்து நோக்கப்படும். இந்த இரு உருப்படிவங்களும் பொதுவாக நிறுத்தற் குறியொன்றினால் வேறுபடுத்தப்பட்டிருக்கும். இவை இரண்டிற்குமிடையேயான தொடர்பினை பொறி தட்டுமாற்போல் மூன்றாவது வரி எமக்கு உணர்த்தும். இது ஹைக்கூ கவிதையின் சிறப்பான ஒரு பண்பாகும். இதனை பின்வரும் உதாரணத்தால் விளக்கலாம்:

கொந்தளிக்கும் அலைகடல் -
நீண்டு பரந்திருக்கும் ஸடோ தீவு,
சொர்க்கத்தின் ஆறு.

இதன் ஆங்கில வடிவமும் ஜப்பானிய வடிவமும் பினவருமாறு:

stormy sea
sretching out over the Sado,
Heaven's River

araumi ya
sado ni yokotau
amanogawa.

இங்கு கொந்தளிக்கும் அலைகடல், நீண்டு பரந்திருக்கும் ஸடோ தீவு ஆகிய இரண்டும் இரு வெவ்வேறான உருப் படிவங்களாகும். இவை அடுத்தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில், மூன்றாவது வரியான "சொர்க்கத்தின் ஆறு" என்பது இந்த இரு உருப்படிவங்களையும் ஏதோ ஒரு விதத்தில் தொடர்புபடுத்துவதாகும். இக்கவிதையை விளங்கிக்கொள்ள வேண்டுமெனில் கீழ்க்காணும் சித்திரத்தை நாம் நம் மனக்கண்ணில் காணவேண்டும்:

ஜப்பான் மேற்குக் கடற்கரையோரம் பாஷோ நின்று கொண்டு இரவுக்கடலைப் பார்த்துக் கொண்டி ருக்கிறார். அவரால் ஆர்ப்பரிக்கும் கடல் அலையைக் கேட்க முடிகிறது. நீண்ட மைல்களுக்கு மேலே ஸடோ தீவு படுத்திருக்கிறது. ஸடோ என்பது பலர் நாடுகடத்தப் பட்டு தனிமையை அனுபவித்து வரும் ஒரு தீவு. இந்த இரு உருப் படிவங் களையும் காணும் பாஷோ, இவை இரண்டையும் தொடர்பு படுத்த இவை இரண்டிற்கும் மேலே உள்ள, "சொர்க்கத்தின் ஆறு" என வருணிக்கப் படும் நட்சத்திர அருவியான பால்வீதியை (the Milky Way) மூன்றாவது வரியாகக் கொண்டு, தமது ஹைக்கூ கவிதையை வரைகின்றார்.

முதலில் இக்கவிதையானது கடலின் பரந்த கன்ற தன்மையினதும் குரூரத்தினதும் வியப்புடன் ஆரம்பிக்கிறது. பின்பு எமது உணர்வு நிலை துயருற்ற ஒரு தீவின் மீது குவிக்கப்படுகிறது. நாடு கடத்தப்பட்டதா லான மனவெழுச்சிப்புயலை (உணர்ச்சிகளை) இத்தீவு அடக்கிவைத்திருக்கிறது. பின்பு எமது உணர்வுநிலை

மேலே வான்வெளிக்கு இழுக்கப்படுகிறது. "சொர்க்கத் தின் ஆறு" (பால்வீதி) என்பது அடிவானிலிருந்து அடிவானுக்குச் செல்கிறது. உருவகப்படுத்தப்பட்ட இந்த ஆறு என்றும் அமைதியாக, சாந்தமாக, கடலின் கொந்தளிப்புக்கும் மனித வாழ்வுக்கும் மேலே சிறுசிறு ஒளிக்கூறுகளுடன் மின்னிக் கொண்டிருக்கின்றது. கடலலை, ஸடோதீவு என புவியிலுள்ள ஒவ்வொன்றும் தனிமையில் இருப்பதாக தோன்றினாலும். அவை யாவும் நட்சத்திரங்களின் அருவியின் கீழ் உள்ளன. அதாவது, ஆர்ப்பரிக்கும் கடலுக்கு மேலே அமைதி; இயக்க நிலைக்கு மேலே நிலைத்த தன்மை. இதுவே இயற்கை, இந்த இயற்கையை விளங்கிகொள்கின்ற போது தான் பிரபஞ்சத்தின் அற்புதம் தெளிவாகிறது.

இவ்வாறாக, ஹைக்கூ கவிதைகள் யாவுமே கவிதை வரிகளிலுள்ள சொற்களின் உண்மையான அர்த்தங்களை அறியாதவரை புதிராகவே அமையும். பொதுவாக, முதலாவது வரியில் நாம் காணும் காட்சியும் இரண்டாவது வரியில் எமது பார்வையும் (view) இணைந்து மூன்றாவது வரியில் முழுமையான ஒரு தரிசத்தைப்பெற வழிவகுக்கின்றன.

இவ்வகையில், ஹைக்கூ கவிதைகள் கவிஞனுக்கும் இயற்கைக்குமிடையே நிகழும் உணர்வு நிலை உரையாடலின் வெளிப்பாடாக அமைகின்றன. இந்த உரையாடல் இயற்கையின் கூறுகளிடையேயும் கூட ஒரு மௌன உரையாடலாக அமையலாம்.

தன்னிச்சையாக நடைபெறும் இயற்கையின் நிகழ்வுகளுக்கு ஓர் அர்த்தம் உண்டு என்பதை உணரும் "ஹைக்கூ கவிஞன்", தனது மனநிலைகளுக்கும் இயற்கை நிகழ்வுகளுக்குமிடையே ஓர் ஒப்புமையைக் கண்டு, அதன் அடிப்படையில் தனது கவிதைகளைப் படைக்கிறான். நெடுநேரம் இயற்கையோடு தியானித்து நேசித்ததன் பேறாகவே ஹைக்கூ கவிதை பிறக்கிறது. இவ்வாறாக இயற்கையைத் தியானித்து, நேசிக்கும் வாழ்வு ஹைக்கூ வாழ்க்கையாக அமைகின்றது.

ஜப்பானியர்கள் பயணம் செய்வதைத் தமது பண்பாட்டின் ஒரு முக்கிய வழக்கமாகக் கொண்டிருக் கிறார்கள். இவ்வாறு பயணம் மேற்கொள்ளும் போது இயற்கையை நேசிக்கும் பண்பு மேலோங்கும். இதன் போது கிடைக்கின்ற அனுபவ தரிசனமே ஹைக்கூ கவிதையின் பிறப்புக்குக் காரணமாகின்றது. கவிஞனுக் கும் இயற்கைக்குமிடையே ஏற்படும் இணக்கம் (harmony), கவிஞன் இயற்கை மீது வைத் திருக்கும் அனுமானமும் நம்பிக்கையும் (respect), கவிஞனுக்கு இயற்கையில் கிடைக்கும் பரிசுத்த உணர்வு (purity) கவிஞனுக்கு இயற்கையில் கிடைப்பதும் வேறெங்கும் கிடைக்காததுமான அமைதி (tranquility) ஆகிய நான்கு நிலைகளும் ஹைக்கூ கவிஞனுக்கு ஹைக்கூ வாழ்க்கைக்கு அவசிய மானவை. ஹைக்கூ கவிஞன் இவ்விதமான நான்கு நிலைகளிலிருந்து இயற்கையோடு தியானித்து, இயற்கையோடு ஒரு பரவச வாழ்வு வாழ்ந்து, அதன் பின்னரே தனது சுய உணர்வை ஒரு கலை உணர்வாக மாற்றி ஹைக்கூ கவிதையாக வெளிப்படுத்துகின்றான்

ஹைக்கூ கவிதைகளை விளங்கிக் கொள்வதில் எதிர்நோக்கப்படும் சிக்கல்கள்

ஹைக்கூ கவிதைகளை விளங்கிக்கொள்ள வேண்டுமெனில், அக்கவிதைகளில் பயன்படுத்தப்படும் சொற்களின் முழு அர்த்தம் பற்றிய தெளிவு வேண்டும். ஜப்பானிய பண்பாட்டை, வாழ்வியலை, பழக்க வழக்கங் களை, பருவ காலங்களை, பருவகாலங்களைக் குறிக்கும் சொற்களை என பல்வேறு அம்சங்கையம் சரியான அர்த்தத்தில் பொருள் கொள்கின்ற போதே, ஹைக்கூ கவிதைகளுக்கும் பொருள் கொள்ள முடியும்

ஜப்பானிய கவிதைகளை மொழிபெயர்க்கின்ற போது, மொழிபெயர்ப்பானர்கள் இதே சிக்கலை எதிர் கொள்கின்றனர். ஜப்பானிய மொழியிலுள்ளவாறே அதே ஒழுங்கில் வரிகளை எழுதவேண்டும். இல்லையேல் கவிதை வேறு அர்த்தம் கொள்ளும்.

ஜப்பானிய அசைகள் குறுகியவை. ஆங்கில மொழியிலுள்ள அசைகள் நெடியவை. எனவே, ஹைக்கூ கவிதைகளை மொழிபெயர்க்கும்போது 5-7-5 அசைகள் கொண்டதான சொற்களைக் கண்டறிதல் கடினமான தாகும்.

இஸ்ஸா

ஷிகி

இன்று ஹைக்கூ கவிதைகள் இயற்கையை மாத்திரமின்றி, மனித நேயத்தையும், சமூக வாழ்வையும் கூட பேசுகின்றன. இவ்வாறு ஹைக்கூ கவிதைகள் பல்வேறு கருப்பொருள்களில் படைக்கப்படும்போது, அவற்றை ஹைக்கூ கவிதைகளாக இனங்காண்பதற் கான நியமங்களை நாம் வகுத்துக்கொள்ள வேண்டும். மூன்றடிகளில் 5-7-5 என்ற ஒழுங்கில் அசைகளைக் கொண்டு சொற்களைத் தேர்வது சிக்கலாக இருப்பினும், மூன்று வரிகளில் முதலிரண்டும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட இரு உருப்படிவங்களாகவும், இந்த இரு உருப் படிவங்களிலிருந்து கிடைக்கும் ஒரு முழுமைத் தரிசனமாக மூன்றாவது வரியும் அமைந்திருக்க வேண்டும் என்ற நியமத்தை வகுத்துக்கொள்ளல், ஜப்பானிய ஹைக்கூ மரபு வழிவந்த பிறமொழிக் கவிதை களை ஹைக்கூ கவிதைகளாக இணங்காண்பதற்கு வழிவகுக்கும்.

தொலைந்து பின்னொளிரும் நட்சத்திரங்கள்

நிலவை
தின்று விட்டிருந்த
வானத்தில்
தொலைந்து தொலைந்து
பின்னொளிரும்
நட்சத்திரங்கள்
உதிர்ந்து விழுகின்றன...
நீலநெடு வானத்தில்
உருமறைப்புச் செய்து
ஒளிந்து கொள்கின்றன
நட்சத்திரங்கள்...
கனவுகள் வானவெளியெங்கும்
வியாபித்திருந்தன...
கைகளை பொத்தி
கனவுகளை சிறைப்பிடிக்க
முயன்று முயன்று
தோற்று போகிறது
நிகழ்காலம்...
நேற்று தொலைந்து போன
நட்சத்திரங்கள்
ஒளிரவில்லை...
இரவொன்றின் வருகைக்காக
ஜெபித்தபடியிருந்தன...
ஒடித்தெறியப்பட்ட
கரங்களுடன்...
ஒவ்வொரு நாளும்
விடியும்..
நட்சத்திரங்கள் உயிருடன்
மறையும் – பின்
மழையற்ற இரவு வானில்
ஒளிரும்..
ஒடிக்கப்பட்ட கரங்களுக்குள்
சிக்குகின்றது கனவு...
அந்தரித்து அலைந்து
நீளும் இரவொன்றில்
சூரியன் சுட்டெரித்த
பகல் வானில்
சாகாதிருந்த நட்சத்திரங்கள்
உயிர்ப்புறுகின்றன,
ஒவ்வொன்றாய்...
ஒன்றாய்...

– யாத்ரிகன்

ஒளியும் கண ரகசியங்கள்

ஆச்சரியங்கள்மிகச்சாதாரணமாய்
நடந்து போகின்றன.
மறைப்பதற்கு ஒன்றுமேயில்லை.
தடித்த இரவு கொட்டிய
மழையின் கத்திகள்
எனது தோலின் பின்னே
புதைந்து போகின்றன.

நினைவு மீள்வதற்காய்
வெளியழைத்த போதும்
இரவுகள் திறந்த
பிசாசு முகத்தினழைவில்
என்னுயிரின் நிழல்
மறைந்து போன பின்னாய்
அசைவற்றிருக்கிறேன்.

பொழுதுகள் புணரும்
கண இரகசியத்தில்
உலர் செதிற்படையொன்று
உரித்துப் போனது எனது தோலை.
சில்லறைகளாய் உருண்டோடும்
உணர்வுகளில் எனது நிர்வாணத்தின் நாற்றம்
நிணங்களின் மீதலையும்
காற்றாய்ச் சுழன்றாடுகிறது.

உன்னையும் என்னையும் போலவே
இது ஆச்சரியமற்றது.
புதிய தோலின் வாசனை
அவசரத்தின் கொடுக்குகளை
செதில்களின் பின்மறைத்துப்படுத்திருக்கிறது.

நண்பனே!
நீயும் என்னைப்போல
எங்களின் வெளியில்
இதனை ஒளித்துப் போகிறாயா?

– ந.மயூரரூபன்

உமா வரதராஜன்

சண்முகம் சிவலிங்கம்
தந்தையானவன் கதை

சசியின் படைப்பிலக்கியத்தின் அடித்தளம் மிகவும் பலமானது. அதற்குரிய காரணம் அவருடைய பன்முக வாசிப்பு. ஏட்டு வடிவத்தில் அவர் பழந் தமிழ் இலக்கியம் பயின்றிருக்கிறார். அதே வேளை நவீன தமிழ் இலக்கிய வாசிப்பும் அவரிடம் இருந்திருக்கின்றது

1974 இல் அவரை நான் முதன் முதலாக சந்தித்தேன். ஊரிலுள்ள எல்லோரும் அழைப்பது போல "ஸ்டீபன் சேர்" என்ற பெயராலேயே அவரை நான் அறிந்து வைத்திருந்தேன். புரட்சிகரமான ஒரு மனிதர் என அவரைப் பற்றி பலரும் சொல்லக் கேட்டிருக்கிறேன். சொந்தமாக ஊருக்கு ஒரு சந்தை வேண்டும் என்பதற்காக அவரும் , அவரைப் போன்ற சிலரும் தீவிரமாக முயற்சி செய்து கொண்டிருந்ததாக வும், விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியரான ஸ்டீபன் வியாபாரிகளுக்கு உற்சாகம் ஊட்டும் விதத்தில் , அவர் களுக்கு முன்மாதிரியாக மீன் பெட்டியை சைக்கிளில் கட்டிக் கொண்டு ஊர் வீதிகளில் வியாபாரம் செய்த தாகவும் நான் அறிந்த போது வியப்படைந்தேன்.

அப்போது எனக்குப் பதினெட்டு வயது. காலரதம் என்றொரு சிற்றிதழை நடத்திக் கொண்டி ருந்தேன். நான் முதன்முதலாக எழுதிய "அந்தப் பார்வை அப்படித்தான் இருக்கும்" என்ற சிறுகதை அந்த இதழில் வெளியாகியிருந்தது.

இந்தக் கதை வெளி வந்த ஓரிரு வாரங்களில் நீண்ட உறையுடன் ஒரு கடிதம் எனக்கு வந்திருந்தது. கதையைப் பற்றிய பாராட்டுக் குறிப்புகளுடன் நீண்டதொரு கடிதத்தை சசி அவர்கள் எனக்கு அனுப்பி வைத்திருந்தார். அந்தக் கடிதம் தந்த தைரியத்தில் அவருடைய வீட்டுக்கு ஒரு நாள் போனேன். அன்போடு என்னை வரவேற்று பேசிக் கொண்டிருந்தார்.

ஆனால் அவருக்கும் எனக்கும் இடையே மிகவும் நெருக்கம் ஏற்பட்ட காலமாக 1975 ஐத்தான் சொல்ல வேண்டும்.

இந்தத் தலைநகர வாழ்க்கைதான் எனக்குப் பல சாளரங்களை, வாசல்களைத் திறந்து விட்டன. சண்முகம் சிவலிங்கம் அவர்கள் தன்னுடைய கல்வி மானிப் பட்டப் படிப்புக்காகவும், பாடநூல் ஆக்க சபையின் உறுப்பினர் கடமைக்காகவும் கொழும்பில் தங்கியிருந்தார்.நானோ ஒழுங்கான வேலை வெட்டி இல்லாமல், வீட்டிலிருந்து மாதாந்தம் வருகின்ற பணத்தை நம்பிக் கொண்டு கொழும்பில் நாட்களைக் கடத்திக் கொண்டிருந்தேன்.இந்த சூழல் எங்கள் இருவரையும் ஒரே இடத்தில் குடியிருக்கும் சந்தர்ப்பத்தை ஆக்கித் தந்தது.

கொழும்பு – 6 ,ஹெவ்லொக் ரோடு, 602 /3 இல் இருந்த வீட்டின் மேல் மாடியில் எங்கள் அறை இருந்தது. எங்கள் அறையிலிருந்து வெளியே பார்க்கும் போது, மாநகரத்தின் அழகு முகத்தில் ஒரு கோணல் வாய் போல புல்லும், புத்தரும் நிறைந்த வளவொன்று பக்கத்தில் கீழே தெரியும். அந்த வளவில் சிதிலமடைந்த ஒரு கட்டிடம். அருகிலிருந்த வீதி மிகவும் ஒடுக்கமானது. எதிரும்,புதிருமாக வரும் வாகனங்கள் முன்னேற முடியாமல் திணறிக் கொண்டு, ஹோர்ன் அடித்தபடி

அடிக்கடி ஸ்தம்பித்துப் போய் நிற்பது வழமை.

கொழும்பு, ஹெவ்லொக் ரோட். 602/3 இலக்க இல்லத்தையும், சசியையும் இப்போது நினைக்கும் போது இன்னொரு ஞாபகமும் வருகின்றது.எங்கள் வீட்டின் சொந்தக்காரி அதே வளவில் புறம்பானதொரு ஆடம்பரமான வீட்டில் குடியிருந்தார். இடையிடையே நரையோடிய நீண்ட தலைமுடி.எலுமிச்சம் பழ நிறத் தோல், கனிவான தோற்றம் கொண்ட பெண் அவர்.

மாதாந்தம் நாங்கள் கொடுக்கும் 600 /= வாடகைப் பணத்தைப் பெறும் போது அந்தக் கனிவு நிறைந்த புன்னகை கொல்லன் பட்டறை தீ போல மேலும் சுடர் விட்டுப் பிரகாசிப்பதுண்டு. நானும், சசியும் அவவுக்கு வைத்த பெயர் "சீமாட்டி"

எனக்கும், சீமாட்டிக்கும் இடையே தீர்க்க முடியாத ஒரு பிரச்சினை இருந்தது. சீமாட்டி புதைத்து வைத்திருந்த மிதி வெடியில் பாதம் பதியாமல் ஒவ்வொரு நாளும் தப்புவது அவ்வளவு லேசான காரியமாக இருக்கவில்லை. அந்த மிதி வெடியின் பெயர் ஆங்கிலம்.

அறையிலிருக்கும் எங்களுக்கு வரும் கடிதங்கள் எல்லாவற்றையும் காலையில் தபால்காரன் சீமாட்டியிடம் கொடுத்து விட்டுப் போய் விடுவான். அவற்றை விசாரித்துப் பெற வேண்டிய வேலையை சசி என்னிடம் ஒப்படைத்திருந்தார். சீமாட்டியிடம் போவ தென்றால் எனக்கு உள்ளூரக் கொஞ்சம் காய்ச்சல் அடித்துக் கொண்டிருக்கும். காரணம் தன்னுடைய ஆங்கிலத்தைப் பரிசோதித்துப் பார்க்கும் ஆய்வு கூட எலி போல சீமாட்டியின் பார்வையில் நான் ஆகி இருந்தேன்.

கடிதம் வந்திருக்கிறதா என்பதை ஆங்கிலத்தில் எப்படி விசாரிப்பது என சசி எனக்கு சொல்லித் தருவார். அவர் சொல்லித் தந்த "Is there any letter for me ?" என்ற வாசகத்தை மனனம் செய்த படி, அறுபடப் போகும் ஆடு போல 25 படிகள் கீழே இறங்கி சீமாட்டியிடம் செல்வேன். சில வேளைகளில் 13 வது படியால் இறங்கும் போது அந்த ஆங்கில வாக்கியத்தை மறந்து போய்த் திரும்பவும் அவரிடம் கேட்டுக் கொண்டு வருவேன். அப்போதெல்லாம் சசி என்னை ஒரு நமுட்டுச் சிரிப்போடு பார்த்துக் கொண்டி ருப்பார். எப்படியோ சமாளித்துக் கொண்டிருந்தேன்.

ஆனால் இந்த சோதனைகளுக்கு மத்தியிலும் நான் கற்றதும், பெற்றதும் ஏராளம். லேடீஸ் ஹொஸ்டலுக்கு அமைந்தது போன்ற நான்கு மதில் களுக்குள் வாழ்ந்து பழகிய எனக்கு வெளியுலகத்தின் காற்று முகத்தில் வந்து மோதியது அப்போதுதான்.சசி அவர்களின் தூண்டுதலால்தான் நவீன நாடகங்கள், சிறந்த திரைப்படங்கள், நல்ல நூல்கள் ஆகிய வற்றுடன் பரிச்சயம் ஏற்பட்டது. லும்பினி, லயனல் வென்ட் அரங்குகளுக்கு என்னை அவர் அழைத்துச் சென்றிருக்கிறார். பணப் பற்றாக் குறையுடன் நாங்கள் இருந்த போதிலும் சத்தியஜித் ரேயின் மீது இருந்த தீராக் காதலால் தலா ரூபா 500 /= கொடுத்து "பதேர் பஞ்சலி"யைப் பார்க்க சவோய் தியேட்டருக்கு சென்றிருக்கின்றோம். சசி அவர்களால் என் ரசனையில் வந்த மாற்றங்கள் ஏராளம்.

எனது அறை சில அந்த நாட்களில் இலக்கிய நண்பர்களால் நிரம்பி வழியும். திருவாளர்கள் நுஹ்மான், மௌனகுரு, சித்திரலேகா மௌனகுரு, சாந்தன், இமையவன், ஈழவாணன், தாசீசியஸ், சுந்தரலிங்கம், குப்பிளான் ஷண்முகன்.... இப்படிப் பலர் சசியுடன் வந்து பேசிக் கொண்டிருப்பார்கள். இவர்களில் சிலருடன் மார்க்சீயம், இலக்கிய அழகியல் குறித்த விவாதங்களில் சசி ஈடுபடுவார். இந்த விவாதங்களில் எனக்கு அவ்வளவு ஆர்வம் இருந்ததில்லை.இவர்களுக்கெல்லாம் தேநீர் தயாரிக்கும் பணி என்னுடையது. என் கை விசேஷத்தைப் பெருமைப்படுத்தும் விதத்தில் எனக்கு "தேநீர்த் தென்றல்" என்றொரு பட்டத்தை அண்ணன் மௌன குரு அவர்கள் எனக்கு வழங்கி இருந்தார். யோசித்துப் பார்க்கும் போது இன்றைய "கலா பூஷணம்", டாக்டர், பேராசிரியர், சாமஸ்ரீ பட்டங்களை விட அந்தப் பட்டம் சிறப்பாகவே தென்படுகின்றது.

சசி இரவில் நீண்ட நேரம் விழித்திருந்து எழுது வார்; அல்லது வாசிப்பார். சில வேளைகளில் படுக்கை யில் சாய்ந்த படி சுவரை வெறித்துக் கொண்டிருப்பார். வெளியே சென்றிருந்த நான் அவருடைய இந்தக் "கூடு விட்டுக் கூடு பாய்ந்த" நிலையைப் புரிந்து கொள்ளாமல் "ரூப்புத் தேரா மஸ்தானா" பாடலுக்கு சீட்டியடித்தபடி தட்டாமல், கொள்ளாமல் கதவைத் திறந்து உள்ளே நுழைந்து விட்டேன். அவ்வளவுதான் எனக்குத் தெரியும். என் முகத்தை நோக்கி தண்ணீர் நிரம்பிய டம்ளர் ஒன்று விரைந்து வருவதைக் கண்டேன். சற்றுக் குனிந்த தால் தப்பினேன். சுவரில் மோதிய டம்ளர் கீழே விழுந்தது. தண்ணீர் சுவரால் வடிந்து கொண்டிருந்தது. வீசியவர் எதுவும் நடக்காத பாவனையில் மறு புறம் திரும்பிக் கொண்டார். உடனே அங்கிருந்து வெளி யேறிய நான் என்னுடைய நண்பனின் அறையில் அடுத்து வந்த இரண்டு நாட்களையும் கழிக்க நேர்ந்தது.

மூன்றாம் நாள் பயத்துடனும், தயக்கத்துடனும் என் அறைக்குள் மீண்டும் நுழைந்தேன். இந்த தடவை சீட்டியடிக்கவில்லை. கதவைத் தட்ட மறக்கவுமில்லை. புன்னகையுடன் சசி என்னை வரவேற்றார். "என்ன வரதர், இரண்டு நாட்களாக ஆளையே காணவில்லை..."

நானும் பதிலுக்குப் புன்னகைத்தேன். "ரூப்புத் தேரா மஸ்தானா" வோடு உங்களுக்கு அப்படி என்ன விரோதம்" என்று கேட்கும் தைரியம் அன்று எனக்கு இருக்கவில்லை.

சசியின் படைப்பிலக்கியத்தின் அடித்தளம் மிகவும் பலமானது. அதற்குரிய காரணம் அவருடைய பன்முக வாசிப்பு. ஏட்டு வடிவத்தில் அவர் பழந் தமிழ் இலக்கியம் பயின்றிருக்கிறார். அதே வேளை நவீன தமிழ் இலக்கிய வாசிப்பும் அவரிடம் இருந்திருக்கின்றது .எழுபதுகளிலேயே அசோக மித்திரனின் "கரைந்த நிழல்கள்" பற்றி, நீல பத்மநாபனின் "தலைமுறைகள்" பற்றி, சிவராம காரந்தின் "மண்ணும் மனிதர்களும்"

பற்றி, க.நா.சு.வின் "பொய்த் தேவு" பற்றி இங்கே முதலில் அடையாளம் கண்டு , சிலாகித்துக் கூறிய ஒருவராக அவர் இருந்தார்.

அதே போல ஆங்கில மொழியில், ஆங்கில இலக்கியத்தில் சசி அவர்கள் நல்ல பரிச்சயமுள்ளவர். மார்க்சிம் கோர்க்கி, அன்டன் செக்கோவ், டோல்ஸ் டோய், டோவ்ஸ்டோஸ்கி, ஜேம்ஸ் ஜோய்ஸ் போன்ற எழுத்தாளர்களை தமிழ் மொழிபெயர்ப்பு வாயிலாக அல்லாமல் ஆங்கிலத்திலேயே அவர் படித்தவர். இது ஒரு கூடுதல் தகைமை என்றுதான் நாம் சொல்ல வேண்டும். இப்படிப்பட்ட சிறப்பம்சங்களால்தான் அவருடைய கவிதைகள் தனித்துவமாகவும், நவீனத் துவம் மிகுந்தவையாகவும் அமைந்தன. சந்தம், சொல் விளையாட்டு போன்ற செய்யுள்களின் பண்புகளை உதறித் தள்ளிய சசியின் கவிதைகள் மனக் காட்சி களுக்கும், அரசியலுக்கும், தனி மனித உணர்வு களுக்கும் முக்கியமளித்தவை.

மனப்பாடமாகிப் போயிருந்த தன்னுடைய "நீர் வளையங்கள்" என்ற கவிதையை நானும் அவரும் ஒரே அறையில் இருந்த காலத்தில் அவர் அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பார்.

இன்று மிகத் துயர் உற்றேன்
என் இனிய அன்பே,
இவ் இரவின் நிலவொளியில் என்னுடன் நீ இருந்தால்
வெண் பனியின் துளி சொட்டும்
பூங் கொத்தைப் போன்று விம்முகின்ற என் நெஞ்சில்
ஆறுதல்கள் தருவாய்,

"இன்று , இந்த மிகச் சிறிய சம்பவத்திற்காக
இவ் விதமோ துயர் உறுதல்"
என்று நினைப்பாயோ?
இன்றளவும் வாழ்ந்துள்ளேன்.
எனினும் எனதன்பே,
எனது மனம் பூஞ் சிட்டின் மென் சிறகுத் தூவல்.
என் பாதம்
இடர் கல்லில் அழுந்தாத ரோஜா.
என் நண்பர் மிக இனியர்
சுடு சொல்லை அறியார்
கண்ணீரின் துளி போல
காலம் எனும் நதியில் கலப்பதற்கே
உயிர் செய்த காதல் உரு ஆனார்...

போகட்டும்
இன்று முதல் கசப்புகளை வாங்கிப் புசிக்கின்றேன்.
அதற்கென்ன ,!
என் மனதை, என்றும்
நோகாது வைத்திருக்க வேண்டுமென எண்ணினேன்.
நொந்தவர்தான் வாழ்க்கையிலே சாதனைகள் செய்தார்.
ஆதலினால்
என் மனத்தைக் கல்லாக்கிக் கொள்வேன் .
அம்பு வரும்
அது முறியும்
நான் நடந்து செல்வேன்.

ஏகமும் தாம் என்று எண்ணுபவர் மாள்வார்
இப் பெரிய உலகினிலே எத்தனை பேர் உள்ளார்
ஆகாய வீதியிலே
என் நெஞ்சைக் கிள்ளி அத்தனையும் இட்டது போல்
மின்னுகிற
வெள்ளிப் பூ அனந்தம் – அதைப் போல
தினம் மேதை பூப்பார்
பூச் சிவந்த சேவல்
ஒரு நாள் இரவு கூவும் .

என் இதயம்
இப் பரந்த வான் முழுதும் ஆகி இருப்பதனை
ஆர் அறிவார் என் இதய ஊற்றே ?...
என் எதிரில் தெரிகின்ற வான் முழுதும் ,
இந்த இரவெல்லாம் ஒளிர்கின்ற கற்கண்டுத் தூளும்
பொன்னிதயம் என்னுள்ளே
நெடுஞ்ச சுரங்கமாகிப் பூக்கின்ற அழகைத்தான்
ஆர் கண்டார் அன்பே?

விண்வெளியில்
உதிர்ந்துள்ள இவ் வெள்ளிப் பூக்கள் மீது யான்
அடி வைத்து நடக்கின்ற போதில்
"என்ன இவன் அழகு"
என்று இவர் வியந்து கொள்ளும்
இனிய பொற்காலம் ஒன்று வந்திடுமோ....
அல்லால்
இன்றிரவு
இதோ வெளியில்
எம் கிணற்று வாழை இலைகளிலே
நிலவினிலே
பனித் துளிகள் பட்டு
"இச்"
என்ற முத்தத்தின் ஒலியுடனே
அவைகள் இழிந்து
நிலம் சொட்டுவதைப் போல் மறைந்து போமோ ..

அச் செயலும்
எனக்கு மிக உவப்புளதே – ஆஹா
அலை கடலும்
புவி முழுதும்
அருமை உயிர்ச் சிட்டும்
சப்திக்கும் ஒருங்கமைந்த ஓசையில்
என் குரலும் சங்கமிக்க
என் இயல்பை நான் பாடுகின்றேன்
இச்சை மிகு சுருதியினை
இதனின்று வேறாய் எழுப்புகிற நரம்புகளை
நாம் முறித்து வைப்போம்
எச் சிறிய புல்லும்
அதன் இயல்பினிலே முழுமை
இடு காட்டில் முளைக்கின்ற கழனியும் ஓர் அருமை !

அப்படியே நாம் ஆனோம்
அதோ இந்த நிலவில்
அகன்ற இலை வாழையிலே பனி சொட்டும் கீதம்
"இச்"
என்ற ஒலியுடனே எழுகிறது மீண்டும்:
இனி என்ன !
போய் துயில்வேன் , என் உயிரின் கண்ணே.

இது சசியால் 1968 இல் எழுதப் பட்ட ஒரு கவிதை. இது தமிழில் வெளி வந்த தலை சிறந்த கவிதைகளில் ஒன்று.இத்தகைய மன நெகிழ்ச்சியும், விம்மலும், அகக் காட்சிகளும் ததும்பும் கவிதை எல்லோருக்கும் கை வரும் ஒன்றல்ல.

சசி அவர்கள் என் மதிப்பில் உயர்ந்த இன் னொரு முக்கியமான தருணத்தை இங்கே குறிப்பிடுவது அவசியம் என்று நினைக்கின்றேன். 1975 இல் முற்போக்கு எழுத்தாளர் சங்க மாநாடு ஒன்று கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்ட பத்தில் நடைபெற்றது. இந்த மாநாட்டின் பின்னணியில் இடதுசாரி அரசியல் சார்புடைய எழுத்தாளர்கள் இயங்கினார்கள். அங்கே அதிதிகளாக வருகை தந்த முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா, அமைச்சர்கள் குமாரசூரியர், டி.பி.இலங்கரத்தின ஆகி யோருக்குத் தங்கள் திருமுகங்களைக் காட்டுவதில் ஏகப் பட்ட போட்டி. அந்த மாநாட்டின் இறுதி நாளன்று தேசிய ஒருமைப் பாட்டை வலியுறுத்தும் விதத்தில் ஒரு கவியரங்கு இடம் பெற்றது.

சசி அவர்களும் அங்கே கவிதை வாசித்தார். அவர் துணிச்சலுடன் அப்போது அங்கே கவிதை ரூபத்தில் முன் வைத்த கேள்வி இதுதான் .

"தமிழர்களின் பிரச்சினையைத் தீர்த்து விட்டு பின்னர் தேசிய ஒருமைப்பாடு பற்றி பேசுங்கள். பிரச்சினைகளைக் காண மறுத்து தீக் கோழிகளைப் போல மண்ணுக்குள் தலையை மறைக்காதீர்கள்"

இந்தக் கவிதை வாசிக்கப் படும் நேரத்தில் என் முன்னால் இருந்த டொமினிக் ஜீவா அவர்கள் "கெடுத்துப் போட்டான்..கெடுத்துப் போட்டான் ..." எனத் தலையில் அடித்துக் கொண்டதையும், மாநாட்டு ஏற்பாட்டாளர் ப்ரேம்ஜியின் முகம் இருண்டு போனதையும் மண்டபத்திலிருந்த நான் கவனித்துக் கொண்டிருந்தேன்.

இளந் தலைமுறையை சேர்ந்த பலரும் அப்போது அங்கே கை தட்டி ஆரவாரம் செய்தார்கள். என்னுடைய மனதில் ஒரு பெருமித உணர்வு அப்போது ஏற் பட்டது. ஒரு துணிச்சலான, மன சாட்சியுள்ள , விலை போகாத கவிஞர் ஒருவரின் சகபாடியாக அவருடன் நானும் இருக்கின்றேன் என்பதால் வந்த பெருமிதம் அது.

மார்க்ஸீய சிந்தனைகளால் கவரப் பட்டிருந்த சசியின் "திசை மாற்றம்" அதன் பின்னரே நிகழ்ந்திருக்க வேண்டும்.

சசியின் முதலாவது கவிதைத் தொகுதியான "நீர் வளையங்கள்" 1988 இல் வெளியான போதும் அப்போதிருந்த அரசியல் சூழலால் பலருடைய கைகளுக்கும் அது போய்ச் சேரவில்லை. சுமார் 23 வருடங்கள் கழிந்த நிலையில் அவருடைய அடுத்த தொகுதியான "சிதைந்து போன தேசமும், தூர்ந்து போன மனக் குகையும்" பின்னர் 2011 இல் வெளி வந்தது.

இரண்டு கவிதைத் தொகுதிகளையும் ஒப்பீடு செய்த என் நண்பர் ஒருவர் பிந்திய இந்தத் தொகுதி கட்டிறுக்கம் சற்றுக் குறைந்து காணப் படுவதாகவும், மிகவும் வெளிப்படையான தன்மையைக் கொண்டிருப் பதாகவும் சொன்னார். அவருடைய அந்தக் கருத்தை நான் அப்போது மறுதலித்தாலும் கூட அதில் உண்மை இல்லாமல் இல்லை.

இன அரசியல் கொடூரத்தினுள் வாழ நேர்ந்த சசி என்ற கவிஞன் "சார்பு நிலை" என்ற பொறிக்குள் சிக்கிக் கொண்டிருப்பதை துரதிர்ஷ்டவசமாக நான் பார்க்க நேர்ந்தது. அந்நிய நாட்டு இராணுவத்தால் தன் சொந்த மகனுக்கு நேர்ந்த அகால மரணம் , விமர்சனங் களுக்கு அப்பால் தான் நேசித்த இயக்கமொன்றினது வீழ்ச்சி, அதன் தலைவருடைய மரணம் இவையெல்லாம் அவருடைய சிந்தனையைப் பலவீனப் படுத்தி இருந்தன. "சரத் பொன்சேகா வெற்றியடைய வேண்டும்" என்று அவர் சொன்ன போது ஒரு குழந்தையை இழந்த தந்தையைத்தான் அங்கு கண்டேன். சூழல்தான் எவ்வளவு இரக்கமற்றது.

"போர்க்களம்" என்ற அவருடைய கவிதையில் அந்தத் தந்தையைக் காணலாம்.

போனேன்
நான் உன் போர்க்களம் காண

விடிந்தும் விடியாததுமாக
காதில்
விழுந்தும் , விழாததுமாக

எனக்கெதிரில் பல முகங்கள்
மிகத் துயரில்
விம்மலுடன்

முகங்கள் ஊடு
முகங்கள் ஊடு
பிடரிகள் ஊடு
பிடரிகள் ஊடு

அர்ச்சுனர் வீதியில்
அரைத் தூரம்...
இதுதான் என்றார்கள்
இடை விடாது
துப்பாக்கிக் காயங்கள் துளைத்த
மதில் சுவருக்கும்
கிளிசரியா மரங்களுக்கும் இடையில் .

நேருக்கு நேர்
நீ ஒருவன் தனியாக

சுழன்று,சுழன்று தொடுத்த பாணங்களின்
அற்புதம் பற்றி அளந்தார்கள்
அமைதிப் படை
சர்ப்பமாய் ஒளித்து
சக்கரமாய் மாறிய
அற்பத் தனம் பற்றியும் அளந்தார்கள்.

மதிலோரத்தின் மங்கிய மண்ணில்
குவிந்து கிடந்தது உன் குருதி
மெதுவாக அள்ளி முத்தமிட்டு
விரலிடை நெரித்தேன்

மீண்டும்
முகங்கள் முகங்கள்
முகங்கள் ஊடு
சிவந்த சூரியனின் சிதறிய முகத் துண்டுகள்
ஆயிரம் என் கண்ணில் : அட என் மகனே!

சசியின் இறுதிநாட்களில் எனக்கும், அவருக்குமான நெருக்கம் குறைந்திருந்தது. இது வழமையான ஒரு கிரஹணம் என்றே நான் நினைத்திருந்தேன். எங்கள் இருவருடைய நட்பிலும் பௌர்ணமியும், அமாவாசையும் மாறி மாறி வருவதும்,அகல்வதும் வழக்கம். என் பிடிவாதத்தைக் கைவிட்டு விட்டு, நந்தினி சேவியர் அவரிடம் சேர்ப்பிக்கச் சொன்ன "நெல்லிமரப் பள்ளிக்கூடம் "தொகுதியையும் எடுத்துக் கொண்டு அவரிடம் சென்றேன். கேற்றில் தட்டி உரத்த குரலில் "சேர்" என்று அழைத்தேன். மதிலின் அந்தப் புறமாக அவருடைய தலை தோன்றியது. புன்னகையற்ற முகம். "நந்தினி சேவியர் தந்தார்" எனக் கூறி புத்தகத்தை நீட்டினேன். மதில் மேலாக நீண்ட அவருடைய கை புத்தகத்தை வாங்கிக் கொண்டது. பின்னர் முகம் மறைந்து போனது.

74 ஆம் ஆண்டு நான் முதன்முதலாக அங்கு வந்த போது திறந்திருந்த அவருடைய வீட்டினதும் , இதயத்தினதும் வாசல்களை அந்தக் கணத்தில் துயரத்துடன் நினைவுபடுத்திக் கொண்டு வீடு திரும்பினேன்.

அதன் பின் அந்த வாசல் தாண்டி நான் உள்ளே நுழைந்தது அவர் உயிரற்ற உடலைப் பார்க்கவும், அவர் மறைவையொட்டிய இரங்கல் உரையாற்றவுந்தான்.

-25.11.2014

மண்சரிவு

மலையே, மண்மேடே
நீ நிலை குலைந்து தலை கவிழ்ந்து சரிந்தாய்
உன் மடியில் தவழ்ந்த குடி மக்களின் உயிர் குடித்தாய்
தம் வயிறு கழுவ கொழுந்து கொய்து
பிழைக்க வந்தவர்களை அழித்து விட்டாய்
உன்னை,
இயற்கை அழகின் இருப்பிடம் என்பர்
இதமான சுவாத்தியச்சூழல் என்பர்
வளம் கொழிக்கும் நிலமகள் என்பர்
வருவாய் தருகின்ற மலையகம் என்பர்
இதம் தருகின்ற நீ இயமனாய் மாறியதேன்
தஞ்சம் கொடுத்த நீ தரைமட்டமானதேன்
பஞ்சம் போக்கிய நீ பாவியாய் மாறியதேன்
ஆனாலும் நீ சிறிது அறிகுறி காட்டி
அவகாசம் கொடுத்திருந்தால்
ஓடிப்போய் உயிர் பிழைத்திருப்பர்
அதற்கும் நீ இடம் கொடாமல்
அரைநிமிடத்தில் ஆவேசமாய் சரிந்து விட்டாய்
ஆண்கள் பெண்கள் குழந்தைகள் குமரிகள்
ஆட்டோக்கள் அணிகலன்கள் ஆலயங்கள்
அத்தனையும் நசித்துச் சிதைத்து
உன்னுள்ளே புதைத்து விட்டாய்
பெற்றோரை இழந்து பிள்ளைகள் துடிக்க
பிள்ளைகளை இழந்து பெற்றோர் தவிக்க
அந்தோ பரிதாபம்,
ஆனாலும், பாவம் நீ என்ன செய்வாய்
இயற்கை அனர்த்தமோ
இறைவனின் விளையாட்டோ
விதியின் சதியோ வேறெந்தக் காரணமோ
வேகமாய்ச் சரிந்து விட்டாய்
விரைவாய் அழிவு செய்தாய்
உன் வேகத்தை
உன் சரிவை
உன் வீழ்ச்சியை
யாரால் தடுக்க முடியும்
ஆனாலும்
முன்னெச்சரிக்கை செய்திருந்தால்
உயிர்கள் ஓடித்தப்பியிருக்கும்
பரந்துவிரிந்த இப்பூமியில்
இன்னோரிடமா இல்லை
உடைமைகளைத் தேடலாம்
உயிர்களை மீட்கலாமா!
போன உயிர்கள் போனவைதான்
ஆதலினால்
அனர்த்தம் வருமுன் அறிகுறி காட்டிவிடு
எச்சரிக்கை செய்து எல்லோரையும் காத்திடு

-மு.இந்திராணி -

அ.பௌநந்தி



இலங்கையில் குழந்தைப் பாடல்கள் தோற்றமும் வளர்ச்சியும்

அறிமுகம்

இன்றைய இலக்கிய உலகில் முக்கியமான கவனிப்பைப் பெற்றுவருகின்ற ஒரு இலக்கியக் கூறாகக் குழந்தை இலக்கியம் அமைகின்றது. இது சிறுவர் இலக்கியம் எனவும் அழைக்கப்படுகின்றது. சிறுவர்கள் படித்து மகிழவேண்டும் என்ற நோக்கோடு பெரியவர் களால் சிறுவர்களுக்காகப் பாடப்படுகின்ற இலக்கியமே சிறுவர் இலக்கியம் என்று கூறலாம். சிறுவர் உளவியல் சார்ந்த கருத்துக்கள் முதன்மைபெற்று அதன்மூலம் சிறுவர்கள் சமூகத்தின் முக்கிய அங்கம் என்ற நிலை தோன்றியபோது சிறுவர் இலக்கியம் என்ற கருத்து மேலும் முதன்மைபெறத் தொடங்கிற்று. சிறுவர் இலக்கியம் என்ற வகுதிக்குள் சிறுவர் பாடல்கள், சிறுவர் கதைகள், கதைப்பாடல்கள், சிறுவர் நாடகங்கள் ஆகியன முக்கியத்துவமுடையன.

தமிழில் குழந்தை இலக்கியப் பரப்பின் தொடக்கப்புள்ளியை இட்டவர் யார் என்ற வினாவுக்கு விடை காண்பது அத்துணை எளிமையானது அன்று. சிலர் நாட்டார் பாடல்களினூடாக சிறுவர் பாடல்களும் தோன்றின என்று கூறுகின்றனர். தாலாட்டுப்பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள் மற்றும் சிறுவர் நாடகங்கள் போன்றன இந்தவகையில் குறிப்பிடத்தக்கன. இவற்றைத் தாண்டி தமிழில் சிறுவர் பாடல்கள் என்று நோக்குகின்றபோது, தமிழ்க் கவிதையுலகில் முக்கியத் துவம் பெறுகின்ற பாரதியார், பாரதிதாசன், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, அழ.வள்ளியப்பா, நாமக்கல் வெ.இராமலிங்கம் பிள்ளை, வாணிதாசன், பெ.தூரன் போன்றோரது பெயர்களை உள்ளடக்கி பட்டியல் நீண்டு செல்கின்றது.

இலங்கையில் குழந்தைப் பாடல்களின் தோற்றம்

இலங்கையிலும் சிறுவர் இலக்கியம் குறிப்பாக, சிறுவர் பாடல்கள் சிறப்புற வளர்ச்சி பெற்று வருகின்றமையை அவதானிக்கலாம். இலங்கையில்

சிறுவர் பாடல்களின் தோற்றம் பற்றி நோக்குகின்ற போது, 1918இல் திரு.சி.வைத்தியநாதர் என்பவரால் வெளியிடப்பட்ட குழந்தைப் பாடல்களின் தொகுதியான "தமிழ்ப் பாலபோதினி" என்பதே காலத்தால் முந்திய தாகக் கூறப்படுகின்றது. ஆனாலும், காத்திரமானதொரு சிறுவர் பாடல் முயற்சியாக அமைவது 1938இல் வெளியிடப்பட்ட "பிள்ளைப்பாட்டு" என்ற தொகுதியே ஆகும். தமிழில் தோன்றிய முதலாவது சிறுவர் பாடல் தொகுதியாக அமைவது இந்தப் "பிள்ளைப்பாட்டு" தொகுதியே என பேராசிரியர் செ.யோகராசா கூறுவது இங்கு மனங்கொள்ளத்தக்கது. "பிள்ளைப்பாட்டு" தொகுதியை தொகுத்தவர் அன்றைய காலப்பகுதியில் கல்வித் துறையில் முக்கிய பொறுப்பிலிருந்த

க.ச.அருணந்தி என்பவராவார். அவரோடு இலங்கையின் முக்கிய தமிழறிஞர்கள் பலர் சேர்ந்து இத்தொகுதியை வெளிக்கொண்டுவர உதவியதாக அறியமுடிகின்றது. சிறுவர்களுக்கான பொருத்தமான பாடல் தொகுதியொன்று தமிழில் இல்லாமை கண்டு அவர் இம்முயற்சியை மேற்கொண்டுள்ளார். அவர் கல்வித் துறையில் கடமையாற்றியமை இப்பணியை மேற்கொள்வதற்கு பலமாக அமைந்திருக்க வேண்டும். தொகுதி வெளியிடப்பட்ட காலப்பகுதியில் தமிழ் ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்களிடையே சிறுவர் பாடலாக்கப் போட்டி ஒன்றை நடத்தி அதிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட பாடல்களே இத்தொகுதியில் இடம்பெற்றன. அதனால், அவை தரமிக்கவையாகவும், பிள்ளைகளின் உளவியலுக்கு ஓரளவு பொருத்தமுடையனவாகவும் அமைந்திருந்தன. இதனை தொகுப்பின் முகவுரை உறுதிசெய்கின்றது. "பாஷையையும் நற்போதனைகளையும் சிறுபராயத்தில் கற்பிக்கும் ஆசிரியர்கள் தாளம், இராகம், அபிநயம் முதலியவற்றில் பாலர்களுக்குப் பெரிய விருப்பம் உண்டென்றும், தங்கள் சீவியத்தோடு சம்பந்தப்படாத விடயங்களை அவர் மனம் நாடாதென்றும் உணர்ந்திலரேல் அவ்வாசிரியரது முயற்சியாற் பெறப்படும் பயன், எதிர்நோக்குடைய இருவர் ஒருவழிச் செல்ல முயல்வதனாற் பெறப்படும் பயனை ஒக்குமென்க. பாலர்களின் இவ்வியற்கை விருப்புக்களை அறிந்து அவைகளுக்கிணங்க கற்பிப்பரேல் பாஷை விருத்தியடைவதும் போதனைகள் நன்கு மனதிற் பதிவதும் மாத்திரமல்லாமல், இன்பச் சுவை நுகர்ச்சியும் உளவளர்ச்சியும் சிறப்பெய்தும்." இந்த முகவுரை சிறுவர் பாடல் எழுதுகின்ற அனைவரும் வாசித்து விளங்கிக்கொள்ள வேண்டியதாகும். ஏனெனில், இன்று சிறுவர் பாடல் என்ற பெயரில் பலர் எந்த நோக்குமற்ற சொற்கோர்வைகளை எழுதுகின்றார்கள் என்பதும் அவை பாடல்களாகக்கூட இல்லை என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய கசப்பான உண்மையாகும். ஆனாலும், தரமான குழந்தைப் பாடல்களும் உள்ளன என்பதும் மறுப்பதற்கில்லை.

ஈழத்துத் தமிழ் சிறுவர் பாடல்களை யாத்தவர்களுள் நவாலியூர் சோமசுந்தரப் புலவர், பண்டிதர் க.வீரகத்தி, கவிஞர் அம்பி, பண்டிதர் க.சச்சிதானந்தன், வித்துவான் க.வேந்தனார், ஆடலிறை (மயிலங்கூடலூர் பி.நடராசன்), யாழ்ப்பாணன் (சிவக்கொழுந்து), முத்தமிழ்ப் புலவர் மு.நல்லதம்பி, அல்வையூர்க் கவிஞர் மு.செல்லையா, இதம், கனக.செந்திநாதன், அமிர்தநாதன், சுபைர், சாரணா கையூம் போன்ற பலரைக் குறிப்பிடலாம் இவர்களுள் பெரும்பாலானவர்கள் ஆசிரியர்களாகவிருந்தவர்கள் என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

சிறுவர் பாடல்களுக்கு ஓசை மிக முக்கியமானது. பிள்ளைகள் மகிழ்ச்சிகரமாக கைகொட்டிப் பாடியாடக்கூடியவையாக அவை அமைகின்றபோதுதான் அவர்கள் மகிழ்ச்சிகரமாகக் கற்பர். அப்போதுதான் அப்பாடல்களினூடாகக் கூறப்படுகின்ற விடயம் பிள்ளைகளிடம் சென்று சேரும். சிலருடைய குழந்தைப் பாடல்களில் ஓசை இருக்கும், பொருள் மிகத் தாழ்நிலையில் காணப்படும். வேறு சிலருடைய பாடல்களில் பொருள் சிறப்பாக அமையப் பெற்றிருக்கும், ஓசை பொருந்தியிருக்காது. வெகு சிலரே ஓசை, பொருள் ஆகியன பொருந்த சிறுவர் பாடல்களை யாத்துள்ளனர் எனலாம். அவர்களுள் மேலே பெயர் கூறப்பட்டவர்கள் முக்கியமானவர்கள். ஆனாலும், அவர்கள் எழுதிய எல்லாப் பாடல்களும் இவ்வாறானவை என்று கூறுதற்கில்லை.

இலங்கைத் தமிழ்ச் சிறுவர் பாடல்களின் பாடுபொருள்

ஈழத்தில் தோற்றம்பெற்றுள்ள சிறுவர் பாடல்களை பாடுபொருளடிப்படையில் பின்வரும் வகைப் பாட்டுக்குள் கொண்டுவரலாம்.

- செல்லப்பிராணிகளைப் பற்றிப் பாடுகின்ற பாடல்கள்
- உறவினர்களைப் பற்றிப் பாடுகின்ற பாடல்கள்
- இயற்கை அழகைப் பாடுகின்ற பாடல்கள்
- அறம், ஒழுக்கத்தைப் போதிக்கும் பாடல்கள்
- விளையாட்டுப் பொருட்களைப் பற்றிய பாடல்கள்
- விழாக்கள் பற்றிய பாடல்கள்
- நகைச்சுவை சார்ந்த பாடல்கள்
- கதைப்பாடல்கள்

வீட்டில் வளர்க்கின்ற செல்லப் பிராணிகளான நாய், பூனை, பசு, ஆடு, கோழி போன்றவற்றைப் பற்றிப் பாடுகின்ற பாடல்கள் அதிகம் காணப்படுகின்றன. பிள்ளைகள் சிறு பராயத்தில் பிராணிகளிடத்தில் மிக அன்பாக இருப்பர். பாடப் புத்தகங்கள் மாற்றப்பட்டு வருகின்றபோதும் ஆரம்ப வகுப்புப் பாடப் புத்தகங்களில் பொதுவாக அவ்வாறான பாடல்கள் இடம்பெறுவதைக் காணலாம். "தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு", "ஆட்டுக் குட்டி எந்தன் குட்டி" போன்ற பாடல்களை உதாரணமாகக் கூறலாம். பண்டிதர் க.வீரகத்தியினுடைய "தங்கக் கடையல்" என்ற தொகுதியில் உள்ள "புள்ளி ஆட்டுக் குட்டி" என்ற பாடலை இங்கு நோக்கலாம்.

"புள்ளி ஆட்டுக் குட்டியே
புள்ளி ஆட்டுக் குட்டியே
துள்ளித் துள்ளி ஆடுவாய்
புள்ளி ஆட்டுக் குட்டியே
பிறந்ததுமே குதித்து மண்
பறந்தெழும்ப ஆடுவாய்
அறம் சிறந்த ஆண்டவன்
அருளின் விந்தை என்னவோ!"

என்று நீண்டு செல்கின்றது. ஆட்டுக் குட்டியை அணைத்து ஆடிப்பாடி மகிழும் ஆனந்தக் களிப்பையும் ஆண்டவன் பெருமையையும் தாய்ப்பாலின் சிறப்பையும் பாடுவதாக அது அமைந்துள்ளது. யாழ்ப்பாணனுடைய "ஆட்டுக் குட்டி" என்ற பாடல் வீரகத்தியினுடைய

பாடலோடு பலவிதங்களில் ஒத்திருப்பதைக் காணலாம். தவிர சாரணா கையூமினுடைய "ஆட்டுக்குட்டி" பாடலும் சிறப்பாக அமைந்துள்ளது. ஆடலிறையினுடைய "நாய்க்குட்டி" என்ற பாடலில் நாயின் அழகையும் நன்றியையும் விளையாட்டையும் உணர்வையும் பாடுகின்றார்.

"வெள்ளை நிறத்து நாய்க்குட்டி
வீட்டுக் கேற்ற நாய்க்குட்டி
கள்ள மில்லா நாய்க்குட்டி
காவல் காக்கும் நாய்க்குட்டி..."

வேந்தனாருடைய "எங்கள் வீட்டுப் பூனை" என்ற பாடலில் பூனையின் மீது பிள்ளை கொண்ட பற்று, அதன் அழகு, செயற்பாடுகள் என்பன பாடப் பட்டுள்ளன. பூனையின் வாலைப் பிடித்து இழுத்தால் கடிக்கும், பதுங்கியிருந்து பாலைக் குடிக்கும், நாயோடு சீறி நின்று சண்டை செய்யும், பந்தை உருட்டி விளையாடும், எலியைப் பிடிக்கும் என்று அதன் செயற்பாடுகளை அழகாக எடுத்துப் பாடுகின்றார்.

"சின்னச் சின்னப் பூனை
சிறந்த நல்ல பூனை
என்னைப் பார்த்துத் துள்ளும்
எங்கள் வீட்டுப் பூனை"

என்று பூனைக் குட்டி மீதான விருப்பைப் பாடு கின்றார் வேந்தனார்.

வீட்டில் உள்ள குடும்ப உறுப்பினர்களிடம் பிள்ளைகளுக்கு அதிக விருப்பு ஏற்படுவது தவிர்க்க இயலாதது. அவ்வாறு பாடப்பட்டுள்ள பாடல்கள் குறிப்பாக அம்மா, பாட்டி, தாத்தா, அப்பா, மாமா, தம்பி, தங்கை போன்றோரைப் பாடுகின்றன. அம்மா பற்றிய பாடல்களே அதிகம் பாடப்பட்டுள்ளன. ஆடலிறையினுடைய "அம்மா எங்கள் தெய்வம்" என்ற பாடலில் பத்துமாதம் சுமந்து பெற்ற தாயின் சிறப்பினையும் அவள் எமக்காகச் செய்யும் கடமைகளையும் வியந்து நிற்கின்றார். எல்லாவற்றுக்கும் மேலாக தாயைத் தெய்வமாகப் போற்றுகின்றார். இச்செய்திகள் அம்மா பற்றிய பெரும்பாலான பாடல்களில் பாடப்பட்டுள்ளன. அம்மா பற்றிய சிறுவர் பாடல்களில் வேந்தனாருடைய "அம்மாவின் அன்பு" என்ற பாடல் பலராலும் அறியப்பட்டது.

"காலைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக்
கட்டிக் கொஞ்சும் அம்மா
பாலைக் காய்ச்சிச் சீனி போட்டுப்
பருகத் தந்த அம்மா."

என்று நீண்டு செல்லும் பாடலில் பிள்ளையை குளிப்பாட்டிச் சுத்தமாக வைத்து அழகு பார்த்து, துன்பத்தினைப் போக்கி, பள்ளிக்கு அனுப்பி பின் பள்ளிவிடும்போது பாதி வழி வந்து வரவேற்று செய்த தவறை மன்னித்து அன்பைப் பொழியும் அம்மாவைப் பற்றிய சிறப்புக்களை பாடுகின்றார். வேந்தனாருடைய "பாட்டி" என்ற பாடல், சாரணா கையூமினுடைய "தம்பி", "மாமா வந்தார்" ஆடலிறையினுடைய "இனிய அப்பா", "தங்கத் தாத்தா" போன்ற பாடல்கள் குடும்ப உறவு தொடர்பான சிறுவர் பாடல்களில் சில. இவை உறவினர் களின் அன்பையும் கடமையையும் பாடுகின்றன.

இயற்கையையும் இயற்கையிலுள்ள பொருட் களையும் வியந்து பாடும் சிறுவர் பாடல்கள் ஏராளமாகத் தோற்றம் பெற்றுள்ளன. வெளிவந்துள்ள அனைத்துத் தொகுதிகளிலும் இயற்கை பற்றிய ஏதோவொரு பாடலாவது இடம்பெற்றுள்ளமையைக் காணலாம். நிலா, நட்சத்திரம், காகம், குயில், பச்சைக் கிளி, மைனா, பூக்கள், வண்ணத்துப் பூச்சி, தும்பி, பட்டுப்பூச்சி, அணில், சேவல், மயில், ஆறு, மலை, மழை என பல வற்றையும் பாடியுள்ளனர். இவ்வகைப் பாடல்களில் இயற்கை அழகும் இயற்கை மீதான வியப்பும் இயற்கையைப் பாதுகாக்க வேண்டும் என்ற பற்றுறுதியும் மேற்கிளம்புவதை அவதானிக்கலாம். வேந்தனாருடைய "மயில்" என்ற கவிதை இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக அமைகின்றது.

"மலையில் வந்து முகில்கள் கூட
வண்ண மயிலும் ஆடுது
அழகுத் தோகை விரித்து நின்றே
ஆனந்த மாய் ஆடுது.

கோல மயிலின் கூத்தைக் கண்டு
குரங்கு தாளம் போடுது
கொப்புக் கொப்பாய்த் தாவிப் பாய்ந்து
குரங்கு தாளம் போடுது

வானம் பாடி மயிலின் கூத்தை
வாழ்த்திப் பாட்டுப் பாடுது
வண்ணக் கிளிகள் வந்திருந்து
மயிலின் கூத்தைப் பார்க்குது

நஞ்சைக் கக்கும் நாக பாம்பு
நடிக்கும் மயிலைப் பார்க்குது
அஞ்சிப் புற்றில் ஒளிந்திடாமல்
அருகில் நின்று பார்க்குது

கொல்லும் வேடன் வில்லும் நழுவக்
கூத்தைப் பார்த்துக் களிக்கிறான்
குறத்தி மயிலின் கூத்தைக் கண்டு
குதித்துக் குதித்து நடிக்கிறாள்"

கட்டுரையில் காட்டப்படுகின்ற நீண்ட பாட்டாகக் காணப்படுகின்றபோதிலும் அதன் சுவை கருதியும் இயற்கையின் பலவேறு அழகுக் கோலங்களைப் பாடுகின்ற தன்மை கருதியும் ஓசை கருதியும் முழுமை யாக மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. மஹாகவி பாடிய "சின்னக் குருவி" என்ற பாடலும் இயற்கை அழகை இரசிப்பதாக அமைந்த சிறந்த சிறுவர் பாடலாக அமைந்துள்ளது.

சிறுவர் பாடல்களில் அதிக செல்வாக்குப் பெற்றிருப்பது அறக்கருத்துக்களும் ஒழுக்க விழுமியக் கருத்துக்களும் ஆகும். இக்கருத்துக்கள் சிறுவர்களை அறவழியில் நடத்தும் என்ற நம்பிக்கையில் அவ்வாறு

வலியுறுத்தினர் எனலாம்.

உண்மை பேசுதல், பெற்றோரை மதித்தல், கடவுளை வணங்குதல் போன்ற அறக்கருத்துக்கள் அவற்றுள் முக்கியமானவை. ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி போன்ற இலக்கியங்களின் தொடர்ச்சியாக இவை சிறுவர் பாடல்களிலும் முதன்மை பெற்றிருக்க வேண்டும். ஏனெனில், ஔவை சொற்படி நடக்கவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திக்கூட பாடல்கள் தோன்றியுள்ளன. சோமசுந்தரப் புலவரின், "அம்புலி" என்ற பாடலில்,

"என்பிதாவின் சொற்படியே பிள்ளைகளே
எப்பொழுதும் நடந்திடுவேன் - பிள்ளைகளே"

என்று அம்புலி சிறுவர்களுக்குக் கூறுவதாகப் பாடியுள்ளார். ஆட்டுக் குட்டியைப் பற்றிப் பாடும் போது கூட பண்டிதர் க.வீரகத்தி அவர்கள்,

"அறம் சிறந்த ஆண்டவன்
அருளின் விந்தை என்னவோ!"

என இறை பக்தியைப் போதிக்கின்றார்.

ஆடலிறையினுடைய "பாலகனே கேள்" என்ற பாடல் முழுமையும் அறத்தையே பாடுகின்றது. பள்ளிக்குக் கல்வி பயிலப்போகும் பிள்ளையை நோக்கிப் பாடுவதாக அது அமைந்துள்ளது. நல்லவனாக வாழவேண்டும், கல்வியைக் கண்ணெனப் போற்ற வேண்டும், வஞ்சமின்றி வாழ வேண்டும், அச்சம் தவிர்க்க வேண்டும் என ஒழுக்கவிழுமியக் கருத்துக்களைப் பட்டியலிடுகின்றார்.

இவை தவிர, ஆத்திசூடி போன்ற ஒழுங்கில் அகர வரிசையில் அறத்தையும் ஒழுக்கத்தையும் பாடியுள்ளமையை பல பாடல்களில் காணலாம்.

"அசைந்தா டம்மா அசைந்தாடு
ஆசைக் கிளியே அசைந்தாடு
இசையோ டொன்றாய் அசைந்தாடு
ஈரக் குலையே அசைந்தாடு
உதய நிலாவே அசைந்தாடு
ஊதும் குழலே அசைந்தாடு
எழிலாய் வந்து அசைந்தாடு
ஏற்றத் தோடு அசைந்தாடு
ஐயம் விட்டு அசைந்தாடு
ஒழுக்கம் பேணி அசைந்தாடு
ஓவிய நூலே அசைந்தாடு
ஔவிய மின்றி அசைந்தாடு"

என்ற சாரணா கையூம் என்பவருடைய பாடலில் இந்த ஒழுங்கைக் காணலாம். இவ்விடத்தில் இரண்டு முக்கியமான விடயங்கள் கவனிக்கப்பட வேண்டும். ஒன்று, சாய்ந்தாடும் பருவப்பிள்ளைகளுக்கு ஏற்ற மொழிநடையில் இப்பாடல் பாடப்படவில்லை. எடுத்துக்காட்டாக, ஈரக்குலை, எழில், ஐயம், ஓவிய நூல், ஔவியம் போன்ற சொற்களைக் கூறலாம். இரண்டாவது, அப்பருவப் பிள்ளைகளுக்கு ஏற்ற ஒழுக்கம் பற்றிக் கூறவில்லை. இன்னொருவகையில் கூறுவதானால் அந்த வயதுக்குரிய பிள்ளைகளுக்கு ஒழுக்கம் பற்றிய எந்தப் புரிதலுமே இருக்காது. "ஒழுக்கம் பேணி அசைந்தாடு" என்பதில் கூறப்பட்ட ஒழுக்கம் பற்றி அந்தப் பருவப் பிள்ளைக்கு ஏது புரியும்? எனவே, சிறுவர் பாடல்களைப் பாடுகின்றபோது பாடலாசிரியர்கள் இவற்றைக் கருத்திற் கொள்ள வேண்டும். இவை ஈழத்துத் தமிழ்ச் சிறுவர் பாடல்களில் பரவலாகக் காணப்படுகின்ற குறைபாடுகளாகும். பண்டிதர் க.வீரகத்தி அவர்கள் "ஆத்திசூடி" என்ற தலைப்பிலேயே சிறுவர் பாடல் ஒன்றை எழுதியுள்ளார். ஔவையாருடைய ஆத்திசூடி போல அற, ஒழுக்கக் கருத்துக்களை 93 அடிகளில் அது பாடுகின்றது. வயதுப் பிரிவைக் குறிக்கின்ற எந்த விடயமும் அதில் தென்படவில்லை. எனினும், கடின சொற்களால் சிறுவருக்குப் பொருந்தாத பல விடயங்களை போதிக்கின்றது என்பதை மறுக்க முடியாது.

சிறுவர்களுக்கு விளையாட்டு என்றால் அலாதி பிரியம். சேர்ந்து விளையாடுவதற்கும் விளையாட்டுப் பொருட்களோடு விளையாடுவதற்கும் அவர்கள் பெரிதும் விரும்புவர். பந்து, பலூன், பொம்மை (பாவை), காகிதக் கப்பல் போன்றன அவற்றுட் சில. பெரும்பான்மையாக விளையாட்டுப் பொருட்களின் பண்பையும் அழகையும் விளையாடும் முறையையும் உள்ளடக்கியதாக அவற்றைப் பாடியுள்ளனர். "பாலர் ஆடும் பந்து" என்ற பாடலை இதற்கு வகைமாதிரியாகக் குறிப்பிடலாம்.

"பந்து பந்து பந்து
பாலர் ஆடும் பந்து
வட்ட வட்டப் பந்து
வானை முட்டும் பந்து

அப்பா தந்த பந்து
அருமை யான பந்து
ஓங்கி ஓங்கி அடிப்போம்
ஓடி ஓடிப் பிடிப்போம்
துள்ளிப் பாயும் பந்து
மெல்ல ஓயும் பந்து
பாலர் நாங்கள் கூடுவோம்
பந்தடித்து ஆடுவோம்"

சிறுவர்களுக்கு மகிழ்வூட்டும் மற்றொரு விடயம் விழாக்கள், பண்டிகைகள். அந்தவகையில் சிறுவர் பாடல்களில் அவற்றைப் பற்றியும் கவிஞர்கள் பாடியுள்ளனர். தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, தீபாவளி, ஆடிப்பிறப்பு போன்றன அவ்வகையில் குறிப்பிடத்தக்கன. சோமசுந்தரப் புலவருடைய "ஆடிப்பிறப்பு" என்ற கவிதை மிகப் பிரபலமானது. ஆனால், இன்று ஆடிப்பிறப்பு தமிழர் பண்பாட்டில் முன்னைபோல் விடுமுறையோடு கொண்டாடப்படுவதில்லை. எனவேதான்,

"ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே!"

என்ற பாடலும் காலாவதியாகிப் பாடப்புத்தகங்களிலிருந்து மறைந்து போயிற்று. இவை தனியே விழாப் பாடல்களாக அல்லாமல் அந்த விழாவைக் கொண்டாடும் முறை, தமிழர் பண்பாட்டில் அவற்றின் முக்கியத்துவம், சிறப்பு என்பவற்றையும் பாடுவனவாக அமைந்தன.

சிறுவர்களுக்கு மகிழ்வூட்டும் வகையில் நகைச்சுவை கலந்து பாடப்பட்ட பல பாடல்களையும் நாம் காண லாம். மகிழ்நிலை என்பது பிள்ளைகளை ஆரோக்கிய மாக வைத்திருப்பதோடு செயலூக்கத்துடனான ஈடு பாட்டையும் அதிகரிக்கும் என உளவியலாளர்கள் கூறு கின்றனர். இவ்வகைப் பாடல்களைப் பாடியவர்களில் சிறுவர்களால் தங்கத் தாத்தா என அழைக்கப்பட்ட சோமசுந்தரப் புலவர் முக்கியமானவர். அவருடைய வீமா வீமா ஓடி வா எனத் தொடங்கும் "தாடி யறுந்த வேடன்" என்ற பாடலில் நாய் அணிலின் வால் என்று எண்ணி எசமானின் தாடியைப் பிடுங்கியதாகப் பாடப்பட்டுள்ளது. அதேபோல அவருடைய "பவளக் கொடி" என்ற பாடலும் மிகச் சுவையானது. யாழ்ப் பாணம் பருத்தித்துறையில் உள்ள பவளக்கொடி என்றொரு கற்பனைப் பாத்திரத்தை வைத்து அந்தப் பாடலைப் பாடியுள்ளதோடு, பேராசை எண்ணங் கொண்ட அவளது ஆசை அழிந்துபோவதாகப் பாடுகின்றார். பால் விற்கும் பவளக்கொடி பாற்குடம் சுமந்து சந்தைக்குப் போகும்போது கற்பனை செய்து கொண்டு செல்கின்றாள். பாலை விற்ற காசுக்கு முட்டை வாங்கி அடைவைப்பேன். அவை குஞ்சு களாகும். பின்னர் குஞ்சுகள் முட்டையிடும் முட்டை விற்ற காசுக்கு வெள்ளைப் பட்டு, மினுக்குத் தொப்பி எல்லாம் அணிந்து அழகாக நடந்து செல்வேன். என் அழகை ஊரிலுள்ள பெண்கள் எல்லாம் பார்ப்பர். நான் அப்போது "எடுப்பாக" நடப்பேன் என்று எண்ணியவாறு தன் தலையிலிருந்து பாற்குடத்தை மறந்து தலையை நிமிர்த்தினாள். அப்போது பாற்குடம் கீழே விழுந்து உடைந்து விடுகின்றது. அப்பாடலின் இறுதிப் பகுதி இவ்வாறு உள்ளது.

"பாலுமெல்லாம் போச்சு
பாற்குடமும் போச்சு
மிக்கதுய ரோடு
வீடுசென்றாள் மாது
கைக்குவரு முன்னே
நெய்க்குவிலை பேசேல்"

என்று பழமொழிப் போதனை ஒன்றோடு அது முற் றுப் பெறுகின் றது. அவருடைய "கத் தரித் தோட்டத்து வெருளி" என்ற பாடலும் இவ்வகையில் அமைந்ததாகும். பண்டிதர் சச்சிதானந்தனுடைய "சிங்கத்தின் வீட்டில் கலியாணம் சிறுத்தைகள் எல்லாம் பெருங்கூட்டம்..." என்ற பாடலும், "காய்கள் கட்டிய வெருளி" என்ற பாடலும் முறையே காட்டிலுள்ள விலங்குகள் எல்லாம் கூடி சிங்கத்தின் வீட்டில் நடைபெற்ற கலியாணத்தை கொண்டாடியதாகவும், கந்தனது தோட்டத்திலுள்ள மரக்கறிச் செடிகொடிகள் எல்லாம் சேர்ந்து தம்மை உண்ண வரும் விலங்குகளை விரட்ட வெருளி கட்டியதாகவும் பாடப்பட்டுள்ளன. இவ்வாறான சிறுவர் பாடல்கள் காட்டிலுள்ள விலங்கு கள், தோட்டத்திலுள்ள மரக்கறிகள் போன்றவற்றைப் பிள்ளைகள் அறிந்து நினைவுபடுத்த உதவும்.

கற்றலை இலகுபடுத்தி அவற்றை நினைவில் வைத்திருப்பதற்கான உத்தியாகவும் சிறுவர் பாடல்கள் பாடப்பட்டுள்ளன. குறிப்பாக உயிர் எழுத்துக்கள், உயிர்மெய் எழுத்துக்களை நினைவில் வைத்திருப்பதற் கான பாடல்களைப் பாடியுள்ளமையைக் குறிப்பிடலாம். எடுத் துக் காட் டாக ஆடலிறை பாடிய, "அனா ஆவன்னா", "அகர வரிசை", "மெய்யெழுத்துப் பாட்டு", "ககர உயிர்மெய்ப் பாட்டு" போன்றவற்றை கூறலாம். சிலர் எண்களை ஒழுங்குமுறையாக நினைவுபடுத்தி வைத்திருப்பதற்கான பாடல்களையும் பாடியுள்ளனர். விஞ்ஞானக் கருத்துக்களை சிறுவர் பாடல்களினூடாகப் பாடிய கவிஞர்களும் உள்ளனர்.

சிறுவர் பாடல்கள் என்ற அமைப்போடு பெரிதும் ஒத்துள்ள சிறுவர் கதைப் பாடல்களும் சிறுவர்களைக் கவரும் வகையில் பாடப்பட்டுள்ளன. எனினும், எல்லாக் கதைப் பாடல்களும் சிறுவர்களைக் கவரும் வகையில் பாடப்பட்டுள்ளன என்று கூறிவிட முடியாது. செவி வழியாக வந்த சிறுவர்களுக்குரிய கதைகளையும் சிறுவர்கதை ஆசிரியர்கள் எழுதிய கதைகளையும் தமது கற்பனையில் தோன்றிய கதைகளையும் கதைப்பாடல் களாக எழுதியுள்ளனர். நவாலியூர் சோமசுந்தரப் புலவர் பாடிய "எலியும் சேவலும்", "விறகுவெட்டி", "கொழுக் கட்டைப் பொன்னன்", "ஆடு கதறியது", போன்றனவும், ஆடலிறையின் "காகமும் நரியும்", "காகமும் கிழவியும்", "சிங்கமும் முயலும்", "காகமும் தண்ணீர்க் குடமும்", "குட்டி ஆடும் வேட்டை நாயும்" போன்றனவும் இங்கு குறிப்பிடக்கூடியன. இவை தவிர இன்று வேறு பலரும் இவ்வகையான பாடல்களைப் பாடிவருவதையும் அறிய முடிகின்றது. இவை பற்றி தனியாக நோக்குவதே பொருந்தும் என்பதாலும் இக்கட்டுரையின் விரிவஞ்சியும் மேலும் நோக்கப்படவில்லை.

நிறைவுரை

தமிழ்நாட்டுக்கு முன்னரேயே சிறுவர் பாடல்கள் இலங்கையில் தோற்றம் பெற்றுள்ளன என்பதை சிறுவர் இலக்கியம் பற்றிய ஆழமான ஆய்வுகளை மேற் கொண்ட தமிழ் நாட்டு ஆய்வாளரான பூவண்ணன் உறுதி செய்கின்றார். "சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னரே இலங்கை எண்ணற்ற குழந்தைக் கவிஞர் களை ஈன்றெடுத்தது. அந்தக் கவிஞர்களின் குழந்தைப் பாடல்களை அப்போதே ஒன்று திரட்டி கே.எஸ்.அருள் நந்தி என்பவர் பிள்ளைப்பாட்டு என்ற பெயரில் வெளி யிட்டார். குழந்தை இலக்கியம் கொடி கட்டிப் பறக்கும் நம் நாட்டில் 1970இல் தான் அப்படிப்பட்ட குழந்தைக் கவிதைத் தொகுதி வெளிவந்தது." என்ற அவரது கூற்று இங்கு குறிப்பிடத்தக்கது. எனினும், இன்று நிலைமை மாறியுள்ளது. தமிழ் நாட்டவர்கள் சிறுவர் பாடல்களை யாப்பதில் அதிக அக்கறை காட்டுகின்றனர். அது மட்டுமின்றி அப்பாடல்களை அழகிய இசையமைப் போடு, அசைவூட்டம் கொடுத்து (animation) காணொலி களாக வெளியிடுகின்றனர். ஆனால், எமது நாட்டில் அவ்வாறான வெளியீடுகள் மிக அருந்தலாகவே உள்ளன. அதனால் தமிழ் நாட்டிலிருந்து வரும்

இறுவட்டுக்களை எமது பெற்றோர் பிள்ளைகள் பார்ப்பதற்கு அனுமதிக்கின்றனர். தமிழ் நாட்டிலிருந்து வரும் இவ்வாறான பாடல்கள் அப்பிரதேச பேச்சு மொழியில் அமைந்திருப்பதால் எமது பிள்ளைகளின் மொழியில் அது தாக்கம் செலுத்துவதற்கான வாய்ப்பு அதிகமாகவே உள்ளது.

சிறுவர் பாடல்களை ஆக்குகின்றபோது அவர்களின் வயது, அந்தந்த வயதுப் பிரிவினரின் உளவியல் விருத்தி, மொழிக் கொள்நிலை போன்வற்றைக் கருத்திற்கொண்டே எழுதப்பட வேண்டும். இவற்றைக் கருத்திற்கொண்டு எழுதப்பட்ட சிறுவர் பாடல்கள் இலங்கையில் மிகக் குறைவாகவே தோன்றியுள்ளன என்று துணிந்து கூறலாம்.

அற ஒழுக்க கருத்துக்களை வலியுறுத்துவதிலேயே இப்பாடல்கள் அதிக கவனம் செலுத்தி வருகின்றன என்பதையும் அவதானிக்க முடிகின்றது. பிள்ளைகளின் வயதுக்குப் பொருந்தாத, அவர்களால் புரிந்துகொள்ள முடியாத நிலையிலும் இவற்றுக்கு அதிக அழுத்தம் கொடுத்துப் பாடுவது பொருத்தமாக அமையாது. பெரியவர்களுக்கான கவிதைகளை எழுதுவதைவிட சிறுவர் பாடல்களை எழுதுபவர்கள் அது தொடர்பான ஆற்றலும் அறிவுமுடையவர்களாக இருக்கவேண்டும்.

சிறுவர் பாடல்களுக்கு ஓசை மிக முக்கியமானது. ஓசை குன்றிய அல்லது தாளநடையோடு பாடமுடியாத சிறுவர் பாடல்கள் பிள்ளைகளின் மனதில் இடம்பிடிக்காது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். சமகாலத்தில் சிறுவர் பாடல்களை எழுதுகின்ற சிலரது பாடல்களில் தாளக்கட்டு கவனிக்கப்படவில்லை என்பதை அவதானிக்க முடிகின்றது. சிறுவர் பாடல்களை ஆக்குகின்றபோது ஒவ்வொரு சொல்லையும் மிக அவதானத்துடன் கையாள வேண்டும். ஒவ்வொரு வயதுப் பிள்ளையிடமும் வளர்ச்சி பெற்றிருக்கக்கூடிய சொற்களின் எண்ணிக்கை, மொழி விருத்தி போன்ற அறிவு அவர்களுக்கு அவசியமானதாகும்.

சில சிறுவர் கதைகளில் விழுமியக் கருத்து முரண் காணப்பட்டுள்ளது. அதை அவ்வாறே உள்வாங்கி கதைப்பாடல்களை உருவாக்காது பொருத்தமான மாற்றங்களுடன் ஆக்குவது சிறந்ததாக அமையும். எடுத்துக்காட்டாக "காகமும் பாட்டியும்" என்ற கதைப்பாடலில் ஆடலிறை காகம் சுள்ளி பொறுக்கிக் கொடுத்து வடை பெற்றுச் சாப்பிட்டதாகப் பாடப்பட்டுள்ளமையைக் கூறலாம். காகம் பாட்டியிடம் வடையை திருடுவது பிள்ளையிடத்தில் திருடலாம் என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கலாம் என்பதால் அவர் இவ்வகையில் மாற்றத்தைச் செய்து பாடினார் எனலாம்.

சிறுவர் பாடல்களை எழுதுகின்றபோது எந்த வயதுப் பிரிவுக்காக அது எழுதப்படுகின்றது என்பதையும் குறிப்பிட்டு எழுதுவது சிறப்பானது. சிலரது பாடல்கள் அந்தவகையில் எழுதப்படுகின்றமையையும் அவதானிக்கலாம். ஏனெனில், வயது, மொழி விருத்தி பற்றிய அறிவு குறைந்த பெற்றோரும் வயதுப் பிரிவைக் குறித்தால் தமது பிள்ளைகளின் வயதுக்குப் பொருந்தாத பாடல்களைக் கேட்பதற்கு, பாடுவதற்கு அனுமதிக்க மாட்டார்கள்.

எனவே, சிறுவர் பாடல்களை எழுதுவதிலுள்ள சவால்களை விளங்கிக்கொண்டு எழுதுவது அவசியமாகும். அது பற்றிய அறிவை பாடலை எழுதுபவர்களுக்கு வழங்குவதில் உளவியலாளர்கள், கவிஞர்கள், மொழி வல்லுநர்கள் அனைவரும் அக்கறை காட்ட வேண்டும். குறிப்பாக கல்வித்துறை சார்ந்தவர்கள் இவ்விடயத்தில் அதிக அக்கறை எடுக்க வேண்டும்.

மீனவனின் ஒருநாள்

காய்ந்து கருத்த உருவம்
காதில ஒரு பீடி
பீத்தல் சாரன்
பின்னால் வளர்ந்த கொண்ட
அளந்தெடுத்த மீசை
அளவா வெட்டிய தாடி.
மீன்கார மீசான் காக்கா
இப்படித்தான் இருப்பார்
காக்காட கதயெண்டால்
கண்ணீர் கததான்.
சோக்காக அவர் சொன்னாலும்
அது சோகக்கததான்....
ஏன்டா தம்பி கேட்கின்றாய்
நாறிய பொலப்பிதுடா?
சாமத்தில போனாலும்
சதம் கூட மிஞ்சிதில்ல
கோழி கூவ முன்ன
கொளத்துக்கு போவோம்ன்டா
மழைபெய்யும் குளிரடிக்கும்
கூதலில காதடைக்கும்
ஆனாலும் என்ன செய்ய
தொழிலுக்கு போனாத்தானே
நண்டும் சிண்டுமான
நாலுக்கும் சாப்பாடு
ஒரு நாள் தொழிலில்லேன்னா
ஒம்மச்சியிட புறுபுறுப்பு
ஒருவனும் கடனும் தரான்
அண்டக்கி கர்பலா யுத்தம்
தாண்டா தம்பி.
எதிர்க் காத்த எதிர்த்துத்தான்
எம் படக ஓட்டனும்
கல்லுப் பாறைகளில்
முட்டாம பார்க்கனும்..
பாறை இடுக்குகளில்
பக்குவமா எறங்கி
சிக்கிய வலைகளை
பிரித்தெடுக்கும் போது
உயிர் சிலிர்த்து
உறைந்து போகும்டா தம்பி
பத்துக்கிலோ மீன் வந்தா
பங்குக்கு பத்துப்பேருடா
மஹத்தயாவுக்கு ஒரு பங்கு
மந்திரிக்கு ஒரு பங்கு
ஏன்னு கேக்க
எவனுமே இல்லடா
எதித்து கேட்டதுக்கு
ஏன்வலைய தூக்கிட்டானுக.
பாமர மக்கள் தானே அதுதான்
எங்கள பாடா படுத்துதாங்க
நீ வர வேண்டும்டா தம்பி
எங்கட நிலை பாத்து எழுத.

– நாச்சியாதீவு பர்வீன்–

* கர்பலா யுத்தம் – கர்பலா என்னும் இடத்தில் நடைபெற்ற யுத்தம்
* மஹத்தயா– அதிகாரி

புலோலியூர் வேல்நந்தகுமார்

ஈழத்துத் தமிழ்க்கவிதைகளுக்கு புதுவளம் சேர்க்கும் புலம்பெயர் தமிழ்க் கவிதைகள் ஓர் பார்வை

ஈழத்துத் தமிழ்க் கவிதைப்பரப்பின் மிக பிந்திய வகைப்பாட்டினில் ஒன்றாய் விளங்கி ஆறாம் திணை எனப்படும் புலம்பெயர் தமிழ்க்கவிதைகள் தனிச் சிறப்புப் பெறுகின்றன. இந்தியா, தமிழ்நாடு தவிர்ந்த உலகின் ஏனைய ஆசிய, ஐரோப்பிய, ஆபிரிக்க, அவுஸ் ரேலிய நாடுகளுக்கு உயர்கல்வித் தேவை, சொந்த நாட்டு யுத்த சூழலில் வாழமுடியாநிலை, இயக்க முரண் பாடுகள், குடும்பத்தேவைகள், திருமணத்தேவைகள் போன்ற பல நோக்கங்கள் கருதி ஈழத்தில் இருந்து புலம் பெயர்ந்து சென்ற படைப்பாளிகளால் அங்கிருந்தவாறு தமிழில் படைக்கப்படுகின்ற இலக்கியங்களே புலம் பெயர் இலக்கியங்கள் என அழைக்கப்படுகின்றன. இவை புகலிட இலக்கியங்கள், அயலகத்தமிழ் இலக்கியங்கள், அலைவுஉலைவு இலக்கியங்கள் என பல பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றன. Diaspora என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழ்ப்படுத்தலாகவே இச்சொற்கள் உருவாக்கம் பெற்றுள்ளன. இப்போது நாம் புலம்பெயர் வாழ்வில் அங்கேயே பிறந்து வளரும் மூன்றாம் தலைமுறையை கண்டுள்ளோம்.

புலம்பெயர் தமிழ் இலக்கிய முயற்சிகளாக கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள், மொழி பெயர்ப்புக்கள், நாடகமுயற்சிகள், அகராதிகள், புனைவு சாராப்படைப்புக்கள், சஞ்சிகைகள், வானொலி, தொலைக் காட்சிசேவைகள், இணைய இதழ்கள், பக்கங்கள், இலக்கிய வெளியீட்டு நிகழ்வு கள், தமிழ் இலக்கிய விழாக்கள், நடன இசை நிகழ்வு கள், ஆலய நிகழ்வுகள் போன்றனவற்றை குறிப்பிட லாம். இதனால் "தேமதுரத் தமிழோசை உலகெங்கும் பரவும்வகை செய்தல் வேண்டும்." என்ற பாரதி கனவு நனவாகி வருவதுடன் தமிழ் அனுபவங்களை உலகமும், உலக அனுபவங் களை தமிழும் பெற்று வளம் பெற உதவுகிறது.

புலம்பெயர் தமிழ் இலக்கியத்தில் மிக வீச்சான இலக்கிய வடிவமாகவும் அதிகளவில் படைக்கப் பட்டனவாகவும் புலம்பெயர் கவிதைகளே அமை கின்றன. இனவுணர்வுச் சூழலையும், தாயக பிரிவேக்கத்தையும், 80களில் இருந்து பதிவு செய்யத்



தொடங்கிய இக்கவிதைகள் அவை வெளிப்படுத்திய உணர்வு நிலையாலும் உள்ளடக்கத்தினாலும் ஈழத்துத் தமிழ்க் கவிதைகளுக்கு புதிய வீச்சைத் தந்தன. ஆரம்பத்தில் இவை தாயக நினைவுகளையும் அதனோடு இணைந்த பிரச்சினையுமே அதிகளவில் முன்வைத்தன. பின்னர் 90களுக்குப் பின் புலம்பெயர் வாழ்வியல் சிக்கல் களையும், புதிய அனுபவங்களையும் முன்வைத்தன. புதுக்கவிதை வரலாறு தந்த ராஜமார்த்தாண்டன், ஈழத்துத் தமிழ்க் கவிதையின் அடுத்த கட்ட வளர்ச்சி என்ற கட்டுரை தந்த சுரேஸ் கனகராசா ஆகியோர் இக் கவிதைகளது சிறப்புக்களைப் பற்றியும் விளக்கி யுள்ளனர். இப் புலம்பெயர்த் தமிழ்க்கவிதைகள் ஈழத்தில் ஆய்வு செய்து வெளிப்படுத்தியவர்களில் இக் கவிதைகள் அனைத்தையும் தொகுத்து "புலம்பெயர் கவிதைகள்" என்ற பெயரில் தொகுத்து வெளியிட்ட ப.திருநாவுக்கரசு அவர்களது பணியும், அமரர் கமலரூபன் அவர்களால் "எண்பதுகளுக்குப் பின்னர் ஈழத்து புதுக்கவிதை" என்ற நூலில் புலம்பெயர் கவிதைகள் பற்றி கூறியுள்ள விடயங்கள், பேராசிரியர் கி.விசாகரூபன் அவர்களால் வெளியிடப்பட்டுள்ள "புலம்பெயர் கவிதை உருவம், உள்ளடக்கம், உணர்த்துமுறை" என்ற ஆய்வு நூல், சு.குணேஸ்வரன் அவர்களால் வெளியிடப்பட்டுள்ள "அலைவும் உலைவும்" என்ற நூலில் புலம்பெயர் கவிதைகள் பற்றிக் கூறப்பட்டுள்ள விடயங்கள் மற்றும்

பேராசிரியர் செ.யோகராசாவால் வெளியிடப்பட்டுள்ள "ஈழத்தில் நவீன தமிழ் கவிதை" என்ற நூலில் புலம் பெயர் கவிதைகள் பற்றிக் கூறப்பட்டுள்ள விடயங்கள், பேராசிரியர் செ.யோகராசாவின் "புலம்பெயர் கலாசார மும் புகலிட இலக்கியங்களும்" என்ற கட்டுரை (பண்பாடு - மலர் 5), "ஈழத்துப்புகலிட இலக்கிய வளர்ச்சி ஒரு நோக்கு" (ஞானம் சிறப்பிதழ் பெப்ரவரி 2004), "ஈழத்துத் தமிழ் நவீன கவிதை" நூலில் பேராசிரியர் நா.சுப்ரமணியனின் "புலம்பெயர் இலக்கியங்களில் ஈழத்தமிழர் சமூகம்" என்ற கட்டுரை, சுரேஸ் கனகராசாவின் "ஈழத்து தமிழ்க் கவிதையின் அடுத்த கட்ட வளர்ச்சி" என்ற கட்டுரை, கொன்ஸ்ரன்ரைன் கொ.றொவின் "புலம்பெயர்தலும் புலம்பெயர்ந்த ஈழத்தமிழரின் இலக்கிய முயற்சிகளும்" (காலம் இதழ் 18), "இலங்கைத் தமிழர்கள் புலம்பெயர்ந்த நாடுகளில் எதிர்கொள்ளும் சிக்கல்கள்" - பேராசிரியர் இ.விசாக ரூபன் (வித்தியானந்தன் நினைவுப்பேருரை), "புலம் பெயர் இலக்கியக் கோட்பாடு பற்றிய பிரச்சினைகள்"- யமுனா ராஜேந்திரன், "புலம்பெயர் கவிதைகளில் அகதி உணர்வு நிலை"- செ.சுதர்சன் மற்றும் இது குறித்து பேராசிரியர் கா.சிவத்தம்பி, மேமன்கவி போன் றோரது கட்டுரைகள் வழி அறியப்படும் விடயங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

புலம்பெயர் தமிழ் கவிஞர்கள் என்று நோக்கு கையில் சேரன், கி.பி.அரவிந்தன், சக்கரவர்த்தி, திருமாவளவன், நட்சத்திரன் செவ்விந்தியன், செழியன், வ.ஐ.ச.ஜெயபாலன், மு.புஸ்பராஜன், ஆதவன், சபேசன், இளவாலை விஜேந்திரன், செல்வம், ரவி, இராராஜீன்குமார், இளைய அப்துல்லா, பாலகணேசன், கருணாகரமூர்த்தி, சுசன் சுசீந்திரன் திசோ, இளங்கோ (டி.சே.தமிழன்), ரமணிதரன், தாமரைச்செல்வன் (சித்தார்த்த சேகுவரா) போன்றோரையும் பெண் கவிஞர் களாக ஆழியாள், ரஞ்சினி, அருந்தி, மைத்ரேயி, நிரூபா, தமயந்தி, பிரதீபா, மல்லிகா, கற்சுறா, சன்னதமாடி, தானியா, பாமதிசோமசேரகன், கலிஸ்ரா, சத்யா சுகுணா, கோசல்யா சொர்ணலிங்கம் போன்றோரையும் குறிப்பிடமுடியும்.

புலம்பெயர் தேசத்திலிருந்து வெளிவந்துள்ள சிறந்த கவிதைத் தொகுப்புக்கள் என்ற வகையில்

துருவச் சுவடுகள் - முதற்தொகுப்பு
இலையுதிர்கால நினைவுகள், பெருந்தொகை - வ.ஐ.ச.ஜெயபாலன்
மறையாத மறுபாதி - கல்யாணி பெண்ணியக் கவிதைத் தொகுப்பு
துவிதம், உரத்துப்பேச - ஆழியாள்
கனவின் மீதி, முகங்கொள், இனியொரு வைகறை - கி.பி.அரவிந்தன்
நீ இப்பொழுது இறங்கும் ஆறு, எலும்புக் கூடுகளின் ஊர்வலம், எரிந்து கொண்டிருக்கும் நேரம் சேரன் கவிதைகள் ஒருநூறு - சேரன்
இனியும் ஆழ்கொள் - திருமாவளவன்
எப்போதாவது ஒருநாள் - நட்சத்திரன்
செவ்விந்தியன்
கட்டிடக்காட்டுக்குள் - செல்வம்
நாடற்றவனின் குறிப்புக்கள் - இளங்கோ
அக்கரைக்குப்போன அம்மாவுக்கு, முடிவிலும் அழியாதது - ஹம்சத்வனி
இரண்டாவது பிறப்பு அருந்ததி
சுடலைகளாகும் நகரங்கள் - தீரன்
நுகத்தடி நாட்கள் - சுகன்
காலத்தின் பதிவுகள் அ.கந்தசாமி
யுத்தகாண்டம் - சக்கரவர்த்தி
இல்லாமல் போன என் தோழனுக்கு, மரணம் அதிகாலையைத்தேடி, ஆளற்ற தனித்தீவு களில் நிலவு, ஈரமற்ற மழை - செழியன்
யுத்தத்தை திண்போம் கட்டுரைத்தொகுப்பு
செட்டை கழற்றிய நாகங்கள் - ரவி
போர்க்காலப் பூபாளங்கள் - பெனி
காத்திருத்தல் - நலம் அரவிந்தன்
"சுய சரிதம்" - ஆனந்த பிரசாத்
பாஸ்கியின் "உள்ளத்து ஊற்றுக்கள்"
நக்கீரனின் "நள்ளிரவுச் சூரியன்"
ஜெயா நடேசனின் "தாயகம் சமாதானம்"
மட்டுவில் ஞானக்குமரனின் "முகமறியா வீரர்களுக்காய்"
க.நவரேந்திரனின் "மௌனமுகாம்"
"திவ்வியா" புதுநகர் செல்லத்துரையால் தொகுக்கப்பட்ட தொகுப்பு

போன்றவற்றை குறிப்பிடலாம்.

மேற்கூறப்பட்ட பெயர்களும், தொகுப்புக்களும் முடிவான பட்டியல்கள் அல்ல. சமகாலத்தில் இவற்றை தாண்டி பலரும், பல கவிதைத் தொகுப்பு முயற்சிகளை புலம்பெயர் தேசங்களில் இருந்து வெளிப்படுத்தி யுள்ளனர், வெளிப்படுத்தி வருகின்றனர் என்பதும் குறிப் பிடத்தக்கதாகும்! அத்துடன் இத்தகைய கவிதை வெளிப் பாட்டுக்கு களம் அமைத்துக் கொடுத்ததில் புலம்பெயர் சஞ்சிகைகள், பத்திரிகைகள், அமைப்புக்கள், இணைய தளங்கள், வானொலிகளுக்கும் முக்கிய பங்குண்டு. இந்த வகையில் தூண்டில், காலம், எக்ஸில், உயிர்நிழல், மண், யுகமாயினி, உயிர்மெய் போன்ற சஞ்சிகைகளும் ஊடறு, காற்றுவெளி, திண்ணை, வார்ப்பு போன்ற இணைய இதழ்களின் பங்களிப்பும் முக்கியமானதாக விளங்குகின்றன.

இனி பாடுபொருள் ரீதியாக புலம்பெயர் கவிதை களை நோக்கின் அவை தாயகபிரிவு, பிரயாண அவலம், வசதியற்ற தங்குமிடம், விசாச் சிக்கல், நிறவெறி, இயந்திர வாழ்வு, அன்னிய மனோபாவம், அகதியுணர்வு, கலப்புப் பண்பாட்டு அதிர்ச்சி, பெண்ணிய பிரச்சினைகள், பாலியல், உலக தழுவிய பார்வை, இங்கு பேச முடியா விடயங்கள், புதிய பண்பாட்டுச் சூழல், தனிமையுணர்வு, போன்ற விடயங்களையே அதிகம் பேசியவையாக அமைந்துள்ளதுடன் இவை ஈழத்துக் கவிதைத் தளத்துக்கு புதிய பாடுபொருளாக அமைந்தும் சிறப்புப் பெறுகின்றன. அத்துடன் இவற்றின் உணர்த்து முறை யிலும் புதிய சொற்கையாளுகை, பன்மொழிக் கலப்பு,

புதிய உவமைகள், புதிய வர்ணனைகள், புதுமையான எடுத்துரைப்புமுறை என பல புதுமைகளையும் எம்மால் இனங்காண முடிகின்றது. இனி சில கவிதை உதாரணங்களுடாக இவை எவ்வாறு வெளிப்பட்டுள்ளன என்பதை நோக்கி இக் கட்டுரையை நிறைவு செய்யலாம் என எண்ணுகிறேன்.

முதலில் பிரயாண அவலங்களை வெளிப்படுத்தும் கவிதைகளாக கி.பி.அரவிந்தனின் "வரும் வழியில்" என்ற கவிதையில்

"எப்போதும் சந்திக்கலாம்
என்றிருந்த நண்பர்கள்
நினைவுச் சுழற்சிக்குள்
கனவுப் பொருளாகிப் போயினர்
சந்திக்காமலேயே!
எனக்கும் அவர்களுக்குமான
இடைப்பட்ட பயணமோ
உயிர் துறக்கும் தூரம்
யார் அறிவார் இதனை..."

என இதனை பதிவு செய்துள்ளதையும்,

"தேடுகை" என்ற தலைப்பில் திருமாவளவனின் கவிதையில் அவ் அவலம்:

"காட்டில்
கடல் வெளியில்
கரிசல் பூமி அகதி முகாம்களில்
முகமிழந்த கடவுச்சீட்டில்
சரக்குக்கப்பலின் அணியக்கிடங்கில்
பனியில் பன்மொழிக்கலப்பில்
துருவக் கொடுங்குளிரில்
இவையெல்லாம்
தரிப்புக்கள் அல்ல
தடையங்கள்..."

என்றவாறு அமைகிறது.

சுகனின் கவிதை இத் துயரை:

"இரவோடு இரவாக
இன்னோர் எல்லைக்குள்
போவதறிவார்கள் போகும்
வகையறிவார்கள்
அத்திலாந்திக் பசுபிக் கரீபியன் கடல்
கட்டுச் சோறுமின்றி
காற்றின் துணையுமின்றி
கடப்பதறிவார்கள் கடலுள்
அமிழந்ததுமறிவார்கள்..."

என்றவாறு பதிவு செய்கிறது.

வசதியற்ற தங்குமிடத்தை வ.ஐ.ச.ஜெயபாலனின் கவிதை :

"சூல் கொண்ட பன்றியின் கருவறை போன்ற
பிராங்போட் நகரச் சந்தியில் ஓர் அறை
போர்வையில் சுருண்ட
யாழ்ப்பாணத்து நடைப்பிணம் சிலது
எகிப்திய மம்மியாய் அருக்கிக் கிடக்கும்..."

என பதிவு செய்கிறது.

இதே போல புலம்பெயர் சிதறிய வாழ்வை ஜெயபாலனின் மற்றொரு கவிதை:

"யாழ் நகரில் என் பையன்
கொழும்பில் என் பெண்டாட்டி
வன்னியில் என் தந்தை
தள்ளாத வயதினில்
தமிழ்நாட்டில் என் அம்மா
சுற்றம் பிராங்பேட்டில்
நானோ வழி தவறி ஒஸ்லோவில் அலாஸ்கா வந்து விட்ட
ஒட்டகம் போல
என்ன நம் குடும்பங்கள் காற்றில்
விதிக்குரங்கு கித்தெறியும்
பஞ்சுத் தலையணையா..."

என அமைகிறது. இதே போல ஜெயபாலனின் மற்றொரு கவிதையான "மக்பாய் மக்பாய்..." எனத்தொடங்கும் கவிதையில்:

"துருவப் பறவைகளே தேடுமுந் தன் தாய்நாட்டை
வழிப்போக்கன்
குண்டி மண்ணைத் தட்டுவது போல்
தட்டி விட்டு வந்தவன் நீ
மக்பை சொல் தீக் கோலாய்
மனதில் குறிப்பாடும்..."

என்ற வித்தியாசமான உவமை, குறியீட்டுத் தன்மை கொண்ட கவிதையையும் சுட்டலாம்.

விசாப்பிரச்சினையை அகதிநிலையோடு இணைத்துப் பேசும் இளவாலைவிஜேந்திரனின் கவிதையில்:

"அகதி என்ற தமிழ்ச் சொல்லின்
அர்த்தம் தேவை
நான் விரும்பும் யாரையும் நம்பாமல்
வெறுப்பு முகங்களையே
பார்க்கும் விதி எனக்கு
வேற்றுக் கிரகத்து மனிதனாய்
இந்தப் பூமிப்பந்தில்
வாழும் எனக்கு
அகதி என்ற சொல்லின்
அர்த்தம் தேவை"

என்றவாறு பதிவு செய்துள்ளார். மற்றொரு கவிதை,

"பொய்யான நாட்டின்
பாஸ்போட் ஒன்றினுள்
பொறித்த என் தலையை
வெறுப்புடன் பார்த்தனர்..."

எனத் தொடங்கி

"ஆடு மாடு தோட்டம்
ஏன் என்
அம்மாவைக் கூட
அடமானம் வைத்து
அகதியாய் வந்த
அப்பாவித் தமிழன் நான்..."

என முடிகிறது.

தாயகப்பிரிவை பாலகணேசனின் கவிதை :

"ஊர் நினைப்பும் உற்றார் உறவினர் பற்றிய
துடிப்பும்
எப்போதாவது ஒரு நாள்
மண்ணுக்கு திரும்பி வருகிறதா என
கனவும் நினைவும்

நிழலாய் தொடரும் இரட்டை வாழ்க்கை
குளத்து நீரில் தாமரை இலைபோல்
எட்டவும் முடியாது வெட்டவும் முடியாது
தவிக்கிறது மனது."

என்றவாறு பதிவு செய்கிறது.

செல்வத்தின் கவிதைகளில் ஒன்று தாயகப் பிரிவுத் துயரை

"சிறுகுருவி வீடு கட்டும்
தென்னோலை பாட்டிசைக்கும்
சூரியப்பொடியன் செவ்வரத்தம்பூவை
புணரும் என் ஊரின் இருப்பிழந்தேன்
... கனவுப் பணம் தேட
கடல் கடந்தோம்
நானும் நாங்களும்
அகதித் தரையில் முகமிழந்தோம்"

எனப் பதிவு செய்கிறது. இதே போல மற்றொரு கவிதையில் :

"இந்தத் தேசத்தில்
நாங்களோ
கடிதங்களில் வாழும் மனிதரானோம்
ஐந்து வருடங்கள்
மனைவியுடனும் சின்ன மகனுடனும்
கடிதத்தில் குடும்ப நடத்தும்
என் நண்பன்"

என இத்துயரைப் பேசுகிறார். மற்றொரு கவிதையில் :

"செவ்வரத்தம் பூ மறந்தோம்
செவ்விளநீர் மறந்தோம்
சிறுகுறிஞ்சி மணம் மறந்தோம்"

என்கிறார்.

வ.ஐ.ச. ஜெயபாலனின் கவிதை ஒன்று தாய் நாட்டுப் பிரிவை :

"இன்னும் எத்தனைநாள்
இந்தத்துக் கடல் மடியில்
மரகத வீணையென
வடகிழக்காய் நீண்ட என் தாய்நாட்டை
நெஞ்சில் சுமந்து நான் ஏங்குவது"

இதே போல ராசாத்தியகர் ஏக்கம் என்ற கவிதையில் இப் பிரிவை:

"கோரப்பனிக்குளிரில்
உதடுகள் வெடித்து
உதிரம் சொட்ட
உறக்கமிழந்த அந்த இரவில்
ஸ்ரேலிங் பவுண்களை
எண்ணுகிறபோது
உனது நினைவுகள்
என்னை ஒலிமிட்டு அழவைக்கும்
.....இங்கே எனக்காய்
அழுவதற்கு யாரிருக்கார்
.....
எப்போதும் என் நாட்டில்
எப்போது என் வீட்டில்
எப்போது உன் மடியில்..."

என்ற கவிதையைக் குறிப்பிடலாம்

கறுப்பர் என்ற நிறவெறி உணர்வு பற்றியும் பல கவிதைகள் வெளிவந்துள்ளன. தம்பாவின் கவிதை வரிகள் இதனை :

"கற்றுக்கொள் கறுப்பு நாயே
சாகப்பிறந்த பன்றியே
தொழுவத்தை விட்டு ஏன் வந்தாய் வெளியே
கறுப்பர் அழிந்தால் மட்டும் புனிதமடையும் பூமி"

எனப் பதிவு செய்கிறது.

மற்றொரு கவிதையில் துஷ்யந்தன் :

"வெளிநாட்டவன்
கறுப்பன்
அகதி
பிச்சைக்காரன்
நாடோடி எனவரும் வார்த்தைகள்
பனியையும் கரைத்தபடி
நிலத்தில் வேரூன்றும்...
பனியே
நிலத்தின்மேல்
விழுந்தச்போதும்
இனி
மனிதர்மேல்
வெள்ளையாய் விழு
இனவாதம் நிறவாதம்
யாவும் கரைய
வெள்ளையாய்"

என அமைகிறது

1980 களுக்குப் பின் கிளைத்த கவி மரபின் அடுத்த கட்டமான புலம் பெயர் கவிதையுலகம் தந்த ஈழத்தமிழ்க் கவிதை ஆளுமைகளில் முக்கியமான ஒருவராக சேரன் விளங்குகின்றார்.

"ஊர் நிலையற்றுத் தவித்து என்னை
தூக்கி வெளியே வீசியது..."

என தன் புலம் பெயர்வை கூறும் சேரன்

"மரங்களற்ற வெள்ளைப் பனிக்காட்டில்
தவித்தேன்"

பனிப்பாறைத் தனித்தீவுக் குளிர்நாளில்
எனக்கென்ன எதிர்காலம்..."

என்றும்

தனது புகலிடத் தனிமையையும் விரக்தியையம் வெளிப்படுத்தியுள்ளார்.

"கேட்டுக் கவலையுற்றுத் துன்புறுவோம்
பின்னர் வழமைப்படி என்புருக்கும்
பனிக்குளிரில் இறங்கிப் போய்விடுவோம்
வேலைக்கு பொழுதில்லை அழுவதற்கும்...."

என இயந்திர வாழ்வை தாயக உணர்வுடன் பதிவு செய்கிறார்.

தமயந்தியின் கவிதையொன்று தாயகப் பிரிவையும், தாயத்துக்கு மீண்டும் செல்லும் உறுதியையும்

"...இழந்தோம்
நாட்களை இழந்தோம்
பதிவுகளை இழந்தோம்

தேசத்தையும் மண்ணையும்
மொழியையும் மறந்து
புதிய தலைமுறை வளர்கிறது

நான்
என் தேசத்துக்குச் செல்வேன்
தேசம் எரிகின்றபோதும்
அது எழுகின்றபோதும்
வாழ்கின்ற
என் தேசத்து மனிதர்களோடு
புன்னகை செய்வேன்..."

என அமைகிறது.

புலம் பெயர் வாழ்வும் சூழலில்பெண்களிடம் தமது ஒடுக்கு முறைகளுக்கும், புதிய சூழலுக்கும் எதிரான விழிப்புணர்வை பெண்களது கவிதைகளை தரிசிக்க முடிகிறது. எடுத்துக் காட்டாக:

"என் ஆதித்தாயின்
முதுகில்பட்ட
திருக்கைச் சவுக்கடி
நான் காணும் ஒவ்வொரு
முகத்திலும்
தழும்பாய் தேமலாய்
படர்ந்து கிடக்கிறது...
அடையாளத்தை
உணரும் போதெல்லாம்
வீரியங் கொண்ட
ஊழிச் சவுக்கின் ஒலி
மீளவும் என்னை
வலிக்க பண்ணும்..."

என்ற ஆழியாள் கவிதையும்,

"என் மகள்
வளர்ந்தவளானாள்
வினாக்களை வரிசையாக
அடுக்கினாள்
அம்மா
நாங்கள் ஏன் அகதிகளானோம்
என்தாய்நாடு எங்கே
என் தாய்மொழி எது
நாங்கள் ஏன் கறுப்பர்களானோம்
அவர்களால் ஏன்
ஒதுக்கப்படுகிறோம்
துருக்கித் தேவசி
ஏன் எரிச்சல்ப்பட்டாள்?"

என்ற நிருசாவின் கவிதையையும் குறிப்பிடலாம். இக் கவிதையில் ஓர் அனைத்துலக நோக்கும் வெளிப் படுகிறது.

அரசியல், இயக்க முரண்பாடுகள், தாயத்தில் பேசமுடியா விடயங்களையும் புலம்பெயர் கவிதைகள் வெளிப்படுத்தியுள்ள. அந்த வகையில்

"பெரியம்மாவின் மகனை
சித்தியின் மகன் கொல்லத் தேடுறேன்
உத்தரவு வந்ததாம்...
கடத்திச் செல்வது
கழுத்தை முறிப்பது
காணாமற் போகப் பண்ணுவது
கல்தோன்றி மண்தோன்றாக்
காலத்துப் புகழ்
காட்டுமிராண்டித்தனம்
தூ....."

என்ற செல்வத்தின் கவிதையையும் மற்றொரு கவிதை யான:

"இராமனும் பரதனும் அடிபடும்
இந்த ராமாயணம்
உலகம் நம்மாலே கற்கும்
நான் பெரிது நீ பெரிது
என் சாதி உன் சாதி
என் இயக்கம் உன் இயக்கம்"

என்ற கவிதையையும் குறிப்பிடலாம்.

அன்னிய பண்பாட்டினுள் புதிய கலாசார சூழலினுள் வாழ வேண்டியதன் நெருக்கடிகளையும் புலம் பெயர் கவிதைகள் வெளிப்படுத்தியுள்ளன. இந்த வகையில் திருமாவளனின் "மனிதர் காட்சிச்சாலை" என்ற கவிதை:

"..... முகங்களை மாற்றினோம்
கழுதைக்கும் மனிதமுகம்
தெருநாய்க்கும் மனிதமுகம்
பன்றிக்கும் கரடிக்கும் குரங்கிற்கும்
பறவைக்கும் பச்சோந்திக்கும்
பல்லிக்கும் அதுவே
மனிதரும் கூட
தங்கள் சொந்த முகங்களை அழித்து
இரவல் முகங்களை
எழுதிக் கொண்டோம்"

என்ற கவிதையைக் குறிப்பிடலாம். இக் கவிதையின் பிற்பகுதியானது புலம்பெயர் அன்னிய பண்பாட்டி னுள்ளும் இங்கிருந்து நாம் காவிச்சென்ற எம் பண் பாட்டின் கூடாத பக்கங்கள் எவ்வாறு தொடர்ந்தும் பேணப்படுகிறது என்பதை,

" மாற்றிய முகங்களை
பிடிங்கி எறிந்தோம்
மீளத் தோன்றியது இயல்பு
பிறகென்ன கூட்டம் கொண்டாட்டம்
குறிபறிப்பு குழையடிப்பு...
இப்போது
பனிபொழிய மறுக்கிறது
துருவம்
அடியெடுத்து வீதியில்
அலைகிறது மிருகம்
தப்பிக் கொண்டனர்
புத்தி தெளிந்தவர்
அகப்பட்டது
அப்பாவிகளும் நானும்"

என எடுத்துக் காட்டியுள்ளமையும் சிறப்புக்குரியது.

உலகு தழுவிய பார்வை கொண்டனவாகவும் புலம்பெயர் தமிழ்க் கவிதைகள் வெளிவந்துள்ளன. இந்த வகையில் ரவியின்:

"பட்டினிப் பிசாசு தின்னும்
ஓர் ஆபிரிக்கக் குழந்தைக்காய் வழியும்
என் கண்ணீரை
என் இனத்துக் குழந்தைக்காய் மட்டும்
கடன் கேட்கவும்
எனது உணர்ச்சிகளை அழுதுவடிய மட்டும்
உத்தரவிடவும்
இந்தப் பெருவாய்க் காற்றால் முடியுமெனில்
அதையும் தான் நான் வெறுக்கிறேன்....."

என்ற கவிதையை இதற்கான உதாரணம் ஆகச் சுட்டலாம். இதே போல நாடற்றவனின் குறிப்புக்கள் என்ற தொகுப்பில் இளங்கோ தந்துள்ள கவிதைகளும் சிறப்புக்குரியன. அந்த வகையில்

" அன்பைத் தவிர
எதையும் பிரதிபலிக்கத் தெரியாத அம்மாவுக்கு
எழுப்ப எழுப்ப
நந்தை போலச் சுருண்டு கிடக்கும் போர்வை
ஞாபகப்படுத்தக் கூடும்
எனது இல்லாமையை....."

என்ற கவிவரிகளையும்

"நண்பகல் தாண்டி
நீளும் துயிலில்
இழந்து வந்த ஊரை
துருவக் கரடி
பன்றியிறைச்சியாய் கடித்துக்குதறும்
கனவு முளைக்கும்..."

என்ற கவிவரிகளையும்.

"ஊரிலென்றால்
மல்லிகைப் பூ வாசம்
கமழந்தபடி இருந்திருக்கும்
இந்த மாதத்தில்
இரவைப் பனி மூடிக்கிடக்க
விரல்களிலும் படிகிறதுகுளிர்
நிழல்களைப்போல அமைந்தாடுகிறது
கடந்த காலத்தின் துயர்..."

என்ற கவிவரிகளையும் குறிப்பிடலாம்.

புலம்பெயர் சூழலில் பல்வேறுபட்ட மொழி பெயர்ப்புக் கவிதை முயற்சிகளும் நடந்துள்ளன. இவை பிறநாட்டு அனுபவங்களை தமிழிற்கு தருகின்றன. இந்த வகையில் "கலேவலா" என்ற பின்லாந்தின் தேசிய காவியம் உதயணனால் தமிழில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. அத்துடன் கலா மோகனின் "Etdamain" என்ற பிரெஞ்சுக் கவிதைத் தொகுப்பு, அண்மையில் கனடாவில் வெளியிடப்பட்ட "எமது மொழிபெயர்ப்பு உலகில்" என்ற தொகுப்பு கி.பி.அரவிந்தன் இறுதியாக தன் கவிதைகளை தமிழிலும், பிரெஞ்சிலும் ஒரே தொகுதியில் வெளியிட்ட தொகுப்பு முயற்சி என்பன முக்கியமானவை. பொ.கருணாகரமூர்த்தி மிக அண்மை யில் வெளியிட்ட "ஆனந்தியின் டயரி" என்ற வித்தியாச மான நாவல்ப் படைப்பில் இடையிடையே கவிதை களையும் இணைத்துள்ளார். அந்த வகையில் அவரால் மொழிபெயர்க்கப்பட்ட துருக்கியக் கவிதையொன்று பின்வருமாறு அமைகிறது.

"குழந்தைகள் தம் பொம்மைகளை
கூட்கேசினுள் பத்திரப்படுத்தின
தாய் குழந்தைகளை
தனக்குள் பத்திரப்படுத்தினாள்
இரகசியமாய் புலம்பெயர வேண்டித்
தந்தை குடும்பத்தை இரவுக்குள்
பத்திரப்படுத்தினான்
ஊரோ பல குடும்பங்களை
தனக்குள் பத்திரப்படுத்தியது
எல்லா ஊர்களையும் பேரலை
தன்குள் பத்திரப்படுத்தியது"

என்ற கவிதையை குறிப்பிடலாம். இறுதியாக புலம் பெயராமலே இங்கிருந்தவாறு சிவசேகரத்தினால் அவ் அனுபவம் குறித்து எழுதப்பட்ட பின்வரும் கவிதையைச் சமர்ப்பித்து இக் கட்டுரையை நிறைவு செய்யலாம் என எண்ணுகிறேன்.

"நாராய் நாராய் செங்கால் நாராய்
பழம்படு பனையின் கிழங்கு பிளந்து
பயன்மிகு அறிந்த பனை செறிநாட்டார்
வழிபல சென்றே பலதிசைப் பரந்தார்
உருகுவ தெந்நாள் அறிவையோ நகராய்
திரைகடல் ஓடித் தம்முயிர் பேணத்
திரிந்தவர் தமக்கோ எங்ஙனும் அவலம்.

பெருங்குளிர் வருமுன் கடல்பல தாண்டிப்
புலம்பெயர் புள்நீ கிளையுடன் மீண்டும்
வருகுவை நின்மண் தவறுதல் இன்றி
பவளக் கூர்வாய் செங்கால் நாராய்
நாராய் நினக்கோ யாதும் ஊரே
நாராய் நின் இனம் யாவரும் கேளிர்
பாராய் எங்கள் மனிதரின் நிலையை
நாராய் நமக்கோர் நல்வழி கூறாய்"

என்ற கவிதையுடன் புலம்பெயர் கவிதைகள் பல்வேறுபட்ட புதிய பாடுபொருள்களையும் மொழி உட்பட புதிய உருவ, உணர்த்துமுறைகளையும் கொண்டு சிறந்து ஈழத்துத் தமிழ் கவிதைக்கு புதுவளம் சேர்த்து வருகின்றது. ஆற்றல் மிக்க தமிழ் கவிஞர்கள் பலரை தமிழ்க் கவிதை உலகிற்கு தந்துள்ளது. அத்துடன் இக் கவிதைகளில் ஈழத்து நிலைமைகள் தரும் வேதனைகள், நிலம், உறவுப் பிரிவுகள், பிரயாண அவலம், விசாப் பிரச்சினை, அகதிவாழ்வின் அவலங்கள், நிறவெறி, அன்னிய மண்ணுடனும் - பண்புடனும், ஒட்டமுடியாத நிலை, பெண்கள் பற்றிய விழிப்புணர்வு, வேரற்ற வாழ் நிலை, இயந்திர வாழ்வு, தனிமை, அன்னிய மனோபலம், இயக்க முரண்பாடுகள், உலகு தழுவிய பார்வை என வரும் பொருள்கள் சிறப்புப் பெற்று நிற்கின்றன. ஆனாலும் கவித்துவம் அழகுணர்ச்சி என்ற அடிப்படை யில் இவை இன்னும் வளர வேண்டியுள்ளது. போர் ஓய்ந்த காலத்தின் பின் இவை உணர்வெழுச்சியுடன் புதிய தடங் களில் வெளிப்படுத்தப்படுவதும் குறைவாகவே உள்ளது. ஆயினும் தமிழ்க் கவிதை வாசிப்பை உலகத் தளத்துக்கு கொண்டு செல்வதில் புலம்பெயர் தமிழ்க் கவிதைகள் பங்குவகித்துள்ளன என்பதையும் மறுக்க முடியாது.

சிகரம் தொட்ட "செல்வா"

தொலைபேசி மணி ஒலித்தது. லண்டனிலிருந்து பத்மநாப ஐயர் தான் அழைத்தார். அவர் சொன்ன செய்தி பொய்யாய் இருக்கக்கூடாதா என்று ஏங்கியது மனம். பேராசிரியர் செல்வ.கனகநாயகம் காலமானார் எனக்கேட்டு அதிர்ந்து போனேன். அறுபத்திரண்டு சாகும் வயதல்ல. நல்ல ஆரோக்கியத்துடன் உற்சாகமாக இருந்தவர் "செல்வா" ரொறன்ரோ பல்கலைக்கழகக் கடமைகளுக்கு அப்பால், மாநாடுகள் கருத்தரங்குகள் என இங்கிலாந்து, அவுஸ்திரேலிய, மலேசியா, இந்தியா முதலிய நாடுகளுக்குப் பறந்து கொண்டிருந்தவர். இதய நோய்த்தாக்கத்துக்கு பலியாகிவிட்டார். ஈடு செய்ய முடியாத இழப்பு இது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக விளங்கியவர் வி.செல்வநாயகம் "தமிழ் இலக்கிய வரலாறு" என்ற முக்கியமான நூலை எழுதியவர். நல்லாசிரியர் என்று பேரெடுத்தவர். அவர் மகன் கனகநாயகம் கண்டி திரித்துவக் கல்லூரியில் கற்று பேராதனைப் பல்கலைக்கழகம் புகுந்து ஆங்கில (சிறப்பு)ப் பட்டம் பெற்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தொடங்கப் பட்ட போது, ஆங்கில விரிவுரையாளராக இணைந்து கொண்ட கனகநாயகம், 1981 இல் புலமைப்பரிசில் பெற்று, பட்டப்படிப்பின் பின் படிப்பை மேற்கொள்ள கனடா செல்லும் வரை அங்கே பணி புரிந்தார்.

university of British Columbia வில் கலாநிதிப்பட்டம் பெற்றபின், ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகி, படிப்படியாக ஆங்கிலத்துறையில் பேராசிரியராக உயர்ந்தார். பின்காலனிய இலக்கியத்தில் ஆர்வத்தோடு ஆய்வு செய்த கனகநாயகம் Configuration of Exile (1995), Dark Antonym and Paradise (1997), Counter realism and Indo Anglian Fiction (2002) முதலிய நூல்களை மட்டுமன்றி, Lutesong and Lament (2001), Wilting Laughter (2009), You cannot turn away என்ற சேரன் கவிதைத் தொகுப்பு, நெடுநல் வாடை ஆகிய பழந்தமிழ் நெடும்பா மொழிபெயர்ப்பு, எஸ்.பொவின் "சடங்கு" மொழி பெயர்ப்பு முதலியவற்றையும் வெளிக்கொணர்ந்தார். Oxford University Press க்காக Uprooting the Pumpkin என்ற தொகுப்பு வேலையை முடித்திருந்த "செல்வா" அந்நூல் வெளிவருதைக் காணமாட்டார்.





பேராசிரியர் செல்வ கனகநாயகம் ரொறன்ரோ பல்கலைக்கழகத்தின் தென்னாசியக் கற்கை மையத்தின் பணிப்பாளராகக் கடமையாற்றி வந்துள்ளார். 2005ஆம் ஆண்டு தொடக்கம் அப்பல்கலைக்கழகத்தில், வருடாந்த தமிழ்க்கற்கை மாநாடு நடத்தி வந்தவர்.

தாய்நாட்டின் மீதும், தமிழ் மீதும் ஆரவாரமற்ற காதல்கொண்டு, ஈழத்து இலக்கியத்தை உலகறியச் செய்வதில் முனைப்போடு செயற்பட்ட ஒரு பெருமகனை இழந்து நிற்கிறோம். இலக்கியப் பணிக்காக இந்த மாதம் 22ஆம் திகதி கனடா நாட்டின் அதியுயர் விருதான Fellow of the Royal Society of Canada வழங்கி கனகநாயகம் கௌரவிக்கப்பட்டார். ஈழத்தமிழ் புலமையாளர் எவரும் அடையாத சிகரத்தை தொட்டுவிட்டு, திரும்பி வரும்



தென்னைமில், 2010 ஜூலை 4-ல் நடைபெற்ற விழாவில் ஆய்வாளர் ஐராவதம் மகாதேவனுக்கு இயல் விருதை வழங்குகிறார் செல்வா கனகநாயகம் (வலது) . அருகில் கோவை ஞானி.

வழியில் அவர் எம்மை விட்டு நிரந்தரமாகப் பிரிய நேர்ந்ததை விதி செய்த கொடுமை என்பதா? எழுதிச் செல்லும் விதியின்கை... அழுத கண்ணீர் ஆறெல்லாம் அதிலோர் எழுத்தை மாற்றிடுமோ?

பரணீ புத்தகக்கூடம்

&

பரணீ அச்சகம்

Photo Copy



Scanning,

Magazines Printing,

Typing,

Greeting Card,

Invitation,

Bills



Nelliady M.M.V Road.

T.P: 0775991949

MATHI COLOURS

உங்கள் இல்லங்களில் நடைபெற இருக்கும்
மங்களகரமான நிகழ்வுகளுக்கு...

மதி கலர்ஸ்

திருமண அழைப்பிதழ்
காட்சியறை

WEDDING CARD SHOW ROOM

15/2, Murugesar Lane, Nallur, Jaffna.
T.P: 021 2229285, 077 7222259 Email: mathicolours@gmail.com

இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.